ஓம்

குமுதவல்லி, நாகநாட்டரசி

KUMUDAVALLI

A HIGH CLASS TAMIL NOVEL

முதல், இரண்டு பாகம்

பல்லாவரம்

பொதுநிலைக்கழக ஆசிரியர்

மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும்

மறைமலையடிகளால்

By SWAMI VEDACHALAM,

Master of the Sacred Order of Love,

Formerly Lecturer in Tamil, Madras Christian College

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்திலுள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்தில்,

T. M. PRESS

அச்சிடப்பட்டது.

January 1942.

All Rights Reserved.

[விலை 3-12-0.

முதற்பதிப்பு 1911
இரண்டாம் பதிப்பு 1942



ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள்,
பொதுநிலைக்கழக ஆசிரியர்.

PREFACE

The art of fiction has, in modern times, become a potent means in the hands of educated men to awaken the finer instincts of man, so that this awakening of one's own better part might itself serve to correct his mistakes and render him a useful and helping member of society. Within his mind exist in latency capabilities of various kinds and degrees of which one class is evoked by one particular set of outward facts and another by another set of facts. With such peculiar occurrences of outer world corresponds the manifestation of evil or good character of man. Generally speaking, the evil part of human mind finds itself readily and easily called forth into activity by most of the surrounding objects while its better part, for want of fitting means, rarely gains access into the world outside. Now the most desirable function of a learned man should, as for as his innate abilities permit, have been to touch upon the inmost spring of man s delicate nature and open the doorway to the region of love and virtue. But to go deep down the softest and most fertile part of human nature is not within the power of those unwary scholars who adopt improper means without discrimination. It is only those who are cautious and shrewd, those who devote a greater part of their precious time to the selection of efficient means, to the making of it more attractive than it usually appears to be, that can accomplish this very significant and well-meaning task. Take any branch of knowledge: Philosophy or science, religion or literature, in their hands it becomes a very effective weapon.

Now, of all these instruments of knowledge, the fiction as an interesting branch of art appeals to all

classes of people without effort or aggressiveness, and hence its place is daily becoming more and more prominent amidst them all. In almost all civilised countries but of India, especially Southern India, the art of fiction has made a rapid and nearly a perfect development. But here it is still in its infancy. The host of novel writers are primarily led by mercenary and other motives. No genius has as yet arisen and no novel breathes the atmosphere of true art. In most of the Tamil novels that I have come across, I find neither plot nor character delineation, neither a true representation of life nor a chaste and felicitous diction of language. The story turns chiefly upon love passion—the love in its most degraded and gross earthly form. Although the Tamil language is pliant and rich in vocabulary capable of conveying the finest shades of meaning, yet in all the Tamil novels published in a decade or two the diction is rendered very unwholesome by the introduction of unassimilated foreign words from Sanskrit and other languages and by the unhappy combination of words and phrases. In the matter of happy diction and choicest expression of thought that which is most necessarily required is a real and fastidious scholarship; but of this not a single Tamil novel of recent times bears a notable mark. Even the Tamil renderings of some English Novels have been done by inelegant hands in so tasteless a manner that even the beauty of the original appears in the new dress transformed into ugliness. Except a few who look upon themselves as civilised and up-to-date, the main portion of the Tamils brought up in a simple and pure life do not like these novels at all. They like to read novels written in a pure and simple style depicting the nature and human life as found in their experience but agreeably ennobled by the moral elevation of the novelist's ideal thought,

Having keenly felt the want I ventured to produce this adapted Tamil translation of an eminent English novel in the hope that the pure and simple Tamil into which the ideas of the original are cast would please the Tamils very much and lead them further and further to an appreciation of the art and study of fiction coupled with a parallel progress in their own life.

To the Tamilians of yore and their descendants the art of fiction was not an unknown thing before the introduction of modern novel. How carefully this art had been studied by them would become apparent from a glance at the critical commentary of Nakkirar on *Iraiyanar Akapporul* written about the first century of the Christian era. And three poetical works of considerable literary merit like that of Chaucer, I mean Silappadhikaram, Manimekhalai and Udayanankadai, were already in existence in and after the second century after Christ, in which many a tale of Tamil antiquity appears in a collected form each of which, of course, incorporated into the main story with so profound a sense of unity that every one of them looks like so many inseparable limbs in a whole body. Besides this interweaving of one story into the other, the entire poem drawing faithful portraits from real life and tracing the distinctive features of individual character, combine them all to one complex whole so as to impress the mind of the reader with a sense of the strong unifying power of the poet. But it was a poetic age. Even story-telling went on in verse.

From the domain of poetry fiction was slowly emerging to breathe the freer atmosphere of prose, when the pernicious influence of Sanscrit broke in upon the mind of the Tamil scholars and vitiated their taste for simplicity of life. A whole series of Puranic legends and obscene myths found their way into Tamil. And the Tamil people of medieval period

haviug come under the influence of priests began to pay unlimited credence to mythical accounts of Gods and lost all their study of real life and with it the art of fiction also.

But fortunately for us, the study of English has once more opened our eyes to the real grandeur pertaining to the art of fiction; but once again has the uuwholesome contact of Sanscrit begun stealthily to sap up the vitality of the Tamil language. I need, therefore, hardly say that it is obligatory on every son of the Tamil country to wake up from his long slumber of neglect and indifference and do his utmost to render his services in the cause of his own mother tongue Tamil which is, in fact, the only one of the few highly cultivated ancient languages of the world that has survived. I have great pleasure in saying that the following Tamil adaptation of a famous English novel has been done by me to my great satisfaction and it is for the reader to judge how far I have succeeded in preserving the profound artistic skill of the English author in chaste, easy and elegant diction of Tamil.

The Sacred Order of Love,
Pallavaram,1st of May 1911.

VEDACHALAM.

இவ்விரண்டாம் பதிப்பின்கட்செய்திருக்குஞ் சீர்திருத்தங்கள் சில: முதற்பதிப்பின்கண் இடையிடையே கலந்திருந்த வடசொற்கள் அத்தனையுங் களைந்தெடுக்கப்பட்டு இது தனித்தமிழாக்கப்பட்டிருப்பதும், இடையிடையே சில சொற்களுஞ் சொற்றொடர்களும் முன்னையிலும் இப்போது சுவை மிகுந்தனவாக மாற்றப்பட்டிருப்பதும் பிறவும் அங்ஙனஞ் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகும். இப்பதிப்பையும் முதற்பதிப்பையும் ஒத்து நோக்கிப் படிப்பவர்க்கு வடசொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்கள் இவையென்னும் அறிவுஞ் செந்தமிழ் உரைநடையைமேன்மேல் அழகுஞ் சுவையும் முதிர எழுதும்வகையும் நன்கு விளங்கா நிற்கும்.

மறைமலையடிகள்.

ஓம்

நாகநாட்டரசி

குமுதவல்லி

முதல் அதிகாரம்

வழிநடந்து போகும் இளைஞன்

உலகத்தில் மிகஅழகிய மலைநாட்டைப்பற்றி விரித்துச் சொல்லப்போகின்றோம். தெற்கேயுள்ள குமரிமுனையிலிருந்து மேற்குக் கடற்கரைப்பக்கமாய் வடக்குநோக்கிச் செல்லுகின்ற மேற்கணவாய் மலைத்தொடர் என்பது ஒன்றுண்டு. இம்மலைத்தொடரில் நீலகிரிமலைக்கு அருகாமையில் உள்ள மலைநாடு இயற்கையமைப்பிற் காணப்படும் வளங்கள் நிரம்பி மிகப்பொலிந்து விளங்குகின்றது. வளைந்துவளைந்து ஓடும் எண்ணிறந்த கான்யாறுகளாலுந் தெளிந்த அருவியோட்டங்களாலும் நீர் ஊட்டப்படும் பூக்கள் நிறைந்த வெளிநிலங்களும், இனிப்பான பழங்கள் நிறைந்த தோப்புகளால் மூடப்பட்ட மேட்டுநிலங்களுங், காட்சிக்கு மிக இனிய பசும்புல் செழிப்பாய் வளர்ந்திருக்கும் பள்ளத்தாக்கான நிலங்களும், படைகள் செல்லுவதற்கு இசையாமல் இடர்ப்பயப்பனவாயிருந்தாலும் அமைதியாக வழிநடைப்பயணம் போகின்றவர்களுக்குப் பெருமகிழ்ச்சி தருகின்ற மலைகளின் இடையிலுள்ள இடுக்குவழிகளும், வானில் மீன்கள் விளங்குதல் போலப் பல்லாயிரம்பூக்களால் அழகுறுத்தப் பட்டிருக்கும் மென்புல் வளர்ந்து உயர்ந்த பொற்றைகளும், பஞ்சு சணல் நார்ப்பட்டு முதலியன மண்டிவளர்ந்து காற்றால் அலையுங் கொல்லைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இன்னும் அங்குள்ள தோப்புகளின் உள்ளே நுழைந்து காண்பேமாயின் மாதுளம்பழம், பலாப்பழம், மாம்பழம், நாரத்தம்பழம், முந்திரிப் பழம் முதலியவற்றைச் சுமைசுமையாய்த் தாங்கி நிற்கின்ற

மரங்கள் அடர்ந்து இருப்பது காணலாம்; அங்குள்ள மலைகளினிடையின் இடுக்கு வெளிகளிலே உள்ளுருவிப்போய்க் காண்பேமாயின் இரண்டு பக்கங்களிலுங் குலைகுலையாய்ப் பழங்கள் தொங்குகின்ற தீவியமுந்திரிக்கொடிகள் பின்னல் பின்னலாய்ப் பிணைந்திருத்தல் காணலாம். அகன்ற இலைகளை விலக்கிக் கொண்டு புறந்தோன்றிக் கிடக்குஞ் சுவையான கொம்மட்டிப் பழங்கள் பழுத்த கொடிகள் தாமே எப்பக்கத்திலும் பெரு விளைச்சலாயிருத்தலால் அவ்விடங்களில் இருக்கும் ஏழைக் குடித்தனகாரரும் அப்பழங்களை ஒரு பொருட்படுத்துவதில்லை. இவையேயன்றிப் பறங்கிப்பழம் பூசனிப்பழங் கும்பு கும்பாய்ப் பழுத்துத் தொங்குங் கொல்லைகளைப் புதிது காண்பவர் இவை இயற்கையிலேயே இவ்வாறு கொழுமையாய் விளைந்திருக்கின்றன என்று அறியாமற் குடிகளால் நன்றாகத்திருத்திப் பயிரிடப்பட்டன வென்றே நினைப்பர். இக்கொல்லைகளைச் சூழ்ந்து வேலிபோலிருக்கும் புதர்களின்மேற் சிவக்கப்பழுத்த கொழுங்கனிகளுடைய கொவ்வைக் கொடிகளுங், குன்றிமணிக் கொடிகளும் படர்ந்திருக்கின்றன. மரப் பொந்துகள் தோறும் மலைவெடிப்புகள் தோறுந் தேனீக்கள் பலமலர்களினின்றுந் திரட்டித்தொகுத்த தித்திப்பான தேன் அடைகள் நிரம்பியிருக்கின்றன.

இனி இங்கேயுள்ள காடுகளின் பக்கத்திற் காட்டுத் தாராக்கள் தலையை அசைத்து நிமிர்ந்துசெல்லுவது காணலாம்; அரவம் அடங்கியுள்ள அவ்விடத்திற் பகற்காலத்திற் பறவைத் தொகுதிகள் பறக்கும்போது உண்டாகும் இறக்கையின் ஓசைதான் ஒவ்வொருநேரங் கேட்கப்படும். நீர்ஓடைகளிற் கரிய அன்னப்பறவைகளும் வெளிய அன்னப்பறவைகளும் மொழுமொழுவென்று ஓடுந் தெளி நீரிற் சறுவலாய் மிதந்துசெல்கின்றன; வரகங்கொல்லைகளில் மடப்பான புள்ளிமான்களுங் கலைமான்களும் மிகவும்விரைவாய்த் துள்ளித்துள்ளிக் களிப்பாய்ஓடுகின்றன; யாரும் வருத்துவார் இன்மையால் முயல்கள் கூட்டங் கூட்டமாய்ப் புல்நிலங்களில் அச்சமின்றி மேய்ந்து திரிகின்றன; சிலவேளைகளில் இருமருங்கும் பழுத்தமரங்கள் வரிசை

யாய் அமைந்த காட்டுநெறியை மெதுவாய்க் கடந்து செல்கின்றன. சிலவேளைகளில் மிகவும்பருமனுள்ள கழுகு இங்குமங்கும் பறந்துபோவது காணலாம்; ஆயினும், அவை அருகாமையில் உள்ள மலைஉச்சிகளில்தாம் கூடுகட்டி உறைகின்றன. அம்மலைகளின் கரிய முழைஞ்சுகளிலிருந்து பல்லாயிரங் கணக்கான அருவிகள் உண்டாகிக் கீழ் அடிவாரத்திலுள்ள நிலத்திற்பாய்ந்து அதனை வளம்படுத்துகின்றன.

இங்ஙனம் அடிவாரத்திலுள்ள வளப்பமான நிலமும், அதனை அடுத்து உயர்ந்த நீண்ட மலைத்தொடருந் தம்மில் இருவேறு வகைப்பட்ட இயற்கையுடையனவாய் விளங்குதலை வேறெங்குங் காண்பது அரிது. அத்தனித்த மலைத்தொடர்ப் பாகங்களில் மலைகள் ஒன்றன்மேலொன்றாய் உயர்ந்தும், குன்றுகள்மேற் குன்றுகள் செறிந்தும், உயரத்தின்மேல் உயரமாய்க் கற்பாறைகளும், அச்சம்வாய்ந்த செங்குத்தான கொடுமுடிகளும், இருண்ட இடுக்கு வழிகளும், அருவி விழுந்து குடைந்த பெரும்பள்ளங்களும், பனிப்பாறைகளும், உறைபனிகளும் நிறைந்தும் ஒருங்குபட்டுத்தோன்றும் மிகமேலான தோற்றமானது மிக உயர்ச்சியுடையதாயுங், கண்டார்க்கு உள்ளமேம்பாட்டை விளைவிக்கும் பெருந்தகைமை யுடையதாயும் இருக்கின்றது. ஆ! இங்ஙனம் நாம் விரித்துக்கூறிய இனிய அடிவாரத்தினையும் வியக்கற்பாலதாம் அவ்வுயர்ந்த மலைத்தொடரினையும் மேற்கவிந்துள்ள வானம் புயலின்றி நீலநிறஞ்சிறந்து தெளிவுடையதாய் விரிந்து எவ்வளவு தூயதாய் விளங்குகின்றது!

கொச்சிமுதலான தென்னாடுகளிலிருந்து மேற்பக்கமாய் வடக்கு நோக்கிச் செல்வோர் தமது இடதுகைப்புறத்தில் விரிந்துகிடக்கும் இம்மலையநாடு இங்ஙனம் பேரழகுடையதாய்ச் சிறந்து விளங்குதல் கண்டுகொள்க. நீலகிரிமலைச்சாரலிலுள்ள இம்மலையநாடு சேரமரபினர்க்கு உரிமையுடையதாயினும், அக்காலத்தில் அரசாண்ட நரசிங்கவருமசோழன் என்னும்வேந்தர் வேந்தன், சாளுக்கிய நாட்டு அரசர் முதலாயினாரைப் புறங்கண்டு போராற்றலுடையனாய் விளங்கினமையால், மற்றைத் தமிழ்நாட்டுவேந்தரான சேரபாண்டியர் இவனோடு எதிர்க்க

அருகி அமைந்திருப்ப, மலைநாட்டுக்கோடியிலுள்ள நீலகிரிமலைச் சாரல் அதனை யடுத்துள்ள சோழநாட்டோடு ஒருங்கு சேர்ந்து சோழமரபினர்க்கு உரியது போல் தோன்றிற்று. நரசிங்கவருமசோழனும் அந்நாடு தனக்கு உரிமையுடையதன்றாதல் நன்கு உணர்ந்து அதனை முற்றுந் தன்னகப்படுத்த நினையாமல் தன் படையில் ஒருபாகத்தை அங்கு நிலைப்பித்து அங்கு நடத்தப்படும் வாணிகஞ் செவ்வையாக நடைபெறும் பொருட்டு அதனைக் காப்பதுபோற் காட்டி வந்தான். அந்நீலகிரிநாட்டில் உள்ளோரும் 'வேற்றரசன் ஒருவனுக்கு நாம் அடங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளோம்' என்பதை நினையாமல், தாம் விரும்பியவாறு தம்முடைய சிற்றரசன் கீழ் இனிது காலங்கழித்து வந்தார்கள். இம் மலைய நாட்டிலுள்ள மக்கள் எல்லாரும் அழகாய் இருப்பர், ஆண்மக்கள் எல்லாரும் நீண்டுயர்ந்து ஒடிந்து விழுவது போன்ற அழகிய உடம்பும் பார்வைக்கு நல்ல தோற்றமும் உடையராய் இருப்பர்; பெண்மக்கள் எல்லாருந் தம் உடம்பின் மெல்லியதெளிவான சாயலானும், உறுப்புகளின் மிகத்திருந்திய அமைப்பானும், அவ்வுறுப்புகளெல்லாம் ஒரே ஒழுங்காய்க் கனிந்த அழகுடைமையானும், உலகமெங்கும் புகழ்பெற்றுச் சிறக்கின்றார்கள்.

கி-பி, கூஉ௫-ஆம் ஆண்டுஇளவேனிற்காலத்திடையில்ஒரு நாள் ஓர்இளைஞன் மிகவும் அழகான ஒரு குதிரைமேல் ஏறிக்கொண்டு நாம் முன்னே விரித்துச் சொல்லிய மலையநாட்டில் வந்துகொண்டிருந்தான். இவனுக்குப் பதினெட்டு ஆண்டு இருக்கலாம். இவன் பார்வைக்கு நல்லதோற்றம் உடையனும் இருந்தான். இவன் விழிகளிற் காணப்படுகின்ற ஒரு வகையான சுருசுருப்பு, இவன் உருவமெங்குங் கள்ளத்தன்மையுடைய தோற்றத்தை விளைவித்துத் திடுக்கிடச் செய்தலால் இவனை அழகுடையவன் என்று சொல்லக்கூடவில்லை. மற்று, இவன் உறுப்புகள் மிகச் செவ்வையான அமைப்புடையனவாய் இருந்தன. சிலவேளைகளில் இவன் கண்ணின் தோற்றத்தை நோக்குகின்றவர்க்கு இவன் கடுமை, தணியாப் பகை, கொடுமை முதலான தீய தன்மைகளுடையவன்போற் கடு

மையாய்த் தோன்றும். ஆயினும், மலைநாட்டில் வாழ்கின்றவர்க்கு இத்தகையபார்வை பொதுவாக இருத்தலால், இது கொண்டே அவரது இயற்கையை அளந்தறிதல் ஒரு சிறிதும் பொருந்தாது. இங்ஙனம் நாம் வகுத்துரைக்கின்ற இவ்விளைஞனுடைய உடம்பின் சாயல் பெண்களுக்கு இருப்பதுபோல் தெளிவாய்த் திகழ்ந்தது; ஆயினும் மகளிர்க்கு உள்ள மென்மையில்லை; இவன் கதுப்பில் கடற்சிப்பியிற்போற் சிவந்த சாயத்தோய்ச்சல் இல்லையாயினும், இளமைக்கு உரிய சிவந்தநிறஞ் செழுமையாய் இருந்தது. மோவாயில் மயிர் இல்லை. மீசைமயிர் தலைமயிரைவிட மிகக் கறுகறுத்து அரும்பியிருந்தது; தலைமயிர் பழுப்பு நிறமாய்ப் பட்டுப்போல் வழுவழுப்பாய் இருந்தது; இம்மயிரைப் பிடரிவரையில் நறுக்கித் தொங்கவிட்டுத் தலையிற் பொற்சரிகை விளிம்புகோத்த சிறுபாகை சூடியிருந்தான். உடம்பினோடு ஒட்டி இறுகப் பிடித்திருக்குங் காற்சட்டை கைச்சட்டை யிட்டிருப்பதனாற், பூங்கொம்புபோல் ஒடிந்து விழும் இயல்பினையுடைய அவன் உடம்பின் உறுப்புகள் திருத்தமான அழகுடன் பொருத்தமுற்றிருத்தல் நன்கு தோன்றிற்று. இவன் இடுப்பில் இறுகப்பிணித்திருக்கும் அரைக்கச்சில் நொய்தான கொடுவாள் ஒன்று தொங்கிற்று. மெல்லிய தோலினால் தைத்த அடிச்சட்டை முழங்கால் அளவும் மாட்டியிருந்தான். அவன் ஏறிச்செல்லுங் குதிரையின் சேணங் கலினம் முதலியன எல்லாம் நடுத்தரமான சிறப்புடையன; சுருங்கச்சொல்லுமிடத்து, இவ்விளைஞன் பெரிய ஒருசெல்வன் வீட்டிலுள்ள ஏவலாளிகளில் உயர்ந்த நிலையில் உள்ளவனாகத் தோன்றினான்.

இனி ஒருவகையான குறிப்புள்ள இவன் கண்கள் பெருத்து நீலநிற முடையனவா யிருந்தன. அவற்றின் குறிப்பை நோக்காமல் அவை தெளிவாக இருத்தலைமட்டும் பார்ப்பவர்க்கு அவை மிகவும் அழகாகத் தோன்றும். நல்ல இயல்புகளுக்கு ஓர் உறைவிடம்போலத் தோன்றி அகன்று உயர்ந்த நெற்றியானது பொன்னிறமாய் மழமழவென்றுவிளங்குதலால் அவன் கண்களில் உள்ள கொடுங்குறிப்பு அவ்வளவாகத் தெரிதலில்லை. அவன் முகத்தின் கீழ்ப்பாகங்களெல்லாம் அவன் நல்

வன் என் றறியும்படியாக அமைந்திருந்தன. திருத்தமாய் அமைந்த அவன் இதழ்கள் அவனிடத்துக் கள்ளங்கவடு இல்லாமை காட்டுவன போல் இருந்தன. அவ்விதழ்கள் விரியுந் தோறும் இடைஇடையே மயக்குந் தன்மை யுடைய இனிய நகையொளி தோன்றுதல்போல மற்றை ஆண்மக்க ளிடத்திற் பார்த்தலரிது. அங்ஙனம் நகைதோன்றும் போதெல்லாம், செய்ப்பான பவளத் துண்டின்மேல் ஞாயிற்றின்கதிர் விரிதல் போலவும், இங்குலிகச் செப்பின் வடிம்பில் விழுமிய முத்துகள் பதித்ததுபோலவும் இரண்டு வரிசையாகப் பற்கள் தோன்றும்.

இனி இவ்வாறு வகுத்துச் சொல்லப்பட்ட இளைஞன் குடகிலிருந்தாயினும், இன்னும் அதற்குந் தொலைவிலுள்ள நாக நாட்டி லிருந்தாயினும் வந்தவன்போல் மேல் கடற்கரையைச் சார்ந்த மேற்கணவாய் மலையநாட்டில் வந்துகொண்டிருந்தான். இவன் நீலகிரி நகரத்திற்கு நேரே போகும் வழியிற் செல்லாமல் இடையே மேற்கணவாய் மலைச்சாரலிற் கொண்டு போய்விடுங் குறுகலான ஓர் இடுக்கு வழியில் இப்போது திரும்பிச் சென்றான். இவன் சில நாட்களாக வழிநடந்து வந்திருக்கவேண்டும்; ஏனெனிற், சிறிது நேரத்திற்குமுன்னே வழிநடை துவங்கியிருந்தால் இவன் தன்குதிரையைப்பற்றி இப்போது மிகவுங் கவலைகொண்டு பார்ப்பது போற் பார்க்க வேண்டுவ தில்லை; சிறிது நேரத்திற்கு ஒருதரம் வழிச்செலவை நிறுத்திக் கீழ் இறங்கி நிலத்திற் கொழுமையாய் வளர்ந்திருக்கும் இனியபுல் மேயவிட்டுத், தான் தீவிய முந்திரிக் கொடி படர்ந்த மரநிழலில் இருந்து சாய்ந்துகொண்டு தலைக்கு மேலே குடும்புகுடும்பாய்த் தொங்குங் கொழுவிய பழக்குலையில் ஒன்றுபறித்துத் தின்னுவான்; திரும்பவுஞ் சிறிதுநேரங்கழித்து வழிநடை தொடங்குவான்; இவ்வாறு சில நாழிகையாக அவன் வந்துகொண்டிருந்தான்.

இனி இவன்போகும் இடுக்குவழி மிக நீண்டதா யிருந்தாலும் மெத்தென்ற புற்கற்றை நெடுகவிருத்தலாற் குதிரைக்கு வழியிற் சிறிதும் வருத்த மில்லை. அதுவேயு மன்றி, அவ்

வழியி லிடையிடையே பல சிற்றருவிகள் ஓடிவருதலால் குதிரை தன் கால்களைக் குளிரச் செய்துகொண்டுந் தண்ணீர் அருந்தி விடாய் தீர்த்துக்கொண்டுஞ் செல்வதாயிற்று. இனி ஞாயிறு மறைகின்ற நேரத்தில் இவ்விளைஞன் அவ்விடுக்கு வழியின் முடிவிற்போய்ச் சேர்ந்தான்; நடுவில் இடைவெளியாயுள்ள மேட்டுப்பாங்கான நிலத்திற்கு இருபக்கத்துஞ் செங்குத்தாய் ஆழ்ந்துகிடக்கும் பள்ளத்தாக்குள்ள மலைச்சாரல் தொடர்புற்று இருக்கின்றது. இம் மேட்டுப்பாங்கான மலைத் தொடர்பினுள் அவன் நுழைந்து போவானாயினான்; இங்ஙனம் போகப்போக இருளோவென்று கருகித்தோன்றும் மலைத் தோற்றம் அவன் சிலநாழிகைமுன்னே வழிநடந்துவந்தவளவிய நிலத்தின் றன்மையோடு எவ்வளவு மாறுபட்டுக் காணப்படுகின்றது! மாலைப்பொழுது முற்றும் வந்து கவிந்த வுடனே, காடு முருடான இம்மலைப்பாங்கில் விரிந்து கிடக்கும் ஓர் அடர்ந்த காட்டின் அருகே வந்து சேர்ந்தான். அவன் அங்குள்ள வழிதுறைகளெல்லாம் முற்றுந் தெரிந்தவன் போலவும், அங்கு எதற்கும் அஞ்சாதவன் போலவுங் காணப்பட்டான். மரங்கள் ஒன்றோ டொன்று பிணைந்து வழிதுறையின்றி எல்லாங் குழம்பலாய்க் கிடக்கும் அவ்விருண்டகாட்டின் இடையே புதிதாக வழிச்செல்வோர் யார்க்கும் அறியக்கூடாத வழியை இவன் கூர்மையான கண்கள் தெரிந்தெடுத்தன; பின்னும் ஓர் அரைநாழிகையில் தழைக்கும்பின் இடையிடையே வெளிச்சந் தோன்றுதலுங் கண்டுகொண்டான்; மற்றுஞ் சில நொடிப்பொழுதில், மரங்களின் நடுவிற் குறுக்கு உத்திரங் கட்டி அதன் மேல் வெள்ளாட்டுத் தோலானும் மான்றோலானுந் தைத்த போர்வையிட்டுச் சமைத்த ஆறுகூடாரங்களுள்ள ஒரு பாசறையினை அடைந்தனன்.

இனி இப்பாசறைவீட்டு முற்றத்தின் இரண்டிடத்தில் நெருப்புக் கொழுந்துவிட்டு எரிந்தது; இந்நெருப்பண்டையிற் சிலர் மாலைக்காலத்திற்கு வேண்டும் உணவு சமைத்துக் கொண் டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நீண்டுயர்ந்து வலியராயும் அழகாயும் இருந்தனர். உச்சியில் சிவப்புத்துணி

யுள்ள ஆட்டுத்தோற்குல்லாவைத் தலைக்கு அணிந்திருந்தார்கள். அவர்கள் அடியிலிட்டிருக்குந் தோற்சட்டை காலுக்குப் பாதுகாவலாயிருப்பதன்றியும் நடைவிரைவுக்குந் தடைசெய்வதில்லை. அது வல்லாமற், கைத்துப்பாக்கியுஞ் சிற்றுடைவாளுஞ் செருகிய அரைப்பட்டிகையிற் கூரியகத்தியுந் தொங்கவிட்டிருந்தார்கள். கூடாரங்களுள் எட்டிப்பார்த்தால் எவ்வளவு ஆட்கள் இருந்தார்களோ அவ்வளவு துப்பாக்கிகளும் இருந்தன. சுருங்கச் சொல்லுங்கால், இம்மலையநாட்டில் நெடுங்காலம் வழிப்பறி கொள்ளை செய்துகொண்டு வருபவராயும், இந்நாட்டிற் புகுந்த நரசிங்கவரும சோழன்படைக்குக் கொடும் பகைவராயுமுள்ள கள்வர் கூட்டத்தினுள் ஒரு பகுதியினராக இங்குள்ள இச்சிறுகூட்டத்தார் காணப்பட்டனர்.

இனி இப்பாசறைவீட்டண்டை வந்துகொண்டிருக்கும் இளைஞன் தன்குதிரைக்குளம்படியின் ஓசை அச்சிறு கூட்டத்தார் காதிற் படுமென்பது தெரிந்தவுடனே அவன் தன் இதழ்களைக்குவித்துப் பளீரென்று ஒருசீழ்க்கை யடித்தான். அச்சீழ்க்கை ஓசை அக்காடெங்கும் உருவிச் சென்றது. அக்கள்வர் கூட்டத்தார் தங்கள் நண்பன் வரவை அறிவதற்கு இச்சீழ்க்கை யோசை ஓர் அடையாளம்போலும்! மிகவுந் திணிந்து பின்னிக்கிடத்தல்பற்றி அக்காட்டின்வழியே சிறிது நேரமாக நடத்திக்கொண்டுவந்த தன் குதிரையோடு அவ்விளைஞன் அவர் எதிரிற் புகுந்தபொழுது நெருப்பின் வெளிச்சம் அவன் முகத்திற் படவே அவரெல்லாரும் உடனே அவனைத் தெரிந்துகொண்டனர். அவனோ அவர்களையும் அவ்விடத்தையும் புதிது கண்டவனாய் இல்லை; அவர்களும் அவ்வாறே அவனோடு நன்கு பழகினவர்களைப்போல் இருந்தனர். நண்பர்க்குரிய முகமனுரைகள் ஒருவர்க்கொருவர் வழங்கினர்; அவர்களுள் ஒருவன் அவ்விளைஞனுடன்வந்த குதிரையைக் கொண்டுபோய்த் தீனிமுதலியன அளித்தான்.

“உண்மையாகவே இது நேர்த்தியான குதிரைதான்” என்று ஒருவன் அதன் கழுத்திற் றட்டிக்கொடுத்து “உனக்கு இது நல்ல உதவிசெய்தது” எனக்கூறினான்.

"ஆம்" என்று அவ்விளைஞன் மறுமொழிதந்து "எனக்கு இன்னும் நெடுநேரம் இருந்தது பற்றி இந்நாள் முழுமையும் மிக மெதுவாய் அதனை நடத்திக்கொண்டுவந்தேன். உங்கள் தலைவனைத் தவறுமற்காணும் நேரம் நன்கு அறிவேனாதலால் இராப்பொழுதிற்குமுன் இங்கு வர முயன்றிலேன்" எனச் சொன்னான்.

"வேலையிருந்தால் ஒழிய" என்று அக்கள்வன் அருகிலுள்ள தீவெளிச்சத்தில் ஒரு குறிப்புத்தோன்றநகைத்து "எங்கள் தலைவனுக்கு எல்லாநேரமும் ஒன்றுதான். அதுநிற்க, உன் குதிரையைப்பற்றிப் பேசுமிடத்து" என்று தொடர்ந்து குதிரை நோட்டத்திற் பழக்கப்பட்டவன்போல் அதன் உடம்பின் ஒழுங்கையும் ஒவ்வோர் உறுப்பின் அமைவையும் மெதுவாக அளந்து நோக்கி "ஆ, இது மிகஉயர்ந்த பரிமா" எனமொழிந்தான்.

"இந்த இனத்திற்கு உரிய அடையாளம் இங்கே இருக்கின்றது" என்று அவ்விளைஞன் அதன் பின்றொடையில் தீய்க்கப்பட்ட ஒரு சிறியதழும்பைக் குறித்துக்காட்டி அவனோடு ஒத்துப்பேசினான்; ஏனெனில், அம்மலைநாட்டிலுள்ள குதிரைகளின் இனப் பகுப்பினை வழுவாது நெறிப்படப் போற்றிவைப்பதற்கு அவர்கள் அங்ஙனம் அடையாளம்இடுதல் வழக்கம்.

"உண்மை! இந்தஇனம் நல்லதுதான்" என்று அதனைப் பார்த்துக்கொண்டிருந்த மற்றொருவன் வியந்தான். "ஆயினும் எங்கள்தலைவன்ஏறிச் செலுத்துகின்ற குதிரையினும் இதுதாழ்ந்ததுதான். ஏனென்றால், அதன் பின் தொடையில் குதிரைக்காற்பறளைக்குறி யிருப்பதனை நான்சொல்லும்போது இளையோய், நீயே அறிவாய்" என்றான்.

"நண்பனே, நின்தலைவன் குதிரையினை நான் ஒருகாலுங் கண்டிலேன் போலவுங், குதிரை இனங்களுள் அது மிக அருமையான தென்பதைக் குறிக்கும் பறளை அடையாளத்தை நான் அறியேன் போலவும் நீ பேசுகின்றாய். அதுநிற்கட்டும். இப்போது எனக்காக என் குதிரையினைப் பார்த்துக் கொள்; உங்கள் தலைவனொடு நான் உடனே பேசல்வேண்டும்" என்று அவ்விளைஞன் மொழிந்தான்.

இரண்டாவது பேசின கள்வன் அப்படியே அவனைத் தன் பின்னே வரும்படி அழைத்துக்கொண்டு போவானாயினான். வழி துறையில்லாத அக்காட்டின் இடையிலே இருவரும் புகுந்து, கூடார முற்றத்தில் எரிந்துகொண்டிருந்த நெருப்பு வெளிச்சத்திற்கு அப்புறம் போய்விட்டார்கள்; இப்போது எங்கும் ஒரே இருளாய் இருந்தது. ஆனாற் கள்வனே தான் செல்லும் வழியினை மிகவும் நன்றாய் அறிந்தவன்போல் விரைவாய் நேரே சென்றான். இளைஞனே அவன்பின்னே ஒட்டிக்கொண்டு போயினான். ஓசையின்றி எங்கும் இருண்டு கிடக்கும் அவ்விடத்திற் சடுதியிலே யாரோ காவலாளன் அறைகூவும் ஓர் ஒலி கேட்டது. உடனே அதற்குக் கூடப்போகுங் கள்வன் ஏதோ விடை சொன்னான்; சிறிதுதொலைவில் மரங்களின்நடுவில் மற்றொரு வெளிச்சந் தோன்றச் சிறிதுநேரத்தில் ஒரு கூடாரத்திற்கு முன்னே தீ எரியும் முற்றத்தில் இருவரும்போய்ச் சேர்ந்தார்கள்.

முன்னேகண்ட சிறிய பாசறைக்கு உரியவற்றுள் இதனைக்காட்டினும் இக் கூடாரம் பெரியதாயும் உயர்ந்ததன்மையுடையதாயும் இருந்தது; இதன் படாத்திலுள்ள தோலின் ஓரங்களில்நீலப்பட்டுத்தைக்கப்பட்டிருந்தது; இதன் நுழைவாயிலும், நீலப்பட்டினாற்செழுமையான பூத்தொழில் செய்யப்பட்டதிரை இடப்பட்டிருந்தது. தீயில் மணங் கமழ உணவு சமைக்கும் மட்பாண்டத்தைப் பார்த்துக்கொண்டே ஓர் ஏவற்காரன் உட்கார்ந்திருந்தான். இளைஞனை அங்கே அழைத்துக்கொண்டுவந்த கள்வன் கூடாரத்தினுள்ளே அவனை நுழைந்து போகும்படி சொல்லிவிட்டுத் தான் வெளியே நின்றுவிட்டான்.

அக்கூடாரத்தினுள்ளே நிலத்தில் விரிக்கப்பட்ட பாயின் மேல் இருபத்துமூன்று அல்லது இருபத்துநான்கு ஆண்டிற்கு மேற்படாதஒருவன் சாய்ந்துகொண்டிருந்தான்; அவன் முகத்திற் பிறரை அடக்கியாளும்பொருட்டு இயற்கையிலேயே அமைந்துள்ள ஒருகளை தோன்றிற்று. அவன் உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்தானாயினும், ஒத்துச்சமைந்த அவன் உடம்புஞ், செவ்வையாகப் பொருத்தப்பட்ட உறுப்புகளும் அவன் மெய்

வலியின் மிகுதியினை இனிது விளக்கின. அவன் தலைமயிர் கரியதாய்ச் சற்று அளவுக்குமேல் அடர்ந்திருந்தது. அவ்வாறே மிகவுங் கரியவான அவன்கண்கள் பெருந்துலக்க முடையனவாயிருந்தன. அவன் முகத்திலுள்ள மற்றைஉறுப்புகளெல்லாஞ் சிறிது பரும்படியாகக் கடைந்தெடுத்தனபோல் இனிதமைந்திருப்பவாயின; அவன் முகத்தை ஒருபக்கச்சாய்வாய்ப்பார்த்தால் மட்டும் மூக்குக் கழுகுபோற் சிறிது வளைவாயிருத்தல் தோன்றும். அவன் சிறிது கன்னமீசையும் முகமீசையும் வைத்திருந்தான். அவன் மோவாயோ மயிரின்றி நன்றாய்ச் சிரைக்கப்பட்டிருந்தது. கள்வர்கூட்டத்திற்கு உரியவண்ணம் அவன் அணிந்திருந்த ஆடை தன் ஆட்கள் அணிந்திருந்தவற்றைக் காட்டிலும் மிக உயர்ந்ததாயும், அரைக்கச்சுப் பூத்தொழில் செய்யப்பட்டதாயுங், கைத்துவக்குஞ் சுரிகையும் வெள்ளிவைத்து இழைத்தனவாயுங், குற்றுடைவாளும் அவ்வாறேஅழகுடையதாயும், பாயின்மேல் அவன் அருகிற்கிடந்த சுழல்துப்பாக்கி திறமையான தொழிற்பாடு உடையதாயும் விளங்கின. கூடாரத்திற் றொங்கவிட்டிருந்த வெள்ளிவிளக்கு இவன் முகத்தில், நன்றாய் ஒளி பரப்பினமையால் இவன் முகக்குறிப்பை நன்கு அளந்துபார்த்து இவன்மாட்டுத் தடைபடாத மனஊக்கமும், மனக்கிளர்ச்சியும், எவர்க்கும் அஞ்சாத வன்கண்மையால் எவற்றையும் பொருள் செய்யாது முடிக்கும் பேராற்றலும், பெருந்திறமையும், அவற்றால் அவன் மற்றையோரைக் காட்டிலுந் தனக்குள்ள உயர்ச்சியினை நன்றாய் அறிந்திருந்தான் என்னுங் குறிப்பும் அமைந்து கிடத்தலைக் கடிதில் அறிந்து கொள்ளலாம். இங்ஙனம் அவன் எல்லாவகையானுந் தன்கீழ் உள்ளார் தன் சொற்படி அடங்கி நடந்து தன் இடத்து நம்பிக்கையுடையராய் நடந்து கொள்ளவுந், தான்வேண்டும்பொழுது அவரை வலிந்து ஒன்று செய்யும்படி வற்புறுத்தி முடிக்கவுங் கூடிய ஆற்றலும் உயர்ச்சியும் உள்ளவனுயிருந்தனன்.

அவ்விளைஞனுக்கு இக்கள்வர் தலைவன் புதியன் அல்லன். அக் கூடாரத்தினுள் நுழைந்தவுடனே அவ்விளைஞன் இவனை ஓரளவான பணிவுடன் வணங்க, அத்தலைவனுஞ் சில நேரங்களில்

உயர்ந்தோர் தம்மினுந் தாழ்ந்தோரை நண்புடன் அன்பாய் நடத்துமுறைப்படி நேயர்க்குரிய இனிய மொழிகள் சொல்லி அழைத்தான்.

"சந்திரா, நின்வருகை நன்றாகுக. என்ன்செய்தி கொண்டு வந்தாய்?" என்று அக்கள்வர் தலைவன் கேட்டனன்.

"மேன்மைதங்கிய தலைவனே, எல்லாஞ்செவ்வையாகநிகழ் கின்றன" என்று அவ்விளைஞன் மறுமொழி தந்திட்டான்.

"இதனால், நாகநாட்டரசியிடத்தும் நீலலோசனன் என் னும் பௌத்த இளைஞனிடத்துங் கருதியவண்ணம் முடித்து வந்தாயென்று நினைக்கின்றேன்" என்றான் அத்தலைவன்.

"மேங்கரை என்னுந் தன் நகரத்திலிருந்து பயணம்போ வதற்கு மிகவும் இசைந்தவழியினை நீலலோசனனுக்குக் காட்டி யதுபோலவே, நாகநாட்டிலிருந்துவரும் அழகிய தமிழ்நங்கை லிக்குங் காட்டியிருக்கின்றேன்" என்று அவ்விளைஞன் ஒத்துக் கூறினன்.

"சந்திரா, நன்கு செய்தாய்." என்று தன்முகத்தில் மகிழ்ச் சிதோன்றச் சொன்ன அத்தலைவன் மீண்டும் "முன்னொரு முறை நீ எனக்கு மிகவும் நுட்பமாய் விரித்துச்சொன்ன வரலாற்றில் உனக்கு நம்பிக்கை உண்டோ என்பதனைத் திரும் பவும் அறிய விரும்புகின்றேன். ஏனெனில், பெறப்படுகின்ற அப்பொருளின் உயர்ச்சியை நோக்கினல்லது, அவ்வளவு பெரியதொகு துணிகரமான செயலிற் புகுதற்கு நான் நினைக்க மாட்டேன்" என்றுசொன்னான்.

"யான், நுணுக்கமாய் விரித்துச்சொல்லிய ஒவ்வொன்றும் உண்மையாமென்றே நம்புகின்றேன். தாமரைவேலி என்று சொல்லுதற்குப் பெரிதும் வாய்ப்புடைய மலையவேலியின் கண் அப் பெரும்பொருள் புதையலாய் இருக்கின்றது" என் றான் சந்திரன்.

"புதுமை! புதுமை! இம்மேற்கணவாய் மலைத்தொடர் முழுதும் எனக்குத் தெரியாத சந்து, பொந்து, மூலை, முடுக்கு ஒன்றுமே இல்லையென்று என்னைப் பெரிதாக எண்ணியிருந்த எனக்குந் தட்டுப்படாமல் தாமரைவேலி என்பதொன்று இருந்

தல் பெரிதும் வியப்பாயிருக்கின்றது! அங்ஙனம் ஒன்றிருக்கு மென இதுவரையில் நான் ஐயப்பட்டது மில்லையே! ஆயினும், அப்படியொன்று இருக்கலாம்—அப்படியொன்று இருக்கத் தான் வேண்டும்!'' என்று காதிற் கேட்கும்படியாகவே அத் தலைவன் முனகினன்.

''அஃது அப்படித்தான்! உயர்ந்தோய், மலைநாடர்க்குள் வழங் கும் இச்செய்தியாவது உமக்குச் சிலநேரங்களில் எட்டியிருக்க வேண்டுமே'' என்று சந்திரன் அழுத்திப்பேசினன்.

''ஆம்! அதனாலேதான் நீ முதன்முதல் அக்கதையினை எனக்குச்சொன்னபோது நான் அவ்வளவு உன்னிப்பாய்க்கேட் டேன். நான் குழந்தையாயிருந்தபோது என்பெற்றோர்''— என்று சொல்லும் போதே அத்தலைவன் முகம்வேறுபடப் பெருமூச்சுவிட்டு ''ஆம் குழந்தையாயிருந்தபோது இறந்து போன என்பெற்றோர், தமிழர்க்கு முதற் றந்தையுந்தாயும் இறைவனாற் படைக்கப்பட்ட காலத்தில் இம்மலைத்தொடரின் இடையில் உள்ள தாமரைவேலியில் அவர் அவ்விறைவன் கட் டளையால் தங்கியிருந்தனரெனவும், அவர்க்குப்பின் மக்கள் யாரும் அதனுட் புகுத இடம்பெறுவதில்லை எனவும், ஆயினும், ஒரோவொருகால் நெடுங்காலம் இடையிட்டுத் திருவருளாலே யாற் செலுத்தப்படுகின்ற தூயனொருறவி தூயதான அவ் விடத்தைக்குறுகி ஆண்டுச் சுற்றிலும் உயர்ந்துவிளங்கும் மலை களின் மேலேயிருந்து கீழே பொலிந்துதோன்றும் இன்பமான இளங்காவினை அப்பள்ளத்தாக்கிற் காண்பன் எனவுஞ் சொல் துவ வழக்கம்'' என்றான்.

''என்னுடைய கதையானும் நீங்கள் சொல்லியவற்றானுங் குறிப்பிக்கப்பட்ட அவ்விடந்தான் நந் தமிழர்க்கு முதற்றந் தையுந் தாயும் உறைந்த இன்பநிலமென்று நான் சொல்லவில்லை. என் அறிவுக்குப் புலப்பட்டபடி கேட்டால், அஃது அவ்விடம் அன்றென்பதே என்கருத்து. நம் முதற் றந்தைதாயர்க்குப்பின் அவ்விடம் அழிந்துபோயிற்றெனல் தான் உண்மை; ஆயினும் இம்மேற்கணவாய் மலைத்தொடரில் எங்கோ ஓரிடத்தில் அவர் இருந்த அம்மலையவேலிப் பெயர்கொண்ட ஓரின்ப இளங்கா

விளங்குதல் வேண்டு மென்பது மட்டும் நான் உறுதியாய்ச் சொல்வேன். இனி நான் சொன்ன மற்றை வரலாறுகளைக் கொண்டு, அங்குப் பொற்குவியல் உண்டோ இல்லையோ என் பதனை நீங்களே அறிந்துகொள்ளலாம். ஆனல், நாம் குறிப் பிட்டுப்பேசியது மலைநாட்டில் வழங்கும் வரலாற்றுடன் மிக வும் பொருந்தியிருக்கின்றது" என்று சந்திரன் சொன்னன்.

"அவ்வரலாற்றினல், அதுபோன்ற இன்பமான இடங் கள் இம்மலைகளினிடையே பல இருக்கின்றன என்றும், அவ் விடங்களில் மிகச்சிறந்த மலர்கள்மட்டும் பூக்கின்றன, அருமை யான இளமரங்கள்மட்டுங் கொழுக்கின்றன என்றும், பாம்புமுத லான ஊர்வனவற்றிற்கு உணவாகும் பரும்படியான தழைகள் அங்கில்லை என்றும், அமிழ்தவடிவாயுள்ள அத்தனித்த இடங் களிற் புலிகளேனும் நரிகளேனும் நுழையமாட்டா என்றும், அவ்விடத்தைச்சுற்றி அரைப்பட்டிகைபோல் உள்ள செங்குத் தான மலைகள் புறத்தேயிருந்து பார்ப்பவர்க்குத் திரை மறைப் புப்போல் அவர் பார்வையினைத் தடைசெய்தலேயன்றி வெளியி லிருந்து மக்கள் அடிச்சுவடு தோயாவண்ணம் எழுப்பிய வரம்பு போலவுங் குளிர்காலத்துக் கொடுங்குளிர்காற்றும் வேனிற் காலத்து வெங்கதிர்வெப்பமும் நுழையாவாறு கட்டிய அரண் போலவும் பயன்படுகின்றன என்றுங், கடைசியாகப் பொற் குவியலும் வெள்ளிக் குவியலும் புதையலாயுள்ள கனிகளும் உயர்ந்த முழுமணிகள் குவிந்த முழைஞ்சுகளும் உள்ளன என் றும் நாம் விளங்க அறிகின்றோம்" என்று பெருகியெழுந்த மகிழ்ச்சி தணிந்தாற்போலத் தாழ்ந்த குரலிற் பேசினன் அத் தலைவன்.

"தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டு இம்மலை நாடர்க்குள் வழங்கிவரும் அவ்வரலாற்றினை நீர் அவ்வளவு நன் ருய் நும் உள்ளத்திற் பொதிந்து வைத்திருந்தும், நான்சொன்ன அக்கதையினை நீர் ஒரு நொடிநேரமாவது ஐயமுறத் தலைப்பட் டது எனக்கு மிகவும் வியப்பாயிருக்கின்றது" எனச் சந்திரன் சொன்னன்.

"நான் அதனை ஐயப்படவில்லை; முதலிலிருந்தே நான் அதைப்பற்றி ஐயப்படாவிட்டாலும், நீ சொன்ன மற்றை எல்லாவரலாற்றிலுந் திருத்தமாகப்பேசினையோ என்று யான் உறுதிசெய்து கொள்ளும்பொருட்டே பலகேள்விகள் கேட்டேன்" என்று வழக்கமாய் எதற்கும் அஞ்சாத தன் இயல்புக்கு இசையப் பொறுமையான குரலோடு அத்தலைவன் பேசினான்.

"நான் சொன்ன உண்மையில் நீர் ஏன்தான் ஐயப்படல் வேண்டும்?" என்று சந்திரன் கேட்டான்.

"என் நிலைமையில் உள்ள ஒருவன் தன்ஆள் சொல்லும் உண்மையில் ஐயப்படாவிட்டாலும் ஒருதரத்திற்கு இரண்டுதரமாக ஓர் உண்மையை ஆய்ந்தறியவேண்டாமா?" என்று அவன் விரைந்துகேட்டுச் "சந்திரா! நான் சொல்வதைக்கேள். உன்னைக் கடைசியாக நான் கண்டதுமுதல் நான் நினைத்தது இது: நீ சொன்ன சிக்குமுக்கான சூழ்ச்சியில் தலைகீழாய்ச்சென்று விழுதலைக்காட்டினும், உடனே அவன்மேற் பாய்ந்துவிழுந்து அம்மறைபொருள் தெரிந்த அவனைக்கொண்டே அதனைத்தெரிந்து கொள்ளல் சுருக்கமும் அதனால் நல்லதுமன்றோ? என்னைநம்பு; உன் தலைவனை ஒருமுறையேனும் பிடித்துக்கொண்டு வந்து இம்மலைகளினிடையே என்மாட்டுக் காவலில் வைத்துக்கொள் வேணாயின்—"என்பதற்குள்;

"அவன் செத்தாலுஞ் சாவான்ஒழிய இம்மறைபொருளை மட்டுஞ் சொல்லான்" என்று சந்திரன் இடையிற்கூறி "இச்செய்திகளெல்லாம் எனக்குத்தெரிந்தபின், அவன் கடைசியாகப் பயணப்பட்டுப் போனபோது அவன் கூடவே போவதற்கு நான் நேரம் பார்த்துக்கொண்டிருக்கவில்லையா—" என்று சொல்வதற்குள்;

"நல்லது,நல்லது" என்று அத்தலைவன்மறுபடியும்விரைந்து இடைமடக்கிச் "சந்திரா, நீ சொன்னவாறே ஆகட்டும்! அதைக் குறித்து நான் ஆராய்ந்தபோது, நீசெய்த சூழ்ச்சிப்படி செய்தலை விட வேறுவழியில்லையென்னும்முடிபுக்குவந்தேன். அது சிறந்ததென்றுரைப்பதற்கும் நான் பின்வாங்கேன். பெரியநன்மை கிடைப்பதாயின், அதுமிகவுங்கலவரமானதென்று சொன்

னது கொண்டு அதனால் உண்டாகும் இடைஞ்சல்களை நினைந்து பின்வாங்குவேன் என்று நினையாதே. நண்பா சந்திரனே, செய்துமுடிக்கக்கூடிய ஒன்றிற்கு எளிதான நேரானவழியெது வென்று காண்பதே எனக்கு வழக்கம்; எளிதிலே செய்து முடிக்கக்கூடாததாயிருந்தால் மட்டுஞ் சுற்றானமெதுவான வழியிற் செல்லமுயல்வேன். இனி விரித்துச்சொல்ல வேண்டுவதில்லை; போதும்! இப்போது மாலைக்கு உணவு ஏற்பாடாயிருக்கும்; நாம் அதனை உண்பம். உண்டபின் சிலநேரம் நீ என்பக்கத்திற் பாய லிலேபடுத்து அயர்வுதீர்த்துக்கொண்டு விடியற்காலையில் நீலகிரி நகரத்தில் உன் தலைவனிடம் போய்ச்சேர்'' என்று மொழிந் தனன்.

இரண்டாம் அதிகாரம்

எதிர்ப்பு

இப்போது சொல்லப்படுஞ் செய்திகள் முன்னதிகாரத்திற் கூறியவை நடந்த மூன்றுநான்கு நாட்களின்பின் நேர்ந்தன வாகும்.

ஞாயிறு தோன்றியபின் உடனே ஆறுபேர், குடகிலிருந்து நீலகிரி நகரத்திற்குச் செல்லும் பாதையை அடுத்து அடர்ந்தி ருக்குங்குறுங்காட்டின்நிழலில் தங்கியிருந்தனர். அவர்கள்ஏறிவந் தகுதிரைகளின் நிலைமையைப் பார்க்கும்போது அவர்கள் இரவிற் சில நாழிகைகளாகவழிநடந்து வந்திருக்க வேண்டுமென்பது விளங்கிற்று. இவர்கள் தங்கியஇடம் நீலகிரிநகரத்திற்கு நாற் பதுமைலுக்குஅப்பால், மேற்கணவாய்மலைத்தொடரின் எல்லைக் குள் அடங்கியிருந்தது. ஓர் யாண்டில் முக்காற்பங்குகாலம் மிக இனியதாய் விளங்குவதான அம்மலைநாட்டில், இவ்விடியற்கால மானது மிகவும் இன்பமுடைத்தாய்ப் பொலிவுற்றது. பறவை கள் மரங்களின்மேற் பாடிக்கொண்டிருந்தன; அன்னப்புட் கள் கால்வாய்களிற் செருக்குடனே மிதந்துகொண்டிருந்தன;

கொழுவியமலர்கள் இதழ் விரிந்து காற்று வாட்டத்தில் நறுமணம் பரப்பின; அளவிறந்தனவாய் முழுமுழுப் பருமனுடையவான பலதிறமணிகளுங் குலைகுலையாய்த் தழைகளின் இடையே ஒவ்வொருகொம்பிலுந் தொங்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றும் மாதுளம்பழம்எலுமிச்சம்பழம் கொடிமுந்திரிப்பழம் முதலியவற்றின் அறத்திணிந்து கொழுவியவாய் மினுமினுவென்று விளங்கும் வண்ணங்களின்மேல் ஞாயிற்றின் இளங்கதிர்கள் தோய்ந்து மிளிர்ந்தன; வானமென்னும் நீலப்படங்கின் மேல் முகிற்கறை ஒருசிறிதும் இல்லாமையால் அது தெளிந்து காணப்படுவதாயிற்று. ஒளிவிளக்கம் வாய்ந்த பொன் உருண்டைபோல் திகழும் இளஞாயிறு தன் கதிர்களைச் சூழவிரித்து நீலநிறத்தோடு விரசும் இடந்தவிர, அவ்வானின் தெளிநீலவண்ணம் இடையறாந்துபோகாமல் ஒரே ஒழுங்காய்த்தொடர்புற்று வளைவாய்த்திகழ்ந்தது.

இப்போது இக்குறுங்காட்டி லிருந்த ஆட்கள்அறுவரும் முன்னதிகாரத்தில் நாங் காட்டியகள்வர்கூட்டத்திற் சேர்ந்தவர்களென்றறியவேண்டும். நாம் முன்சொல்லியவாறேஉடைஉடுத்துப் படைக்கலங்கள் அணிந்திருந்தனர்; ஆயினும், இப்போது சுழல் துப்பாக்கிகளைத் தாம் வேண்டியபோது கையாளத்தக்க வகையாய் முதுகின்மேற் றொங்கவிட்டிருப்பது ஒன்றுதான் வேறுபாடாகத் தோன்றுகின்றது.

அவர்களுக்குத் தலைவன்போற் காணப்பட்ட ஒருவன் "இவ்விடந்தான், நமக்குவந்த செய்திப்படி நமது துணிகரச் செயல் இப்போது சென்றுகொண் டிருக்கும் நாழிகைக்குள் செய்து முடிக்கப்படும். வாருங்கள்! நம்முடைய குதிரைகளை இக்காட்டுக்குள்ளே கொண்டுபோய் விட்டு, மிகுந்த நேரமுங் கொழும்புல்மேயச் செய்விப்போம்" என்று அழைத்தான்.

"இருளா, இப்போதுசிறிதுமுன்னே நீ சுட்டிச் சொல்லிய கட்டளைகள்?" என்று மற்றொருவன் வினவினான்.

"அவை சுருக்கமாயிருந்தாலும், நம் தலைவன் எப்போதும் நமக்கு இடுங்கட்டளைகளைப் போலவே கடுமையாக இருக்கின்றன" என்று இருளன் விடை பகர்ந்தனன்.

"சிலவேளை ஐயமாகவும் இருக்கின்றன." என்றுசேர்ந்து பேசினான் மற்றொரு கள்வன், ஆம், அவை ஐயப்படுவதற்கும் இடஞ்செய்கின்றன. அச்சுறுத்தும் நம் தலைவனாகிய அப்பெரிய நல்லான் தன் கருத்தையும் தன் முடிவான நோக்கங்களையும் எனக்குங்கூடச் சொல்லுவதில்லை. இத்தொழிலில் இங்கே நம்மை யனுப்பிவிட்ட அதேநேரத்தில் தானும் ஒருதுணிவு செயல்மேற்போயிருப்பதைக் கருதிப்பார்க்கும்போது, சந்திரன் ப்சொல்லப்பட்ட ஒருசெய்திக்கும் அல்லது ஒருசூழ்ச்சிக்கும் இதற்கும் ஏதோ தொடர்பு இருப்பது தெரிகின்றது" என்று இருளன் சொன்னான்.

"சிலகாலமாய் மூன்று நான்குமுறை நம் தலைவனிடம் வந்துகொண்டிருக்கும் சந்திரன் என்கின்ற அவ்விளைஞன் யார்?" என்று அவர்களில் மற்றொருவன் வினவினான்.

அதற்கு இருளன் "நீலகிரிப்பட்டினத்திலிருக்கும் ஒரு பணக்காரன் வீட்டார்க்கு அவன் உரியவன் என்பதற்குமேல் அவனைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நாம் இங்ஙனம் வீண்பேச்சுப் பேசிக்கொண்டு காலத்தைக் கழிப்பதைவிட, நல்லான் என்னிடத்துச் சொல்லிய ஏற்பாடுகளை உங்களுக்குச் சொல்லுகின்றேன், கேளுங்கள்! நாம் ஆறுபேர் இருக்கின்றோம்; நாம் எதிர்க்கவேண்டியது மூன்று பேரைத்தான் என்பதுதெரியும். இந்த மூவரில் ஒருவன் வரிசையிலும் பிறப்பிலும் உயர்ந்த பெருந்த இளைஞன் என்றும், மற்றை இருவரும் அவனுக்குத்துணைவர் என்றும் அறிவீர்களாக. அவர்கள் செவ்வையான குதிரைகளின்மேல் படைக்கலன் பூண்டு வருவார்கள் என்பதில் ஐயம் இல்லை; அதன்மேலும் அவர்களுடைய ஆண்மைச்செயல் வேறேஇருக்கின்றது. கூடுமாயின் இரத்தஞ் சொட்டாமல் மூவரையுஞ் சிறையாகப் பிடிக்கவேண்டுவது நம்முடையகடமை" என்று கூறினான்.

"ஆ! நாம் துப்பாக்கிகளை வழங்கநேருமாயின் அங்ஙனம் இரத்தஞ் சிந்தாமற் பிடிப்பது மிகவும் வருத்தமாயிருக்குமே" என்று அவர்களில் மற்றொருவன் இடையிலே சொன்னான்.

அதற்கு இருளன் "கடைசிவழியாயுள்ள இதற்கு மாறாகத் தான் உங்களுக்கு இது சொல்லப்போகின்றேன். அம்மூவரையும் நம்முடைய மலைக்கோட்டைகட்கு உயிருடன் சிறையாக்கொண்டுபோய்விட்டால், நாம் எடுத்தமுயற்சி நன்குபாராட்டப் படுவதோடு நந்தலைவன் இட்டகட்டளையும் மிகவுஞ் செவ்வையாக முடிந்தனவாகும். ஆதலால், கடைசியாக வேண்டியிருந்தால் மட்டும் உங்களைக் காத்துக்கொள்ளும்பொருட்டுத் துப்பாக்கிகளைவழங்குங்கள். இதுதான் நல்லான் இட்டகட்டளையும்" என்று கூறினான்.

"மிகவும் வலிமையுடைய மலைநாடர்களான நாம் அறுவரும் ஓர் இமைப்பொழுதில் அந்தப்பௌத்தர்கள் மூவரையும் பிடியாவிட்டால், அப்புறம் என்ன இருக்கின்றது!" என்று மற்றொருவன் சொன்னான்

அதன்மேல் வழிமறிக்கப்படும் வழிப்போக்கர்கள் வருகின்ற பாட்டையை இருளன் ஆராய்ந்து பார்க்கச்சென்றான்; வளைந்துசெல்லும்பாட்டையைச்சேர்ந்து அதனைமேற்கவிந்திருக்குங்குறுங்காடு உள்ள ஓர் இடத்தைத் தெரிந்துகொண்டு அங்கிருந்து தம்முடையசெயலைநிறைவேற்ற எண்ணி, அதற்கு அருகாமையில் உள்ள ஓரிடத்திற் குதிரைகளை நடத்திக்கொண்டு போய்க் கொழும்புல்மேயவிடுத்து, ஒவ்வொருவரும் ஒரு நொடியில் ஏறி எதிர்ப்பதற்கு வேண்டும் ஒழுங்குகளெல்லாம் செய்து வைத்துத் தானும் பதுங்கியிருந்தான்.

இங்ஙனம் இரண்டரை நாழிகை கழிந்தது; கழிந்தவுடன் நெடுந்தொலைவிலே மூன்றுவழிப்போக்கர்கள் காணப்பட்டனர். அவர்கள்துவர்க்காவியூட்டியதலைச்சீராஅணிந்திருந்தமையானும் குறிப்பிட்டகாலத்தில் மூன்று பேராய் நீலகிரிப் பட்டினத்திற்குச் செல்லும்பாதையில் வந்துகொண்டிருந்தமையானும், தாம் எதிர்பார்த்த கூட்டத்தார் இவர்கள்தாமென்று அக்கள்வர் உறுதி செய்தனர். குதிரைமேல்வரும் மூவரில் ஒருவன் மற்றிருவர்க்

குச் சிறிது முன்னேறி வந்தனன்; இவன் தன் மார்பில் இறுக முடிந்து அணிந்திருக்குங் குப்பாயத்தின் பொற்சரிகைமேலும், பொன்மினுக்குச்செய்தவாளுறைமேலும், இவனது குதிரையின் உயர்ந்தசேணங்கலினம் முதலியவற்றின்மேலும் ஞாயிற்றின் கதிர்கள் தோய்ந்து ஒளிர்ந்தன. ஆகையாற் றன் துணைவர் இருவரோடு துடகிலிருந்து நீலகிரிநகருக்குப் போகும் செல்வத்தினும் உயர்ந்த நிலைமையினும் சிறந்த பௌத்த இளைஞன் இவன்தான் என்பதிற் சிறிதும் ஐயம்உற இடமில்லை. இங்ஙனம் ஏதும் ஐயுறவின்றி அவர்கள் அணுகிவரவர முன்னே வந்துகொண்டிருந்த இளைஞன் கட்டிளமையோனாய் மிகவும் அழகுடையனாய் இருப்பதும், அவன் பின்னேவரும் துணைவர் இருவரும் இளமைகழிந்தோராயிருப்பதும் அங்குப்பதுங்கியிருந்த கள்வர் கண்டுகொண்டனர்.

உடனே இருளன் ஒருகுறிசெய்தலுங் கள்வரெல்லாரும் மரங்களின் நடுவிற் குதிரைமேல் ஏறிக்கொண்டு, குலைநெருங்கின முந்திரிக்கொடிகளின் தழைகள் திரைமறைப்புப்போற் படர்ந்திருக்குங் குறுங்காட்டோரத்தில், அவ்வழிப்போக்கர்கண்களுக்குத் தென்படாமல்எதிர்ப்பதற்கு நெருக்கமாய் வந்துநின்றனர். இப்போது விரைவாய், இரண்டாவது ஒருகுறியும் செய்யப்பட்டது. உடனே ஒரு மான் மந்தையாயினுங், காட்டுவிலங்கினங்களாயினுஞ் சடுதியில் தழைகளானும் பழங்களானும் மறைபட்ட திரையைக் கீறிக் கிழித்துப் புகுந்ததுபோல மேல் வந்து விழுந்து, இருவர் நீலலோசனனையும் மற்றை நால்வரும் அவன் பின்வந்த மற்றிருவரையும் வளைத்துக்கொண்டனர்.

இவ்வாறு அக்கள்வர் எவ்வளவு சுருக்கெனப் புகுந்தனரோ, அவ்வளவு விரைவில் அப்பௌத்தர் மூவரின் வலதுகையினும் வாள் உறைகழிக்கப்பட்டு மின்னின; அதேநேரத்திற் சேணத்திற்செருகியிருந்த கைத்துப்பாக்கியினை இடதுகையால் ஒவ்வொருவரும் உருவி யிழுத்தனர். ஆகவே அக்கள்வர்எதிர்பார்த்தவண்ணம் அவர்கள் முயற்சி நிறைவேறுவது அரிதாய்க் காணப்பட்டது; தாம் சடுதியிலே சண்டையிட நேர்ந்ததைக்கண்

டார்கள். இருளனும் மற்றொரு கள்வனும் நீலலோசனன்மேற் குதித்து விழவே, அவன் ஒருகையாற் சுழற்றிவீசிய வாள் ஒருவன்மேற் படும்பொழுது, அவன் மற்றைக்கையிற் பிடித்த துப்பாக்கி மற்றொருவனைச் சுட்டுக் கீழே வீழ்த்தியது. இருளனோ அவ்வாள்வீச்சுக்குத் திறமையாய்த் தப்பிக்கொண்டு, ஒரு கையில் வாளேந்தி அவனைக் குதிரையிலிருந்து பிடித்திழுக்க மற்றொருகையை நீட்டினன். நீலலோசனனோ தன் பகைவனைப்போலவே தன் குதிரையை ஆளுந்திறம் நன்கு வாய்ந்தவனுதலால், தன் குதிரையின் கடிவாளத்தைப் பின்னுக்குப்பிடித்து இழுத்துத் தன் பகைவன் தன்னைக் காத்துக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தினன். இவ்வாறு சிலநேரம் இருவர்க்கும்போர் மூண்டு நடக்கையில், இருளன் திடீரென்று தன்குதிரைமேனின்றும் வழுவி மறைந்து போயினன்; அப்படி மறைகையில் நீலலோசனன் தான் அவன்மேல் எறிந்த படைவீச்சு அவனைக் கொல்லத்தக்க அத்துணைக் கடுமையானதென்று தோன்றாமையால் அவன் மறைந்து போனது ஏதோ ஒரு சூழ்ச்சியாய் இருக்கின்றதென உடனே ஓர் ஐயம் அவனுக்குத் தோன்றிற்று. தோன்றவே, அவன் தன் குதிரையினின்றும் பாய்ந்து தோற்றுப்போன அப்பகைவனைப் பிடித்துக்கொள்ள முயலாமல் இச்சண்டையின் நிலையை ஆய்ந்தறியும் பொருட்டு ஒரு நொடிநேரம் வாளாவிருந்தனன்.

உண்மையாகவே இருளன் அவ்வாறு மறைந்துபோனது ஒரு சூது தான். மலைநாட்டுக்கள்வர் போர்முகத்தில் இத்தகைய சூதுகள் செய்வதில் தேர்ந்தவராதலின் இவனும் ஒருசூது செய்வானாய்த். தன்குதிரைமுதுகின்மேலிருந்து வழுவி அதன் வயிற்றின்கீழ்ப் புகுந்து கால்உதையும் வளையத்திற் கால்அடியை மாட்டி இரண்டு கைகளானும் பிடரியைப் பிடித்தபடியாய்த் தொற்றிக்கொண் டிருந்தனன். இந்தச்சூழ்ச்சியினுல் எதிரியைத் தன் குதிரையினின்றும் கீழ்இறக்கி உடனே அவன்மேற் புலிபோற் பாய்ந்து தனக்குள்ள பெருவலியால் அவனை உயிருடன் பற்றிக்கொண்டு தன்கருத்தை நிறைவேற்றியிருப்பான். ஓர் இமைகொட்டில் நீலலோசனன் தன் எதிரியின் நன்

னம்பிக்கையைப்பற்றித் தான் ஐயப்பட்டது உண்மையென்று கண்டு மிகுந்திருந்த தன்கைத்துப்பாக்கியை உறையினின்றும் இழுத்து அதனை இருளன் மண்டைக்கு நேரேகாட்டித் தனக்குக் கீழ்ப்படியும்படி கேட்டனன். இதற்கிடையிற் போர்புரிந்துகொண்டிருப்போர்க்குப் பின்னேயிருந்து குண்டுகள் வந்து விழுந்தன; இந்நேரத்திற் கள்வர் இருவர் முன்னே காற்றினுங் கடுகிவந்து இருளனை நோக்கி "உன்னைக்காப்பாற்றிக் கொள்" என்றனர்.

மின்னல் வீச்சுப்போல் இருளன் குதிரை அப்புறந்துள்ளிப்பாய்ந்து போயிற்று; அதேநேரத்தில் நீலலோசனன் துப்பாக்கியினின்று புறப்பட்ட குண்டுகள் முறிபட்டுப் பறந்தோடுங் கள்வன் காதோரமாய்க் கிறுகிறுவென்று சுழன்றுபோயின. பறந்தோடின இருளன் இருநூறுமுழம் எட்டிப்போனவுடனே தன் குதிரையைநிறுத்தி இப்புறந்திருப்பி முதுகிற் செருகவிட்டிருந்த கைத்துப்பாக்கியினை அவிழ்க்கத் தொடங்கினான். நீலலோசனன் கூரிய கண்களுக்கு இதுதெரிந்தவுடனே, மலைநாட்டுக்கள்வர் குறிபிழையாமற்சுடுவதில் கைதேர்ந்தவர்களென்பதனை உணர்ந்து, தான் அப்பகைவன் குண்டுக்கு இலக்காய் அகப்படாமல், தன் குதிரையைமுடுக்கிக் குறுங்காட்டினுள்ளே புகுந்துபோய்த்தப்பினான். இவன் இங்ஙன்திரும்பிவந்தவுடனே துப்பாக்கிக் குண்டுகள் இவன் பின்னே அருகிற் கிறுகிறுவென்று சுழன்று சென்றன. இருளன் தான்எடுத்த துணிவுச்செயல் முற்றும்தப்பிப்போய்விட்டதை அறிந்து குதிரையைத் திருப்பிக்கொண்டு விரைந்துபோயினான்.

இதற்குமுன்னமே நீலலோசனன் தன்பின்வந்த காவலாளரும் அவரைத்தாக்கிய கள்வர்நால்வரும் எங்ஙனமாயினார் என்பதனை ஓர் இமைப்பொழுதில் அறிந்து கொண்டனன்; இப்போது அச்சண்டையின் முடிவைச் செவ்வையாக அளந்தறிவதற்கு ஒழிவுநேரம் வாய்த்தது. கள்வர் அறுவரில் இருவர் அப்பௌத்த இளைஞனை மறித்தனர்; இவ்விருவரில் ஒருவன் சுடப்பட்டு விழுந்திறந்தான்; மற்றையோன் பிழைத்தோடிப் போயினான். காவலாளர்இருவரையும் தாக்கிய கள்வர் நால்வ

ரில், இருவர் தலையிற் சுடப்பட்டு உயிர் ஒழிந்து நிலத்திற் கிடந்தனர். மற்றிருவரில், ஒருவன் கத்திவெட்டினால் வாளேந்திய தோள்வலிகெட்டும், மற்றொருவன் கழுத்து முள்ளெலும்பு தகர்க்கும் கடுங்காயம் உற்று எதிர்நிற்கலாற்றாது முன்னே சொன்னவாறாய் ஓடிப்போயினர். ஆகையால் நீலலோசனன் காவலாளரும் தந்தலைவனைப் போலவே வெற்றிமறஞ் சிறந்து விளங்கினர். ஆயினும் இவர்களில் ஒருவனுக்குமட்டும் இடது தோட்புறத்துச் சதையில் வாள்அழுந்து வெட்டிக்காயம் சிறிது இருந்ததொன்றைத்தவிர, மற்று அவர்கள் இச்சண்டையின் விளைவைப்பற்றித் தம் தலைவனுடன் கூடி மகிழ்தற்கு இடம் பெற்றவராயினர்.

கொல்லப்பட்ட கள்வர் மூவருடைய குதிரைகளும் இவர்கள் கட்பார்வைக்கு அகப்படாமல் அவ்விடத்தைத் அகன்று ஓடிப்போய் விட்டன. நீலலோசனனும் அவன் காவலாளரும் வழிநடுவிற் கிடந்த அப்பிணங்களை அகற்றிக் கொடிமுந்திரிப் பந்தர் நிழற்கீழ்க் கிடத்தி விட்டுத் தாம் போம்வழியிற் செல்வாராயினர். செல்லும்போது இங்ஙனம் வந்து வழிமறித்தவர்கள் முடிவான நோக்கமேதுமின்றிக் கொள்ளையிடுதலையே குறிப்பாகவுடைய ஆறலை கள்வர் கூட்டத்திற் சேர்ந்தவர்கள் என்று நம்பினர்.

அப்போது நீலலோசனன் அவரைப்பார்த்து "என்றாலும் அக்கொடியகள்வர் குறுங்காட்டில் மறைந்திருந்தபடியே நம்மைச்சுடாமல் எதிரேறிவந்து போரிட்டது எனக்கு மிகவும் புதுமையாய் இருக்கின்றது. அப்படி அவர்கள் சுட்டிருந்தால் நாமெல்லாம் உயிரிழந்திருப்போம். மலைநாட்டுக்கள்வர் குறிதவறாமற் சுடுவதில் மிகவும் வல்லரென்பதில் ஐயம் இல்லையன்றோ" என்றுகூறினான்.

அதைக்கேட்டதும், அடர்ந்து நரைத்துப்போன தாடியும், ஆண்மை மனவுறுதி அருள் முதலிய இயல்புகள் அவன்றன் இனத்தாரின் அடையாளமாய்க் கலந்து விளங்குகின்ற முகமும், தடித்துத் திணிந்த உடம்பும் உடையவனான மூத்தகாவலாளன் "எங்கள் அரசின் செல்வமே, நம்மிடத்துள்ளவைகளை

யெல்லாங் கொள்ளை கொள்வதுமட்டுமே யன்றி நம்மைச் சிறையாகப் பிடித்துக் கொண்டுபோய்த் தம் மலைஅரணில் வைத்திருந்து விடுதலை பெறும் பொருட்டுப் பெருந்தொகை யான பொருளும் அடையலாம் என்கின்ற முதன்மையான நோக்கத்தோடும் அவர்கள்நம்மை எதிர்த்தவர்களாகக் காணப்ப டுகின்றனர்." என்றனன்.

அதற்கு நீலலோசனன் "என்நம்பகமுள்ள **கேசரிவீர** நீ எண் ணிச்சொல்லியது எனக்குப்பொருத்தமாகத் தோன்றுகின்றது. அம்மறவர் கணக்கிட்டது அங்ஙனமாயின் அவர்தோல்வியடைந் ததும் நாம் வெற்றியடைந்ததும் அவர்களுடைய அவ் ஏற்பாட் டினுல் அல்லவா? அவர்கள் முதலிலேயே துப்பாக்கிகளை எடுத் துவழங்காமல் கிட்டவந்து எதிர்த்து நீலகிரி நாட்டார்க்குரிய வலிமையினையும் குடகுநாட்டார்க்குரிய வலிமையினையும் ஆராய்ந்து அறிந்து கொண்டனர்" என்றுகூறினுன்.

அதுகேட்ட இளையகாவலாளனுன **வியாக்கிரவீரன்** "எங் கள்அரசுரிமைச் செல்வமே, முதன்முதற் பின்முதுகுகாட்டி யோடினபழிகாரர் இருவருந்தங்களால் ஒன்றுஞ்சாயாது என்று கண்டவுடனே துப்பாக்கியை எடுத்துச் சுட்டனர்; என் சொற் படியெல்லாம் யான் உந்துமாறெல்லாம் வட்டமாய்த் திரிந் தும் முன்னேடியும் பின்னேடியும் நடக்கின்ற என்குதி ரையின் திறமையாலன்றோ தங்கள்உண்மையுள்ள ஊழியக் காரனுன அடியேன் தப்பிப்பிழைத்துத் தங்களோடு இப்போது பேசிக்கொண் டிருக்கின்றேன்!" என்றனன்.

என்றதுங் கேசரிவீரன் "என்காதருகிலும் விசைக்காற்று விறுவிறுவென்று வீசுதல்போலக் குண்டுகள் சுழன்றுபோயின. அதுகிடக்க, நாம் கௌதமசாக்கியரை வணங்குவேமாக! வெற்றி நம்பக்கமாயிற்று. வியாக்கிரவீரன் தோளில் வாள் கீறியது ஒன்று தவிர, நாம் வேறோர் இடையூறு மின்றி வந்து சேர்ந்தமை வியப்பேயாம்." என்று மொழிந்தான்.

இங்ஙனம் பேசிக்கொண்டே நீலலோசனனும் அவன் காவலாளரும் வழிபிடித்துப் போயினர்; அரசிளைஞனும் இப் போது தன்காவ லாளருடன் சேர்ந்துபோயினுன்; மற்றொரு

முறையும் வழிமறித்தல்நேரிடுவதாயின் அதற்கு உடனே கையாளுதற்பொருட்டு மூவருந் துப்பாக்கியை மருந்திட்டுஇடித்து ஏந்திச்சென்றனர்.

செல்லும்போது சிறிதுநேரங்கழித்துக் கேசரிவீரன் "எங்கள்அரசே, நம்மைவழிமறித்தவர்கள், சோழநாட்டார்க்கும் மலைநாட்டார்க்கும் சிலகாலமாய்ப் பெரியதோர்அச்சத்தினை யுண்டு பண்ணிவருங் கள்வர்தலைவனைச் சேர்ந்தவர்களா யிருக்கலாம்என்பதுதங்களுக்குத்தோன்றவில்லையா?" என்றுகேட்டனன்.

அதற்குநீலலோசனன் "நல்லானைக் குறிப்பிக்கின்றனையோ? ஆம், அவனைப்பற்றிப் புதுபுதுக்கதைகள் இந்நீலகிரி மலைசாரல்எல்லையைத் தாண்டிக் குடகிலிருக்கும் நம்முடைய செவிகளுக்கும் எட்டுகின்றன: உனக்குஉண்மையைச் சொல்லுகின்றேன், நான்அந்தக்கதைகளை வெறும்பேச்சாகவே நினைக்கின்றேன். நல்லான்என்னும் ஓர்ஆளே உண்டென்பது பெருங்கட்டு அவன்ஒருமனப்பேய்தான்" என்றனன்.

"எங்கள்தலைவ, நல்லான்என்பது கட்டாயிருக்கலாம். மிகச்சிவரான வழித்துணைவரோடு நீங்கள் நன்ருய்ப்போகலாமென்று கூறப்பட்டஉறுதிமொழிக்குமாருகச் சென்ற இரண்டொரு நாழிகை நிகழ்ச்சியினுலேயே இப்பக்கங்களில் படைக்கலம்பூண்டவரான ஆறலைகள்வர்கூட்டம் உண்டென்பது நமக்குப்புலப்படவில்லையா?" என்றுகேசரிவீரன் வினவினுன்.

அதற்குநீலலோசனன் "இங்ஙனம் பயணஞ்செய்யும்படி என்னைத்தூண்டுதல்செய்த ஒருசெய்தி கொண்டுவந்தவனை அந்தமலைநாட்டு இளைஞன்ருன் அங்ஙனம்உறுதியுரை மொழிந்தான். அவன் தான் மெய்யென்று நம்பினதையே கூறினுன் போலும்! அதுவேயுமன்றி நான்செல்வதைப் பிறர்உற்றுப்பாராதபடிஅன்ருே பயணஞ்செய்யும்படி கற்பிக்கப்பட்டேன். ஆ! அதோஎதிரே ஒருகுடிசை தோன்றுகின்றது! நாம்அங்கே கடுகச்சென்று, அங்குள்ளோர்க்கு இங்கேநிகழ்ந்தனயாவுந் தெரிவிப்பேம். அவர்கள், நாம்வழியண்டையிலே கிடத்திவந்தபிணங்களை அப்புறப் படுத்துவதற்கு வேண்டுவது ஏதேனுந்தாமே செய்வர்." என்று கூறினுன்

அப்படியே அம்மூவருங் குடிசையண்டை போய்ச் சேர்ந்தனர்; அங்கிருந்த முதியோனொருவனுக்கு நிகழ்ந்தனவெல்லாஞ் சொல்லப்பட்டன. நல்லான் நடத்தும் ஆறலைதொழில்கள் இனிது நடைபெறுகின்ற மேற்கணவாய் மலைச்சாரலையடுத்த இடங்களுக்கு நெடுந்தொலைவிலே இங்ஙனம் வழிமறிப்பு நேர்ந்ததைப்பற்றி அவன் மிகவும் வியப்படைந்தவன் போற் காணப்பட்டான். அதனோடு, மூன்றுபௌத்தரால் மிகவலியரான ஆறு கள்வர் முற்றும்முறியடிக்கப்பட்டதனைப்பற்றி அவன்பின்னும் மிகுந்தவியப்படைந்து, அவர்கள்சொற்களில் நம்பிக்கையற்றவனாய்க் காணப்படவே, கொல்லப்பட்ட அக்கொடிய கள்வர் மூவர்உடம்பும் பிணமாய் வழியிற்கிடத்தலைக் காணலாம் என்று அவர்கள்அவனுக்கு உறுதியுரைதந்தனர்.

இங்ஙனம் மலைநாட்டுக்காவற்றலைவர்களுக்குத் தாஞ்செய்ய வேண்டுங்கடமையைச் செய்துவிட்டுச், சிலநேரம் அக்குடிசையில் விடுதிகொண்டபின் நீலலோசனன் தன்துணைவர் இருவரும் பின்னேவர வழிபிடித்துப் போயினான். இக்காவலாளர் இருவரும் வெறிதேஊழியக்காரர் அல்லர். நீலலோசனன் சிறந்த மன்னவன்ஆகையால், அவனுடன்வந்தஇவர்கள் செல்வர் என்று அறிதல்வேண்டும்.

இங்கே, இவ்வரசிளைஞன் கேசரிவீரன் வியாக்கிரவீரன் என்னும் இருவருடனும் வழிப்போய்க் கொண்டிருக்கும்போது, நமக்கு நல்லநேரம்வாய்த்தமையால் அவன்உடம்பின் தோற்றத்தைப்பற்றி இன்னுஞ்சிலசொற்கள் சொல்லவிரும்புகின்றோம். இவன்மிகவும்அழகாயிருந்தான் என்றுமுன்னமே சொன்னோம். இவனுக்குக்கரியகுஞ்சியும் கரியவிழிகளும் இருந்தன; இவன் மீசையானது, துகிலிகையால் நேர்த்தியாய் வளைந்தவாறுபோலப்பளபளப்பாய் முனைசுருண்டு மேலுதட்டின்மேற் கவிந்திருந்தது; இவனதுமூக்குக் கழுகுபோற் சிறிதே நுனியில்வளைந்திருந்தது; ஆனாலும்இதுவும் முகத்தில்உள்ள மற்றைஉறுப்புகளும் சிறிதுமெல்லிய தன்மையுடையவாய் அமைந்திருந்தன. இவன்உடம்பின்நிறம் பெரும்பாலார்க்கு உள்ளதுபோலக் கரியதாயில்லை; ஆயினும், ஞாயிற்றின் வெப்பத்தாற் சிறிதுபழுப்பு

வண்ணமாய்த் தோன்றுதலின், இவனுடைய நிறம் இளமை யுருவிற் சிறிது ஆண்மைத்தன்மை காட்டிற்று. இல்லாவிட்டால், இவன்நிறம் இன்னுந்தெளிவாய் இளமைப்பருவத்திற்கு இசைந்ததாய்விளங்கும். இவ்வாறு உடம்பின்நிறம்பழுப்பாய்த் தோன்றுதற்குக் காரணம், ஆண்பாலார்க்குரிய வேட்டையாடுதலிலும் வேறுபயிற்சிகளிலும் இவன்மிகுந்த விருப்பமுடையோனாய்ப் பகற்காலங்களில் திரிவதேதான்றே என்பது தோன்றுகின்றது. வேட்டையாடுவதிலுங் குதிரையேற்றத்திலும் இவன் நிரம்பியதுணிவும் திறமையும் வாய்ந்திருந்தனன். சிறிதுநேரத்திற்கு முன்னேவந்து வழிமறித்த கள்வர்களை அஞ்சாது, இவன் அவர்களைப்புறங்கண்டு வெற்றிசிறந்து விளங்கினதைப்போலவே, இன்னுங்கடுமையான போர்முகங்களிலெல்லாம் அங்ஙனமே மறஞ்சிறந்து திகழ்ந்தனன். இவனிடத்துப் பொறுமையும் இரக்கமும் குடிகொண்டிருந்தன; இன்னும்இவனது நடையில் ஆண்டன்மையோடுகூடிய ஒரு பெருந்தகைமை சிறந்து காட்டுவதாயிற்று. அச்சம்என்பதனை இவன்அறியவேமாட்டான்; இடர்என்கின்ற சொல்லைக் கேட்பினும் நகையாடுவான். இவ்வியல்பினனேனும், தன்போன்றஓர் உயிர் வருந்துதலைக் காணினும், ஒருயிர் துன்புற்றகதையைக் கேட்பினும் இவன்கண்களில் நீர்முத்துமுத்தாய்த் துளிக்கும்.

இவனுக்கு இப்போது இருபத்தோர்ஆண்டு இருக்கலாம். இவனுடம்பு உயர்ந்து பூங்கொம்புபோல் மெல்லிதாயும், திருந்திய அமைப்புடையதாயும், மதனவேள்போலக் கைகால்முதலான உறுப்புக்கள் நீளமாயுந்துவண்டன. வழுவழுப்பான வெள்ளைச் சலவைக்கல்லில் இவன்உடம்பின் உறுப்புகளைப் பார்வையாகவைத்து உளியாற்செதுக்கி இழைத்து ஒருபாவை அமைக்கப்படுமாயின் அது வழுவற்றஆண்டன்மையினைக் குறிக்கும் வடிவமாய் நிலைபெறுமென்பது திண்ணமேயாம். அவனது நெற்றி அகன்று மேன்மையாய்விளங்கிற்று; தடிப்பின்றி மிக மூரிந்துவளைந்த இவனுடைய புருவங்கள் கரியவாய்இருந்தன. கண்ணிறைப்பை செவ்வையாகத் திறந்திருந்தன; விழிகள்பருமனாய் இமைகளிற் பெண்பாலார்க்கிருப்பதுபோற்கருகியடர்ந்த

மயிர்வரிசையும் இருந்தன; தன்னைஉயர்த்திப் பிறரைத்தாழ்த்தும் இறுமாப்பு செருக்கடைதல், தறுகண்மை, எண்ணிப்பாராததுணிவுஎன்னும் தீயஇயல்புகள் இவனிடத்து ஒருசிறிதும் இல்லை. ஆயினும், ஆண்டன்மையும் போர்முகத்து அஞ்சாமையும் என்கின்ற உயர்ந்தஇயல்புகள்வாய்க்கப்பெற்ற இளைஞர்க்குத் தம்உயர்வு தாமேயறியும் ஓர்உணர்ச்சியும் தற்றுணிவும்இயற்கையாக உண்டாதல்போல இவனிடத்தும் இப்பெற்றிப்பட்டதோர் உணர்ச்சி தோன்றுதல்உண்டு. இவன் கன்னமீசை வைத்திராவிடினும், மேல்இதழில்உள்ள கரியமீசையும், எலுமிச்சம்பழத்தைவிடச் சிறிதுபழுப்பாகத்தோன்றும் மேனியின்நிறமும், எதற்கும் அஞ்சாத கண்களின் நோக்கமும் இவன்முகத்தின்கண் ஓர்ஆண்டன்மை விளங்கத் தோற்றுவித்தன.

இளைஞனான நீலலோசனன் இங்ஙனம் பேரழகுடையனாய்த் திகழ்ந்தனன். இவன்உடுத்திருந்த உடைகளை நோக்குமிடத்து அக்காலத்து அரசர்வழக்கப்படியே அணிந்திருந்தனன் என்பது தோன்றிற்று. ஓரங்களிலும், மார்பின்புறத்திலும் முன்கையிலும் பூத்தொழில்செய்யப்பட்ட பொற்சரிகை பின்னப்பட்டு இருண்டபச்சைநிறமுடைய சட்டை மினுமினுவென்றுமிளிர்ந்து இவனதுவடிவழகை இனிதுவிளங்கக்காட்டிற்று. இவன்அரையின்கீழ்ப் பூண்டிருந்த காற்சட்டையில் நீளத் தைத்திருந்த பொற்பட்டையினால் அரைக்கீழுள்ள உறுப்புகள் கிளர்ச்சிமிக்ககுதிரையை அழகாய்அஞ்சாமல் நடாத்தும்போதுமிகவுந்திருந்திய இலக்கணம்வாய்ந்து தோன்றின. இவன் தொங்கவிட்டிருந்த கொடுவாளுறை நாம் முன் மொழிந்தபடியேபொன்மினுக்குப் பூசப்பட்டிருந்தது. அதன்பிடியில் உயர்ந்த முழுமணிகள் அழுத்தப்பட்டிருந்தன. குதிரைமேற்போர்வையில் பொற்சரிகையினால் அழகியஉருக்கள் பின்னப்பட்டு விளங்கின. எவ்வாற்றானும் ஆண்டன்மை இனிதுதோன்றக் குதிரைமேல்வரும் இளையநீலலோசனனது அழகியஉருவமானது, அம்மலைநாட்டு அழகிய இளமகளிர் அவன்செல்வதைப் பார்க்கும்பொருட்டுத் தங்குடிசைகளினின்றும் புறம்வந்து நோக்குகையில் அவர்தம் கண்ணையுங் கருத்தையுங் கவருந்தன்மையதாய்

இருந்தது; இவனைப்பார்த்த அம்மலைநாட்டு ஆடவரோ இவ்விளைஞன் குதிரைமேல் அமர்ந்துவரும் எளிதானநிலையினையும் ஆண்டகைமையினையும் வியந்துநோக்கி அவனைத்தாங்கிய குதிரையின்சிறந்தஉறுப்பின் அமைவையும் உற்றுப்பார்த்து மகிழ்ந்தனர். இங்ஙனம்இவன்வருகையில் இவனுடன் பின்வருவோர் இருவரேயாயினும், இவன்உருவத்தோற்றமானது அங்குள்ளார் கருத்தையெல்லாம் இவன்பால் இழுத்தது.

இவனும் வழிதொடர்ந்துபோன வண்ணமாயிருந்தனன்; இவ்வாறு பலநாழிகைகடந்தன. தானுந் தன்காவலரும் இடையிடையேதங்கி இளைப்பாறிக் குதிரைக்குந் தீனிகொடுத்துக்கொண்டு கடைசியாக மூன்றுவழிகள்பிரியும் ஓரிடத்தில்வந்து சேர்ந்தனன். இப்போது அவர்கள் எந்தவழியிற் செல்வதென்று தெரியாமல் திகைத்தனர்; இம்மூன்றில் எதுநேராக நீலகிரி நகரத்திற்குச்செல்லுகின்ற தென்பதைக் கேட்டு அறியும்பொருட்டு அருகாமையில் ஏதேனுங்குடிசைவீடு இருக்கின்றதாவெனச்சுற்றிநோக்கினர். அப்பொழுது தனக்குச் சிறிதுதொலைவில் ஒருகரைமேல் கிழவனொருவனிருப்பதை நீலலோசனன் கண்டான். இக்கிழவன் அம்மலைநாட்டில் தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்க்குரிய முறைப்பானஉடை கட்டியிருந்தான்; பணிசெய்யப் போம்பொழுது இளைப்பாறுதற்பொருட்டு அங்கேசிறிதுநேரம் இருந்தவனாகக் காணப்பட்டான். இவனைப்பார்த்து வழி எதுவென்றுகேட்ப, அவனுந் தானிருந்தவழியே நேராக நீலகிரிநகரத்திற்குச் செல்லுகின்றதென்று உரைத்தான். உடனே, நீலலோசனன் அவன் முகமாய் ஒருபொற்காசுவீசினன். அந்நாட்டிலுள்ளோர் வறியராதலால் இப்பொற்காசினைக் கண்டவுடன் மிகப்பணிந்து அன்புதோன்ற அஃதீந்தோனை வாழ்த்துவர். மற்று இக்கிழவனோ அக்காசினை மிகவும்பராமுகமாய் எடுத்துக்கொண்டு அக்காசு தந்த இளைஞனைநோக்கி வெறுப்புடன் சுருக்கமாகச் சிலநன்றியுரை கூறியபின், அரசிளைஞனுக்குத் தான் காட்டியவழிக்கு எதிர்முகமாய்ப்போயினான்.

போனவன் சிறிதுதொலைவிலுள்ள காட்டினுள்ளேபுகுந்து மரத்தொகுதிகளின் நடுவே மறைத்து அமைக்கப்பட்ட ஒரு

குடிசையினுள்ளே நுழைந்து, தான் எடுத்துவந்த பொற்காசினை நிலத்தின்மேல் இகழ்ச்சியோடும் வீசியெறிந்து காரம் மிக்க வெறுப்போடு “ஒருநொடிநேரமாவது என்கொடும் பகைவன் கையினின்றும் இக்காசினைப் பெறும்படி நேர்ந்ததே! அவன் என்னைத் தோற்கஅடித்தனனே! நான் அவனால் தாழ்வடைந்தேனே!” என மிகவருந்திக்கூறினான்

அப்போது அக்குடிசையிலிருந்த நடுத்தரஆண்டு உடையனான ஒருவன் சினத்துடன் எறியப்பட்ட அக்காசை எடுக்க விரைந்துபோய் “என் நண்பனே உனக்குயாதுநோய் நேர்ந்தது? ஏன் இங்ஙனம் உரக்கக்கூவி வருந்துகின்றாய்?” என்று வினவினான்.

அதற்கவன் “அது கிடக்கட்டும். இதோநீ கொடுத்த இக்கோலத்தை நீயே எடுத்துக்கொண்டு, எனக்குரிய உடையினை என்னிடங்கொடுத்துவிடு! கூலித்தொழிலாளிக்குரிய இக்கோலத்தினால் யான் ஒருதொழுத்தைபோல் நடத்தப்பட்டேன். ஆயினும், அச்செருக்குடைய பௌத்த இளைஞன் அக்காசினை வீசியபோதே, அவனை ஏமாற்றினேன்! என் முகத்திற் குழப்பித்தடவின இவ்வழுக்கைக் கழுவுவதற்கும், இயற்கையிற்கரிய என்மயிரை வெளுக்கச்செய்த இவ்வெள்ளைப் பொடியைப் போக்குவதற்கும் எனக்குத்தண்ணீர் கொண்டுவா” என்றான்.

அக்குடிசை வீட்டிற்கு உரியனான அக்குடியானவன், தான்முன்னறியாத அப்புதியோனைத் தான் “நண்பனே” என்றழைப்பினும், இப்போதுவெருக்கொண்டுநோக்கிப் பின்அவன் பராமுகமாய் வீசிய பொற்காசைக் கையில் எடுத்துக்கொண்டு “எதுவாயிருப்பினும் நீ நினைந்ததொன்றை முடித்தற்கு மேற்கொண்ட இக்கோலம் உனக்குப்பயன்படவில்லையோ?” என்று கேட்டான்.

கேட்டதும் “அது கிடக்கட்டும், எனக்குத் தண்ணீர் கொடு! என் உடைகளையும் படைக்கலங்களையுங் கொண்டுவந்து வை! என்குதிரையைப் பிடித்துவா! யான்பிறந்த மலைநாட்டிற்குப்போய்த் திரும்பவும் நான் இளைப்பாறுதற்கு மிகவிரும்புகின்றேன்” என்றுஅவன் மறுமொழி புகன்றான்

அவ்வாறு அவன் விரும்பியபடியே அக்குடிசைக்காரன் யாவுஞ்செய்தானாக, அம்மற்றையோன் தன் முகம் மயிர்முதலியவற்றைக்கழுவிக்கொண்டு, தான் முன்மேலிட்ட குடியானவன் உடுப்புகளைக்களைந்து எறிந்து, தன்னுடைகளை யுடுத்துக் குதிரைமேலேறி மகிழ்ச்சியோடும் விரைந்துபோயினான். இவன் யாரோவெனிற் கள்வனான இருளனேயன்றிப்பிறன் அல்லன்.

இனி இங்ஙனம் பொய்க்கோலத்தில்வந்த குடியானவனால் வழிதவறிச் செல்லுகின்ற நீலலோசனனையும் அவன் துணைவர் இருவரையும் பற்றி உன்னிப்போம்.

" அந்தஆளிடத்தில் அசட்டுத்தனமேயன்றி இன்னும் ஏதோஒன்று இருப்பது மாட்சிமை நிறைந்த தங்கட்குத் தோன்றுகின்றதா? அவன்முகத்தில் ஒரு தீக்குறிதோன்றியதென்று நினைத்தேன். அவன் தங்கள் திருமுன்பு விடைசொல்லுகையில் தங்கள்திருமுகத்தை நன்றாய்நோக்காமல் தனது கைக்கோலால் கீழே சிதறிக்கிடந்த கற்களைத் தட்டிக்கொண்டு இருந்தனனே" என்று நுட்ப வறிவினனும் மிக விழிப்பானவனுமான கேசரிவீரன் கூறினான்.

அதற்கு நீலலோசனன் தன் கரிய மீசைமயிரோடு இகலி முத்துவரிசை போன்ற தன்அழகிய பற்கள் பளீரென்று துலங்க நகைத்து " அரண்மனையில் நடைபெறும் தகவொழுக்கங்களை மலைநாட்டுக் குடியானவன் பாற் காண்டற்கு என்அன்புள்ள கேசரிவீர, நீஎதிர்பார்க்கலாகாது. அவன் நம்மை ஒழுங்கான வழியில் செலுத்தியிருந்தானாயின், அவனது குறும்பானநடையைப்பற்றிச் சிறிதும் நாம் கவலல் வேண்டாம்'' என்றனன்.

அதற்குக்கேசரிவீரன் ''நல்லது, அவன் நமக்குச்செவ்வையான வழியைக் காட்டியிருந்தானாயினன்றோ? அஃதின்னுஞ் சிலநாழிகைக்குள்தெரிந்துவிடும். தங்கள்மாட்சிமைநிறைந்ததிருமுன்புபெரிதும் வணக்கமுடையேனாய் யான் நினைத்துக்கூறுவது இது: போகப்போகக் குறுகி இடுக்குவழியாய்ப்போகும் இந்நெறி நீலகிரிநகரத்திற்கு நேரேசெல்லும் பெரும்பாட்டையாகச் சிறிதும் தோன்றவில்லை.'' என்று விடைபகர்ந்தான்.

வழியும் உண்மையாகவே குறுகலாய்த்தான் இருந்தது ; அது குறுகிச் செல்லச்செல்ல அதன் அழகு நிரம்பவும் பொலிவு பெற்றுவிளங்கிற்று. தலைக்குமேலே ஒன்றோடு ஒன்று பின்னலாய் வளர்ந்திருக்கும்மரங்கள் தண்ணிய நிழலைப்பயந்து வழிச்செல்வார்க்கு ஞாயிற்றின் வெம்மையை மாற்றின. கோடிக்கணக்கான நறுமலர்கள் அக்கரையைக் கவிந்திருந்தன. அவ்வியல்பை நுணுகி நோக்கும்போது, உலகமங்கை தன் மலர்ச்சுமையைத் தாங்கிப்போவதற்கு ஏலாமல் அயர்ச்சியடைந்துஅவற்றைஅங்கே சொரிந்துவிட்டாற்போலத் தோன்றிற்று;முந்திரிக்கொடிகள் மிகத்தித்திப்பான பழக்குலைகளைச்சுமந்து கிடந்தன; இன்னும் பலவேறுவகைப்பட்ட இனிய பழங்களும்வழிச்செல்வார்கைக்கு எட்டத்தக்கவகையாய்த் தொங்கிக்கொண்டிருந்தன.

"இந்த நெறிதான் நீலகிரி நகரத்திற்கு நேரே செல்வதாயிருக்கவேண்டுமென உறுதியாய் நம்புகின்றேன். இன்னும் இது போகப்போகஇவ்வாறே அழகிற்சிறந்து தோன்றுமென்று புலப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் நாம் போம்வழியில் யாரேனும் எதிரேவந்தால் அவரைக்கேட்போம், அல்லது ஏதேனும் ஒருகுடிசைவீடு அருகாமையிலிருந்தாலும் தெரிந்துகொள்வோம்.—அதோ ஒரு சிறிய ஓடை ஓடும் சிற்றொலி கேட்கின்றது! நான் மிகவும் விடாய்கொண்டிருத்தலால் அவ்வொலி எனக்குப் பண் இசைத்தாற்போல இருக்கின்றது; இங்குள்ள கொழுவிய கொடிமுந்திரிப் பழக்குலைகளை நெருக்கிப் பிழிந்தெடுத்தசாற்றைப் பருகுதலைக்காட்டினும், விடாயினால் வறண்டு உலர்ந்துபோயிருக்கும் என் நாவிற்கு இதன் தூயநீரில் ஒருகுடங்கையளவுமுகந்து உண்ணுவது மிகவும்இசைவாயிருக்கும். வாருங்கள்! நாம் முன்னேபோய், மொழுமொழுவென்று ஓடும் இவ்வாய்க்காலுக்கு விரைவில்வழிதெரிந்து கொள்வோம்" என்று நீலலோசனன் மொழிந்தான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே நீலலோசனன் தன் குதிரையை விரைந்தநடையிற் செலுத்தச் சிலநேரங்களுள் எல்லாம் அவ்வழிஓர்அகன்ற இடத்திற்கொண்டுபோய் விட்டது. அதற்குமேல் வேறுவழியும் அங்கே காணப்படவில்லை.

உடனே நீலலோசனன் மிகநெருங்கிய மாஅடர்ப்பின் கீழ்ச் சணலாடையாற் சமைந்த ஒரு கூடாரத்தைக் கண்டு "நாம் வழி தெரிந்து கொள்ளுதற்கு இங்கு யாரேனும் இருப்பர். அதோ ஒருகூடாரம் பார்!" என்று தன் காவலாளரை நோக்கிக் கூறினான்.

முன்னினும் இப்போது அவ்வாய்க்காலின் ஓசை மிகவுந் தெளிவாய்க்கேட்டது; நீர் பளிங்குபோல் ஒழுகும் அவ்வருவியின் பக்கத்தே யுள்ள ஓரிடத்தில் நீலலோசனன் சென்றவுடனே, அங்குப் பேரழகாற் சிறந்த ஓர் இளம்பெண் தன்முகமாய்வருங் குதிரைக்குளப்படியின் ஓசையும் அறியாமல் மிகவும் ஆழ்ந்து நினைந்த நினைவினளாய் அமர்ந்திருப்பக் கண்டான்.

மூன்றாம் அதிகாரம்.

தெளிநீர்வேலி.

நீலலோசனன் குதிரைக்கடிவாளத்தைப் பிடித்து இழுத்தவாறே அவ்விளம்பெண் முகத்தை விளங்கப்பார்த்துக்கொண்டு நெருங்கிப்போய் அவள்பக்கத்தே சென்று குதிரையை நிறுத்தினான். அவள் உருவத்தின் பேரழகைப் பார்த்துப் பெரிதும் வியப்படைந்தனன். முதல் நொடியில் அவனது அறிவைக் கலக்கிவிட்ட அப்பேரெழில் இப்போது அவன் உள்ளத்தே பையப்பைய நுழைந்து மயக்கிற்று. அவள் அவ்வாய்க்கால் ஓரத்தில் இருந்தமையால் தன் அடிகளை அதன் நீரிற் கழுவிக் கொண்டிருந்தனள்போலும்! அவள்பக்கத்தே யாழ் என்னும் ஓர் இசைக்கருவி யிருந்தது. அவள் மிகவும் ஆழ்ந்த நினைவிலிருந்தமையால், தன்னைச்சூழவிருந்த அக்கருவியினையும் பிறவற்றையுந் தான் சிறிதும் உன்னித்திலள்.

மிகவுங் கரிய அவள் கூந்தல் தனக்கு இயற்கையிலேயுள்ள வழுவழுப்பினால் விளக்கமுடையதாய், இப்போது ஞாயிற்றின் கதிர்கள் தோய்தலால் மிகமிளிர்ந்து கற்றை கற்றையாய்

அவிழ்ந்து விரிந்து கிடந்தது. பால்நுரைபோன் மிகமெல்லிய தான வெள்ளிய சல்லா மேல் விலகித் தோட்புறத்திற் றொருக்கப்பட்டுப் பசிய புல்நிலத்தில் தாழ வீழ்ந்திருந்தது. மற்றை உறுப்புகளின் அமைப்புக்கு இசையப்பொருந்தித் திருத்தமாகக் கடைந்தெடுத்தன போல் நீள ஒழுகிக் கிடக்கும் அத்தோள்களின் சரிவிற் கொழுமையான அம்மயிர்க்கற்றைகள் அலைந்தன. அத்தோள்களின் மணிக்கட்டுகளில் மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பட்ட தொடி யணிந்து விளங்கின. இவ்விளம் பெண் சிறிது உயரமான வடிவுடையளாயிருந்தனள். மங்கைப் பருவத்தினளாகலின், இவள் உறுப்புகளெல்லாம் வளர்ந்து நிரம்பவேண்டும் நிலையை எய்தித் திரண்டு உருண்டு மறுவின்றிச் செவ்விதின் விளங்குவவாயின. இவள் மேனிநிறங் கரியதாதலின்றித் தளுதளுப்பாக வெளிறிய வண்ணமுடையதாய் மிகவுந் தெளிந்து இலங்கிற்று. செழுங்குருதி கன்னங்களிற் பாவிச் செவ்விய வண்ணத்தோய்ச்சல் உண்டாக்கிற்று. இவள் முகங் கோழிமுட்டை வடிவினதாய் வயங்கிற்று. அன்னப் பறவைபோல் இயற்கைநலங் கனிந்து நீண்டு நுடங்குங் கழுத்தின்மேல் இவள்தலை நிறையொக்கப் பொருத்தப்பட்டிருந்தது. முதலிலே நீலலோசனன் கண்ட சிலநேரங்களாக, இவள் பரிய விழிகளைப் பொதிந்துகொண்ட மூடிகளின் இறைப்பைமயிர் கன்னத்திற்படிந்திருந்தன. இப்போது இவள் தன்விழிகளைத் திறந்தவுடனே, கரியபட்டிலினின்றும் புறப்பட்ட இருபெரிய கனவுகள் அவன் உயிரின் ஆழ்ந்த அறைகளினுட் புகுந்து அறிவை மயக்குதல்போல இரண்டொளிகள் அவன்மேற் பாய்ந்தன. அவள் அணிந்திருந்த ஆடை மிக உயர்ந்ததென்று முன்னரே கூறினோம். மேல் இட்டிருந்த உடை பொற்கொட்டைகளுடையனவாய் வெறுங் கரியபட்டினாற் சமைக்கப்பட்டிருந்தது; இடையிற் பூட்டியிருந்த மேகலை கொளுத்துவாயில் உயர்ந்தவயிரமணிகள் அழுத்தப்பட்டு அவிர்ந்தது; ஆடையின் ஓரங்கள் வண்ணத்தோய்ச்சல் சிறிதாயுள்ளபட்டிற் பூத்தொழில் செய்யப்பட்டிருந்தன. இப்பெண்ணின் முதற்றோற்றத்தினுலேயே இவள் யாரோ ஒரு செல்வரின் குடியிற்பிறந்த அருமை

மகளாதல் வேண்டுமென்பது நன்கு அறியக்கிடந்தது. இப்பெண் இருந்த இடத்திற்குச் சிறிது தொலைவில் அமைக்கப்பட்ட கூடாரவாயிலின் கீழ்ப் பூச் சிதறிய பசும்புல் நிலத்தில் நன்கு அணிந்த இருமகளிர் சாய்ந்துகொண்டிருந்தமையினை நீலலோசனன் கண்டபோதும் இக்கருத்து வலியுறுவதாயிற்று.

இனி யிவற்றையெல்லாம் பார்த்த பௌத்த இளைஞனை நீலலோசனன் அறிவு மயங்கிப் பிறவயமாயினன் என்பது ஒரு வியப்பன்று; ஏனெனில் அக்காட்சி முழுதும் ஒருவனது அறிவை மயக்கி அவனுக்கு உவகையினை மிகுவிப்பது திண்ணமேயாகலின் என்க. ஆழத்திற் கிடக்குங் கூழாங்கற்படைகளுங் கண்ணுக்குப் புலனும்படி பளிங்குபோல் தெளிந்து ஓடும் அந்த நீர் ஓடையும், ஞாயிற்றின் கதிர்களை யெல்லாந் தன்னிடத்துச் சிறைப்படுத்திப் பொதிந்துவைத்து இப்போது அவற்றை மேல்எல்லாம் வார்த்துக்கொண்டாற்போலப் பசிய தழைகளெல்லாம் பொன்னென மிளிரக் கிளை நெருங்கித்தண்ணிழல்பயந்து தோன்றும் மரங்களும், பல்வேறு வகைப்பட்ட அழகும் நிறனும் உடையவாய்ப் பசும்புற்கற்றைமேல் இறைந்து கிடக்கும் பல்லாயிரம் பூக்களும், அவை முகை விரித்தலாற் காற்றிற் பரந்து உலவுங் குளிர்ந்த நறுமணமும், மேலே கவிந்து திகழும் நீலவானும் என்னும் இவையெல்லாம் இவ்விடம் அரம்பைமாதுபோல்வாளான இப்பெண்மணி தனியளாய் இருத்தற்குப் பெரிதுந் தகுதியுடைய கற்பக இளங்காவேயென விளங்கச்செய்தன. மேலும், இங்ஙனம் வழி நடந்துவரும் இம்மலைநாடுகளைப்பற்றித் தான் கற்ற கட்டுக் கதைகளானும் வியத்தக்க வரலாறுகளானும் உணர்ந்தபடியே நற்குணமுடையளான ஒரு சூர்மகள் உறையும் மாய நிலத்திற்றான் வந்து சேர்ந்தனமோ என்று நீலலோசனன் தன் இளம்பருவத்தியற்கையாற் பலவாறு கருதுவானாயினன்.

இம்மாது, அவ்விளைஞன் வருதலை முன்னுணர்ந்து குதிரையடியோசையையும் அறியாமல் அவ்வளவு ஆழ்ந்ததொரு நினைவில் தன் அறிவை ஒருங்கச் செய்து அவனைப்பாராது உண்மையாகவே இருந்தனளோ, அல்லது, தான் அவனைப் பார்க்குமுன்னமே அவன் பேரழகாற் சிறந்த தனது உருவத்

ஃதக்கண்டு கண்களுக்கு விருந்து செய்கவென்ற எண்ணி அறியாதாள்போன்று தான் வாளாது இருந்தனளோ நாம் அறியோம். ஆயினும், இங்ஙனம் ஆழ்ந்ததொரு நினைவிற் றன்னையிருத்திச் சிறிதுநேரங் கழிந்ததென்பது திண்ணம். கழிய, உடனே தன் கண்களை எறிட்டு அவனைநோக்குதலும், அவள்மாட்டு ஒரு தடுமாற்றமும் வியப்புங் குறிப்பாய்த் தோன்றி மறுநொடியே மறைந்தன. திரும்பவும் அவள் அவனை எறிட்டுப்பார்த்தனள். உடனே தான் அந்நேரத்திற் செய்தற்குரிய ஒருதகுதியினை மறந்துவிட்டாற்போலத் திடுக்கிட்டுத் தன் முதுகின்புறத்தே குவிந்துகிடந்த சல்லாவினை யிழுத்து முகத்தை மூடிக்கொண்டனள். அவ்வாறு மூடிக்கொள்ளுகையில் தன் கண்ணுறை மணியினுள்ளே சென்றடங்குவதான ஒருவகைக் குளிர்ந்த ஒளி நோக்கத்தோடும் நீலலோசனன்மேற் றன்பார்வையை ஊன்றினாள்.

நீலலோசனன் அப்பெண்மணியைப்பார்த்துப் பணிவாய் வணங்கி வாழ்த்தும்போது, பின்றாங்கி வந்த இவன் காவலாளர் இருவரும் இவனுக்குப்பின்னே வந்து சேர்ந்து பணிவின் பொருட்டுச் சிறிது அகன்று குதிரையை நிறுத்திக்கொண்டனர். உண்மையிலேயே கேசரிவீரன் அப்பெண்ணைப் பார்த்தவிடத்துத் தான்செல்லவேண்டிய வழி தெரிவதற்கு நேரம் வாய்த்தது என்பதைத் தவிரப் பிறிதொன்றும் நினைந்திலன்: வியாக்கிரவீரனோ சிறிது இளம்பருவமுடையனாதலாற் பெண்மக்கள் அழகின்நலத்தைக் கண்டு மயங்குதற்கு இடம்பெற்று, அவள் முகத்தின்மேற் சல்லாவை இழுக்கும் அந்நேரத்தே அவளது வடிவழகைக்கண்டு வியந்து, "பௌத்தன் அறிய இவள் நிரம்ப அழகுடையளாய் இருக்கின்றனள் !" என்றான்.

அவ்வுரைக்கு ஒத்து நீலலோசனனும், "அழகா ! துறக்க நாட்டிற்குரியரான அரம்பைமாதர்களில் இவர் ஒருவராக இருத்தல் வேண்டும்! இவர் இந்நிலமகள் அல்லர்!" என்றுகூறினன்.

இளைஞனான தன்தலைவன் இங்ஙனங் காதல் வயப்பட்டுக் கூறியதைக்கேட்டுக் கேசரிவீரன் முகத்தில் ஒருவெறுப்புக் குறி தோன்றிற்றாயினுந், தனக்குயர்ந்தோனிடத்துப் பாராட்

டும் பணிவினுல் வாய்பேசா திருந்தனன். இப்போது நீல லோசனன் தன்குதிரையைச் சிலவடி முன்னேறச் செலுத்தி அம்மங்கையிருக்கும் இடத்திற்குப் பதினைந்து அடி எட்ட நிறுத்திப் பணிவொடுதாழ்ந்து, "மாதரீர், நீலகிரி நகரத்திற்குச் செல்லும்வழி யிதுவோ என்று அறியும்பொருட்டு, நுங்கள் ஆழ்ந்த நினைவினிடையே யான் புகுந்து வினவுதலைப் பொறுக்கும்படி வேண்டுகின்றேன்" என்றான்.

அதற்கு அம்மாது, "நீங்கள் வருவதாகத்தோன்றும் வழி முகமாய்ப் பார்த்தால், இது வழி யன்று" என்று கரும்பினு மினிய சொற்களான் மொழிந்தாள்.

இதனைக் கேட்டதுங் கேசரிவீரன் மற்றையோனை நோக்கி, "அருவருப்பான அக்குடியானவனைப் பார்த்து நான் முன்னமே ஐயப்பட்டேன்" என்று மெல்லச் சொன்ஞன்.

இதற்குள் அம்மங்கை நீலலோசனனைத் திரும்பவும் பார்த்து, "இந்நாடுகளில் திரிந்து பழக்கம் இல்லாதவர்கள் காணக் கூடாதாயினும், அரசபாட்டைக்கு இங்கேயிருந்து போகும் ஓர் இடுக்குவழி யிருக்கின்றது. நானும் நீலகிரி நகரத்திற்குத்தான் போகிறேன்" என்றனள். இவ்வாறுசொல்லி இப்படிச்சொல்லியதே மிகுதி யென்று எண்ணினுற்போலவும், இங்ஙனஞ் சொன்னமையால் தானுங் கூடப்போக விரும்புகின்றனள் என்று நினைக்கப்படுமே என அஞ்சினுற்போலவுஞ் சடுதியில் மேலும் பேசுவதை நிறுத்திவிட்டாள்.

உடனே நீலலோசனன், "நங்கைமீர், நுங்கட்கு வேறு நல்ல துணை யில்லாமல் எங்கள் துணையை ஏற்றுக் கொள்வீர்களாயின், நீங்கள் செல்லும் வழியில் நுங்களைப் பாதுகாத்துச் செல்லும் நேரம் எனக்கு வாய்த்ததைப்பற்றி மகிழ்ச்சியும் இறுமாப்பும் எய்துகின்றேன்." என்று கூறினன்.

இதற்கு அந்த நங்கை ஏதும் உடனே மறுமொழி சொல்லவில்லை; அவள் அணிந்திருந்த முக்காட்டின் மடிப்புகளின் வழியே அவள்முகஞ் சிறிது தோன்றியபோது அவள் திரும்பவும் ஆழ்ந்த கருத்தினளாகக் காணப்பட்டாள். கடைசியாகத் தான் பின்பற்றவேண்டும் ஓர் ஏற்பாட்டை முடிவு செய்தாள்

போலச் சடுதியில் நீலலோசனனைப்பார்த்து, "இப்படிப்பட்ட துணையொடு செல்வதில் தகுதியில்லாதது ஒன்றுமில்லை. முதலில் உண்மையைச் சொல்லுமிடத்து, இந்நேரம், என்னிடம் வந்து சேர்ந்திருக்க வேண்டிய தக்க ஆண்துணை இன்னும் வாராமையால் நான் ஏமாற்றமடைந்தேன்; அல்லது இவ்விடங்களில் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அவர்களை நானாவது போய்க் கண்டுபிடிக்கவேண்டும். என் கூடவந்த பணிப்பெண்கள் அருகாமையில் இருக்கின்றார்கள்; அவர்கள் உங்களுடன் வந்தவர்களைப் பணிவோடும் ஏற்றுக்கொள்வார்கள். யான் தங்கட்கு முன்னே ஏதோ கொண்டுவந்து வைக்கும் உணவை ஏற்றுக் கொள்ள உளம் இசையவீர்களானால், தாங்கள் பயணப்படுதற்கு முன்னே சிறிதுணவு கொள்வது நல்லதாகும்." என்று முன்னிலும் இனிமைமிக்க குரலோடும் பேசினாள்.

உடனே நீலலோசனன் குதிரையைவிட்டுக் கீழேகுதித்துப், பெற்றுக் கொள்வதற்கு விழிப்பாய் நின்ற வியாக்கிர வீரன் கையிற் கடிவாளத்தை விட்டெறிந்தான். இவ்வாறு நேர்ந்த இந்நிகழ்ச்சியைக் குறித்துக் கவலையடைந்தவன்போலக் கேசரிவீரன் காணப்பட்டான்; ஆயினும், இளம்பருவத்தினனை தன் தலைவனை இடித்து ஒரு சொல்லேனுஞ் சொல்ல அவன் துணிந்திலன்; ஆகவே, அவன் வியாக்கிரவீரனுடன் சென்று, கூடாரத்துக்கு எதிரிலே சாய்ந்தநிலையி லிருந்த அப் பணிப்பெண்கள் இப்போதுதான் எழுந்திருந்த இடத்திற் சேர்ந்தான். அக்கூடாரத்திற்குச் சிறிது அருகாமையிலே அழகான மூன்று குதிரைகள் கொழுமையான புல் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் அழகிய கல்லணை, அங்கவடி முதலியனவெல்லாம் அக்கூடாரத்தினுள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. அப்பணிப்பெண்களில் ஒருத்தி கன்னங்கறேல் என்று இருந்தாள். மற்றொருத்தி நீலகிரிநாட்டுக்குரிய பெண்கள் வகுப்பைச் சேர்ந்தவளாய் அழகாய் இளம் பருவத்தோடுங் கூடினவளாயிருந்தாள்.

பௌத்த இளைஞனுடன் வந்த இவர்கள் அந்நங்கையின் பணிப் பெண்களோடு உறவாடிக்கொண் டிருக்கையில், நீலலோசனனும் அந்நங்கையும் எவ்வாறிருந்தனர் என்பதைப்பற்றிக் கூறப்புகுவோம். அந்நங்கை மிகவும் அழகிதாய் அமைந்த தனதுகையை நயமாகச் சிறிது அசைத்து அழைத்து நீலலோசனனைத் தனக்கு அருகாமையிற் புல்லின்மேல் இருக்கும்படி சொன்னாள். நீலகிரிக்குப் போகும் பயணத்தில் தானும் அவனோடு செல்ல இசைந்தமையால், இதற்குமுன் அவனைப் பிறன்போலெண்ணிப் பணிவு காட்டிய நடக்கையின் எல்லையை மீறினாள் போலவும், இப்போது நேய மிகுந்து பழக்கமானதைத் தெரிவிப்பாள்போலவும், அந்நங்கை தன் முகத்தை மறைத்திருந்த முக்காட்டை எடுத்துவிட்டாள். அருகாமையிலிருந்து அவள் முகத்தின் பேரழகை இங்ஙனம் நீலலோசனன் கண்டபோது, தான்முன்னே தொலைவில் அவளைக் கண்டு எண்ணியது உண்மையென்று நினைந்தான். அவள் சிறிதேறக்குறைய இருபது ஆண்டுள்ளவள்போற் காணப்பட்டாள்; மடந்தைப்பருவங் கடந்து அரிவைப்பருவம் அடையும்பொழுது முகிழ்க்கின்ற பெருநலங் கனியப்பெற்றிருந்தாள்; ஆனாலும், மடந்தைப் பருவத்தின் புத்திளமை இன்னுஞ் சிறிதேனும் மாறப் பெற்றிலள். அவளது முக அமைப்பானது மிகவுந் திருத்தமாயிருந்தது. அவள் கண்கள் பெரியனவாயும், அடிக்கடி மாறுங் குறிப்புடையனவாயும் இருந்தன: அவைகள் சிலநேரம் பேரொளிகாட்டி விளங்கின, வேறுசிலநேரம் மென்மையாயும் மங்கலுடனுந் தோன்றின; சிலநேரம் ஒருநொடிக்குள் தமது ஒளிவன்மை முழுதும் அப்பௌத்த இளைஞன்மேல் வீசி, அதன்பிற் கருகி நீண்ட மயிர்நிறைந்த இறைகளாகிய திரைகளின் உள்ளே தம்மை மறைத்து ஒளிந்தன. குறுகிச் சிறிதாயிருந்தாலுஞ், செந்நிறம் மிகுந்து திரண்ட இதழ்களோடுங் கூடின அவள் வாயானது பேசும்போதெல்லாம், அவள் தன் கழுத்தில் அணிந்திருந்த மாலையின் முத்துகளைப் போல் வெண்மையான பற்களைத் தோற்றுவித்தது. அவள் விடும் மூச்சோ அமிழ்த மணத்திற் சிறிது தோய்ந்து வந்தாற்

போலத் தோன்றியது. இங்ஙனங் கிட்டக் கண்ட பார்வையானது நீலலோசனன் அந்நங்கையின் அழகைப்பற்றிக் கொண்ட கருத்தை உறுதிசெய்தது. ஆயினும், மனக்கிளர்ச்சியான் எழுந்த வியப்பும், வியப்பினுன் எழுந்த மயக்கமுந் தம் முதல் மும்முரம் மாறித் தணிந்தவுடனே, நீலலோசனன், பெண்கட் குரிய மென்மைக் குணத்தில் ஏதோ சிறிது அவளிடத்திற் குறைபட்டிருப்பதைக் கண்டான்; ஒரு பெண்ணை எப்பொழுதுங் கவர்ச்சியுடையளாகச் செய்வதும், ஒருவன் உள்ளத்தில் அவளது அழகின் வலிமையால் ஒருநொடிக்குள் உண்டான மதிமயக்கத்தை அங்கே என்றும் நிலைபெறச் செய்வதுமான நாணத்தோடுங் கூடிய இயற்கை மடப்பம் ஏதோ சிறிது அவள்பால் இல்லாமையை அவன் கண்டுணர்ந்தான்.

நீலலோசனன் அந்நங்கையின் அருகாமையிற் புன்மேல் உட்கார்ந்தபோது, "சுடுசுடுப்பான ஒரு குடியானவன் எனக்குப் பிசகான வழி காட்டினமையாலன்றோ உங்களுடைய பழக்கத்தைப் பெறும் நல்வினை உடையனுனேன்?" என்று கூறினுன்.

ஒருவகையில் எவ்வளவோ பொருளைத் தரக்கூடியதும், மற்றொரு வகையில் தான் நினையாமலும் அறியாமலும் உண்டான பழக்கத்தால் தோன்றியதை ஒப்பதுமான ஒருபார்வையை அவன்மேற் செலுத்தி அவள், "சொல்லளித்த துணையானது வந்து சேராமையாலன்றோ நானும் தங்கள் கூட்டுறவாலுந் தங்களுடன் வந்தோராலும் உண்டான நல்ல துணையைப் பெறுவேனுயினேன்?" என்று தானும் எதிர் மொழிந்தாள்.

உடனே நீலலோசனன், "இந்த நீலகிரி நாடுகள் வழிச் செல்வோர் இடரின்றிச் செல்வதற்கு ஏற்றன அல்ல; இதற்கு நான் சிறிது முன்னே அடைந்த துன்பநிகழ்ச்சியே போதும்" என்முன்.

அதற்கு அவள், "மெய்தான்!" என்றுசொல்லி, அப்பௌத்த இளைஞன்மேல் இரக்கமும் உவப்பும் உடையாள் போல அவனை நோக்கினுள். "எங்கே அவர்களிடத்தில் அகப்பட்டுக்கொள்கின்றேனே என்று நான் நினைக்கும்போதெல்

லாம் நடுக்கம் அடையும்படியான அக்கள்வரில் எவரையேனும் நீங்கள் எதிர்ப்பட்டிருக்கக்கூடுமோ?"

"நங்கைமீர், நல்லான் என்னுங் கள்வர் தலைவனது ஆறலை கூட்டத்தைப்பற்றி நீங்கள் குறிப்பாய்ச் சொல்லுகிறீர்கள் போலும்! அஞ்சாமறவனான அக்கொள்ளைத்தலைவன் மெய்யாகவே யிருக்கின்றான்! இளைப்படைந்தோரைக் கிளர்ச்சிப்படுத்த வேண்டியேனும், பிள்ளைகளை அச்சப்படுத்த வேண்டியேனும் வீடுகளிற் பொய்க்கதையாய்ப் பேசப்படுவதில் அவன் சேர்ந்தவன் அல்லன் என்று நான் சொல்லல் பிழையன்று என்பதற்கு எனக்கு நேர்ந்தவையே போதும்." என நீலலோசனன் மறுமொழி கூறினான்.

இங்ஙனம் நீலலோசனன் பேசியபோது அந்நங்கையின் முகம் மிக்க திகில் காட்டிற்று; அவள் நடுக்கமுற்ற குரலோடும் "நீங்கள் அக் கொள்ளைக்காரரிடம் அகப்பட்டீர்களோ?" என்றாள்.

உடனே நீலலோசனன், "இன்று காலையிலேதான்" என்று அதற்கு விடைகூறினான். "ஆனால், எங்களை எதிர்த்துச் சண்டையிட்டதில் அவர்கள் மகிழ்வதற்குச் சிறிதும் இடமேஇல்லை. அப்படி யல்லாவிட்டால், நங்கைமீர், உங்களுக்கு இக்கதையைச் சொல்ல இங்கு வந்திருக்கமாட்டேன்."

பிறகு, நீலலோசனன் கள்வர்கூட்டத்தை எதிர்த்த வகைகளெல்லாம் முற்றும் எடுத்துக் கூறினான். இவ்வாறு இவற்றை இவன் சொல்லி வருகையில் மிகவும் அழகியதான அந்நங்கையின் முகத்தில் நடுக்கம், அச்சம், ஐயம், வியப்பு முதலிய குறிப்புகள் அடுத்தடுத்துத் தோன்றின. மிகவும் ஆர்வமையான குரலோடு அவள் அப்பௌத்த இளைஞன் அவ்விடரினின்றுந் தப்பியதைப் பற்றியும், அவனதும் அவன்பின் வந்தோரதும் வலிமையைப் பற்றியும் வாழ்த்திச்சொல்லுகையில், அவள் முகத்தில் வியப்புக்குறிப்பு அழுந்திவிளங்கிற்று. அதன்பின் அவள் தன்பெயர் மீனம்பாள் என்றுந், தான் நீலகிரி நகரத்திற்றான் வழக்கமாய் இருப்பதென்றும், பணக்காரவணிகரான தன்தந்தை பன்னிரண்டு திங்கட்குமுன் திடீரென இறந்து

போனமையால் தான் தொலைவிலுள்ள ஒரு நகரத்திற்குப் பயணம் போகவேண்டியதாயிற்றென்றும், அங்கே சென்று தன் வினையினை முடித்தபின்னர்த் திரும்பவுந் தன்வீடு நோக்கிப் புறப்பட்டு வரலாயிற்றென்றுங் கூறினாள்.

மீனாம்பாள் மறுபடியும் அவனை நோக்கி "என்னொடு தங்கியிருந்தவரான என் நண்பர்கள் என் பயணத்தில் நான் முதற் றங்குமிடம் வரையில் ஒரு தக்கதுணையை விடுத்திருந்தார்கள்; அதன்பின் என்னுடன் வழிச்செல்வதற்கு வழிகாட்டிகளுங் காவற்காரரும் வரும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலைப்பொழுது மிகவும் இனிதாயிருந்தமையால், தக்கதுணையின்றிச் செல்வதால் நேரும் இடர்களையும் மறந்து, புதியதுணை விரைவில் எம்முடன் வந்துசேரும் என நினைந்து, நல்லவெயில் நேரத்தில் தெளி நீர் வேலி எனப்படுவதாகிய இந்த இடத்திற்றான் நான் தங்குவேன் என்றுஞ் சொல்லிவிட்டு, என்பணிப்பெண்களோடும் பயணம் புறப்பட்டு வந்தேன்; ஆனால், ஏதோ காரணத்தால் அந்தத்துணை இன்னும் வந்து சேர்ந்திலது; இதனால், மனந் துணுக்குற்றும், இங்ஙனம் ஏமாந்து போனமையாற் றளர்புற்றும் மிக்க துயரத்தோடு யான் கவன்று கொண்டிருக்கையிற், பெருமானே, தாங்களுந் தங்கள் பின் வந்தோரும் இவ்விடம் வந்து சேர்ந்தீர்கள்" என்று சொன்னாள்.

உடனே நீலலோசனன், "அழகிற் சிறந்த அம்மை மீனாம்பாள், துணையில்லாமற் செல்வது உங்கட்கு இடர்தருவதேயாயினும், இப்போது யான் உங்கள் துணையாய்வரும்படி நேர்ந்தமையால் நீங்கள் இனி மனங் கலங்கி அஞ்சவேண்டுவ தில்லை. நீங்கள் முன்னமே தெரிந்துகொண்டபடி யானும் நீலகிரிக்குத்தான் செல்லவேண்டியவனாக இருக்கின்றேன். அங்கே நான் முடித்துக்கொள்ளவேண்டிய சில கட்டாயமான வினைகள் உண்டு." என்று மறுமொழி சொன்னான்.

இதற்குமேல், நீலலோசனன் தனது உலகியல்நிலையின்னதென்றேனும், தன்வினைகள் இத்தகையன என்றேனும், தான் நீலகிரிக்குச் செல்லுங் காரியம் இனைத்தென்றேனுந் தானே ஏதும் விளங்க மொழிந்திலன்; அந்தநங்கையும் நற்குடி

யிற் பிறந்து நன்கு வளர்க்கப்பட்டு நாகரிகமுடையவள் போற் றோன்றினமையால், தானும் அவைகளைப்பற்றி அவனை ஏதும் உசாவிற்றிலள். அப்படியாயினும், அவன் தன்பெயர் நீலலோசனன் என்று அவளுக்கு அறிவித்தான்; அவளோ அவனது தோற்றத்தையும் அவன் பின்னே இருவர் ஏவலராய் வருவதையுங் கண்டு அவன் ஒரு செல்வமகனா யிருக்கவேண்டுமென்று எண்ணினாள்.

அழகிற் சிறந்த மீனாம்பாள் இப்போது தன்கைகளை மெதுவாகத் தட்டித் தன் பணிப்பெண்களை அழைத்தாள்; அவர்களுங் கடுக வந்து புல்லின்மேல் நேர்த்தியான சிற்றுண்டியுங், கொடிமுந்திரிப்பழச் சாறும், இனிய தேநீரும் பரப்பிவைத்தார்கள்; சுற்றிலும் மரக்கொம்புகளில் நெருங்கித்தொங்கிய பலவகையான இனிய பழங்களும் அங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டன. மீனாம்பாள் அங்கு வைக்கப்பட்ட கொடிமுந்திரிப் பழச் சாற்றைப் பருகுதற்கு மனம் உவந்தவளேயாயினும், அவள் அதனைவிட்டு இனிய தேநீரையே அருந்தினாள்; நீலலோசனன் பௌத்தமதத்தைத் தழுவினவனாயினும், பௌத்த பிக்ஷுகள் போற் கொடிமுந்திரிப்பழச் சாற்றை வெறுப்பவன் அல்லனாயினும், மதிமயக்கும் பொருள்களில் தனக்கு இயற்கையாகவே உள்ள ஓர் அருவருப்பினால் அவனும் அதனைத் தொடாது விட்டான். இங்ஙனம், அப்பெருமானும் பெருமாட்டியுமான இருவரும், உண்டு முடியும்வரையிற், கொடிமுந்திரிப்பழச் சாறு நிறைத்திருந்த குடுவையைத் தொடவேயில்லை; வேறு தீநீர்களையே பருகினார்கள். அப்போது அவர்கள் இடையிடையே அங்குள்ள இயற்கைத்தோற்றங்களின் பொலிவையே வியந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நீலலோசனன் புதுப்பழக்கமாய் வந்த இப்பெண்ணின் அறிவையும் நாகரிக விழைவையுங் கண்டு விரும்புதற்குக் காரணம் வாய்த்தாற் போலவே, அவளும் அவனிடத்தி லியற்கையாகத் தோன்றிய மன அறிவின் உயர்ச்சியைக் கண்டு வியக்கலானாள்.

அவர்கள் குதிரைகளின்மேல் ஏறிப் பயணம்புறப்பட்டார்கள். நீலலோசனன் எழில் கனிந்த மீனாம்பாள் பக்கத்திற் பரி

மேற் சென்ருன்; அவன் பின் வந்த ஆடவரிருவரும் அவள் பின் வந்த பணிப்பெண்கள் இருவருடனுஞ் சென்ருர்கள். தன் பக்கத்தே வந்த கரிய பணிப்பெண் தன்னைப் பேச்சிலிழுக்க மிகமுயன்றும், அதற்குஅகப்படாமல் துயரநினைவோடும் வாய் பேசாமற் சென்றதனுல், தாடிமயிர் நீண்ட கேசரிவீரன் அவள் பக்கத்திற் சென்றவனுகவே சொல்லக்கூடவில்லை; மற்று, வியாக்கிரவீரனே அழகியாளான மற்ருெரு பணிப்பெண் ணுெடு மகிழ்ச்சியாய்ப் பேச்சாடிக்கொண்டே சென்ருன். ஏவலர்பகுதி யிரண்டிற்கும் அறுபதடி முன்னே பரிமேற்போன நீலலோசனனே, மீனும்பாள் தன் குதிரைமேல் உட்கார்ந்திருக் கும்அழகையும், நேர்த்தியையுந், திறமையையுங் கண்டு வியவாம லிருக்கக் கூடவில்லை. அவள் குதிரை யேற்றத்தில் மிகப்பழ கினவளென்பது தெளிவாயிற்று; அவள் ஏறியிருந்த குதிரை கூடியவரையில் நல்ல இயற்கை வாய்ந்த தொன்ருகவேயிருந் தாலும், அது சுறுசுறுப்பு மிகுதியுமுடையதா யிருந்தமையால், துணிவாக ஏறிநடத்த வல்லவரன்றிப், பிறர் அதன்மேலிருக்கத் துணியார். அஃது இன்ன இனத்தைச் சேர்ந்ததென்று தெரிய அக்குதிரையின் பின்னே பொம்மைமேற் சுட்ட தழும்பு ஒன்று இருந்தது. இஃது எவ்வளவு அருமையான சிறந்தவகுப்பைச் சேர்ந்ததென்று அறிந்து கொள்ள நீலலோசனனுக்குத் தன் நேயத்திலேயே இவைகளில் ஒன்றுந் தெரியாது.

அவனும் மீனும்பாளும் பலவேறு செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டே செல்வாராயினர். தான் பெருந்திரளான பொருளுக்கு உரிமை யுடையவளாதலால் தானே தனக்குத் தலைவி என்பதும், உறவினர் எவருடைய தலைமைக்குந் தான் உட்பட்டவள் அல்லள் என்பதும், உலகவாழ்க்கையில் எந்தக் காரியத்திலுந் தான் தன் மனப்போக்கின்படி செல்லச் சிறிதுந் தடையில்லை என்பதும், ஏதோ மென்மையாகவுந் தற்செய லாகவுந் தன் வாயினின்றும் பிறந்த சொற்களைக்கொண்டே அவன் உய்த்து அறியும்படியாகப் பேசினுள். இவ்விருவரையும் ஒன்றுசேர்த்த இந்த வழிச்செலவின் முடிவிற் கழிவதாயிருந்தா லும், இப்போதுண்டான நிலையற்ற இந்நேயத்தில் இயல்பாக

விளையும் நம்பிக்கையின்றிச் சிறிதுங் கள்ளங் கவடு இல்லாத தோற்றத்தோடும் இவள் அங்ஙனம் பேசினாளாயினும், இவளிடத்தில் அடக்கஞ் சிறிதுமில்லை யென்றும், மிகுவிரைவிற் பழக்கம் பிடித்துப் பேசுமியல்பினளென்றும் நீலலோசனன் நினையாமலிருக்கக்கூடவில்லை. ஆகவே, அவன் கண்கள் இவள் அழகை வியந்து பாராட்டினாலும், அவன்நெஞ்சம் முதலிற் கண்டபோது சில நொடிநேரமே உண்டான அதன் கவர்ச்சியில் அகப்படாது வேறாய் நின்றது. இங்ஙனம் அவன் இதனை உணர்ந்து அறிந்தபின், இந்தக் காரணம் பற்றியே இவளிடத்தில் அவன் பின்னும் மிகுதியாய் நேர்மை பாராட்டி வந்ததன்றியும், அழகிற் சிறந்த நங்கை ஒருத்தியொடு வழிச் செல்ல நேர்ந்த ஓர் இளையவிடலை பின்பற்ற வேண்டிய அடக்க வொடுக்கத்தில் தான் எங்கே தவறிப் போவதாகக் காணப் படுமோ என்றும் அஞ்சினான்.

வெயிலும் உழைப்பும் மிக்க பகற்காலத்தின் கிளர்ச்சி தணிந்து மசங்கல் மாலைப்பொழுது நாற்புறமும் வளைய, அப்போதுதோன்றும் மங்கலான வெளிச்சம் மென்மையாய் ஓசையின்றி அமைதி செய்யுந் தன்மையோடும்வரவர, மீனம்பாளின் குரலொலியும் மெல்லிதாயிற்று—அவள் சொற்கள் உருக்கம் மிகுந்துவந்தன—அவள் அந்த மாலைப்பொழுதின் செயலை உணர்வதுபோற் றோன்றினாள்; நீலலோசனன் தான் அறியாமலே, இவர்களின் உரையாட்டு எந்த வழியாகவோ காதலைப் பற்றி நடைபெறுவதாயிற்று; மீனம்பாள் மெல்லெனப் பெருமூச்செறிந்து அதனைத் தான் சிறிது உணர்ந்ததேயல்லாமல், அதன் சுவையைத் தான் நுகர்ந்து அறிந்ததே யில்லையென்று கூறினாள். பொருள் மிகுதியும் உடையளாய்த் தானே தலைவியாயிருந்தும், பொருளைப்பற்றித் தன்னிடங் கூட்டங் கூடினவர்களையன்றித் தனக்கு வேறு நேயர்கள் இல்லாமையுந், தான் இதுகாறும் இல்லறவாழ்க்கையில் ஈடுபடாமையும் புதுமையாய்த் தோன்றுமெனச் சொல்லி, ஆடவர் தன்னைவந்து மணங் கேட்பதில் தனக்கு விருப்பமில்லை யென்றுந், தான் நலமடை

தற்கு ஒத்த ஆடவனெவனையுந் தான் இதுகாறும் எதிர்ப்பட்ட தில்லை என்றுந் தன்கருத்தை எடுத்துரைத்தாள்.

"ஏனென்றால், எந்தேயத்தில் எழுதப்பட்ட புதுக்கதைகளையும், உங்கள் தேயத்தில் உள்ளாரால் எழுதப்பட்ட அழகிய கதைகள் எல்லாவற்றையும் பயின்றதனாலும், எழுத்திலில்லாமல் வாய்மொழியாகமட்டும் வழங்கிவருங் காதற்கதைகள் பலவற்றையுங் கேட்டிருத்தலினாலும், என் மனத்திற்கு அல்லது என் எண்ணத்திற்கு இசைந்தது இன்னதுதான் என்று தெரியப் பெற்றேன்." என்று அவள் பின்னும் மொழிந்தாள்.

"அங்ஙனம் மனத்திற்கு இசைந்தது?" என்று நீலலோசனன் வினவினான். இங்ஙனம் இவன் வினவியது பேச்சினை நீளச் செய்வதற்கே யல்லாமற், சில நாழிகைக்கு முன்னே தான் பழக்கமாகித் தம் ஏவலர் கூப்பிடு தொலைவிற்கு அப்பால் வர, மங்கல் மாலைப்பொழுதிற் பந்தலிட்டாற்போன்ற மரங்களின் நீழலிலே தனிமையில் வரும் இளைஞனும் நங்கையுமான தமக்கு இவ்வுரையாட்டு தக்கதுதானென எண்ணியதனால் அன்று.

அதன்பின் மீனாம்பாள் தன் மனக்கற்பனைக்கு இசைந்த விழுப்பொருள் இத்தன்மையதாக இருத்தல் வேண்டுமென்று சுருங்கச் சொல்வாளாயினள்; எப்போதாயினுந் தன்னாற் காதலிக் கப்படுவானும், அல்லது தன் உள்ளத்தைக் கவர்ந்து தன் செல்வத்தையுங் கையையும் பற்றுதற்கு உரியனுவானும் இன்ன இயல்புடையனு யிருக்கவேண்டுமென்று கூறினாள். தன் றோழிமார்களுள் ஒருத்தியோடாயினும், இவ்வுலகத்தில் இதிற் கவலையேயில்லாத ஒருவனோடாயினும் எங்ஙனம் பேசுவாளோ அங்ஙனமே அவள் தன்னெதிரே யாரிடத்தில் இப்படிப்பட்ட செய்திகளைச் சொல்லுகின்றோம் என்பதனையும் மறந்தாள் போல ஒருவகையான குரலோடும் வகையோடும் அரைவாசி யாழ்ந்த நினைவோடும் பேசிக்கொண்டே சென்றாள். ஆனால், நீலலோசனன் தான் கேட்டதை நம்பக்கூடா விட்டாலுந், தன்னிடத்துப் பிள்ளைமைக்குணமான தற்பெருமையும் மனச் செருக்கும் இல்லாமையால் அவன் தன் மனத்தில் வலுப்பட்டு வரும் ஐயுறவினை உண்மையென்று துணிதற்கு விருப்பமற்ற

வனுயிருந்தாலுங் கடைசியாக அவன் தன்னையே மீனம்பாள் சுட்டிப்பேசுகிறாள் என்பதை உணராம லிருக்கக்கூடவில்லை. அவளோ அவன் உடம்பின் அழகையும் வலிமையையும், அவனுடைய வெள்ளையுள்ளத்தையும் மனத்தேர்ச்சியையும், அவன்றன் உதவியையும் அஞ்சா ஆண்மையையும் விரித்துப் பேசினாள்; இவ்வாறு பேசியபோது, இவள் தனக்கு அவ்வுயர்ந்த ஒழுக்கங்களை நுணுக்கமாய் ஆழ்ந்தறியும் வல்லமை உண்டென்று காட்டாநிற்ப, அவன் தனது உருவப்படத்தையே இவள் இங்ஙனம் எழுதிக்காட்டுகின்றாளெனத் தன் அகத்தே வலிந்துதோன்றிய துணிவினால், தன்னைப்பற்றித் தான் முன் அறியாததனையும் அறிந்து கொண்டான்.

"அப்படிப்பட்டது என் மனத்தாற் கருதப்பட்ட விழுப் பொருள், ஐயநீலலோசன, இவ்வுலகத்தில் அதற்கிசைந்ததோர் உயிர் இருக்கின்றதெனை நினைக்கிறீரா? இருக்குமானால் அத் தன்மையதான அதன் உள்ளத்தை யான் கவர்ந்துகொள்ள ஆவலுற் றிருக்கின்றேன்" என்று மீனம்பாள் முடித்துக் கூறினாள்.

ஓரிமைப் பொழுது அப்பௌத்த இளைஞன் எக்கச்சக்க மான தன் நிலைமையை உணர்ந்தான்: ஆயினும், மறுபொழு தில் அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "மீனம்பாள் பெருமாட்டியின் கவர்ச்சியும் உள்ளத் தேர்ச்சியுந், தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட எப்படிப்பட்ட நெஞ்சத்தையுங் கவர்வது திண்ணம்" என்று மகிழ்ச்சி தரும் முகமனுரை மொழிந்தான்.

மீனம்பாள், நடுங்கிய மகிழ்ச்சியும் வெற்றிக்குறிப்பும் ஐயுறவுங் கலந்த ஒருபார்வையை நீலலோசனன் மேல் வீசிய போது, அதனை அவன் தெரிந்து கொள்ளுதற்குப் போதுமான வெளிச்சம் இன்னும் இருந்தது; அதன்பிற் சிறிது நேரங் கழித்து அவள், தன் ஆவலின் முதிர்ச்சியைத் தெரிவிப்பதாய் ஆழமுஞ் செழுமையும் வாய்ந்த குரலோடும், "அவ்வளவு இனி மையான நினைவிலே யான் மகிழ்ச்சியடையத் துணியலாமா? யான் நினைத்த பொருள் அகப்பட்டால் என்னைப்போலவே

அதுவும் என்பால் அன்பு பாராட்டுமென யான் மனப்பால் குடிக்கலாமா?'' என்று பேசியபோது, அவளது சொல்லின் ஓசை மிகவுங் குறைந்து போனமையால் அச்சொற்களை நன்ருகப்புலப்படவில்லை.

"பெருமாட்டி, நீங்கள் கொண்ட நினைவு ஒப்புயர்வில்லாததாய் இருத்தலின், அதைப்போல்வது உண்மையிற் கிடைத்தல் எளியது அன்று.'' என்று நீலலோசனன் களிப்புடன் சிரித்துக்கொண்டே மறுமொழி புகன்ருன். இவ்வாறு அவன் களிப்பொடுபேசியது, அந்நங்கையின் நினைவைத் தான்தெரிந்து கொண்டதாக எண்ணக்கூடிய குற்றந் தன்னைவிட்டு விலகுதற்காகவே யன்றி வேறில்லை.

உடனே மீனும்பாள், "அந்தநினைவினை யொப்பது உண்மையில் அகப்பட்டிருக்கின்றது,'' என்று மொழிந்தாள்; அப்போது அவள் ஏறியிருந்த குதிரை நீலலோசனன் குதிரையின் பக்கத்தே நெருங்கிவந்தமையால், மிக உருக்கத்தோடும் மெது வாய்ப்பேசிய அவள் சொற்கள் நன்கு புலப்பட்டன.

"நல்லது! அதோ எதிரே விளக்கு வெளிச்சந் தோன்றுகின்றது! நாம் இன்றிரவு தங்குதற்கென்று நீங்கள் முன்னமே தெரிவித்த கோபுரம் அதுதான் என்பதில் ஐயம் இல்லையே? நங் குதிரைகளை முன்னே செலுத்துவாமாக, ஏனென்ருற் சென்ற இரண்டு மூன்று நாழிகையாக நாம் வழியில் தங்கித் தங்கி வந்தாம் என நினைக்கின்றேன்.'' என்று சடுதியிற் கூறினன்.

இருண்டு கொண்டு வரும் அம்மாலைப் பொழுதின் இடையே மின்னல் தோன்றுவதையொப்பப் பார்வை ஒன்று வீசியது—சுறுசுறுப்பாக அசைந்து தோன்றிய அப்பார்வையானது மீனும்பாள் கண்களினின்றும் புறப்பட்டு நீலலோசனன் முகத்தின்மேற் பட்டது; தன் சொற்களால் அவன் உள்ளத்திற்ருேன்றியது இன்னதென்று அறியவுந், தான் அவனுற் பராமுகமாக எண்ணப்பட்டனளோ, அல்லது தான் பேசியதெல்லாம் அவனைச்சுட்டியே என்பதை அவன் தெரிந்து கொள்ளத் தன்சொற்கள் தெளிவாயிருந்தனவோ என்று தெரி

யவுமே அப்படி நோக்கினாள். ஆனால் அவனோ அப்பார்வையை உன்னிக்கவேயில்லை; அதே நேரத்தில் தான் சொல்லியதற்கு ஏற்பவே தன் குதிரையைக் காலால் நெரித்து முன்னுக்குநடத்தினான். அப்பொழுது மீனும்பாள், "நான் சொல்லிய கோபுரம் அதுவன்று: அதற்கு நாம் இன்னும் இரண்டுநாழிகை அளவு முன்னேறிப்போக வேண்டும். அந்த விளக்கு வெளிச்சம் ஓர் ஏழைக்குடிசையில் உள்ளது; இதற்கு முன் ஒருமுறை நான் இவ்வழியில் எதிர் முகமாய்ச் சென்றிருக்கின்றேனாகையால், இங்குள்ள ஒவ்வோரிடமும் என் நினைவிலிருக்கின்றன" என்றாள்.

அதற்கு நீலலோசனன், "ஆயினும், இந்தக்குடிசையில் நாம் சிறிது நேரமாவது தங்கவேண்டும்: அதனால் நம்முடைய குதிரைகளைத் தீனியூட்டி இளைப்பாற்றுவிக்கலாம்: ஏனெனில், அத்தகைய தீனியில்லாமல் நங் குதிரைகள் இந்நாள் முழுதும் அடைந்த உழைப்பின் மிகுதியால் இன்னும் இரண்டு நாழிகை வழிகூடப் போவதற்கு ஏலாதனவாயிருக்கின்றன." என்று மறுமொழிதந்தான்.

அதற்கு மீனும்பாள் "ஐய நீலலோசன, நீங்கள் விரும்புகிறபடியே ஆகட்டும்." என்றுகூறிப், பின்னும் புன்சிரிப்பொடு "நீங்கள் என் வழித்துணையாக இருப்பதால் நாம் செல்லவேண்டிய வகைகளைப்பற்றி நீங்கள்தாமே கட்டளையிடவேண்டும்" என்றாள்.

நாலாம் அதிகாரம்.

கோபுரம்

விரைவில் அந்தச் சிறிய குடிசையண்டை எல்லாரும் போய்ச்சேர்ந்தார்கள்; அவ்விடத்திற் கிடைக்கக்கூடியதான ஒரே ஒரு விடுதியில் வழிப்போக்கரான இவர்கள் எல்லாருந் தங்கினார்கள். அவர்கள் குதிரைகளை விட்டுக் கீழே இறங்கினவுடன்

வியாக்கிரவீரன் தன் தலைவன் பின்னே அவ்விடுதியினுள் நுழைந்தான். அவ்வாறே அப்பணிப்பெண்கள் இருவருந் தம் தலைவியின் பின்னே சென்றார்கள். கேசரிவீரனோ குதிரைகளுக்குத் தீனி செவ்வையாக வைக்கப்படுகிறதா என்று பார்க்க வெளியிலேயே தங்கியிருந்தான்; ஏனென்றால், அவ்விடுதியில் இந்த ஆறுகுதிரைகளுக்குந் தீனிதர ஓராளுக்குமேல் இல்லை.

அவ்விடுதியி லிருந்த அக்குதிரைக்காரன் நுண்ணிய பார்வையுஞ், சூழ்ச்சி வாய்ந்த முகமுஞ், சுருங்கின தோலுமுடைய கிழவனாயிருந்தாலுந், தன் உணர்ச்சி குறையாதவனாயுந் தன் தொழிலுக்குரிய எல்லாவற்றையுஞ் செய்வதற்குப் போதுமான அளவு உடம்பிற் சுறுசுறுப்பு மிக்கவனாயும் இருந்தான். அவன் தன்கையில் ஒரு தீப்பந்தம் பிடித்துக்கொண்டு சென்றான். குதிரை நோட்டத்தில் தேர்ந்தவன் போலவுங், குதிரைகளில் மிகவும் நேர்த்தியானதொன்றைப் பார்க்க விரும்பினவன் போலவும் அவன் முதலில் அந்த ஆறுகுதிரைகளையும் உற்றுப் பிடித்துப் பார்த்தான். அவற்றில் ஒருகுதிரையை ஆராய்ந்து பார்க்கையில், அவன் வாயினின்றுந் திடீரென ஒரு வியப்புச் சொற் பிறந்தது. கேசரிவீரன் அவ்வியப்புச்சொல்லைக் கருதியதுங் குதிரைக்காரனைச் சிலகேள்விகள் கேட்டான். அவர்களின் உரையாட்டு இன்னதென்று நாம் இங்கே சொல்லல் வேண்டாம்: அவ்வுரையாட்டின் முடிவிற் கேசரிவீரன், "இச்செய்திகளை என் அரியநண்பனே, உயிரோடிருக்கும் வேறு எந்த உயிருக்குஞ் சொல்லாதே! வாய்வாளாதிரு. நல்ல பருகுநீரில் நீ விரும்பியது எதுவாயினும் ஒருசாடி வாங்கிவருதற்கு இதோ காசு இருக்கிறது எடுத்துக்கொள்." என்று கூறினான் என்பது மட்டும் இங்கே சொல்லுதல் போதும்.

கேசரிவீரன் அவ்வளவு தாராளமாய்த் தன்கையில் வைத்த பணத்தைக் குதிரைக்காரன் எடுத்துக் கொண்டான்; பிறகு, குதிரைகள் தீனியூட்டப்பட்ட மிச்சம் ஒருநாழிகை வரையிலும், உலகியல் அறிந்த கேசரிவீரன் அக்கிழவன் பக்கத்திலேயே யிருந்தான். திரும்பவுங் குதிரைகள் வழிப்போதற்கு ஒழுங்குபட்டவுடனே நம் வழிப்போக்கர்கள் அவற்றின் சேணத்

தின் மேலேறிப் புறப்பட்டார்கள். இப்படி இவர்கள் முன்னே செல்லுகையிற் கேசரிவீரன் மறைபொருள் அடங்கியதான ஒரு பார்வையைக் குதிரைக்காரக் கிழவன்மேற் செலுத்தினான்.

இங்ஙனம் வழிநடந்து போகையிற், கேசரிவீரன் தன் இளைய தலைவனிடம் மறைவாகப் பேசப் பலகால்முயன்றும், அவனது முயற்சி பயன்படவில்லை. மற்றையோர் உன்னியாத படி இவன் அவனிடம் பேசக்கூடவில்லை; ஏனென்றால், நீலலோசனன் மீனும்பாளிடம் இன்னும் முகமனுரை பேசிக்கொண்டு கூடவேசென்றான். இப்போது இவனே முழுமையும் பேசிக்கொண்டு சென்றான்—அக்குடிசையண்டை வருதற்கு முன் அவள் புகுவித்துப் பேசிய செய்தியையே திரும்பவும் பேசாதிருக்கும் பொருட்டு அவன் பலவகைப்பட்ட பொருள்களைப்பற்றிப் பேசிக்கொண்டே போயினான். அவ்விரவு தாம் தங்கவேண்டிய கோபுரத்திற்குச் செல்லுஞ் சிறிய வழி இவ்வாறு தொலைந்தது.

இனி, அந்தக் கோபுரமோ நாற்கோணமாகக் கல்லினாற் கட்டப்பட்டிருந்தது; அதன்கட் சிறிய சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், அது மங்கலாய் ஓவென்று தோன்றியது. ஆயினும், அதன்தோற்றம் புதுமையாகவேனும் பொல்லாங்குடையதாகவேனுங் காணப்படவில்லை; நாட்டுப் புறங்களில் இருக்கும் மலைநாட்டுத் தலைவர்களுங் குடியானவர்களும் இருக்கும் எளிய இருப்பிடத்தையே ஒத்திருந்தது. இந்தக் கோபுரத்திற்கு உடையவன் நிலங்கள் வைத்திருக்கும் ஒரு செல்வவான் என்றும், இறந்துபோன தன்றந்தைக்கு நேசன் என்றும், அவனுக்குப் பிள்ளையுமில்லை மனைவியும் இறந்தனள் என்றும், அவன் விருந்தினரை ஓம்புங் குணமுடையவனாகையால் நமது வருகையை உவந்து ஏற்றுக்கொள்வான் என்றும் மீனும்பாள் நீலலோசனனுக்குத் தெரிவித்தாள். ஆயினும், ஒருசாளரத்தில் ஒரு விளக்கு மட்டுந்தான் எரிந்துகொண்டிருந்தது; அதனால் அங்கே சிறப்பான உண்டாட்டு இருந்ததாக ஏதும் புலப்படவில்லை. தானும் அம்மங்கையுந் தம்முடன் வந்தோரும் அக்கோபுரத்தண்டையிற் போனபோது நீலலோசனன் இதைக்

குறித்துப் பேசினுன்; அதன்மேல் மீனும்பாள் தன் நேசரான முதியோர் அங்கேயில்லாமல் வெளியே போயிருக்கலாமென்றும், அவர் இல்லாததுபற்றி வீட்டிலுள்ளவர்கள் நம்மை விருந்தேற்றுப் பேணுதற்குச் சிறிதுந் தடையுண்டாக மாட்டாதென்றும் நீலலோசனனுக்குக் கூறினுள்.

அழகிற் சிறந்த அந்நங்கை முன்னறிந்து சொல்லிய படியே ஒவ்வொன்றுஞ் செவ்வையாக நடந்தன. அக்கோபுரத் தண்டையிற் சென்றவுடனே, நன்ருக உடைபூண்டு பார்வைக்கு நல்லனுய்த் தோன்றிய ஓர் ஏவற்காரனுற் கதவு திறக்கப்பட்டது; அவன் மீனும்பாளைத் தெரிந்துகொண்டவுடனே மிக்க அடக்கத்தோடு அவளை வணங்கி வாழ்த்தினுன்; பின் அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மறுமொழி சொல்வானுகித், தன் தலைவன் வெளியே போயிருக்கிருர் என்றும், என்ருலும் அவளும் அவள் தோழியருங் கூடவந்தோருங் கூடியவரையில் விருந்தோம்பப்படுவர் என்றும் புகன்ருன்.

அதன்பின் அவர்கள் கோபுரத்தினுள்ளே புகுந்தார்கள்; முற்றத்தின் நடுவிலே ஒருகுதிரைக்காரன் குதிரைகளையெல்லாம் நிறுத்திக்கொண்டான்; பார்வைக்கு நல்லதோற்றமுடையனுய் வந்த ஏவற்காரன் அவனுக்குக் கூடவிருந்து உதவிசெய்தமையால் அவ்விடத்திற்கு இரண்டு ஆண்மக்களே இருந்தாரென்பது தோன்றிற்று. என்ருலும், விருந்தினரை ஓம்புதற்கு அங்கே வேறு இரண்டு பெண்மக்களும் இருந்தார்கள். மீனும்பாளும் நீலலோசனனும் நல்லதோர் அறைக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்கள்; மற்றுக் கேசரிவீரனும் வியாக்கிரவீரனும் அம்மங்கையின் பணிப்பெண்கள் இருவரும் வேருேர் அறைக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

அந்தப் பௌத்தஇளைஞனும் மீனும்பாளும் புகுந்த அறையிலே மிகவுஞ் சிறந்த உணவு மிகுவிரைவிற் கொண்டுவந்து வைக்கப்பட்டது. பலவகையான பதமாய்ச் சமைத்த மான் இறைச்சியுஞ், சிறந்த காட்டுக் கோழிக்கறியும், மிகச் சுவைப்பதான தாராக்கறியும், மீனும், வேட்டமாடிக் கொணர்ந்தவற்றின் இறைச்சியும் அங்கே தட்டுகளில் வைக்கப்பட்டிருந்தன.

இனிய தின்பண்டங்களும் வைக்கப்பட்டிருந்தன. பருகுவதற்குத் தேநீர்களுங் கொடிமுந்திரிப் பழச்சாறும் இருந்தன. மேசையின் நடுவிலே காட்டுத்தேன் நிரப்பிய பீங்கான்றட்டு ஒன்று இருந்தது. மீனும்பாள் உள்ளக்களிப்போடும் பணிவோடும் விருந்து பரிமாறுதற்குத் தலைப்பட்டாள்: சிறந்த முகமனுங் கவர்ச்சியும் வாய்ந்த நடையொடு தானே விருந்தோம்புதற்கு முயன்றாள். இவள் இப்போது பேசிய திறமையும் இனிமையும் பொருந்திய மொழிகளாலும், இவள் காட்டிய மாயங்களாலும், இவளுடைய சில முரட்டுத்தனமான நெஞ்சழுத்தத்தைப்பற்றி முன் தான்கொண்ட நினைவையும் நீலலோசனன் மறந்துபோனான். தான் மயக்கந்தருவதில்லாக் குடிநீர்களையே அருந்துவது வழக்கமாயிருந்தாலும், அன்று வழிவந்த களைப்பினைப் போக்குதற்கு நறவு அருந்துதல் கட்டாயமாயிருக்கின்றதெனப் புன் சிரிப்பொடு சொல்லிக்கொண்டே மீனும்பாள் தன் கிண்ணத்தில் அதனை நிரப்பினாள்; மேலுந், தன் நண்பரான அவ்வீட்டின்றலைவர் இல்லாத நேரத்தில் தானே அவனுக்கு விருந்து செய்யநேர்ந்தமையால், விருந்தூட்டலின்பொருட்டுத் தானே அவனுக்கு அதனை முன்செய்து காட்டல் வேண்டும் என்றுஞ் சொல்லி, முத்துப்போன்ற தன் அழகிய பற்கள் மாசற்று விளங்க நகைத்தாள். இவ்வளவு உள்ளக்களிப்போடும் விருந்து உண்ணச் செய்வதை மறுத்தால் அது தன்பால் ஒப்புரவும் நாகரிகமும் இல்லாநடையாய்க் காணப்படுமே என்று நீலலோசனன் உணர்ந்தான்; உடனே அவள் சொற்படியே தன் கிண்ணத்தையும் எடுத்து நறவை நிரப்பினான். பிறகு, அக்கிண்ணத்திலுள்ள அதனைப் பருகினான்: பருகியவுடன் அவன் மிகவுங் களிப்பொடு சிரிக்கத் தொடங்கினான்—அவனது பேச்சு மிகுந்த சுறுசுறுப்புடையதாயிற்று: தானே மீனும்பாளுக்கு முகமனுரைகள் மொழியக் கண்டான்—அவன் தன்னைத் தடுக்கமுயன்றான்; ஏனென்றால், அவள் தன்உள்ளத்தைச் சிறிதாயினுங் கவர்தற்கு உரிய இயல்பு வாய்ந்தவளாய் இல்லாததனால், தான் இங்ஙனம் நடப்பது மடமையும் பிழையும் ஆகுமென்று உணர்ந்தான். ஆனால், அவன் அறிவு குழம்பியது; தன் வாழ்நாளில் இம்

முதல்முறைதான், தானே பொருளறியக்கூடாமற் பேசுந் தன் சொற்குப்பையிற் கிடந்து தடுமாறினான்; இவ்வாறு நிகழ்ந்ததை விட்டு வேறுபோக்கிடம் இல்லாமையாற், கடைசியாக நடந்தது நடக்கட்டுமென்று ஒருவகையாய்த் துணிவுகொண் டிருந்தான். அவன் மூளையில் மயக்கமேறியது: பொன்னிறமான மூடுபனி தன்னை வந்து கவிவதுபோற் றோன்றியது; ஆயினும், மேசையின் எதிர்ப்பக்கத்தே யிருந்த மீனும்பாளின் ஒளிமிகுந்த கண்கள் காதல் நிரம்பினவாய்த் தன்னை அதன் ஊடு உற்றுநோக்குவதைப் பார்த்தான். தான் விருந்தேற்றுப் பேணும் நிலையிலுள்ளாதனால் அதனை முற்றுஞ் செய்வாள்போல, அங்கே பலகைமேற் செவ்வையாகப் பரப்பிவைத்த பொறுக்கான செழுந் தின்பண்டங்கள் அத்தனையும் அவன் உண்ணும்படி அவள் வற்புறுத்தினாள்; கடைசியாக அங்கு இருந்த காட்டுத்தேனையும் மிகுதியாகப் பருகும்படி தானே அதனை அவனுக்கு எடுத்துக் கொடுத்தாள். இதற்கு முன் நீலலோசனன் அதனைச் சுவைத்துப்பார்த்ததே இல்லை. அது நாவுக்கு மிகவுஞ் சுவையுடையதா யிருந்ததனாலும், அவ்வீட்டுத் தலைவனுக்கு ஈடாக நின்று விருந்தேற்றுப் போற்றும் நிலையிலுள்ள அழகிய நங்கையின்கட்டாயத்தைமறுத்திடாமல் அதற்கு இணங்கவேண்டியிருந்ததனாலும் அவன் இக் காட்டுத்தேனைப் பருகினான். தனக்குமுன் மூடுபனிபோற் றோன்றிய மங்கிய தோற்றமானது வரவர அவனை மிகுதியாகச் சூழ்வதுபோற் காணப்பட்டது—அதன் ஊடே அம்மங்கையின் விழிகள் அவனை உற்றுப் பார்த்தபோது, அவை மிகுதியும் விளக்கமுற்று வந்தன—அவன் அவளைப் பார்க்கப் பார்க்க அவள் சொல்லுக்கடங்கா அழகு உடையளாய்த் தோன்றினாள்; அவள் தன் இனிமைவாய்ந்த குரலோடும் "நீலலோசன, நீரே என் மனத்தாற் கருதப்பட்ட விழுப்பொருள்—நான் உம்மைக் காதலிக்கின்றேன்" என்று திடீரெனச் சொல்லியபோது அவனை ஒருவகையான மயக்கம்வந்து பற்றியது.

அதற்குத் தான் ஏதுமறுமொழி சொன்னதென்பதை அவன் அறிந்திலன்: இதற்குப் பின்னும் அவன் அதனை நினைவுக்குக் கொண்டுவரக் கூடவில்லை— ஆயினும் மீனும்பாள் நோக்

கத்திற்கும் விருப்பத்திற்கும் இசைந்ததாகத், தான் ஏதாவது சொல்லி யிருக்கவேண்டும் என்னும் கலங்கிய மங்கலுணர்ச்சி மட்டும் உடையனானான்; ஏனென்றால், "என் அன்புள்ள காதலனே, உமது சொல்லுறுதிக்கு ஈடாக இன்னும் ஒரு கிண்ணங் கொடிமுந்திரிப்பழச் சாற்றை அருந்தும், அருந்தும்!" என்று அவள் உரத்துக்கூவியதை அவன் தெளிவாக நினைவு கூர்ந்தான்.

அதன் பிறகு அவள் மேசையைச் சுற்றிப்போனாள்: திரும்பவும் அவன்கிட்ட வந்தாள்—அதன்பின் அவனது கிண்ணத்தில் அச்சாற்றை நிரப்பினாள்; அப்பாற் கீழேகுனிந்து அவன் தொடைப்புறத்தில் தொங்கவிட்டிருந்த கத்தியைத் தொட்டு, "இதோ உமது பக்கத்திலிருக்கும் இந்தக் கொடுவாளானது, நீர் சண்டைமுகத்தில் வெற்றி பெறும்படி கடவுளை வேண்டுபவளும், நீர் வெற்றிபெற்றுப் பெருஞ் சிறப்பொடு மீண்டுவருங்கால் நும்மைத் தன் வீட்டிலே இறுமாப்போடு எதிர் சென்று அழைப்பவளுமான நுங்காதலியின் பொருட்டு உறையினின்றுங் கழிக்கப்படுவதாக! பெருந்தகைமை யுள்ள நீலலோசன, நீர் அணிந்திருக்கும் இந்தப் போர்ப்படையை என்னுடைய வாய்முத்தங்களால் தூய்தாக்குகின்றேன்." என்று சொல்லிக்கொண்டே காதல் நிறைந்த தன் கண்களால் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

இங்ஙனம் பேசிக்கொண்டே மீனாம்பாள் இளைஞனை நீலலோசனன் பக்கத்தில் தொங்கிக்கொண்டிருக்குங் கொடுவாள் மேல் தன் அழகிய தலையைக் குனிந்தாள்; அதனைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு தான் ஒரு சிறு பெண்போலவும் அது தான் விளையாடுங்கருவி போலவுங் கருதிச் சில நொடிநேரம் அதனோடு விளையாடுவது போற் காணப்பட்டாள். அதன்பிற் சடுதியிலே எழுந்துநின்று, "இப்போது, என் நீலலோசன, இக்கிண்ணத்திலுள்ள இச்சாற்றைப் பருகுவதால் நுமது சொல்லை உறுதிப்படுத்தும்." என்று உரத்துக் கூவினாள்.

இளைஞனை அப்பௌத்தன் தன் அறிவு தன் வழியில் இல்லாதவனாயினான்: மதிமயக்கும் பல்வகை மந்திரக் கவர்ச்சி

யில் அகப்பட்டவனுனன்: அவன் தலையிலும் நெஞ்சிலும் மயக்கம் எறியது; ஓர் அரக்கன் கையில் அகப்பட்ட பிள்ளையானது எப்படி வலிவிழந்து கிடக்குமோ, அப்படியே அவன் முழுதும் அந் நங்கையின் வழிப்பட்டுக் கிடந்தான். அவள் குரலொலி அவன் காதுகளுக்கு இசையொலிபோன் றிருந்தது: அவள் கண்கள் தன்கண்களை நோக்கியபோது அவை இயற்கையி லில்லாத மருட்டும் ஒளி உடையவாய்த் தோன்றின: அவன் தான் மாய முறைகளாற் சூழப்பட்டிருப்பதுபோல் உணர்ந்தான்; உடனே அவன் தன் கையை நீட்டி அவள் தந்த கிண்ணத்தை வாங்கிக்கொண்டான். அப்படி வாங்கின அதேநொடியில் தாமிருக்கும் அறைக்கதவு திடீரெனத் திறந்தது: உடனே மீனும்பாள் சிலஅடிகள் பின்வைத்துக் குதித்தாள்—நீலலோசனன் தான் இன்னுங் குடியாத அக்கிண்ணத்தை மேசைமேல் வைத்தான்—நம்பிக்கை யுள்ளவனுன கேசரிவீரன் அவன் எதிரே வந்தான்.

அந்தப் பௌத்தஇளைஞன் உடனே தன்னிருக்கையில் நின்றும் எழுந்தான்—இங்ஙனந் தான் எழுந்தது என்ன எண்ணத்தினுலென்பதைத் தானே அறிந்திலன்—நடுவில் இவ்வாறு வந்ததற்காகத் தன் ஏவற்காரனைக் கடிந்துகொள்ளுகிறதா, அல்லது தன்னை ஒரு பேரிடரில் உட்படுத்துவதாகத் தன் அறிவுக்குத் தென்பட்டு வருகின்ற இம் மாயமுறையினின்றுந் தன்னை மீட்கவந்த அவனது வருகையை நல்லது என்று ஏற்றுக்கொள்ளுகிறதா, இன்னதென்று அவனுக்கு ஒன்றுந் தெரியவில்லை. அவன் எழுந்து எதிரே தள்ளாடினுன்; கேசரிவீரன் தன்றோள்களில் அணைத்துக் கொள்ளாதிருந்தால் அவன் கீழே வீழ்ந்திருப்பான். நீலலோசனன் தன் உணர்வை இழந்தான், சுற்றிலும் உள்ள பொருள்கள் எல்லாம் அவனுக்கு வெறும் பாழாய்த் தோன்றின—திரும்பவும் அவனுக்கு அறிவு தோன்றி ஏதோ ஒரு புதிய நிகழ்ச்சி நேர்வதாக அறிவிக்கும் வரையில் அவனுக்கு அவையெல்லாம் வெறும் பாழாய்க் கிடந்தன.

அவன் ஒரு கட்டிலின்மேற் படுத்துக் கிடந்தான்; அவனிருந்த அறையில் ஒரு விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண் டிருந்தது; மேலும், அவன்மேற் குனிந்து கொண் டிருந்த ஓர் ஆடவனது நிழலால் அஃது இன்னும் இருளோவென் றிருந்தது. இந்த ஆள் தன்கையை நீலலோசனன் தோள்மீது வைத்து அவனை எழுப்புதற்காகத் துடித்த குரலோடு, "அன்புள்ள பெருமானே, எழுந்திருங்கள்! பெருமானே நீங்கள் எழுந்திடும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்!" என்று சொல்லி அவற்றை மெதுவாக அசைத்தான்.

நீலலோசனனுங் கட்டிலினின்று எழுந்திருப்பதற்கு முயன்றான்: ஆனால் தன் தலை ஈயக்கட்டிபோற் சுமையாயிருத்தலை உணர்ந்தான்: திரும்பவுந் தலையணைமேற் சாய்ந்து, அபின் தின்ற ஒருவனைப்போல் மங்கலாய் அரைவாசி மூடப்பட்ட கண்களோடும் பார்த்தான். தன்னையெழுப்ப முயல்வோன் இன்னானென்று கூட அவன் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"பௌத்தன்மேல் ஆணை, எழுந்திருங்கள்!" என்று அந்த ஆள் கூவினான்; இன்னும் விரைந்த குரலோடு, "அன்புகூர்ந்து எழுந்திருங்கள்! நீங்கள் பல்வகை இடர்களாற் சூழப்பட்டிருக்கிறீர்கள்!" என்று கூவினான்.

நீலலோசனன் றன் மூளையில் உண்டான குழப்பத்திற்குந் திகைப்பிற்கும் நடுவிலே, ஏதோ இன்னதென்று அறியப்படாத ஓரிடர் வரப்போகிறதென்னும் ஓர் உணர்ச்சிமட்டும் மெதுவாகத் தோன்றிற்று; ஆகவே, பெரும்பாடுபட்டுத் தன்னையே தான் எழுப்பிக் கொண்டான்.

"என்ன! என் நன்றியுள்ள கேசரிவீரன் நீதானோ?" என்று கடைசியாகத் தன் மூத்த துணைவனைத் தெரிந்து கொண்டவன் போல் வினவினான்.

"ஆ! இதோ தண்ணீர்!" என்று கேசரிவீரன் சொல்லிக் கொண்டே கிட்ட இருந்த ஒரு மேசையண்டை விரைந்து போய் ஒரு கைக்குட்டையைத் தண்ணீரில் தோய்த்துக் கொண்டுவந்து தன் இளையதலைவனின் கொதிக்கும் நெற்றி மேற் கட்டினான்.

அதன்பிறகு ஒரு கிண்ணத்தில் தெளிவான தண்ணீரை நிரப்பி, அதனை நீலலோசனன் பருகும்படி வாயிற் கொடுத்தான். கேசரிவீரன் எதிர்பார்த்ததற்கு மேலாகவே அதனைப் பருகினதனால் விளைந்த நன்மைகள் மிகவிரைவில் மேம்பட்டுத் தோன்றின; சில நொடிகளில் நீலலோசனன் தன் முழு உணர்வுந் தனக்கு வரப்பெற்றான். அவன் சுற்றிலும் நோக்கினான்; விருந்தாட்டு நடந்த அறையில் இப்போது தான் இல்லை என்று கண்டான்; இப்போது தானிருப்பது ஒரு படுக்கையறை என்று தெரிந்து கொண்டான்.

“இன்னும் பொழுதிருக்கும்போதே நாம் இவ்விடத்தை விட்டு விரைந்து புறப்படுவம். ஏனெனில், எம்பெருமானே, நாம் இடர்களாற் சூழப்பட்டிருக்கின்றோம் என்பதனை யான் திரும்பவுஞ் சொல்லுகின்றேன்.” என்று கேசரிவீரன் கூறினான்.

“ஆ! உண்மையில் இங்கே இரண்டகம் நடந்திருக்கின்றதா?” என்று சடுதியிற்கூறி, விருந்தாட்டு மேசையின் பக்கத்தே நிகழ்ந்த வெல்லாந் தன் மனத்திற் றிடீரென நினைவுக்குவரவே, “ஆம்—இங்கே அது நடந்திருக்கத்தான் வேண்டும்!” என்று நீலலோசனன் சொல்லுகையில், அவன்கை இயற்கையாகவே தன் கொடுவாட்பிடியை நாடியது.

ஆ! நாடியும் என்னை! அதனை அவன் உறையினின்றும் இழுக்கக் கூடவேயில்லை. மிகுந்த வலிவோடு அதனைப் பிடித்து இழுத்தான்: ஆனாற் பயனில்லை! கத்தியின் இலையும் உறையும் உருகி ஒன்றாய்ப் போனதுபோல, அஃது அவ்வளவு அழுத்தமாக அதனுள்வைத்து இறுக்கப்பட்டிருந்தது. இப்படிச் செய்ததன் கருத்து என்னை? ஒருகாற் பார்த்த பார்வையே அம் மறைபொருள் இன்னதெனத் தெரிவிப்பதாயிற்று. அக்கத்தியின் பிடியிலும் உறையின் மேற்பாகத்திலுஞ் சூழ்ச்சியாய்ச் சேர்க்கப்பட்டிருந்த ஓர் இரும்புக் கம்பியானது, அக்கத்தியை அசைய வொட்டாதபடி இறுக்கிவைப்பதாயிற்று.

“அதனை நான் அவிழ்த்து விடுகிறேன். நாம் இந்தக் கோபுரத்தைவிட்டுப் புறப்படும் முன்னமே, நாம் மூவரும் இப்

படைக்கலங்களைக் கையாளவேண்டியிருக்கும்.'' என்று கேசரி வீரன் கூறினன்.

''வியாக்கிரவீரன் எங்கே?'' என்று நீலலோசனன் வினவினன்.

இக் கேள்விகேட்டு முடிவதற்குள் அங்கே கதவுதிறந்தது, வியாக்கிரவீரனே நேரில் வந்து தோன்றினன்.

''அவள் பாதுகாவலாக வைக்கப்பட்டிருக்கின்றளா?'' என்று கேசரிவீரன் கேட்டான்; இப்படிக் கேட்டபோது இவன் நடத்தையும் பேச்சும், இவன் தான் நன்றாய் அறிந்த அந்நேரத்தின் பரபரப்புக்குத் தக்கபடி சுறுசுறுப்பும் விரைவும் வாய்ந்திருந்தன.

''ஆம், அவள் பாதுகாவலாக வைக்கப்பட்டிருக்கின்றள்—அந்தப் படிறியான பெண்பிள்ளை!'' என்று வியாக்கிரவீரன் மறுமொழி புகன்றன். அமைந்த நோக்கமுள்ளவனுன வீட்டுக்காரனும் மேற்கொண்டு எதுங் குறும்பு செய்யாவண்ணம் அவ்வாறே காலுங் கையுங் கட்டப்பட்டு வலிவிழுந்து கிடக்கின்றன், இனி நாம் குதிரைக்காரனைத்தான் ஒரு கை பார்க்கவேண்டியிருக்கிறது.''

உடனே கேசரிவீரன் விரைந்து ''நாம் இந்தக் கோபுரத்தின் எல்லையைத் தாண்டிப்போவதற்கு முன்னே, நல்லான் தன் கொள்ளைக் கூட்டங்களோடும் வந்து மேற்பாய்ந்து விழாமலிருந்தால் மட்டுமே'' என்று சேர்ந்து பேசினன்.

''ஆ! நல்லானு?'' என நீலலோசனன் திடீரெனக் கூறினன். ''இது கூடுமானதா? அந்த நங்கை—அழகிய மீனும்பாள்.—''

''வாருங்கள் பெருமானே!'' என்று கேசரிவீரன் உரத்துக் கூவி, ''இப்போது இவற்றையெல்லாம் விளக்கிச் சொல்லப் பொழுது இல்லை! உங்கள் கொடுவாள் இப்போது கையாளத் தக்கதா யிருக்கிறது! வேண்டிய பொழுது அதனை எடுத்தாள உங்களுக்குப் பௌத்தன் வலிமை தரக்கடவன்!'' என்று சொன்னன்.

"ஓ! நல்லது! எனக்கு வலிவிருக்கிறது. இப்போது நான் முன்போலவே ஆய்விட்டேன்!" என்று அப்பௌத்த இளைஞன் கூறினன்.

வியாக்கிரவீரன் கையில் வெளிச்சம் ஏந்திவர அவனும் அவன் உடன்வந்த உண்மையாளர் இருவரும் அறையை விட்டு வெளியே புறப்பட்டார்கள். விருந்தாட்டு நடந்தேறிய அறைக்குச் செல்லும் வழியின் எதிரே இவ்வறைக்கதவுந் திறப்பதாக நீலலோசனனுக்கு நினைவுவந்தது. அவ்விருந்தாட்டறையின் கதவு திறக்கப்பட்டபடியே யிருந்தது; அங்கே விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன; தின்பண்டங்கள் இனியவாக வைக்கப்பட்டிருந்த பலகையானது முன் நீலலோசனன் அதன் பக்கத்தில் உட்கார்ந்தபோது இருந்தபடியே இருந்தது; இப்போது அவ்வறையினுள்ளே அவன் பார்வை நுழைந்தபோது, மீனும்பாள் காலுங் கையுங் கட்டப்பட்டுச் சாய்மானமெத்தைக் கட்டிலின்மேற் படுத்துக் கிடக்கவும், அங்கே அவளைச் சிறைப்படுத்துதற்கு வாய்ப்பாக அதனைச் சுற்றிலும் ஒரு கயிறு கட்டியிருக்கவுங் கண்டான்.

உடனே நீலலோசனன் தன் துணைவரை நோக்கி, "நீங்கள் ஏதோ அஞ்சத்தக்க பிழையான எண்ணத்தில் வருந்துவதாகத் தெரிகின்றதே? இந்நங்கைக்குச் செய்த மானக்குறைச்சல் பெருந்திகிலை உண்டாக்குகின்றதே!" என்று கூறினன்.

"நீலலோசன—பெருமான் நீலலோசன!" என்று புலம்பற் குரலோடுங் கூவி, "நான் இவ்வாறு நடத்தப்படுதலைக் காண உமக்கு மனம் வந்ததா!—" என்று மீனும்பாள் உரத்துச் சொன்னள்.

"வந்து விடுங்கள் பெருமானே! சாரணர்கள் மேல் ஆணை வந்து விடுங்கள்! நாங்கள் செய்வது இன்னதென்று எங்கட்குத் தெரியும்." என்று கேசரிவீரன் கடுதியிற் கூறினன்.

இச்சொற்களைக் கேட்டதும் உண்மை தெரிந்து கொள்ளுதற்கு இப்போது நேரமில்லையென்பது அந்தப் பௌத்த இளைஞன் மனத்திற் பட்டது; உடனே அவன் மிகக்கடுகித் தன் துணைவர் பின்னே படிக்கட்டின்கீழ் இறங்கினன். அவர்கள்

வீட்டு முற்றத்திற்குப் போய், அங்கிருந்து குதிரை நிலையத்திற் சென்று, அங்கே அதனை அடுத்த ஓர் அறையில் வைக்கோற் படுக்கைமேற் கிடந்து உறங்கின குதிரைக்காரனைப் பார்த்தார்கள்.

"இப்படிச் செய்வதைவிட இவ் வாளிடத்தில் நாம் வேறொன்றுஞ் செய்யவேண்டுவதில்லை" என்று கேசரிவீரன் சொல்லிக் கொண்டே அவ்வறைக்கதவை இழுத்துச் சாத்தித் தாழ்க்கோல் இட்டான்.

அந்த மூன்று குதிரைகளும் விரைவிற் சேணமுதலியன இடப்பட்டன; அதன்பின்பு அவைகள் வீட்டு முற்றத்திற்குச் செலுத்தப்பட்டன: உடனே வியாக்கிரவீரன் பருமனை ஒரு சாவியைக் கொண்டு வந்து பூட்டைத் திறந்து பெரியவாயிற் கதவுகளையும் மலரத் திறந்தான். அடுத்த நொடியில் இந்த மூன்று வழிப்போக்கர்களும் அந்தக் கோபுர எல்லையைத் தாண்டிப் போயினர்கள்.

"இப்போது நாம் நம் விருப்பப்படி செல்ல வேண்டியதுதான். ஏனென்றால், ஏமாற்றிக் கொண்டுவரப்பட்ட நாம் இந்த மலைநாட்டிடங்களைப் பற்றிச் சிறிதும் அறியோமாகலின்" என்று கேசரிவீரன் சொன்னான்.

அவ்விடத்தை விட்டு அவர்கள் கடுகிச் சென்றார்கள்; அவர்கள் அவ்வாறு குதிரைகளைக் கடுகச் செலுத்திக்கொண்டு சென்றமையால், நீலலோசனன் தான் தெரிந்து கொள்வதற்கு மிக்க ஆவலோடும் எதிர்பார்த்திருந்த செய்திகளைத் தெரிந்து கொள்ள இடமில்லாமற் போயிற்று. ஆயினும், அவன் இன்னுந் தன் நினைவின் வழிப்பட்டே யிருந்தான். தான் வருங்காற் கோபுரத்தின்மேல் விருந்தாட்டறையின் கதவுகள் திறக்கப்பட்டிருந்தபோது, தன் துணைவர்கள் ஏதோ பிசகான எண்ணத்தால் தவறு செய்துவிட்டார்கள் என்று நடுங்கினனாயினும், அக் கோபுரத்திற்கு நல்லான் தன் கள்வர்கூட்டத்தோடும் வரப் போகிறானென்பதைத் தன்னவர் எப்படி யறிந்தார்கள் என்று தான் தெரிந்திலனாயினும், பின்னர்ச் சிறிதுநேரத்தில் எழுந்த ஆழ்ந்த எண்ணத்தினால் அவர்கள் செய்தது பொருத்தமாகத்தா

னிருக்க வேண்டுமென்றும், அங்கே ஏதோ இரண்டகம் நடந்திருக்க வேண்டுமென்றும் அவன் இனிதுணர்ந்தான். இன்னும், அந்நங்கை ஏதோ தீதான கருத்துக் கொண்டிருந்தாளென்பது, உறையினுள்ளே கொடுவாளானது இறுகப் பிணிக்கப்பட்டிருந்தமையினாலேயே நன்கு விளங்கிற்று: பின்னும், அவள் எவ்வளவு சூழலாகத் தன்படைக்கலத்தைப் பயனற்றதாகச் செய்யும் இசைவான நேரத்தை நாடித், தன்பக்கத்தே உணப்பொருள் நன்றாகப் பரப்பிய மேசையின்மேற் குனிந்து, தன் கொடுவாளை முத்தமிட்டு விளையாடுவாள் போல் மாயங் காட்டிய செய்கை முழுதும் நீலலோசனன் நினைவு கூர்ந்தான்.

அது மிகவும் இனியதோர் இராப்பொழுதா யிருந்தது; வானம் எங்கும் வான்மீன்கள் தொகுதிதொகுதியாக நிறைந்து, வெள்ளிய மதியினை இனிது பின்பற்றி நின்றன. அஃது ஏறக்குறையப் பகற் காலத்தைப் போல் அவ்வளவு வெளிச்சமுள்ளதாக இருந்தது; நீலலோசனனும் அவன் துணைவருங் குதிரைகளைக் கடுகச் செலுத்திக் கொண்டு போகும் அங்குள்ள நிலத்தோற்றம் எல்லாம் வெண்மையான ஒளிவெள்ளத்தின்கண் முழுகினாற்போலத் தோன்றின. இங்ஙனம் ஒரு நாழிகைநேரம் வரையில் இவர்கள் கடிவாளத்தை இழுத்துப் பிடியாமலே குதிரையூர்ந்து சென்றார்கள்—கடைசியாக ஒரு பட்டினத்தின் கட்டிடங்கள் அவர்கள் காட்சிக்குத் தென்பட்டன. இன்னும் அவர்கள் அப்பட்டின எல்லையில் வரும்வரையிற் குதிரையின் கடுநடையைக் குறைக்கவே யில்லை: அவ்வெல்லைக்கு வந்தபிறகுதான் தாம் செல்வனே வந்து சேர்ந்ததாக உணர்ந்தார்கள். சுருக்கில் வகையான ஒரு சத்திரத்தண்டை வந்து சேர்ந்தார்கள்: அச்சத்திரத்தி லுள்ளவர்க ளெல்லாரும் நெடுநேரத்திற்கு முன்னமே உறங்கப் போனார்களாயினும், புதியராய் வந்தவர்கள் கூப்பிட்டவுடனே எழுந்து வந்து உதவினார்கள். குதிரைகள் நிலையத்திற் சேர்ப்பிக்கப்பட்டன; நீலலோசனனுக்கும் அவன் துணைவர்களுக்கும் இசைவான தக்க அறைகள் ஒழுங்குசெய்து தரப்பட்டன.

இப்போது கடைசியாக நீலலோசனன் தான் அறிந்து கொள்ளுதற்கு மிக விழைந்த செய்திகளைத் தெரியப்பெறுதற்கு நேரம் வாய்த்தமையால், அவைதம்மைத் தெரிந்து கொள்ளாமல் அவன் படுக்கைக்குச் செல்லக்கூடவில்லை. இராக்காலத்திடையிலே கடுகக் குதிரையூர்ந்து வந்தமையால், நீலலோசனனிடஞ் சிறிது தங்கியிருந்த தூக்கமயக்கமும் பறந்துபோயிற்று; இழைந்தாற் போன்ற சிறிய தலைவலியைத் தவிரக் கட்குடி மயக்கத்தால் விளையுந் தீங்கு பிறிதொன்றும் அவன் அடையவில்லை. கேசரிவீரனும் வியாக்கிரவீரனும் அச்செய்திகளைத் தெரிவிப்பதற்கு விருப்பம் அற்றவ ரல்லர்; பிறகு, அச்சத்திரத்திற் றம் இளைய தலைவனுக்கென்று விடப்பட்ட அறையின் கண்ணே அவ்விருவரும் உறங்கச் செல்லுதற்குமுன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

"அஃதெப்படியோ நான் அறியேன், முதலிலிருந்தே அந்த நங்கையை நாம் தலைப்படநேர்ந்ததில் எனக்கு விருப்பமே இல்லை. ஒருகால் நீலகிரி நகரத்திற்குச் செல்லும் பாட்டையில் நம்மை விடுவதாகப் பொய்கூறிய அச்சுடுமூஞ்சிக் குடியானவனைப் பற்றி யான் கொண்ட வீண் நம்பிக்கையாலும் ஐயுறவாலும் எனக்கு அஃது அப்படித் தோன்றியதோ, மாட்சிமை தங்கிய தாங்கள் யான் சொல்வதை மன்னிக்கவேண்டும். தாங்கள் துணைவருவதானால், தான் அதற்கு இசைவதாக அந்த நங்கை எளிதிலே இணங்கிக் குறிப்புக் காட்டியதில் ஏதோ ஒரு புதுமை யிருப்பதாக எனக்குத் தோன்றியது. மேலும், பெருமானே, தங்களைத் தன்வழிப் படுத்துவதற்காக அவ்வம்மை தங்களைப் பார்த்த பார்வையும் என் கருத்தைவிட்டு அகன்றிலது. என்றாலுந், துணியப்படாத ஒருவகை மனக்கலக்கத்தைத் தவிர வேறு ஒன்றும் என் மனத்தில் தோன்றவில்லை—உண்மையைச் சொல்லுமிடத்து, அதற்காக என்னையே நான் நொந்து கொள்ள வேண்டியவனா யிருக்கிறேன்; ஏனென்றால், மாட்சிமை நிறைந்த தாங்கள் உலகத்தில் மிக விழிப்பாகவுள்ள மக்கள் வகுப்பில் என்னைச் சேர்த்திருக்கிறீர்களன்றோ?" என்று கேசரிவீரன் கூறினான்.

நீலலோசனன் புன்சிரிப்போடு, "என் நல்ல கேசரிவீர, பின்னுஞ் சொல்ல வேண்டுவதெல்லாஞ் சொல், நான் இது வரையிற் செய்ததைவிட, இனிமேல் உனது கருத்தான நடையை மிகவும் உன்னித்துச் செல்வேன்." என்றான்.

வியாக்கிரவீரன் தன் தலைவன் கூறிய முகமனுரையைப் பணிவோடு ஏற்றுப் பின்வருமாறு சொல்லப் புகுந்தான்:—

"கோபுரத்திற்கு இரண்டரை நாழிகை குதிரையோட்டத்திலிருந்த சிறிய ஒரு குடிசையின் கண்ணே நாம் நம்முடைய குதிரைகளுக்குத் தீனிதருவதற்காகத் தங்கியதை மாட்சிமை நிறைந்த தாங்கள் நினைவுகூர்ந்திருக்கின்றீர்கள். அங்கிருந்த குதிரைப் பாகன் குதிரை நோட்டத்திற் கைதேர்ந்தவனும், நேர்த்தியான குதிரையைப் பாராட்டுகின்றவனும் ஆன சூழ்ச்சி மிக்க ஒரு கிழவன். அவன் தன் கையிற்கொண்டு வந்த வெளிச்சத்தினாலே குதிரைகளை ஆராய்ந்து பார்த்து வருகையில், அந்த நங்கை ஏறிவந்த அழகிய குதிரையின் பொம்மையிலே வைக்கப்பட்ட சுடுதழும்பைப் பார்த்தான்; உடனே, அவன் வாயில் வியப்போடுங்கூடிய சிலசொற்கள் சடுதியிற் பிறந்தன. உடனே யானும் அவனை என்னவென்று வினவினேன். முதன்முதல் அவன் என்மேல் ஐயப்பட்டான். மாட்சி நிறைந்த தாங்கள் இப்போது தெரிந்து கொள்ளப்போகுஞ் செய்திகளால், அப்படிப்பட்ட நிலைமையில் அவன் ஐயுறவுகொண்டது இயற்கையேயாகும் என்பது விளங்கும். ஆயினும், நான் அக்குதிரைக்காரக் கிழவனுக்கு நாங்கள் உண்மையுள்ள மாந்தர்கள் என்று மெய்ப்பித்துக் காட்டினேன். அவனுக்குக் கைக்கூலி கொடுப்பதாகப் பின்னுஞ் சொல்லுறுதி செய்து, அவன் வாயினின்றே எல்லாச் செய்திகளுந் தெரிந்து கொண்டேன். சுருக்கச் சொல்லுங்கால், எம்பெருமானே, அந்த நங்கை ஏறிவந்த அழகிய குதிரை திருடர்தலைவனை நல்லானுக்கே உரியது."

உடனே நீலலோசனன் "ஆ!" என்று இறும்பூதுற்று, "அப்படியானால் அந்த நங்கை யார்?" என்று வினவினான்.

"பெருமானே, எனக்கு அது தெரியாது. அவள் அவன் மனைவியாகவாவது, உடன்பிறந்தாளாகவாவது, அல்லது வைப்

பாட்டியாகவாவது இருக்கலாம்; எனக்குத் தோன்றிய மட்டில் அவள் கடைசியிற் சொன்னபடியாகத் தான் இருக்கவேண்டும்; ஏனெனில், அவ்வளவு இரண்டகமாக நடப்பவள் நல்லொழுக்கத் துறைகளைக் கடைப்பிடிப்பாள் என்று எண்ண இடமில்லையே. அஃதெப்படியானாலும், அக்குதிரை, ஊரெங்குந் தெரிந்த கள்வர் தலைவனான நல்லானுக்கே உரிய தென்பதை அக்குதிரைக்காரக்கிழவன் தெரிந்து கொண்டது மெய். ஆனால், அவன் அதனைத் தான் எவ்வாறு தெரிந்து கொண்டானென்பதைத் தானும் எனக்கு அறிவிக்கவில்லை; யானும் அதனைத் தெரிந்துகொள்ளக் கவலைப்படவில்லை. தனக்கும் நல்லானுக்கும் ஒருகால் உண்டான தொடர்பினைப் பிறரறியாமல் தன்மட்டில் வைத்திருக்க எண்ணினான் என்பதில் ஐயமில்லை." என்றான் கேசரி வீரன்.

"நல்லது, அம்மறை பொருளை நீ தெரிந்து கொண்டவுடனே, நீ எனக்கு அதனை அறிவியாதது எது காரணத்தால்?" என்று நீலலோசனன் கேட்டான்.

"ஆ, பெருமானே, தாங்கள் அந்நங்கை மீது அறிவுமயங்கியிருந்தீர்கள் என்பதனை யான் காணவில்லையா? அவள் அழகியாயும் நீங்கள் இளைஞராயும் இருந்தமையால் அஃது இயற்கையேயாம்—" என்று கேசரி வீரன் மறுமொழி கூறுதற்குள்;

நீலலோசனன் பதைபதைப்போடும், "புத்தன் அறிய நீ என்னைப் பிழைத்தறிந்தாய்! முதலிற் சிறிது நேரம் யான் மயங்கிய துண்டு—அல்லது யான் கலக்கமுற்ற துண்டு; ஆனால், அவள் பார்வையையும் வகையையும் யான் நோக்கிய அளவில் அவ்வுணர்ச்சி மறைந்து போயிற்று" என்றான்.

கேசரிவீரன் இடைமறித்து, "நல்லது, நல்லது பெருமானே, ஏதோ யான் தங்களைத் தவறுதலாய் எண்ணினேன்—ஆயினும், ஒருபாதி யான்சொல்லிய துண்மைஎன்பதைத் தாங்களும் ஒப்புக்கொள்ள வேண்டியதே; ஏனென்றால், விருந்தாட்டுமேசையின் பக்கத்திலே தாங்கள் அவள் மாயத்தில் முழுதுங் கவரப்பட் டிருந்தீர்களன்றோ! என்றான்.

அதற்கு நீலலோசனன், "நாணத்தோடும் நான் அதனை ஒப்புக்கொள்ளுகின்றேன்." என்று வெட்கமுற்று, "ஒரு கிண்ணங் கொடிமுந்திரிப் பழச்சாற்றை யான் பருகினேன்; அந்நங்கையும் அதனை அவ்வாறே பருகினாள்; எனினும், அக்காட்டு நறவை யான் பருகிய பின்னரேதான் என் பகுத்தறிவு குழம்பலாயிற் றென்பதனை இப்போது நினைவு கூர்கின்றேன்." என்று மறுமொழி புகன்றான்.

"இம்மேற்கணவாய் மலைப்பக்கங்களில் தேனீக்கள் மயக்கந் தருந் தேனையே பூக்களினின்றும் உறிஞ்சுதலால், அத்தகைய தேனானது மக்களுடைய மூளையை மயங்கச் செய்வது ஒரு வியப்பன்று!" என்று கேசரிவீரன் கூறினான்.

"இம்மறைபொருளின் அந்தப்பாகம் இப்போது விளங்கியது. கரவுள்ள அந்தப் பெண்ணானவள் அந்நறவை மிகுதியாக உண்ணும்படி என்னைக் கட்டாயப்படுத்தினாள். விருந்தோம்புவார்போல என்னை அவ்வளவு சூழலாகத் தான்செய்யுங் காரியங்களுக்கு உடம்படுத்தினாள். அன்புகூர்ந்து கேசரிவீர மற்றுஞ் சொல்ல வேண்டுவதைச் சொல்." என்றான் நீலலோசனன்.

நன்றியுள்ள அத்துணைவன் முன்விட்டதிலிருந்து திரும்பவுஞ் சொல்லப்புகுந்து: "மாட்சிமை நிறைந்ததாங்கள் அந்தப் பெண்ணின் மேல் நிரம்பவுங் காமுற்றதாக எண்ணினேனாயினும், குதிரைகள் தீனி யூட்டப்பட்ட குடிசையினின்றும் நாம் வந்தபிறகு தங்களுடன் மறைவிற் பேசப் பலகால் முயன்றேன், அஃதொன்றும் பயன்படாமற் போயிற்று. உண்மையைச் சொல்லுமிடத்துத் தங்களுடன் பேசுவதற்கு இடம் வாய்த்தாலுங்கூட அதனால் எதும் பயன் விளையாதென்றே அஞ்சினேன்; ஏனென்றால், யான் ஐயப்படுதலைப்பற்றித் தாங்கள் தங்கட்குவழக்கமாயுள்ளபடி விளையாட்டாக நகையாடி விடுவீர்களென்றும், நல்லானுடைய குதிரை அம்மாதரிடம் வந்ததற்குப் பலவகையான காரணங்களைக் கற்பித்துக் கூறுவீர்களென்றுங் கருதினேன். எப்படியாயினும், ஒவ்வொன்றையும் உன்னித்துப்பார்த்துக் கருத்தாயிருப்பதற்குத் தீர்மானித்தேன். நாமும்

அந்தக்கோபுரத்தில் வந்துசேர்ந்தோம். தாங்களும் அந்தமாதும் அங்கே விருந்தாட்டறைக்குப் போயினீர்கள். வியாக்கிரவீரனும் யானும் அம்மாதின் தோழிமார்களொடு விருந்துண்டு இருந்தோம். நாங்கள் உணவருந்தும்போது கொடிமுந்திரிப் பழச்சாறுங் காட்டுத்தேனும் எங்கட்குங் கொண்டுவந்து வைக்கப்பட்டன. ஆயினும், யான் காலம்வாய்த்தது கண்டு, அவ்விரண்டையுந் தொடவேண்டாமென்று வியாக்கிர வீரன் காதிற் குசுகுசுவென்று சொல்லிவிட்டேன். அந்தப்பெண்களோ வென்றால் அவற்றைப் பருகும்படி எங்களைக் கட்டாயப் படுத்தினார்கள். நாங்கள் அவற்றை உண்ணோம் என்று மறுத்து விட்டபோது, அப்பெண்கள் ஏதுகாரணத்தால் என்று வினவுவதுபோலத் தம்மில் ஒருவரை ஒருவர் விரைந்து நோக்கியதை யான் கண்டுகொண்டேன். இங்ஙனம், ஏதோ இரண்டகம் நடக்கப்போகிறதென்று கொண்ட என்ஐயம் வலுப்படுவதாயிற்று. கடைசியாக அந்தப்பெண்கள் தங்கள் தங்கள் அறையிற் படுக்கப்போனார்கள்; அவர்கள் அப்படிப் போனபிறகு வியாக்கிரவீரனிடம் என் ஐயங்களையும் அவற்றின் காரணங்களையும் எடுத்துக்கூறினேன். அதன்மேல், நாங்கள் காவலாய் விழித்திருக்க இசைந்தோம்; அப்பாற் குதிரையைப் பார்க்கிறதற்கென்று சாக்குக் காட்டிக், கோபுரத்துள் நடக்கப்போவதையெல்லாங் கண்டறிய அங்கேயுள்ள முற்றத்திற்குப் போனேன். குதிரை நிலையில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது; அதன் கிட்டப் போனபோது சிலர் பேசிய ஒலி கேட்டது. யான் அஃதென்னவென்று உற்றுக்கேட்டேன். அமைந்தநோக்கமுள்ள அவ்விடத்து வேலைக்காரன் குதிரைக்காரனிடம் பேசிக்கொண்டிருந்தான். அவர்கள் பேசுவதிலிருந்து போதுமான அளவுக்கு யான் ஒன்றுந் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. ஆயினும், யாங்கள் ஒருசூழ்ச்சியில் அகப்படுத்தப்பட்டேமென்றும், இருளன் என்னும் பெயருள்ள எவனோ ஒருவன் மிகவும் விரைவாகக் குதிரை ஏறி நல்லான் இருப்பிடங்களில் ஒன்றை நோக்கிப் போயினானென்றும், அவனுடைய கொள்ளைக்கூட்டத்தாரின் ஒரு பிரிவு சிறிதுநேரத்தில் அந்தக்கோபுரத்திற்கு வரு

மென்றும்மட்டும் யான்தெரிந்துகொள்ள கூடிய அளவு அதனினின்றும் உணர்ந்தேன். உடனே யான் வியாக்கிரவீரனிடந் திரும்பி வந்ததும், யாங்கள் விரைவிற் செய்யவேண்டுவன இவையென்று தீர்மானித்தேம். வரப்போகும் இரண்டகத்தைப்பற்றித் தாங்கள் உடனே அறிவிக்கப்படுதல் வேண்டும். யான் விருந்தாட்டறைக்கு ஏறிவந்து, பெருமானே, தாங்கள் அந்த மாயவலையினுள் அகப்பட்டிருத்தலைக் கண்டேன். யானே எல்லாவற்றையும் ஐயுற்றேன் என்னும்படியாய்ச் செல்வேனுனால், அங்கே உள்ளார்க்கு ஐயம் பிறந்து, தீப்பந்தம் முதலான குறிகளாலே கள்வர்கூட்டத்தைச் சடுதியில் வருவித்து நாம் தப்பிப்போகாவண்ணஞ் செய்துவிடுவார்கள் என்னும் அச்சத்தினால், அம்மாதரிடத்திற் பணிவுடையேன்போல வெளிக்குக் காட்டித், தாங்கள் அளவுக்குமிஞ்சி நறவருந்தி விட்டீர்களென்று யான் கருதினேனாகமட்டும் அவள் நம்பச்செய்தேன். அவள் ஒரு படுக்கையறையைக்காட்டினாள். நான் படுக்கப்போகும் வரையில் அவள் அங்குதானே நின்றுகொண்டிருந்தாள். மறுபடியும் யான் வியாக்கிர வீரனிடஞ் சென்று, அவன் செய்ய வேண்டுவன இவையென்று தெரிவித்தேன்.'' என்றான்.

இதன் தொடர்பாக உடனே வியாக்கிர வீரனுஞ் சில சொல்லப் புகுந்து, ''நானும் உடனே அமைந்தநோக்க முள்ளவனை வீட்டுவேலைக்காரனிடம்போய், அவன் ஓரிடத்தில் தனிமையாக வேலைசெய்து கொண்டிருத்தலைக் கண்டேன். உடனே அவனைப்பிடித்து அமுக்கிக் காலையுங் கையையுங் கட்டிப்போட்டு விட்டு, அவனது இடுப்புக் கச்சையிலிருந்த வாயிற் கதவின் சாவிகளை எடுத்துக்கொண்டு வந்தேன்'' என்றான்.

அதைத் தொடர்ந்து கேசரிவீரன்: ''யான்செய்ய வேண்டுவன இவையென்று வியாக்கிர வீரனிடஞ் சொல்லியபிற் சிறிது நேரத்திலெல்லாம், யான் தாங்கள் இருந்த அறைக்கு மெதுவாகப் பதுங்கிக் கொண்டுவந்தேன்; வழியில் அந்தப் பெண்ணை எதிர்ப்பட்டேன். என்னைப்போலவே அவளுந் தங்களறைக்கு வந்துகொண்டிருந்தாள் என்பது தோன்றியது. ஒரு

நொடிப்பொழுது அவள் தடுமாற்றம் உடையவளாய்க் காணப் பட்டாள்; வியாக்கிர வீரன் கோபுரக்கதவுகளின் திறவுகோல் களை அகப்படுத்திக்கொண்டான் என்பது எனக்குத் திண்ண மாய்த் தெரிந்தமையால், யான்கண்ட சூழ்ச்சி செய்து முடிப் பதற்கு வாய்ப்புடையதாயிற்றெனக் கண்டேன். அதன்மேல் அப்பெண் எனது சிறையி லகப்பட்டாள் என்பதனை அவள் அறியச் செய்தேன்; உடனே அவள் தன்வாயால் உரத்துக் கூவத் தொடங்கியபோது, என் கையால் அவள் வாயைப் புதைத்தேன். அதேநேரத்தில் வியாக்கிரவீரனும் அங்கு வந்து சேர்ந்தான்; உடனே அவளை அவனிடம் ஒப்பித்தேன்; அதன் பிறகு தாங்களிருந்த அறையினுட் புகுந்து, தாங்கள் அமிழ்ந்திக் கிடந்த பெருமயக்கத்தினின்றுந் தங்களை எழுப்பினேன். அப் பால் நடந்தன வெல்லாந் தாங்கள் அறிவீர்கள்.'' என்று கூறினான்.

இளைஞனை நீலலோசனன் தனக்கு அவர்கள் புரிந்த பேருதவிக்காகத் தன் துணைவர் இருவர்க்கும் உளங்கனிந்து நன்றிகூறினான். முதன்மையாய் நுண்ணறிவும் முன்னுணர் வும் பொருந்திய கேசரிவீரனது நடக்கையை அவன் மிகவியந்து கூறினான். அப்பால் தன் கட்டிலின்மேற் றுயில்கொள்ளப் போயினான்—சுருக்காக அவனை வந்து கவிந்த உறக்கத்திற் கொள்ளைக்காரர் உருவங்கள் முதன்மையுற்றெழுந்தன; பொன் னிறமான மூடுபனியின் ஊடே காவினளான மீனும்பாளின் அழகிற்சிறந்த முகமானது தோன்றிக் கரிய இறைகளோடு கூடின பெரிய வாள்விழிகளைத் திறந்து அவனைத் திரும்பவும் நோக்குவனபோல் தோன்றின.

ஐந்தாம் அதிகாரம்.

நல்லான்.

பிற்பகற் காலம், நேரமோ மிகவும் ஆயிற்று; நிழல்படர்ந்த ஓரிடத்தில் இரண்டுபேர் புல்லின்மேற் சாய்ந்துகொண் டிருந் தார்கள். அவர்க ளிருவரும் ஒருவரையொருவர் விலகிச் சிறிது சேய்மையில் இருந்தமையால், ஒருவன் மற்றையோனை விடத் தாழ்ந்த நிலையிலுள்ளான் என்பது குறிப்பிக்கப்பட்டதாயிற்று. இருவருங் கள்வர்க்கு உரிய உடை அணிந்திருந்தனர்; என்ரு லும், ஒருவன் அணிந்திருந்தது மற்றையோனதை விட மிக்க விலைபெற்றதா யிருந்தது. இங்கே மறைபொருளாய் வைக்கத் தக்கது ஒன்றுமில்லையாகையால், உயர்ந்தவன் என்று சொல் லப்பட்டோன் நல்லானேயன்றிப் பிறர் அல்லர் என்றுந் தாழ்ந்தவன் என்று சொல்லப்பட்டோன் இருளனேயன்றிப் பிறரல்லர் என்றும் அறிவிக்கின்ரேம். மேற்கணவாய் மலைச் சரிவில் இருக்குங் காடுகளின் நடுவே உள்ள கூடாரத்திற் சந்தி ரன் என்னும் இளைஞன் ஒருவன் உள்ளேபோய்க் கள்வர்தலை வன் ஒருவனைக்கண்டான் என்று முன்னமே யாங் கூறியதை இது பயில்வோர் மறந்திருக்கமாட்டார்கள்; அந்தக் கள்வர் தலை வனே அஞ்சத்தக்க இந் நல்லான் என்று அவர்கள் அறி வார்களாக.

இருளன் என்பவனெடுசேர்ந்து நல்லான் இப்போது புல் லின்மேற் சாய்ந்துகொண்டிருக்கும் இந்த இடமானது, மேற் சொல்லிய காட்டுக்கு மிகவும் நெடுந்தொலைவில் உள்ளது. இவர் களுடைய சுற்றுகுழற் றுப்பாக்கிகள் இவர்கள் பக்கத்திற் கிடந் தன; இவர்களுடைய குதிரைகள் அருகாமையிற் புல்மேய்ந்து கொண் டிருந்தன; இவர்கள் இங்கே தனிமையாக இருப்பது போற் காணப்பட்டனர். அடுத்தாற் போல் உள்ள மரங்களின் நடுவிற் கூடாரம் ஏதும் அமைக்கப்படாமையால், இவர்கள் இவ் விடத்தில் நெடுநேரந் தங்கியிருக்குங் கருத்தில்லாதவர்போற் காணப்பட்டார்கள்.

எண்ணிய எண்ணங்கள் தம் விருப்பப்படி நடந்தேறாமை பற்றி நல்லானுடைய அழகியமுகத்தில் ஒருவகையான துயரக் குறி தோன்றியது; இவன் ஏவல் ஆளான இருளனோ தன் தலைவன் எப்போதும்போல இப்போது தன்னைப்பற்றி உயர் வாக நினைக்கவில்லை என்பதனை உணர்ந்தான்போல் மனத் தளர்வுங் கலக்கமும் உள்ளவனாய்க் காணப்பட்டான். இவர்கட் குள் இதற்குமுன் எத்தகைய உரையாட்டு நடந்ததோ; இப் போது இவர்கள் நெடுநேரம் வாய்பேசாது சும்மா இருந்தார்கள்; கடைசியாக நல்லான் தானே வாய்திறந்து பேசுவானாயினான்; இவன் முதலிற் பேசும்போது வெடுவெடுப்பான குறியோடும், பொறுமையில்லா உடம்பாட்டத்தோடும் பேசினான்.

"இருளா, நீயும் உன் கூடவந்தோர் ஐவரும் பௌத்தர் மூவரால் முழுத்தோல்வி பெற்ற கதையை நீ சொல்லக்கேட் கும்போது யான் விழித்திருக்கின்றேன் என்று என்னையே நான் இப்போது நம்பக்கூடவில்லை; ஈதெல்லாம் எனக்கு ஒரு கனவுபோற் றோன்றுகின்றது எனத் திரும்பத்திரும்ப யான் சொல்லவேண்டுமா?" என்று நல்லான் என்னுங் கொள்ளைக் கூட்டத்தலைவன் கூறினான்.

"எங்கள் துப்பாக்கிகளைக் கையாளவேண்டிய வழியைப் பற்றி நீங்கள் இட்டகட்டளை முதலிலிருந்தே சாவிற் கேதுவா யிற்றென்பதைத் தங்கட்கு விளங்கச் சொன்னேனே." என்று இருளன் விடை பகர்ந்தான்.

"அப்படியானால் அந்தத் துப்பாக்கிகளை நீ பயன்படுத்தி யிருக்க வேண்டும். உயிராகவோ பிணமாகவோ நீலலோசனன் என்னும் அரசிளைஞனைக் கொண்டுவரும்படி கேட்டேன். அவ னைச் சிறைபடுத்தி என் கையகப் படுத்துவதையே யான் மேலாக எண்ணினேன் என்பதும் உனக்குச் சொன்னேனே; ஏனென்றால், அவன் எனக்கு ஏதொரு தீங்குஞ் செய்யாமை யானும், என் வாழ்நாளில் அவனை யான் கண்டதில்லாமை யானும், நான் பச்சை இரத்தம் ஒழுகக் கொல்லுங் கொலை காரன் அல்லனாகலானுந், தக்ககாரணம் இன்றி ஓர் ஆண்மக னுயிரைப் போக்குவதில் எனக்கு விருப்பமில்லாமையானும்

என்பது. ஆயினும், அப்படிப்பட்ட இடரான நிலையில் முதன்மையாய்த் தன்னைக் காக்கவேண்டுவது நேர்ந்தபொழுதில்—'' என்று கொடுஞ் சினத்தோடும் நல்லான் சொல்லி முடிப்பதற்குள்; இருளன் சிறிது வெகுண்டு பதறித், "தலைவனே யான் சொல்லுவதைக் கேளுங்கள்! என் ஆட்களிற் சிலர் துப்பாக்கிகளை எடுத்துச்சுட்டார்கள்: ஆனால், அது சிறிது பிந்திப் போயிற்று—அவர்கள் மிகவுங் கொடுமையாய்ப் புண்படுத்தப் பட்டுப் புறப்பட்டு ஓடிப்போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். சண்டை நடந்த இடத்திற்கு நெடுந் தொலைவிலில்லாத நிலவறையொன்றிலே அவர்கள் கிடக்கிறார்கள்—அவ்விடத்திற்கு உதவிக்காகச் சிலரை விடுத்திருக்கின்றேனென்பது தாங்கள் முன்னம் அறிந்ததே. என்னைப்பற்றியோவென்றால், இதற்கு முன் எனதுபழக்கத்திற் கண்டறியாத வகையாய் நடந்த அச் சண்டையில் எனக்குத் துன்பமாக முடிந்ததென்பதைத் தெரிவித்துக் கொள்ளுவதற்கு யான் தாழவில்லை. மிகத் தொலைப் பட்டு யான் தப்பிப் பிழைத்தேன்; ஆனாலும், போதுமான தொலைவிலிருந்துகொண்டு என் துப்பாக்கியினாற் சுட்டு அவ் விளைய நீலலோசனனைப் பிடித்துக்கொண்டாவது வரக்கூடு மென்று யான் எண்ணியும் அதிலும் யான் தவறிப்போனேன். தகுதியுடையீர், தங்களின்கீழ் யான் படைத்தலைவனாயிருக்கக் கிடைத்த நாள் முதல் இம்முறைதான் தோல்வியடையலானேன். இதற்காகத் தாங்கள் போதுமான அளவுக்கு என் மேல் வசைமொழிகளை நிரப்பிவிட்டீர்கள்.'' என்று கூறினான்.

நல்லான் ஆழநினைந்துபார்த்து ஏதும் மறுமொழி சொல்லாதிருந்தான்.

மறுபடியும் இருளன், "புகழ்நிறைந்ததலைவனே, யான் இந்தத் தோல்வியினால் வந்த தாழ்வுகளுக்கு ஆளாகிவிட்டேன் என்பதையும், அவனைப்பற்றி உங்கள் எண்ணம் எதுவாயிருந்தாலும் நீங்கள் நீலலோசனனைச் செவ்வையாய்ப் பார்த்துவிட்ட பிறகு அவன் என்னொடு படிசண்டை செய்யும்படி தூண்டத் தக்க நேரத்தை விரைந்து எதிர்பார்த்திருக்கின்றேன் என்பதையும் உணர்ந்து மனம் ஆறுதல் அடையுங்கள். ஏனென்றால்,

எனது பெயருக்குவந்த களங்கத்தை அவ்விளம் பௌத்த னுடைய இரத்தத்தாற் கழுவினாலன்றித் திரும்பவும் யான் ஒரு துணிந்தகள்வனென்று தலையெடுக்கமாட்டேன். பெரு மானே, கடைசியாகத் தங்கள் ஏற்பாட்டின்படி நடப்பதற்கு ஏதுந் தீங்கு உண்டாகவில்லை: ஏனெனில், இந்நேரம் இளைய நீலலோசனன், பிரித்துச்செலுத்தப்பட்ட நம் ஆட்களின் கையிற் சிறையாய் அகப்பட்டிருப்பான் என்பதில் ஐயமில்லை.'' என்று சொன்னான்.

''என்றாலும், இதிலுங்கூட மனம் எனக்கு ஐயுறவாகத் தான் இருக்கின்றது: ஏனென்றால், நீ எண்ணுகிறபடியுஞ் சொல்லுகிறபடியும் நடந்திருந்தால், அச்செய்தி சிலநாழிகைக்கு முன்னமே நம்மிடம் எட்டாதது ஏன்? மீனும்பாள் பெரு மாட்டி நமக்கு நயமான செய்தியைத் தெரிவிப்பதிற் காலந் தாழ்ப்பவள் அல்லளே—'' என்று நல்லான் இணைந்து பேசி னான்.

''அச்செய்தியைத் தெரிவிப்பதிற் காலந் தாழ்த்தமைக்குத் தக்க காரணம் இப்போதே தெரியவரும் என்பதில் ஐயமில்லை; ஏனெனில், நமது சூழ்ச்சி முழுதும் மிகவுந்திருத்தமாக ஒழுங்கு படுத்தப்பட்டமையால் அது தவறுமென்பது கூடாதகாரியம்.'' என இருளன் மறுமொழி பகர்ந்தான்.

''ஆ! நாம் சுழற்றுப்பாக்கியினையும் வாளினையுங் கீழ் எறிந்துவிட்டுச் சூழ்ச்சி வகைகளிலும் நுண்ணியநினைவுகளி லும் நுழைந்ததே, நாம் நமக்குரிய இயற்கையைக் கடந்ததாகும் என்று நினைக்கின்றேன். இப்படிப்பட்ட சண்டையிடுவதில் எனக்குச் சிறிதுந் திறமை இல்லை.'' என்று நல்லான் திடுமென மொழிந்தான்.

''என்றாலுந், தலைவனே நம்முடைய சூழ்ச்சிகள் மிகவும் நன்றாக ஆழ்ந்துபார்த்து அமைக்கப்பட்டனவேயாகும் என்ப தைத் திரும்பவுஞ் சொல்கின்றேன். ஆனால், அச் சூழ்ச்சி வகைகளை யான் தங்களுக்கு முதலிற் சொல்லியபோது நீங்கள் அவற்றைப் பொறுமையொடு கேட்கவில்லை; ஆகவே, இப் போதும் அவற்றை நீங்கள் அறிந்து கொள்ளாவிட்டால் அதற்

காக நான் வியப்படைய வேண்டுவதில்லை.'' என்று இருளன் உறுத்திச் சொன்னான்.

அதற்கு அத்தலைவன் ஏளனமாய், ''அப்படியானால் நீ எங்ஙனம் இவ்வளவு உயர்ந்த ஏற்பாட்டைச் செய்தனை என்பதும், நீ அடைந்த தோல்வியை இஃது எவ்வாறு மாற்றுமென்பதும் உன் வழக்கப்படியே விளக்கமாக எடுத்துச்சொல். ஒரு வேளை நீ சொல்வது எனக்கு நன்மைதருமென்று நம்புகின்றேன்—என்றாலும், இப்பொழுது நீ சொல்லுவதொன்றும் எனக்கு விருப்பமாய் இராது என்று ஒளியாமற் சொல்லுகிறேன்.'' என்றான்.

''அவ்வகைகளை எடுத்துச் சொல்வதென்றால் நான் தோல்வி அடைந்தது முதற்கொண்டு சொல்லவேண்டும்,—பெருமை மிக்க தலைவனே, இத்தோல்வியைப்பற்றித் தாங்கள் ஏதோ இரக்கமின்றி அடிக்கடி குறிப்பிட்டுக் குத்திச்சொல்லுகிறீர்களே.'' என்று இருளன் எதிர்மொழி புகன்றான்.

தன் கீழவனை இவன் கொழுப்பேறிப் பேசுவதாக நல்லான் எண்ணமுற்று, இருளன்மேல் இறுமாப்புடன் பார்த்த ஆணவப் பார்வையின் கொடுமையை இங்கே எடுத்துச்சொல்வதென்றால் அது முடியாது.

உடனே அந்தப் படைத்தலைவன் தாழ்மை காட்டினவனாய்த், 'தங்களுக்கு வருத்தம் உண்டு பண்ணினேனாயின் அதனை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இப்போது அவைகளை விளங்கத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சண்டை முடிந்துபோனதும், காயப்பட்ட என் ஆட்கள் இருவரோடும் ஓடிப்போனேன்; அவர்களை அக்குகையினுட் கருத்தாய்க் கிடத்தியபின், யான் பின்னும் விரைந்து செல்வதானேன். எனது குதிரையின் விரைந்த ஓட்டத்தைக் கொண்டு, யாரும் பின்றொடர்தற்கு ஆகாத அத்தனை தொலைவில் வந்துவிட்டேனென்றும் எண்ணியறிந்தேன். அந்தப் பௌத்தர்கள் பின்றொடரமுயன்றதாகவும் ஏதுந்தெரியவில்லை: தாங்கள் அடைந்த வெற்றியளவில் அவர்கள் மகிழ்ந்து நின்றுவிட்டது இயற்கைதான். தன் உறவினர்களைப் போய்ப்

பார்த்துத் திரும்பி வரும்வழியில் இடையே தங்குவதற்காக மீனும்பாள் பெருமாட்டி கோபுரத்தை நோக்கிச் செல்வ தாக முன்னமே எனக்குச் செய்தி எட்டியது. அஃதல்லாம லும், மீனும்பாள் பெருமாட்டியின் ஒத்து உழைப்பின்றித் தாங் கள் எந்தக்காரியத்திலும் புகுவதில்லை என்பதும் பெருமானே யான் அறிவேன். மீனும்பாள் பெருமாட்டி வரும் வழியில் இளைய நீலலோசனனைப் போம்படி செய்விக்க வழிசெய்ய வல் லேனுயின், நீலகிரிக்கு நேரே செல்லும் பாட்டையினின்றும் அவனைத் தவறுவித்து, அவ்வம்மை அவனை மயக்கி, அதற்கு நெடிது விலகியுள்ள கோபுரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார்கள் என்றும், யான் தங்களிடந் திரும்பிச்சேர்ந்து தங்க ளிடம் உள்ள ஆட்களை விடுத்து அப்பௌத்தர் தலைவனையும் அவனைச் சேர்ந்தோரையும் பிடித்துக்கொள்ளுதற்கு வேண்டப் படுஞ் சில நாழிகைநேரம் வரையில் அவ்வம்மை அவனை அங் கேயே நிறுத்தி வைக்கக்கூடுமென்றும் எனக்கு ஓர் எண்ணந் தோன்றியது'' என்று கூறினன்.

''நல்லது, இச்சூழ்ச்சியினை எண்ணிமுடித்ததிற் சிறிதுந் தப்பு இல்லை; ஆனல், அதனைச் செய்துமுடிப்பதோ—'' என்று நல்லான் சொல்ல;

அதற்குள் இடைமறித்து இருளன் சொல்வானுயினன்: ''புகழ்நிறைந்த தலைவனே, கேளுங்கள் மற்ற வரலாறுகளையும். முன் பின்அறியாத இடத்தில் வழிப்போவோர் தாந்தாம் செல் லுதற்கு உரியவழி யாது எனக் கட்டாயம் வினவுதற்கு இட மாக மூன்று பாட்டைகள் பிரியும் ஓர் இசைப்பில் யான் குடி யானவனைப்போல் உடையணிந்து போய் இருந்தேன். அங்கே யான் எண்ணியபடியே நேரலாயிற்று. மீனும்பாள் பெரு மாட்டி தன்பாங்கிமாரோடும் இளைப்பாறும் இடம் இதுவென முன்னமே உறுதியாகத் தெரிந்துகொண்டு, அங்கேபோகும் ஓர் இடுக்குவழியில் அவர்களைப் போக்கினேன். மீனும்பாள் பெருமாட்டியுடன் விரைவாய் யான் கலந்துபேசியபோது, அவ் வம்மை யான் குறித்துக்காட்டிய ஏற்பாட்டில் ஒருப்பட்டுநடக்க இசைந்தார் என்பதை யான் சொல்லவும் வேண்டுமோ?''

நல்லான், "அதைப்பற்றி ஐயம் இல்லை!" என்று உரத்துச் சொல்லி, "அதன் பிறகு, அவ் வழிப்போக்கர்களை அங்ஙனஞ் செம்மையாய் ஏமாற்றி—" என்று கேட்க,

இருளன், "உடனே யான் கோபுரத்திற்குக் கடுகெனச் சென்று நடக்கவேண்டுவன இவையென்று கற்பித்தேன், பிறகு அங்கேயிருந்து ஒரே பாய்ச்சலாய்க் கிளம்பி, மறம்மிக்க என் தலைவனையும், ஆண்மைமிக்க எங்கள் ஆட்களில் அறுவரையும் இவ்விடங் காணலாமென்று வந்தேன்." என்று விடை பகர்ந்தான்.

அதற்கு நல்லான், "எனக்குரிய வேலையாக யானே வரைந்து கொண்ட முதன்மையான காரியத்தை முடிக்கும் பொருட்டு நமது மலைக்கோட்டையினின்று இங்கே யான் கூட்டிவந்த அவ்வாண்மையாளர் அறுவரையும், உன் சொற்படியே கோபுரத்தில் அவரைச் சிறைப்படுத்துதற்கு விரைவாக யான் செலுத்திவிட லானேன். அதோ உள்ள பாட்டைநெடுக நாகநாட்டரசி பயணம் வருவள் என்னுஞ்செய்தி இன்னும் ஒரு நொடிப்பொழுதில் எனக்குவரலாம்; என் ஆண்மையாளர் தக்க நேரத்தில் திரும்பிவந்து சேராவிட்டால், அவளை யான் சிறைப் படுத்துவது எப்படிக்கூடும்?" என்று மறுமொழி கூறினன்.

அழகிற் சிறந்த நாகநாட்டரசி பெண்களைமட்டுந் துணைக் கொண்டு பயணமாக வந்தால், புகழ்மிக்க தலைவனே, அவர் களைச் சிறைப்படுத்தி மலைக்குக் கொண்டுபோக நீங்களும் நானுமேபோதும்" என்று இருளன் சொன்னான்.

"நாகநாட்டரசி குமுதவல்லி, இளைஞனான சந்திரன் சொல்லிய சொற்களைக்கேளாமல், எறக்குறைய வலிமையிற் சிறந்த ஆண்மக்களைத் துணையாகப் பின்னே கொண்டுவந்தால் என் செய்வது?" என்று நல்லான் இணைந்து வினவினான்.

அதுகேட்டு இருளன், "உண்மைதான்! தங்கள் ஏற்பாடுகளைப்பற்றித் தாங்கள் சிறிதேனும் எனக்குச் சொல்ல அருள் புரிந்தீர்களில்லையாதலால், இதைப்பற்றி என்கருத்து ஏதுஞ் சொல்லவாவது நடக்க வேண்டிய முறை தெரிவிக்கவாவது கூடாதவனாய் இருக்கிறேன்." என்று பணிவொடு கூறினான்.

அது கேட்டு நல்லான் செருக்கு மிக்க பார்வையோடு, "என்கீழ் ஏவலரிடமிருந்து கருத்துரையாவது அறிவுரையாவது வேண்டுகில்லேன்; நான் கட்டளையிடுவேன்—அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்து நடக்கக்கடவர். என்றாலும்," என்று பிறகு சிறிது அமைந்த குரலொடு, "நீயும் உன் கூட்டத்தாரும், மேற்கரையிலிருந்து நீலகிரிக்குப் போகும் நீலலோசனனையும் அவன் துணைவரையுஞ் சிறைப்படுத்தும் வண்ணம் ஒருபக்கம் போக்கப்பட்டபோது, யான் என் கூட்டத்தாரொடு நாகநாட்டிலிருந்து நீலகிரிக்குப் போகுங் குமுதவல்லியையும் அவளுடன் வருவோரையுஞ் சிறைப்படுத்துதற்கு இந்தஇடத்தில் வந்து பதிவிருந்தேன் என்பதை அப்பொழுதே உனக்குச் சொல்லியிருக்கின்றேன். இதற்குமேல் நன்றாகச் செய்யக்கூடிய ஏற்பாடு ஒன்றுமில்லை; அப்படியிருந்தும் அச் சூழ்ச்சிகள் நிலைகுலைந்து போயின. இருளா, உன் கூட்டத்தார் அழிந்து ஒழிந்தமையால், உன்னால் ஆகாது தவறிய காரியத்தை முடிப்பித்தற்கு என்னவரைக் கோபுரத்திற்கு விடுக்கலானேன்." என்று உரைத்தான்.

"தலைவனே, நீலலோசனன் இந்நேரங் கோபுரத்திற் றவறாமற் சிறைவைக்கப்பட் டிருப்பான் என்று நம்புவோமாக. ஆயின், நாகநாட்டரசியின்பொருட்டு யான் செய்யக்கூடியது ஒன்றுமில்லையா? அந்தப்பாட்டையின் கிட்டப்போய்ப் பதிவிருந்து பார்க்கட்டுமா?" என்று இருளன் கேட்டான்.

"அப்பாட்டையிற் பதிவு இருத்திப்பாராது அவ்வளவுக்கு யான் முன்னறிவு இன்றி இருப்பேன் என்று நீ எண்ணுகின்றாயா? ஆ! இதோ நான் பதிவுபார்க்கவைத்தவன் குதிரைமேல் வருகின்றான்!" என்று நல்லான் இடைமொழிந்து சொன்னான்.

இங்ஙனஞ் சொல்லிக்கொண்டே நல்லான் துள்ளி எழும்பினான்—அதுகண்டு உடனே இருளனும் அவ்வண்ணமே செய்தான்; பிறகு சிறிது நேரத்திலெல்லாம் ஒருவன் மலைய நாட்டார்க்குரிய உடுப்பு அணிந்தவனாய்த் தன் குதிரையை அவ்விடத்திற்கு விரைவாகச் செலுத்திவந்தான்.

"என்னசெய்தி கொண்டுவந்தாய் மாதவா?" என்று அக் கள்வர்தலைவன் ஆவலோடும் வினவினன்.

"ஒருவகையில் நல்ல செய்தியே," என்று குதிரையி லிருந்து கீழே குதித்திடும்போதே சொல்லிக்கொண்டு, பின் னும், மற்றொருவகையில் நன்மையில்லாததே" என்று அத் தூதுவன் கூறினன்.

"அதனை விளக்கமாய்ச்சொல்." என்று உடனே நல்லான் மொழிந்திட்டான்.

"பறவைகள் கண்டுபிடிக்கப்பட்டன; தலைவனே, நீங்கள் எனக்குச் சொன்ன வகைப்படியே அழகிற் சிறந்த இளம்பெண் ஒருத்தி, இங்கிருந்து இரண்டரைநாழிகை தொலைவிலுள்ள அகன்றபாட்டைநெடுக மிகவிரைவாய்க் குதிரைமேற்போனுள்; அவளைப்போலவே குதிரைமேற்கொண்ட அழகியபெண்கள் இருவரும் அவள் பின்னேபோயினர். சிறிதுநேரம் யான் அவர்களைப் பதிவிருந்துபார்த்தேன்: அந்தப்பாட்டையிலேயே போவதற்குமாறாக, அவர்கள் சடுதியில் இடதுபக்கமாய்த் திரும் பினர்கள்." என்று மாதவன் சொன்னன்.

"ஆ! தீமொழியே!" என்று நல்லான் உரத்துக்கூவி, "அந்தச் சிறிய ஊரைநோக்கிப் போவதற்குமாறாக அவர்கள் நக ரத்திற்குச்சென்று விடுதிகொள்வார்கள்போல விருக்கின்றதே! அச்சிறிய ஊரிலுள்ள சாவடியிற் போய்த் தங்குவார்க ளாயின், அவர்களைச் சிறைப்படுத்துவது திண்ணம்: நகரத்திலானல் அவர்கள் காவலாய் இருந்திடுவர்—அதுவல்லாமலும், அவர்கள் தங்குஞ் சாவடித்தலைவனே காசுபறிப்பதில் திறமை வாய்ந்தவ னகையால் மறுநாட்காலையில் அவர்கள் புறப்படும்போது தக்க துணையொடு செல்லும்படி அவர்களுக்கு எடுத்துச்சொல்லு வான் என்பதுந் திண்ணம். அவன் தன்னிடத்திற் பெருந்திர ளாக உள்ள மக்களும் மருமக்கள்மார்களும் அவர்களுக்கு வழித் துணையாகச்சென்று பொற்காசு பெறல்வேண்டி, நல்லானைப் பற்றிய நடுக்கமுள்ள கதைகளை மெல்லியல்புள்ள அவர்களுக்கு நிரம்பவும் எடுத்துச்சொல்வானே!" என்று வருத்தத்தோடும் பேசினன்.

யாது செய்வதென்று தெரியாமல் திகைப்புற்று அக்கள்வர் தலைவன் வருத்தமிக்க நிலையுடையான்போற் சிறிதுநேரம் அங்கும் இங்குமாய் நடந்தான். இப்படிப்பட்ட நிலைமையில் தாம் ஏதுஞ் சூழ்ச்சி சொல்லக் கூடியவர்களாய் இருந்தாலும், இருளனும் மாதவனும் இவன் குணம்மாறுதலடைந்த இப்பொழுதில் வலிந்து ஒரு சொல்லேனுஞ் சொல்லத் துணிவில்லாதவர்களாய், அவனை உற்றுப் பார்த்துக்கொண்டே யிருந்தனர்.

“ஒவ்வொன்றுந் தவறுதலாய்ப்போகின்றதே!” என்று நல்லான் தனக்குள் முணுமுணுத்தவனாய், “அவன் எனக்குச் சுருக்கமாய்ச் சொல்லிக்கொண்டுவந்த துன்பமான சூழ்ச்சியில் எனக்கு விருப்பமில்லாமையை யான் சந்திரனுக்குத் தெரியச் சொன்னது தக்க காரணங்கள் இல்லாமையான் அன்று. ஆ! எனக்கு ஒன்று தட்டுப்படுகின்றது. நல்லது! மறைவாக வைக்கப்பட்டிருக்கும் அளவிறந்த பொருட்டிரளை அடைதற்கு அரிய திறவுகோலாயிருப்பதும், நாகநாட்டரசி எப்போதுந் தன்னிடத்திலேயே வைத்திருப்பதுமான பொறியையாவது கைப்பற்றிக் கொள்ளுகிறேன்! அதன்பின், அவள் தொடர்புபட்டமட்டில், நடப்பவை நடக்கட்டுமென்று விட்டிருப்பேனாக!” என்று சொல்லிக் கொண்டான்.

ஏதோ ஒரு முதன்மையான சூழ்ச்சியைக்கருதி மனத்தை வலுப்படுத்திக் கொண்டவனாய், நல்லான் திடீரென மாதவன் பக்கமாய்த்திரும்பி, “எனக்கு உன் உடையைத்தந்து என்னதை நீ மாற்றி எடுத்துக்கொள்.” என்றான்.

மாதவன் கள்வன் அல்லன்; அப்பக்கங்கள் பலவிடங்களில் நல்லானால் ஏற்படுத்தப்படுங் காரியங்களைத் திறமையாக நடத்துவாருள் ஒருவனாவன். தன் தலைவன் சொன்னதற்கு உடனே இணங்கி, அவன் இவனோடு தன்னுடையை மாற்றிக் கொண்டான். நல்லான் மலையநாட்டில் நடுநிலை வாழ்க்கையிலுள்ளாரின் உடையில் விரைந்து தோன்றினான்: இவன் தன்னிடத்திற் படைக்கலங்கள் வைத்திருப்பதாக வெளிக்குக் காணப்படாவிட்டாலுந், தான் புதிதாக அணிந்துகொண்ட உள் அரைச்சட்டையின் கீழே கைத்துப்பாக்கியினையுங் குத்துவாளி

லேயுஞ் செவ்வையாகச் செருகிவைத்திருந்தான். தென்புற மாய்ப் பலநாழிகை தொலேவிலுள்ள கோபுரத்திற்கு விடுக்கப் பட்ட தன் ஆட்கள் விரைவில் மீளுவர் என்று எண்ணி, இருள னிடத்திற் சில ஏற்பாடுகளேச் சொல்லிவிட்டுத், தனது பரிமா வினுந் தாழ்ந்ததாயிருந்தமையால் தான் இப்போது கொண்ட தாழ்ந்த கோலத்திற்கு இசைவாயிருக்குமென்றுகருதி மாதவன் குதிரைமேல் ஏறிப் புறப்பட்டான்.

மாலேக்காலத்து மங்கற்பொழுது வரவா மிருந்து வரலா யிற்று; அப்போது நல்லான் முன்சொன்ன வகையாய் மாறு கோலம் பூண்டு, மாதவனுல் முன்னமே அறிவிக்கப்பட்டபடி நாகநாட்டரசியும் அவள்பாங்கிமார் இருவருஞ் சென்ற பட்டி னத்தே வந்து சேர்ந்தான். தன்னே யாருந் தெரிந்துகொள்ள மாட்டார்களென்று தான் திண்ணமாய் உணர்ந்தமையால், நல் லான் முதன்மையான சாவடிக்கு நேரே சென்று, தனக்குந் தன் குதிரைக்கும் விடுதி ஏற்பாடுபண்ணும்படி கேட்டான்; தனது குதிரைக்குச் செவ்வையாகத் தீனி முதலியன வைக்கப் பட்டனவா என்று பார்க்கச்செல்வான்போல், இவன் குதிரை நிலேயத்திற்குட் சென்ருன்; நாகநாட்டரசி குமுதவல்லியும் அவள் பாங்கிமார்இருவரும் ஊர்ந்துவந்த குதிரைகளின் உறுப்பு அடையாளத்தை மாதவன் தனக்கு அறிவித்தபடியே, அங்கே கட்டப்பட்ட மூன்று அழகிய குதிரைகளும் உடையனவாய் இருக்கக்கண்டான். இவ்வாறு, தான் காணவேண்டியவர்கள் அந்தச் சாவடியிலேயே இருக்கின்ருர்கள் எனக் கள்வர்தலேவன் ஐயமின்றித் துணிந்தான்.

இவன் தனக்குத் தனிமையான ஓர்அறை வேண்டுமெனக் கேட்டு வாங்கிக்கொண்டான்; பிறகு தனக்கு இராச்சாப்பாடு கொணர்ந்து வட்டித்த சமையலாள் வாயினின்றே, குமுதவல்லி யையும் அவள் பாங்கிமாரையும் பற்றித் தான் கட்டாயந் தெரிந் துகொள்ள வேண்டியிருந்த சில சிறிய உண்மைகளே வரச் செய்தான். தனக்குச் சிறிதும் பற்றில்லாத செய்திகளேக் குறித்துப் பேசுவான் போல், முன்நினேவின்றி வெறும் பேச் சாகப் பேசும் வகையில் வைத்து இவ்வளவும் எளிதாகத்

தெரிந்துகொண்டான். சாப்பாட்டு விடுதியில் உள்ளார்க்கு உரிய இயற்கைப்படியே அவ்வேவற்காரனும் மிகவும் பேச்சுக்காரனா யிருந்தான். இங்ஙனந் தான் தேடிப்போந்த பெருமாட்டி ஒரு வாறு ஒளிவாய் வழிப்பயணம் போய்க்கொண் டிருக்கின்றாள் என்பதனைக் கள்வர்தலைவன் கண்டுகொண்டான்; ஆனால், அவ் ஏவற்காரன் குமுதவல்லியின் மேனிலைமையின் மெய்ம்மை யைப்பற்றி ஐயுறவுகொண்டவன் அல்லாமையால், அவனுக்கு அப்பெருமாட்டி மறைவாய்ச் செல்லுகின்றாளென்பது தெரி யாது; ஆனால், நல்லானோ இவ்வரலாறுகளை யெல்லாஞ் சந்திர னிடந் தெரிந்துகொண்டான். குமுதவல்லியும் அவள் பாங்கி மாரும் அச் சாவடியிற் றங்கியிருக்கும் அறைகளின் உளவுகளை முன்போலவே இவன் தெளிவாய்த் தெரிந்து கொண்டான்.

ஐந்துநாழிகை சென்றன: நள்ளிரவு ஆகும் நேரமாயிருந் தது; அச்சாவடி ஓசை அவிந்து அமைதியாயிருந்தது. இப் போது நல்லான் தான் பூண்டிருந்த மாதவன் உள்ளரைச்சட்டை யின் கறுப்புக்கரையில் ஒருதுண்டைக் கிழித் தெடுத்தான்; அங்ஙனங் கிழித்த துண்டிற் கண்கள் பார்ப்பதற்கு இரண்டு துளைகள் செய்து, பிறகு அதனை முகமறைப்பாக அணிந்து கொண்டு, தானிருந்த அறையைவிட்டுத் திருட்டுத்தனமாய்ப் புறப்பட்டான். புறப்பட்டு நாகநாட்டரசியும் அவள் தோழிமா ரும் இருக்கும் அறை வரிசைகளுக்குப் போகுஞ் சிறிய நடை யறையில் வந்துசேர்ந்தான். அங்கே ஒரு விளக்கு எரிந்து கொண் டிருந்தது: ஆனால், அக்கள்வர் தலைவன் அது வெறு மையாய் இருக்கக்கண்டான். உட்கதவிற் காதைவைத்து உற் றுக் கேட்டான். அங்கே தூங்குகிறவர்கள் முறையாக மெதுவே தாழ்த்துவிடும் மூச்சைத்தவிர மற்றெல்லாம் அமைதியாக இருந் தது. நல்லான் தனது முகமூடியை முகத்தின்மேல் இப்போது பொருத்திக்கொண்டு, உறையினின்றுங் குத்துவாளைக்கழித்து எடுத்துப்பிடித்தவனாய், மேற்கட்டி இட்ட தளிமத்தின்மேல் அழகிய குமுதவல்லியும் அப்படுக்கையின் பக்கத்தே சாய்வு அணைமேல் அவள் தோழிமார் இருவரும் உறங்கிக்கொண் டிருக்கும் அறையினுள் திருட்டுத்தனமாய் நுழைந்தான்.

ஆறாம் அதிகாரம்.

நாகநாட்டரசி.

முதன் முதல் நல்லான் அவ்வறையினுள்ளே நோக்கிய போது, அவன் கண்களின் எதிரே தோன்றிய காட்சியானது மிகவும் அழகியதொன்றாய் இருந்தது. அந்தச் சாவடியிலுள்ள சிறந்த அறை வரிசைகளுள் இந்த அறை சேர்ந்ததாயிருந்தமையால் இதுவும் நேர்த்தியாகவே ஒப்பனைசெய்து வைக்கப்பட்டிருந்தது. மலையநாட்டு வழக்கப்படி அந்தப் படுக்கையானது நிலமட்டத்துக்குமேல் ஏறக்குறைய இரண்டடி உயரம் உயர்த்தப்பட் டிருந்தது; கட்டிலோ அழகாகச் செதுக்கப்பட்ட நொய்தான மரத்தாற் செய்யப்பட்டிருந்தது. அதன் மீது மேற்கட்டி ஒன்று ஏற்றப்பட்டிருந்தது; அதனினின்றும் நீலப்பட்டுத் திரைஒன்று தொங்கவிட் டிருந்தது. கதிரொளிப்பட்டினால் உறையிடப்பட்ட மெத்தையுந் தலையணைகளும் மிகப்பருத்தவைகளாயிருந்தன. இத்தகையதான கட்டிலின்மேல் நமது கதைத் தலைவியான நாகநாட்டரசி பள்ளிகொண்டிருந்தனள்; இவளுக்கு வாய்த்திருந்த எங்குமில்லாப் பேரழகின் பொலிவால் இவளுக்குக் குழந்தவல்லி என்னும் பெயர் வழங்கி வரலாயிற்று.

இவள் நேர்த்தியான ஒற்றையாடை மட்டும் மேலே அணிந்திருந்தாள்; ஏனென்றால், நம் இந்தியநாட்டுப் பெண்கள் இராக்காலத்தில் ஆடையை முழுதுங் களைந்துவிடுவதில்லை; பகற்காலத்தில் வழக்கத்துக்கு இணங்கித் திருத்தமாக உடுக்கும் உடைக்கு ஈடாக, இரவில் நொய்தாகத்துவளுந் தளர்ந்த ஆடையைச் சுற்றிக்கொள்வர். அவ்வறையினுள் எரிந்துகொண்டிருந்த விளக்கானது, அக்கட்டிலின்மேற் சாய்ந்திருக்கும் அழகிய உருவின்மேல் தன் கொழுஞ்சுடரின் செழுங்கதிர்களைச் சொரிந்தது; மெல்லிய ஆடையாற் சுற்றப்பட்டிருந்த அவ்வழகிய உருவானது, திரைகளினின்று விழுங் கரிய நிழலின் அண்டையிலே, தன்மேல் வெளிச்சம்படுதலால் மிக்க விளக்கமுடன் தோன்றுவதாயிற்று. மேலும், அவ்விளக்கொளியானது

நாகநாட்டரசியின் அருமையான முக அமைப்பை இனிது விளக்கியதொடு, வழுவறத் திருந்தி இருக்கும் அவளுருவின் அமைவினையும் அவள் நிறத்தின் மெல்லிய இயலினையுந் தெளித்துக் காட்டியது. இவளுக்கு இப்போது அகவை ஏறக்குறையப் பதினேழு; ஆனால், இவள் வடிவின் திரண்ட வளர்ச்சியைப் பார்த்தால் ஆண்டு பத்தொன்பதென்று மட்டும் மதிப்பிடக் கூடியதாயிருக்கும். கன்னங்கறேல் என்று பளபளப்பாயிருக்கும் இவளது செழுங்கூந்தலானது அழகிய தலை வைத்திருந்த அணையின்மேற் சுற்றை சுற்றையாய்த் துவண்டு மிளிர்ந்து கிடந்தது: இவள் புருவங்களோ, பலபடியாலும் மிகக் கறுத்துத், துகிலிகையால் மெல்லென எழுதப்பட்டனபோல் எழிலுடன் வளைந்து, வழுவழுப்பான பொட்டுகளின் மினுமினுவெனும் வெண்மை நிறத்தை விளங்கக்காட்டின. மூடப்பட்டிருந்த கண் இதழ்கள் பரியனவாயிருந்தமையால் தம்மால் உள்மறைக்கப்பட்ட கோளங்களின் பருமனைத் தெரிவுறுத்தின; புருவங்களைக் காட்டினும் பின்னுங் கருமையாயிருந்த இறைப்பைமயிர் விளிம்புகளானவை, தாஞ் சார்ந்திருந்த கன்னங்களின் களங்கமற்ற தூயவெண்ணிறத்தொடு மாறுபட்டு விளங்கின. கடற்சிப்பியிற் பிறக்கும் முத்தின்கண் உள்ள பளபளப்போடு அழகிய தெளிவும் உடையதாயிருந்தமையால், அகத்திற்றோன்றும் உணர்வின் அசைவினால் அழகிய முகத்தின்கண் வருவிக்கப்படுஞ் சிவப்பினைத் தோன்றக்காட்டுந் தூய மறுவற்ற இவளது தோலிலே துலங்கின நிறத்தைத், தாமரையின் மெல்லிய செந்நிறத்தொடு சேர்த்துக்குழைத்த வெள்ளல்லியின் ஒளிமிக்க வெண்மைநிறம் என்று மட்டும் புனைந்து உரைக்கலாம். இவளுடைய கன்னங்கள். இளம்பருவத்தின் புத்தப்புதுமைக்கும் நலத்திற்கும் இணங்கப் போதுமான அளவு திரண்டு உருண்டு இருந்தனவேயல்லாமல், முகத்தின் முட்டைவடிவான அழகைச் சிறிதும் பழுதுபடுத்தவில்லை. நெற்றியானது மட்டாகவே உயர்ந்திருந்தது—மூக்கு மிகவும் நேராக அந்நெற்றியொடு பொருந்தியிருந்தது. வாயோ உலகத்திற் பார்க்கப்பட்ட மிக இனிய பொருள்களுள் இனியதாய் இருந்தது; அஃது

அகலமின்றி ஒடுங்கி மேல்இதழ் கீழ்இதழினும் மிகப்பருத்து இருந்தது; அவ்விதழ்கள் இரண்டுஞ் சிறிது அகன்றபோது, மிகச்சிவந்த இனியகொழும்பழம் ஒன்று வெடித்து உள்ளே அமைந்த தூய வெள்ளிய விதைகளை அவ்வெடிப்பின் வழியே காட்டுவது போன்று இருந்தன. மோவாய் வேண்டுமளவுக்கு நீண்டு, அங்ஙனமே முகத்தின் முட்டை வடிவுக்கு நிரம்பப் பொருந்தி இளகி வட்டமுற்று இருந்தது; இவள் உறங்கும் பொழுதும் இவளது அழகிய முகத்தின் பொதுவான தோற்றமானது கள்ள மறியா மிகவுந் தூய கவர்ச்சித்தன்மையை ஒளிரக்காட்டியது.

இவள் தலையின் அழகில் எவ்வகையான குற்றமேனுங் களங்கமேனும் இல்லை. எல்லாம் முழுத்திருத்தத்தோடும் வயங்கின; சிறியனவாய் மெல்லென மடிந்த காதுகளுங்கூடக் கல்லிற் செதுக்கி யமைத்தாற்போல் திருத்தம்பெற்றிருந்தன. கழுத்தானது மெருகிட்ட வெண்பழுப்புக் கற்போல் துலங்கியதே யல்லாமல், விளக்கமில்லாச் சலவைக்கல்லின் வெண்மை வாய்ந்ததாக இருக்கவில்லை; அதன் நிறம் உறைபனிபோல் தூயதாய் இருந்தாலும், பனியின்கண் உள்ள குளிர்ச்சி அதனிடத்தில்லை; அதனைப்பார்த்த கண்களுக்கு அது மெல்லெனஅனன்று காட்டியது. தொண்டை வரையிற் சுற்றப்பட்டிருந்த மெல்லிய ஆடையானது தன்னுள் நாணத்தோடும் பொதிந்துவைத்த மார்பின் திரண்ட பொருள் வடிவைத் தெரித்துக்காட்டியது. ஓர் அழகிய கையானது கட்டிலின் ஓரத்தின்மேற்றுவண்டு கிடந்தது.

இனி, இப்படுக்கையின் தலைப்பக்கத்திலே மெத்தையிட்ட குறிச்சியில் ஓர் இளம்பெண் இருந்தவண்ணமாய் உறங்கினள்; மற்றொருத்தி அதன் கால்மாட்டில் அப்படியே மற்றொரு குறிச்சியில் உறங்கினள். இவ்விளம் பெண்கள் இருவருந் தந்தலைவிக்கேற்ற அழகு வாய்ந்தவர்களாய் இருந்தமையாற், கட்டிலின்மேற் றுயில்கொள்ளும் மிக மேம்பட்ட தெய்வமொன்றைப் பாதுகாத்திருக்கும்படி வைக்கப்பட்ட வேறிரண்டு சிறு

கந்தருவப்பெண்கள் தூக்கத்தால் மயக்குண்டு கிடந்ததோ என்று சொல்லும் வகையாய்த் தோன்றினர்.

நல்லான் அவ்வறையினுள் எட்டிப்பார்த்தபோது அவன் கண்ணெதிரே தோன்றிய காட்சி அத்தனை அழகுவாய்ந்ததா யிருந்தது! இதுதான் முதன் முதல் இவன் குமுதவல்லியைப் பார்த்தது; இவளுக்குக் குமுதவல்லியெனும் பெயர் மெய் யாகவே மிகவுந் தகுதியான தொன்றேயாம் என்னும் எண்ணம் இவன் உள்ளத்தில் உடனே தோன்றியது. இவன் நெஞ்ச மானது வேறு ஒருத்திக்கு உருக்கத்தோடு உண்மையாகவே தரப்பட்டதாய் இருந்தாலும், அக்கட்டிலின்மேல் அரைவரிசை யாகச் சாய்ந்திருக்கும் உருவின் மிக உயர்ந்த அழகைக் கண்ட தும் அதனாற் கவரப்பட்டுச் சிறிதுநேரம் மயங்கினன். இம் மண்ணுலகத்திற் றோன்றிய வடிவத்தையன்றி, ஏதோ மேலுல கத்திலிருந்து வந்த ஓர் அழகியதோற்றத்தைத் தான் உண்மை யிலே காண்பதாகச் சிறிதுநேரம் நல்லான் எண்ணினன்; அவ் வளவுக்கு இவ்வுருவின் மேல்வரைகள் எல்லாந் துவண்டு நீண்டு மெல்லியனவாய் இருந்தமையே யன்றியும், முகத்திலும் எல்லை யற்ற பேர் எழில் குடிகொண்டு விளங்கியது.

நல்லான் அரவம் உண்டாகாமல் மெல்ல அவ்வறையின் கதவைத் திறந்த நேரத்திற் குமுதவல்லி உண்மையிலே நல்ல தூக்கத்தில் இருந்தனள். ஆனால், அவ்விளம் பெருமாட்டி நெடுநேரம் அந்தத் தூக்கத்தாற் கவரப்பட்டிருந்தவள் அல்லள்; அஃது ஆழ்ந்ததுயில் அன்று; கனவொடுகலந்த உறக்கத்தின் றன்மை யுடையதாய் இருந்தது. கதவு திறக்கப்பட்டமையால் அவள் திடுக்கிடவும் இல்லை: ஒருகால் அவள் ஓசையொன்றுங் கேட்கத்தான் இல்லையோ: ஆனால், ஏதோ புதுமையாக வழக் கத்திலில்லாதது நடக்கிற தென்னும் ஓர்உணர்வு மட்டும் விரை வாக அவள் உள்ளத்தில் வந்து நுழைவதாயிற்று. உறக்கத்திற் கும் விழிப்பிற்கும் நடுவே மனமானது தன்னைச்சூழ நடப் பதைத் தெளிவின்றி மங்கலாய் உணர்வதும், அங்ஙனம் உணரி னும் அது மெய்யோ பொய்யோ என்று வரையறுக்கக்கூடாத வகையாய் அவ்வுணர்வு தெளிவின்றி மங்கலாய் இருப்பதும்

போன்ற நிலையைப் படிப்பவரிற் பெரும்பாலார் தமது பழக்கத்திற் கண்டிருக்கலாம். அந்நேரத்திற் குமுதவல்லியின் மன நிலையும் அவ்வாறாகவே இருந்தது: ஆனால், அவள் வாவா விழிக்கத் துவங்கிச் சிறிதே கண்களைத்திறந்தாள்—மிகவுஞ் சிறுகத் திறந்தமையால் உள்ளேயுள்ள அழகிய கோளங்கள் தம் அகத்தே வரைந்து வைத்த ஒளியில் ஒரு கதிர்மட்டுமே வெளியே விளங்கியது. ஆகவே, இங்ஙனந் திறந்தது மிகவுஞ் சிறிதாயிருந்ததனால் இது கல்லான் கருத்தில் தென்படாமலே போயிற்று; ஆனால், அது தன்னருகில் வந்திருக்கும் அச்சமிகுந்த பெரியதோர் இடரின் தன்மையைக் குமுதவல்லிக்குக் காட்டிவிடப் போதுமானதாயிருந்தது.

இவள் தன் ஆண்டிற்கும் பெண்டன்மைக்கும் ஏற்ப மெல்லியல்பு எல்லாம் உடையவளாயிருந்துஞ், சடுதியில் நிகழும் நிகழ்ச்சியிலேனுங் கடுமையான இடர்ப்பாடுகளிலேனுந் தனது மனத்துணிவை இதற்குமுன் ஆராய்ச்சியாக எங்குங் காட்டிப் பார்த்தவள் அல்லள்—என்றாலும், இப்போது குமுதவல்லி ஒரு நொடிப்பொழுதில் திருவுளச்செயலாய் ஒரு மனத்துணிவினால் உந்தப்பட்டாள். முகத்தை மறைத்துக்கொண்டு கையில் வாட்படைபிடித்தவனாய் ஒருவன் தன் அறையினுள் திருட்டுத்தனமாய்ப் புகுந்திருக்கின்றான் என்பது மனத்திற்பட்ட அந்த நேரமே, அவள் திடீரென முற்றும் விழித்துக்கொண்டாள். ஆயினுந், தன் கண்களை மூடியபடியே திறவாதிருந்தாள்: அங்கே நடப்பதை அவள் உணர்ந்தாளென்று அறியும்படி அவள் திடுக்கிட்டு எழுந்திருக்கவும் இல்லை, அப்பக்கம் இப்பக்கம் அசையவும் இல்லை, அதனொடு, தான் மூச்சுவிட்டுக் கொண்டிருந்த முறையைக்கூட அவள் சிறிதாயினுந் தடைசெய்யவும் இல்லை, மாற்றவும் இல்லை.

மின்னல் தோன்றி மறைவதைப்போலப் பலவகைப்பட்ட எண்ணங்கள் மிகவிரைவாய் அவள் உள்ளத்தில் ஊடுருவிப் போயின. கூக்குரலிட்டால் அந்த விடுதியில் உள்ளவர்கள் அவளுதவிக்கு வரக்கூடுமாயினும், அவள் இருந்த அறைகள் சிறிது ஒதுப்புறமாய்த் தனித்து இருந்தமையால், அவள் எவ்

வளவு கூவினாலும் அஃது அங்குள்ளவர் காதுகளுக்கு எட்ட மாட்டாது: மற்றுந், தன் இதழ்களிலிருந்து அங்ஙனம் ஓசை புறப்படும் அப்பொழுதே தன்னுயிர்க்கு இறுதியாயும் முடியும்! எனவும் அவள் அறிந்தாள். ஆகவே, தான் தூங்குவதுபோற் பாசாங்குபண்ணுதலே அவள் தப்பிப்பிழைப்பதற்கு வழி. முக மறைப்பொடுவந்த அவன் கொள்ளையிடுவதற்கே வந்தான் என்பது, அவன் திருட்டுத்தனமாக உள்நுழைந்தமையானும், அறைக்குள் உள்ளவர்கள் எல்லாருந் தூங்குகிறார்களா என்று தான் திட்டமாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டு நிற்பது போல் அவன் கதவண்டையிற் சிறிதுநேரம் மிகவும் விழிப்பாக நின்றமையானும் இனிது விளங்குவதாயிற்று. முகமறைப் பிட்டு அறையுள் நுழைந்தவன் அங்ஙனஞ் சிறிதுநேரம் நின்றதற்குக் காரணம், உருவெளித்தோற்றம் போல் அளவுகடந்த தன் அழகின் காட்சியேயென்று, பெண்களுக்குரிய வீம்புங் கள்ளமும் முற்றும் இல்லாக் குமுதவல்லி சிறிதாயினும் நினைந்திலள்.

இங்ஙனம் நாகநாட்டரசி உற்றநேரத்தில் அருமையான மனவலிமை காட்டினதை இதனைப்படிப்பவர் தெரிந்து கொண்டனர்; இத்தகைய வியத்தகுசெய்கை தனது தனித்த நிலையை உணர்ந்து தன்னைக்கைவிட்ட உணர்ச்சியால் மட்டுமே வருவதாகும். நல்லான் முற்றும் வஞ்சிக்கப்பட்டவன் ஆனான்: குமுதவல்லி இன்னுந் தூங்குகிறாள்என்றே அவன் மெய்யாக நினைந்தான். ஓசைசெய்யாமல் அவன் கட்டிலண்டைவந்தான். இதிற் சிலநொடிகள் சென்றன,—பறந்துபோகும் இச்சிறியநேரிமைப்பொழுதில் ஓர் ஆடவனுக்கு ஆறு மூச்சு ஓட்டங்களே நடைபெறக்கூடும்; என்றாலும் இவை குமுதவல்லிக்குப் பல ஊழிகளாய்த் தோன்றின. முகமறைப்பிட்டவன் கிட்டவே வந்திட்டான். இப்போது அணுவளவுகூடக் குமுதவல்லி தன் கண்ணிதழ்களைத் திறக்கத் துணியவில்லை; ஏனென்றாற், கண் விழிக்கும் அடையாளஞ் சிறிதாயினுங் காணப்பட்டால் தன் மேல் உடனே ஆழ்த்துவதற்கு இசைந்தவண்ணமாய் அவன் கையிற் குத்துவாள் பிடிக்கப்பட்டிருக்கிற தென்பதை அவள்

இயற்கையுணர்ச்சியால் தெரிந்தாள். உலகநடைகளிற் சிறிதும் பழக்கம் இல்லாதவளுந், தனது மனத்துணிவை இதற்குமுன் காட்டி வழக்கப்படாதவளும் ஆன இளங்குமுதவல்லி, எந்தக் காலத்திலேனும் எந்த இடத்திலேனும் இப்படிப்பட்ட நேரங்களில் ஆண்மைகாட்டிய ஒரு மறமகளுக்குப் பெருமைதருதற்கான நிறைந்த நிலையிலே தனது மனவலிமையை இங்ஙனம் உறுதிப்படுத்திக் காட்டியது மிக வியப்பாயிருந்தது.

இன்னும் அவள் உறங்குவதுபோலவே காணப்பட்டாள். இன்னும் நல்லான் கட்டிலை அணுகிப் போயினன். அவன் அவள்மேற் குனிந்து நோக்கினன்: அவன் விடும் மூச்சானது அவள் கன்னங்களின்மேல் வீசியது. ஓ தெய்வமே! அவளது உயிரைப் போக்கவா அவன் எண்ணினன்? ஓர் அழகிய கை கட்டிலின் ஓரத்தின் மேற் றுவண்டுகிடந்ததெனு முன்னமே மொழிந்திட்டோம்: மெழுகுதிரியை ஒத்த அவள் விரல்கள் ஒன்றின்மேல், ஒரே ஒரு கல் அழுத்திப் புதுமையாகவும் ஒருவகையான வேலைத்திறம் வாய்ந்ததாகவுஞ் செய்யப்பட்ட ஒற்றைமோதிரம் இடப்பட்டு இருந்தது. இதில் அழுத்தப்பட்டிருந்தது சிவப்புக்கல்; அதன்மேற் சுழி ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. முகமறைத்து நுழைந்தவன் விரல்களானவை அந்த மோதிரத்தை மெல்லெனத்தொட்டன. மணிக்கலம் ஒன்று அழகுபெறச்செய்த அவ்வழகியகையில் அமைந்திருந்த இடத்தினின்றும் அதனை அவன் மெதுவாகக் கழற்றத்தொடங்கினன்.

குமுதவல்லிக்கு இதுதான் மிகவும் நிலைகலக்கும் நேரமாய் இருந்தது. அணிகலங்கள் கழற்றிவைத்த மேசைமேல் விலைமிக்க மணிகள் இருந்தன: கிடைத்தற்கரிய முத்துமாலையொன்று அவள் கழுத்திற் சூழப்பட்டிருந்தது; அவளது மற்றைக்கையிலோ விலையுயர்ந்த மோதிரங்கள் பல அணியப்பட்டிருந்தன. முகமறைத்த கள்வன் இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கலாம், குமுதவல்லியுந் தான் உயிர் பிழைத்ததை எண்ணிப்பார்த்து அவற்றை இழந்தமைக்காக நகையாடியிருப்பள். ஆனால், இந்த ஒருமோதிரத்தை—அதற்குள்ள இயல்பான விலையைக் காட்டினும் மிகவும் பெரிதாய் அவளால் நன்கு

மதிக்கப்பட்டிருந்த இந்த மோதிரத்தைச்—சில காரணங்கள் பற்றி மந்திரக்கெவிட்டுக்குச் செலுத்தும் வணக்கமெல்லாம் அவளாற் செலுத்தப்பட்டுவந்த இந்தமணிக்கலத்தை—அவளிடத்தினின்றும் பறித்துக்கொள்வ தென்றால், ஓ! அஃது இதுகாறும் அவள் தன்னுள் அடக்கிவைத்திருந்த கூக்குரலொலியை அவள் இதழ்களினின்றும் வெளிப்படுத்துதற்குப் போதுமானதாம் அன்றோ! அப்படியிருந்தும், அவள் இன்னுந் தன் மனவுறுதியை விடாமற் பிடித்திருந்தாள்: அவள் அசையவில்லை— தூக்கத்திற்கு உரிய அடையாளங்களுள் ஒன்றான உயிர்ப்பு முறையினின்று மாறவும் இல்லை. இந்தக் கொள்ளைக்காரன் தன்னைக் கொலைகாரனுகச் செய்து கொள்ளவேண்டுவதும் அகத்தியம் எனக் கருதுவனுயின் திகிலான தன்றொழிலைச் செய்வதற்குக் குத்துவாள் ஒன்று அருகாமையில் இருக்கிறதென்பதை அவள் தெரிந்தாள். ஒருவேளை, ஓர் இமைகொட்டும் நேரங் குமுதவல்லியின் கன்னத்தில் நிறம் மாறியிருக்கலாம். அப்படி நிகழ்ந்ததானுல் அது நல்லானுற் காணக்கூடாதபடி அவ்வளவு புல்லிதாய் இருந்திருக்கவேண்டும்; அல்லது, அவன் அதனைக் குமுதவல்லியின் முகத்தின்மேற் பட்ட விளக்கொளியின் அசைவாக எண்ணியிருக்க வேண்டும்.

மோதிரமானது அவள் கையினின்றுங் கழற்றப்பட்டுவிட்டது; அக்கொள்ளைக்காரனின் உடையிலிருந்து மெல்லென உண்டான சரசர என்னும் ஓசையால் தன் கட்டிலின் பக்கத்தேயிருந்து அவன் போகின்றான் என்பதனை அவள் அறியலானுள். இப்போது அவள் தன் கண்மடல்களை மிகவுஞ் சிறுகத் தூக்குவதற்குத் துணிவு கொண்டாள்: நல்லானுடைய நீண்ட உருவத்தைத் தனது கீழ்க்கண்ணுற் சிறிது பார்த்தாள்; மறுபடியும் அவளைப்பார்க்க அவன் திரும்புவதற்குள், அவடன் கரிய இறைவிளிம்புகளானவை கன்னத்தின்மேற் றங்கியிருந்தன. அவன் தனக்குப்பின்னே கதவை மெதுவாகச் சாத்துதலையுங் காதிற் கேட்டாள்; பின்னுஞ் சிலநொடிகள் செல்ல, அவ்வறை வரிசைகளுக்குப் புறம்பே யுள்ள வாயிற் படியை அவன் தாண்டிச் சென்றிருப்

பான் என உறுதி கொண்டாள். இப்போது அவள் இடரி
னின்றும் விலகினாள்; இடுக்கண் ஒழிந்தது! திகில் மிக்க அந்
நிகழ்ச்சி நடந்தேறுங்காறும் அவளைத் தாங்கிவந்த வியப்பான
மனவலிமையானது, இப்போது ஒரு நொடிப் பொழுதில் இற்
றுப்போயினது; உணர்வுகளைக் கட்டி ஆண்ட அத்தெய்வ
வலிமையானது பிறகு அங்ஙனம் அவ்வளவுக்கும் மறுதலைப்
பட்டு நெகிழ்ந்து போதல் இயற்கையே யாகும். அதன்
பின்னே, நாகநாட்டரசி தன் குரலை எழுப்பித் தன் பாங்கிமார்
களை விழிப்பிக்கநினைந்த அந்நேரத்தே சடுதியில் ஒருகளைப்
பானது அவளை வந்து பற்றியது—அவள் உணர்வு இழந்து
மன இருளிற் புதைந்து கிடந்தாள்.

அங்ஙனம் பல நாழிகை நேரம் அவள் கிடந்தாள்; ஏனெ
னில், அவளுக்குத் திரும்பவும் உணர்வு வரத் தொடங்கிய
பொழுது விளக்கானது அவிக்கப்பட் டிருந்தது—சாளரங்
களின் வழியாயுந் திரைகளின் நடுவேயுள்ள திறப்பின் வழி
யாயும் பகலவன் கதிர்கள் புகுந்து துலங்கின. மிகவும் இளைப்
படையச்செய்து கிடக்கையிலே கிடத்திவிட்ட தீய கனவி
னின்றும் எழுந்திருப்பாள்போற் குமுதவல்லி சிறிது சிறி
தாகக் கண்விழித்தாள். கலக்கம் அடைந்த தன் நினைவுகளை
அதனினின்று மீட்கவுந், தன் எண்ணங்களை ஒன்று சேர்க்க
வும் மாட்டாதவளாய் அவள் நெடுநேரம் அசைவின்றிக் கிடந்
தாள். கடைசியாக அவை யெல்லாங் கனவு அல்ல என்னும்
ஐயுறவு அவள் உள்ளத்தில் நுழையலாயிற்று; என்றாலும்,
நெடுநேரந் தியங்கிக்கிடந்ததன் பயனாக அவள் மிகவுஞ்
சோர்வு அடைந்தவளாயும் ஆவிதளர்ந்தவளாயும் இருந்தமை
யால், இடம் பெயர்ந்து பார்ப்பதற்கே சில நொடிகள் கழிந்
தன; அங்ஙனம் பார்த்திருப்பாளானால் அஃது ஐயமெல்லாம் நீக்
கிக், கண்டது கனவு அன்று என மெய்ப்பித்திருக்கும். அப்படி
யிருந்தாலுங் கடைசியாக அவள் தனது கையைத்தூக்கிப்
பார்த்தாள்: மோதிரம் போய்விட்டது!

முன்னாட் பயணத்தின் களைப்பினால் இன்னும் அயர்ந்து
உறங்கிக் கொண்டிருந்த தன் பாங்கிமார்களை இப்போது

எழுப்பிவிட்டாள்; கலவரமானது ஏதோ நடந்திருக்கிறது என அவ்விரு பெண்களும் அச்சம் உற்றார்கள்: ஏனெனில், தங்கள் தலைவியின் குரல் ஒலி கலக்கமும் வெருட்சியும் நிறைந்திருந்தது. அவர்கள் அவளிடம் பறந்து ஓடினார்கள்: உடல்நலத்தின் குறியாகச் செந்தாமரை வண்ணமானது அல்லி மலரின் விளங்கு நிறத்தொடு கலந்து கனிந்து மெல்லெனத் தோயப்பெற்ற அவளது முகத்திலே வெளிறின நிறத்தைக் காண்டலும் பெருந் திகில் அடையப்பெற்றார்கள். தெய்வப் பேரின்பமே ஆழ்ந்து குடிகொளப்பெற்றவைபோலக் காணப்படும் அவள்தன் பருத்த அழகிய நீல விழிகளுங்கூட, இதற்கு முன் அப்பாங்கிமார் என்றும் பார்த்திராத ஒரு பொல்லாத தோற்றத்தை இப்போது உடையதாயிருந்தது. கலங்கியசொல்லிலும், வருத்தம் மிக்க சொல்லசைவிலும், முறை பிறழ்ந்த சொற்றொடர்களிலும் நடந்த கதையைக் குமுதவல்லி சொல்லக்கூடியவளானாள்; அவ்வாறு அதனைச் சொல்லிக்கொண்டு வருகையிற் சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவரும் பெருந்திகிலோடும், ஐயுறவோடும், அச்சங் கலந்த ஆவலோடும் அதனை உற்றுக்கேட்டுவந்தார்கள். குமுதவல்லி சொல்லிய சொற்களிலிருந்து அவள் தனக்குள்ள உரிமைப்பொருள்கள் எல்லாவற்றையும்விட இழந்துபோன அம்மோதிரத்தை மிக்கதோர் அரும்பொருளாக மதித்திருந்தாள் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளலானார்கள். இதற்குமுன் அவள் அம்மோதிரத்தைச் சுட்டி ஏதும் பேசக் கேட்டது இல்லாமையால், இச்செய்தி அப்பெண்களுக்கு முழுதும் புதிதாய் இருந்தது: உண்மையிலே அவர்கள் நினைப்பிடக்கூடிய வரையிற் சில நாட்களுக்கு முன்னேதான் தங்கள் தலைவியின் விரலிலே அவர்கள் அதனைப் பார்த்ததுமாகும். சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருந் தந் தலைவியினிடத்து மிக்க பற்றுதல் உடையவர்களாதலால், அவள் முகமறைத்துவந்த கள்வன் வாளுக்குத் தப்பிப் பிழைத்ததைப் பற்றி நெஞ்சங்கரைந்து வாழ்த்துரை சொரிந்தார்கள்: அவளுயிரைத் தப்புவித்ததாகிய அந்த மனவலிமையைப் பற்றியுங் கலக்கம் மிக்க இறும்பூதுடன் வியந்து பேசினார்கள்.

அவ்விரு பெண்களில் மூத்தவளும், மான் விழிபோல் மெல்லென்ற கரியநிறங் கலந்த பருத்தவிழிகளொடு கருங் கூந்தலும் வாய்ந்த அழகியாளும் ஆன சுந்தராம்பாள் தன் தலைவியை நோக்கிப், "பெருமாட்டியார் மறுபடியும் அக்கீழ் மகனைத் தெரிந்துகொள்ளக் கூடுமே?" என்று வினவினாள்.

"இல்லை—அவன் முகத்தை நான் பார்க்கவில்லை, அவன் உடம்பு நீண்டிருந்தது—யான் மதிப்பிடக்கூடும் அளவில் ஒல்லியாகவே இருந்தான்." என்று குமுதவல்லி மறுமொழி கூறினாள்.

"எங் கோமாட்டி, அவன் உடுப்பு?" என்று பரபரப்பாய் இடையிட்டு வினவினாள், மேற்கணவாய் மலைநாட்டு மகளிர்க்குள்ள அரிய வனப்பின்படி நெளிபட்ட கூந்தலுங் கருவிளம் பூப் போன்ற கண்களும் வாய்ந்த அழகிய ஞானம்பாள் என் னும் இளம் பெண்.

அதற்கு நாகநாட்டரசி, "நான் அதனை விளக்கமாக விரித் துச் சொல்லக்கூடவில்லை." என்று விடை கூறிப், பின்னும், "என்றாலும், அது நீலகிரி நாட்டான் உடைபோலிருந்த தென்று நினைக்கின்றேன்—இல்லை! இன்னதென்று என் றாற் சொல்லக்கூட வில்லை!" என்று, குழம்பிய தன் நினைவு களை ஒழுங்குபடுத்துவாள்போல் அழகின்மிக்க கையாற் புருவத் தைத் தடவிக்கொண்டே கூட்டிச் சொன்னாள்.

சுந்தராம்பாள் நினைவிழுந்த இறும்பூதோடும் எண்ணம் மிக்கவளாய், "அவன் யாராய் இருக்கக்கூடும்?" என்றுகேட் டாள்: பிறகு திடீரென ஒரு நினைவு தோன்றினவளாய் அணி கலமேசையண்டை விரைந்து போய், "இல்லை! பெருமாட்டி யார் சொன்ன வண்ணமே தங்கள் மோதிரத்தை யன்றி வேறொன்றையும் அவன் எடுத்துக்கொண்டு போகவில்லை!" என வியந்து சொன்னாள்.

"அவன் பொதுவான கள்வனாய் இருக்க முடியாது," என்று ஞானம்பாள் மனத்திற் படும்படி மொழிந்தாள்: "அவ னுக்கு ஏதோ வேறே நோக்கம் இருந்திருக்க வேண்டும்—"

"ஆம்! திண்ணமாய் அவன் வெறுங்கொள்ளையிடும் எண்ணத்தைத்தவிர வேறு நோக்கம் உள்ளவனாகத்தான் இருக்க வேண்டும்!" என்று குமுதவல்லி உரத்துச்சொன்னாள். "இந்த எண்ணம் எனக்கு முன்னே படவில்லை. இஃது என்ன கருத்துப்பற்றி இருக்கக்கூடும்? இந்த மோதிரம்—இந்த அதே மோதிரம் அவ்வாறு ஆவதற்கு—" என்று சொல்லியவள், தன் மனத்தில் நிகழ்வதைத் தன் பாங்கிமார்க்குத் தெரியப்படுத்த விருப்பம் இல்லாதவள் போல் இடையிலே பேச்சை நிறுத்திக் கொண்டாள்; பின்னும் ஆழ நினைந்து பார்த்தாள்.

"நாங் கூக்குரலிடுவோம்!" என்றாள் சுந்தராம்பாள் என்னுங் கருங்குழலாள். "ஒரு வேளை அந்தக் கொள்ளைக்காரன் இன்னும் இந்த விடுதியிலேயே இருக்கலாம்!"

அதற்கு, "ஆம்!" என்று, இக்கலவரத்தால் அவிழ்ந்து அழகிய தன் முகத்தை மறைத்த நெளிக்கூந்தலை விலக்கிக் கொண்டே ஞானம்பாள் கூவினாள்: "மணியகாரரை அழைப்பிக்க வேண்டும்! தேடிப்பார்த்து ஆராய்தல் வேண்டும்!"

இங்ஙனஞ் சொல்லிக்கொண்டே தன் பாங்கிமார் இருவருங் கதவைத்திறக்க ஓடியபோது, "நில்லுங்கள்!" எனக் குமுதவல்லி விரைந்து மொழிந்தாள். "சிறிது நினைந்துபார்த்தால் இதன்பொருட்டு ஏதும் முயற்சிசெய்யத் துவங்கல் பயன்படாதென்பது நமது அறிவுக்குத்தோன்றும். இப்போது விடிந்து ஐந்து நாழிகை ஆயின." என்று சாளரத்தின் வழித்தோன்றிய வெயிலைப் பார்த்தவளாய்ப் பின்னும், "பகலவன் ஏற்கெனவே கீழ்பாற் கிளம்பிப் பலநாழிகை ஆய்விட்டன; அந்தக்கொள்ளைக்காரன் சென்றஇரவில் இந்த விடுதியினுள் இருந்தானாயின், இந்நேரம் அவன் இதனைவிட்டு நெடுந்தொலைவு போய்விட்டான் என்பதைத் திண்ணமாய் அறிமின்கள்!" எனத்தொடர்ந்து உரைத்தாள்.

"அப்படியானால் இழந்த மோதிரத்தை வெளிப்படுத்துதற்குப் பெருமாட்டியார் ஒன்றுஞ் செய்யப்போகிற தில்லையா?" என்று சுந்தராம்பாள் வினவினாள். தம் இளம்பெருமாட்டி இப்போது எழுந்து உட்கார்ந்திருந்த கட்டிலண்டை தன்றோழி

யுந் தானுமாகத் திரும்பிவருகையில் ஞானம்பாள் "குற்றவாளி யைச் சிறை செய்வதற்கு?" எனச் சேர்ந்து வினவினாள்.

"அது பயன் படாதாகும் என அஞ்சுகின்றேன்—இல்லை, பின்னும் உறுதியாகவே நம்புகின்றேன். யான் சொல்வதை அமைதியொடு கேளுங்கள். என்னிடத்தினின்று அந்த மோதிரத்தைக் கவர்ந்துகொண்டு போனதைப்பார்த்தால், அவன் யாராயிருந்தாலும் ஏதோ ஆழமான கருத்துடையவனாய் இருக்க வேண்டும்; அவன் கருத்து இன்னதென்று யானே அறிந்து கொள்ளக்கூடவும் இல்லை, உய்த்தறியவும் முடியவில்லை பாருங்கள்! அவன் எவ்வளவு விழிப்பொடு வந்திருக்கின்றான்! அவனது முகத்தின் மேலோ ஒருமறைப்பு—அவன் நடவடிக்கைகளோ மிகவும் மறை பொருளான கள்ளத்தனத்தொடுகூடியவை—அவன் அப்பொழுது அணிந்திருந்த உடுப்பே அப்போதைக்குக் கொண்டதன்றி மறுபடி எக்காலத்தும் அணியாத வெறுங்கோலமே போலும்! ஆகையால் தன்கருத்து முற்றுப்பெற்றவுடனே இங்கே சிறிதுந் தங்காது தன்னைப் பாதுகாத்துக்கொண்டு போக அவன் தவறமாட்டான் என்பதை உண்மையாய் நம்பியிருங்கள்." என்று குமுதவல்லி துயரம் மிக்க சொற்களோடும் பார்வையோடும் மொழிந்திட்டாள்.

சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருங் குமுதவல்லி சொல்லியவற்றின் உண்மையைச் சோர்வுற்ற தமது பார்வையால் ஒப்புக்கொண்டு காட்டினர்.

"என் அன்புள்ள பெண்களே, யாரும் என்னை உன்னியாதவண்ணம் யான் வழிச் செல்கின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்—" என்று நாக நாட்டரசி பின்னுந் தொடர்ந்தாள்.

"ஓ! தக்க ஆண்டுணையொடு வழிச்செல்லும்படி யான் கழறியதைப் பெருமாட்டியார் பின்பற்றத் திருவுளஞ் செய்திருந்தால்!" என்று சுந்தராம்பாள் உரத்துச் சொன்னாள்.

உடனே ஞானம்பாள், "முதன்மையாய் அத்தனை நெடுந் தொலைவு!" என்று நடு நடுங்கி கூறினாள். இப்போது நிகழ்ந்த இடரைக் குறித்துப் பார்க்கும்போது, தன் பாங்கிமார் கள்ளமின்றிச் சொல்லிய சொற்களைப்பற்றிக் குமுதவல்லி

புன்முறுவல் செய்து, "ஒரு படைமுழுதுமே நமக்கு வழித் துணையாக வந்தாலும், உண்மையில் வலுகட்டாயமாக அன்றி மிகவும் இரண்டகமான சூழ்ச்சியால் விளைந்த இப்பொல்லாங்கி னின்றும் என்னைப் பாதுகாப்பதற்கு அது போதுமென்று எனக்குத் தோன்றவில்லை." என்றாள்.

"இந்த விடுதிக்காரருக்கு அது நடந்த வரலாற்றைச்சொல் வது நல்லதென்று பெருமாட்டியார் கருதவில்லையோ?" என்று சுந்தராம்பாள் கேட்டாள்.

"அதைப்பற்றி உன்னுடன் நான் பேசலாமென்றிருந்த பொழுதில்,நீ நடுவே உன் கருத்தைச் சொல்லலானாய். என்னை இன்னாரெனப் பிறர்அறியாதபடி யான் மறைவாகச் செல்வது எனது நோக்கத்திற்கு இணங்கினதாகு மென்பதை யான் முன்னமே உனக்கு நினைவூட்டத் தொடங்கினேன்; இனி, என்னைப் பிறர் எதுஞ் சுட்டிக் கருதும்படி செய்துகொள்ள விருப்பம் இல்லாதவளாய் இருக்கின்றேன். ஆகையால், உனது கருத்தைத் தழுவி இந்த விடுதியின் தலைவருக்கு எனது குறையை அறிவிப்பேனாயின், அவர் உடனே தமது இடத் தின் பெயரைக் காப்பாற்றுவதற்காக இதனைத் தீர ஆராய வேண்டுமென்று கட்டாயப் படுத்துவார்: மணியகாரர் இவ ருதவிக்காக அழைக்கப்படுவர்—இந்தக் கணையாழியைக் குறிப் பாய்க் கைப்பற்றுதற்குக் காரணமாய்நின்ற கருத்தின் உளவை வெளிப்படுத்துதற்காகத் திருடினவன் யாராயிருக்கலாம் என்று என்னைக் கேள்விமேற்கேள்வி கேட்பார்கள்—இப்படிப்பட்ட ஆராய்வுகளின் ஊடே செல்ல யான் சிறிதும் விரும்பவில்லை. எனவே, எல்லாவற்றையும் ஆழ்ந்து சூழுங்கால், எனக்கு நேர்ந்த துன்பத்தை யார்க்குந் தெரிவியாமற் சும்மா இருப் பதே நல்லது." என்று மறுமொழி கூறினாள்.

"என்றாலும், என் அன்புள்ள செல்வியே, இதனைப் பொறுத்து இருத்தல் அரிதே யாம்!" என்றுசொல்லிக் கொண்டே சுந்தராம்பாள் குமுதவல்லியின் கையை எடுத்து அன்போடும் வணக்கத்தோடுந் தன் இதழ்களில் அழுந்த முத் தம்வைத்தாள்.

"ஆம், அரிதுதான்!" என்று கூடச்சொல்லிக்கொண்டே ஞானும்பாள் குமுதவல்லியின் மற்றைக்கையை எடுத்து அங்ஙனமே முத்தம் வைத்தாள்.

"அஃது அரிதாயிருந்தாலும், நமக்கு வேறுவழி யில்லாமையால் அப்படித்தான் செய்யவேண்டி யிருக்கின்றது." என்று குமுதவல்லி சேர்ந்து பேசினாள். "ஆகையால், என் இளம் பெண்களே, இந்தக் கெடுதியை எந்த உயிருக்குஞ் சொல்லாதிருக்கும்படி யான் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன். நீலகிரிக்கு நாம் நம் வழியே தொடர்ந்து செல்வோம். நாம் இப்போது கற்றுக்கொண்ட பாடமானது இனி நம்மை இன்னும் விழிப்பாய் இருக்கும்படி செய்யும்" என்று சொல்லியதும், அவள் பாங்கிமார் தந் தலைவியை ஒப்பனை செய்தற்கு வேண்டுவன ஒழுங்கு பண்ணப் போனார்கள். உடனே குமுதவல்லி தனக்குள் ஆராய்ந்து பார்த்து மெல்லியகுரலில், "அந்தோ! இப்போது அக் கணையாழியினை இழந்து விட்டமையால் மறைமுகமான இவ்வழிச்செலவின் நோக்கமும் இழக்கப் பட்டுப்போமே! என்றாலும், நான்விடாமல் முயன்று பார்க்க வேண்டும்: யான் அந்த மோதிரத்தை யார்கையிற் கொடுக்கும் படி கட்டளையிடப்பட்டேனோ அவருக்கு என்னிடத்திலிருந்து அது தவறிப்போன தீவினையை யான் விளக்கமாய்ச் சொல்லலாம் என்று நினைக்கின்றேன்." என்று சொல்லிக் கொண்டாள்.

இச் சொற்கள் மிக மெதுவான குரலிற் சொல்லப்பட்டமையால் அவ்வறையின் கடைசியிலே வெவ்வேறுமூலைகளிலிருந்த சுந்தராம்பாள் ஞானும்பாள் செவிகளுக்கு அவை எட்டவில்லை. சென்ற இரவின் திகிலான நிகழ்ச்சிக்குப்பின் வந்த நீண்ட அயர்ச்சிக் களைப்பினின்றும் இப்போது குமுதவல்லி மிகவும் நலம்பெற்றமையாற், சிதறுண்ட தன் மனமுயற்சிகளைத் திரும்பவும் ஒன்று கூட்டத் தன்னால் ஆனமட்டும் முயன்றாள்.

பிறகு தான் பூணவேண்டுவன வெல்லாம் முற்றும் பூண்டாள்—காலை யுணவு உட்கொள்ளப்பட்டது—புறப்படுதற்குக்

குதிரைகளை ஒழுங்கு செய்யும்படி கட்டளை தரப்பட்டது. ஆனால் அச்சாவடித் தலைவனே இப்போது எதிரேவந்து, தகுந்த பணிவுடன் தன் அழகிய விருந்தினருக்குத் தான் சொல்ல வேண்டி யிருப்பதைச் சொல்லும்வண்ணம் விடை தரும்படி கேட்டான். குமுதவல்லி அவனைப் பேசும்படி கட்டளை கொடுத்தாள்; அப்படிக்கொடுக்கையிற் சிறிது கவலையும் ஐயுறவுங் கொண்டாள்; ஏனென்றால், இனி வெளிவருஞ் செய்தி முன்னாள் இரவின் நிகழ்ச்சியோடு தொடர்புபட்டதாய் இருக்கக் கூடுமென்றெண்ணினாள்.

"நான் கேள்விப்பட்டபடி, பெருமாட்டி, தாங்கள் தங்கள் பாங்கிமாரொடு மட்டும் வழிப்போகக் குறித்திருக்கிறீர்களோ? அங்ஙனஞ் செல்வது அறிவுடைமைக்குச் சிறிதும் பொருந்தாதென்றும், உண்மையாகவே அது பேரிடராய் முடியும் என்றுந் தங்களுக்கு யான் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்." என்று அந்த விடுதிக்காரன் தொடர்ந்து பேசினான்.

"அதனை விளக்கமாய்ச் சொல்லும்" என்று குமுதவல்லி மிகுந்த பதைபதைப்போடுங் கூறினாள்.

உடனே சாவடித்தலைவன் சொல்வானாயினன்: "ஒரு வகையில் மலைநாடனென்றாலும் மற்றொருவகையில் வழிப்பறிகாரனென ஓர் ஆளைப்பற்றித் தாங்கள் எப்போதாயினுங் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அவன் மலைநாடனென்ற வகையில் நமக்கு இயற்கைப் பகைவர்களான சோழநாட்டார்க்கு மிகுந்த தீமை செய்துவருதல்போலவே, கொள்ளைக்காரன் என்ற வகையில் அவ்வளவுக்கு மிகுந்த துன்பத்தைத் தன்சொந்த நாட்டார்க்குஞ் செய்துவருகின்றான். தன் படைக்கலங்களை நமக்கு எதிராகவே சிலநேரங்களில் திருப்பிவிடும் அத்தகைய மறவனுதவியை நாம் வேண்டாமலே இருந்துவிடக் கூடுமே."

"திண்ணமாய் நீர் நல்லானைப்பற்றித்தான் பேசுகின்றீர்." என்று குமுதவல்லி சொன்னாள்.

இதற்குச் சாவடித்தலைவன் இணைந்து பேசுவானாய், "வேறு யாரையும் அன்று, பெருமாட்டி, அவனும் அவனது

இழிந்த மறக்கூட்டமும் இந்தப்பக்கங்களில் அடிக்கடி வருவ தில்லை, என்றாலும்—'' என்று முடிப்பதற்குள், குமுதவல்லி தன் கதுப்புகள் வெளிறப்பெற்றவளாய், ''அச்சந்தரும் நல்லா னுஞ் குறையிடும் அவன் ஆட்களும் இந்த நாடுகளில் வந்து இப் போது தொல்லை கொடுக்கிறார்கள் என்பது உண்மையா?'' என்று கூவிக்கூறினாள்.

''பெருமாட்டி, அதுமெய்தான்.'' என்று சாவடிக்காரன் விடைபகர்ந்தான்.

''எனினும், ஒரு குறிப்பிட்ட பாதைவழியே நான் பய ணம் போனால் ஒருபடையைத் துணைகூட்டிவந்ததுபோல அவ னது கொள்ளைக்குத் தப்பலாம் என்று உறுத்திச் சொல்லக் கேட்டேன். இல்லை, இன்னும் படைக்கலம் பூண்டோரைத் துணைகூட்டிச் செல்வது வேண்டற்பால தன்று எனவுஞ் சொல்லக்கேட்டேன்; அதனாலேதான் நான் என் பாங்கிமா ரொடு பயணம்போகக் கண்டீர். இவ்வுறுதி மொழிகளை என் னிடம் புகன்றவன் நீலகிரியினின்றும் வந்த ஓர் இளைஞன் ஆவன்,—அவன் நன்மையே கருதுபவன், நம்பிக்கையுள்ளவன் என்று நினைப்பதற்கு நல்ல காரணங்கள் உண்டு; எனது வீட் டுக்கு என்னிடம் அவன் வந்தபோது அவனிடம் நம்பகமான செய்தி ஒன்று கொடுக்கப்பட் டிருந்தது. அவன் நீலகிரியில் நிலையாய் இருப்பவன் ஆதலால் வழிப்பறிகாரர் தலைவனை நல்லானுடைய வழக்கமான பழக்கங்களைப் பற்றி அவன் செவ்வையாகத் தெரிந்திருக்க வேண்டுமென்று யான் எண்ணி னேன்; தொலைவிலுள்ள வேற்று நாட்டில் இருக்கும் நானே நிலைப்படாத ஊரார் பேச்சைக்கொண்டும் பரும்படியான செய்தி களைக் கொண்டும் அவன் பழக்கங்களைப்பற்றிச் சிறிது தெரிந் திருக்கின்றேன்.'' எனக் குமுதவல்லி கூறினாள்.

''பெருமாட்டி, உங்களுக்கு அறிவித்தவன் தான் எண் ணியபடி பேசினான் என்பதில் ஐயமில்லை: தான் பிறந்த மலை களின் நடுவிலேயே வழக்கமாய்த் தங்கியிருந்து கொண்டு அதற்கு அருகாமையில் வரும் தனது இரைமேற் பாய்ந்து அதனை அடித்துக்கொண்டு போகுங் கழுகைப் போன்றவன்

நல்லானுகையால், பெரும்பாலும் அவன் உண்மையே பேசினன். என்றாலும், அக் கழுகு சிலகாலங்களில் மேற்கணவாய் மலைகளைவிட்டு நெடுந்தொலைவு பறந்து போய்ப் பச்சென்று கொழுமையாய் இருக்குந் திறந்த வெளிகளில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆட்டுக்குட்டியை இறுஞ்சிப் போதலும் உண்டு. அப்படியே நல்லானுஞ் செய்வதுண்டு. அவன் ஆட்களிற் சிலர் சென்ற இரண்டொரு நாளாய் இந்தப்பக்கங்களிற் காணப்பட்டார்கள். பெருமாட்டி, இன்னும் என்ன சொல்வது—திடுக்கிடாதேயுங்கள்—திகில் கொள்ளாதேயுங்கள்—இடர் ஒழிந்து போயிற்று! நல்லான்'' என்று சாவடித்தலைவன் தான் சொல் லுஞ்செய்திக்கு இணங்கச் செய்துங் காட்டுவோனாய் மெதுவான குரலிற் பின்னும், ''நல்லான் இந்த விடுதியினுள்ளே நேற்றிரவு தங்கியிருந்தான்!'' என்று மறுமொழி கூறினன்.

திடுக்கிடவேண்டாம் எனவுந் திகிற்படவேண்டா மெனவும் அங்ஙனம் மனவுருக்கத்தொடு கேட்டுக்கொள்ளப் பட்டாலும், அழகிற் சிறந்த குமுதவல்லி கதுமென மிகவுந் திடுக்கிட்டாள், பெருந்திகிலானது அவள் முகத்தின்மேற் புலப்பட்டுத் தோன்றியது. சாவடிக்காரன் அச்செய்தியை அறிவித்த அந்த நேரத்திலேயே அவள் உள்ளத்தில் ஓர் எண்ணந் தோன்றியது. தன் அறைக்குள் முகமறைத்து வந்தவன் கிலிபிடிக்கப் பண்ணுங் கொள்ளைக்காரனாய் இருக்கக்கூடுமோ? என்பதே அது.

''தாங்கள் அமர்ந்திருக்க வேண்டுமென யான் தங்களைக் கெஞ்சிக் கேட்டும், பெருமாட்டி, 'தாங்கள் இங்ஙனந் திடுக்கிட்டது ஓர் ஒருவியப்பன்று; ஏனென்றால், அவ்வளவு அஞ்சத்தக்க ஓர் ஆள் இக்கட்டிடத்தினுள்ளே தங்கியிருந்தான் என்பதை எண்ணிப்பார்த்தால் அஃது ஒரு பெருந்திகிலான செய்கையாகத்தான் இருக்கும்!'' என்று விடுதிக்காரன் திரும்பவும் அதனை எடுத்துப் பேசினன்.

உடனே குமுதவல்லி விரைந்து, ''அவன் எப்படி இருப்பான் என்பதை எனக்குச் சொல்லிக்காட்டும். உம்மாற் கூடிய வரையில் நுட்பமாக அவனை முடிமுதல் அடிகாறுந் தெளிவாய்ச் சொல்லிக்காட்டும்; ஏனெனில், அலுவலின் பொருட்டு

வழிநடையாய்ப் போவார் எவர்க்கும் அச்செய்தி மிகவும் பயனுடையதாயிருக்கலாம்.'' என்று கூறினாள்.

''நானே அவனைச் செவ்வையாகப் பார்த்ததில்லை, பெருமாட்டி, ஆனாலும் நான் இவ்வளவு உங்களுக்குச் சொல்லக் கூடும்—அவன் தீத்தொழிலில் முதிர்ந்தவனாயிருந்தாலும் ஆண்டில் இளையவனே—நாற்பத்தைந்து அகவை யுள்ளவனாகிய நான் அவனுக்குத் தகப்பன் என்று சொல்லக் கூடியதா யிருக்கும். பிறகு, அவன் உடம்பின் தோற்றத்திலோ நீண்டு ஒல்லியா யிருப்பான்—அவன் மயிர் கறுப்பாயிருக்கும்—அவன் கண்கள் நேர்த்தியாயிருக்கும்; அவன்—ஆம் எனக்கு நினைவிருக்கிறது—அவன் மீசை வைத்திருக்கின்றான்.'' என்று சாவடிக்காரன் மறுமொழி புகன்றான்.

குமுதவல்லி திகில்கொண்ட குரலில், ''உயரமாய்—ஒல்லியாய்—கரியமயிரோடு.'' என்று சொல்லிக்கொண்டே, ''நல்லது நேற்றிரவு அவன் இங்கேயிருந்தபோது எவ்வாறு உடை அணிந்திருந்தான்?'' என்று விரைந்து கேட்டாள்.

அதற்கு அவ் விடுதிக்காரன் சொல்லுவான்: ''உண்மையிலே நான் அவன் உடையை நுணுக்கமாய்க் குறிப்பிட்டுப் பார்க்கவில்லை; என்றாலும், யான் நினைவிடக்கூடியமட்டில் அது பொதுவாகவும் எளியதாகவும் இருந்தது. என்றாலும், நீங்கள் யாரையேனும் பார்க்கும்படி நேர்ந்து வேறுகாரணங்களால் அவனை நல்லான் என்று ஐயுறவருமானால் அவன் உடையைக் கண்டு ஏமாறிப்போகாதீர்கள்: ஏனென்றால், மலைமேலிருந்து பாய்ந்து தன் இரையை இறுக்ஞ்கிக் கொண்டு போகுங் கழுகின் விரைவையுந் தன்னை எதிர்த்தோருடன் சண்டையிடும்பொழுது புலியின் வலிவையும் நல்லான் உடையனாயிருப்பது போலவே, நேரம்வாய்த்தபோது தனது இரண்டகத்தைக் காட்டும்படியான நரிக்குள்ள சூழ்ச்சியும் அவனுக்கு உண்டு. ஆகவே, எல்லா வகையான கோலங்களும் அவன் கையி லிருக்கின்றன: அவன் மலைப்பாங்குகளில் இருக்கும்பொழுது கள்வனைப்போற் கோலம் பூண்டவனாய் இருக்கலாம்: ஆனால், நகரங்களுக்குப் போம்போதோ ஏழைக்குடியானவனைப்போலவும் இருக்கலாம்.

அஃதன்றியும், இன்னும் அவன் ஒரு துருக்கனைப் போலவும்—பறங்கிவணிகனைப்போலவும்—பாரசீகனைப்போலவும் அல்லது யூதனைப்போலவுங் கூடக் கோலம் பூண்டு வருவான் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்துப், பெருமாட்டி, பலமுறைகளில் என்காதுகளுக்கு எட்டியவற்றை எல்லாம் உங்களுக்குச் சொல்லுவேனானால்—" என்று சொல்லி முடிவதற்குள் நடுவே குமுதவல்லி, "உமது சாவடிக்கு அவன் எந்த நோக்கத்துடன் வந்திருக்கலாம் என்று நினைக்கின்றீர்?" என்று வினவினாள்.

அதற்குச் சாவடிக்காரன், "பெருமாட்டி, அதனை யார் சொல்லமுடியும்? ஒருகாற் சிறிதுநேரம் இளைப்பாறவும் உணவு கொள்ளவும் வந்திருக்கலாம்: ஒருவேளை வீட்டிலேயே ஏதாவது பறித்துக்கொண்டு போகக்கூடுமா என்று பார்க்கவும் வந்திருக்கலாம்; அல்லது ஒருகாற் பலதிறப்பட்ட பயணக்காரர் கூட்டங்களும் இன்றைக்கு எந்த முகமாகப் போவார்களென்று தெரிந்துகொண்டு அவர்களைப் பின் றொடர்தற்கும் வந்திருக்கலாம்; பின்னதுதான் பெரும்பாலும் நம்பத்தக்கதாயிருக்கின்றது. ஆ! அவன்தான் என்றுமட்டும் நான் தெரிந்தேனானால் அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தரப்படும் பரிசானது இவ்வாண்டில் எனக்குவரும் ஊதியத்தை மிகுதிப்படுத்துவதாயிருக்கும்—காலம் நன்றாயில்லை என்பதைப் பார்க்கும்போது—" என்று உலகிலுள்ளவர்கள் எல்லாரும் வழக்கமாய் முறையிட்டுக் கொள்வதான காலநிலைமையைப்பற்றி அவன் விரித்துப்பேசப் புகுந்த அப்பொழுது;

நடுவே குமுதவல்லி, "அவன் புறப்பட்டுப் போன பிறகு நீர் தங்கவைத்தவன் கள்வர் தலைவனான நல்லானே என்று எப்படிக் கண்டுகொண்டீர்?" என்று வினவினாள்.

"அந்தப்புலையன்! ஒரு வழியிலன்றிப் பலவழியிற் பிறர்க்குத் துன்பந்தரத் தெரிந்திருக்கின்றான். பெருமாட்டி, தங்கள் அறைக்கு மிகவும் எட்டியிராத தன் அறையிலிருந்தும் அவன் பாதியிரவிலே கீழ்இறங்கிக் குதிரைப்பணைக்கு விரைந்து போய்க் குதிரைக்காரனைத் தட்டிஎழுப்பித் தன்குதிரைக்குச்

சேணம் இட்டு அவன் புறப்படுதற்கு ஒழுங்கு பண்ணினதை எண்ணிப்பாருங்கள். ஆயினும், அவன் எனக்குத் தரவேண்டிய தொகைக்கு மேலே மிச்சமாகப் பணத்தைத் தன் மேசைமேல் வைத்துவிட்டுப் போனான் என்று ஒத்துக்கொள்ளுகிறேன். சாவடிமுற்றத்திலே அவன் தன் குதிரைமேல் ஏறுந்தறுவாயில் ஒரு வழிப்போக்கன் உள்ளே வந்தான்; இவன் குடகுநாட்டு வணிகனாய் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்; இவன் நேரங் கழித்து வந்தமையால் தன்னை ஏற்றுக்கொள்ளுதற்குச் சிலர் விழித்திருப்பதைப்பற்றி ஒருவாறு மகிழ்ச்சி அடைந்தான். ஆனால், அவ்வேழை வணிகன் பந்த வெளிச்சத்தினாற், புறப் பட்டுப்போகும் விருந்தினன் முகச்சாயலைப் பார்த்தவுடனே ஆ! எப்படி நடுநடுங்கினான்! அவனோ பறந்துபோயினான், அவன் குதிரைக் குளப்படிகள் தெருநெடுகக் கடகடவென்று விரைந்து ஓசையிட்டன; அவ்வோசை நெடுந்தொலைவில் அவிந்துபோன பிறகுதான் நடுக்க முற்ற அவ்வணிகன் நல்லான் என்னும் பெயரைக் குழறலுடன் சொல்ல வலிவுபெற்றான்.'' என்று அவ்விடுதிக்காரன் உரத்துச்சொன்னான்.

குமுதவல்லி ஆழ்ந்த நினைவோடும், ''ஆ! அவன் அங்ஙனம் பாதி யிரவிலா போயினான்!'' என்றுகூறிப் பின்னுந் தனக் குள்ளே ''அப்படித்தான் இருக்கவேண்டுமென யான் கருதி னேன்.'' என்று சொல்லிக் கொண்டாள்.

''நல்லது பெருமாட்டி'' என்று பேச்சுக்காரனை அவ் விடுதிக்காரன் பேசத் தொடர்ந்தான், ''கேட்டவர்களுக்கு நடுக்கத்தை உண்டாக்கும் நல்லான் என்று குதிரைக்காரன் தெரிந்தவுடனே, புறப்பட்டுப்போன அவ்விருந்தினனுக்குப் பின்னால் அவன் கூக்குரல் இடுவதற்கு நேரம் ஆகிவிட்டது; ஆகவே, என்னையும் என் ஊழியக்காரர்களையும் உடனே கூவி எழுப்பி அதனை அறிவிப்பது தேவையில்லை என்று அவன் எண்ணினான். ஆனால், விடிந்தவுடன் நேர்ந்தது இன்னதென அறிவிக்கப்பட்டேன்; உடனே யான் முதலிற் செய்த காரியம் அக்கள்வர் தலைவன் தங்கியிருந்த அறைக்குக் கடுகப்போனதே.

அவன் எதனையும் எடுத்துக்கொண்டு போகவில்லை. மேசை மேல் அகலமான ஒரு பொன் துண்டு வைக்கப்பட்டிருந்தது.''

இப்போது குமுதவல்லி தன்னறைக்கு முகமறைப்பு இட்டு வந்தவன் அஞ்சத்தக்க நல்லானைத் தவிர வேறுயாரும் அல்லர் எனச் சிறிதும் ஐயமின்றித் தெளிந்தாள்; நடுக்கத்தை யுண்டாக்கும் அக் கொள்ளைகாரனிடத்தில் தான் அகப்பட்டிருந்ததனை நினைக்கவே அவளுக்கு மிக்கநடுக்கம் உண்டாயிற்று. ஆனாலும், முன்னமே அவள் தன் தோழிமார்க்கு விளங்கப்பண்ணின காரணங்களால், நிகழ்ந்ததையேனும் மோதிரம் இழந்ததையேனுஞ் சாவடிக்காரனுக்குச் சொல்வது தக்கதென்று அவள் எண்ணவில்லை: அப்படிச் சொல்லியிருப்பாளானால் அவன் ஐயமின்றி அதனை அறமன்றத்திற்குக் கொண்டுவரும்படி வற்புறுத்துவான்; அதனால் மிகுதியாய்ப் பணங்கொடுக்கும் குமுதவல்லியானவள் தன் சாவடியிலே பல நாட்கள் தங்கியிருக்க நேரும் என்னும் நோக்கமும் அவனை அவ்வாறு செய்யும்படி தூண்டும்.

நல்லான் அவ்விடுதிக்கு வந்ததைப்பற்றிக் குமுதவல்லி எவ்வளவு வருந்தலானாள் என்பதைச் சிறிதும் அறியாதவனாய் அவன் பின்னும் பேசுவானாயினன்: ''ஆகையால், பெருமாட்டி, ஓர் அஞ்சலிடம் போகும்வரையில் தாங்கள் தக்க வழித்துணையோடு ஏகுவது நலமாமென்று உங்களுக்குத் தோன்றுகின்றதன்றோ: அதன்பிறகு உங்களுக்கு இசைவாயிருந்தால் உங்கள் தோழிமாரொடு நீங்கள் தனியே செல்லலாம். ஏனென்றால், நல்லான் இப்போது ஏதேனுந் தங்களுக்குத் தீங்குஇழைக்க எண்ணியிருந்தானானால், இங்கிருந்து சிறிது தொலைவான இடத்திற்கு அப்பால் அவன் தன் பதிவிடத்திலிருந்து நீங்கள் நல்ல துணையொடு செல்வதைப் பார்த்தவுடனே அவன் தன் எண்ணத்தை மாற்றிவிடுவான்.''

குமுதவல்லியோ தன்னைச் சுட்டி அக்கள்வர் தலைவன் ஏதேனும் முடிவான நோக்கங் கொண்டிருப்பான் என்று உண்மையிலே ஒன்றும் நினைக்கவில்லை: அவன் நோக்கம் எதுவாய் இருந்தாலும் அம்மோதிரத்தை அவன் தன்அகப்படுத்திக்

கொண்ட அப்பொழுதே அது நிறைவேறிவிட்டதென அவள் எண்ணினாள். ஏனெனில், அவள் இப்போது தன்னிடம் வைத்திருந்த பொருள்களையெல்லாம் அவன் கொள்ளைகொண்டு போக வேண்டுமெனக் கருதி யிருந்தானாயின், அவன் அவள் அறையினுட் புகுந்து அவள் உறங்குவதாக எண்ணிய சென்ற இரவைக் காண்டிலும் வேறு நல்ல பொழுது அவனுக்கு எங்ஙனம் வாய்க்கக்கூடும்? ஆகவே, அதைப்பற்றி அவளுக்கு இனி அச்சமில்லையாயினும், வழித்துணையைக் குறித்துச் சாவடிக்காரன் சொல்லிய வேண்டுகோளுக்கு அவள் இணங்கினாள். தான் செல்வம் மிகுதியும் உடையவளாதலால் அதன் செலவை அவள் ஒரு பொருட்படுத்தவில்லை. மேலும், அத்தகைய முன்னறிவிப்பை அவள் புறக்கணித்தால் அஃது ஒரு புதுமையாய்க் காணப்படும் எனவும் அஞ்சினாள். ஆதலால், அவள் அதற்கு உடன்பட்டு மறுமொழி புகன்றாள்; அச்சாவடித் தலைவனும் வேண்டு மேற்பாடுகளைச் செய்வித்தற்கு விரைந்து போனான்.

குமுதவல்லிக்கும் அவ்விடுதிக்காரனுக்கும் இடையே நிகழ்ந்த இவ்வுரையாட்டு நடையறையிலே நடந்தது; அப்போது தோழிமார் இருவருந் திரும்பவும் பயணந் தொடங்குதற்கு வேண்டுவனவற்றை முடிக்கும்பொருட்டுப் படுக்கையறையிலே அலுவலாயிருந்தனர். ஆகையால், அவ்விருபெண்களும் நாம் இங்கெழுதிய உரையாட்டை ஒட்டுக்கேட்கவில்லை; குமுதவல்லியும் நல்லானைப்பற்றித் தான் கேட்டவற்றில் ஓர் எழுத்தாயினுஞ் சொல்லி அவர்களை அச்சுறுத்தலாகாது எனத் தீர்மானஞ் செய்துகொண்டாள். அவள் அவர்களிடந் திரும்பிச் சேர்ந்தவுடன், தனது வழிசெல்லும் அம்முகமாகவே, முதல் ஆறுநாழிகை வழி படைக்கலம் பூண்ட துணைவர் போவதால், தானும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளக் கருதுவதாகமட்டும் அவர்களுக்குச் சொன்னாள்.

நன்கு படைக்கலம் பூண்ட பன்னிரண்டு ஆட்கள் சாவடிக்காரனால் இவ்வழித்துணைக்கென்று வகுக்கப்பட்டார்கள்—, இவர்கள் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் திட்டமாய் மூன்றிலொரு பங்கு தனக்குரியதென்று ஒப்பந்தஞ் செய்து

கொண்ட காரணத்தாற், கூடியமட்டில் துணைவர் தொகையை மிகுதிப் படுத்துவதில் அவன் கருத்துக் கொண்டிருந்தான். இங்ஙனந் துணைவர் பின்வரக் குமுதவல்லி தன்பாங்கிமார் இருவரோடும் நீலகிரியை நோக்கிப் பயணம் புறப்பட்டாள்.

ஏழாம் அதிகாரம்.

எதிர்ப்படுகை

நாகநாட்டரசியும் அவள் பாங்கிமாரும் ஏறியிருந்த குதிரைகள் மூன்றும் நல்லழகுவாய்ந்தவைகள். குமுதவல்லியின் மெல்லிய உடல் ஒழுங்கொடு கூடியதொன்றாயினும், நிறைந்த அழகு திகழும்படி போதுமானவரையில் உறுப்புகளின் அளவு திரண்டு உருவாகிய அவளது நீண்டவடிவானது, அவள் குதிரைமேல் அமர்ந்த நிலையின் நயத்தாலும், அவளது செயற்கையல்லா இயற்கை நடையின் சீரினாலும், அச்சிறந்த புரவியின் நடைகளுக்கு ஏற்ப அவள் துவண்டு தன்னை இசைவித்துக் கொள்ளும் நொய்மையாலும் பின்னும் மிக்கஎழில் உடைத்தாய் விளங்கித் தோன்றுவதாயிற்று.

அவள் வழிப்பயணத்திற்கு ஏற்ற ஓர் அழகிய உடை அணிந்திருந்தாள். திறப்பாகவிட்டிருந்த உட்சட்டையானது பொற்சரிகை பின்னப்பட்டிருந்தது,—இச்சரிகைவேலையில் ஒருபாகம் இவள்தானே தன் ஓய்வுநேரங்களிற் செய்தது, மற்றொருபாகம் இவள் தோழிமாரின் திறமையானும் நுண்ணறிவானுஞ் செய்யப்பட்டது. அதற்கு அடியிலே அணியப்பட்டிருந்த கீழ்ஆடையானது தொண்டைவரையிற் கட்டப்பட்டிருந்தது. அது வடிவத்திற் பொருந்திய அமைவினால் மார்பிற் றிரண்ட கோளவடிவை வரைபெறக்காட்டியது. உட்சட்டையின் குறுகிய கைகளானவை, பால்போன்ற வெண்மைநிறத்தொடு வியப்பாக உருவமைந்த முன்கைகளைப் பெரும்பாலும் வெளியே காட்டின; அக்கையின் தெளிவான தோலோ நீல நரம்புகளின் மெல்லிய சுவடுகளைப் புலப்படக்காட்டியது. இடுப்பின்கீழ் உடுக்கப்பட்டு முழங்கால்வரையிற் றொங்கும் மேலாடையானது பெரிய பொற்சரிகைக் குச்சு உடையதாயிருந்தது; இதற்குக் கீழே உடுக்கப்பட்டிருந்த சிறுநிறமுள்ள நீண்ட பட்டாடைமேல் இஃது அணியப்பட்டிருந்தமையால் இஃது அவ்வுடுப்பின் அழகை மிகவுஞ் சிறப்பித்துக் காட்டுவ

தாயிற்று. மெல்லிய வெண் சல்லாவினுற் செய்யப்பட்ட முக்காட்டு ஆடையானது அவள்முடிமேலிருந்து முதுகின்கீழ்த் தொங்கியது — அது சிலவேளை வீசிய சிறுகாற்றிலே பறந்தது; சிலவேளை குதிரை உடம்பின்மேல் அலேஅலேயாய் அழகுடன் மிதந்துகிடந்தது.

இளம்பெண்கள் இருவருந் தம் இளம்பெருமாட்டியின் உடையினும் விலே மிகக் குறைந்ததே உடுத்திருந்தார்களாயினும், அவ்வுடை அழகிற்குறையாதாய் நாகரிகமும் நேர்த்தியும் வாய்ந்ததாயிருந்தது. குமுதவல்லியும் அவள் தோழிமாருஞ் சைவ சமயத்திற் சேர்ந்தவர்களா யிருந்தமையால், ஏனே வடநாட்டுப் பெண்களின் வழக்கம்போல் தம் முகங்களே முழுதும் முக்காட்டினுல் மறைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஏற்பாடு உடையவர்களாய் இல்லேஎன்பதை இதனைப் பயில்வோர் நினைவில் வைக்கவேண்டும்.

அவ்வழகிய பெருமாட்டியும் நல்ல தோற்றமுள்ள அவள் பாங்கிமார் இருவரும் ஆக மூவரும் நன்றுகச் சேணம் இடப்பட்ட குதிரைகளின்மேல் அமர்ந்து, தமக்குப் பின்றுணையாய்ப் படைதாங்கி வந்த நீலகிரி நாட்டுமக்கள் பன்னிருவரினின்றும் மிக வேருய் விளங்கிய தோற்றமானது நிரம்பவும் மனத்திற்கு இனியதாயிருந்தது. சாவடியைவிட்டுப் புறப்பட்ட பிறகு, முதலிற் சில நாழிகை வழி வரையிற் குறிப்பிடத்தக்கது ஏதும் நிகழ வில்லே; ஆனுற், கடைசியாக நாகநாட்டரசியும் அவள் பாங்கிமாரும் ஐந்து நாழிகை நேரம் இளேப்பாறவும், அவர்கள் குதிரைகளே இளைப்பாற்றவும், இப்போது வழித்துணையாக வந்தவர்கள் அவர்களேப் பிரிந்துபோகவும் வேண்டிய ஓரிடம் வந்து சேர்ந்தது. குமுதவல்லி இப்போது தன் பாங்கிமாரொடு மட்டும் பயணம் போவதா, அல்லது வேருெரு துணையைத் தேடிக்கொள்வதா என்று தீர்மானிக்க வேண்டியவளானுள். நாம் முன்னமே மொழிந்த காரணங்களேக்கொண்டு அவள் முந்திய ஏற்பாட்டின்படி நடக்க எண்ணங்கொண்டாள்: ஆனுல், இந்தத் தங்குமிடத்தில் வந்த ஒரு செய்தியினுல் அவள் தான் கொண்ட இவ்வெண்ணத்தை மாற்ற வேண்டியவளானுள்.

இச்செய்தி நல்லாளைப்பற்றிய தன்று; மற்று இஃது அக்கொள்ளைக்காரனைவிடத் திகில் கொள்ளத்தக்க ஒருபகைவனைப் பற்றியதாகும். சுருங்கச் சொல்லுங்கால், அங்கே அடுத்துள்ள இடத்தில் வழிதப்பித்திரியும் ஒரு புலியானது தென்பட்டது. சுந்தராம்பாளும் ஞானம்பாளும் இச்செய்தியைக்கேட்டுத் துயரத்தொடு திடுக்கிட்டார்கள்; குமுதவல்லியுந் தான் அச்சமில்லாதவளாய் இருக்கவில்லை. ஆகவே, படைக்கலம் பூண்ட இரண்டு ஆண்மக்களை வழித்துணை கொள்ளும்படி தீர்மானஞ் செய்யப்பட்டது; இந்தஏற்பாடானது பிறகு முறையே கைக்கொள்ளப்பட்டது.

திரும்பவுங் குமுதவல்லி தன் பாங்கிமாரோடும், வழித்துணையாகக் கொள்ளப்பட்ட இரண்டு வலிய நீலகிரி நாட்டாருடனும் பயணம் புறப்பட்டபோது ஏறக்குறையப் பிற்பகல் இருபத்திரண்டுநாழிகை யாயிற்று. இவ்வாண்மக்கள் இருவரும் உடம்பெங்கும் படைகள் தாங்கி வலிய குதிரைமேல் ஏறியிருந்தார்கள்: அக்கொடிய விலங்கு கண்ணுக்கு எதிர்ப்பட்டால் உறையினின்றுங் கைத்துப்பாக்கிகளை இழுப்பதற்கு அவர்கள் தங் கைகளைச் சீராக வைத்திருந்தார்கள். அவர்கள் போன வழியானது அந்நாட்டின் அழகிய ஓரிடத்தின் ஊடே சென்றது. அங்கே பழங்களைச் சுமை சுமையாய்த் தாங்கிய மரங்களும், பழக்குலைகள் நிறைந்து பொறை மிகுந்த கொழுமையுள்ள கொடிமுந்திரிகளும் வழிகளுக்கு நிழலைத்தந்து இடுக்கு வழிகளுக்குத் திரைமறைப்புப்போல் இருந்தன; இன்னும் அங்கே பச்சென்ற வரம்புகளின் பின்னே, அகன்ற பெரிய இடங்கள் பூசனிப்பழங்களாலுங் கொம்மட்டிப்பழங்களாலும் மூடப்பட்டிருந்தன. இது பலவகைப்பழங்களுந் தாமே வளர்ந்து செழிக்குங் காடாயிருந்தது!

கடைசியாகத் தங்கிய இடத்தினின்றும் அவர்கள் புறப்பட்டு வந்தபிறகு இரண்டரைநாழிகை கழிந்தது; இச்சமயத்திற் சிறிது தொலைவிலிருந்து தாழ்ந்த உறுமல் ஒலியொன்று தொடர்பாய் வரக்கேட்டாற்போற் குமுதவல்லிக்குப்பட்டது; உடனே கடிவாளத்தைப் பிடித்துத் தன்குதிரையை நிறுத்திக்

கொள்ளவே, சிலஅடி பின்னேயிருந்த அவள் பாங்கிமாரும் வழித்துணைவரும் ஒரு நொடியிற் கிட்டவந்து சேர்ந்தார்கள். சுந்தராம்பாளும் ஞானம்பாளும் அவ்வாறே தீக்குறியான அவ் வோசையைக் கேட்டார்கள். அவர்கள் முகங்கள் திகிலால் வெளுப்புநிறம் அடைந்தன: ஆனால், அந்த நீலகிரி நாட்டார் இருவரும் விரைவில் அஞ்சாமொழிகள் சொல்லி, அப்பெண் மக்களைத் தமக்கு நடுவே நிறுத்திக்கொள்ளும் வகையில் தாம் நின்று கொண்டார்கள். அவர்கள் கைத்துப்பாக்கிகள் அவர்கள் கைகளில் ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்தன; அவர்களின் சுருசுருப்பான கூரிய கண்களானவை சுற்றிலுந் தம் பார்வையைச் செலுத்தின.

சில நொடிப்பொழுது வரையில் ஏதும் அரவம் இல்லாமல் இருந்தது; ஆனால், திடீரென்று ஊளைபோலவும் உறுமுதல் போலவும் அஞ்சத்தக்க ஓர் ஓசை உண்டாயிற்று. அதன் பிறகு மரங்களின் இடையே சர சர வென்றும் நெறு நெறு வென்றும் ஓர் ஓசை உடனே தொடர்ந்துவந்தது; கொடிமுந்திரி மறைப்பினின்றும் ஒரு பெரும் புலி கிட்ட இருந்த நீலகிரி நாட்டான்மேற் பாய்ந்தது. உடனே அவ்வாண்மகன் கையிலிருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளும் வெடிதீர்ந்தமை கேட்டது. சுந்தராம்பாள் ஞானம்பாள் இதழ்களிலிருந்து கீச்சென்று ஓர் ஒலி உண்டாயிற்று; குமுதவல்லியிடத்திருந்துகூடத் திகிலொடுகூடிய ஓர் ஒலி உண்டாயிற்று; இவர்கள் ஏறியிருந்த குதிரைகளோ அடக்கமுடியாதனவாயின. பொல்லாதகாலத்தாற் குதிரைமீதிருந்த ஒருவன் அதனினின்று புலியினாற் கீழே இழுக்கப்பட்டான்: அவனுதவிக்காக அவன் தோழன் கிட்டே ஓடினன்; ஆனால், அவ்விலங்கோ தன் பகைவரை ஒருவர்பின் ஒருவராக வெல்வதற்குத் தீர்மானித்தாற்போல், தன் இரண்டாம் பகைவன்மேல் திகிலுறும்படி ஒரு குதியிற் பாய்ந்தது.

இந்தக்காட்சியானது பார்ப்பதற்கு மிகவுங் கொடுமையாயும் வெருவத்தக்கதாயும் இருந்தது. திரும்பவுங் கைத் துப்பாக்கிகளின் அதிர்வெடி கேட்டது: அக்கொடிய விலங்கா

னது காயப்படுத்தப்பட்டது; ஆனாலுங் கொல்லப்படவில்லை. மற்று, அது தான் பட்ட காயத்தினால் வெறிபிடித்துத் திகிலான சுருசுருப்பு உடையதாயிற்று. தன் குதிரையிலிருந்து இடியேறுண்டு தள்ளப்பட்டாற்போல் இரண்டாம் ஆளுங் கீழே இழுத்துப்போடப்பட்டான்; அப்போது குருதி ஒழுகும் வெறிகொண்ட குதிரைகள்இரண்டு ஊர்வோன் இல்லாதனவாய்க் காற்றினால் இறக்கை வாய்ந்தனபோற் பறந்து சென்றமை காணப்பட்டது. அதேநேரத்திற் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் ஏறியிருந்த குதிரைகளும் அச்சமுற்று அடங்காதனவாய்ப் பலமுகமாய் விரைந்து ஓடின. இங்ஙனம் எல்லாம் பெருந்தடுமாற்றமாய் இருப்பதற்கு நடுவே, கடிகாரத்தில் நிமிடங்காட்டும் முள் நிமிடங்களை அடுத்தடுத்துக் காட்டுவதுபோல ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கடுகிவரும் இப்பொழுது மறுபடியுந் துப்பாக்கிகளின் வெடிகள் கேட்டன. அந்தப் புலியானது சாகுந் துன்பத்தில் ஊளைக்குரலொடு நிலத்தேகிடந்து புரண்டது; மறுபடியும் மற்றொரு குண்டு அவ்விலங்கின் மண்டைக்குள் நெறுநெறுவென்று தொளைத்துச் செல்லும்படி அவ்வளவு திட்டமாய்க் குறிவைத்துச் சுடப்பட்டது; அடுத்தாற்போல் மூன்றுபேர் குதிரைமேல் அவ்விடத்திற்கு விரைந்துவந்தார்கள்.

அதற்குட் குமுதவல்லி தன் குதிரையை முற்றுந் தன் வயத்தில் அடக்கிக்கொள்வதானாள்; அந்தக் கொடிய சண்டை நடந்த இடத்திற்கு நெடுந்தொலைவிலே அவள் இப்போது இருந்தாலும், இடர் ஒழிந்தது என்பதற்கு அறிகுறியாக முழக்கமிட்டுக் கூவுவோர் ஓசையைக்கேட்டனள். குதிரை ஊருந் திறத்தில் தந் தலைவியை எதிரவல்லவர்களான சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருந் தங் குதிரைகள் தம் உடைகள் சிறிது கீறுண்டு கிழியும்படி கொடிமுந்திரி அடர்ந்த இடங்களின் ஊடே விரைந்து சென்றாலும் அவற்றின்மேல் தமது இருக்கை கலையாதவண்ணம் அங்ஙனமே இருந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் உயிரொடு தப்பிப்பிழைத்ததையும் இரண்டொரு கீறல்தவிர வேறு காயந் தம்உடம்பிற் படாமையையும்

எண்ணிப்பார்க்கும்போது இஃது ஒருபொருட்டாகவைத்துச் சொல்லற்பாலதன்று.

உற்றநேரத்தில் அவ்விடத்திற்குக் குதிரைமேல்வந்த மூவரில் தலைவனானவன், தன் கூடவந்தோர் இருவருக்குஞ் சுருக்கெனச் சில கற்பித்துவிட்டு, இதற்குள் தமது தடுமாற்றம் நீங்கித் தேறி அந்தப்பாட்டையிற் சிறிது தொலைவிலே ஒன்று கூடி நின்ற குமுதவல்லியையும் அவள் பாங்கிமாரையும் எதிர்கொள்ளும்பொருட்டுக் குதிரையை முன்னே பாய்ச்சலிற் கொண்டுபோனான். அங்ஙனம் நயம்மிகுந்த வணக்கத்தோடுந் தேறுதல் மொழிகளோடும் அந்தப் பெண்மக்களை விரைந்து அணுகினவன் ஓர் அழகிய பௌத்த இளைஞனா யிருந்தான். நாகரிகமும் இனிய அழகும் வாய்ந்த இவ்விளைஞன் நீலலோசனனேயன்றிப் பிறர் அல்லரென்றும், இவனுடன் வந்தோர் இருவருங் கேசரிவீரனும் வியாக்கியவீரனுமாவரென்றும் இதனைப் பயில்வோர்க்கு உடனே தெரிவித்திடுகின்றோம்.

திகிலைத்தரும் அச்சண்டையின் முடிவு குமுதவல்லியினாலும் அவள் பாங்கிமாராலுங் காணப்படாவிடினும், அது முடிந்துபோயிற்றென்பதை அவர்கள் ஏற்கெனவே தெரிந்துகொண்டார்கள்; இப்போது அவர்கள் இப்பௌத்த இளைஞன் சொல்லிய சொற்களிலிருந்து கடைசியாக இவன் கையினாலே தான் அப்புலி இறந்துபட்டதென்று தெரிந்தார்கள். குமுதவல்லி அவனுக்குத் தன் நன்றி மொழிகளைப் பொழிந்தாள்; கலக்கமும் ஐயமுங் கலந்த நோக்கத்தோடுஞ் சொல்லசைவோடும் அவள் தன்பின் வழித்துணையாய் வந்த நீலகிரி நாட்டார் இருவர் வினைப்பயனையும்பற்றி உசாவினாள்.

அதற்கு நீலலோசனன், “இரங்கத்தக்க அவ்வாட்கள்மேற் பரபரப்பாக என் பார்வையைச் செலுத்திப்பார்த்தவரையில், நங்கைமீர், அவ்விருவரும் பிழைத்திருக்கின்றார்கள் என்று உங்கட்கு உறுதியுரை சொல்லக்கூடியவனானேன்: ஆனாலும், அவர்கள் மிகவும் இடரான வகையிற் சின்னபின்னப் படுத்தப் பட்டிருக்கின்றார்களென அஞ்சுகின்றேன். என்கூட வந்தவர்கள் இருவரும் அவர்களுக்குத் தம்மாற் கூடியமட்டும் உதவி

செய்துகொண் டிருக்கின்றார்கள்; அவர்கள் காயங்களினின் றுஞ் செந்நீர் ஒழுகுவதை நீங்கள் பாராதிருக்கும்பொருட்டுந், திகிலான இந்நிகழ்ச்சியின் முடிவைத் தெரிவிக்கும்பொருட்டும் யான் இங்ஙனம் முன்னே விரைந்து வந்தேன்." என்று மறு மொழி புகன்றான்.

உடனே குமுதவல்லி காயப்பட்ட அம்மாந்தரிடத்து இரக்கமுங் கவலையும் மிக உடையவளாய், "ஐயன்மீர், யானும் என் தோழிமாரும் ஏதேனும் உதவிசெய்யக்கூடுமோ? என்ப தைச் சொல்லுங்கள். ஒருகால் உங்கள் ஆட்களைவிட யாங்கள் அக்காயங்களைத் திறம்படக் கட்டக்கூடுமே: ஏனென்றால், பெண்பாலாராகிய எங்கட்கு அஃது உரியதொழிலன்றோ?" என்று கூறினாள்.

"நங்கைமீர், என்னுடன் வந்தவர்கள் போர் நிகழ்ந்த இடங் களில் இருந்து பழக்கம் ஏறினவர்கள்; காயங்களைக் கட்டுவது அவர்களுக்குப் புதிய தொழில் அன்று. நான் திரும்பிவரும் வரையில் இங்கே தானே தங்கியிருக்க அன்புகூருங்கள். கெடுதி நேர்ந்த இடத்திற்கு யான் கடுகத் திரும்பிப் போகின் றேன்; சில நொடிப்பொழுதிலெல்லாம் யான் உங்களிடம் மறுபடியும் வந்து, நீங்கள் இரக்கம் வைத்துள்ள அம்மாந்தரின் நிலைமையை அறிவிக்கின்றேன்." என்று நீலலோசனன் மறு மொழி கூறினான்.

மறுபடியும் பணிவொடு வணங்கி நீலலோசனன் தன் குதிரையைத் திருப்பிக் குமுதவல்லியையும் அவள் பாங்கிமா ரையும் விட்டு அகன்று போயினான்.

அதன்பிறகு குமுதவல்லி, "சிறிதுநேரம் நாம் குதிரையை விட்டுக் கீழே இறங்குவோம். இரங்கத்தக்க அவ்வாட்கள் இருவரும் எல்லாவகையாலுஞ் செவ்வையாகப் பராமரிக்கப்படு கிறார்கள் என்பதை நாம் உறுதியாகத் தெரிந்துகொண்டால் அல்லாமல் நாம் பயணந் தொடங்கலாகாது. அதுவல்லாமலும் நங் குதிரைகள் எல்லாம் இன்னும் நடுநடுங்கிக்கொண் டிருக் கின்றன. இச் செழும்புல்லை அவைகள் மேயும்படி விட்டால்,

அஃது அவ்வேழை யுயிர்களை ஆற்றுவிக்கும்.'' என்று நாக நாட்டரசி கூறினள்.

அவ்வாறே, குமுதவல்லி சுந்தராம்பாள் ஞானம்பாள் மூவருங் குதிரையைவிட்டு இறங்கினர்கள்: அவர்களின் குதிரைகள் பாட்டையோரமாய்த் திரியும்படி விடப்பட்டன; ஏனெனில், நுண்ணறிவும் நம்பிக்கையும் உள்ள அக்குதிரைகள் ஒவ்வொன்றுந் தந் தலைவி அழைக்கும்போது உடனே திரும்பி வரும் வழக்கம் உடையன. குமுதவல்லி தான் ஒரு கரைமேல் உட்கார்ந்துகொண்டு தன் றோழிப் பெண்களும் அவ்வாறே இளைப்பாறுகவென்று கைக்குறி காட்டினள்.

"நல்ல காலமாயிற்று, அப்பௌத்த துரைமகனும் அவர் ஆட்களும் அந்நேரத்தில் வரலானது!'' என்று நாகநாட்டரசி மொழிந்தாள்.

"எவ்வளவு அழகான இளைஞர் அவர்!'' என்றாள் சுந்தராம்பாள்.

"அவர் பார்வையில் ஆண்மைமிக்கவரே! என்றாலும், இளமையும் அழகும் வாய்ந்தவர்!'' என்று கூடச் சொன்னாள் ஞானம்பாள்.

"பேசாதிருமின், சிறுமிகாள்! அவரது நல்ல தோற்றத்தைவிட அவரது ஆண்மையை எண்ணிப்பாருங்கள்; நாம் இப்போது தப்பிப்பிழைத்ததற்காகச் சிவபெருமானுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதையும் எண்ணிப்பாருங்கள்.'' என்று சிறிது கடுமையாகக் குமுதவல்லி பேசினள்.

சிறிதுநேரம் பேசாமல் இருந்தார்கள். அப்போது குமுதவல்லி தன்னைப்படைத்த கடவுளுக்குத் தனக்குள்ளே வழிபாடு செலுத்தினள்; மற்ற இருபெண்களும் அவள் உள்ளத்தில் நிகழ்வதை அறிந்து தாமும் அவ்வாறே செய்தார்கள்.

இப்போது நீலலோசனன் திரும்பிக் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான்; வந்தவன் சொன்னதாவது: "நங்கைமீர், உங்கள் வழித்துணைவர் அடைந்த காயங்கள் கொடியனவாயிருந்தாலும் உயிர்க்கு

எதும் அச்சமில்லையென்று மகிழ்ச்சியொடு தெரிவிக்கின்றேன். இந்தப் பாட்டையில் வந்து சேரும் ஒரு சிறுவழியாக வன்றோ யானும் என் ஆட்களும் நல்ல நேரத்தில் அவ்விடம் வந்துசேர்ந்தோம். அதோ தோன்றும் மரங்களால் மூடப்பட்டு அவற்றின் நடுவே ஒரு சிறு குடிசை இருக்கின்றது. காயப் பட்ட ஆட்களை அங்கே கொண்டுபோக வேண்டுமென்பது என் கருத்து; அவர்களை மிகவும் அன்பாய்ப் பார்ப்பதற்கு வேண்டிய கருவிகளை நிரம்பத் தந்து அவர்கள் அடைந்த காயங் களால் அவர்கள் சிறிதும் அழிவு உறாமற் செய்தன்றி அவர்களை விட்டு வரமாட்டேன் என்று உறுதியாய் நம்பி ஆறுதல் அடைமின்கள்!”

“பெருமானே, தாங்கள் உண்மையாகக் காட்டிவருகின்ற அன்புடைமைக்கு ஆயிரம்வணக்கம்!” என்று சொல்லி, “அவ் வாடவர்க்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துத் தருவதுஞ், சிறிதுகாலம் என்னிடம் ஊழியஞ் செய்கையில் அவர்கள் அடைந்த துன்பங்களுக்குப் போதுமான அளவு ஈடு கொடுத்து உதவுவதும் என்னுடைய கடமை அல்லவோ? எனக்காகத் தாங்கள் ஐயம் பகிர்ந்து கொடுக்க ஒருப்படுவீர்களா?” என்று குமுதவல்லிகேட்டாள்; அங்ஙனங் கேட்கையிலேயே, தனது பணப்பையினின்றும் பல பொன் நாணயங்களை எடுத்து, அவற்றை நாண் இனிமை கலந்த புன்முறுவலொடு நீலலோ சனனிடம் நீட்டினாள்.

அந்நங்கையை முன்பின் முழுதும் அறியாதவனாயிருக் குந் தான், அவள் அடைந்த செலவுகளுக்காகத் தான் பொருள் செலுத்துவதா யிருக்கும் இதனைப் பற்றி வற்புறுத்துதல் தனக்கு மென்னடையுந் தகுதியும் ஆகாவெனப் பௌத்த இளைஞன் உடனே கண்டுகொண்டான்: ஆகவே, அப் பொன் நாணயங்களைத் தான் வாங்கிக்கொண்டபோது, “காயப்பட்ட அவ் வேலையாட்கள் இருவரையும் பற்றி யான் முதலிற் கொண்ட நோக்கத்தையும் நிறைவேற்றுதலிற் சிறிதுங் குறை யேன்; எனவே, அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஈடு இரட்டை நன்கொடையாகும்.” என்று கூறினான்.

இங்ஙனஞ் சொல்லிவிட்டு அங்கிருந்து மறுபடியும் அவன் குதிரைமேற் போக எழுந்தான்; அப்போது அவனுக்கு ஓர் எண்ணந்தோன்றவே, "நங்கைமீர், இப்போது நீங்கள் வழித் துணை இன்றியிருத்தலால், யானும் என் ஆட்களும் எங்களால் இயன்றவளவு செய்துவரக்கூடிய காவலையும் பாதுகாப்பையுந் தாங்கள் ஏற்றுக்கொள்ள அருள் செய்வீர்களா? நாங்கள் நீலகிரியை நோக்கிப் பயணஞ்செல்பவர்களாய் நேர்ந்தோம்: காயப் பட்ட ஆடவரில் ஒருவன் சிறிதுமுன்னே சொன்ன சிலவற்றி லிருந்து, நீங்கள் செல்லவேண்டிய இடமும் அதுவேயெனத் தெரிந்தேன்." என்று கூறினான்.

குமுதவல்லி ஏது விடை சொல்வதென்று சிறிது நேரந் தடைப்பட்டாள்: ஆனால், தன்றோழிமார்களைக் கண்ணோக் கவே, அவர்கள் உருக்கமுடன் வேண்டிக்கொள்ளுங் குறிப் பொடு தன்னை உற்றுப்பார்த்தது கொண்டு இன்னது சொல்வ தென்று விரைவில் தீர்மானித்தாள்.

"ஐயனே, அஞ்சத்தக்க இந் நிகழ்ச்சியிலிருந்து யான் அடைந்த பழக்கமானது, தாங்கள் இவ்வளவு இரக்கத்தொடு செய்யும்உதவியை மறுத்தல், எனக்கு மடமையாய்முடியுமென் றும், நடுநடுங்கும் என் பணிப்பெண்களாகிய இவர்களது நிலை மையை எண்ணிப்பாராக் கொடுமையாய் முடியுமென்றும் எனக்குக் காட்டுகின்றது. ஆகையால், இவ்வுதவியை யான் நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்கின்றேன்." என்று விடை பகர்ந்தாள்.

தேவமாதின் அழகு வாய்ந்த அப்பெண்மணியின் தீர் மானத்தைத் தான் பெற்றுக்கொண்டபொழுது இளைய நீல லோசனன் தன் நெஞ்சத்துள் திணுக்கென ஒருமகிழ்ச்சி கொண்டான்: இங்ஙனம் எழுந்த உள்ளப் பெயர்ச்சியினைத் தகுதியான பணிவுடன் அடக்கிக் கொண்டவனாய், "நங்கை மீர், அம்மக்களை அக்குடிசைக்கு எடுத்துக்கொண்டுபோக உதவி செய்யும்பொருட்டு இப்போது விரைந்துபோகின்றேன். கட் டாயமாய் வேண்டிய அளவுக்குமேல் ஒரு நொடிப்பொழுதே

னும் யான் அங்கு நீட்டித்திரேன் என்று உறுதியாய் நம்பியிருங்கள்.'' என்று கூறினான்.

மறுபடியும் அப்பௌத்த இளைஞன் கிளர்ச்சி மிகுந்த தன் குதிரைமேல் ஏறிப்போயினான்; அவன் காதுக்கெட்டும் வரையிற்கடந்துசென்றபின், "அவ்வளவுஉருக்கத்துடன் தரப்பட்ட வழித்துணையை நாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு செய்யக்கடவதொன்றில்லை.'' என்று குமுதவல்லி மொழிந்தாள்.

ஓரோவொருகால், தன் நினைவுகளின் கன்னிமைத் தூய தன்மையோடும், நெடுந்தொலைவில் இல்லா மேற்கணவாய் மலைகளின்மேல் எந்நேரமுந் தங்கியிருக்கும் பனிபோல் தூய தான தன்னுயிரின் இயற்கைக் கற்புடைமையோடும், அவ்விளங்கன்னிப்பெண், நீலலோசனனைப்பற்றி இன்னும் ஏதோ மிகுதியாய்க் காணவேண்டும் ஒருநினைவிலே மெய்யாகவே வெறுப்புறாத ஓர் உள்ளுறை எண்ணந் தன்னுள்ளே கொள்ளப் பெற்றாள். ஏனெனில், ஆண்பாலாருள் அழகால் மிக்கவரொன்றும் பெண்பாலாருள் அழகால் மிக்கவரொன்றும் நன்கு மதிக்கப்படும் இளையோர் இருவர், ஒருவர் ஒருவர்மாட்டு ஏதோ சிறிதேனும் ஒரு பற்று உண்டாகப்பெறாமல் இங்ஙனந் தற்செயலாய் ஒருங்கு கூட்டப்படுதல் இயலாததேயாம்.

நீலலோசனன் திரும்பி வரும்முன் ஏறக்குறைய இரண்டரை நாழிகை கழிந்தன; இப்பொழுது அவன் ஆட்கள் இருவரும் அவன் பின்னே வந்தார்கள். அந்தப்பெருமாட்டியோடும் அவள் தோழிப்பெண்களோடுஞ் சேர்ந்து பயணம்போகும்படி ஏற்பாடுசெய்யப்பட்டதென்று முன்னமே அவன் அவர்கட்குத் தெரிவித்தான். இச்செய்தியை வியாக்கிரவீரன் மகிழ்வொடு கேட்டான்; ஏனென்றால், பெண்பாலார் கூட்டத்திற் சேர்ந்திருப்பது அவனுக்கு இனியது: மற்றுக் கேசரிவீரனோ இதனைக்கேட்டதுந் தன் முகத்தின்மேல் துயரக்குறிப்பு உடையவனானான். தன் இளம்பெருமான் பொய்ந்நெஞ்சுள்ள மற்றொரு மோகினிப் பேயின் கையில் அகப்பட்டால் என்செய்வதென்று அஞ்சினான்: என்றாலும், இப்படிப்பட்ட நிலைமையில் தடுத்துச்சொல்வதற்கு அவன் அவ்வளவு இரக்கம் அற்றவன்

அல்லன். அஞ்சத்தக்க இடரினின்றுந், திகிலான மனக்கலக் கத்தினின்றும் இப்பொழுதுதான் தப்பிய ஆண்துணை யில்லாப் பெண்கள் மூவருந் தாங்கள் இழந்துபோன வழித்துணைக்கு மாறாக வேறொரு வழித்துணையை உறுதிப்படுத்திக்கொள்ள ஆவல் உள்ளவராய் இருக்கக்கூடுமென்றும், மக்கள் உறவின் முறைக்கும் மக்கள் இயல்பின் முறைக்கும் இணங்க அவர்கள் அங்ஙனந் துணை நாடுதற்கு உரிமையுள்ளவர்களேயென்றும் அவன் இயற்கையாகவே உணர்ந்தான். ஆனால், நீலலோசனனும் அவன் ஆட்களுங், குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் இருந்த இடம் வந்து சேர்ந்தபோது, கேசரிவீரன் ஐயுற்றுப் பார்த்த பார்வை வரவரத் தெளிவடைந்தது; ஏனெனில், ஏதோ சொல்லமுடியாத இனிமையுங், களங்கமற்ற நெஞ்சக்குறிப்பும், ஒரு கவர்ச்சியும், அன்புங் குமுதவல்லியின் முகத்திலே காணப் பட்டமையால், எளிதில் நம்பாமையும் முன்னறிவும் உள்ள கேசரிவீரனுங்கூட அத்தெய்வமுகத்திலே எழுதப்பட்ட சான்றுக்கு இணங்காதவனாய் இருக்கக்கூடவில்லை. காமக்கொதிப்புங் காமவிழைவும் உள்ள கருவிழியாளான மீனம்பாளையுந், தூய்மையுங் கள்ளமின்மையும் ஆகிய ஒளியினாற் சூழப்பட்ட நீலவிழியாளான குமுதவல்லியையும், அவன் தன் மனத்துள்ளே விரைந்து ஒப்பிட்டுப்பார்த்தபோது, இவளைப்பற்றி அவன் உயர்ந்ததொரு நல்லெண்ணங் கொள்ளாமல் இருக்கக் கூடவில்லை. இன்னும், இவள் பாங்கிமார் இருவரிடத்துங் கரவில்லாத வெளிப்படையான திறந்த உள்ளத்தையும், நாணமுடன் தாழ்மைநிறைந்த ஒழுக்கத்தையுங் கண்டபோது, தன் இளம்பெருமான் இவர்கள் புதுஉறவைப் பெற்றதற்காக வருந்துதல் ஒழிந்தான். மற்று, இத்தனை இனிமைவாய்ந்த இவர்கள், வழித்துணையாவது பாதுகாப்பாவது இல்லாமல் தனியே ஏக விடுதலாகாமையை நினைத்தபோது தன்னுள்ளே ஒருமகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாகப்பெற்றான்.

நீலலோசனன் குமுதவல்லியின் பக்கத்தே குதிரை ஊர்ந்து சென்றான். கேசரிவீரன் சுந்தராம்பாளுக்குத் துணையாய் ஏகினான்; வியாக்கிரவீரன் ஞானம்பாளுடன் தன்னை

இணைப்படுத்திக்கொண்டான். மீனும்பாள் குமுதவல்லி என்னும் இருவரின் இயற்கை மாறுபாட்டைப்பற்றிக் கேசரிவீரன் உள்ளத்தில் தோன்றியதுபோலவே, நீலலோசன னுள்ளத்திலுந் தோன்றுவதாயிற்று. தன்னெஞ்சங் குமுதவல்லியினிடத்து விழைவுகூரத்தக்கதாக விளங்கிய இனிய அழகின் வயப்பட வேண்டுவதாயிருக்க, ஒருநொடிப்பொழுதேனும் அது மீனும்பாள் அழகினல் மயக்கப்பட்டது என்னை என்று அவன் வியப்படைந்தான். அவன் மீனும்பாளைக் கண்டபோது, குமுதவல்லியை இதற்குமுன் என்றும் பார்த்ததில்லை என்பதும், பெண்பாலாரில் அத்துணை நிகரற்ற வடிவம் ஒன்று உலகின்கண் உள்ளதெனக் கருதியதே இல்லை என்பதும் உண்மையே; ஆனல், இந்த எண்ணமுங்கூட, அவன் தான் சிறிது நேரமாயினுங் கரியவிழிமீனும்பாளின் காமங்கனிந்த மிக்க அழகினுக்கு வணங்கியதனல், தன்னெஞ்சமானது இப்போது தோழமை கொண்ட நங்கையின் தூய கன்னிமை அழகினுக்கே செலுத்துதற்கு உரிய வணக்கம் என்னுந் தூயமணத்திற்கு இடம் பெறத் தகுதி வாயாததாயிற்று என்னும் ஓர் உணர்ச்சியினின்றும் அவனை மாற்றமாட்டாதாயிற்று.

பொதுவான பலதிறச் செய்திகளைப்பற்றிப் பேசியபிறகு, குமுதவல்லி, "ஐயன்மீர், இந்தப்பக்கத்தில் வழிதப்பித் திரியுங் காட்டுவிலங்கு ஒன்றுமட்டுமே அஞ்சத்தக்க தாகாதென்று சொல்லக்கேட்டேன்." என்றாள்.

"நங்கைமீர், உண்மையே? வேறு யாது இடர் உங்களுக்கு இவ் அச்சத்தை உண்டுபண்ணியது?" என்று நீலலோசனன் வினவினன்.

"திகிலை உண்டாக்கும் நல்லானைத்தவிர வேறொன்றும் அன்று." எனக் குமுதவல்லி விடைபகர்ந்தாள்.

அதற்கு நீலலோசனன் "ஆ!" என்று உரத்துக்கூவினன்; இங்ஙனங் கூவிய ஓசை புதுமையாகத்தோன்றினதனல், ஓர் இமைப்பொழுது குமுதவல்லி அவனை உற்றுப்பாராமல் இருக்கக்கூடவில்லை. அழகிய அவ்விளம்பெண் கொண்ட திகிலை மிகுதிப்படுத்துதற்கு அஞ்சி உடனே அவன் "ஆம், அப்படிப்

பட்டது ஒன்று யானுங் கேள்விப்பட்டேன்: ஆனாலும், நங்கைமீர், அஞ்சாதேயுங்கள்!'' என்று கூறினான்.

''என் மட்டில், அதைப்பற்றி யான் சிறிதும் அஞ்சவில்லை; ஆகையால், நான் என் தோழிப்பெண்கள் மனத்தினுங் கலவரத்தை உண்டுபண்ணாதிருந்துவிடுகின்றேன்.'' என்று குமுதவல்லி தொடர்ந்து பேசினாள்.

''நங்கைமீர், நீங்கள் செய்வது நல்லது. தீமையும் இடரும் வரும்முன் பாதிவழியிற் சென்றே அவற்றை எதிர்கொள்ள ஓடாமல், அவை வரும்போது எதிர்வதே தக்கது. நாளைக்கு நாம் நீலகிரியில் இருப்போம்; அங்கே போய்விட்டோமானால் அச்சஞ் சிறிதும் இல்லை.'' என்று நீலலோசனன் மறுமொழி புகன்றான்.

மலையநாட்டின் தலைநகரான நீலகிரிக்குத் தான் இன்ன நோக்கத்தின்பொருட்டுப் போகவேண்டியுளது என்பதைப்பற்றி நீலலோசனனாவது குமுதவல்லியாவது சிறிதாயினும் ஒருவரோடொருவர் மறந்தும் பேசவில்லை. அவர்கள் ஒருவரைப்பற்றியொருவர் உசாவியதில் வெறும் பெயர் மட்டுந்தான் சொல்லிக்கொண்டார்கள். இவ்வளவிலுங்கூடச் சிலவற்றைச் சொல்லாமல் அடக்கி விட்டார்கள். நீலலோசனன் தான் அரசிளைஞன் என்பதைத் தெரிவித்திலன். குமுதவல்லியுந் தான் அரசி என்பதைத் தெரிவித்திலள். சில வகைகளால் இருவரும் இங்ஙனம் அடக்கமாய் இருந்தனர்; ஏனென்றால், இதனைப் பயில்வோர் ஏற்கெனவே தெரிந்தபடி இவ்விருவரும் மறைவாகப் பயணஞ் செய்யும்படிக்குந், தாம் மறைவாகச்செல்வது சிறிதுந் தெரியாதபடிக்கும் வற்புறுத்தப்பட்டார்கள்.

இப்போது மாலை இரண்டரை நாழிகை வேளை ஆயிற்று. தன்னிடத்திலிருந்து நீலகிரி நகரம் ஏறக்குறைய இருபத்தைந்து கல் தொலைவு அல்லது ஒருநாட்பயணத்தி லுள்ளதும், அவ் விராப்பொழுதிற்குத் தாந் தங்கவேண்டியதுமான ஓர் ஊர் இவ்வழிப்போக்கர் பார்வைக்குத் தென்படலாயிற்று. நீலலோசனனுங் குமுதவல்லியுந் தத்தம் துணைவர்க்குச் சிறிது முன்னே குதிரை ஊர்ந்து சென்றார்கள். அப்போது ஒன்று நேர்ந்தது.

இது பார்வைக்குப் புல்லியதொன்றாய்த் தோன்றினும், இத ஞல் விளைந்தவை முதன்மையானவைகள். பாட்டை ஓரத்தில் மனமிரங்கத்தக்க முதியோன் ஒருவனும் அவனைப்போலவே ஏழைமைவாய்ந்த முதியோள் ஒருத்தியும் உட்கார்ந்திருந்தனர்; இவர்கள் இருவரும் முடவர்கள்; இருவரும் உறுப்பு அற்றவர் கள்; இருவரும் ஐயம் ஏற்பார்க்குரிய கந்தைத்துணி கட்டியிருந் தார்கள். நீலலோசனனுங் குமுதவல்லியும் முன்சென்றபோது இவ்விருவரும் ஐயங் கேட்பதற்கு நொண்டி எதிரே வந்தனர். இவர்களின் இரக்கமான நிலைமையைப் பார்த்தபோது நம் இளைய தலைவனுந் தலைவியுமான இருவர்க்கும் ஒருங்கே இரக் கம் உண்டாயிற்று; ஆகவே, இருவருந் தமது பணப்பையை இழுத்தார்கள். குமுதவல்லி ஒரு பொன்நாணயத்தை முடத்தி கையில் வைத்தாள்; நீலலோசனனும் அவ்வாறே தளர்ந்த அம் முதியோனுக்கு உதவிபுரிந்தான். ஆனல், அவ்வமயத்தில் நீல லோசனன் குதிரையானது ஏதோ பதறி அசைந்தது; இதனுல் அவன் பணப்பையி னுள்ளேயிருந்த சிலபொருள் நிலத்தே தவறிவிழுந்தன. நன்றி யறிவுள்ள அம்முதிய முடவர்கள் அவற்றைப் பொறுக்கி யெடுத்து உடையவனிடஞ் சேர்ப்பிக்க விரைந்தனர். ஆனல், அங்ஙனங் கீழேவிழுந்த பொன் நாணய வெள்ளி நாணயங்களுக்கு இடையிலே, பாம்பின் மினுக்கொளி போலக் குமுதவல்லியின் கண்களைத் திடீரெனக் கவர்ந்தது ஒன்று கிடந்தது. அஃது ஒரு கணையாழி! ஆம், ஒரு வகை யான வேலைப்பாடு அமைந்ததாய் ஒரே சிவப்புக்கல் பதிக்கப் பட்ட ஒரு பொன் மோதிரம்! நீலலோசனன் மிகவிரைந்து அம்மோதிரத்தையும் அந்நாணயங்களையும் எடுத்துத் தன் பணப் பையினுள்ளே வைப்பானுயினன்; குமுதவல்லி கலக்கமுற்ற தன் பார்வையை அப்புறந் திருப்பிக்கொண்டாள்; அவள் நெஞ் சமோ நோய்ப்படுத்தும் உணர்வால் தாக்குண்டது!

அவள் உள்ளத்திற் பொல்லாத எண்ணங்கள் பல மின்ன லெனத் தோன்றின. நல்லானைப்பற்றி அந்தச்சாவடிக்காரன் தனக்குச் சொல்லிய ஒவ்வொன்றையும் அவள் நினைவுகூர்ந் தாள். அவன் இளைஞன்; அந்தச் சாவடிக்காரனுக்கு மக

னென்று சொல்லும்படி அவ்வளவு இளைஞன்! அவனுக்குக் கரிய தலைமயிரும் மீசையும் இருந்தன. அவன் உயரமாய் ஒல்லியாயிருந்தான்; குமுதவல்லியுந் தான் தன் அறைக்குள் முகமறைப்பிட்டு வந்தவனைக் கீழ்க்கண்ணாற் பார்த்த பார்வையிலும் அவன் அப்படியே இருந்தானென நினைத்தாள். அவ்வகைகளெல்லாம் நீலலோசனனிடம் ஒத்திருந்தன! அதுவல்லாமலும், நல்லான் பலவகையான கோலங்களும் பூண்பவன்; ஒருகால் துருக்கனைப்போலவும் மற்றொருகால் மலைநாடனைப்போலவும் உடை அணிபவன்; ஏனென்றால், தன் பொல்லாத நோக்கங்களை முடிப்பதற்கு அவன் செய்து பாராத சூழ்ச்சி இல்லை. சுருங்கச்சொல்லுமிடத்துக், குமுதவல்லி, தன் பக்கத்தே குதிரைமேல் வருபவன் கள்வர்கூட்டத்தலைவனான கொடிய நல்லானையன்றிப் பிறர்அல்லர் என்னுந் திகிலும் வருத்தமும் மிக்கதோர் உறுதிஎண்ணங் கொள்ளப்பெற்றாள்!

இரவலரிடம் நிகழ்ந்த இச் சிறு நிகழ்ச்சிக்குப்பின் அவளும் நீலலோசனனும் வழிச்செல்கையிற், சிறிது நேரம் அவள் முகம் அப்புறமாகவே திரும்பி இருந்தது. இந்த நேரத்திற்குள் அவள் தன் முகச்சாயலை அமைதிப்படுத்திக்கொண்டாள்; தன்னையுந் தானே தேற்றிக்கொண்டாள். இனி, எப்படி நடந்துகொள்வதென்றுந் தன்னுள் தீர்மானித்துக் கொண்டாள்; ஏனெனில், உடனே ஏதும் பொல்லாங்கு நேராதென்று கண்டறிந்தாள். அந்தச் சிறுபட்டிக்காடு இப்போது அருகாமையில் வந்துவிட்டது; தன் தோழனும் அவன் துணைவருந் தனக்குந் தன்பாங்கிமார்க்கும் விரைவில் தீங்கு செய்யக் கருதியிருந்தனர்களாயின், ஊருக்கு நெடுந்தொலைவில் தனிமையாயிருந்த வெளிகளிலேயே அவ்வாறு செய்திருப்பார்களன்றோ?

அவள் கலக்கமில்லாத குரலிலே, “ஐயன்மீர், வாருங்கள், நாம் குதிரையை முடுக்கி முன் விடுவோம்!” என்றுரைத்தாள். அதற்கு நீலலோசனன், “நங்கைமீர், தங்கள் விருப்பப்படியே.” என்று நேசநயம் மிக்க மகிழ்ந்த குரலிற் கூறினான்; ஏனென்றாற், குமுதவல்லி இப்போது தன்னைப்பற்றிக்கொண்ட திகிலான எண்ணத்தை அவன் சிறிதும் அறியான்.

சிறிதுநேரத்திலெல்லாம் அச்சிறிய ஊரிற் போய்ச் சேர்ந்தனர். அவ்வூரில் தட்டுக்கெட்ட ஒரு சாவடியும் ஆறு ஏழைக் குடிசைகளுஞ், சிறிது விலகியிருந்த ஒரு நல்ல வீடும் இருந்தன. அந்த வீட்டுக்குஉரியவன், அடுத்திருந்த ஒரு பஞ்சாலைக்கு உடையவனான ஒரு பணக்கார வணிகன் ஆவன். அந்த விடுதியண்டை போனவுடனே, குமுதவல்லி அந்த நல்ல வீட்டுக்கு உடையவர் தனக்குந் தன்தோழிப்பெண்கட்கும் விடுதி தந்து உதவுவரா என்றுகேட்டாள். அந்நேரத்தில் அப்பஞ்சாலைத் தலைவன் அவ்விடுதிக்கு எதிரிலே நின்றுகொண்டிருந்தான்; குமுதவல்லி குறிப்பிட்ட வீட்டுக்காரன் தானே என்று அவன் அறிவித்ததன்மேல், நீலலோசனன் அந்நங்கைக்கும் அவள் தோழிமார்க்கும் உதவியாகத், தானே அவனைப் பரிந்துகேட்டான். அந்த வீட்டுக்காரன் வெடுவெடுப்பான குணமுங் கையிறுக்கமும் உடையவன். விடைகூற அவன் சிறிது தாழ்த்தான்; நீலலோசனன் அவன் இயற்கை இன்னதென உணர்ந்து, அவன் காதண்டைபோய், "இந்த நங்கைக்கும் அவர் தோழிமார்க்குஞ் செய்யும் உதவியிற் பிசுனத்தனம் பண்ணுதீர்; அதற்காக நீர்பெற்றுக்கொள்ளும் நன்கொடை மிகுதியாகவேயிருக்கும்." என்று மெதுவாகச் சொன்னான்.

இங்ஙனஞ் சொல்லவே எல்லா ஏற்பாடும் ஆயிற்று; குமுதவல்லி கேட்டபடியெல்லாஞ் செய்ய அவ்வீட்டுக்காரன் மிக அன்போடு இணங்கினான். இன்னுந் தன் மனத்துள் நிகழ்வது இன்னதென்று சிறிதும் புலப்படுத்தாமற், பெருமுயற்சியொடு வெளிக்கு இன்சொல்லும் நன்னடையுங் காட்டிக் குமுதவல்லியானவள் நீலலோசனனிடம் விடை பெற்றுக்கொண்டாள். அங்ஙனம் விடைபெறும் பொழுது, அவன் சொல்லியபடியே மறுநாட்காலையில் ஒன்று சேர்ந்து பயணம்போவதாக இணங்கி மறுமொழி கூறினாள். அவ்வாறே அவள் பாங்கிமாருஞ் சிறிது நேரத்திற் சென்று தாம் எண்ணிய விடையைக் கேசரிவீரனிடத்தும் வியாக்கிர வீரனிடத்தும் பெற்றுக்கொண்டார்கள். பௌத்தர்மூவருந் துப்புக்கெட்ட அச்சாவடியிலே விடுதி கொள்ளச் செல்கையிற், குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் அவ்

வணிகன் பின்னே அவன் வீட்டுக்குப் போகும் ஓர் இடுக்கு வழியே சென்றார்கள்.

சிறிதுநேரத்திலெல்லாம் அவ்வீட்டண்டை போய்ச் சேர்ந்தார்கள். உடனே குமுதவல்லி, "பெண்காள், என் பிறகே வாருங்கள்! உங்கள் உயிர்பிழைக்க ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்!" என்று உரத்துக்கூவித் தன் குதிரையை விரைந்து பறக்க முடுக்கினாள்.

அவள் வாயிலிருந்து பிறந்த புதுமையான சொற்களாலும், வகைதெரியாமல் அவள் செல்லும் மிக்க விரைவினாலும் மனந் திகைத்துத் திகில் கொண்டார்களாயினுஞ், சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருந் தம்மை யறியாமலே அவள் செய்தபடியேசெய்து தாமும் பின்றொடர்ந்தார்கள்.

அந்த முதியவணிகனோ அவர்களைப் பின்னே பார்த்துக்கொண்டு, இமையாக்கண்களோடுந் திறந்தவாயோடும் ஒன்றும் பேசாமல் வியப்புற்று நின்றான்; அவர்கள் தன்பார்வைக்கு எட்டாமல் மறைந்துபோனபின்னுஞ் சிறிதுநேரம் அவன் அவ்வாறே நின்றான்..

எட்டாம் அதிகாரம்.

மலையநாட்டுவிதவை.

தன் தோழிப்பெண்கள் இருவரும் பின்னேவரக் குமுதவல்லி விரைந்து ஓடினாள்; மூவரும் மிக்க விரைவோடு செல்லும்படி தங் குதிரைகளை முடுக்கினார்கள்; அந்தச் சிறுவழியே அவர்கள் கடுகிச் சென்றபோது அருகே யாராவது இருந்து பார்த்தால், அப்பெருமாட்டியும் அவள் தோழிப்பெண்களுங் குதிரையேற்றத்திற் காட்டிய திறமையை அவர் வியவாமல் இருக்கமுடியாது. நாகநாட்டரசி தாம் பெரியதோர் இரண்டகத்தில் அகப்பட்டுக்கொண்டதாக எண்ணிய இடத்தினின்றும் பறந்துவந்து, இன்னவழியாய்த்தான் தாம் போவதென்றுஞ்

சிறிதும் எண்ணுமலே அவர்கள் போயினார்கள்; மற்ரொரு சிறுவழி வந்து குறுக்கிடும் ஓர் இடத்தண்டை வந்தபிறகு, தம்மைப் பின்ரொடர்ந்து வருவார் உண்டானால், அவர்கள் தம்மை வந்து பிடித்துக்கொள்வதற்கு இடம் இல்லாதபடி, குமுதவல்லி வேண்டுமென்றே மறைவானவழி ஒன்றில் திரும்பிப்போனாள். கடைசியாக, அன்றுபகல் நல்ல ஊழியஞ் செய்த அக்குதிரைகளானவை தமக்குண்டான வருத்தத்தை இனிது புலப்படுத்திக் காட்டவே, குமுதவல்லி தன் குதிரைக் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தாள்; அதைப்போலவே அவள் பாங்கிமாருஞ் செய்தார்கள். சில பொழுதிற் குதிரையின் நடையானது இன்னும் குறைந்து மெதுநடை யாயிற்று; விரைந்தோடிவந்தமையால் முன்னே தெரிவிக்கக் கூடாத செய்திகளைக் குமுதவல்லி இப்போது சொல்லுதற்கு ஒழிவு பெற்ருள்; அவள் பாங்கிமாரோ அவற்றை எப்போது அவள் சொல்வாள் என்று உள்ளப்பதைப்போடு எதிர்பார்த்திருந் தார்கள்.

"பெண்காள், நான் இங்ஙனஞ் சடுதியில் வரலானதைப் பற்றி நீங்கள் திகைப்புந் திகிலும் அடைந்தீர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், நீங்கள் தப்பிப்பிழைத்த இடரைப்பற்றிச் சிறிதும் அறியமாட்டீர்கள். திடுக்கிடுஞ் செய்தி ஒன்றைக் கேட்கக் கருத்தாயிருங்கள். முதன்முதற் பேர்ஆண்மைத் தொழிலொடு கூடிய நடையுடையவன்போற் காணப்பட்டவ னும், உங்களால் அவ்வளவு வியந்து சொல்லப்பட்ட நல்லழகு வாய்ந்தவனும், நம்பிக்கையை வருவித்தற்கு உரிய சொல்லுஞ் செயலுங் காட்டினவனும் ஆன அந்த இளைஞன், சிறிது நல்ல நிலைமையிலுள்ள பௌத்தபெருமான்போல் உடைஅணிந் திருந்த அந்த இளைஞன், சுருங்கச்சொல்லுங்கால், வெறுக் கொளத்தக்க நல்லானைத் தவிர வேறுபிறன் அல்லன்!" என்று குமுதவல்லி மொழிந்தாள்.

சுந்தராம்பாளும் ஞானம்பாளுந் தாம் அடைந்த வியப்பைப் பற்றி ஒருசொற்கூடப் பேச வலியற்றவர்களானார்கள்; ஏக்கத் தினாலுந் திகிலினாலும் பேச்சு இழந்து இருந்தார்கள்.

"ஆம், பலநாழிகைகளாக வழித்துணை கொண்டு நாம் வழிமேற் போந்த அவ்விளைஞனே நேற்றிரவு நம் அறையினுள்ளே முகம் மறைத்துவந்து என்மோதிரத்தைக் கைப்பற்றிப் போனவன்!'' என்று பின்னுந் தொடர்ந்து பேசினாள் குமுதவல்லி.

"ஆ! தெய்வமே! நேசப்பெருமாட்டி, இதனை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று சுந்தராம்பாள் இப்போது பேசும் உணர்ச்சி வந்து வினவினாள்.

அதற்குக் குமுதவல்லி தாம் இரண்டு இரவலர்களைக் கண்டதையும், பௌத்த இளைஞன் தன் பணப்பையி னுள்ளிருந்தவற்றிற் சிலவற்றைத் தற்செயலாய்க் கீழ்வீழ்த்திவிட்ட செய்தியையுந் தன் தோழிமார்க்கு நினைப்பூட்டினாள்.

"அப்போதுதான் நான் என்மோதிரத்தைக் கண்டுகொண்டேன்; மாதர்காள், உடனே யான் வியப்புந் திகிலுங் கொண்டேன் என்பதை நீங்களே எளிதில் எண்ணிக்கொள்ளலாம். நான் மோதிரத்தைக் கீழ்க்கண்ணாற் பார்த்ததுபற்றி, நல்லான் ஐயங்கொள்ளாமல் இருக்கும்பொருட்டு என் முகத்தை விரைவில் அப்புறமாகத் திருப்பிக்கொண்டேன்; அவனது பிந்திய நடவடிக்கையினால்—அது முன்போலவே செவ்வையாய் இருந்தது—யான் அதனைப்பார்க்கவில்லையென்று நம்பி அவன் தன்னுள் மகிழ்ந்துகொண்டான் என்பதைத் தீர அறிந்தேன்.'' என்று குமுதவல்லி தொடர்ந்து உரைத்தாள்.

"அவ்வளவு இளம்பருவம் வாய்ந்தவன் அவ்வளவு பெருங் குற்றத்தைச் செய்தானென்று நினைக்க மனந் திடுக்கிடுகின்றதே!'' என்றாள் சுந்தராம்பாள்.

"நாம் அவன் ஆட்களின் வழித்துணையால் அச்சமின்றியிருந்தோமென்று கருதினோமே!'' என்று கூறினாள் ஞானம்பாள்.

"அந்த மோதிரத்தைப்பற்றிய நிகழ்ச்சிக்கு முன்னே நடந்த ஒரு சிறுசெயல் உண்டு; அஃது ஒருநொடிநேரம் எனக்குப் புதுமையாகப்பட்டது. அந்தப் பாசாங்குக்காரப் பௌத்தனுடன் யான் பேசிக்கொண்டிருந்தபோது, நல்லானைப் பற்றி ஏதோ ஒன்று சொன்னேன்; அப்போது அவன் புதிய

தொருவகையாய் ஓர் ஓசையிடவே, யான் அவனை உற்றுப் பார்க்க வேண்டியதாயிற்று. அவன் பேர்பெற்ற கள்வர்தலைவனுகத்தான் இருக்கக்கூடுமென்று அப்போது யான் சிறிதும் ஐயங் கொள்ளவில்லை. ஆ! அவன் என்னைப் பொய்த்துணை காட்டி ஏமாற்றப்பார்த்தான் என்பதை இப்போது நினைவுகூர்கின்றேன்! நல்லானைக் குறித்து என்னை அஞ்சவேண்டாமென்று கற்பித்தான்; என் பெண்களே, இன்றுபகலில் நமது பயணத்தில் அச்சமுறுத்தும் அக்கொள்ளைக்காரனைப்பற்றி நீங்கள் திகில் கொள்ளத்தக்க எதனையும் உங்களுக்கு யான் சொல்லாமலிருந்துவிட்டேன் என்பதை யான் அவனுக்குத் தெரிவித்தபோது அவன் யான் செய்தது நல்லதென்று இசைந்தும் பேசினுன். இனி அவ்வுண்மையை உங்களுக்கு மறைத்து வைக்க வேண்டியதில்லை; அவ்வுண்மை யாதெனிற்; சென்ற இரவு நாம் உறங்கியதும், எனது மோதிரக்கொள்ளை நடந்தேறியதுமான அந்தச் சாவடிக்கு உரியவனுல் யான் பலவகையாலும் முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றேன். ஆம், அதுமட்டுமன்று; நல்லானுடைய உருவ அடையாளங்களைப் பற்றியும் போதுமான அளவுக்குத் தெரிந்துகொண்டேன்; அதனுல் அவன் தற்செயலாகக் கீழேவீழ்த்திய மோதிரத்தைக் கீழ்க்கண்ணுற்பார்த்த அப்பொழுதே, அவன்முன் என்பக்கத்திற் குதிரைமேல் வந்தவனென்று தெளிய உணரலானேன்.'' என்று குமுதவல்லி மொழிந்தாள்.

''நேசப்பெருமாட்டி, நீங்கள் ஏன் இந்தச் செய்தியை அந்தப் பஞ்சாலைக்காரனுக்குச் சொல்லாமல் இருந்துவிட்டீர்கள்?'' என்று சுந்தராம்பாள் வினவினுள். ''அவன் தன்னுடைய ஆட்களை ஒன்றுசேர்த்துத், தன்குற்றங்களுக்கு உரிய ஒறுப்பினைப் பெறுங் குற்றவாளியாகக் கொடிய நல்லானைச் சிறை வைத்திருப்பானே.''

''ஆ, சுந்தராம்பாள்! சடுதியிற் பறந்தோடின என்னைப் பின்பற்றி வந்தநேரத்தில், நம்மைச் சூழ்ந்திருந்த இடர்களை எல்லாம் இன்னும் நீ உணர்ந்தாயில்லையே. அந்த வணிகன் நல்லானுக்கு ஆள் என்பதில் ஐயமே இல்லை; அல்லது எப்

படியோ அவனுடன் சேர்ந்து புனைசுருட்டுப் பண்ணுகிறவனு யிருக்கவேண்டும். அந்தச் சிறிய ஊரிலுள்ள சிறு விடுதி யண்டை போனதும், அங்கே சிறிது தொலைவில் நாம் பார்த்த நேர்த்தியான கட்டடத்திலே நாம் தங்குவதற்கு இடங் கிடைக் கக்கூடுமாவென்று யான் கேட்டதும், அப்போது அம் முதிய வணிகன் தானே அவ்விடத்திற்கு உரியவன் என்று முன் னின்று அறிவித்ததும், அந்தப் போலிப் பௌத்தன் எனக்காக இடையீடின்றிப் பரிந்து பேசுவதுபோல் உடனே அவனிடஞ் சென்று கேட்டதும் எல்லாம் நீ உன்னித்திலையோ? இன் னும், அப்போது அம்முதிய வணிகன், துணையற்ற பெண்கள் மூவர்க்குத் தீங்கு இழைத்தலைப்பற்றி இரக்கங்கொண்டவனைப் போலுஞ் சிறிது தடங்கிநிற்க, அதற்குள் நல்லான் தலை குனிந்து ஏதோ அவன் காதில் முணுமுணுத்ததும், அதனால் உடனே அவ்வணிகன் தான் நடந்து கொள்ளவேண்டிய வகை இன்னதென உறுதி செய்யப்பட்டதும் நீ காணவில்லையோ?'' என்று குமுதவல்லி மறுமொழி தந்தாள்.

"ஆம், எம்பெருமாட்டி, இவையெல்லாம் உன்னித் தேன்.'' என்று கூவினாள் சுந்தராம்பாள்.

"நானும் அப்படியே உன்னித்தேன்.'' என்றாள் ஞானம் பாள். "ஓ, சமயக்குரவர்களே! ஆனால், நான் அவற்றிற் சிறி தும் ஐயுறவு கொள்ளவில்லையே!—''

நடுவே குமுதவல்லி, "மாதர்காள், நாம் மிகவும் பாதுகாவ லாய் இருக்கின்றோம் என்று நினைத்திருக்கும்போதே, நாம் உண்மையில் இடர்களாற் சூழப்பட்டிருக்கும் வகை இந்த உலகத்தில் எப்படி நேர்கின்றது பாருங்கள்! நம்மைகுறித்துக் கள்வர்கூட்டத் தலைவனுடைய நோக்கம் எதுவாயிருக்கலாம் என்று என்னால் அளவிடக்கூடவில்லை; ஆனால் அவன் ஏதோ மிகக் கொடியதுந் துயரமுள்ளதுமான இரண்டகஞ் செய்ய நினைத்தான் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை. என்றாலும், நாம் தப்பிவந்ததைப்பற்றி நாமாக மகிழ்தலேபோதும்; பெண் காள், இப்போது நாம் இவ்விரவு தங்கியிருப்பதற்கு ஓர் இடம் எங்கே தேடுவதென்று நினைக்கவேண்டும்.'' என்றுரைத்தாள்.

மாலைக்காலத்து இருள் வரவரச் சூழ்ந்து வரலாயிற்று; மசங்கற்பொழுது நாகநாட்டரசியையும் அவள் பாங்கிமார் இருவரையுஞ் சூழ்ந்துகொண்டது; இவர்கள் சென்ற சிறுவழியானது வீடுகள் காணப்படாத ஒரு வெளியின் ஊடே செல்லுவதாகத் தோன்றியது. குதிரைகளோ ஒவ்வொருநொடியுந் தமது இளைப்பைப் பலபல அடையாளங்களாற் காட்டுவனவாயின; அந்நங்கையும் அவள்பாங்கிமாரும் அவ்வாறே மிகவுங் களைப்படைந்தனர். ஆகவே, அவர்கள் மெதுவாகச் செல்லலாயினர்; சிறிது நேரத்துள் அச்சிறுவழியானது ஓர் அகன்ற பாதையிற் போய்ச்சேர்ந்தது. அவர்கள் நீலகிரி நகரத்திற்கு நெருங்கிச் செல்கின்றார்களோ, அல்லது தாஞ் செல்லவேண்டிய அந்நகரத்தை விட்டு வரவர அகன்று விலகிப்போகின்றார்களோ என்பதைச் சிறிதும் அறியாதவர்களாய்க் கெடுதிக்குத் துணிந்தே அப்பாட்டை நெடுகச் சென்றார்கள். என்றாலும், அவ்வளவு நல்லவழியின் கிட்ட எங்கேனுஞ் சிலகுடியிருப்புகள் இருக்கவேண்டுமென்றும், அல்லது அது விரைவில் ஓர் ஊர்க்காயினும் நகரத்திற்காயினுங் கொண்டுபோய் விடுமென்றும் உறுதியாக எண்ணினார்கள்.

உடனே சிறிது தொலைவில் ஒரு விளக்கு வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று தோன்றக்கண்டார்கள்; சிறிது நேரத்தில் ஒரு குடியானவள் மனையகம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே தனக்குந் தன் பாங்கிமார்க்கும் அவ்விரவு தங்குவதற்கு இடம் உதவும்படி குமுதவல்லி கேட்டாள்; தனது தோற்றத்தினால் அவ்விடத்திற்கு உரியவள் என்று காணப்பட்ட நடுத்தர அகவையினள் ஆன ஒரு மாது அவ்வேண்டுகோளுக்கு அன்புடன் இசைந்தாள். கூலியாள் ஒருவன் அழைக்கப்பட்டான். களைப்படைந்த குதிரைகள் பணையத்துக்குட் கொண்டு சேர்க்கப்பட்டன; தாழ்மையானதாயிருந்தாலும் நேர்த்தியான அம்மனையின் கூடத்து அறையிலே அங்ஙனமே களைப்புற்ற அவ்வழிப்போக்கர்களுக்குத் திறமான சாப்பாடு கொண்டுவந்து பரிமாறப்பட்டது.

குமுதவல்லி எண்ணியபடியே, அன்புடன்வந்து முதலிற் கதவுதிறந்த அம்மாது அவ்விடத்திற்கு உரியவள் என்று தெரிந்தது. அவள் ஒரு மலையநாட்டாள். ஆகையால், அவளிடத்திற் பேர் அழகின் அடையாளங்கள் இன்னும் இருந்தன; ஆனாலும், அவள் முகத்திலே கவலைக்குந் துன்பத்திற்கும் உரிய குறிகள் புலப்பட்டன. அவளோ ஒரு கைம்பெண்; முறையே பதினேழு பத்தொன்பது அகவை உள்ளவர்களாய்ப், பலகைமேல் உணவு கொண்டுவந்து பரிமாறிய இரண்டு இனிய அழகு வாய்ந்த பெண்கள் அவளுக்குப் புதல்விகள். அவள் கணவன் தன் வயலிலே நடந்துகொண்டுபோம்பொழுது, ஒரு கரும்பாம்பினாற் கடிக்கப்பட்டுச் சில ஆண்டுகள் முன்னே இறந்துபோயினான். அதுமுதல் அந்தக் காணியைப்பராமரிக்குங் கடமை முழுதும் அக் கைம்பெண்ணின் மேலதாயிற்று. ஆயினும், அவள் அதனைப் பயன்படும்படி நடத்திவந்தாள்; பொருள் அளவில் அவள் குறைசொல்வதற்கு ஒன்றும் ஏதுவில்லை.

உரையாடிக்கொண் டிருந்தபோது, நாகநாட்டரசி அவ்வன்புள்ள மாதைப்பற்றித் தெரிந்த வகைகள் இவ்வளவே. தன்னைப் பற்றியோ குமுதவல்லி தான் நீலகிரி நகரத்திற்குப் பயணம் போவதாகவும், தான் வழிதப்பி வந்துவிட்டதனாலே தானுந் தன்தோழிமாரும் இவ்வுதவியைப் பெறவேண்டியதாயிற்று என்றும் மட்டுங் கூறினாள். அவள் சிறிதேனும் நல்லானைக் குறித்துப் பேசவில்லை; ஏனென்றால், அஞ்சத்தக்க நல்லானால் தான் துன்புறுத்தப்பட்ட செய்திகளை அவள் அவ்வீட்டுக்காரிக்கு எடுத்துச்சொன்னால், அக்கொள்ளைக்காரர் தலைவன் தன்னிடத்தில் விருந்தாய்வந்த அவளைத் தேடி வருவான் என்னும் அச்சத்தினால் இம்மாது தம்மை இங்கே தங்க விடமாட்டாள் என்று அஞ்சினாள். இந்த மலையநாட்டு மாதினிடமிருந்து குமுதவல்லி தெரிந்துகொண்ட ஒருசெய்தி மனத்திற்குத் தளர்ச்சியைத் தருவதாயிருந்தது. அது, தான் நீலகிரிக்கு முப்பத்தைந்துகல் தொலைவில் இருப்பதாகத்தெரிந்ததே; ஆகவே, தானுந் தன் தோழிமார்களும் அப்பஞ்சாலைத்தலைவன் வீட்டுவாயிலிலிருந்து ஓடிவந்தமையால், அப்போது தமக்கும் அம்மலைய

நாட்டுத் தலைநகருக்கும் இடையிலிருந்த வழியைத் தாம் இப்போது பின்னும் மிகுதிப்படுத்திக் கொண்டார்கள் என்பது புலனாயிற்று. ஆனாலும், இப்போது அகற்காகச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை; மெய்யாகவே குமுதவல்லி, தாம் செவ்வையாகத் தப்பிவந்ததை எண்ணுமிடத்து இதற்காக மனம் வருந்தலாகாதென்று உணர்ந்தாள்.

நாகநாட்டரசியானவள் அவ்வீட்டுக்காரியின் முகத்திலே காணப்பட்ட கவலை துயரங்களின் அடையாளத்தை உன்னியாமல் இருக்கவில்லை; தன் கணவனை இழந்த வருத்தத்தின் வேறான மற்றொரு துயரத்தோடு அவை இயைந்தனவாய் இருக்கவேண்டுமென்று அவள் எண்ணாமலும் இருக்கக்கூடவில்லை: ஏனென்றால், கணவனை இழந்ததால் உண்டான துயரமானது, இவ்வளவு காலத்திற்குப்பிறகு கனிந்து சிவநேயமாக மாறி அமைதி பெற்றிருக்குமென்று மனத்தின்கண் எண்ணினாள். அவளுக்கு இயற்கையாகவே உள்ள மேன்மைக்குணமானது அவள் அதனைப்பற்றி ஏதுங் கேளாமல் தடைசெய்தது. ஆனாலும், அடிக்கடி அந்நல்லவளை இரக்கத்தோடும் பரிவோடும் மனத்திற் கருதினாள். இப்போது இம்மலையநாட்டுமாதின் புதல்விகள், அவ்வீட்டினுள்ளே சிறந்த படுக்கை அறையிற் குமுதவல்லி, சுந்தராம்பாள், ஞானம்பாள் என்னும் மூவருக்கும் படுக்கைக்கு வேண்டிய வசதிகளை ஒழுங்கு படுத்தும்பொருட்டுக் கூடத்தறையினின்றும் போனவுடனே, இந்த நல்ல கைம்பெண்ணானவள் தானே தன் துயரமான தோற்றத்தைப்பற்றி விளக்கிச் சொல்லப்புகுந்தாள்.

"இப்போது நம்மை விட்டுப்போன அருமையான அவ்விரண்டு பெண்கள் மட்டுமே எனக்குக் கடவுள் அருள்பண்ணின பிள்ளைகள் அல்லர். இரண்டு ஆண்டுகளாக எங்களுடன் இல்லாமலிருக்கிற மற்றொரு பெண்ணும் உண்டு."—என்று சொல்லும்போதே அக் கைம்பெண் அழுதாள்.

"அப்பெண் உண்மையில் இறந்துபோயிற்றோ?" என்று குமுதவல்லி இரக்கம் நிரம்பிய மெதுவான குரலிற்சொன்னாள்:

இதுபோல் மனஇரக்கமானது இசையின் இனிமை கலந்த மெதுவான குரலிற் சொல்லப்படுதல் என்றும் அரிதரிது.

"இல்லை, அம்மா, அறிவும் அழகும் மிகுந்த என் மரகதத்தைக் கொண்டுபோனது சாக்காடு அன்று. அஃது ஒரு துயரமானகதை; என்றாலும், அதனை உங்களுக்குச் சொல்லுகிறேன். மரகதம் என் பெண்மக்கள் மூவரில் மூத்தவள்: அவளுக்கு ஆண்டு—இன்னும் அவள் உயிரோடு இருந்தால்—இப்போது இருபத்தொன்று ஆகும். ஒருவரைப் புகழ்ந்து பேசுவது எனக்கு இயற்கை அன்று; ஆனாலும், உண்மையைச்சொல்லுவது எனக்கு முதன்மையாய் இருக்கின்றது; இந்தச் சாய்ங்காலம் உங்களை என் கண்கள் காணும் வரையில், இதற்குமுன் என் மரகதத்தைப்போல் அவ்வளவு அழகான ஒரு பெண்ணை நான் பார்த்ததேயில்லை. ஆம்—அவள் அழகாயிருந்தது போலவே கற்பொழுக்கம் உள்ளவளுமாய் இருந்தாள்—அன்புள்ள மகள்—அவளை அறிந்தவர்கள் எல்லாராலும் அவள் நேசிக்கப்பட்டாள். அப்படிப்பட்ட களஞ்சியம்போல்வாளைக் கைப்பற்றுதற்கு எல்லாவகையிலுந் தகுதியுள்ளவனான இந்நாட்டுப் பணக்கார இளங்குடியானவன் ஒருவனுக்கு அவளை மணம்பொருத்துவதாக உறுதிசெய்திருந்தது. அம்மா, பாருங்கள்! என் கணவனை இழந்தபிறகுங்கூட நான் ஆறுதல் அடைதற்குப் பலவழிகள் இருந்தன; எனக்கும் என் குடும்பத்திற்கும் நல்ல காலம் என்னும்படி பல குறிகளுங் காணப்பட்டன." என்று அம்மலையக் கைம்பெண் விடைகூறினாள்.

இதனை மிகவுங் கருத்தாய்க் கேட்டுவந்த குமுதவல்லி, "உங்கள் சொற்களால் எனக்கு முன்னமே தெரிந்தபடி, இவைகள் பிறகு எங்ஙனம் அவ்வளவு முழுதுங் கெட்டுப்போயிருக்கக்கூடும்?" என்று வினவினாள்.

"அம்மா, அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்று தன் கன்னத்தில் ஒழுகின கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அம்மலையமாது மறுமொழிதந்தாள்; "அம்மா, ஒருகால் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; ஆண்டுதோறும் முகமதியர் இரமசான் என்று சொல்லப்படுஞ் சிறந்த ஒரு நோன்பை ஒரு

திங்கள் வரையில் நோற்றுவருகிறார்களே.'' என்று தொடர்ந்து உரைத்தாள்.

''நான் அதனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.'' என்று குமுதவல்லி கூறினாள்.

''நல்லது அம்மா, அந்த இரமசான் நோன்பு நோற்கிற போது—அல்லது அதன் முடிவில் உள்ள ஒரு வழக்கத்தைப் பற்றி நீங்கள் ஒரு வேளை தெரியாதிருக்கலாம். அதாவது: எங்கேனும் அகப்பட்ட அழகில் மிகச்சிறந்த ஒரு கன்னிப்பெண்ணைத் துருக்கி சுலுத்தானுக்குக் காணிக்கையாகக் கொண்டு போய் விடுவதுதான். அதற்காக அடிமை விற்பவர்கள் இரமசானுக்குச் சில திங்கள் முன்னாகவே அழகிய பெண்களை உன்னிப்பாய்த் தேடித்திரிவார்கள்; சுலுத்தானது உவளகத்திற்குத் தெரிந்தெடுக்கப்படும்படி மற்றவர்களைப் போட்டியிற் பின்னிடச்செய்யும் அத்தனை அழகுள்ள ஒரு கன்னியைத் தாம் பெறும் நல்வினை உடையவர்கள் ஆகலாம் என்பது அவர்களுடைய ஆவல்.'' என்றாள் அக்கைம்பெண்.

''இஃது எனக்கு நன்றாய்த் தெரியும். மேற்கணவாய் மலை நாடுகளில் உள்ள அழகிய இளங் கன்னிப் பெண்கள் பலர் துருக்கி தேயத்துப் பெருஞ்செல்வர்களின் மகளிரில்லத்துக்குட் செல்ல விழைந்து தாமாகவே அடிமைவிற்கிறவர்களின் பின்னே காந்தாரந்திநோபிள் என்னும் நகரத்திற்குப் போவதைத் துயரமுடன் ஒப்புக்கொள்ளவேண்டியதே. இன்னுங் கொச்சி, குடகு, மலையாநாடு, நாகநாடு முதலியவற்றிலுள்ள தாய் தந்தைமாருந் தம்புதல்விகளுக்கு உயர்ந்தநிலை தேடிக்கொடுக்கும் விழைவால் அடிமை விற்பவர்களிடந் தாமே தம் உரிமைப் புதல்வியரைக் கொடுத்துவிடுவது பின்னும் மிக்க வருத்தத்தொடு சொல்லவேண்டியதா யிருக்கின்றது.'' என்று குமுதவல்லி மொழிந்தாள்.

''அவை எல்லாம் அவ்வளவும் உண்மை, அம்மா! இன்னும் என்ன, அடிமை விற்கும் அவர்கள் அடிக்கடி மாதரைக் கொள்ளைகொண்டு போகுங் கொடியவர்கள். அவர்கள் நடவடிக்கைகளாற் பறிகொடுத்த குடும்பத்தில் துயரமுங் கேடும் உண்டா

கின்றன. என் தலையெழுத்தும் இதுவே, அம்மா." என்று அம்மலையமாது மறுமொழி கூறினள்.

இப்போது அவ்வேழைக் கைம்பெண்ணின் மனத்துயரத்தின் காரணம் இதுவென்று அறிந்தாளாய்க் குமுதவல்லி, "ஓ, இது கூடுமோனதா! உங்கள் அழகிய மரகதம் அங்ஙனங் கொண்டு போகப்பட்டனளா?" என்று கூவினள்.

"அஃது அப்படித்தான், அம்மா." என்று மறுமொழி சொல்கையிலேயே தேம்பித் தேம்பி அழுதாள்; "இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் அடிமை விற்பவன் ஒருவன், ஏராளமான குதிரைச்சாரியுடன் வந்து, உணவு எடுப்பதற்காக இந்த மனையகத்தில் தங்கினன். அவன் தன்னிடத்தே ஏறக்குறைய ஆறு அழகிய இளம் பெண்களை வைத்திருந்தான்—அவர்கள் எல்லாருங் காந்தாந்திநோபிள் நகரத்திற்குப் போவதைப்பற்றி மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். இன்னும் அவன், பார்வைக்குக் கொடுந்தோற்றம் உடையராய்ப் படைக்கலம்பூண்ட ஆறுபேர்களைக் கூட வைத்திருந்தான். என் மரகதத்தின்மேல் அத்தீயவன் கண்கள் பட்டநாள் பொல்லாதநாள்! இப் பெண் தன் பேரழகின் பொலிவால் துருக்கி சுலுத்தானுக்கு உகந்தவளாய் அவ்வரச நகரத்திலே தெரிந்தெடுக்கப்பட்டு,வரப்போகின்ற இரமசான் பண்டிகை முடிவிலே, அவருக்குக் காணிக்கையாக விடப்படுதற்கு இடம் இருக்கின்றதென உறுதிமொழி சொல்லி, ஆகவே, அவளைத் தன்னொடுசேர்த்து விடுவதற்கு நான் உடன்படவேண்டு மென்று முதன்முதல் அவன் எனக்கு எடுத்துச் சொல்லத்துணிந்தான். ஆனல், நான் அவன்சொல்லிய ஏற்பாட்டை இகழ்ந்து சினத்தோடுந் திகிலோடும் மறுதலித்து விட்டேன். அம்மா, அப்போதுதான் அவன் கைக்கூலியாலும் வேண்டுதலாலுந் தான் பெற்றுக்கொள்ளக்கூடாததை வலிவுசெய்து அடையலானன். என் கூலியாட்கள் தொலைவில் வயலிலே இருந்தார்கள்: நானே இங்கே என் மூன்று புதல்விமாரோடுங் காவல் அற்று இருந்தேன். அந்தத் தீயவன் என்னையும் என் இளைய புதல்விகள் இருவரையுங் காலுங் கையுங் கட்டிவிடும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிட்

டான்; நாங்கள் எவ்வளவோ தடுத்துங் கெஞ்சியும் அழுதும் அவர்கள் அப்படியே செய்துவிட்டார்கள். பிறகு, மரகதம் அலங்கோலமாய்த், துன்பத்தால் மெய்ம்மறந்துபோக, அவளைக் கொண்டுபோய் விட்டனர்! என்னையும் மிஞ்சின என் இரண்டு பெண்களையுங் கட்டவிழ்த்துவிட யாரும் இந்த மனையகத்திற்கு வரும்முன்னே அந்தக் குதிரைச்சாரி நெடுந்தொலைவு போயிருக்கவேண்டும்.''

குமுதவல்லி அப் பெண்பிள்ளையின் கையைப் பிடித்து அதனை உண்மையான இரக்கத்துடன் அழுத்திக்கொண்டு, ''ஓ! இவையெல்லாங் கொடுமையாயிருக்கின்றன! இவ்வாறு உங்கள் மரகதத்தை இழந்துபோனீர்களோ?'' என்று சொன்னாள்.

அதற்கு வருத்தம் மிக்க அம்மாது, ''எப்போதுமே இழந்து போனேன். தானும் நாங்களும் உள்ளான இப்பொல்லாத கொள்ளையை அவனுக்கு மணமகனாக உறுதிசெய்யப்பட்டவன் தெரிந்தவுடனே, அவன் மனத்தை வருத்திய துன்பத்தை, ஓ! அம்மா, நீங்களே எண்ணிப்பாருங்கள்! என் மரகதத்தினிடத்திலே அவனுக்கு இருந்த உண்மையான அன்புக்கு ஓர் அடையாளம் உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தக்குதிரைச் சாரியைப் பின்றொடர்தற்காக அவன் படைக்கலம்பூண்ட தோழர் கூட்டத்தொடு புறப்பட்டான்: ஆனால் அதைப்பற்றி அவன் ஒரு செய்தியும் பெறக்கூடவில்லை; அவன் காந்தாந்திநோபிள் நகரத்திற்கும் பயணம் புறப்பட்டுப் போனான். ஆனாற், பல வகைப்பட்ட இடுக்கண்களும் இடரான நிகழ்ச்சிகளும் அவனை வழியிலே தடங்கல் பண்ணின; ஆகையால் அவ்வரசநகரத்திற்கு மிகவுங் காலந்தாழ்த்துப் போனான். இரமசான்பண்டிகை முடிவு பெற்றது; வழக்கப்படி திருவிழாக்களுங், களியாட்டுகளும், வாணவேடிக்கைளுஞ், சிறந்த ஊர்கோலங்களும் அதனைப் பின்றொடர்ந்து நடந்தன. கடைசியாக ஆட்பலியும் நடந்தேறியது; முந்நூறு அழகியபெண்கள் நடுவிலே என்னுடைய மரகதம் சுலுத்தானுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் நிகரற்ற அழகியமணியாய்ப் பொறுக்கி எடுக்கப்பட்டாள். அவ்வேழை இளம்பையன் நெஞ்சம் உடைந்தவனாய்க் காந்தாந்திநோபிளை

விட்டுவந்தான்; உரியகாலத்தே தன் வீடு வந்து சேர்ந்தான். ஆனால், ஐயோ! முன்னிருந்ததற்கு அவன் வடிவம் எவ்வளவு வேறுபட்டுப்போனான்! அம்மா, நான் அவனை அடிக்கடி பார்க்கிறேன்: ஆனால், திரும்பி வந்தது முதல் அவன் வாயில் ஒரு புன்சிரிப்பாயினும் வர நான் பார்க்கவில்லை. தானே இயங்கும் ஆற்றல் வாய்ந்த மெய்யான உயிர் ஏதும் இல்லாத ஒருபொறி தன் அமைப்பின் சூழ்ச்சியால் நடைபெறுதல் போல அவன் தன் அலுவல்மேற்போகிறான். என் மகள் சுலுத்தான் மனைவியாகி யிருக்கலாம் என்பதில் தட்டில்லை: ஆனால், ஐயோ! இந் நேரம் அவள் மனம் முறிந்துபோகாவிட்டாலுங்கூட, வெளிமினுக்கான துயரநிலையிலேதான் அவள் இருக்கின்றாள் என்று எனக்குத் துணிவாய்த் தோன்றுகின்றது." என்று கூறினாள்.

"அவளிடமிருந்து உங்களுக்கு ஒருசெய்தியும் வரவில்லையா?" என்று குமுதவல்லி வினவினாள்.

'ஐயோ, இல்லையே!" என்று அக் கைம்பெண் விடை பகர்ந்தாள். "ஒருதடவை ஒரு பெண்பிள்ளை காந்தாந்திநோபிளிலுள்ள அரசன் இல்லகத்துள் நுழைந்துவிட்டால், அவளுக்கும் வெளியேயுள்ள உலகத்திற்கும் நடுவிலே கடக்கமுடியாத ஒரு பெருந்தடை உண்டாய் விடுகின்றது. அவள் யார்க்குஞ் செய்தி விடுப்பதுங் கூடாது; மற்றவர்களிடமிருந்து ஒரு செய்தியும் பெற்றுக்கொள்வதுங் கூடாது. வேறிடங்களில் தான் விட்டு வந்த பெற்றோர், உறவினர், நண்பர்கள் முதலான எல்லாரையும் அவள் ஒழித்துவிடவேண்டும், ஆணையொடு மறுத்துவிட வேண்டும்; அவள் சைவசமயியாயிருந்தால் தான் கைக்கொண்ட சமயத்தையுங்கூட விட்டு விடுதல் வேண்டும். சுருக்கமாய்ச் சொன்னால், அம்மா, அவள் இன்னொன்பதே தொலைந்துபோய் விட்டது; அவளிடத்திற் பற்றுதல் வைத்தவர்கள் அவளைப் பற்றி இனி ஒன்றுங் கேளாமலேபோகலாம். என் மரகதத்தின் தலையெழுத்தும் அப்படியேயாயிற்று. அம்மா, இப்போது, என் முகத்தின்மேல் அடையாளங்களாக அவ்வளவு ஆழ்ந்த கோடுகள் அவ்வருத்தத்தினால் எவ்வாறு உண்டாயின என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்கள்."

குமுதவல்லியும் அவள் பாங்கிமார் இருவரும் அம்மலைய நாட்டு மாது சொல்லிய கதையிலே துயரமும் இரக்கமும் மிகுந்த ஒருபற்றுதல் கொள்ளப்பெற்றனர்கள். அவளை ஆற்று வித்தற்கு அவர்கள் ஒரு சொல்லாயினும் பேச முயலவில்லை. ஏனெனில், அங்கே ஆறுதலுக்கு இடம் ஒன்றும் இல்லை. திரும்ப நன்மையுண்டாமென்று அவர்கள் ஓர் எழுத்தாயினுஞ் சொல்லவுமில்லை: ஏனென்றால்,மனவிருப்பே அவிந்து போயிற் றென்றும், அவ்விடரினின்றும் அவளை இனித்திருப்ப முடியா தென்றும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

"இலட்சக்கணக்கான குடிமக்களுக்கு எல்லாம்வல்ல அரச னயிருக்கும் வல்லமையுள்ள சுலுத்தான் அவர்கள் தாம் இன்பம் நுகர்தற்பொருட்டுத், தாழ்ந்தோராயினுந் தம்மோடொத்த மக் கள் சிலர்மேல் எவ்வளவு பெருந்துயரத்தைச் சுமத்திவிடு கின்றார் என்பதைத் தாஞ் சிறிதும் நினைக்கின்றார் இல்லையே! இன்னும், அம்மா, அவ்விளவரசன்றன் இன்பத்திற்காக மற்ற நாடுகளில் உள்ள குடும்பங்கள்—என் குடும்பம் ஆக்கப்பட்டது போல்!—பாழாக்கப்படுவது பின்னுந் துயரநிகழ்ச்சியாய் இருக் கின்றதே! அப்படி யிருந்தும், அவர் அமைதியும் இரக்கமும் உள்ள நல்ல மன்னன் என்றும், அவர் அருளும் அன்பும் நிறைந்தவரென்றுந், தாம் அவற்றை நீக்கிவிட எண்ணமுள்ள வராய் இருந்துந் தங் குடிமக்களின் அன்பிற்குப் பழுதாகும் என்று அஞ்சிப் பழக்க வழக்கங்கள் பலவற்றிற்கு இடந்தந்திருக் கிறார் என்றும் பேசிக்கொள்ளுகிறார்கள்." என்று அம்மாது தொடர்ந்து கூறினள்.

"ஓ! அவ்வாறாயின் அவரது வல்லமையால் யாதுபயன்? எவ்வளவு நன்மைசெய்யக் கூடுமோ அவ்வளவுஞ் செய்திலரா யின் தாஞ் செலுத்தும் அத்தனை வல்லமையும் என்னபய னுக்கு?" என்று குமுதவல்லி அவ்வம்மைக்கு நேர்ந்த இடுக் கணை நினைந்து அருவருப்பு மிக்க குரலிற்பேசினள்.

"அம்மா, பேசாதேயுங்கள்!" என்று அவ்வம்மை மறு படியுந் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "என் புதல்வி கள் திரும்பிவருகிறார்கள், காணாமற்போன அவர்களின் அக்

களைப்பற்றி நான் அவர்களிடம் பேசுவதே இல்லை.'' என்று சொன்னார்.

அப்பெண்கள் அங்ஙனமே வந்தார்கள்; குமுதவல்லிக்கும் அவள் பாங்கிமார்க்கும் ஏற்படுத்தப்பட்ட அறைக்கு அவர்களை இப்போது அழைத்துச்சென்றார்கள். அங்கே நாகநாட்டரசி யானவள் சிறிது முன்னே தான் கேட்ட துயரமான வரலாற்றைப்பற்றித் தனக்கு உறக்கம் வந்து கூடும்வரையில் தன் பாங்கிமாரொடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தாள்.

காலையில் அவர்கள் அறையை விட்டு வந்தபோது, அவ்வம்மையும் அவள் மகளிர் இருவருந் தாஞ் செய்தற்குரிய உதவிகளைக் கூடுமானவரையில் ஏற்கும் வகையாய்ச் செய்துகொண்டிருப்பதைப்பார்த்தார்கள்: பல திறப்பட்ட உணவுகளுங், காணியில் விளைந்தனவுங், கனிகளுங், குளிரப்பண்ணுங் குடிநீர்களுஞ் சாப்பாட்டுக்காகப் பலகைமேற் கொண்டுவந்து பரப்பப்பட்டன. குமுதவல்லி, அவ்வம்மையினிடத்துக், கூலிக்காரரிற் சிலரைப் படைக்கலந் தாங்கிய வழித்துணையாக் கூட்டிவிடுக்கும்படி கேட்க எண்ணினாள்; ஆனால், அக்கைம்பெண் தற்செயலாய்ப் பேசியதொன்றி லிருந்து அவர்கள் எல்லாருந் தமது விடுமுறைகாலைக் களியாட்டிற் கழிக்கத் தொலைவி லுள்ள ஓரிடத்திற்குப் போயிருக்கின்றார்கள் என்று அறிந்துகொண்டமையால், நீலகிரி நகரத்தைநோக்கிச் செல்லும்வழியிற் காணப்படுஞ் சிற்றூர்களிலாவது நகர்களிலாவது தக்க துணையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்னுந் தீர்மானத்தினளவில் நாகநாட்டரசி தன்னை அமைதிசெய்துகொண்டாள்.

குமுதவல்லியும் அவள் பாங்கிமாருந் தாம் பெற்றுக்கொண்ட அன்பான உதவிக்காக நன்றிமொழிகளுங் கடமைகளுஞ் சொல்லிவிட்டு, அக்கைம்பெண்ணி னிடத்தும் அவள் புதல்விமார் இருவரிடத்தும் விடை பெற்றுக்கொண்டார்கள். ஈரநெஞ்சத்தொடு செய்யப்பட்ட உதவிக்காகக் கைம்மாறு ஏதும் அம்மாது விரும்பாமலும் எதிர் பாராமலும் இருந்துங், குமுதவல்லி நேரம் பார்த்து, மறைவாய் இரண்டு பரிசுகளை அவ்விரு பெண்களுக்குங் கொடுத்தாள். திருப்பவும் இப்போது நம் அழ

கிய தலைவி தன் அன்புள்ள பாங்கிமாரொடு பயணஞ்செல்ல நாங் காண்கின்றோம்.

ஏறக்குறையக் கட்டாயமாய்க் குறிக்கவேண்டிய இரண்டொரு செய்திகளைத் தெரிவிக்க வேண்டியிருந்தும், இதுவரையில் நாம் சொல்லிக்கொண்டு வந்ததை அவற்றிற்காக நடுவே நிறுத்தவில்லை; ஆகையால், இப்போது இடம்பெற்றமையின் அதனைச் சொல்லிவிடுவாம். அப் பஞ்சாலைக்காரனது வீட்டண்டையிலிருந்து தான் கலவரமாய் ஓடிவந்த பிறகு, ஒழிவு கிடைத்தமையாற் குமுதவல்லி இப்போது தான் அச்சந்தரும் நல்லானைத்தவிரப் பிறன் அல்லன் எனத் தீர்மானமாக எண்ணிய அவ்விளம் பௌத்தனுடன் தான் சிறிதுநேரங் கொண்ட பழக்கத்தைப்பற்றி நினைந்தபொழுது, தான் சிறிதுநேரமேனும்பற்றுதல் வைத்த ஒருவன் அவ்வெண்ணத்திற்கு அங்ஙனம் எள்ளளவேனுந் தகுதியில்லாதவனாய்ப் போனதைப்பற்றி மிகுந்த வருத்தங் கொள்ளப்பெற்றாள். தத்தம் வகுப்புக்குரிய உடம்பின் பேரழகெல்லாம் முறையே ஒருங்கு திரண்டு உருவாகிய இருவர், அங்ஙனந் தமக்குள் ஏதோ அத்தன்மைத்தாகிய பற்றுதல் கொள்ளப்பெறாது ஒருங்கு கூட்டப்படுதல் கூடாததேயாம் என்பதனை முன்னரே கூறிப்போந்தாம். குமுதவல்லியின் அளவுகடந்த வனப்பினாலும், அமைதியினாலும், அறிவினாலும் நீலலோசனன் உள்ளத்தில் எழுந்த எண்ணமானது ஏற்கெனவே ஏதோ காதலொடு மிகவும் இணைப்பட்டதொன்றாய் இருந்தது; ஆனால், அக்கன்னிப்பெண்ணோ முன்முரமில்லாத எண்ணங்களும் விளையாத குணமும் உடையவளாய் இருந்ததனாற் சிறிது பற்றுதலுணர்வுமட்டுங் கொள்ளப்பெற்றாள். தன் புத்தப் புதிய இளம்பருவ உணர்வுகளினிடையே, மக்கள் இயற்கையில் நம்பிக்கைகொள்ள விழைந்த ஒருத்திக்கு அந்த நம்பிக்கை, நீலலோசனனிடத்தில் ஏமாற்றம் உற்றதுபோல், அவ்வளவு கொடுமையாக அதிர்ச்சி பெறுமானால் அல்லது அழிக்கப்படுமானால் பின்னும் அது வருந்தத்தக்கதாகவே யிருக்கும். ஆகவே, அங்ஙனமானதுபற்றி அவள் புலம்பியது ஒரு வியப்பன்று. அஞ்சத்தக்க நல்லான் தன்னொடு வழிப்பயணம் வந்ததைப்பற்றி

நினைக்கையில் உண்டான திகிலினும் வியப்பினும் வேறாக, அவள், அத்தனை இளைஞனாய்க் கவர்ச்சிமிக்க நோக்கம் வாய்ந்தவனாய் இனிய நடை யுள்ளவனாய் உள்ள ஒருவன் திகிலையுங் கலவரத்தையுந் தருஞ் செய்கையுடையவன் ஆயதை நினைக்கும்போது தான் மனவெழுச்சி குன்றப்பெறுவது ஒருவியப்பன்று.

இனிக், குமுதவல்லியும் அவள் பாங்கிமாருந் தம் வழியே செல்வதைப்பற்றிக் கூறுவது விடுத்துச், சிறிதுநேரம் படிப்பவர் கருத்தை மற்றவகைகளுக்குத் திருப்புகின்றோம். இந்த அதிகாரத்தை முடிப்பதற்கு முன்னே முதலாக நீலலோசனனிடந் திருப்புவோம். குமுதவல்லியைப் பிரிந்தபிறகு அவனையும் அவன் துணைவர் கேசரிவீரன் வியாக்கிரவீரனையுந் துப்புக்கெட்ட அச்சாவடியிலே விட்டு வந்தோம். அப்பௌத்தர் மூவருந் தங் குதிரைகளைப் பணையத்துக்குள் விட்டபிறகு, அத்தனை எளிமையான அவ்விடத்திற் கிடைக்கக்கூடிய உணவை உண்பதற்கு உட்கார்ந்தார்கள். என்றாலும், நீலலோசனன் சிறிதே உண்டான்; அஃது அளவான அவ்வுணவு தனக்குச் சுவைப்படாமையால் அன்று; ஏனெனிற் செழுமையான அல்லது சுவைமிக்க உணவிலே அவன் அவா உடையவன் அல்லன்; ஆனால், அஃது அவன் உள்ளத்திற் குமுதவல்லியின் அழகிய வடிவம் நிறைந்திருந்ததனாலே யாம். மயங்கப்படுத்தும் அத்துணை அரிய அழகினை இதற்குமுன் அவன் கண்கள் எங்கும் பார்த்ததே இல்லை; தன் காதினுள் மெல்லெனப்புகுந்த அல்லது தன் நெஞ்சத்தினுள் முழுதும் ஆழ இன்னிசை பொழிந்த அவ்வளவு ஒலி யினிய குரலினை அவன் இதற்கு முன் கேட்டதேயில்லை. அந்நாளில் தமக்குமுன் எதிர்ப்பட்ட இனிய கூட்டுறவைப்பற்றிக் கேசரிவீரனும் வியாக்கிரவீரனும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்; முந்தினவனான கேசரி வீரன் குமுதவல்லியின் வனப்பினால் தன் இளந்தலைவன் நெஞ்சங் கலவரப்பட்டது குறித்துச் சிறிதுந் துயரம் அடையாமலே இருந்தான்.

ஆனால், திடீரென்று அம்மூவரும் உட்கார்ந்திருந்த அறையின் கதவு—அச்சாவடியின் இடத்தின் அளவு நெருக்கமாய் இருந்தமையால் தலைவனும் அவன் ஆட்களும் வேறு வேறு

இருத்தற்குத் தனித்தனி அறைகள் வகுக்கப்படவில்லை—திறக்கப்பட்டது ; அப்பஞ்சாலைத் தலைவன் உள்ளே வந்தான்.

"ஐயா, இளைஞரே, நல்ல பெண்கள்கூட்டத்தை என்னுடைய விருந்தோம்பலுக்குக் கள்ளமாய்ச் செலுத்தினீர்! நான் அடைந்த மானக்கேட்டிற்காக இவ்வூரிலுள்ள ஆறு நல்ல தடியர்களை ஒன்றுசேர்த்து, உம்மையும் உமக்குத் துணைவந்த இக்கள்வர்களையும் நன்றாய்ப் பழுக்கப்புடைத்தேனானால் என் மனம் ஆறும்! நீங்கள் நல்லொழுக்கம் உள்ளவர்கள் அல்லரென எனக்கு எண்ணந் தோன்றுகின்றது ; இல்லாவிட்டால் அந்த மாதும் அவள் பாங்கிமாரும் அங்ஙனம் நடந்திருக்கமாட்டார்களே." என்று அவன் உரத்துக் கத்தினான்.

"இறுமாப்புமிக்க முதியோனே! என்ன பேசுகின்றாய்?" என்று நீலலோசனன் துள்ளி எழுந்தான்.

அதற்குப் பஞ்சாலைக்காரன் கடுகடுப்பான பார்வையோடுங் குரலோடும், "என்ன பேசுகிறேனா? அந்தப்பெண்ணும் அவள் தோழிகளும் உங்களையொத்த பௌத்தர்களின் வழித்துணை ஆகாதெனக் கருதித் தாம் பிரிந்து போகவேண்டிய தக்கநேரத்தை நாடியதற்கு ஏதோ நல்லகாரணம் இருந்ததாகல்வேண்டும்." என்று மறுமொழி புகன்றான்.

"பிரிந்தாபோயினார்கள்?" என்று நீலலோசனன் திடுமெனக் கூவி, "உன்னுடைய சொற்கள் எதனைக் குறிக்கின்றன?" என வினவினான்.

"அவர்கள் பறந்தோடிப்போனார்கள்." என்று விடை பகர்ந்தான் பஞ்சாலைக்காரன் ; "வீட்டண்டை போனதும்—"

"ஓடியா போனார்கள்?" என்று நீலலோசனன் மறுபடியுங் கூவினான் ; அங்ஙனமே வியாக்கிர வீரனுங் கூவினான் ; அப்போது கேசரிவீரன் பேசாதிருந்தாலுந் தன்பார்வையில் தானுற்ற வியப்பினைப் புலப்படுத்தினான்.

"ஆம், ஓடித்தான் போனார்கள்" என்று திரும்பவும் பஞ்சாலைக்காரன் மறுமொழி புகன்றான்; "அங்ஙனம் அவர்கள் செய்ததற்குத் தக்ககாரணம் இருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை."

அப்பௌத்த இளைஞன் மிகவுங் கலவரம் அடைந்தவனாய் "ஓ புத்தரே, சாரணர்களே!" என்று ஓலமிட்டான்; "உம்முடைய வெடுவெடுப்பான குணமும் அன்பற்ற செய்கையுமே, அந்நங்கையும் அவள் பாங்கிமாரும் அவ்வுதவியை வேறிடத்திற் றேடிப் பெறும்படி அவர்களைத் தூரத்திவிட்டன; ஐயமின்றி நீர் தாம் அவ்வுதவிக்கு விலை ஏற்படுத்தி வாணிகம் பண்ணினீரே!"

"உமது விருப்பப்படி புத்தரையாவது அவர் சாரணரையாவது ஆணையிட்டுக் கூப்பிட்டுக்கொள்ளும்; நானோ சைவசமயத்திற்குரிய அடியார்கள் எல்லாரும் அறிய ஆணையிட்டு நீர் பொய் பேசுகிறீர் என்று சொல்லுகின்றேன்! அந்தப்பெண்ணையும் அவள் பாங்கிமாரையும் நான் என் வீட்டுக்கு எவ்வளவோ அன்புடன் அழைத்துப்போனேன்; போய் வீட்டுக்கதவைத் திறக்க யான் திரும்பவே, அவர்கள் வில்லினின்று அம்புகள் புறப்பட்டாற்போல் விரைந்து ஓடிப்போனார்கள். "பறந்து ஓடுங்கள் உங்கள் உயிர் தப்ப?" என்னுஞ் சொற்கள் அப்பெண்ணின் வாயினின்றும் ஒலித்தன! அவர்கள் ஓடியேபோனார்கள்! குளம்பின் ஓசையாலல்லாமல் அவர்களுடைய குதிரைகள் தம் அடிகள் நிலத்தே பாவாதனபோலவே தோன்ற அத்தனை விசையாய்ச் சென்றன." என்று பஞ்சாலைக்காரன் திரும்பவும் பேசினான்.

அவ்வாடவன் வெடுவெடுப் புள்ளவனாய் இருந்தாலும், அவனது உயர்ந்த பெருந்தன்மையைப் பார்க்குமிடத்து, அவன் இக்கதையைச் சொல்லிய வகையில் ஏதோ பிசகாத உண்மை ஒன்று உண்டென்பது புலப்பட்டது. அது வல்லாமலும், நன்கொடை கிடைக்குமென்று உறுதிமொழி சொன்னவுடனே அவன் தான் உதவி செய்வதிற் போதுமான பெருமகிழ்ச்சி காட்டினதை நீலலோசனன் நினைவு கூர்ந்தான். இப்பொழுதோ குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் ஓடிப் போனமையால் அவன் தான் எதிர்பார்த்ததை இழந்துபோனான். ஆகவே அப்பௌத்த இளைஞன் அவன் சொல்லிய கதையில் ஐயுறவு கொள்ளக் கூடவில்லை; அல்லது அக்கதை வேறுபடுத்தியாவது பிசகாகவாவது சொல்லப்பட்டதென்று அவன் எண்ணக்கூடவு

யில்லை. அவன் பஞ்சாலைக்காரனிடங் கடுமையாய்ப் பேசிய தனது நடையை மாற்றி, அவனை அழைத்து மேசையின் அருகே இருத்தி நடந்தவற்றைப்பற்றி நுணுக்கமாய்க்கேட்டான்; அப் பஞ்சாலைத் தலைவன் அக்கதையைத் திரும்பவும் அப்படியே மொழிந்தான்; அவன் பின்னுஞ் சேர்த்துக் கூறவேண்டுவதொன்றும் இல்லை. குமுதவல்லியும் அவள் தோழிமாரும் போய்விட்டார்கள் என்பது தெளிவாகப் புலப்பட்டது; அவர்கள் அடைந்த பேர் அச்சத்திற்குக் காரணம் யாதென்று அவர்கள் ஒருங்கு கூடி ஆழநினைத்துஞ் சிறிதேனும் உய்த்தறிய வலியற்றவர்களானார்கள்.

மறுநாட் காலையில் அவ்வழகிய நங்கையொடு கூடி மறுபடியும் பயணந் துவக்கக் குறித்த நீலலோசனன் எண்ணம் பாழ்பட்டது. தனது உயிரின் இன்பத்திற்கு இன்றியமையாததான ஏதோ ஒன்றைத் தான் இழந்துவிட்டது போலவும், இதற்கு முன் எங்குந் துலக்கமாய் நகைகொண்டு விளங்கிய ஒரு தோற்றத்தின்மேற் கரிய முகிலானது தனது நிழலை வீசி மறைத்தது போலவும் அவன் எண்ணினான்; அன்றிரவு அப்பௌத்த இளைஞன் துயர்மிகுந்த உள்ளத்தொடு படுக்கைக்குச்சென்றான்.

ஒன்பதாம் அதிகாரம்.

கொள்ளைக்காரன் மனைவி

இப்போது நாம் நல்லானிடந் திரும்புதல்வேண்டும். ஏனெனில், அப்போது நேர்ந்த அச்செயலின் நிலைமைகளால் நாகநாட்டரசி அவ்வளவு வருந்துதற் கிடமான பிழையெண்ணங் கொள்ளப்பெற்றது இயற்கையே என்றாலும், இதனைப்பயில்வோர், உயர்ந்த ஒழுக்கமும் நற்குணமும் வாய்ந்த நீலலோசனனை அக்கொடிய கொள்ளைக்காரனோடு ஒன்று படுத்திய குமுதவல்லியின் பிழையிற், சிறிதும் உடன்பட மாட்டார்களாதலால் என்க.

குமுதவல்லியினின்று அவளது மோதிரத்தைக் கவர்ந்து கொண்டமையால் தன் கருத்து இனிது நிறைவேறியபின், எவ்வாறு நல்லான் அச்சாவடியைவிட்டுச் சடுதியிற் போயினன் என்பதைச் சாவடிக்காரன் வாய்மொழியால் நாம் அறிந்துகொண்டோம். இருளனையும் மாதவனையுந் தான் விட்டு வந்ததும், நீலலோசனனையும் அவன் துணைவரையுந் தவறாமற் சிறைப்படுத்தும்பொருட்டுக் கோபுரத்திற்குத் தான் விடுத்த தன் கூட்டத்தார் கையில் அவர்கள் சிறைப்பட்ட செய்தியைத் தெரிந்துகொள்ளுதற்கு இப்போது அவன் எதிர்பார்த்ததனுல், சில கல் தொலைவிலுள்ளதும் ஆன ஓர் இடத்திற்கு அவன் விரைந்து குதிரை ஊர்ந்து திரும்பிவந்தான். மாதவனது உடையிற்றான் கொண்ட கோலத்தொடு சிறிதுநேரம் இல்லாதிருந்து, பிறகு தான் இப்போது திரும்பிவரும் இவ்விடத்திற் பௌத்தரைச் சிறைகொண்டு தன் கூட்டத்தார் வந்திருப்பர் என்றும் அவன் எதிர்பார்த்தான்.

இவ்விடத்திற்கு வந்ததும் நல்லான் அங்குள்ள தோப்பிற்குள் நுழைந்தான்; அவன் அங்குநின்று போனதும் அங்கே இயற்றப்பட்ட கூடாரத்தின் உள்ளேயிருந்து ஒருவிளக்கு ஒளிர்வதைக் கண்டான். உடனே, புல்லின்மேற் படுத்துக்கொண்டிருந்த இருளனும் மாதவனும் விரைந்தெழுந்து இவனிடம் வந்து சேர்ந்தார்கள்; கள்வர்தலைவன் உள்ளக் கொதிப்புடன் "என்னசெய்தி?" என்று கேட்டான்.

அதற்கு இருளன் துயரத்தோடும், "பொல்லாத செய்தி சொல்லவேண்டியிருப்பதற்காக வருந்துகின்றேன்." என்று விடைபகர்ந்தான்.

"கேடுகாலமே!" என்று சினம் நிறைந்த குரலொடு, "நான் கொண்ட பொல்லாத ஐயுறவின்படியே ஆயிற்று! நல்லது ஈது என்ன செய்தி? நம்முடைய ஆட்கள் எங்கே? அவர்கள் திரும்பி வந்தார்களா? மீனும்பாள் எப்படியானள்?" என நல்லான் உரத்துக்கூவினன்.

"மீனும்பாள் பெருமாட்டி பாதுகாப்புடனேதான் இருக்கிருர்கள்." என்று இருளன் ஏதோ சொல்வதற்கு நல்லசெய்தி

வாய்த்தது பற்றி மகிழ்ந்து விடை கூறினான்; "அவ்வம்மை அதோ அந்தக் கூடாரத்தில் இருக்கிறார்கள். பௌத்தர்களைப் பற்றியோ வென்றால், அவர்கள் மறுபடியும் நம்மைத் தப்பிப் போய் விட்டார்கள்."

"மறுபடியும் தப்பியா போய்விட்டார்கள்?" என்று நல்லான் இரைந்தான்; "முனிவர்கள் எல்லாரும் அறிய, நாம் எடுத்தமுயற்சிகளில் நாம் உணர்வுகெட்ட முழுமடையர்களாய் விட்டோம் என்று தெரிகிறது! குறைந்தமட்டில் நான் மட்டும் இல்லை; ஏனென்றால், நான் ஒருவனே முயற்சியில் வெற்றி அடைந்துவருகின்றேன்!"

"ஆ! சிறந்ததலைவனே தாங்கள் வெற்றி பெற்று வந்தீர்களா?" என்றான் இருளன்; "ஏதோ அவ்வளவேனும் நல்லது தான்!"

"ஆம், ஏதோ நல்லதுதான்," என்று நல்லான் விரைந்து விடைகூறினான்; "ஆனாலும், அஃது ஆகவேண்டியதிற் பாதியே தான். நம்முடைய ஆட்கள் எங்கே இருக்கிறார்கள்? இன்னுஞ் சிறிது நேரத்திற் குமுதவல்லியையும் அவள் பாங்கிமாரையும் வழிமறித்துப் பிடிக்கிறதற்காக அவர்கள் வேண்டப்படுவார்கள்."

இந்த நேரத்திற் கூடாரத்தின் திரையானது அப்புறம் இழுக்கப்பட்டது; மீனும்பாள் வெளியே வந்தாள்.

"என் மேன்மை மிக்க கணவனே!" என்று கூவிக் கொண்டு ஓடி நல்லானுடைய மார்பின்மேற் போய்விழுந்தாள்.

"என் அழகிய மீனும்பாள்! காதலின் மிக்க என் மனைவி!" என்று அத்தலைவன் கூவித், தான்காதலிக்கும் அவ்வழகிற் சிறந்த மங்கையைத் தன்மார்புற அணைத்துக்கொண்டான். இவ்விருவரும் பலகிழமைகளாகப் பிரிந்திருந்தமையால், இப்போது கூடிய கூட்டத்தில் உண்டான பெருங்களிப்பின்கண் ஆழ்ந்தவனாய் அவன் சிலநேரந் தன் சூழல்களையுஞ் சூழ்ச்சிகளையும் மறந்திருந்தான்.

முதலிற் கிளைத்த அவ்வுணர்வின் கொந்தளிப்புத் தணிந்தவுடனே, மீனும்பாள், "இருளன் மேற் குற்றஞ் சொல்லாதீர்.

நான் என்னுற்கூடியமட்டுஞ் செய்ததுபோலவே, அவனுந் தன்னுற் கூடியஅளவுஞ் செய்தான்; ஆயினும், அவ் விளம்பௌத்தனின் துணைவர்கள் ஏதோ ஐயப்பட்டார்கள்; அதனுல் எல்லாம் பிசகிப்போயின." என்று மொழிந்தாள்.

நல்லான் தன் தோளின்மேற் சாய்ந்துகொண் டிருக்கும் அழகிற் சிறந்த தன் மனையாளோடுங் கூடாரத்துக்குட் போயினுன்; அவர்கள் இரட்டுத்துணி மேல்மறைப்பின் கீழ் உட்கார்ந்தார்கள்; காப்பிரிப்பெண்ணும் மலைநாட்டுப் பணிப்பெண்ணுஞ் சிறிது தொலைவில் ஊன்றப்பட்டிருந்த வேறொரு கூடாரத்தில் இருந்தார்கள். அதனுல் நல்லானும் மீனும்பாளும் ஒருங்கு தனியே யிருக்க இடம் பெற்றனர்.

"இப்போது நடந்தவற்றை யெல்லாஞ் சொல் என் மீனும்பாள்." என்றுன் கள்வர் தலைவன்.

அங்ஙனமே அவள் நீலலோசனனிடத்தும் அவன் துணைவர்களிடத்துந் தான் செய்த துணிகரச் செயல்களை விரித்துரைப்பாளானுள்; அங்ஙனஞ் சொல்லுமிடத்துத், தான் அவ் விளம் பௌத்தனிடத்து அளவுக்கு மிஞ்சிக் காட்டிய காதலினிமைகள் அவ்வளவும் மெதுவே சொல்லாது விட்டு நெகிழ்ந்து போயினுள். பிறகு அவள் தான் வியாக்கிரவீரன் கையால் அடைந்த கடுஞ்செயல்களைச் சொல்லவந்தபோது, அவன் தன்னைக் காலுங்கையுஞ் சேர்த்துக்கட்டிச் சாய்வணையோடு எங்ஙனம் பிணித்து முடிந்தான் என்பதை எடுத்துக்கூறினுள்; இதனைக் கேட்டதும், நல்லான் "ஒரு பௌத்தனுடைய நாய்" என்று தான் பெயரிட்ட நீலலோசனன்றன் இளைய துணைவன் மேல் அச்சுறுத்துங் கொடுஞ்சொற்களையும் பழிவாங்கும் ஆணைமொழிகளையும் உரத்துக்கூவினுன். நல்லான் விரைந்துபோக்கின ஆட்கள் கோபுரத்திற்கு வந்த பிறகு அல்லாமல் தான் கட்டவிழ்த்து விடப்படவில்லை என்று மீனும்பாள் கூறலானுள். ஏனெனிற், பின்னே தெரிந்தபடி வீட்டுக்குரியவனும் அவ்வாறே காலுங்கையுங் கட்டப்பட்டுக் கிடந்தான்; குதிரைக்காரனும் பணையத்தில் உள்ள தன் அறையிற் கட்டப்பட்டு இருந்தான். அந்தப் பௌத்தர்கள் புறப்பட்டுப் போம்பொழுது கோபுரத்தின்

பெரிய வாயிற்கதவு அவர்களால் திறந்து விடப்பட்டிருந்தது. நீலலோசனனையும் அவன் துணைவரையும் பிடிக்கவேண்டுவது மிகவும் முதன்மையானதென்று கருதி, அவர்களை நாடெங்குந் தேடிப்பார்க்கும் பொருட்டு அக்கொள்ளைக் கூட்டத்தாரைத் தான் போக்கியிருப்பதாகவுந், தாந் தேடிப்போகும் பொருள் அகப்பட்டால் அல்லாமல்—அன்றி அவர்களைக் கண்டுபிடிக்கும் எண்ணம் முழுதும் பாழ்பட்டாலல்லாமல், அவர்கள் திரும்பித் தந் தலைவனிடம் வரலாகாது எனவுந் தான் அறிவுறுத்தி யிருப்பதாக மீனும்பாள் பின்னும் மொழிந்தாள். குதிரைமேற் சென்ற அவ்வாட்கள் நெடுநேரமாய் வாராததற்குக் காரணம் இது தான். அவர்கள் தன்னை விடுதலைசெய்ய வரும்வரையில், தான் இரண்டரை நாழிகைக்குமேற் சாய்வணையொடு சேர்த்துக் காலுங்கையும் இறுகக் கட்டப்பட்டிருந்தமையால், தான் மிகவுங் களைத்து நோயாய்ப்போகவே, திரும்பவுந் தன்கணவனிடம் வந்துசேரப் பயணம்புறப்படும்முன், அந்தநாளின் பிற்பகலில் தான் நெடுநேரங் காலந்தாழ்க்கலாயிற் றெனவும் மீனும்பாள் கூறிமுடித்தாள்.

அந்தப் பௌத்தர்களுக்கு மாறாய் எடுத்த துணிவுச் செயல் தவறியதைப்பற்றி நல்லான் மிகவும் மனம் அலைக்கழிந்தான்; என்றாலுந், தன் ஆட்கள் அவர்களைத் தொடர்ந்து பற்றிக்கொள் வார்கள் என்னும் ஒரு சிறு நம்பிக்கை இன்னும் அவன் கொண்டிருந்தான்.

"காதலிற் சிறந்த மீனும்பாள், யான் துவங்கியிருக்கும் இச்சூழ்ச்சியின் வகை முழுதும் யான் விடுத்த திருமுகத்தால் நீ தெரிந்திருக்கலாம்? அதில் நீ செய்யவேண்டுஞ் செயலும் நீ அறிந்திருக்கலாம்? இதன் பொருட்டாகவே, நீ பார்க்கச்சென்ற உன் உறவினர் வீட்டிலிருந்து உன்னை அவ்வளவு திடீரென்று வரவழைக்கலானேன்." என்று அவன் தன் மனைவியை நோக்கிச் சொன்னான்.

"மேன்மை தங்கிய பெருமானே, யான் எல்லாவகைகளை யுந் தெரிந்து கொண்டேன்." என்று மீனும்பாள் தன் கணவனின் அழகிய முகத்தை அன்போடும் வியப்போடும் நோக்

னிவளாய் விடை பகர்ந்தாள்; "ஆனால், குமுதவல்லியைப் பற்றியோ—"

"இதோ அவளது மோதிரம்!" என்று தன் வடிவத்தின் மேல் வெற்றிக்குறிப்புக் கிளர்ந்து தோன்ற நல்லான் மறுமொழி புகன்றான்; "நான் மட்டும் மேற்கொள்ளும் எந்தச்செயலிலும் நான் வெற்றி பெறுகின்றேன்!"

அதன் பிறகு, அவன் தான் இன்னும் அணிந்திருக்கும் அக்கோலத்துடன், அச்சாவடியிற் செய்த செய்கைகளை மீனும் பாளுக்கு விளக்கமாய் எடுத்து உரைத்தான்; அவன் அவற்றைச் சொல்லி முடித்தவுடனே, அவன் மனையாள் "ஓ! என் அன்புள்ள காதலனே, ஒருவர் அறிந்தாலும் உயிர்க்கு இறுதியாய் முடியும் ஒருநகரத்தின் நடுவிலே நீர் புகுந்தது எவ்வளவு முரட்டுத்தனம்!" என்று கூவினாள்.

"நீ என்னிடத்தில் வைத்திருக்கும் பற்றுதலின் மிகுதியைக் காட்டுதலால் இச்சொற்கள் என் காதிற்கு இனிமை தந்தாலும், என்காதலி, இத்தகைய அச்சத்திற்கு நீ இடங்கொடாதே." என்று அவன் மறுமொழி கூறினான்; "இப்போது நான் அவ்வளவு நன்றாய் வெற்றிபெற்றுவந்த துணிவான செய்கையை நான் துணிந்து செய்யவேண்டுவது எனக்குக் கட்டாயமாய் இருந்தது. என்றாலும், மீனும்பாள், நான் மிகவும் விழிப்பாய் இருந்தேன்! குமுதவல்லியிருந்த அறையிற் கட்டாயமாக இருக்க வேண்டியதற்கு மேல் ஒரு நொடிப்பொழுதுதானும் நான் தங்கவில்லை; அவள் அணிந்திருந்த மற்ற மணிகளை அகப்படுத்திக் கொள்ளவும்கூட நான் தங்கவில்லை; அணிகல மேசைமேல் ஏராளமாய்ப் பரப்பி வைக்கப்பட்ட அணிகலங்களைக்கூட எடுக்க நான் தங்கவில்லை. அதுவேயுமன்றி, இராக்காலத்திற் காவல் அற்று உறங்கும் பெண்கள் உள்ள அறைக்குள் நுழைந்தபோது, பதுங்கிச் செல்லும் இழிந்த திருடன்போல் யான் நடக்க வேண்டி வந்ததைப்பற்றி என்னையே யான் இகழ்ந்து கொள்ள வேண்டியவனானேன் என்பதை வெளிவிட்டுச் சொல்லுகின்றேன். திறந்தபாட்டையிற் செவ்வையாகப் படைக்கலம் பூண்டு செல்லும் வழிப்போக்கர்களை மிகவுந் துணிகரமாய் எதிர்த்து

வென்று கொள்ளை கொள்ளுஞ் செய்கைக்கும் இதற்கும் எவ்வளவு வேற்றுமை!''

'ஆம், ஆம், என் பெருமானே, உங்கள் தொழிலிலுங்கூட ஆண்மையும் மறமும் இருக்கவேண்டியனவே!'' என்று வியந்து கூறினாள் மீனும்பாள்.

இங்ஙனம் இவ்விருவருந் தத்தம் நெறிதப்பிய நடவடிக்கைகளோடு ஒன்றுபட்ட எண்ணங்களை எல்லாம் உயர்த்திக் கொள்ளுதற் பொருட்டுந், தாந் தலையிட்ட தொழில்களுக்கு ஆண்மை என்னும் மேல் மினுக்குப் பூசுதற் பொருட்டும் மிக வருந்தி முயன்றார்கள். அது, தமது தாழ்வினை மறைக்க முயன்ற பொய்ப்பெருமையோ அன்று; தம்மைத்தாமே அமைதிப்படுத்திக் கொள்ள முயன்ற மனச்சான்றின் ஐயுறவோ அதுவும் அன்று; அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கும்போது அவர்கள் கண்களானவை அவர்தந் தீயசெய்கைகளின் கருத்தைத் தாம் உணர்ந்தமை புலப்படுத்துமாயின் அவர்கள் தம்முட் பாராட்டிய மிக்க அன்பு பழுது படுமெனவும், அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்த நன்குமதிப்புக் குறையப் பெறுவார்களாயின் அம்முறையே அவர்கள் அன்பானது தமது குற்றத்தையுணரும் உணர்ச்சிவலியால் அழிவுபட்டுச் சுருங்கு மெனவும் அஞ்சிய அச்சமே அவர்கள் அவ்வாறு உயர்த்திப் பேசிக் கொண்டதற்குக் காரணமாகும்.

''நல்லதிப்போது, மீனும்பாள்,'' என்று நல்லான் பேசும்போதே சிறிது நிற்க, அப்போது அவ்விருவரின் கரிய கண்களும் ஆர்வத்தோடு ஒன்றை யொன்று நோக்கின; ''குமுதவல்லியின் மோதிரம் உன்னகத்தில் உள்ளமையால் நாம் எடுத்த பெருமுயற்சியில் முதற்பாகம் பாதிக்குமேல் நிறைவேறிவிட்டது. என்காதலி, விடியற் காலையிலேயே நீ நீலகிரிக்குப் புறப்பட்டுப் போகலாம்; முன்னறிவோடும் இருக்கவேண்டியவனை சந்திரன் உன்னை உடனே வந்து காண்பன்; நீலலோசனன் வந்து சேர்ந்தனனு என்பதையும் அவன் உனக்குச் சொல்வன்; அப்படி அவன் வந்திருப்பானுயின், நீ உடனே காலந்தாழாது திரும்பி நமது மலையிலுள்ள வீட்டிற்கு வருவதைத் தவிர

வேறொன்றுஞ் செய்யவேண்டியதில்லை; ஏனெனில் எல்லா ஏற்பாடும் பிசகிப்போய் இருக்கும். ஆனால், அவ்வாறின்றி, நீலலோசனன் நீலகிரியில் இல்லாவிட்டால், எல்லாஞ் செவ்வையாக இருக்கின்றனவெனவும், அவன் பிடிக்கப்பட்டிருக்கின்றான் எனவும், நமது மிகச் சிறந்த சூழ்ச்சியினை நிறைவேற்றுவித்தற்கு நான் உன்னிடங் கடுக வந்து சேர்வேனெனவும் நீ முடிவு செய்துகொள்ளலாம்."

"இனிக் குமுதவல்லியைப்பற்றி என்ன?" என்று மீனும்பாள் வினவினள்.

"இன்னுஞ் சில நாழிகைக்குள் நம்முடைய ஆட்கள் திரும்பிவரா விட்டால், நான் இருளனோடும் மாதவனோடுஞ் சேர்ந்து புறப்படவேண்டியிருக்கும்; நாங்கள் மூவருங் குமுதவல்லியையும் அவள் தோழிமாரையுஞ் சிறைப்படுத்தவேண்டும். அல்லது ஒருவேளை அவள் தனது மந்திரமோதிரங் காணமற்போனதைத் தெரிந்துகொண்டால், தான் நீலகிரி நகரத்திற்குப் பயணம் போவது பயனற்றதென்று கருதித் துயரத்தோடுந் திரும்பி நாகநாட்டிற்குப் போகலாம்; அங்ஙனம் நேருமாயின் நமதுநோக்கம் மிக எளிதிலே நிறைவேறும், அவளுக்குச் சிறிதுந் தொல்லை கொடுக்கவேண்டியதிராது." என்று நல்லான் மறுமொழி தந்தான்.

"நின் சொன்ன படியேதான் நிகழும் என்று நம்புகின்றேன். நல்லது, என் பெருமானே, இந்தத் துணிகரமான செய்கையில் நாம் வெற்றி பெற்றால் அடைவது இன்னது என்பதனை எனக்குச் சொல்லும்." என்று மீனும்பாள் வினவினள்.

"ஓ, அப்படியா, மீனும்பாள்." என்று தன் அழகிய கரிய கண்களிலே மனக்களிப்புப் பளீரென மின்னக்கூவித், "துணிகரச்செய்கையினை எழுப்புவதும், மனக்கிளர்ச்சியினை உந்துவதுமாயிருந்தாலுங், கலக்கத்தினையும் இடரினையும் விளைப்பதான வாழ்க்கையை இனி எனக்கு நடத்த வேண்டுவது இராது. ஆ, என்காதலி மீனும்பாள்! நாம் தொலைவிலுள்ள ஏதேனும் ஒரு நகரத்திற்குப்போய், நம் முந்தின செய்கைகள் முற்றுந் தெரியா வண்ணம் அங்கே வேறுபெயர் வைத்துக்கொண்டு நம்மகத்தில்

வருவதான எல்லையற்ற செல்வத்தைப் பயன்படுத்துக் கொண் டிருப்பது மிகநல்லது; அல்லது அப்படியல்லாவிட்டால் மீனும்பாள், நாம் விரைவில் அடையப்போவதாகிய மறைமுக வழியிற் பெறப்படும் இனிய மலையவேலியின்கண்—தன்னிடத் துள்ளன வெல்லாம் ஏராளமாய் அமைதியும் அழகும் வாய்ந் திருப்ப, என்றும் இளவேனிலே அரசிருப்ப, மாரிகாலத்தின் குளிரானது காணுது ஒழிய, தன் இனிய தனியிடங்களிற் புயற்காற்றே நுழைய மாட்டாதாக விளங்குந் தாமரை வேலி யின்கண் இருக்கை யமைத்துக்கொண்டு இவ்வுலகவாழ்வையே நாம் முற்றுந் துறந்து விடுவோமாக!'' என்று நல்லான் இயம் பினன்.

"ஆ, அதுவே உண்மையான இன்பம்!" என்று தன் கண வன் அவ்வளவு சொல்லாற்றலுடன் வரைந்த ஓவியத்தின் நிறைந்த அழகால் தன்னுயிர் கவரப்பட்டாற்போல் மீனும்பாள் அடங்கின குரலில் விளம்பினள்; அவள் அழகின் மிக்க தன் தலையை அக்கள்வர் தலைவன் தோள்மேற் சாய்த்துக்கொண்டு தன் சிறந்த கரிய விழிகளால் அவன் விழிகளை நோக்கினள். "ஆம், அத்தானே." என்று அவள் பின்னுந் தொடர்ந்து "பிந் தின முறையே எனக்கு இசைந்ததாக இருக்கின்றது. ஓ! இந் நிலவுலகத்திலே துறக்க நாடென்னும் அதன்கண் உள்ள கொடிப்பந்தர்ச் சுற்றுகளின் இடையே திரிவதும், அதன்பழங் களைத் தின்பதும், அம்மலைய வேலியில் ஊறும் பளிங்கொத்த தெண்ணீரைப் பருகுவதும் உலகமங்கையின் கொடைப் பொருளெல்லாம் மிகவும் ஏராளமாய்ச் சொரியப்பட்டுக், குவிந் துயர்ந்த மலைக்குவடுகள் வைரச்சுவர்கள் எழுப்பினற் போல் அரைப்பட்டிகையாய்ச் சூழ்ந்து காப்பத் தோன்றும் அவ்விளம் பொழிலிலே நம் முதற் றாய்தந்தையர் அடிச்சுவடுகளின் மேல் அடிவைத்துச் செல்வதும் எவ்வளவு இனிமையாயிருக்கும்!'' என்று மொழிந்தாள்.

"என்றாலும்,'' என்று நல்லான் புன் முறுவல் செய்து, "என் அழகிய மீனும்பாள், நாம் தாமரை வேலியிலேயே தங்கி விட்டோமானல் நாம் அங்கே கண்டெடுக்கும் அளவற்ற பொற்

குவியலை எவ்வாறு பயன் படுத்துவதென்று எனக்குத் தெரியவில்லை.'' என்று மறுமொழி புகன்றான்.

''ஆ! நான் இன்னும் முடியச் சொல்லவில்லை!'' என்று அக் கள்வர் தலைவன்றன் மனையாள் கூறினாள்; ''சிலகாலம் இன்பம் நுகர்ந்தபின் அது தெவிட்டிப்போதலும், முழுதும் இனிதாய் ஆக்கப்பட்ட எவ்வகையான வாழ்க்கையிலும் உவர்ப்புத் தோன்றுதலும் மக்களியற்கைக்கு உரிய ஊழ்வினையாய் இருக்கின்றன. நாம் எடுத்த முயற்சியில் வெற்றி பெற்றோம் என்றே எப்போதும் நினைத்துக்கொண்டு, எல்லாவகையான இன்பங்களும் நுகருதற்கு நமது செல்வம் உதவியாகும்படியான ஒரு சிறந்த நகரத்திலும், அச் செல்வம் முழுமைக்கும் பிறப்பிடமான அவ் வினிய வேலியிலும், ஆக நமதுகாலத்தை நாம் இரண்டுகூறிட்டுக் கொள்ளலாம் என்று என்னுள்ளே அங்ஙனம் புனைந்து பார்த்துக்கொண்டிருந்தேன், என் பெருமானே. நகரவாழ்க்கையின் இன்பங்களுஞ் செழும்பொருள் நுகர்ச்சியுந் தெவிட்டிப்போனபின், சிலகாலம் நாம் அவ்விளம் பொழிலில் அமைந்த தனியிடங்களிற் போயிருக்கலாம்; அதன்பிற் சிலகாலங் கழித்துத் தாமரை வேலியின் மலைவரம்புகளுக்கு அப்பால் உள்ள களிப்பும் பரபரப்பும் பொருந்தின உலகின் இன்பங்களைத் துய்த்தற்குத் திரும்பவும் எழும் வேட்கையொடு நாம் மறுபடியும் வெளிப்புறப்படலாம்.''

இங்ஙனமாக நல்லானும் அவன்றன் அழகிற் சிறந்த மனையாளும் ஒருங்கு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர்; சிறு குழந்தையைப்போல் உறுதிப்படாதவற்றில் அவர்கள் வீண் எண்ணப் பாங்கு காட்டினராயினும், வருங்காலத்தைப்பற்றின இனிய கனவின்கண் ஆழ்ந்திருந்தனராயினுந், தமக்குள் இன்பத்தை விளைவிக்கவும், அவ்வளவு சொல் நயத்தோடும் புனைந்துரைத்த இன்பவாழ்வினைப் பெறுதற்குத் தம்மைத் தகுதியுடையரெனத் தாம் உணர்ந்தாற் போற்பேசவும் அவர்கள் தமக்குள் மறுபடியும் முயன்றனர். விழித்திருந்து காணுங் காட்சிகளைப்பற்றிப் பேசுவதுபோல், அவர்கள் அங்ஙனம் உரையாடின எல்லாவற்றையுந் தாம் மெய்யாகவே அடைதற்கு நல்ல

நேரம் வாய்த்ததெனத் தம்முளே அவர்கள் எண்ணி மகிழ்ந்து கொண்டார்களென்பதும் ஆண்டே அறியற்பாற்று: ஏனென்றாற், பின்றொடருந் தன் ஆட்களுக்கு நீலலோசனன் கடைசியாகத் தப்பிப் போய்விடுவா னென்றாவது, அவனும் அவன் துணைவர் இருவருந் தான் முதலில் விடுத்தவர்களை எளிதில் வென்றது போல் இரண்டாம்முறை விடுத்தவர்களையும் அவர் அங்ஙனம் வென்று விடுவாரென்றாவது நல்லான் எண்ணங் கொள்ள மாட்டாதவனானான்.

மறுநாள் விடியற் காலையில் நல்லானும் மீனாம்பாளும் மறுபடியுஞ் சிலநாட் பிரிந்திருக்க விடைபெற்றுக் கொண்டனர்; மீனாம்பாள், தன் மலைநாட்டுப் பணிப்பெண்ணுங் காப்பிரிமாதும் முன்போலவே தன் பின்னே வரப் பயணம் புறப்பட்டாள். அவர்கள் அங்ஙனம் புறப்பட்டுப்போன சிறிது நேரத்திற்குப் பிறகு, தனக்கே உரிய தன் உடுப்பை மறுபடியும் அணிந்து கொண்டவனான அக்கள்வர் தலைவன், பௌத்தர் மூவர்க்குப் பின்னே தொடர்ந்து விடுக்கப்பட்ட தன் ஆட்கள் வந்து சேராமைகண்டு இருளனையும் மாதவனையுந் தன்பின்னே வரக் கற்பித்தான். அவர்கள் தங்கள் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு, ஒரு சுற்றுவழியாய்ப்போய்க், குமுதவல்லி ஓர் இரவு தங்கியிருந்ததும் நல்லான் அம்மோதிரத்தைக் கவர்ந்துகொண்டதுமான அந்த நகரத்தைத் தாண்டிவந்து சேர்ந்தார்கள். சேர்ந்து, நீலகிரியை நோக்கிப் பயணம் போம்பொழுது, குமுதவல்லியும் அவள் பாங்கிமாருஞ் செல்லவேண்டிய பாட்டையோரமாய் உள்ள ஒரு தோப்பின் செறிந்த சூழல்களிலே அவனும் அவன் ஆட்கள் இருவரும் ஒளித்துக்கொண்டார்கள்; ஏனெனில், மோதிரங் காணாமற்போன பின்னும், அஞ்சத்தக்க நல்லான் அங்கே வந்திருந்தானென்பது அச்சாவடியில் திண்ணமாய்த் தெரிந்தபிறகுங், குமுதவல்லி படைக்கலம் பூண்டாரை வழித்துணை கொண்டு ஏகுவாளென்பது கூடாத தன்றெனக் கொள்ளைத் தலைவன் எண்ணினானேனும், அவ்வழித்துணை அவ்வளவு பெரிதாக இருக்குமென்பது அவனுக்குச் சிறிதுந் தென்படவில்லை. ஆகவே, தனது ஒளிப்பிடத்திலிருந்து நல்லான், குமுத

வல்லியும் அவள் பாங்கிமாரும் நன்கு படைக்கலம்பூண்ட வலிய ஆட்கள் பன்னிருவர் பின்னே வரக் குதிரைமேற் போதலைக் காண்டலுந், தான் எதற்குந்துணிந்த அஞ்சா நெஞ்சினனாயிருந் தும் அவ் வழித்துணைவரை எதிர்க்க அவன் துணியவில்லை. மாதவனோ நம்பிக்கையுள்ள உளவாளியாய் மிகத்தேர்ந்தவனே அல்லாமற், படைக்கலஞ் சுழற்றும் போராண்மையில் நம்பத் தக்கவன் அல்லன்; எனவே, தான் துணிந்து சண்டையில் தலை யிட்டுக்கொள்வானாயின் தானும் இருளனுமே போர்முனையைத் தாங்கவேண்டி வருமெனக் கள்வர்தலைவன் அறிந்தான். அஞ்சத் தக்க அம்மிஞ்சின கூட்டத்தோடு எதிர்ப்பது வெறிபிடித்த செயலாகுமேயன்றி வேறன்று; அதனால், நல்லான். அப்பெரு மாட்டியையும் அவள் தோழிமாரையும் அவர் வழித்துணைவரை யுந் தொல்லைப்படுத்தாமற் போகவிடலானான்.

இது நல்லானுக்கு மற்றுமொரு திகிலான ஏமாற்றமாய் முடிந்தது; அவனுடைய சூழ்ச்சிகளெல்லாம் பாழாய் விடுமென வும் அச்சுறுத்திற்று. ஏனென்றாற், குமுதவல்லி நீலகிரிக்குச் சென்று சேர்ந்துவிடுவா ளாயின், நீலலோசனன் இடையே தன் கையில் அகப்பட்டுக்கொண்ட போதிலும், மீனம்பாள் தன் னிடம் ஒப்புவிக்கப்பட்ட வினையினை முடிப்பது ஆகாதென்று அவன் கண்டான். கழிந்த இராநடுவில் தான் புறப்படும் நேரத் தில், அச்சாவடி முற்றத்தினுள்ளே அந்தக் குடகுநாட்டு வணி கனை நுழைவித்த தீவினைக்கு நல்லான் மிக நொந்து கொண் டான். ஏனெனின், அவ்வணிகன் தன்னைத் தெரிந்து கொண்டதனாலேதான், குமுதவல்லி அவ்வளவு அஞ்சத் தக்க வழித்துணைகொண்டு பயணம் போகலானாள் என்று அக்கள்வர் தலைவன் எண்ணினான். குமுதவல்லி சிறிது நேரத்தில் அவ் வழித்துணையை விட்டு விட்டு, வேறு தங்குமிடம் போகும் வரையிற் படைக்கலம் பூண்ட இரண்டு பெயரைமட்டுங் கூட் டிச்செல்வாள் என்பது அவனறிவிற் படாமற் போனது இயல் பேயாம். அவள் நடவடிக்கைகளில் அந்த வகையான ஒருமாறு தல் நிழுகமென அத்தலைவன் முன்னமே உணர்தலாவது உய்த் துணர்தலாவது செய்யக்கூடவில்லை; ஆகவே, அவன் எந்த

வகையாக நடந்துகொள்வதென்று சிறிதுநேரங் கலக்கமுற்று நின்றான். என்றாலுந், திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணந் தட்டுப்பட்டது.

"நான் நீலகிரிக்குப்போய், யாரும் அங்கே வந்து சேர்வதற்கு முன்னமே சந்திரனிடம் எல்லாந் தெரிவித்து விட்டால் என்ன? அப்படிச் செய்வேனானால் எந்த வழியாலாவது நான் குமுதவல்லியைத் தொலைத்து விடலாம்: அல்லது, நீலலோசனன் தன்னைத் தேடித்திரியும் என் ஆட்களைத் தப்பி வந்திருந்தானானாலும் அவனையும் அவ்வாறே செய்து விடலாம்! ஆம், இந்தப் படியே செய்யக்கடவேன்."

இங்ஙனம் நல்லான் தனக்குள் தானே சூழ்ந்துகொண்டிருக்கையில், இருளனும் மாதவனும் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டே யிருந்தனர்; ஏனெனில், தங்கள் தலைவன் ஏதோ ஒரு சூழ்ச்சியினைத் தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டிருக்கின்றானென்று அவர்கள் கண்டு கொண்டார்கள். மற்றொரு முறையும் நல்லானும் மாதவனும் உடைமாற்றிக் கொண்டார்கள்; அதன்பிறகு, கள்வர் தலைவன் இருளனுக்குப் பலவகையான முறைகளைக் கற்பித்து, வேறு புதியநிகழ்ச்சிகள் தோன்றுமானால் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் அறிவுறுத்தினான். இருளனுந் தன்தலைவன் கற்பித்தவற்றை முற்றும் அறிந்துகொண்டான்; பெரிய பாட்டையைக் கருத்தாக அகன்று, நீலகிரியைநோக்கி நல்லான் பயணம் புறப்பட்டான். எனவே, அவன் குமுதவல்லியைத் தொடர்ந்து பற்றவும் இல்லை, பௌத்தர் மூவரைச் சென்று எதிர்க்கவும் இல்லை என்பதை நாம் கண்டுகொண்டோம்.

காப்பிரிமாதுந் தன் அழகிய மலையநாட்டுப் பணிப்பெண்களும் பின்னேவர நீலகிரி நகரத்திற்கு அங்ஙனமே தான் பயணம் புறப்படும் வேளையில் நாம் விட்டுவந்த மீனாம்பாளிடம் இப்போது நாம் திரும்புவோமாக. நீலலோசனனையும் அவன் துணைவரையுந் தாம் தற்செயலாகக் காணும்படிநேருமோ என்னும் அச்சத்தாற் பெரிய பாட்டையை விட்டுப்போவது இவர்கள் நோக்கத்திற்கும் இணங்கினதாய் இருந்தது. இடையிடை

யே தாமுந் தங் குதிரைகளும் இளைப்பாற இடங்கொடுத்துக் கொண்டு, அந்தப் பகல்முழுதும் அவர்கள் தொடர்ந்து வழிச் சென்றார்கள். சாய்ங்காலம் அணுகியவுடன் ஓர் ஊரிலே அங்குள்ளதொரு விடுதியில் தங்கினார்கள். மலையநாட்டுக் கைம்பெண் வாயினின்றுந் துயரமான கதையைக் கேட்டுக்கொண்டு குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் அம்மனையகத்திற் கழித்த அதே இரவுதான் இஃது என்று இதனைப்பயில்வோர் உணர்தல்வேண்டும். வழிநாட்காலையில் மீனும்பாள் மறுபடியும் நீலகிரிக்குப் பயணந் துவங்கினாள். அத்தனை விரைவில் தன்கணவனும் அந்தமுகமாகவே செல்லும்படி நேருமென்பதை அவள் சிறிதும் உணரவில்லை. குமுதவல்லியும் அவள்தோழிகளும் நல்லான்கையில் அகப்பட்டிருப்பார்கள் என்பதில் அவள் ஐயப்படவில்லை. நீலலோசனனுந் தன் பின்னே தொடர்ந்து செலுத்தப்பட்ட ஆட்களால் அவ்வாறே பிடிபட்டிருப்பான் என்று ஆவலோடு எண்ணினாள். அங்ஙனம் அல்லாமல், அவன் நீலகிரி நகரத்திற்குப் போய்ச்சேரப் பெற்றிருப்பானானால், தான் அவ்விடத்திற்குச்செல்லும் பயணம் முற்றிலுஞ் சிதைவுபடும் என்றும் உணர்ந்தாள்.

உச்சிப்பொழுதிற் பகலவன் எப்போதினும் உள்ள புழுக்கத்தைவிட மிகுந்த புழுக்கத்தோடுந் தன் வெங்கதிர்களை அம்மலைநாட்டு நிலப்பகுதிகளின்மேற் சொரிவானாயினான்; அந்நேரத்தில் மீனும்பாளும் அவள் பணிப்பெண்களுந், தங்குவதற்கு மிகவும் இசைவாய்க் காணப்பட்ட ஓர் இடத்தண்டை வந்து சேர்ந்தனர். அவள் நீலலோசனனை எதிர்ப்பட்டதும், பல கல் தொலைவு உள்ளதுமான அந்தத்தெளிநீர்வேலியோடு அஃது ஒப்புமையுற்றுத் தோன்றியது. ஏனென்றால், நாம் இப்போது பேசுகின்ற இந்த இடத்தில் ஒருதெளிவான நீரோடையானது பழம் நிரம்பின மரங்கள் நிழற்றும் மெல்லிய பசிய மேட்டுநிலத்தைக்கடந்து சிலுசிலுவென்று ஓடியது. அங்கே அவ்வாறே அவர்கள் தங்கினார்கள்; அந்தக் காப்பிரிப்பெண்ணின் இடத்தில் உள்ளதும் அவள்தன் குதிரைச் சேணத்தின் பின்புறத்திற் கட்டப்பட்டிருந்ததுமான ஒரு சிறு கைக்கூடா

ரம் விரைவில் விரித்து ஊன்றப்பட்டது. என்றாலும், மீனாம்பாள் அக்கூடாரத்தின் கீழ்க்கிடந்து இளைப்பாற விரும்பவில்லை; அவள் அவ்வோடையின் ஓரத்தேயுள்ள புல்லின்மேல் உட்கார்ந்து பலவாறு எண்ணிக்கொண்டிருந்தாள். அத்தனை பற்றுதலோடுந் தான் காதலித்த தன் கணவனையும், மலைநாட்டின் தென்பகுதியில் நல்லபெயர் வாய்ந்த தன் இல்லத்தை அவன் பொருட்டுத் தான் விட்டுவந்ததையும் எண்ணினாள். சிலநாட்களுக்குமுன் தான் பார்க்கப் போயிருந்த தன்பெற்றோரையுந், தான் மணந்துகொண்ட அவன் அஞ்சத்தக்க நல்லானே என்று அவர்கள் சிறிதும் ஐயுறாததையும் அங்ஙனமே அவள் எண்ணினாள். அவற்றின் பின் தானுந் தன்கணவனும் மேற்கொண்டிருக்கும் அரிய செயலைப்பற்றியும் நினைந்தாள்; அதனால்வரும் பயன் பயனின்மைகளையுங் கணக்கிட்டுப் பார்த்தாள்.

இவ்வாறு ஐந்துநாழிகைவரையில் மீனாம்பாள் அந்தத் தெளிநீரோடையின் பக்கத்தே இளைப்பாறிக் கிடந்தாள்; இனித் திரும்பப் பயணந்தொடங்குதல் தக்கதென்று அவள் எண்ணிய அந்நேரத்திற் குதிரைக் குளப்படிகளின் ஓசை அவள்செவியில் வந்து பட்டது. உடனே அவள் திடுக்கிட்டு எழுந்து தன்னை அம்மரச்செறிவின் இடையே மறைத்துக்கொண்டாள். கூடாரமும் அவள் பணிப்பெண்களுங் கண்ணுக்குத் தென்படாமற் பசிய மரப்பந்தர் நடுவே யிருந்தார்கள். மீனாம்பாள் யார் வருகிறார்கள் என்று தெரியநோக்கினாள். அந்தப் பௌத்தர் மூவரையும் எதிர்ப்படுவதில் அவள் சிறிதும் விருப்பமில்லாதிருந்தமையால் அவள் தன்னை இங்ஙனம் முன்னிசைத்துக்கொண்டதுபற்றி யாரும் வியப்படைதல் வேண்டாம்.

ஆனால், குதிரைமேல் அணுகவந்தவர்கள் மூன்று மாதர்கள். ஆகவே, மீனாம்பாள் தான் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு வெளியே வந்தாள். அவள் அவர்கள் முகத்தைப் பார்க்கக்கூடவில்லை; வெயில் வெப்பத்தால் அவர்கள் முக்காட்டை முகத்தின்மேல் இழுத்திருந்தார்கள். என்றாலுந், தன்பாங்கிமார் பின்னேவர முன்னேறிவந்த அந்நங்கையின் அழகிய வடிவு அவள் உள்ளத்

திற் சென்று பதிந்தது. உடனே மீனும்பாள் உள்ளத்தில் ஓர் ஐயுறவு சடுதியிற்றோன்றியது. இவள் நாகநாட்டரசியாய் இருக்கக்கூடுமோ? இவள் என்கணவன்பார்வைக்குத் தப்பிவந்தனளோ? தற்செயலாகத்தான் இவள் என்வழியில் வந்து அகப்பட்டுக்கொண்டனளோ? ஆம், தன் றோழிமாரொடுவந்த இவள் குமுதவல்லியேதான். மீனும்பாள் வேண்டுமென்றேவந்த சுற்றுவழியும், முன்னாள்மாலைக்காலத்திற் பஞ்சாலைத்தலைவன் வீட்டின் அருகேயிருந்து குமுதவல்லி பறந்து விரைந்துவந்த அவ்வழியும் அவர்களை அவ்வாறு ஒரே இடத்திற் கொண்டுவந்து விட்டன. நாகரிகமான உடை அணிந்த அழகிய மாது ஒருத்தி அவ்வோடையின் பசியகரைமேல் நிற்றலை நாகநாட்டரசி பார்த்தவுடனே நட்பின் முன் அடையாளமாகத் தன் முக்காட்டை அப்புறம் வாங்கினாள். மீனும்பாள் தன்கணவனால் விரித்துரைக்கப்பட்ட புனைந்துரையொடு தனக்கு எதிரினுந் தோன்றிய வியத்தக்க அவளது அழகினையுங்கண்டு, இப்போது தான் கண்ட அந்நங்கை நாகநாட்டரசியே என்பதில் எள்ளளவும் ஐயமுறவில்லை.

"ஆ! ஏதோ தற்செயலாக நீ என் பெருந்தகைக்கணவனுக்குத் தப்பி வந்துவிட்டாய். ஆகையால் நான் உன்னை எதிர்ப்படலானது நல்வினைப்பயன்றான்." என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

மிகவும் விரும்பத்தக்க முகமனுரையுடன் ஒருநொடிப்பொழுதில் முன்வந்து எதிர்கொண்டு வாழ்த்திய அவ்வழகிய நங்கையின் உள்ளத்தில் இங்ஙனம் புரண்டுகொண்டிருந்த இரண்டகமான எண்ணங்களைப்பற்றிக் குமுதவல்லி ஒருசிறிது நேரமேனும் ஐயுறவுகொள்ளக் கூடவில்லை. குமுதவல்லியும், அவள்பாங்கிமாரும், விருந்தோம்பும் அம்மலையநாட்டுக் கைம்பெண்ணின் மனையகத்தை விட்டுவந்தபோது, தாங்கள் முதலிற் போய்ச்சேரும் ஊரிலாயினும் நகரிலாயினும் வழித்துணை பெற்றுக்கொள்ள எண்ணியிருந்தார்கள் என்பதைப் பயில்வோர் நினைவுகூர்வர். ஆனால், அவர்கள் அம்மலையநாட்டுமாதினாற் குறித்துக்காட்டப்பட்ட வழியை விட்டுத் தற்செய

லாய்ப் பிசகி வந்துவிட்டார்கள். அவர்கள் ஊரையாவது நகரையாவது அடைந்திலர்; அவர்களும் அவர்கள் குதிரைகளும் உணவு கொள்ளவேண்டியவரானார்கள்; ஆகவே, தங்குதற்கு ஏற்ற ஓர் இடத்தை அவர்கள் நாடும்நேரத்தில் அவ்வோடையின் கரை மருங்கில் மீனாம்பாளைக் கண்ணுற்றார்கள்.

தம்முடைய குதிரைகளினின்றுங் கடுகெனக் கீழ்இழிந்து தம்மைப்போலவே பெண்பாலரா யிருத்தலால் தங்கருத்துக்கு இயற்கையாகவே இணங்கின துணைவர் கிடைத்த இந்நேரத்தை அவர்கள் உடனே பயன்படுத்திக் கொண்டார்கள். சுந்தராம்பாள் ஞானாம்பாள் இருவரும் அந்தக் காப்பிரிமாதொடு இருக்கலாயினர். மலைநாட்டுப்பணிப்பெண்ணோ சிறிது எட்டி மரப்பந்தரி னிடையே போயிருந்தனள். அழகிய குமுதவல்லியோ விழுமிய மீனாம்பாள்பக்கத்தே அந்நீரோட்டத்தின் கரைமீது அமர்ந்தனள்.

ஆ! குமுதவல்லி! நீ இங்ஙனம் நினக்குத் துணைவியாகக் கொள்ளும் அவ்வழகியமாது, மாதரழகின் இரண்டுசிறந்த முதலாய் அங்குள்ள இருவரில் எவருடம்பிலே, தன்கொலைப்பற்களை ஊன்றல்வேண்டுமென ஐயுறவுகொண்டாற்போல் நின்று நின்று சிறிது தொலைவிற் புற்களின் ஊடே அரவம்இன்றிக் கரவாய் நுழைந்துவரும் அக்கரிய நச்சுப்பாம்பைப்போல், வஞ்சனையுடையள் என்பதை நீ சிறிதும் நினைந்தாய் இல்லையே!

பத்தாம் அதிகாரம்.

குமுதவல்லியும் மீனாம்பாளும்

மீனாம்பாள் மிக்கவணக்கத்தோடுங் குமுதவல்லியினிடத்துக் கருத்துக் காட்டிவருகையிலேயே தன்கள்ளவுள்ளத்தில், நாகநாட்டரசியையும் அவள் பாங்கிமார் இருவரையுந் தன்னிடத்திற் சிறைப்படுத்துதற்கு எவ்வகையான சூழ்ச்சியை நன்றாய்ச்

செய்யலாம் என்று சூழலானுள். வலிந்து செய்வதைப்பற்றி நினைத்தலுங்கூடாது; ஏனென்றால் இரண்டுபக்கத்தும் மும் மூன்று பெயர் இருந்தனர். மறத்திக்குரிய மறச்செய்கையின் துணிவினை மீனும்பாள் காட்டக்கூடியவளா யிருந்தாலும், அதனை இங்கே காட்டினுல் வெற்றி யுண்டாமென்பது எட்டிய தோற்றமாகவே இருந்தது. அதுவேயுமன்றி, ஏதேனும் ஒரு சூழ்ச்சி செய்யப்படுதல் வேண்டுமென அவள் ஏற்கெனவே தன்னுள்ளத்தில் உறுதி செய்துவிட்டாள்; ஆகவே, குமுத வல்லியை முழுதும் நம்பச்செய்து, அவளுக்குத் துணைப்பய ணம் போவதுபோற் காட்டிக் கொண்டுபோய் அவளை ஓரிடத் திற் சிறிதுநேரஞ் சிறையிட்டு வைப்பதே இனிது செய்யக் கூடிய வழியாகத் தோன்றியது.

பலநிறமணிகள் பதித்தாற்போலப் பூக்கள்மலிந்த புல்நிலத் தின்மேற் சாப்பாடு கொண்டுவந்து பரப்பும்படி மீனும்பாள் தன் பணிப்பெண்களுக்குக் கட்டளையிட்டாள்; இளைய நீலலோசன னிடத்துத் தான் அத்தனை திறமையோடுங் காட்டிய இன் சொல்லைப்போலவே, இந்தச் சிற்றுணவிருந்திலும் அவள் இன் சொற் காட்டினுள். அவர்களது பேச்சுப் பொதுவான செய்தி களைப்பற்றியே நடந்தது. ஏனெனிற்,குமுதவல்லி இனித் தான் முழுதுந் தொடர்பாக விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும், யாரிடத்துந் திறப்பாகப் பேசலாகாதென்றும், வெளிக்கு நண் பரைப்போற் பூண்ட கோலத்தில் எல்லாம் ஒளிப்பான பகைவ னொருவன் மறைந்திருக்கக்கூடுமென நினைந்தே நடக்கவேண்டு மென்றும் ஏற்கெனவே தீர்மானஞ் செய்துகொண்டாள். தான் இப்போது நட்புக்கொள்ளநேர்ந்த நங்கையைப்பற்றி நாகநாட் டரசி ஒரு நொடியேனும் எதுங் கெடுதலாக நினைந்தவளல்லள்: ஆனாலுந், தன்புதிய நிகழ்ச்சிகளால் தான் விழிப்பாகவும் முன் னறிவோடும் இருக்கப்பெற்றுள்; ஆயினும், நம்பிக்கையின்மை கொண்டிலள்.

ஏதேனும் ஒன்றைக்குறித்துப் பேசப்புகுந்தால் தன்னி டத்து ஏதோ முடிவான நோக்கம் உண்டென்று ஐயுறவு கொள் ளப்படுமென அஞ்சினவளாய் மீனும்பாளும் அவ்வாறே பொதுச்

செய்திகளைப்பற்றிப் பேசுவதில் மிகவும் விருப்பமுடையவளா யிருந்தாள். குமுதவல்லியின் உள்ளத்தில் தான் அச்சத்தைப் புகட்டுவதாய் முடியுமென்று அஞ்சி, இங்ஙனம் அவள் கள்வர் தலைவன் நல்லான் பெயரைக்கூடச் சொல்லாதுவிட்டனள்; ஏனென்றால், அத்தகைய அச்சங்களே ஐயமுறுதற்கு இடஞ் செய்யும். மீனும்பாள் முதலிலிருந்தே நல்லகுணமுங் கற்பொழுக்கமும் உடையளாயிருந்தாள்: ஆனால், அவள் தன் கணவன் நல்லான்மேல் வைத்த காதலானது அளவுகடந்து வியத்தகும் ஆற்றலுடையதாய் எழுந்தமையால், அது மற்ற எல்லா உணர்வுகளையும் மற்றெல்லா எண்ணங்களையுந் தன்கீழ்ப்படுத்தி நின்றது. அவளது முழுவாழ்வினோடு முழுதும் பிணைந்து, அவளது முழுவுயிரொடு முழுதும் பின்னப்பட்டு அக்காதல் வளர்ந்து முதிர்ந்தமையால், அவள் அதற்கென்றே உயிர்பிழைத்திருப்பாளானாள். அதனால் அவள் தன் கணவனது விருப்பத்திற்கு இணங்கிப் படிமானம் உள்ளவளாய் எந்த வகையான குற்றத்தைச் செய்யவும், எந்தவகையான பழிச்செய்கையை அணுகவும் ஒருப்படுவாளானாள்: என்றாலும், அவள்தன் நல்லொழுக்கங்கள் அவளைவிட்டு இன்னும் முற்றும் அழிக்கப் படவில்லை; அவை அவள்தன் காதற்பெருக்கத்தின் வயப்பட்டுச் செயலிழந்துமட்டுங் கிடந்தன.

இப்பொழுதோ தனக்கெதிரே யிருந்த பதினேழு ஆண்டுள்ள அவ்வழகிய பெண்ணை நோக்கி நினைக்கையில், மீனும்பாள்நெஞ்சத்தில் அந்த நல்லுணர்வுகள் சிறிதே கண்விழித்து எழுவ வாயின. பெண்டன்மையோடிருந்து பார்ப்பவர் நெஞ்சத்தையும் உருகச்செய்யும் ஓர் ஒப்பற்ற பெண்மையழகிலே ஏதோ இருக்கின்றது. அவ்வழகிய கண்களிலிருந்து நீர்வரச்செய்வதும், அவ்வழகியமுகத்தை வருத்தத்தொடு சுளிக்கப்பண்ண எதனையாவது செய்தலும், அல்லது அக்கன்னிகை நெஞ்சத்தைக் கலங்கச் செய்வதும் ஒரு பெருங் குற்றமாகும் என்று, உயிர் தனக்குட்டானே சொல்லிக்கொள்வதுபோற் காணப்படுகின்றது. குமுதவல்லியின் மிக உயர்ந்த அழகினைத் தான் நோக்கியபோது மீனும்பாள் தன் நெஞ்சத்தே இத்தன்மைய

வான நினைவுகள்வந்து நுழையாமற் றடுக்கக்கூடவில்லை. நாக நாட்டரசியைப் பற்றித் தான் சிறிதும் பொருமை கொள்ளாமையால், அவள் இந்நேரத்தில் அங்ஙனம் உணர்ந்து உள்ளங் கசிவதற்கு மிகவும் இடம் பெறுவாளாயினள். அவள் தற் பெருமை, அல்லது தான் அழகுடையவள் என்பதைப்பற்றிய செருக்குக் கொண்டவளாகவே யிருந்தாள். குமுதவல்லி ஒரு வகையான வனப்பின் முதிர்ந்த படியாய்த் தோன்றியது போலவே, தானும் வேறொரு வகையான அழகின் முடிந்தபடி யாய் உள்ளவள் என்று நினைந்தாள். நல்லானும் நாகநாட்டரசி குமுதவல்லியைப் பார்த்தான்: அவள் அப்பெயர் பெறுதற்குப் பெரிதுந் தகுதியானவளே யென்று அவன் மீனம்பாளிடஞ் சொல்லத் தாழ்க்கவில்லை; ஆயினும், உலகத்தில் உள்ள எந்த மக்கட்பிறவியுந், தன் மனைவியைப்போல் அத்துணை அழகுள்ள தாகவேனும் நேசிக்கத்தக்க தாகவேனுந் தன்மதிப்பிற்றோன்ற மாட்டாதென்று அவன் அதே நேரத்தில் தன் மனையாளிடம் உறுதிமொழி புகன்றான். ஆதலினாற்றான் மீனம்பாள் குமுத வல்லியின் வனப்பைப் பற்றிப் பொருமையாவது மனப்புழுக்க மாவது கொண்டிலள்; ஆகவே, அவள் உள்ளத்திற் சிறிது சிறி தாக அவிழ்ந்து விரியும் இரக்கம் என்னும் அம்மெல்லிய மலரை வளராமல் அமுக்குவதற்குக் கொழுத்த களைப்பூண்டு களேனும் முட்களேனும் அங்கில்லை. தான் நல்லானுக்கு மண மகளாய் வந்த நாள் தொட்டு இதுவரையில் இம் முறைதான் அவள் அவனது அலுவல்மிக்க துணிவு வாழ்க்கையில், தானும் அடிக்கடி சேரும்படி கட்டாயப்படுத்தப்படுஞ் சூழ்ச்சிகளை வெறுக்கத் தலைப்பட்டாள். இளைய நீலலோசனனைத் தன் னுடைய மயக்குமுறைகளால் ஏமாற்றும் பொருட்டுக் காதல் மொழிகளைச் சொல்லும்போதுங் கண்ணெறியும் போதும் அவள் தன் நெஞ்சத்திற்குச் செய்த கொடுமை சிறிதன்று; ஏனென்றாற், பெண்பாலியல்பில் மீனம்பாள் கடுங் கற் பொழுக்கம் உள்ளவள், மனையாளியல்பில் தன் கணவனிடத்து மாசற்ற அன்புள்ளவள். இதனைப் பயில்வோர் தெரிந்து கொண்டபடி, குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை நிறைவேற்றும்

21

பொருட்டும் வழக்கின் திறமையினுலும் அவள் அப்பொழுது அங்ஙனம் நடந்துகொள்வாளானுள். அப்போது அவள் தன் நெஞ்சத்திற்குக் கொடுமை செய்தனளாயின், இப்போது தன் அப்பத்தையும் உப்பையுந் தின்ற அழகிய களங்கமற்ற இளம் பெண்ணுக்குத் தான் இரண்டகமாய் நடக்கவேண்டியிருத்தலைப் பற்றித் தன்னையே தான் இன்னும் மிகுதியாய் அருவருப்பாளானுள். சிலநேரங்களிற் குமுதவல்லியின் இசையினிமை வாய்ந்த குரலொலியானது காந்தருவர் இசையைப்போல் மீனும்பாள் செவிகளிற் சென்று ஒழுகினது; வேறு சில நேரங்களிற் குமுதவல்லியின் பெரிய நீல விழிகளின் மெல்லியல் நோக்கமானது அவள்மேற் சென்று இனிது வைகிற்று; மற்றுஞ் சில நேரங்களிற் குமுதவல்லியின் இங்குலிகம்போன்ற இதழ்களானவை மிக இனிய குறுமுறுவல் முகிழ்த்தன; அத்தகைய நேரங்களி லெல்லாம் மீனும்பாள் தன் நெஞ்சம் அவ்விளம் பெண்மேல் ஆவல்கொள்ளக் கண்டாள். அப்போது அவள் அவளைத் தன் மார்புறத் தழுவியிருக்கக் கூடும்; மிகவும் நேசிக்கப்பட்ட தன் ஒரு தங்கையைக் கட்டியணைக்கும் அத்தனை வேட்கையோடும் அவளையும் அணைத்திருக்கக் கூடும்; அவள் செல்லும் வழியைச் சூழ்ந்திருக்கும் ஏமாற்றங்களைக் குறித்து அவளை முன்னறிவித்து மிருப்பள்.

ஆனுல் இல்லை! மீனும்பாள் அங்ஙனம் நடக்கவில்லை. அவளது தீவினையின் வலிமையானது இன்னும் முதன்மை பெற்று நின்றது. அவள் நல்லான்மேல் வைத்திருந்த காதலே அவன் விருப்பத்திற்கு மாறு பேசாமற் கீழ்ப்படியவும், அவன் பற்று வைத்தவற்றில் தானும் பற்றுவைத் தொழுகவும் பிணையாய் இருந்தது. என்ருலும், அப்போதிருந்த அவள் மனநிலையானது அவள் நல்லொழுக்கங்களை எல்லாவற்றிற்கும் மேலே எழச் செய்து, அவள் நல்லுணர்வுகளுக்கு ஆட்சி தாறபொருட்டு ஒரு சிறு நன்னேரத்தை மட்டும் அவாவி நின்றது.

சாப்பாடு முடிந்தது; இப்போது இவ்விரு நங்கைகளின் பாங்கிமாருஞ் சிறிது சேய்மையில் ஒருங்குசேர்ந்து விருந்துண்டார்கள்; மீனும்பாளுங் குமுதவல்லியும் இன்னும் அந் நீரோடை

யின் கரைமருங்கே உட்கார்ந் திருந்தனர். அக்கள்வர்தலைவன் மனைவியானவள் திரும்பவும் பயணந் தொடங்கவேண்டுங் கட்டாயத்தைப்பற்றித் தான் பேசும் வகையிலே பேச்சைத் திருப்புதற்கும், அதனாற் குமுதவல்லியின் வாயின் நின்றே அவள் தானும் நீலகிரிக்குப் போவதை வருவித்தற்கும், அவ்வாற்றால் வழியிலே துணை கூடிச் செல்லுங் கருத்து மொழியப் படுதற்கும் ஆனவகையாய்ப் பேசத் துவங்கினாள்; ஆனால், அந்நேரத்தில் அவ்விடத்தில் வேறோர் ஆள்வந்து தோன்றலாயிற்று.

இஃது ஒரு துருக்கி தேசத்துப் பெண்பிள்ளை; இவள் தான் அணிந்திருந்த உடுப்பினாலுந் தன் கையிற் கொண்டுசெல்லும் ஒரு சிறு சந்தனப்பெட்டியினாலும், ஆசியாக்கண்டத்தும் அதனையடுத்தநாடுகளிலும் மருந்துச் சரக்குகளும், மணக்கூட்டுகளும், மருந்துகளும் விற்றற்பொருட்டுச் சுற்றித் திரியும் அறிவான் மிக்க பெண்மக்களுள் ஒருத்தியாகக் காணப்பட்டாள். இப்போது நாம் குறிப்பிட்டுப் பேசும் இப்பெண்மகள் நடுத்தர ஆண்டும், நீண்டு நேரான வடிவும் உள்ளவள்; சணல்நூற் புடைவையால் தன்முகத்தின் பெரும்பாகத்தை வழக்கமாய் முக்காடிட் டிருந்தாலும் மங்கலான நிறம் உடையவள்.

அவள் அவ்விரண்டு நங்கைமாரையும் அணுகி மலைய மொழியில், "அழகுள்ளவர்களே, என்னுடைய சாம்பிராணித் திரிகளையேனும் மணக்கூட்டுகளையேனும் வாங்கிப் பாருங்கள்! எல்லாக் காயங்களையும் ஆற்றும் என்னுடைய எண்ணெய்களையேனும், எல்லா நஞ்சுகளுக்கும் மாற்று மருந்தான என் மருந்துப்பொடிகளையேனும் வாங்கிப் பாருங்கள்! அல்லது உங்கள் அணிகல மேசைகளுக்குச் சிறப்பாய் வைக்க அழகான அம்பர்த் துண்டுகளும் என்னிடம் விலைக்கு இருக்கின்றன. நீங்கள் திருமண மானவர்களாயிருந்தால் உங்களுக்குக் கணவன்மார் இருப்பர்; அங்ஙன மில்லாவிட்டால் உங்களுக்குக் காதலர் இருப்பர்; அவர்களுக்கு நீங்கள் என் அழகிய அம்பரைப் பரிசாகக் கொடுக்கலாம். [illegible] சரக்குகளிற் சிலவற்றை

வந்து வாங்குங்கள்! அலைந்து திரியுந் திகழ்கலைக்கு ஒரு நல்ல உதவியைச் செய்வது நல்வினையாகும்!'' என்று சொன்னாள்.

இவளை யொத்த அறிவான் மிக்க பெண்பிள்ளைகள் இங்ஙனம் பசப்பிப் பேசுவது வழக்கத்தில் இல்லாவிட்டால், காதலர் இருக்கக்கூடிய செய்தியைப் பற்றித் திகழ்கலை பேசிய ஒரு பகுதி ஏதோ அடக்கம் அற்றதாகவாயினும் நாகரிக மில்லாததாகவாயினுங் காணப்பட்டிருக்கும். இதுதான் வழக்கமென்பது குமுதவல்லிக்கும் மீனும்பாளுக்குந் தெரியும்; அதனால் திகழ்கலை கிட்ட நெருங்கி வந்தபோது குமுதவல்லி நல்ல குணத்தொடு நகைத்தாள். மீனும்பாளும் அங்ஙனமே நகைத்தாள். ஆனால், பணிவோடும் முன்னறிவோடும் மட்டும் அனுகற் பாலதான ஒரு செய்தியை குறித்துத் தான் அத்தனை திறமையோடும் பேச்சைத்திருப்புகிற நேரத்தில் நேர்ந்த இவ் இடையூற்றால் தான் அடைந்த கவலையை மறைப்பதற்காகவே இவள் அங்ஙனம் நகைத்தாள். திகழ்கலையோ ஒருவரொடு மற்றவரும் நகைத்ததனால் உள்ளத்தில் எழுச்சி கொள்ளப் பெற்றாள்; உடனே தான் புல்லின்மேல் உட்கார்ந்துகொண்டு தனது சிறிய சந்தனப் பேழையைத் திறந்தாள்.

''இதோ கலப்பில்லாத சிறந்த தூய குலாப்பூவின் அத்தர் அடைத்த சிறு குப்பிகள். இதோ மிகக் கொடிய நஞ்சையுங் கடுக மாற்றும் மருந்துகளாகிய பொடிகள். பாண்டிநாட்டுக் காவலர்க்கு ஆறு திங்கட்கு முன்னே இரண்டகனை ஓர் அடிமை ஒரு கிண்ணந் தேன்நீரிற் சூழலாக ஒரு நஞ்சைக் கலந்து கொடுத்தபோது அதை நான் இதனால் தீர்க்கவில்லையா?—இது திகழ்கலையின் புகழை மிகுதிப்படுத்தவில்லையா? இதோ, பெருமாட்டிகளே, சிறிது முன்னே நான் சொல்லிய சிறந்த அம்பர்த்துண்டுகள். ஆண்டவன் அறிய இவைகள் பளிங்குக் கல்லைப்போல் எவ்வளவு தெளிவாய் இருக்கின்றன!'' என்று அவள் மொழிந்து, அடக்க ஒடுக்கத்திற் சிறந்த பார்வையோடுங் குரலோடும் மருந்துவைக்குஞ் சிறு பரணிகள் இரண்டு மூன்றைக் கையில் எடுத்து, ''இதோ ஒரு மருந்து, இதிற் சேர்ந்திருக்குஞ் சரக்குகள் அலைந்து திரியுந் திகழ்கலைக்கு மட்டுந்

தான் தெரியும்! இந் நறுமணப்பண்டத்தை இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களினுந் திகழ்கலை மட்டுமே செய்யத் தெரிந்தவள்.'' என்று தொடர்ந்து சொன்னாள்.

இந்தப் பசபசப்புப் பேச்சில் தனக்கு விருப்பமேனும் மகிழ்ச்சியேனும் இல்லாவிட்டாலும், அந்தப் பெண்பிள்ளையை மகிழ்விக்கவேண்டு மென்னும் நற்குணத்தால் ''அஃது எங்ஙனம் வந்தது திகழ்கலை; இவ் வியத்தக்க மருந்துமுறை உன்வசத்தில் எவ்வாறு வழிதேடி வந்தது?'' என்று குமுதவல்லி வினவினாள்.

''ஆ! பெருமாட்டி, அஃது என்னிடத்தே மட்டுமுள்ள மறைபொருள்!'' என்று மறைவுக்குறிப்பு மிக்க பார்வை மறுமொழியொடு கூறுவாளாய்ப், பின்னும், ''என்றாலும், இந்நறுமணப்பண்டம் மேலான நற்குணங்கள் உள்ளதென்று ஆண்டவன் அறிய ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்! இந்த மேற்கணவாய் மலைப்பக்கங்களில் நன்குமதிக்கப்படுகின்ற பூர்ச்சமரத்தின் வெள்ளைப்பட்டைச்சாறு இவ்வுயர்ந்த நறுமணப்பண்டத்தின் கலவையிற் சேர்ந்திருக்கின்றதென்று திறந்து சொல்ல நான் பின்வாங்கவில்லை: இன்னும் இதிற் கலக்கப்பட்டுள்ள பூண்டுகளும் மருந்துகளும் மற்றும் பல உண்டு; அவைகள் இவ்வெள்ளைப் பூர்ச்சமரத்தின் நோய் ஆற்றுந் தன்மையினும் மிக உயர்ந்தனவாகும். பதினெட்டுத் திங்களுக்கு முந்தி மிகவும் மறைவான நிலைமையிற் கிழவன் ஒருவனுக்கு இந்த உறையைக்கொண்டு யான் நோய் தீர்க்கவில்லையா?'' என்று எடுத்துரைத்தாள்.

''நீ அங்ஙனஞ் சொன்னால், திகழ்கலை, அஃது உண்மையாகத்தான் இருக்கவேண்டும்; ஏனென்றால் நீ பொய்சொல்லத் தெரியாதவள் என்று யான் உறுதியாக நம்புகிறேன்.'' என மீனாம்பாள் மொழிந்தாள்.

''பெருமாட்டி, நீங்கள் என்னை இறக்கிப் பேசிக் கேலி செய்கிறீர்கள்; ஆனாலும், அது நான் சொல்லுகிறபடியேதான் உள்ளதென்று கடவுளறிய ஆணையிடுகின்றேன்!'' என்று அவ்வறிவோள் விடை பகர்ந்தாள்.

"எப்படி அந்நிலைமை அவ்வளவு புதுமையா யிருந்தது?" என்று குமுதவல்லி கேட்டாள்.

திகழ்கலை உடனே நாகநாட்டரசியின்மேல் ஒரு புதுமையான பார்வையைச் செலுத்தினள்; அதன்பிறகு, அறிவுக்குத் தென்படாத அதே ஆழ்ந்த நோக்கத்தை மெல்ல மீனும்பாள் மேல் திருப்பினள்; இங்ஙனஞ் சிறிதுநேரம் பெரிதும் வாய் பேசாதிருந்தாள்.

கடைசியாக அவள் வாய்திறந்து அமைதி மிக்க குரலொடு, "பெருமாட்டிகளே, புதுமையான ஒரு கதையைக் கேட்க உங்களுக்கு ஒப்பவும் விருப்பமும் இருந்தால், நான் அதனை விரித்துரைக்கின்றேன். ஆண்டவன் அறிய அஃது உண்மையென்றே ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்! யான் உயிரோடிருப்பவளாயினும், உண்மை நம்பிக்கையுடையவர்கள் இறந்தபின் செல்லும் இறைவனது துறக்க வுலகத்தைப்பற்றி ஒரு சிறிது தெரியப்பெற்றிருக்கின்றேன் என்னும் எனது நம்பிக்கையினின்று எதுவும் என்னைப் பிறழ்த்தமாட்டாது." என்று கூறினள்.

திகழ்கலை கூறிய இப்புதிய சொல்லைக் கேட்டவுடனே, மீனும்பாள் தானுந் தன் கணவனுஞ் சிலநாளாகப் பெறுதற்கு ஆவலுற்றிருக்குந் துறக்க நிலத்தின் காட்சிகளொடு தெளிவுந் திட்டமும் இன்றி இதனை இயைபுபடுத்தினவளாய் "உண்மைதான்!" என்று திடுமென மொழிந்தாள்.

மேன்மைமிகுங் கனவைப்போன்ற அத்தகைய எண்ணங்கள் தன்னுள்ளத்தின்கண் மிதக்கப் பெறுதவளா யிருந்துங், குமுதவல்லியுங் கூடத் திகழ்கலை மொழிந்த புதுமையும் மறைபொருளும் வாய்ந்த அச்சொற்களைக் கேட்டு அதனை அறியும் வேட்கை யுடையளானள்; ஆகவே, அவ்விரண்டு நங்கைமார்களின் பார்வைக் குறிப்பினாலேயே தான் அக்கதையை எடுத்துரைக்கலாமென்று அம்மேதக்காள் கண்டுகொண்டாள். தன் மருந்துகளின் திறனை உறுதிப்படுத்திக் காட்டுதற்கும், ஒருநாழிகைநேரம் இனிதாகக் கழியவேண்டித் தான் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்குத் தக்க ஈடாகப் பரிசு பெறுதற்கும், மெய்யோ

பொய்யோ அக்கதையைச் சொல்லுதற்கு நுணுக்கமாக அவள் வழி பிறப்பித்துவிட்டாள்.

"பதினெட்டுத்திங்களுக்கு முன்னே" என்று துவங்கி அந் நல்லோள் அக்கதையைச் சொல்வாளானுள்: "மிகவுங்கடுமையான ஒரு மழை காலத்தின் நடுவிலே யான் நீலகிரி நகரத்தில் இருக்கும்படி நேர்ந்தது. அப்போது அங்கே எல்லாரும் மெச்சத்தக்க வகையாய்ச் சில நோய்களை நீக்கினேன்; அதனால் என் புகழ் வெளியூர்களிற் பரவிற்று. ஒருநாள் அவ்வூரிலுள்ள பெரியவர் ஒருவர் யான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து, தாம் என்னைப்பற்றிக் கேள்வியுற்ற எல்லாவற்றாலுங் குறிப்பான ஒரு முடையின்பொருட்டு என்னைக் கலந்துகொள்ளும்படி செய்விக்கப்பட்டதாகத் தெரிவித்தார். மக்களுக்குள்ள கருவிகளைக்கொண்டு போராடக்கூடிய எவ்வகையான முடைப்பட்ட நேரத்திலும் யான் உதவத்தக்க திறமை வாய்ந்தவள் என்பதை அவருக்கு உறுதிகட்டிச் சொன்னேன். தாஞ்செல்லும் வழியைக் கையாற் றடவிப்பார்த்துச் செல்வதுபோலவும், தாம் இன்னுந் திறப்பாகப் பேசுவது தகுமா வென்றுந் தாம் தெரிவிக்கப்போகுங் கருத்துக்களுடன் யான் ஒட்டி வரக்கூடுமா வென்றுந் திண்ணமாக அறிந்துகொள்ளுதற்கு என்னை ஆழம் பார்ப்பதுபோலவும் முதலில் அவர் தற்காவலோடு விழிப்பாகப் பேசினுர். நங்கைமார்களே, எம்மிருவர்க்குள்ளும் நடந்த பேச்சுமுழுதுஞ் சொல்லி உங்களை நான் வருத்தவேண்டுவதில்லை. யான் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட உதவியின் தன்மை இதுவென்று உடனே சொல்லிவிடுவதே எனக்குப் போதும். தம்மோடு யான் சிறிது நெடுவழி வரவேண்டுமென்றுஞ், சிலநாழிகை சென்றவுடன் யான் கண்ணைக் கட்டிக்கொள்ள இசையவேண்டுமென்றும் அப் பெரியவர்—அவர் பெயரை யான் சொல்லாதுவிட்டதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்—உடன் படிக்கை செய்துகொண்டார். யான் நலப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட நோயாளியை யான் அதன் பொருட்டுப் பார்க்கவேண்டுவது மிகவும் இன்றியமையாததா யிருந்தமையால், யான் இந்த வகையாகவே அழைத்

துக்கொண்டு போக்கப்படல் வேண்டும். இதற்கெல்லாம் நான் இணங்கினால் ஏராளமான தொகை எனக்குக் கைம்மாருக அளிக்கப்படும்; நான் குறிப்பிட்ட அப்பெரியவரதுநேசத்திற் பின்னர் எப்போதும் நான் நம்பிக்கை வைத்திருக்கலாமென்றும் வலியுறுத்திச் சொல்லப்பட்டேன். நல்லது, பெருமாட்டிகளே, இஃது என்னைப் பிடிக்கும்படி செய்த சூழலாக இருக்க மாட்டாதென்றும் எண்ணிப்பார்த்தேன்; ஏனெனில் அப்பெரியவர் நாடெங்கும் நன்கு மதிக்கப்பட்டவர்; மேலும், அலைந்து திரியும் ஏழையான அறிவோள் ஒருத்தியின் உயிரை வாங்குவது அவருக்கு யாதுபயனைத் தரும்? ஆகவே, நான் இசைந்தேன்; அவர் தமது ஈகைக்கு அறிகுறியாக அச்சாரமுங்கொடுத்தார். மாலைப்பொழுதின் இருள் வந்தவுடனே, அப்பெரியவர் என்னை அழைத்துக்கொண்டு போகவந்தார். கடுகிச் செல்லும் வலியகுதிரைகளின்மேல் தனித்தனியே ஏறிக்கொண்டு நாங்கள் இருவேமும் நீலகிரியை விட்டுச் சென்றேம். இரவுமுழுதும் வழிச்சென்றேம்; காலைப்பொழுது வந்தவுடனே மேற்கணவாய் மலைக் காடுகளின் இடையே நாங்கள் இருந்தோம். சிலநாழிகை நேரம் பெருங்குகை ஒன்றிலே நாங்கள் இளைப்பாறி யிருந்தோம்; யான் முன்னமே உங்களுக்குச் சொல்லியபடி மழைகாலம் மிகவுங் கடுமையாய் இருந்தமையால், நாங்கள் ஏறக்குறையக் குளிரினால் மடிந்துபோவோம்போ லிருந்தது; அதனால் அப்பெரியவர் அங்கே தீமூட்டினார் உணவுக்கு வேண்டிய நல்ல பண்டங்களுஞ் சிறந்த பருகுநீர்களும் அவர் கொண்டுவந்திருந்தார். ஆகவே, நாங்கள் குளிர்காய்ந்து மகிழ்ச்சியொடு வசதிபெற்றிருந்தோம். நாங்களும் எங்கள் குதிரைகளும் போதுமான அளவு இளைப்பாறி உணவு கொள்ளும் பொருட்டுப் பலநாழிகை நேரம் அக்குகையிலே தங்கியிருந்தோம். கடைசியாக எங்கள் பயணந் தொடங்கவேண்டி வந்தபோது, என் விழிகளின்மேல் துணி கட்டவேண்டிய நேரமும் வந்ததென்று கண்டு கொண்டேன். இரண்டகமாய் நடக்கும் எண்ணம் இருந்தாலும், யான் விழிதிறந்து காணக்கூடாதபடி அவ்வளவு செவ்வையாகக் கண்கட்டப்பட்டேன். பெருமாட்டி

களே, உங்களை நான் அலுப்படையச் செய்யவில்லையென்று நம்புகின்றேன்?"

"இல்லை, இல்லை! என் நல்ல அம்மையே, சொல்லு, சொல்லு! உனது கதையை அதற்குரிய ஆவலோடுங் கேட்டு வருகின்றோம்." என்று மீனும்பாள் வியப்புடன் கூறினாள்.

குமுதவல்லியுந் தன் பார்வையினால் மனக்கிளர்ச்சி உண்டு பண்ணினாள்; அதனால் அவ்வறிவோளும் அக்கதையைத் தொடர்ந்து சொல்வாளானாள்.

"கண்கட்டப்பட்டிருந்தாலும் இன்னும் என் குதிரை மேலே தான் நான் இருந்தேன். அந்தப் பெரியவர் என் பக்கத்தே ஒரு குதிரைமேல் அமர்ந்துகொண்டு, நான் ஏறியிருந்த குதிரையின் கடிவாளத்தைத் தாம் பிடித்துக் கொள்ளத்தக்க வகையாக அமைத்து அதனால் அதனை நடத்திவந்தார். சிலநேரம் நாங்கள் கடுவிரைவாய்ச் சென்றோம்; சிலநேரம் ஏற்றமான இடங்களில் ஏறிச்செல்லும்போதுங், குதிரையின் நடை வேறுபாட்டால் அருமையுங் கரடுமுரடு முள்ளனவாக யான் தெரிந்துகொண்ட நிலங்களைத் தாண்டிச் செல்லும்போதும் மிகவும் மெதுவாகச் சென்றோம்; இன்னுஞ் சிலநேரம் இன்னும் மிக மெதுவாய்ச் சென்றமையால் அங்காந்த மலைப்பிளவுகளைப் பற்றியுந் திடுக்கிடும்படியான செங்குத்து மலைகளின் விளிம்பிற் சுற்றிச்செல்லும் வழிகளைப்பற்றியும் நினைந்து கலங்கினேன். இந்த வகையாக மங்கல் மாலைப்பொழுது வந்து சூழும்வரையில் வழிச் சென்றுகொண்டிருந்தோம்; அதன் பிறகு மறுபடியும் ஓரிடத்திற்றங்கினோம். என் கண்ணினின்றுங் கட்டு அவிழ்த்துவிடப்பட்டது; மேற்கணவாய் மலைப்பக்கத்தில் மிகக் கடுமையானதும் அச்சுறுத்துவதுமான ஓரிடத்தில் நான் இப்போது வந்திருந்தேன் என்பதனை எனக்குக் காட்டுவதற்கு இன்னும் போதுமான வெளிச்சம் இருந்தது. நங்கைமீர், அங்காந்த மலைப்பிளவுகளையும், உயர்ந்தோங்கிய மலைகளையும், வழுக்கி நகரும் பனிப் பாறைகளையும், இடியென முழங்கும் பெரிய மலையாற்றின் வீழ்ச்சிகளையும், நடுக்கந் தருங் கணவாய்களையும், உறைபனிமூடிய மிக உயர்ந்த இடங்களையும் நீங்களே நினைந்து பாருங்

கள்! அப்போதுதான் என்னைச் சூழ இருந்த நிலத்தோற்றங்களின் மேன்மையுந் திகிலும் உட்கும் வாய்ந்த வடிவங்களைப் பற்றி நீங்கள் ஏதோ சிறிது புல்லிய நினைவு கொள்ளக்கூடும். மற்றொரு பெருங்குகை எமக்குத் தங்கும் இடமாயிற்று; திரும்பவுந் தீ மூட்டப்பட்டது; உணவுப் பொருள்களும் பருகுநீர்களுங் கொண்டுவந்து வைக்கப்பட்டன; மற்றும் ஒரு முறை யான் தீக்காய்ந்து மகிழ்ச்சியோடும் இளைப்பாறி யிருந்தேன்." என்று திகழ்கலை மொழிந்தாள்.

"இனி இப்போதுதான் உனது கதையில் தெரிந்து கொள்வதற்கு மிகுந்த ஆவலை எழுப்பும் பகுதி வரப்போகிறதென்று நினைக்கின்றேன்." என்று மீனும்பாள் தன்னகத்தெழுந்த ஆவலையும் அயிர்ப்பையும் வருத்தத்துடன் மறைத்துக்கொண்டு கூறினள்.

"கடவுள் அறிய அஃது அப்படித்தான் உள்ளது! கடுங்குளிர் நிறைந்ததுங், கரடுமுரடான தன்றன்மையால் உள்ளத் திற் பதியத்தக்கதுமான இயற்கை யமைப்பு வாய்ந்த அவ்வச்சம்மிக்க இடத்தில் நாங்கள் வந்து சேர்ந்தபோது, நான் முன் சொல்லியபடி, மாலைக்காலமாகத் தான் இருந்தது. ஏறக்குறைய ஐந்து நாழிகை நேரம், பெரும்பாலும் முழுதும் இருள் வந்து சூழும் வரையில், நாங்கள் அங்கே தங்கியிருந்தோம்; அவ்விருளின் இடையிலே அடுத்துள்ள மலைக்குவடுகளிலுள்ள உறை பனியின் துலக்கம் மட்டுஞ் சிறிதுதெரிந்தது. அப்போது அப் பெரியவர் என்னை எழுந்து தன்னுடனேவருதற்கு முயற்சியா யிருக்கும்படி கட்டளையிட்டார். இப்போது மறுபடியும் என் கண்ணைக் கட்டிவிட்டார்; ஆனால், இந்தமுறை நாங்கள் எங்கள் குதிரைகளின்மேல் ஏறவில்லை; அவைகள் அக்குகையிலே காவலுடன் நிறுத்தப்பட்டன. நாங்கள் கால் நடையாகவே செல்லவேண்டுவதாயிற்று. அந்தப் பெரியவர் என் கையைப் பிடித்து அழைத்துகொண்டு சென்றார்; இவ்வாறு ஒரு நாழிகை நேரம் நடந்து சென்றேம்; உறை பனியால் ஆன அம்புகள் என் மூளையை ஊடுருவிப் பாய்வதுபோற் குளிர் அவ்வளவு முறுகித் தோன்றியது. கடைசியாகச் சில நொடிநேரம் ஓரிடத்

தில் வந்து நின்றோம். பின்னர் அப்பெரியவர் என்னை முன்னே நடத்தினார்; மிகவுங் கொடிய குளிரின் வருத்தஞ் சிறிது நீங்க உண்டான வெதுவெதுப்பினாலும், எங்கள் காலடிகளில் உண்டான மழுங்கிய எதிர் ஒலியினாலும் ஏதோ ஒரு குகையினுள் நுழைந்தோம் என்பதை நான் சொல்லக்கூடும். அது நீண்டதாயிருந்தது; அது முடிவுபெற்றவுடனே, அப்பெரியவர் என்னை நோக்கி, 'இப்போது நீ படிக்கட்டுகளின் வழியே இறங்க வேண்டியிருக்கின்றது. அதுவும் ஆழத்தில் இறங்கவேண்டும்; என்றாலும் என் கையைப் பிடித்துக்கொள், அஞ்சாதே.' என்று சொன்னார். ஒரு கதவு மெல்லெனத்திறப்பதுபோல் ஓர் ஓசை எனக்குக் கேட்டதென்று நினைத்தேன்; ஆனாலும் அஃது எனக்கு உறுதிப்படவில்லை. இறங்கத் துவங்கினோம்; உடனே எங்கள் காலடிகள் புதுமையான எதிரொலியை எழுப்பினமையால், மூடிக்கொள்ளுங் கதவிசொலி ஏதேனும் இருந்தாலும் அஃது என் செவியிற் படவில்லை. வரவரக் கீழ் இறங்கிச் சென்றோம். உரமான மலைப்பாறையில் வெட்டப்பட்டுத் திருகிச்செல்லும் படிக்கட்டாக அது காணப்பட்டது. இன்னுங் கீழே, இன்னும் நெடுந் தொலைவு கீழே இறங்கிப்போனோம்; வளைந்து வளைந்து சென்றமையால் என் தலை கிறுகிறுவென்று சுற்றத்தொடங்கிற்று, இறங்கும் வருத்தத்தால் என் கால்கள் நோவுற்றன. ஆயினும்; ஆழத்திற் செல்லச் செல்ல வளிமண்டிலம் வெப்பமுள்ளதாவதை உற்றறிந்தேன்; புதுமையும் அச்சமும் நிறைந்த எண்ணங்கள் படிப்படியே என் உள்ளத்திற்றோன்றலாயின. தீதுசெய்யும் பொல்லாத கூளிப் பேய் தான் மக்களுருவில் வந்து, என்னைத்தேடிப், பொருட்டிரள் தருவதாக எய்த்து, இப்போது என்னைத் தான் இருக்குங் கொடிய பாதாள உலகத்திற்குக் கொண்டுபோவதாய் இருக்கலாமோ!" என்று திகழ்கலை கூறுகையில்,

இடையே குமுதவல்லி இதனைக் கேட்டவுடன் தன் மெல்லிய உடம்பு நடுங்கப் பெற்றவளாய், "ஆ! இந்நினைவுகள் உண்மையிலே வெருவத் தக்கனவாய்த்தாம் இருக்கவேண்டும்!" என இயம்பினாள்.

மீனும்பாள் ஒவ்வொரு நொடியுந் தன் உள்ளத்தெழுந்த ஐயம் முதிர்ந்தமையால் அதனைத் தாங்கப் பொறுதவளாய்க், "கதையைச் சொல்லு, சொல்லு!" என்று விளம்பினுள்; அவ்வறிவோள் தன் கதையைச் சொல்லிக்கொண்டு வந்தவகை போதுமான வரையிற் சுருக்க முள்ளதாக இருந்தாலும், அக் கொள்ளைக்காரன் மனைவிக்கு அது மிகுதியும் மெதுவுள்ளதாகவே காணப்பட்டது.

மறுபடியுந் திகழ்கலை, "என்னுடையஎண்ணங்கள் இங்ஙனம் என்னைக் கவர்ந்துகொள்ளப் புகுந்த பொழுதிற், சடுதியிலே நாங்கள் நின்றேம்—வெளியே ஒரு கதவு திறந்தது; உடனே நறுவிய வளிமண்டிலத்தின் இருப்பு எனக்குப் புலனுயிற்று. மழைகாலத்தின் குளிர் மிகுந்த நீண்ட இராப் பொழுதின் நள்யாமமா யிருந்தும் அப்போது அங்கு வீசிய காற்று மெல்லிதாயும், வெதுவெதுப்பாயும், நறுமணங் கமழ்வதாயும் இருந்தமையால், என்னுடைய திகிலெல்லாம் ஒரு நொடிப் பொழுதிற் பறந்து போயின; என்னுள்ளத்தில் இனியதொரு கழிபெருங்களிப்பு எழுவது உணர்ந்தேன். என்னை அழைத்துப் போம் அப் பெரியவர் திரும்பவும் என்னைக் கைபிடித்து முன்னே அழைத்துச் சென்றூர். அங்குள்ள கருங்கற்பாறையினுற் செய்யப்பட்டது போன்ற கதவு பேரோசை யோடும் எனக்குப் பின்னே சாத்திக்கொள்ளக் கேட்டேன். சில வேளை மென்புல் வளர்ந்த பற்றைபோலவும், மற்றுஞ் சிலவேளை நன்கு மிதிபட்ட பாதைபோலவுந் தோற்றப்பட்ட இடத்தில் இறங்கிக் கொண்டே போயினேம். உறைபனியும் மலைகளும் நிறைந்த அப்பக்கத்தில் என்னைச் செவிடுபடுத்தின நீரோட்டங்களின் பேரிரைச்சல்போலாது, அதனேடு மாறுபட்டு இனியவாய்த் தோன்றின மலைவீழாறுகளின் அமைதியான முறுமுறுப் பொலியுஞ் சிலுசிலுவென்று ஓடும் அருவிகளின் ஓசையும் என்காதிற் பட்டன. நடந்து செல்வது உழைப்பாகக் காணப்படாத மெல்லெனச் சரிந்த இடங்களில் இறங்கிக்கொண்டும், ஆறுதலும் மென்மையும் நறுமணமும் மிக்க தென்றற் காற்றினிடையே ஒவ்வொரு நொடியும் நுழைந்துகொண்டும் மேலும்

மேலும் போயினேம். என் ஆடைகள் செடிகளின்மேற் பட்டுச் சரசரவென்று ஓசை செய்தன: என் காலடிகள் சிலநேரம் மலர்களினிடையே அகப்பட்டுக்கொண்டன: பிடிக்கப்படாத எனது மற்றைக் கை கிளைகளிலிருந்து தொங்கும் பழங்களின்மேல் தட்டுப்பட்டது. யான் நுழைந்த அவ்விடம் இளவேனிற் காலமுடையதாய்த் தோன்றியது! கடைசியாக என்னை அழைத்துச் சென்றவர் திடுமென நின்று என் கண்களினின்றுங் கட்டை அவிழ்த்து விட்டார்.'' என்று சொல்லவே,

உடனே மீனும்பாள் "நீ என்ன கண்டாய்? என்ன கண்டாய்? விரைந்து சொல்!'' என்று வினவினவள், அப்புறம் நம்பிக்கையால் எழுந்த மிகுகளிப்பினிடையே தன்னைத்தானே தடுத்துக்கொண்டு, முன்னினும் அமைதியாய், "நல்ல திகழ்கலே, உனது கதை வலுத்த ஆவலைக் கிளப்பவல்லதாய் இருக்கின்றது.'' எனமொழிந்தாள்.

மேற்கணவாய் மலைகளின் நடுவே மறைபட்டிருக்கும் இன்பஉறையுளைப் பற்றிய ஊரார் சொற்களை நான் கேட்டிருக்கின்றேன்: ஆனுற், கட்டுக்கதை குடிகொண்ட அந்நாடுகளில் நடைபெறும் பொய்க்கதையாகவே இவற்றை நான் இதுவரையில் நினைந்துவந்தேன்.'' என்று குமுதவல்லி கூறினுள்.

"இங்கே கட்டுக்கதை இல்லை; நான் உண்மையே சொல்லி வருகிறேனென்று கடவுளுக்கு ஒப்பாக ஆணையிட்டுக் கூறுகிறேன்.'' என்று திகழ்கலே பகர்ந்து, பின்னும் மீனும்பாள் பக்கமாய்த் திரும்பிப், "பெருமாட்டி, நான் என்ன கண்டேன் என்று கேட்டீர்களே, அதனைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். வெண்மதி துலக்கமாக விளங்கிற்று. மக்கள் கண்ணிற்கு என்றுந் தென்பட்டிராத மிக அழகிய அவ்விடத்தின்மேல் அதன் ஒளி பட்டுத் துலங்கியது. அவ்விடம் மிக அழகிதாய் மட்டும் இருக்கவில்லை, மற்றொரு வகையில் மிக்க வியப்புடைத்தாயுஞ் சாலவும் விழுமிதாயும் இருந்தது! பலநிறப் புதிய வடிவங்களாக விளிம்பு உடைந்த பெரிய ஒரு சீனத்துப் பீங்கானை நினைத்துப் பாருங்கள்; அதன்பிறகு, அப்பீங்கான் அடியிற் கிடந்த சில சிறிய பூச்சிகள் மேல் நிமிர்ந்து அவ்விளிம்பைச்

சுற்றி நோக்கினால் அவற்றிற்கு எவ்வகையான தோற்ற முண்டாகு மென்பதையும் நினைத்துப்பாருங்கள். புதுமையாகக் காணப்படும் இவ் எனது உருவகத்தைப் பொருத்திப் பார்க்குமிடத்து, அப்பெரியவர் என்னை அழைத்துக்கொண்டுபோய் விட்ட அப்பள்ளத்தாக்கினடியில் யான் அப்பூச்சியைப்போல் இருந்துகொண்டு, சுற்றிலுந்தோன்றிய மிகப்பெரிய மலைகளின் வட்டவேலியை மேல் நிமிர்ந்து நோக்கினேன். அங்குள்ள ஒவ்வொரு பொருளையும் நிரம்பவுந் தெளிவாக யான் பிரித்தறியத் தக்கபடி, வெண்டிங்கள் அத்துணை விளக்கத்தோடுந் திகழ்ந்தது; வட்டமா யுள்ள மலைக்குவடுகளின்மேல் மூடிய பனிக்கட்டிகளின் எதிரொளியால் அந்நிலவின் பளபளப்பு அப்பள்ளத்தாக்கிலே ஒருங்கு சேர்க்கப்பட்டு அத்துணை விளக்கத்தோடும் இலங்கியது. இப்பள்ளத்தாக்கினின்றும் அப்பால் ஏறிப்போகவாவது, அல்லது அப்பாலுள்ள காட்டிடங்களிலிருந்து ஏறி இதனுள் வரவாவது முயலும் எவரும் அங்ஙனங்கடந்து செல்வதற்கு ஏலாத வண்ணம் பிதுங்கி நீண்ட செங்குத்தான பெரும் பாறைத் தொகுதிகளோடு, அவ்வோங்கிய பொருப்பிடங்களெல்லாம் அப்பள்ளத்தாக்கின் பக்கங்களில் நேர்நீண்டிருந்ததாகிய ஈதொன்றிலே தான், இம்மலையவேலி நான் சொன்ன, ஒழுங்கின்றிப் புதுமையாக உடைந்த விளிம்பினை உடைய பீங்கான் உவமையினின்றும் வேறுபடுகின்றது. ஓ! இம்மலையவேலிக்குப் புறத்தேயுள்ள நாடுகளிலெல்லாம் மிகக்கொடிய குளிர்மிகுந்த மழைகாலமாயிருக்க, இப்படுகரின் ஆழ்ந்த இடத்திலோ இனிய வேனிற்காலமாயிருந்தது! தித்திக்கும் பழக்குலைகளைச் சுமந்த முந்திரிக்கொடிகளையும் மணிகள் பதித்தாற்போலக் கொழுவிய பழங்கள் உள்ள மரங்களையுங் கம்பலம் விரித்தாற்போலப் பன்னிற மலர்கள் நிறைந்த நிலத்தையும், என்னைச்சூழ மலரும் எண்ணிறந்த நிலத்தாமரைப் *பூக்களையும் யான் வேறுவேறு பகுத்தறியக் கூடியதாயிருந்தது.'' என்று திகழ்கலை சொல்லி வருகையில்;

---

* Rose flower

"நிலத்தாமரைகளா? ஆம்!" என்று மீனும்பாள் களிப்பி ஞல் மெய்ம்மறந்து கூறினுள்; தான் கேள்வியுற்ற இன்ப நிலத்தைப் பற்றிய எண்ணங்களே தன்னுள்ளத்தில் நிரம்பி நின்றமையால், அவள் அம்மலேயவேலி என்னும் துறக்க நிலத்தைப் பெறுதற்கு மிகுதியும் விரும்பினுள்.

குமுதவல்லி களங்கமற்ற தன்மை யுடையவளாதலால், திகழ்கலே படுபொய்களேக் கட்டிச்சொன்னுள் என்று நம்பக் கூடாதவளாயிருந்தாலும், அவ்வளவு புதுமையானதும் நம் பிக்கை யற்றதுமான ஒரு வரலாற்றினே உண்மையென்று ஒப் புக்கொள்வதற்குந் தான் கூடாதவளாய், "இவைகள் எல்லாம் உண்மையிலே வியப்பாகவே இருக்கின்றன!" என்று கூறினுள்.

"ஆண்டவன் அறிய இவைகள் எல்லாம் மெய்யே என்று ஆணேயிட்டுச் சொல்லுகின்றேன்! என்னுடைய கதையை முற்றுஞ் சொல்லிவிடுகின்றேன். முழுமதி விரித்த தெள்ளிய வெண்ணில வொளியின் உதவிகொண்டு அத் தூய நிலத்தை யான் இன்பமொடு வியந்து நோக்குதலே என்னே அழைத்துச் சென்ற அப்பெரியவர் சிறிதுநேரம் பார்த்து மகிழ்ந்தார்போற் காணப்பட்டனர்; பிறகு அவர் அருள் கூர்ந்த புன்சிரிப்புடன் என்னேத் தம்பின்னே வரும்படி கட்டளேயிட்டபோது அவர் சொன்னதாவது: 'மறுபடியும் இங்கிருந்து வெளியேயுள்ள பெரிய உலகத்திற்கு நீ போனபின்பு, இம்மறைபொருளே வெளியிடலாகா தென்று நான் சொல்லவேண்டுவ தில்லே; ஏனென்ருல், இக்கதையை நீ வெளியிட்டாலும் எவரும் உன்னே நம்பவேமாட்டார்!'" என்று திகழ்கலே திரும்பவும் உரைத்தாள்.

மீனும்பாள் பெருங்களிப்பினுல் ஓசையின்றி நீண்ட பெருமூச் செறிந்து, "ஓ! எங்ஙனமாயினும் நான் நீ சொல் வதை நம்புகின்றேன்!" என்று தனக்குட் சொல்லிக்கொண் டாள்.

திகழ்கலே திரும்பவுந் தன்கதையைச் சொல்லத்தொடங் கினுள்: "அப்பெரியவர் பூக்களும் பழம் நிறைந்த மரங்களும்

பழக்குலை சுமந்த கொடிகளும் என்னும் இவற்றிடையே என்னை வழி நடத்திக்கொண்டு சென்றார்; எனக்கு விருப்பான கனி எவையேனும் அவற்றைப் பறித் துண்ணும்படி கட்டளையிட்டார். யான் அங்ஙனமே செய்தேன்; நங்கை மீர், அவ்வினிய படுகரிலே அன்று நான் விருந்துண்ட தீங்கனிகளைப் போல் அவ்வளவு சுவையான கனிகளை சுவைத்துப் பார்த்ததேயில்லை. அப்படுகரின் நடுவிலேயுள்ள புல் நிலத்தின்மேல் அமைக்கப் பட்டிருந்த ஒரு சிறியமாளிகைக்கு அப்பெரியவர் என்னை அழைத்துச்சென்றார். நிலவு வெளிச்சத்தில் வெண்சுண்ண வொளிபோல் வயங்கும் புதுமையான ஒருவகைக் கற்களாற் கட்டப்பட்டு இருந்தமையால் அஃது ஒரு மலைக்குகைபோற் றோன்றியது. ஒருசிற்றாறு அதன் அருகே சிலுசிலு வென்று ஓடியது; புல் நிலத்தைச் சூழஇருந்த பாங்கெல்லாம் நிலத்தாமரையின் தோட்டங்களைத்தவிர வேறில்லை. ஓ அம்மலர்களின் நறுமணத்தோடு அளாவி வீசுந் தென்றற்காற்று எவ்வளவு இனிதாயிருந்தது! அது நோய்ப்படுத்துவதாகவேனுங் கடுமையுள்ளதாகவேனுந் தோன்றவில்லை. யான் அந்த மண்டபத்தினுட் கொண்டுபோய் விடப்பட்டேன். அங்கே யான் பார்க்க வேண்டிய நோயாளியையுங் கண்டேன். அவரும் ஆண்டின் முதிர்ந்த பெரியவராகவே இருந்தார்—ஆனால் இக்கதையின் இந்தப்பாகத்தைப்பற்றி யான் சொல்லவேண்டுவதில்லை. ஒரு கிழமை முழுதும் அவ்வினிய பள்ளத்தாக்கின்கண் யான் தங்கி இருந்து அதன் ஒவ்வொருபாகத்திலும் உலாவித் திரிந்தேனென்றும், என்னை அங்கே அழைத்துச்சென்ற பெரியவரையும், யான் மருந்துகொடுத்த மற்றொரு பெரியவரையுந் தவிர வேறு எவரையும் யான் அங்கே பார்த்திலேன் என்றுஞ் சொல்வதுமட்டும் போதும். யானும் அவர்க்கு நோய்தீர்த்தேன்!''

''ஓ, இவ்வழகிய பள்ளத்தாக்கைப்பற்றி இன்னும் மிகுதியாகச்சொல்! கனிகளையும் பூக்களையும் அமைதியான சிற்றாறுகளையும் விரைவான மலைவீழாறுகளையுந் தவிர வேறு எதனையும் நீ பார்க்கவில்லையா?'' என்று மீனாம்பாள் வியப்புடன் வினவினாள்.

அதற்குத் திகழ்கலே, "நங்காய், ஆம், மாதர்கண்கள் என்றுங் கண்டிராத நிரம்பவும் அழகான பறவைகளைப் பார்த்தேன்; மக்கள் செவிப்புலனில் என்றும் பட்டிராத மிகஇனிய இசைகளையுங்கேட்டேன். வேலியாகச் சூழ்ந்துள்ள அம்மலைகளின் அடிப்படைகளினும் நெடுந்தொலைவு கீழே ஊடுருவிச்செல்வன போற் காணப்பட்ட பெருமுழைஞ்சுகளின் நுழைவாயில்களையும் அவ்வாறே கண்டேன்: ஆனல், அவற்றுள் நெடுக நுழைந்து செல்வதற்கு எனக்குத் துணிவில்லாமற் போய்விட்டது. என்றாலும், நான் அப்படுகரில் தங்கியிருந்த ஒரு கிழமைமுழுதும் என்னைக் கலங்கச்செய்யும் அல்லது அச்சுறுத்தும் அல்லது அத் துறக்கநிலத்தில் யான் திளைத்த இன்பத்தினைப் பழுது படுத்தும் எந்த உயிரையும் யான் சிறிதேனுங் காணவில்லை. அவ்விடத்தில் நரிகளின் ஊளைக்குரல் கேட்கப்படுவதில்லை—நிலத்தாமரைத் தூறுகளின் நடுவிலுங் கொடிமுந்திரித் தொகுதிகளினிடையிலும் ஓநாய்கள் ஒளித்திருப்பதில்லை—புற்களினூடே பாம்புகள் களவாய் ஊர்ந்துவருவதில்லை—கழுகுகளுங் கூடத் தாம் ஓங்கிப்பறக்கும் உயரத்திலிருந்து இப்பள்ளத்தாக்கைப் பார்க்கும் மட்டில் மனஅமைதி பெறுவதல்லாமல், வேறு இதனுள் இறுஞ்சிப் போவதுமில்லை! நங்கைமீர், இன்னும் இதனை விரித்துச்சொல்லப் புகுவேனுனல், அப்படுகரின் வளங்களையும் வனப்புகளையும் புனைந்துரைப்பதிற் பலநாழிகை நேரங்கள் யான் கழித்துவிடக் கூடும்; ஆனல், இக்கதையை யான் ஒருமுடிவுக்குக் கொண்டுவரல்வேண்டும். அக்கிழமைமுடிவில், யான் பார்த்துவந்த நோயாளி முற்றிலும் நோய்தீரப்பெற்றார்; என்னை அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுபோன பெரியவர், ஓர் இராப்பொழுதின் நடுவில் நாம் புறப்படவேண்டுமென்றறிவித்தார். யான் நோய்தீர்த்தவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டேன்: ஆனற், சொல்லற்கரிய துயரத்தோடும் யான் அப்படுகரை விட்டுவரத் துவங்கினேன். அப்பெரியவர் மெல்ல மெல்லச் சரிவாய் உயரும் அவ்விடத்திற்கு என்னை நடத்திக் கொண்டு சென்றார்; அதன்பிறகு என்கண்கள் கட்டப்பட்டமையால், எனது மிச்சக்காலத்தையும் யான் மகிழ்வொடு

கழித்துவிடத்தக்க அத்துறக்கநிலத்தின் காட்சி மறைபட்டுப் போயிற்று. இல்லை—இனி ஒருபோதுமில்லை!'' என்று உறுத்திச்சொல்லிப் பின்னும்: "அங்ஙனம் யான் சிலகாலம் போயிருக்கும்படிநேர்ந்த அவ்விடம் இந்திரனுலமாகத்தான் இருக்க வேண்டும்; மேலும், நான் உண்மை நம்பிக்கை யுடையவளாதலாற் பின்னும் ஒருகால் அவ்விடத்திற்குச் செல்வேனென்று விழைந்திருக்கின்றேன். பெருமாட்டிகளே, யான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்தபடி, மறுபடியும் நான் கண்கட்டப்பட்டேன்; இறக்கமான இடங்களை எறிச்சென்றேம்; பிறகு முன்முறை சொல்லிய கதவண்டை வந்து சேர்ந்தோம்; புறத்தேயுள்ள உலகத்திற்கு ஏறும்வழி தொடங்கிற்று; உறைபனி மிக்க மழைகாலம் உள்ள மங்கலான புறஉலகத்திற்கு! ஓ, எவ்வளவு துயரத்தோடு அவ்வினிய மலையவேலியைப் பின்திரும்பிப் பார்த்தேன்!'' என்று பகர்ந்தாள்.

இந்நேரத்தில் மீனும்பாள் திடுக்கிட்டுப் பெயர்ந்தாள்; அலங்கோலமான அழுகை ஒலி ஒன்று அவள் வாயிலிருந்து புறப்பட்டது.

பதினோராம் அதிகாரம்

கருநம்பாம்பு

குமுதவல்லியுந் திகழ்கலையுந் திகிலினுற் குதித்தெழுந்தார்கள்; தோழிப்பெண்களும் உடனே அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். பெருந்திகில் தோன்றப்பெற்ற நிரம்ப அருவருப்பான முகத்தோடு அக்கொள்ளைத்தலைவன் மனைவி தன் ஆடையின் ஓரத்தை மேலே தூக்கி இழுத்தாள்; அங்கே மிகவும் நேர்த்தியாக உருவாக்கப்பட்ட அவள் கணைக்காலைச்சுற்றி ஒருகரும்பாம்பு தன்னுடம்பை வளைத்துக்கொண்டிருந்தது. ஓ! முதலிலிருந்தே அரவமின்றித் திருட்டுத்தனமாய்ப் புற்களினூடே

நுழைந்துவந்து, தன் நச்சுப்பற்களைச் சிறப்பு மிகுந்த மீனும் பாள் சதையிலோ அல்லது அழகிய குமுதவல்லி சதையிலோ பதிப்பதென்னும் ஐயுறவினால் இடையிடையே நெடுநேரந் தங்கித்தங்கி வந்த பாம்பு அதுதான். தான்விழித்திருக்கும்போது கனாக்காண்பதுபோல் எண்ணிவந்த எண்ணத்தால், முன்னே தான் சிறிதுணர்ந்த இங்கிலவுலகத் துறக்கத்தைப்பற்றி அக்கொள்ளைத்தலைவன் மனைவி இப்போது விளுவி வருகையில், தன் நெஞ்சமானது களிப்பு நிரம்பின நம்பிக்கையால் நிறைந்திருப்ப, இன்பவுருவான தன் எண்ணங்கள் உறைபனி மூடிய மேற்கணவாய் மலைவரம்புகளைத் தாண்டி, என்றும் இளவேனில் குடிகொண்டிருப்பதும், நறுமணங்கமழுந் தன் தனியிடங்களில் மழைகாலத்தின் ஊதைக்காற்று நுழையப் பெறாததுமான அப்படுகரிற் செல்கின்ற அந்நேரத்திற் சாவைத்தரும் அக்கொடும்பாம்பு அவளது வெதுவெதுப்பான மெல்லிய தசையிலே தன் கூர்ம் பற்களை ஊன்றியதே!

அறிவிற்சிறந்த திகழ்கலையைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் மனக்கலக்கத்தினாலுந் துன்பத்தினாலும் ஏக்கத்தினாலும் அலங்கோலமாயினர். இந்தப் பெண்பிள்ளை மட்டும் ஊக்கந் தளரவிடாமலிருந்தாள்; ஒரு மரத்தின் ஒடிந்த கிளை ஒன்றைப் பிடுங்கிப் புல்லின்மேல் நீண்டுகிடந்த அப்பாம்பின் வாலின் மேல் ஓரடி கொடுத்தாள்; உடனே அஃது இரைந்துகொண்டு தன் சுற்றை அவிழ்த்தது; மறுபடியும் அவ்வளாரின் அடி அதன்மேல் விழுந்தது; உடனே அது சாவுநோய் மிகுந்து நெளிந்துகிடந்தது. சுருண்டு துடிக்கும் பாம்பின் கிட்ட இருக்கவிடாமல், இப்போது அரைவாசிகளைத்துவிழும் மீனும்பாளைக் கரையின் சிறிது மேற்புறத்தே விரைந்து இழுத்துவரும்படி திகழ்கலை தோழிப் பெண்களுக்குக் கற்பித்தாள். ஒரு நொடிப் பொழுதுஞ் சோரவிடாமல் திகழ்கலை மிகவும் பெருமைபாராட்டிப்பேசிய தன்மருந்துகளைக் குனிந்துகொண்டே காயத்திற் சேர்த்தினள். அதன் பின்னர் எவ்வகையான நஞ்சுக்கும் முறிமருந்தாகுமென்று தான் முன்னமே சொல்லியவற்றுள் ஒன்றான ஒரு தூளை எடுத்துத், தான் ஏவியபடி தோழிப்பெண்

ஒருத்தி கொண்டுவந்த ஒரு கிண்ணந் தண்ணீர் சிறிதில் அதனைக்கலக்கி, அதனை அவள் மீனாம்பாள் வாயில் ஊற்றினாள்.

மிகக் கொடிய நச்சுப்பாம்பின் கடியையும் மாற்றும் உயர்ந்த மருந்தாகத் தான் நம்பிய ஒருபூண்டு தங்கள் கூடாரம் அடிக்கப்பட்ட இடத்திற்கு அருகாமையில் வளர்ந்திருப்பதைத் தான் சிறிது நேரத்திற்குமுன் காண நேர்ந்தமையால், அதனைத் தேடிக்கொண்டு காப்பிரிப் பெண்ணானவள் பழமரங்கள் நிறைந்த தோப்பினுள் விரைந்துசென்றாள். அந்தச் சிற்றாற்றின் கரைமேற் றோன்றிய இந்தக் காட்சியானது மனத்தை உருகச்செய்வதாய் இருந்தது. ஞானாம்பாள் மீனாம்பாளைத் தன் கைகளிற் றாங்கிக்கொண் டிருந்தனள். சுந்தராம்பாள் அவள் கைகளில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு அவள் முகத்தைக் கவலையோடும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்; மீனாம்பாளின் பாங்கியான மலையநாட்டுப் பெண்ணோ பெருந்திகிலோடும் பேரச்சத்தோடும் நோக்கிக்கொண்டிருந்தாள். திகழ்கலையோ உயர்த்துப்பேசிய தனது மருந்தைச் செலுத்தியிருந்தும், ஒருவகையான பெரிய முகவாட்டத்தோடும் அருகே நின்றுகொண்டிருந்தாள். குமுதவல்லியோ தன் கன்னங்களிற் கண்ணீர் ஒழுகப், புற்பற்றைமேல் மண்டியிட்டு முழங்காலின்மேற் குனிந்தபடியே நின்றாள்; ஏனென்றால், தான் ஏற்கெனவே விரும்பத் தலைப்பட்டவளும், இறக்கக்கூடாத அத்தனை இளம் பருவமுள்ளவளும், பெண் அழகிற்கு அவ்வளவு சிறந்தபடியாயிருந்தவளும் ஆன ஒருபெண்மணி இந்நிலவுலகத்துள்ள ஒளியை என்றுங் காணாதபடி தன் கண்களை மூடிக்கொள்ளப்போவதை எண்ண எண்ண அவள் நிரம்பவுங் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டாள்!

நாம் முன்னமே சொல்லியபடி மீனாம்பாளை ஒருகளைப்பு வந்து மூடியது; அஃது, அவளுடைய நரம்புக்குழாய்களில் அப்பாம்பின் நச்சுநீர் ஓடுவதனால் உண்டான விறைப்பின் விளைவு என்றும், அது சாவை உண்டாக்குந் திமிர்ப்பாக விரைவில் முடியும் என்றுங் குமுதவல்லி எண்ணினாள். கலக்கமுந் துன்பமும் உற்ற குமுதவல்லி தான் மண்டியிட்டிருந்த நிலையினின்

றுங் குதித்தெழுந்து, உருக்கம் நிறைந்த குரலொடு திகழ்கலை யை நோக்கி, "இந்த அம்மையை நீ காப்பாற்றக் கூடுமென்று நினைக்கிறாயா? உன்னுடைய மருந்துகளில் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா? எனக்குச் சொல். புண்ணியத்தின் பொருட்டாக வேனும் உன்னால் ஆனமட்டும் பார்! நானே உனக்கு நிரம்ப வும் மிகுதியாகப் பரிசுகொடுப்பேன்!" என்று பேசினாள்.

அதற்குத் திகழ்கலை "மக்களுடைய கை மருந்துகள் கொடுக்கும்; ஆனால், மற்றையதை ஆண்டவனே முடிவுசெய்ய வேண்டும். உங்களுடைய தோழி பிழைத்தாலும் பிழைக்க லாம், அல்லது செத்தாலுஞ் சாகலாம்: அதனைக் கடவுளே அறி வார்! கடவுளே பெரியவர்!" என்று விடைகூறி, இந்தவகை யான பேச்சினால் மருத்துவஞ் செய்யுந் தன் உண்மைக்குணத் தையுஞ், சிறிது நேரத்திற்குமுன் தவறாமற் பலிக்குமென்று தான் பெருமை பாராட்டிக் கூறிய தன் மருந்துகளின் மதிப் பையும் பாதுகாக்கப் பார்த்தாள்.

அதனைக்கேட்ட குமுதவல்லி வருத்தமும் மனத்தளர்ச்சி யும் அடைந்து, "ஐயோ கடவுளே! உன் சொற்கள் எனக்கு நம் பிக்கையைத் தரவில்லையே!" என்று முணுமுணுத்தாள்.

நாகநாட்டரசிக்கும் அவ்வறிவோளுக்கும் இடையே நடந்த இச்சொற்களைக் கேட்கும்படியான அளவு உணர்வு வரப்பெற்ற மீனும்பாள் தன் கரிய பெரிய விழிகளைத் திறந்து, "ஏது, நம்பிக் கை சிறிதும் இல்லை! அந்தச் சாநஞ்சு என் நரம்புகளிற் சுற்றி ஓடுகிறது; நான் சாகவேண்டுவது தான்! ஆனால், ஓ பெரு மாட்டி! நீங்கள் என்னிடத்திற் பற்றுவைத்தீர்களே! அழகிய குமுதவல்லி நீங்கள் என்பொருட்டுத் துயரமும் அடைகிறீர் களே!" என்று கூறினாள்.

மறுபடியும் மீனும்பாள் பக்கத்தில் மண்டியிட்டுக் குனிந்த நாகநாட்டரசி தன்னை அவள் பெயர் சொல்லி அழைத்ததைக் கேட்டு அவள் மேல் வியப்புடன் நோக்கினாள்; ஏனெனில் இவள் தன் பெயரை அக்கொள்ளைத்தலைவன் மனைவிக்குத் தெரிவிக்கவே யில்லை.

உடனே அவள் பார்வையினது வியப்புக்குறியின் காரணத்தைத் தெரிந்துகொண்டவளான மீனாம்பாள், "ஆம், அழகிய குமுதவல்லி நான் உங்களை அறிவேன்! ஓ, நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவது மிகுதியாயுள்ளது! அதன்பொருட்டு என்னுயிர் வேண்டுமளவுக்கு நீண்டநேரம் தங்கியிருக்கும்படி ஆண்டவன் அருள்புரிவாராக! ஆயினும், முதலாக இதனை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று மொழிந்தாள்.

இவ்வாறு பேசிக்கொண்டே மீனாம்பாள் நோயோடும் வருத்தத்தோடுந் தன்கையை உயரத்தூக்கினாள்; தன் மார்பிலிருந்து ஒரு சிறிய பொருளை எடுத்து அதனைக் குமுதவல்லியிடம் நீட்டினாள். சாவடியிலுள்ள அறையின்கண்ணே தன் விரலினின்றும் நல்லாளாற் கழற்றப்பட்ட மோதிரந்தான் அது, என்று தெரிந்துகொண்டவுடனே அவ்வழகிய நாகநாட்டரசியின் வாயிலிருந்து களிப்பும் வியப்பும் உள்ள ஓர் ஒலி தோன்றிற்று.

"ஆம், அஃது உங்களுடையதுதான், அஃது உங்களுக்குத்தான் உரியது! இப்பொழுது அதனைத் திரும்பவும் உங்களிடஞ்சேர்ப்பித்ததனாலே, என் மனத்திலிருந்த ஒரு பெருங்கவலை நீங்கப்பெற்றேன்." என்று மீனாம்பாள் கூறினாள்.

அவ்வருங்கலத்தைப்பற்றி நினைத்துப்பார்த்தனுங் குமுதவல்லி தன் கண்களையே நம்பக்கூடாதவளாய், "என்னுடைய மோதிரம்!" என்று இறும்பூதுடன் இயம்பினாள்; ஏனென்றால், தனக்குஎதிரில் இப்போது சாகும் நிலைமையில் உள்ள கருங்கண்மாதரார் வசத்தில் அஃது எங்ஙனம் வந்திருக்கக்கூடும்? என்னுங் கலவர ஐயமானது அவள் உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்தது.

"அழகிய குமுதவல்லி, உங்களைத்தவிர மற்றவர்கள் எல்லாருந் தொலைவிலே விலகிப்போய் இருக்கட்டும்; நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவது மிகுதியுமிருத்தலால், நீங்கள் இங்கேயே இருங்கள்." என்று மீனாம்பாள் விளம்பினாள்.

இந்நேரத்திற், கனிமாத் தோப்பிலிருந்து காப்பிரிமாது வெளியே வந்தாள்; அவள் தான் பிடுங்கிக்கொண்டுவந்த பூண்டு

களைக் கடுக நசுக்கிப்பிசைந்து தன் தலைவியின் காயத்தில் வைத்துக் கட்டுதற்கு விரைந்து முன்வந்தாள்.

அதனைப்பார்த்ததுந் திகழ்கலை சிறிது வெகுண்டு, "நான் செலுத்தியிருக்கின்ற மருந்துகளைக் கலைத்துவிடாதே! கடவுளுக்குத் திருவுள்ளமானால், அவ்வம்மை பிழைத்துக்கொள்வார்கள்." என்று மொழிந்தாள்.

அதற்குக் காப்பிரிமாது, "அப்புறம் எட்டிநில் அம்மே, என் மனத்தின்படிதான் நான் நடப்பேன்!" என்று தீர்மானத் தோடுங்கூறிப் பின் மீனும்பாள் கணைக்காலில் அந்த மருந்தை வைத்துக் கட்டப்போகிறவள், "அன்புள்ள பெருமாட்டி, இந்த ஒரு மருந்தைமட்டும் யான் சேர்க்கும்படி விடைதரல்வேண்டும்; இறைவனுக்குத் திருவுள்ளமிருந்தால் இதனாலேயே பிழைத்துக்கொள்வீர்கள்!" என்று மீனும்பாளைப் பார்த்துப் பகர்ந்தாள்.

"உனக்குத் தகுதியாகப்படுகிறதை நீ செய்; ஆனால், செய்வதை விரைந்துசெய்; ஐயோ, எனக்கோ நம்பிக்கை இல்லை! அப்பாம்பின் நஞ்சு என் நரப்புக்குழாய்களிற் சுற்றி ஓடுகிறது. கள்ளம் ஏதும் அறியா அழகிய குமுதவல்லியினிடத்து இழைத்த தீமைகளுக்கு மருந்தாக எனக்கு இன்னும் எஞ்சியுள்ள சிறிது அரிய நேரத்தையும் யான் முற்றும் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்." என்று மீனும்பாள் மறுமொழி தந்தாள்.

கடைசியான இந்தச் சொற்கள் தாழ்ந்த புலம்பற் குரலிற் சொல்லப்பட்டமையால் அவை குமுதவல்லியின் செவிகளில் மட்டும் பட்டன; காப்பிரிமாதோ பிசைந்தமருந்தைப் பாம்பு கடித்த கணைக்காலில் வைத்து அதனைத் தன் முக்காட்டிலிருந்து கிழித்த துணியினாற் கட்டிக்கொண்டு அம் முயற்சியில் நினைவு அழுந்தியிருந்தாள்.

அதன்பின் அக்காப்பிரிமாது, "பெருமாட்டி, இப்போது மருந்து கட்டிமுடிந்தது. தங்களைக் காப்பாற்றுவது ஏதேனும் இருந்தால், அஃது இதுதான். நான் பிறந்தநாட்டில் மிகவுங் கொடுமையான நச்சுப்பாம்புகளின் கடுமையையும் முறிக்கும் மருந்

தாக இப்பூடுகள் கொடுக்கப்பட்டதனை நான் கண்டிருக்கிறேன்.'' எனப் புகன்றாள்.

"போதும், என் நம்பிக்கையுள்ள பணிப்பெண்ணே, என் நெஞ்சத்திற் பிழைப்பேனென்னும் நம்பிக்கையில்லை; என்றாலும், நீ நல்லெண்ணத்தோடு செய்த ஊழியத்திற்காக யான் பாராட்டும் நன்றியறிவு சிறிதுங் குறைவுபட்டிலது. அங்ஙனமே திகழ்கலை உனக்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்! ஆயினும், நீங்கள் எல்லாரும் விலகிப்போங்கள்; யான் குமுதவல்லியொடு தனித்திருக்கவேண்டும்.'' என்று மீனம்பாள் நுவன்றனள்.

உடனே அவ்வறிவோளுங், காப்பிரிப் பெண்ணும், மலைநாட்டுப் பணிப்பெண்ணுஞ், சுந்தராம்பாளும், ஞானம்பாளுங், காதிற்குமட்டும் எட்டாததாயினும், அவர்கள் அழைக்கும் நேரத்தில் தாம் உடனே சென்று உதவத்தக்க அண்மையில் உள்ளதான ஓரிடத்திற்கு அவ்வாறே ஒதுங்கிப் போயினர். அக் கரிய விழி மாதரார் தெரிவிக்கப்போவது எதுவாயிருப்பினும் அதனைக்கேட்கும் ஆவலோடும் ஐயுறவோடுங் குமுதவல்லி எதிர்பார்த்திருந்தனள்; ஏனென்றால், மீனம்பாள் பேசிய சொற்களைக் கேட்டபிறகு, அவள் யாராயிருக்கக்கூடுமென்றும், அந்த மோதிரம் அவள் வயத்தில் எங்ஙனம் வந்திருக்கக் கூடுமென்றும் நாகநாட்டரசி முன்னையிலும் மிகுதியாக விம்மிதம் உற்றாள்.

உடனே மீனம்பாள், சாவின் கடைவான வருகையைத் தெரிவிப்பதுபோல் அவ்வளவு மெலிந்த தன்மையொடு பேசினுலுந், தெளிவாகவுங் காதிற்கு எட்டத்தக்கதாகவும் உள்ள குரலில், "அழகிய குமுதவல்லி, என்னிடத்தில் நீங்கள் இரக்கங் காட்டினீர்கள்; என்பொருட்டுக் கவலையும் அடைந்தீர்கள்; அமைதியான உங்கள் நல்ல இனிய அழகினுல் முன்னே மனங் கசியப் பெற்ற யான் இப்போது என் நெஞ்சம் முழுதும் உருகப் பெற்றேன்! குமுதவல்லி, திடுக்கிடாதீர்கள்! என்னை அருவருப்பொடு பாராதீர்கள்! ஓ! முன்னமே நோய்ப்பட்டிருக்கும் என்னைப் பின்னும் புண்படுத்தாதீர்கள்! நான் அக்கொள்ளைத்

தலைவனுக்கு மனைவியென்று சொல்லும்போது என்னைத் துயரத்தோடும் இரக்கத்தோடும் பாருங்கள்! ஆம், நான் நல்லானுக்கு இல்லக் கிழத்தியே!'' என்று விளம்பினாள்.

இவ்வுண்மை வெளிவரக்கேட்ட குமுதவல்லிக்கு உண்டான இறும்பூது இவ்வளவுதான் என்று விரித்துச்சொல்லல் இயலாது: ஆனாலும், புண்ணியத்தன்மை வாய்ந்த அவளது நெஞ்சமானது, திண்ணமாகவே பிழைக்கமாட்டாமல் இறந்து போகும் நிலையிலுள்ள மீனாம்பாளிடத்தில் அருவருப்பாவது எரிச்சலாவது காட்ட ஒரு சிறிதும் இடந்தரவில்லை.

"ஓ! உங்கள் கணவன் எனக்குச் செய்த தீமையை நீங்கள் வேண்டியஅளவு மாற்றிவிட்டீர்கள்! அவர் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொண்ட மோதிரத்தைத் திருப்பி எனக்குக் கொடுத்துவிட்டீர்கள்! ஓ, அவர்தாம் அதனை எடுத்துக்கொண்டவர் என்பது எனக்குத் தெரியும்.'' என்று குமுதவல்லி தன் கன்னங்களிற் கண்ணீர் ஒழுக மெல்லெனக்கூறினாள்.

"உங்களுக்கு அது தெரியும்!'' என்று இப்போது மீனாம்பாள் தான் வியப்புற்று வினவினாள்.

"ஆம், நான் இருந்த அறையினுள் அவர் நுழைந்ததைக் கண்டேன்; நான் அயர்ந்து உறங்குவதுபோலப் பாசாங்குசெய்தேன்; ஏனென்றால், அவர் தமது கையிற் கட்டாரி ஒன்று வைத்திருந்தார்; ஓ! நான் அஞ்சினேன்—'' என்று குமுதவல்லி மறுமொழி புகன்றாள்.

மீனாம்பாள் நடுக்கத்தோடும் "பெருமாட்டி, அதனைச் சொல்லாதீர்கள், அப்படியானால் நீங்கள் என்கணவனைப் பார்த்தீர்களோ?'' என்று கூறினாள்.

அதற்கு "ஆம்-ஆம், நான் அவரைப் பார்த்தேன்.'' என்று விடைகூறிப், பின்னும், "அவர் என்னைத் துன்பப்படுத்திக் கொண்டு வந்தார்? அவர் ஏன் எனக்கு அவ்வளவு பொல்லாங்கு செய்யத் தேடினார்? என்பதை எனக்குச் சொல்லுங்கள்.'' என்று குமுதவல்லி கேட்டாள்.

"அழகிய குமுதவல்லி, திரும்பவும் உங்களிடம் நான் சிறிது முன்னே கொண்டுவந்து சேர்ப்பித்த அக்கணையாழியின்

மதிப்பு உங்களுக்குத் தெரியாது என்பதனை யான் நன்கு அறிவேன். ஓ! என்னைவந்து மூடுகிற இவ்வாற்றாமை யாது? இது சாக்காடாகத்தான் இருக்கவேண்டும்!'' என்று மீனும்பாள் இயம்பினள்.

உண்மையிலே, விளக்கின் சுடரைப்போல் அத்தனை ஒளியோடும் மினிரும் இயல்பினையுடைய மீனும்பாள் கண்கள் பளிங்குபோல் ஆகத்துவங்கின; சாவின் மாறுவடிவம் ஏற்கெனவே அவள் முகத்தின்மேற் காணப்படுவதாயிற்று. அக்கொள்ளைத்தலைவன் மனைவியைக் குமுதவல்லி தன் கைகளிற் றாங்கிக்கொண்டிருந்தாள்; ''ஓ, நான் என்ன செய்யக்கூடும்? யாது உதவி நான் இயற்றக்கூடும்?'' என்று அவ்வழகிய நங்கை நடுங்கிய குரலொடு கூறினாள்.

''ஒன்றுமில்லை! குமுதவல்லி, ஒன்றுமில்லை!'' என்று மீனும்பாள் மனத்தை உருகச்செய்யுந் துயரத்தோடு அமைதியாய்ச் சொன்னாள்; அதன் பிறகு, இன்னும் மிஞ்சியிருக்கின்ற தன் வல்லமையை ஒருங்கு சேர்த்துக்கொண்டு, நழுவிப்போகுந் தன் ஆண்மைகளில் மிச்சமாயிருப்பனவற்றை ஒருங்கு தொகுத்துக்கொண்டாலென்ன, அவள் கூறவாளானாள்: ''இன்னுஞ்சிறிதுநேரம் யான் உயிர் பிழைத்திருக்கும்படி கடவுள் அருள் புரிவாராக! ஓ குமுதவல்லி, எவ்வளவு அன்பொடு நான் என் கணவனைக் காதலித்துவந்தேன், இன்னுங் காதலிக்கின்றேன் என்பது உங்களுக்குத் தெரியாது! ஆனாலும், இந்த மேலான நேரத்தில்—அழிந்து போவதொன்றும், அழியாமல் நிலைத்திருப்பதொன்றுமாகிய இரண்டுலகங்களுக்கு இடையிலே என் ஆவி தொங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், நன்னடையையும் மன அமைதியையுமே இன்னும் மேலாக நான் நேசிக்கின்றேன்!''

''உங்கள் கணவனார் எனக்குச் செய்திருக்கும் அல்லது செய்ய நினைத்திருக்குந் தீங்குகளுக்காக எப்போதாயினும் நான் பழிவாங்குதற்கு ஏற்ற நேரம் வாய்த்தாலும் நான் அவரைப் பழிவாங்கப் பார்ப்பேனென்று நினையாதீர்கள்!'' என்று அக்கறையுள்ள குரலொடு குமுதவல்லி உறுதிமொழி புகன்றாள்.

"இந்தச் சொற்களுக்காகக் கடவுள் உங்களுக்கு அருள் வழங்குவாராக!" என்று மீனும்பாள் நன்றியறிவின் ஒளி தன் கரிய பெருவிழிகளிற் சிறிதுநேரங் கதிர்த்துத் தோன்ற மெல்லென உரைத்தாள்; "தங்கள் வாயிலிருந்து யான் பெறுதற்கு விழைந்த உறுதிமொழி அதுவே; அதனை நீங்களே வலியச் சொல்லிவிட்டீர்கள்! ஓ, குமுதவல்லி உங்களுக்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன்—என் நெஞ்சார உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்! நல்லான் என்பவருக்கு ஏதுந் தீங்கு செய்யாதீர்கள்!"

"என்னைப் பாதுகாத்துக்கொள்ள நேர்ந்தால் அல்லாமல்—அவர் இனிமேற் செய்யுஞ் செயல்களால் யான் அவருக்கு எதிராய் அறநூற்படி செய்ய வலுகட்டாயஞ் செய்யப்பட்டால் அல்லாமல் நான் அவருக்கு ஒன்றுஞ் செய்யமாட்டேனென்று ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்!" என்று குமுதவல்லி வற்புறுத்திக் கூறினுள்.

"குமுதவல்லி, இனிமேல் அவர் உங்களைத் தொல்லைப்படுத்த மாட்டார். ஆனுல், எப்போதாயினும் அவர் மாறுகோலம் பூண்டிருக்கக் காண்பீர்களாயின், அவரைத்தாங்கள் காட்டிக் கொடாமலிருக்கும்படி தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன்!"

"இல்லை, அவர் தமக்கு இரையாக்கப் பார்க்குங் களங்கமற்றவர்களைக் காக்கும்பொருட்டாக அல்லாமல், நான் அவரைக் காட்டிக் கொடுக்கமாட்டேன்!" என்று குமுதவல்லி கூறினுள்.

"இதைவிட இன்னும் மிகுதியாக உங்களால் உறுதி கொடுக்கமுடியாது; நானும் உங்கள் வாயினின்று இன்னும் மிகுதியாகக் கேட்கக்கூடாது. ஐயோ! என் வல்லமையெல்லாம் என்னைவிட்டு நழுவிப்போகின்றதே! ஏதோ படலம்வந்து என் கண்ணை மறைக்கின்றதே! என் எண்ணங்கள் தாறுமாருகக் குழம்புகின்றனவே! ஆ! அந்தத் துறக்கவுலகத்தை இனி நான் என்றும் பாரேன்! குமுதவல்லி, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நான் சொல்வதை உற்றுக் கேளுங்கள்! விழிப்பா

யிருங்கள்! விழிப்பாயிருங்கள்!'' என்று மீனாம்பாள் முற்றுஞ் சொல்லக்கூடாமல் நின்றுவிட்டாள்.

ஐயமுங் கலக்கமுங் கொண்ட குமுதவல்லி, "உங்கள் கணவரைத் தவிர இன்னும் நான் விழிப்பாய் இருக்கவேண்டியவர்கள் வேறு எவரேனும் உண்டோ? சொல்லுங்கள்—ஓ, சொல்லுங்கள்: உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; எனக்குச் சொல்லுங்கள்—'' என்றாள்.

இப்போது மீனாம்பாளுக்கு விழிகள் சிறிது சிறிதா மூடத் துவங்கின; அவள் குரல் மெலிந்து மங்கலாய்க் கேட்டது; அவள், "அந்தோ! இங்ஙனம் மாண்டுபோவதோ!—இங்ஙனம் மாண்டு போவதோ!—இவ்வளவு இளம் பருவத்தில்--விளக்கமான கதிரவன் வெயில் வெளிச்சத்தில்—பறவைகள் மரங்களின் நடுவில் பாடிக்கொண்டிருக்க—மலர்கள் சுற்றிலும் இதழ் விரிந்திருக்க! இது சாக்காடுதானோ—அல்லது உறக்கந்தானோ என்னைவந்து அமிழ்த்துவது? குமுதவல்லி—நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?'' என்று விட்டு விட்டு மெல்லப் பேசினாள்.

அதற்குக் குமுதவல்லி அமைதியாய், "நான் இங்கேதான் இருக்கிறேன், உங்கள் தலையைத் தாங்கிக்கொண்டிருக்கிறேன்.'' என்று காதுக்குட் சொன்னாள்.

"நெடுந்தொலைவிலுள்ள உலகங்களிற் கந்தருவமாதினிடத்திருந்துவரும் மறைவொலிபோல், உங்கள் குரல் எனக்குக் கேட்கின்றது! உங்கள் மெல்லிய இனிய குரல்ஒலியிலிருந்து கடவுளின் திருவருள் ஒலி எனக்கு வருகின்றது! குமுதவல்லி, நான் இறந்துபோகின்றேன்—சில நொடிகளில் எல்லாம் முடிந்துபோகும்! காலந்தாழாது நீங்கள் நீலகிரி நகரத்திற்குப் போகும்படி நான் உங்களை வேண்டிக்கொள்கின்றேன்—குளிர்ந்துபோன பிணமாக யான் இங்கே நீட்டப்பட்டுக் கிடக்கும்போது என்கிட்ட ஒரு நொடிப்பொழுதுதானும் தங்கியிராதீர்கள்—நீங்கள் செல்லவேண்டிய வழியில் விரைந்து செல்லுங்கள்—குமுதவல்லி விழிப்பாயிருங்கள்—விழிப்பாயிருங்கள்—'' என்று கடைசியிற் சில சொற்களைச் சொல்லக்கூடாமல் நிறுத்தினாள் மீனாம்பாள்.

மறுபடியும் பேசுவதற்கு மீனும்பாள் வாயைத்திறந்து மேல் மூச்சு எறிந்தாள்: காதுக்குக் கேளாவிட்டாலும், எவை யோ சில சொற்கள் அவள் உதடுகளின்மேல் தத்தளிப்பன போற் காணப்பட்டன. குமுதவல்லி அவற்றைத் தெரிந்து கொள்வதற்கு ஆவலுற்று மிகுந்த கவலையோடும் அவள்மேற் குனிந்தாள்: ஆனால் இப்போது மீனும்பாள் சிறிதும் அசை வின்றிக் கிடந்தாள்.—உயிர்போய்விட்டதென்றே நாகநாட்டரசி அஞ்சினாள்.

கடைசியாகத், தொலைவிலே ஒருவர் சொல்லிய ஒரு பெய ரைத் திரும்பச்சொல்லும் எதிரொலியேபோல், மிகவும் மங்க லான குரலில் அக்கொள்ளைத் தலைவன் மனைவி முணுமுணு வென்று கூறுவாள்: "குமுதவல்லி, இந்த மேலான நேரத்திற் கடவுளின் திருவருளால் ஒரு தேவதூதன் என்னிடம் அனுப் பப்பட்டிருக்கின்றார்!—விழிப்பாயிருங்கள்—பற்றி—விழிப்பா யிருங்கள்—"

சிறிது நின்று மீனும்பாள் ஒரு பெயரை மெல்லச் சொன் னாள்: சில நொடிகளுக்குமுன் குமுதவல்லியின் இயற்பெயரை அவள் சொல்லியபோது இருந்ததைவிட இப்போது சொல்லி யது இன்னும் மிகவும் மங்கலாய்ப்போயிற்று. இளந்தென்றற் காற்றுச் சடுதியில் வீசிச் சென்றாலென்ன மெல்லச் சொல்லப் பட்ட அது சந்திரன் என்னும் பெயரே யெனக் குமுதவல்லி எண்ணினாளேனும், அதைப்பற்றி அவள் உறுதிப்படவில்லை. மறுபடியும் மீனும்பாள் அசைவில்லாமலும் பேசாமலும் இருந் தாள்; உயிர் மறுபடியும் இடைவிட்டுத் திரும்புமோ என்று பார்க்கவேண்டிக் குமுதவல்லி அளவிறந்த கவலையோடும் ஐயத் தோடுங் காத்துக்கொண்டிருந்தாள். ஆனால், இமைப்பொழுது கள் பலசென்றன; பின்னர் அவை நிமிஷங்களாயின; ஆகியும் மீனும்பாள் அசைந்திலள்; பேசிற்றிலள்; அவள் வாயிலிருந்து இப்போது மிகச்சிறிய மூச்சுக்கூட வரவில்லை. சிறியநேரத் திற்கு முன்னே அவள் கன்னங்களினின்றும் மறைந்துபோன செந்நிறமானது இப்போது அவள் இதழ்களினின்றும் பிரிந்து

போயிற்று; "மெய்யாகவே எல்லாம் முடிந்துபோயிற்று." என்று குமுதவல்லி தனக்குள் முணுமுணுத்தாள்.

மீனும்பாளின் தலையைப் பூக்கள் நிறைந்த புல்நிலத்தின் மேற்சோர்ந்து கிடக்கும்படி மெல்லென விட்டுவிட்டு, நாகநாட்டரசி தான் இதுவரையில் தாங்கிக்கொண்டிருந்த அவ்வுடம்பு தன்மேற் படாதபடி விலகிக்கொண்டாள். மூடப்பெற்ற கண்களொடு தனக்கெதிரில் அசைவின்றிக் கிடப்பதும், மேலே கவிந்திருக்கும் மரங்களின் திறப்பின் வழியே ஞாயிற்றின் ஒளிபட்டு ஆடப்பெறுவதுமான அவள் முகத்தை அளவிறந்த துயரத்தோடுங் கண்ணிமையாமல் நோக்கினாள்.

"இவள் இப்படியா இறக்கலானாள்? எவ்வளவு அச்சத்தொடு வாழ்ந்தனளோ அவ்வளவு அச்சத்துடன் இறந்தனள்! வேண்டுமானால் மிக உயர்ந்த நிலையினையுந் தருதற்குரிய அழகிற்சிறந்த இம்மாது ஒருகொள்ளைக்காரனுக்கு மனைவியாகி, அவனது திருட்டுத்தொழிலிலுங் கலந்திருந்தனளே! இவள் திரும்பவும் உயிர்பிழைத்து எழக்கூடுமாயின், முன்னாட்களில் தன்னை மலினப்படுத்தி இழிவு செய்த குற்றங்களுக்குப் பின்னாட்களில் மாற்றுத் தேடியிருப்பளே! அந்தோ! இப்போது இவள் விட்டுச்சென்ற ஒளிநிறைந்த இவ்வினிய நிலவுலகத்திற்கு இவள் திரும்பவும் வரும்படி செய்யக்கூடிய வியப்பு நிகழ்ச்சி ஒன்றும் இல்லையா! ஐயோ! இவள் இங்கே உயிர் அற்ற பிணமாய்க் கிடக்கின்றனளே!" என்று குமுதவல்லி தனக்குட் சொல்லி இரங்கினாள்.

குமுதவல்லி, தன்கண்களை மங்கச் செய்யுங் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்; மற்றைப்பெண்பிள்ளைகள் ஒருங்கு சேர்ந்து நின்ற அவ்விடத்திற்கு அவள் மெதுவாய்ச் சென்றாள். அவள் முகத்திலிருந்து உடனே உண்மை இன்னதென்று புலப்படலாயிற்று. அதனை அவ்வாறு தெரிந்துகொண்டவர்களெல்லாம் மனத்துயரத்தால் தாக்குண்டார்கள்: ஆனற், காப்பிரிமாதும் மலையநாட்டுப் பணிப்பெண்ணும் மிக்க துயரத்தோடும் புலம்பி அழுவாராயினர்.

"ஆண்டவன் திருவுள்ளப்படிதான் நடக்கும்! ஊழ் வினைக்கு மாறாய் உதவக்கூடிய மருந்து எதுமே இல்லை. தீவினைக்கு எதிராய் மருத்துவனுடைய திறமை போராடமாட்டாது. எது நடக்கவேண்டுமோ அது நடந்தேதீரும்: இறைவன் திருவருள் சிறப்பதாக!" என்று திகழ்கலை கூறினாள்.

இந்தப் பெண்பிள்ளையின் பசபசப்புப்பேச்சு முன்னே தீங்கற்றதாகக் குமுதவல்லியால் எண்ணப்படினும், அவள் தன் திறமையற்ற பழக்க மருத்துவத்தை மெழுகிப்பேச எடுத்த பாசாங்காகவே இருந்தமையால், இப்போது அஃது அருவருக்கத்தக்கதாகவே தோன்றியது. ஆகவே, நாகநாட்டரசி அவ்வறிவோளை விட்டு அப்புறந் திரும்பிப்போயினாள்; காப்பிரிமாதையும் மலைநாட்டுப் பணிப்பெண்ணையும் அவள் ஆற்றுதற்கு முயன்றாள். செய்யத்தக்க சவச்சடங்குகள் எங்கே செய்யப்படுமோ அங்கே பிணத்தை எடுத்துச் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யவேண்டுவது இப்போது அவர்கள் கடமை என்பதை அவள் அவர்களுக்கு நினைப்பூட்டினாள்: ஆனாலும், அதைப்பற்றி அவள் ஏதுங் கேட்கவில்லை; ஏனென்றால், நல்லான் இருக்கும் இருப்பிடத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள அவள் நாடவில்லை.

அவ்வாறு குமுதவல்லி பேசிய அவ்விருதோழிப்பெண்களுந் தமக்குரிய கடமையைப்பற்றி நினைக்கும்படி தூண்டப்பட்டார்கள்; உடனே அவர்கள் மனக்கலக்கத்தை ஒருவாறு ஆற்றிக்கொண்டு தங்கள் தலைவி கிடந்த இடத்தண்டை துயரமான பார்வையோடும் மெதுவான நடையோடுஞ் சென்றார்கள். காலந் தாழாமல் உடனே நீலகிரிக்குப் பயணந் துவங்கும்படி தனக்கு மீனும்பாள் அக்கறையொடு சொல்லியதைக் குமுதவல்லி இப்போது நினைவுகூர்ந்தாள்; அவள் உடனே இக் கருத்தைத் தன்தோழிமார்களுக்குத் தெரிவித்தாள். பயணந் தொடங்கவேண்டியதை அவர்களுக்குக் கற்பித்துவிட்டு, ஈர நெஞ்சமுள்ள அம்மாதரார், போதுமானவரையில் நல்லெண்ணத்தொடு மீனும்பாளுக்கு உதவிபுரிந்த திகழ்கலை ஏதுங் கைம்மாறு பெறாமல் நிற்பதையும், அங்ஙனமே நினைவுகூர்ந்தாள். ஆகவே, அவள் ஞானும்பாள்கையில் ஒரு பொன் நாணயத்தைக்

கொடுத்து, அக்கொள்ளைத்தலைவன் மனைவி கிடந்த நீரோட்டத்தின் கரையண்டைக் காப்பிரிப்பெண்ணோடும் மலையநாட்டுப் பணிப்பெண்ணோடும் பின்சென்ற நிகழ்கலைக்கு அதனைக் கொடுக்கும்படி அவளைப்போக்கினாள். ஞானம்பாளும் அவ்வாறே அதனைச் செய்து முடித்து, அவ்வறிவோள் குமுதவல்லிக்கு நெஞ்சாரச் சொல்லிய நன்றி மொழிகளைத் தெரிவிக்கும்படி கடுகத் திரும்பிவந்தாள்.

மரங்களுக்கு நடுவே மறைபட்டிருந்த கூடாரத்திற்கு அருகாமையில் தங்கள் குதிரைகள் கொழும்புல் மேய்ந்துகொண்டிருத்தலை நாகநாட்டரசியும் அவள் தோழிப்பெண்களுங் கண்டார்கள். சுந்தராம்பாளும் ஞானம்பாளுங் காணமற்போன மோதிரந் தம் தலைவியினிடத்தில் திரும்பவும் வந்திருத்தலை வியப்போடுங் களிப்போடும் பார்த்தார்கள்; மீனம்பாள் என்பவள் நல்லானுக்கு மனைவியேயல்லாமல் வேறு பிறர் அல்லர் என்பதை இன்னும் மிகுந்த வியப்போடு இப்போது அவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

"என்றாலும், நானே வலிந்து சென்று அக்கள்வனுக்குப் பழுதுசெய்யமாட்டேனென்று உறுதிமொழி சொல்லி யிருக்கின்றேன்; ஆகையால், என் தோழிமார்களே, உங்கள் தலைவியைக் கட்டுப்படுத்தி யிருக்கும் ஆணையை நீங்களும் பாதுகாக்க வேண்டும்" என்று குமுதவல்லி அழுத்தமாகச் சொன்னாள்.

அங்ஙனஞ் சொல்லிய கட்டளைப்படியே நடப்பதாகச் சுந்தராம்பாளும் ஞானம்பாளும் உறுதிமொழி புகன்றார்கள்; உடனே பயணந் தொடங்கலாயிற்று. மிகவுந் திகிலான அத்துயர நிகழ்ச்சி நிகழ்ந்த இடத்தின் அருகே செல்லவேண்டுவதில்லாதபடி அந்தத் தோப்பிலுள்ள மற்றொரு சிறப்பானவழி பயணம் போவதற்கு உதவியாயிற்று; விரைவில் ஒரு பெரும்பாட்டையில் வந்து சேர்ந்தார்கள்; அப்போது அவ்வழியே போகும்படி நேர்ந்த ஒரு குடியானவன் அதுதான் சீலகிரிநகரத்திற்கு நேரான பாதை யென்றும், அந்நகரம் இருபதுகல்லுக்குமேற் சிறிது தான் தொலைவாய் இருக்குமென்றும் நாகநாட்டரசிக்கு உறுதிப்படச் சொன்னான்.

மீனும்பாளின் துயரமான முடிவை எண்ணி மிகுந்த இரக்கமுந், தனது மோதிரந் திரும்ப வந்ததற்கு மிகுந்த களிப்பும் ஆக ஒன்றோடொன்று மாறுபட்ட பல நினைவுகளால் தன் மெல்லிய நெஞ்சங் கலக்கம் எய்தக் குமுதவல்லி தன்வழியே போயினாள்.

இளமையும் அழகும் வாய்ந்த நீலலோசனனை அச்சுறுத்துங் கொள்ளைத் தலைவன் நல்லானாகக் குமுதவல்லி பிழைபட நினைந்த எண்ணத்தை மாற்றுதற்குரிய சொற்கள் எவையும் மீனும்பாள் வாயிலிருந்து வரவில்லை என்பதை இதனைக் கற்போர் நினைவில் வைக்கவேண்டும்.

பன்னிரண்டாம் அதிகாரம்

நீலகிரி நகரம்

சென்ற அதிகாரத்தின் கடைசியில் விரித்துச் சொல்லப்பட்டபடி தன் தோழிப்பெண்கள் பின்னேவரக் குமுதவல்லி பயணந்தொடங்கியபோது பிற்பகலில் இருபத்தைந்து நாழிகையாயிற்று. மலைநாட்டுத் தலைநகராகிய நீலகிரி இன்னும் இருபது கல் தொலைவிலிருந்தது; ஆயினும், நம்முடைய வழிப்போக்கர்கள் இப்போது செல்லும் பாட்டையானது நல்லதாயிருந்தமையினாலும், மீனும்பாளின் கூடாரம் அடிக்கப்பட்டிருந்த தோப்பின்கண் ஐந்து நாழிகைக்குமேல் அவர்கள் தங்கியிருந்தபோது அவர்கள் குதிரைகள் நன்கு இளைப்பாறியிருந்தமையினாலும், அவர்கள் ஏழரை நாழிகை நேரத்தில் அவ்விருபதுகல் வழியையுங் கடந்து வந்தார்கள்; சொல்லத்தகுந்தது ஏதும் வழியில் நிகழவில்லை. நாம் பெரிதும் விரித்து உரைத்த துயரமான நிகழ்ச்சி நிகழ்ந்த இடத்தினின்று புறப்பட்ட பிறகு குமுதவல்லி தான் முதலிற் புகுந்த ஊரிலேயே தனக்குத் தக்க வழித்துணையாகப்

படைக்கலம் பூண்ட ஆடவரைத் தெரிந்து ஏற்படுத்திக்கொண்டாள்; ஆனாலும், அம்மெய்காப்பாளரின் ஊழியத்தை வேண்டத்தக்கது எதுவும் நேரவில்லை. ஆகவே, நீலகிரி நகரத்திற்கு அண்டையிலுள்ள பேட்டைக்கு நெருங்கியவுடனே குமுதவல்லி தாராளமாகப் பரிசு கொடுத்து அவர்களைப் போகவிட்டாள்: அதன்பின்னர் அவள் சுந்தராம்பாளும் ஞானம்பாளும் மட்டுந் தன்பின்னே வர நகரத்தினுள் நுழைந்தாள்.

அங்ஙனம் அவள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தநேரஞ், சிறந்த வேனிற் காலத்தின் மாலைப் பொழுதா யிருந்தமையால் எழு மணி ஆகியும் இன்னும் நல்ல வெளிச்சம் இருந்தது; நாகநாட்டிலிருந்து வந்த நீண்ட பயணத்திற் பல இடைஞ்சல்களையும் பல அல்லல்களையுந் தான் உழந்த பிறகு, செவ்வனே அங்கு வந்து சேர்ந்ததை நினைக்கவே அவள் நெஞ்சங் களிப்பால் துளும்பிற்று. அவள் முகத்தின்மேல் இப்போது நிறைய முக்காடு இடப்பட்டது; அதனைப் பார்த்து அவள் பாங்கிமாரும் அங்ஙனமே முக்காடிட்டுக் கொண்டனர். ஆகவே, அவளது முகத்தின் பேரழகும், சுந்தராம்பாள் ஞானம்பாள்களின் முக வெட்டும் பிறர் பார்வையிற் படாமல் மறைபட்டன. என்றாலும், அவள் நீலகிரி நகரின் சுற்றெல்லையில் நுழையுங்கால், அங்கே ஏதோ சிலவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தெருக்களின் ஊடே செல்லுகையிற், களங்கமற்ற அவளது உடம்பின் திருந்திய அமைப்பும், அவள் தனது குதிரைமேல் அமர்ந்திருந்த அழகிய வகையும், அதனை அவள் நடாத்திய திறமும் வழிச்செல்வார் கருத்தைக் கவராமற் போகவில்லை. அங்கே கேட்டது மனோகரர் என்னும் பெயருள்ள மலைநாட்டு வணிகர் ஒருவரின் இருப்பிடத்தைப் பற்றியதேயாம்; அவர் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தற்கு வேண்டிய குறிப்புகள் உடனே சொல்லப்பட்டன; ஏனென்றால், மனோகரர் செல்வமும், முதிர்ந்த அறிவும், பெருந்தன்மையும் வாய்ந்தவர்; அதனால் அவர் குடியிருந்த அந்நகரம் முழுதும் அவரை யறியாதவர் இல்லை.

குமுதவல்லி நீலகிரியின் நடு மையம் வரையிற் சென்றாள்; பெரியனவாய்ப் பார்வைக்கு அழகான மாளிகைகள் இருபக்கத்

தும் வாய்ந்த மிக அகன்ற தெருக்கள் ஒன்றின் இடையே கடைசியாக வந்து நின்றாள். மனோகரர் என்னும் பணக்கார வணிகர்க்கு உரிய வீடு இதுதான் என்று அவளுக்குத் திட்டமாய்த் தெரியாது; ஆகவே, எவரிடத்து அதனைக் கேட்டறியலாம் என்று அவள் சுற்றி நோக்குகையில், அவளது வலதுகைப்பக்கமாய் மிக அருகில் இருந்த ஒரு பெரிய வாயிலினுள்ளிருந்து ஓர் இளைஞன் திடீரென வந்தான்; உடனே சந்திரன் என்னும் பெயர் குமுதவல்லியின் வாயிலிருந்து வந்தது.

உண்மையிலே, வந்தவன் சந்திரன்தான். இக்கதையின் முதலதிகாரத்தில் நாம் தெரிவித்த, பதினெட்டு ஆண்டுள்ள, தனி அழகு வாய்ந்த அந்த இளைஞனே அவன். அப்போது அவன் வழிநடைக்கு ஏற்ற உடுப்பு அணிந்திருக்கக் கண்டோம். ஆனால், இப்போது அவன் அணிந்திருந்த உடையோ முன்னினும் மிக நொய்தாயும் வளமுள்ளதாயும் இருந்தது. வானத்தின் நீலநிற முள்ள துணியினாற் செய்யப்பட்டுக் கழுத்துவரையிற் கொக்கி மாட்டப்பட்டு அவன் உடம்போடு இறுகப் பொருந்தியிருந்த உட்சட்டையானது அவனது உருவின் மெல்லிய அமைப்பை இனிது புலப்படுத்தியது. இப்போது அவன் தலையின்மேல் ஒன்றுமில்லை; செழுமை பொருந்திய அவன் தலைமயிர்களானவை அகன்ற நெற்றியின்மேற் கொத்துக் கொத்தாய்ச் செறிந்து சுருண்டு அவன் கன்னப்பொறிகளைச் சிறிதே மூடிக்கொண்டிருந்தன. தன் இடுப்பைச் சுற்றிப் பூவேலை செய்யப்பட்ட அரைக்கச்சை அணிந்திருந்தான்; மிகவும் அழகிய உறையில் இடப்பட்டிருந்த சிறிய கொடுவாள் ஒன்று இதிலே மாட்டப்பட்டிருந்தது. இவனைப்பற்றி முதலில் விளக்கிச் சொல்லியபோது, நாம் எடுத்துக் காட்டிய இவன் கண்களில் உள்ள ஒரு வகையான சுருசுருப்பானது, குமுதவல்லியைப் பார்த்த அளவிலே, உயிர்ப்புடன் திடுக்கிட்டுக் கிளர்ந்த பளபளப்புடன் கொழுந்துவிட்டெரிந்து, மற்றைப்படி ஆண்மையழகில் முற்றுப்பெற்று, ஆவலைத் தரத்தக்கதாய் உள்ள அவனது முகத்தின் மேல் மின்னல் ஒளியின் துளக்கம்போல் இடைவிட்டு ஒளி வீசுவதெனக் காணப்பட்டது. இல்லாவிட்டால் அவனுடைய

தோற்றமானது பார்ப்பவர்க்குத் தன்னிடத்தே நிரம்பவும் பற்றுண்டாகும்படி செய்திருக்கும்.

குமுதவல்லி முக்காடு இட்டிருந்தும் அவன் அவளைத் தெரிந்துகொண்டான். அவளது வடிவத்தின் மிகவும் நேர்த்தியான திருந்திய அமைப்பினாலும், அவளது முக்காட்டின் மடிப்புகளின் கீழ் எட்டிப்பார்ப்பதுபோற் றோன்றிய அவளது கருங் கூந்தலின் ஒரு சுருண்ட கற்றையினாலும் அவன் அவளைக் கண்டுகொண்டான். அவன் கண்கள் அங்ஙனஞ் சடுதியில் ஒரு தீய ஒளியை வீசியது என்னை? அதனால் அவன் ஏதோ ஒரு மனக்கலக்கத்தாற் சடுதியிற் பற்றப்பட்டானென்பதும், அதனை அவன் தன்னுள் அடக்கமாட்டாதவனாயினானென்பதும் புலப்படுகின்றன வல்லவோ? பலகிளையாக்கிப் பின்னர் அவளைச் சுற்றி வலைபோற் பின்னப்பட்ட இரண்டகமான சூழ்ச்சிகளுக்குப் பிறகு, நாகநாட்டரசி தான் சேரவேண்டிய இடத்தில் வந்து சேர்வளென அவன் எதிர்பார்க்கவில்லையோ? அல்லது எவரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்து, குதிரைக் குளம்படிகளின் ஓசை தெருவில் நின்றதைக் கேட்டுக் குமுதவல்லிக்கு மாறாக வேறு ஒருவரை எதிர்ப்படும் நம்பிக்கையால் ஓடிவந்தனனோ? இவையெல்லாம் நமது கதையிற் போகப்போக விளங்கும். குமுதவல்லி வந்ததனால் இவனிடத்திற் சடுதியில் உண்டான மனக்கலக்கத்தை அவள் பாராதபடி மறைத்துவிட அவ்வளவு எளிதிலே தன்னிடத்தில் வேறொருவகையான பார்வையை வருவித்துக் கொள்ளவாவது அன்றித் தன்னை விரைவில் அமைதிப்படுத்திக் கொள்ளவாவது இளைஞனான சந்திரன் மாட்டாதவனாயினன் என்றுகூறுதல் மட்டும் இவ்விடத்திற்குப்போதும். சந்திரனுடைய உண்மையைப்பற்றியும் நம்பகத்தைப்பற்றியுங் குமுதவல்லியின் மனத்தில் ஏற்கெனவே எழுந்த ஐயமானது முற்றும் உறுதிப்படாவிட்டாலும் ஒருநொடியில் வலுப்படுவதாயிற்று; ஆகவே, மீனாம்பாளின் வாயிலிருந்து தத்தளித்துவந்து தன் செவியிற்பட்டது சந்திரனுடைய பெயரே என்றும், ஆகையால் தான் விழிப்பாக இருக்கவேண்டியது சந்திரனிடத்திலேயே என்றுங் குமுதவல்லி பெரும்பாலும் உறுதிகொண்டாள்.

குமுதவல்லி தான் அகப்பட்டு மீண்ட இடர்களால் தான் மிகுந்த விழிப்போடும் முன்னறிவோடும் இருக்கவேண்டுங் கட்டாயத்தைக் கற்றுக்கொண்டாள்; தனது ஐயுறவிற்குச் சந்திரன் இடமாயிருக்கிறான் என்பதைக் காட்டாமலிருக்க அவள் தீர்மானித்துக்கொண்டாள்; ஏனெனில், அது தெரிந்தால் அவன் மிகவும் விழித்தவனாகித் தனது சூழ்ச்சி எதுவாயிருப்பினும் அதனைக் கண்டுபிடித்தற்கு இயலாத நிரம்பவும் அருமையான மறைபொருளாய் அதனை அவன் மூடிவைப்பனென அஞ்சினாள். அதுவல்லாமலுங், குமுதவல்லியின் இரக்க நெஞ்சமானது தன்னையொத்த ஓருயிரினிடத்து ஆன்ற காரணங்கள் இன்றித் தப்பெண்ணங் கொள்ளப்புகுதலைத் தடுத்தது; அதுவேயுமன்றிச், சந்திரனுக்குத் தலைவரான மனோகரர் தனக்கு உற்றநண்பராகவுங் கூடுமென நினைக்கலானாள். ஆகவே, தான் நீலகிரிநகரில் இருக்கும்வரையில் அந்தப் பணக்கார வணிகரின் வீட்டின்கண் அச்சமின்றிச் செவ்வையா யிருக்கலாமென்று கருதினாள்; இன்னும் வேண்டுமானால், சந்திரன் ஊழியம்புரியுந் தலைவரிடத்திற் சந்திரனின் உண்மையைப்பற்றி அவள் தான் ஐயுறவுகொள்ளுதலையும் எளிதிலே சொல்லக்கூடுமென்று எண்ணினாள்.

இத்தகைய எண்ணங்களினாலே குமுதவல்லி உந்தப்பட்டு, உயர்ந்த இடத்தில் தொழும்பனாயிருக்கும் ஓர் இளைஞனிடத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ள ஒருபெருமாட்டி எவ்வளவுக்கு முகங்கொடுத்து இன்சொற் பேசலாமோ அவ்வளவுக்குச் சந்திரனிடத்திற் பேச இசைவுகொண்டாள்; பிறகு அவன் தன் நிலைக்கு வந்து அமைதிபெற்றவுடனே மிகவுந் தாழ்மையொடு தன்னைவணங்கவே, அவள் மகிழ்ந்தகுரலிற், 'சந்திரா, கடைசியாக யான் செவ்வனே இங்கு வந்துசேர்ந்தேன் பார்த்தனையா?'' என்று மொழிந்தாள்.

இதற்குள் தனதுமுகத்தை முழுதும் அமைதிப்படுத்திக் கொண்டவனான சந்திரன் குமுதவல்லியைநோக்கிப், "பெருமாட்டி, தாங்கள் இப்படிச் சொல்வதற்குக் குறிப்பான காரணம் ஏதும் இல்லையென்றே நம்புகின்றேன்.'' என்று கூறிக்கொண்

டே, பெரியவாயிலின் கீழ்த், தாம் திருப்பி நுழைவித்த குதிரையினின்றும் அவ்வம்மையார் இறங்குதற்கு உதவிசெய்தான்.

“சில சிறிய இடர்களை வழியில் அடைந்தேன்; என்றாலுங் கடந்துபோன அவைகளை இப்போது நினைப்பதிற் பயனில்லை.” என்று குமுதவல்லி மொழிந்தாள்.

என்று இங்ஙனம் விடைபகருகையிலேயே குமுதவல்லி தனது முக்காட்டை அப்புறம் எடுத்துவிட்டுச் சந்திரன்முகத்தைக் கள்ளமாய் ஒருபார்வை பார்த்தாள்; ஆனாலும், அவன் தனதுமனத்திலிருக்கும் ஐயத்தை உறுதிப்படுத்தத்தக்கது ஏதும் அவனது பார்வையில் தோன்றவில்லை. அப்பெரிய வாயிலின் உள்ளே இருபுறத்தும் இருந்த வீட்டுவாயில்களின் உள்ளிருந்து ஆணும்பெண்ணுமாகிய ஊழியக்காரர் பலர் வெளியேவந்தனர்; சந்திரனோ அவ்விளையநங்கையும் அவள்தன் தோழிமாரும் உள்ளே புகும்படி தான் பணிவுடன் அப்பால் விலகிநின்றான். அவ்வீட்டின் ஊழியக்காரர்க்குத் தலைவியென்று காணப்பட்ட ஒரு முதுமைமிக்க பெண்பிள்ளை, குமுதவல்லியை வரவேற்க முற்பட்டு வந்தாள்; வந்து, “பெருமாட்டி, என் தலைவர் இல்லத்திற்கு உங்கள்வரவு நன்றாகுக!” என்று மொழிந்தாள்.

நாகநாட்டரசி தகுதியான இன்சொற்களால் மறுமொழி கூறினள். பிறகு அகன்ற படிக்கட்டுகளின்வழியே ஏறி மிகவும் அழகாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அறைகளின் வரிசைக்கு அவ்வம்மையால் அழைத்துக் கொண்டுபோய் விடப்பட்டாள்.

“இந்த அறைகள் தாங்கள் இருப்பதற்காகவே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. செல்வத்திற் சிறந்தவரும் விருந்தோம்பும் இயல்பினருமான என் தலைவர் மனோகரர் ஒரு முடையான காரியத்தின்பொருட்டு இரண்டொருநாளைக்கு இங்கே இருக்கக்கூடாதவரானார்: ஆயினும், அவர் வெளியே போகும்போது, தாங்கள் இதனைத் தங்கள் வீடாகவே எண்ணி வேண்டியவெல்லாஞ் செய்துகொள்ளும்படி கற்பித்துப்போனார்.” என்று அம்முதியோள் கூறினாள்.

குமுதவல்லி விரைவில்மறைந்த ஏமாற்றப் பார்வையோடு, “அருமையுள்ள மனோகரர் இங்கில்லாமைகேட்டு வருந்துகின்

றேன்; என்றாலும், அவர் என்பொருட்டு இவ்வளவு அன்புகாட்டினமைக்கும், அவர் சொல்லியபடிநடத்தும் உனது அன்பான தன்மைக்கும் நன்றிபாராட்டுகின்றேன்.'' என்று கூறினாள்.

''பெருமாட்டி, தங்கள் விருப்பஞ் சிறிதாயிருந்தாலும், அதனை முன்னரே தெரிந்துகொள்வதுந் தங்கள் கட்டளைகளை நிறைவேற்றி வைப்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவனவாகும். இது, தாங்கள் தங்கள் நாட்டின்கண் மேன்மையுடன் வாழ்பவர்களென்று மாட்சிமைபொருந்திய எந்தலைவர் சொன்னதனால் மட்டுமன்று; தங்கள் இளமையும் அழகுந் தங்களை நெருங்கப்பெற்றவர் எல்லார்க்குந் தங்களிடத்து இயற்கையாகவே பற்றுண்டாகும்படி செய்வதனாலேயாம். தங்கள் பாங்கிமாரே தங்களுடன் இருக்கவேண்டுமோ? அன்றி இவ்வீட்டிலுள்ளவர்களும் அவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டுமோ? அதனை அருளிச் செய்யுங்கள்.'' என்று அம் முதியவள் கேட்டாள்.

''என்னுடைய தோழிப்பெண்களே எப்போதும் என்பக்கத்திலிருக்கவேண்டும்; உன் தலைவர் வரும்வரையில் இயன்ற மட்டும் யாங்கள் தனித்திருக்கவேண்டும்; இதுதான் என்மனத்திற்கு இசைந்தது.'' என்று குமுதவல்லி அதற்கு எதிர்மொழி கூறினாள்.

அதற்கு அம்முதியோள், ''அப்படியே யாகட்டும், பெருமாட்டி. இந்தமாளிகையின் முதன்மையானவாயிலுக்குச் செல்லும் படிக்கட்டைத் தாங்கள் முன்னமே தெரிந்திருக்கிறீர்கள்; ஆகவே, தாங்கள் நகரத்தினுள்ளே நடந்துசெல்ல எண்ணப்பட்டால், வெளியே போவதற்குரிய வழியை நீங்கள் அறிவீர்கள். இந்தவரிசையின் கடைசியிலுள்ள அதோ அந்த அறையிலே, கீழுள்ள தோட்டத்திற்குச் செல்லும் மறைவானபடிக்கட்டுக்கு நுழைவாயில் இருக்கிறது; அந்தத்தோட்டத்திலே, பெருமாட்டி, பிறரால் உற்றுப்பார்க்கப்படும் அச்சம் இன்றி எந்தநேரத்திலுந் தாங்கள் உலாவலாம். அந்தத் தோட்டத்திலிருந்துங்கூட நகரத்திற்குப்போக ஒரு வாயிலிருக்கிறது; அந்த மறைவானவாசற்கதவின் திறவுகோல் யான் சற்றுமுன் குறிப்பிட்ட அறையி

னுள் இருக்கின்றது. சில நாள் தாங்கள் தங்கவேண்டியிருப்ப தால், தாங்கள் இருக்கும் வரையிற் கூடியமட்டும் அது தங்க ளுக்கு இசைவாகவும் இனிதாகவுஞ் செய்யப்படவேண்டியது மான இவ்விடத்திலுள்ள ஏற்பாடுகளையும் நிலைமைகளையுந் தாங் கள் உடனே தெரிந்துகொள்ளும் பொருட்டாகவே இவைகளை யெல்லாம் நான் சொல்லலானேன்.'' என்று இயம்பினாள்.

அவள்காட்டிய அன்பின் பலவகைகளுக்காகவுங் குமுத வல்லி அம் முதியோளுக்கு நன்றியறிதல் கூறினாள்; அதன் பின் அம்முதியோள் அவர்களை விட்டுப்போயினாள்.

குமுதவல்லி முதன்முதல் தன் அறைகளைப் போய்த தேர்ந்து பார்த்தாள். அவ்வரிசையில் நான்கறைகள் இருந்தன; முதலிலுள்ளது சொல்லாடுமிடம், அதனையடுத்த இரண்டும் படுக்கையறைகள், கடைசியிலுள்ளது குளியலுக்கும் உடுத்திக் கொள்ளுதற்குந் தகுதியாக்கப் பட்டதாகும். அங்கிருந்த தட்டு முட்டுகளெல்லாம் விலையுயர்ந்தனவாயும் நேர்த்தியாயும் இருந் தன: பொதுவான தளவாடங்களுங்கூடச் செலவேறப் பெற் றனவாயும் விலைமிகப்பெற்றனவாயும் இருந்தன. இப்போது தனது வருகையால் மலைநாட்டு வணிகரின் மாளிகைக்குப் பெருமையினை உண்டுபண்ணும் புகழ்பெற்ற அழகிய நங்கை யின் வசதிக்கு வேண்டுவதொன்றுங் குறைவுபடவில்லை. குமுத வல்லி உடனே நீராடுவாளானாள்; பலநாள் நெடுவழி வந்ததற்குப் பிறகு—முதலாக இன்றைக்குப் புழுதி மிக்க பாட்டை நெடுக வந்த களைப்பான பயணத்தின் பின்னர் அம்முழுக்கு மிகவும் இளைப்பாற்றுவதா யிருந்தது. அவள் தன்றோழிமாரோடும் இருக்கும் அறைக்குத் திரும்பி வந்ததும், நேர்த்தியான உணவு கொண்டுவந்து மேசைமேற் பரப்பி வைக்கப்பட்டிருந்தது. இன் னும் ஏதேனும் வேண்டியிருந்தால் அதனைக் கொண்டுவரு வோரை அழைக்குங் கருவியாக ஒரு சிறிய வெள்ளி மணி யொன்றுங் கைக்கருகே அம்மேசைமேல் இருந்தது. சுவைபல வாய்ந்த திறமான மெல்லிய உணவுப் பொருள்கள் மிக ஆழ்ந்த அறிவோடு அடுத்தடுத்து வைக்கப்பட்டிருந் தமையாலும், வாயூறச் செய்யும் பழவகைகளோடும் இளைப்பாற்றுவிக்கும்

பருகுநீர்களோடும் உணவிற்குரிய ஒவ்வொன்றும் மிகுந்த கருத்தோடும் அமைக்கப்பட்டிருந்தமையாலுஞ் சுவையை மிகக் கருதிப்பார்ப்பவர்க்குங் குறை சொல்லத்தக்கது ஏதுமேயில்லை. மேசையண்டை தன்னொடு கூட இருக்கும்படி குமுதவல்லி தன்றோழிமார்க்குக் கற்பித்தாள்; அவர்கள் தமக்கெதிரிலிருந்த மெல்லிய தின்பண்டங்களை எடுத்து அருந்தினார்கள். மனோகரர் ஊரில் இல்லாத செய்திமட்டுங் கலவாவிட்டால், தான் சேரவேண்டிய இடத்திற்குச் செவ்வனே வந்து சேர்ந்ததைப்பற்றியுந், தனது மோதிரந் தன்னிடந் திரும்ப வந்து பொருந்தியதைப் பற்றியுங் குமுதவல்லி முழுதும் மன அமைதி பெற்றிருப்பள்; ஏனென்றால், தனக்குரிய நாகநாட்டிலிருந்து மலைநாட்டின் தலைநகராகிய நீலகிரிக்கு, அயர்ச்சியினையும் இடரினையுந் தரும் நீண்ட வழிச்செலவினைத் தான் செய்யும்படி தூண்டப்பட்டது எதுக்காகவென்று தெரிந்து கொள்ள அவள் இயல்பாகவே ஆவலுற்றுக் கவன்றாள். மேலுஞ், சிலநாழிகை நேரங்களுக்கு முன்னே நேர்ந்த அல்லல்களை நினைக்கவே அவள் துயரம் அடையாதிருக்கக்கூடவில்லை; இன்னும், அத்துணை இளமையும் அழகும் அறிவும் வாய்ந்த நீலலோசனன், அவள் தான் நினைத்துக் கொண்டபடி அவ்வளவு பெருங்குற்றம் உடையவனானதைத் துயரத்தோடும் எண்ணி வருந்தினாள்.

சாப்பாடு முடிந்ததுங், குமுதவல்லியின் வசதிக்காகச் செய்தமைக்கப்பட்ட பலவகை ஏற்பாடுகளும் அவளுக்கு இசைவாக இருந்தனவாவென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு அவ்வீட்டுக்கார முதியோள் அவர்கள்முன்னே வந்தாள்; அவர்கள் அவற்றின் இசைவினை மனமார மகிழ்ந்துரைப்பவே அவ்வம்மை போய்விட்டாள். அவ்வறைவரிசைகளின் வெளிக்கதவுகள் உடனே தாழிடப்பட்டன; குமுதவல்லியும் அவள் பாங்கிமாருந் துயில்கொள்ளப் போயினர்.

தடையின்றி அவர்கள் திளைத்த துயிலானது இனிதாகி அயர்வு தீர்ப்பதாயிற்று; விடியற்காலத்தில் அவர்கள் உறக்கம் நீங்கி எழுந்தபோது, இடர்மிகுந்த அவ்வழிப்பயணத்தின் பின்னர்ப் பாதுகாவல் அமைந்த புகலிடந் தமக்கு வாய்த்ததைப்

பற்றித் தமக்குள் மகிழ்ந்து பேசிக் கொண்டார்கள். வெளிக் கதவுகள் திறக்கப்பட்டவுடனே வீற்றிருக்கும் அறையுள் வெற் காரப் பெண்கள் ஒருவரிசையாக வந்து மேசைமேல் நேர்த்தி யான சிற்றுணுக்கஃளப் பரப்பினர்; சாப்பாடு முடிந்தவுடனே குமுதவல்லி நல்ல காற்று வாங்குவதற்காகத் தோட்டத்தினுள் இறங்கக் கருதினள். அம்முதியோள் சொல்லியபடியே, மறை வான ஒரு படிக்கட்டுக் குளியலறையிலிருந்து கீழே யுள்ள அகன்ற பூந்தோட்டத்திற்குச்சென்றது; அப்பூந்தோட்டத்தின் ஒருபக்க ஓரத்திற் சரக்கறைகளும் மாளிகையுஞ் சேர்ந்த நீண்ட ஒரு கட்டிடவரிசையும், மற்ற மூன்றுபக்க ஓரங்களிலும் உயர்ந்த சுவர்களும் இருந்தன. மலர்ப்பாத்திகளும், பசுங்கொடிபடர்ந்த நிழலுள்ள வாயில்களுங், கொடிப்பந்தர்களும், நீரூற்றுகளும் உள்ளனவாக அத்தோட்டம் அழகாகப் பண்படுத்தப்பட்டிருந் தது; கடைக்கோடியிலுள்ள சுவரிலே அவ்வம்மையாற் குறிப் பிக்கப்பட்டதும் நகரத்தின் ஒருதெருவுக்கு வழியாயுள்ளதும் ஆன மறைந்த நுழைவாயிலொன்று இருந்தது. முதலில் தாம் வந்துசேர்ந்தபோது, தெருப்பக்கத்தே யுள்ள பகுதியைமட்டும் பார்த்து, அவை சிற்றளவினபோலுமென்று உறுதிப்படாமல் மதித்திருந்த குமுதவல்லியும் அவள் தோழிமார்களும் இப்போது மனேகரின் கட்டிடங்களுடைய பேரளவினைக் கண்டு பெரி தும் வியப்புற்றார்கள். இப்போது அவர்கள் அக்கட்டிடங்களின் தன்மையையுஞ் சாளரங்களின் அடுக்குகளையுங் கண்டு, அப் பெரியமாளிகையின் பெரும்பகுதி, செல்வத்திற்சிறந்த மனே கரர் தம்முடைய சரக்குகளை வைத்திருக்கும் பண்ட அறைகளை உடையதாகுமென்று சொல்லக்கூடியதாயிருந்தது.

சிலநாழிகை நேரங் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் அத்தோட்டத்தில் தங்கி யிருந்தனர்; அழையாமல் வருவார் எவரும் அங்கில்லாமையால், நாகநாட்டின்கட் குமுதவல்லியின் மாளிகையை அடுத்துள்ள இன்ப இளங்காக்களில் இருப்பது போல் அவர்கள் ஒருசிறிதும் அச்சமுந் தடையு மின்றி யிருக்கப் பெற்றதனை உணர்ந்தார்கள். திரும்பவும் அவர்கள் வீட்டினுட் புகுந்தபோது, மறுபடியும் மேசைமேல் உணவு கொண்டுவந்து

வைக்கப்பட்டிருந்தது; அம்முதியோள் தனக்கெதிரே வரக் கண்டதுங் குமுதவல்லி மனோகரர் திரும்பி வந்தனரா என்று வினவினாள். அவ்வம்மை அவர் வரவில்லையென்று விடை பகர்ந்து, ஆயினும், அவர் நாளைக்கு நீலகிரி வருவதாக உறுதி மொழி புகன்று செய்தி விடுத்திருக்கிறார் என்றுரைத்தாள். தான் நாகநாட்டிலிருந்து அழைக்கப்பட்டதன் காரணத்தைப் பற்றிய ஐயுறவும் ஆவலும் விரைவில் நிறைவேறும் என்றெண்ணிக் குமுதவல்லி இச்செய்தியால் மனஅமைதி பெற்றாள்.

மாலையில் ஐந்துநாழிகை ஆயிருக்கும்; குமுதவல்லி மறு படியுந் தன் றோழிமாருடன் தோட்டத்தில் உலவியிருந்து வீட்டுக்குள் திரும்பி வந்தாள். அந்நேரத்தில் வீற்றிருக்கும் அறையில் அம்முதியோள்வந்து,

"பெருமாட்டி, தாங்கள் மனம் உவந்தால் ஒரு பெண்பிள்ளை தங்களைக் காண விரும்புகிறாள்." என்று கூறினாள்.

"எந்தப்பெண்பிள்ளை? நீலகிரியில் இந்த இல்லத்திற்குப் புறத்தே எனக்குப் பழக்கமுள்ளவர்கள் எவரும் இல்லையே." என்று நாகநாட்டரசி கேட்டனள்.

"பெருமாட்டி, திகழ்கலை என்னும் பெயரை மொழிந்தால் தன்னைப் பார்ப்பதற்கு நீங்கள் ஐயுறமாட்டீர்கள் என்று அவள் சொல்லுகிறாள்." என்று அம்முதியோள் விடைகூறினாள்.

"ஆ, திகழ்கலையா!" என்று வியந்துகூறிக், குமுதவல்லி ஒருநொடியில் முன்னாள் நடந்த இடரிற் றொடர்புற்ற அறிவோளை நினைவுகூர்ந்து, "ஆம், நான் அவளைப் பார்க்கிறேன்; அவளை வரவிடு." என மொழிந்தாள்.

அம்முதியவள் அங்ஙனமேபோய்ச் சிறிதுநேரத்தில் திகழ்கலையைக் குமுதவல்லியின் எதிரே அழைத்துவந்தாள். அவ்வறிவோள் முந்தியநாளில் உடுத்தி யிருந்தபடியே இருந்தனள்: ஆனால் இந்நேரத்தில் அவள் கையில் மருந்துகளும் உறைமருந்துகளும் அடங்கிய பெட்டியைக் கொண்டுவரவில்லை. அவள் தான் அணிந்திருந்த முக்காட்டைப் பின்னே வாங்கியதும் அவள் முகத்தில் ஒரு துயரக்குறிப்புத் தோன்றியது; அவள் மீளும் பாலைப்பற்றிப் பேசவே வந்தனளென்று குமுதவல்லி இயற்

கையாக நினைந்தாள். திகழ்கலை மிருந்த பணிவோடும் நம் தலைவியை வாழ்த்தி, "அழகிய நங்கையே தாங்கள் இத்தனை சுருக்கில் என்னைக் காண நினைத்திருக்கமாட்டீர்கள்." என்று புகன்றாள்.

"என்னகாரியமாய் இங்கேவந்தாய்? என்னை இந்த இடத்திற் காண்பதென்பதை நீ எங்ஙனந் தெரிந்துகொண்டாய்?" என்று நாகநாட்டரசி வினவினாள்.

இரண்டாவதுகேட்ட கேள்வியை மெல்ல நழுவவிட்டுப், "பெருமாட்டி, புனிதமான புண்ணிய காரியத்தின்பொருட்டு யான் வந்திருக்கிறேன். யான் புத்தமதத்தைச் சேர்ந்தவளாயினும், மலையநாட்டார்க்குரிய கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லையாயினும், மலையநாட்டார்க்குரிய கொள்கைகளிற் பெரும்பாலன பேதைமையின் பான்மை யென எனக்குத் தென்பட்டனவாயினும் எல்லாச் சமயக் கொள்கைகளிலும் எனக்குப் போதுமான நன்குமதிப்பு இருக்கின்றது; அதனாலேயே இந்தத்தடவை தங்களுக்குத் தூதாக வரும்படி தூண்டப்பட்டேன்." என்று திகழ்கலை விடைகூறினாள்.

குமுதவல்லி மறைபொருளான இச்சொற்களைக் கேட்டு வியப்பெய்தினவளாய், "நீ சொல்லுவதன் கருத்து யாது திகழ்கலை? எவரிடத்திருந்து தூதாக வருகின்றனை?" என்று கேட்டாள்.

"இறந்தவரிடத்திருந்து தூதாய் வருகின்றேன்!" என்று வெருக்கொள்ளத்தக்க விடைபகர்ந்தாள்.

குமுதவல்லியின்முகம் வெளிறினது. ஏனெனில், அம் மறுமொழியில் அச்சமுந் திகிலுங் கொள்ளத் தக்கது ஏதோ இருந்தது; ஆனாலும், அதற்கு உருவகப்பொருள் வேறிருக்க வேண்டுமென விரைவிற் கருதினவளாய்த், "திகழ்கலை, என்னிடத்தில் ஒட்டிலாவது உருவகத்திலாவது பேசாதிருக்கும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; இயன்றமட்டும் நீ சொல்லவேண்டியதைத் தெளிவாக விளக்கிச்சொல்." என்று கூறினாள்.

"யான் இறந்தவர்களிடமிருந்து நேரே வராவிட்டாலும்" என்று திரும்பவுந்தொடர்ந்து, "இறந்தவர்கள் பொருட்டாக

யான் வந்திருக்கிறேன். அதனால் யான் இறந்தவர்களிடமிருந்து உண்மையாக வந்த தூதியே. உயிரோடிருப்பவர் தமது பேதைமையால் இறந்தவர்கள்மேல் ஏற்றிச்சொல்லும் ஆவிக்குக் கீழ்ப் படிந்து யான் தூதாக வந்திருக்கிறேன்!'' என்று உரைத்துத், தன் கண்களைக் குமுதவல்லிமேல் வைத்து ஊடுருவப்பார்த்துக் கூறுவாள்: ''பெருமாட்டி, கள்வர் தலைவனான நல்லானுக்கு நல்வினையற்ற மனைவியாய் இறந்துபோன மீனும்பாள் தங்களுக்குப் பகைவரான சிலரொடு கட்டுமானமாய்ச்சேர்ந்து சூழ்ச்சி செய்தாள்; அவள் இறக்குந்தறுவாயில் அவளது தலையைத் தங்கள்மார்பில் அணைத்துக்கொள்ளும்படி புத்தர் தங்களை அவள் செல்லும்வழியிற் செலுத்தின அதே நேரத்தில், அவள் உங்களுக்கு ஒரு பொல்லாங்கு இழைக்கக் கருத்துற்றிருந்தாள். அவளுடைய ஏவற்காரிகள் வாயிலிருந்து யான் பலவற்றைக் கேட்டுணர்ந்தேன்.''

''நல்வினையற்ற மீனும்பாள் என்னிடத்தில் தீய எண்ணங்கள் வைத்திருந்தனளாயின், யான் அவளை மன்னித்து விட்டேனே! ஓ! என் நெஞ்சார யான் அவளை மன்னித்துவிட்டேனே!'' என்று குமுதவல்லி இடைப்புகுந்து கூறினாள்.

''பெருமாட்டி, நீங்கள் அவளொடு தனிமையாக விடப்பட்டபோது, யானும் அவள் தோழிமார் இருவருஞ் சிறிது சேய்மையிற் போயிருந்தபோது, நீங்கள் அவள்மேற் குனிந்திருந்த வகையினாலும் உங்கள் பார்வையினாலும் உங்கள் பயில்களினாலும் உங்கள் முகத்தை அவள் ஏறிட்டு நோக்கியதனாலுந் தாங்கள் அவளை மன்னித்ததை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தீர்களென்று யான் தீர்மானஞ் செய்யக்கூடியதா யிருந்தது. இந்தக் காரணம் பற்றியே யான் இப்போது இங்கிருக்கின்றேன். இந்தக் காரணம் பற்றியே தங்களுக்குரிய இனத்தவர்களும் அவர்களுக்கு இனமானவர்களும் எண்ணுகிறபடி அந்த மன்னிப்பைப் பின்னும் உறுதிப்படுத்தும்படி தங்களை ஆணையிட்டுக் கேட்டுக்கொள்ளப் போகிறேன். பெருமாட்டி, இறந்து போகும் ஒருவர்க்குச் சொல்லிய மன்னிப்பு இறந்துபோன அவரது பிணத்தின் பக்கத்தேயிருந்து மேலும் மிகுந்த தூய

தன்மையுடனும் அடக்க ஒடுக்கத்துடனுந் திரும்பவும் வற்புறுத்தப் பட்டாலல்லாமல் அது பயன்படுவதில்லை யென்னும் ஒரு நம்பிக்கை உங்கள் நாட்டில், உங்கள் சொந்த நாகநாட்டில் இருக்கின்றதன்றோ?'' என்று திகழ்கலை மறுமொழி கூறினாள்.

திகழ்கலை இப்பேச்சின் கடைசிப் பாகத்தைச் சொல்லிய போது குமுதவல்லியின் முகம் வணக்கமும் அடக்கவொடுக்கக் குறிப்பும் உடையதாயிற்று; இச்சொற்களை அங்ஙனமே ஆவலுடன் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தராம்பாளும் ஞானம்பாளுந் தம்முடைய தலைவி இப்போது தன் முகத்திற் காட்டிய குறிப்பைப் போலவே தமக்குள்ளுங் காட்டிக்கொண்டார்கள்.

தன்னுடைய சமயக்கல்விகளின் இடையே இத்தகைய ஓர் ஆழ்ந்த நம்பிக்கை யுடையவளான குமுதவல்லி இப்போது தானும் அதன்வயப்பட்டவளாகி மெல்லிய குரலில், ''மேற்கணவாய் மலைப்பக்கத்தி லுள்ளவர் அத்தனைபெயர்க்கும் மெய்யாகவே அந்நம்பிக்கை உண்டுதான்; ஆகவே, திகழ்கலை, நீ இப்போது எண்ணிக்கொண் டிருப்ப தின்னதென ஒருசிறிதுணர்கின்றேன்.'' என்று மொழிந்தாள்.

அதனைத்தொடர்ந்து திகழ்கலைகூறுவாள், ''நல்வினையற்ற மீனும்பாள் விட்டுப்போன இரண்டு ஏவற்காரிகளான மலையநாட்டுப் பணிப்பெண்ணுங் காப்பிரி மாதுந் தம் அன்புள்ள தலைவியின் பிணத்தை நீலகிரிக்கு எடுத்துவந்திருக்கிறார்கள்; இறந்து போகுந் தறுவாயில் உயிரோடிருந்த பெண்மகளின் அருகிலிருந்து நீங்கள் சொல்லிய மன்னிப்பு உறுதிமொழியை மறுபடியும் பிணத்தின் பக்கத்தில் வந்து சொல்லும்படி தங்களிடம் போய்த் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுமாறு என்னை வேண்டினவள் அந்த மலையநாட்டுப் பணிப்பெண்ணேதான். எதன்பொருட்டுத் தங்கள் முன்னிலையில் யான் வந்திருக்கிறேனோ அந்தப் புதுமையான நம்பிக்கை எவ்வளவு நீண்டு செல்லக்கூடுமென்பதைப், பெருமாட்டி, என்னைவிடத் தாங்கள் நன்றாய் அறிவீர்கள். இறந்துபோன மீனும்பாள் தங்களுக்கு எவ்வளவு தீங்கிழைத்தாலும், அல்லது இழைக்க நினைந்திருந்தாலும், அவற்றிற்காகத் தாங்கள் மொழிந்த மன்னிப்பு மொழிகள்,

உயிரற்ற அவள் பிணத்தருகேயிருந்து வணக்கவொடுக்கத்துடன் திரும்பவுஞ் சொல்லப்பட்டால் அல்லாமல் அவை அவளுயிர்க்கு அமைதியைத் தரப் போதுவன ஆகா என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.''

குமுதவல்லி ஆழ்ந்து நினைப்பாளானாள். அவள் தோழிமார் இருவருமோ தம் இளைய தலைவியின் முகத்தைத் திகிலோடும் ஐயுறவோடும் நோக்கிக்கொண்டிருந்தனர்.

கடைசியாகக் குமுதவல்லி திகழ்கலையின் முகத்தை ஏறிட்டுப்பார்த்துக், "கள்வர் தலைவனுன நல்லானின் நல்வினையற்ற மனையாளது பிணம் எங்கே கிடக்கின்றது?'' என்று வினவினாள்.

"பெருமாட்டி, இங்கிருந்து நெடுந்தொலைவிலில்லை.'' என்று மறுமொழி தந்து, "அதோ அப்பக்கமாய் மூன்று அல்லது நான்கு தெருக்களுக்கு அப்பால்தான்'' என்று அவ்வறிவோள் அவ்வீட்டின் பிற்பகுதியை நோக்கிச் சுட்டிக்காட்டினாள்.

மறுபடியுங் குமுதவல்லி நினைப்பாளானாள்; மறுபடியும் அவள் பாங்கிமாரின் கண்கள் கவல் கொண்ட ஐயுறவோடும் அவள்மேற் பதிந்தன.

நெடுநேரம் பேசாமலிருந்த பிறகு, குமுதவல்லி திரும்பவும் வாயைத்திறந்து, "நீ கேட்டுக்கொண்டபடி நடப்பதற்கு என்னுள்ளம் என்னைத் தூண்டுகின்றது. நீ பேசிக்கொண்டிருந்த நம்பிக்கையில் உண்மையிருக்கிறதென்று யான் மெய்யாகவே கற்பிக்கப்பட் டிருக்கின்றேன்.'' என்றுரைத்துப் பின்னும் அவ்விரக்கநெஞ்சம் வாய்ந்த இளைய நங்கை, ஓ! இறந்துபோன அவ்வுயிர்க்கு அமைதியைத் தரத்தக்கதெதனையும் யான் முழு விருப்பத்தொடு செய்வேன்! ஆனாலும், இஃது என்னைப் பிடிப்பதற்கு விரித்த வலை அன்றென்று யான் மனங்கொள்வதெப்படி? யான் இங்ஙனம் விட்டுச் சொல்வதற்காகத், திகழ்கலை, நீ என்மேற் குற்றஞ்சொல்லுதல் கூடாது. தீய எண்ணஞ் சிறிதும் இல்லாம லிருக்கக்கூடிய ஒருவர்மேல் யான் இங்ஙனம் ஐயுறுதல் பற்றி நீ என்மேற் குற்றஞ்சொல்லுதல் கூடாது. உன்னுடைய நோக்கம் நல்லது கருதியதாகவே யிருக்கலாம்—யானும்

அஃது அப்படித்தான் என்று நம்புகிறேன்—என்றாலும், நீ அறியாமலும் உனது கண்சாடை இல்லாமலும் நீ பிறர் கைக்குக் கருவியாக்கப்பட்டிருக்கலாமே.''

அதுகேட்ட திகழ்கலை ஒடுக்கவணக்கம் மிக்க குரலிற் பெரிதும் உண்மைதோன்றக் கூறுவாள்: ''பெருமாட்டி யான் புனிதமாக நினைந்தவையெல்லாம் அறியப், புத்தரும் அவர் சாரணரும் அறிய ஆணையிட்டுக் கூறுகிறேன்; யான் உங்களுக்குப் பொய்கூறுவேனானால் இறந்துபோன என் பெற்றோர்ப்பிழைத் தேனாவேன்; ஆதலால், அவர்கள் அறிய, இவ்வமயம் யானாவது மற்றையோராவது உங்களிடத்து ஒரு சிறிதுந் தீய எண்ணம் வைத்திலேம் என்று ஆணையிட்டுக் கூறுகின்றேன். உங்கள் செழுங்கூந்தலில் ஒரு மயிரேனுந் தீங்குற யான் காண்பேன் அல்லேன்! ஏழை அறிவாட்டியிடம் நீங்கள் அன்பொடு பேசினீர்களன்றோ? அலைந்து திரியுந் திகழ்கலையை நுங்கள் புன்சிரிப்புகளால் நீங்கள் ஊக்கப்படுத்தினீர்களன்றோ? தானே பெருமை பாராட்டிப் பேசிய அவளது திறமை தவறிப்போன அந்நேரத்தில் அவளைத் தாங்கள் அருவருத்துத் தள்ளவேண்டுவதாயிருக்க, அப்போதும் அவளுக்குத் தாங்கள் பொற்பணங் கொடுத்தீர்களன்றோ? அதுவன்றியும், பெருமாட்டி, உங்களுக்குத் தீதுசெய்யக் கனவில் எண்ணுவதாயினும் அது வானுலகத்துள்ள ஒரு கந்தருவமாதினொடு சண்டையிடுதலையே ஒக்கும்!''

திகழ்கலையின் பார்வையிலும் அவள் நடந்துகொண்டவகையிலுங் களங்கமின்மை காணப்பட்டது; அதனால் அவள் பேசிய சொற்களும் அத்தன்மையுடையனவாகவே யிருந்தன; குமுதவல்லி மறுபடியுஞ் சிறிதுநேரம் எண்ணமிட்டுக்கொண் டிருந்தபின், தன் இருக்கையினின்றும் எழுந்து, ''யான் உன்னுடன் வருகிறேன்.'' என்று மொழிந்தாள்.

''பெருமாட்டி—அன்பிற்சிறந்த பெருமாட்டி!'' என்று சுந்தராம்பாள் சொல்லிக்கொண்டே தன் தலைவியின் காலடிகளில் வீழ்ந்து, ''கொடும்புலிவாழுங் குகைக்குள் தாங்கள் செல்லாதிருக்கும்படி தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்!'' என்று மொழிந்தாள்.

அங்ஙனமே தன்புறத் திகில்கொண்ட ஞானாம்பாளும் மண்டிக்காலிட்டுத் "தூயவான எல்லாப்பொருள்களுஞ் சான்ருகப், பெருமாட்டி, தாங்கள் இங்கேயே யிருக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்! அலைந்து திரியும் ஒரு பௌத்தப் பெண் பிள்ளை தனக்கு உடம்பாடில்லாத சைவசமயக் கொள்கைக்குரிய காரியங்களில் அத்தனை உழைப்பை யெடுத்துக்கொள்வளென்று தாங்கள் நினைக்கிறீர்களா?—" என்று கூறுகையில்,

திகழ்கலை நடுவே புகுந்து, அலைந்து திரியும் ஏழைப்பௌத்தப்பெண் தன் மதத்தை இழித்துப்பேசுவோர் கொள்கைகளையும் நன்கு மதிக்கின்ருள்." என்று சினவாமல் அமைதியோடுந் துயரத்தோடுங் கூறினுள்.

"காரிகையீர் எழுந்திருங்கள், நீங்கள் எழுந்திடும்படி நான் கட்டளையிடுகின்றேன்! என்பொருட்டு நீங்கள் கவலையுற்றதற்காக நான் நன்றியறித லுடையவளாயிருக்கின்றேன்: என்ருலும், யான் உறுதிசெய்துவிட்டேன், என் விருப்பத்திற்குக் குறுக்குச் சொல்லலாகாது;" என்று கூறிய குமுதவல்லி ஏதோ ஒன்றைச் சடுதியில் நினைந்தவளாய்த் திகழ்கலையின் பக்கமாய்த் திரும்பி, "ஆ! தற்செயலாகவேனும் என் கண் எதிர்ப்படும்படி—" எனக் கூறப்போகையில், அவ்வறிவோள் அடக்க வொடுக்கத்தோடும் அழுத்தமாய்ப் பகருவாள்: "பெருமாட்டி, யான் சொல்வதை உற்றுக்கேளுங்கள்! யான் தங்களை அழைத்துப்போகக் கருதியிருக்கும் இடத்தில் என் வாயிலிருந்தல்லாமல் வேறெவர் வாயிலிருந்தும் ஓர் எழுத்துக்கூட உங்களை நோக்கிப் பேசப்படமாட்டாது! என் கையைத் தவிர வேறெவர் கையும் உங்கள்மேற் படமாட்டாது! யான் கூறும் இக்கட்டுரைகளுக்குக் கௌதமசாக்கியரையும் அவர் சரணரையும் மறுபடியுஞ் சான்ருக வைக்கின்றேன்!

"அங்ஙனமாயின் யான் உன்னுடன் வருகிறேன்." என்று கூறிய குமுதவல்லி அதன்பின் பாங்கிமாரை நோக்கி "மாதர்காள், நீங்கள் என்னுடன் வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்—" எனமொழிகையில்;

சுந்தராம்பாள். "ஆம், பெருமாட்டி, நாங்கள் தங்களொடு செல்வோம்! எங்களுக்காகவன்று நாங்கள் அச்சமுறுவது." என்று கூறினள்.

"ஆண்டவன் தடைசெய்வானாக! ஏதேனும் இடர் நேருமாயின் எங்கள் அன்புள்ள பெருமாட்டியொடு நாங்களும் அதனைச் சேர்ந்து ஏற்றுக்கொள்வோம்!" என்று ஞானம்பாள் உரைத்தாள்.

"தங்களுக்கு விருப்பமானல், பெருமாட்டி, இவர்கள் உங்களொடு வரலாம்." என்று திகழ்கலை மொழிந்தாள்.

அவ்வறிவோளின் உண்மை யொழுக்கத்தை மெய்ப்பித்தற்கு இது மற்றுமொரு சான்றாகத் தோன்றியது: ஆயினும், தன் தோழிமாரில் ஒருத்தியையே தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லக் குமுதவல்லி தீர்மானித்தாள்; ஏனென்றால், உண்மையிலே ஏதேனும் இரண்டகமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமானல், தன் தலைவியும் மற்றைத் தோழியும் ஏமாற்றிக் கொண்டுபோகப்பட்ட வகைகளை விரித்துச்சொல்வதற்கு ஒருத்தி தனக்குப்பின் இங்கே யிருக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்தாள்.

அதற்கு இணங்கவே அவள், "சுந்தராம்பாள், நீ என்னொடுவா; ஞானம்பாள், நீ நாங்கள் திரும்பிவருமளவும் இங்கேயே தங்கியிருக்கவேண்டும். இவ்விடுதியினின்றும், இதனைச் சேர்ந்த வீடுகளினின்றும் நாங்கள் யாரும் அறியாமற் போய் வருதற்கு நல்லகாலமாய் எனக்கு வழி கிடைத்திருக்கின்றது. ஞானம்பாள், நீ இந்த அறையில் இரு: யான் இல்லாதபொழுது இவ்வீட்டு முதியோள் இங்குவந்தால் யான் சிறிது நேரத்திற்கு என் அறையில் தனியே யிருக்கப் போனேன் என்று சொல். சுந்தராம்பாள், என்னொடு வா! திகழ்கலை, யான் வர ஏற்பாடாயிருக்கின்றேன்!" எனப் பகர்ந்தாள்.

ஞானம்பாள், தன் இளைய தலைவியின் கையைப் பிடித்துத் தன் விழிகளினின்றும் நீர் ஒழுக அதன்மேல் முத்தம் வைத்தாள்: ஏனென்றால், தான் குமுதவல்லியை இனி என்றுங் காணுதவாறு பிரிந்து போவதாகவே நம்பிக்கையும் அன்பும் வாய்ந்த அப் பெண் எண்ணினள்.

"என் மாதே, மடமையால் வருந்தாதே." என்று நாக நாட்டரசி கூறினாள்: தன் சொற்கள் அவளைக் கடிந்துகொள் வதுபோற் காணப்பட்டாலும், அன்போடும் விருப்பத்தோடுந் தன் கையால் அவளது கையைப்பிடித்து அணைத்துக்கொண் டாள்; தான் மிக்க மனத்திட்பமோடிருந்தும் இவள் தன் கண் களினின்றும் நீர் ததும்பாமல் தடைசெய்யக் கூடவில்லை.

திகழ்கலை பின்னே வர இவள் அவ்வறையை விட்டு விரைந்துபோயினாள்; சுந்தராம்பாளோ தன்னுடன்றோழியா கிய ஞானம்பாளைத் தழுவிக்கொள்ளும்பொருட்டு ஒரு நொடிப் பொழுது பின்னே நீடித்துநின்றாள்.

திகழ்கலையைச் சிறிதுநேரம் அங்குள்ள படுக்கையறை களில் ஒன்றில் இருக்கும்படி கற்பித்துவிட்டுக், குமுதவல்லி குளியலறைக்குட் சென்றாள். அங்கே தான் அணிந்திருந்த மணிக்கலன்களை யெல்லாங் கழற்றி ஒரு நிலைப்பேழையுட் பேணிவைத்தாள். விலைமதித்தற்கரிய அம் மந்திர மோதிரத் தையுந் தனது பணப் பையையும் அவற்றொடு சேர்த்து அங்கே வைக்க அவள் மறந்துவிடவில்லை; ஏனென்றாற், கொள்ளைக் காரரின் அவாவை எழுப்புதற்குரிய அணிகலனாவது நாணய மாவது சிறிதுந் தன்னிடத்தில் இருக்கலாகாதென்று அவள் தீர்மானித்தாள். அவள் நிலைப்பேழையைக் கருத்தாய்ப் பூட்டித், தான் திரும்பிவராவிடினுஞ் சிறிது தேடிப்பார்த்தால் திண்ண மாய்க் கண்டுபிடித்தற்கு இசைந்த ஓர் இடத்தில் அதன் சாவி யை வைத்தாள். பின்னர் ஒரு துப்பட்டியினால் தன்னை மூடிக் கொண்டு, தோட்டத்தின் கடைசியிலுள்ள நுழைவாயிலைத் திறப் பதற்குரியதும், அவ்வீட்டு முதியோள் கூறியபடி அக்குளிய லறையிற் கண்டெடுக்கப்பட்டதுமான சாவியைக் கையிற் பற் றினவளாய்த் தான் புறப்படுதற்கு முன்னிற்பதைத் திகழ்கலைக் குஞ் சுந்தராம்பாளுக்குங் குறிப்பித்தாள். அவ்வறிவோள் தன் கண்களை மட்டுந் திறப்பாகவிட்டுத், தன் முகத்தை யெல்லாஞ் சணல்நூற் றுணியினால் முக்காடிட்டுக் கொண்டாள்; சுந்தராம் பாளுந் தனது போர்வையினால் முக்காடிட்டுக் கொண்டாள்; அம்மூவரும் மறைபடிக்கட்டின் வழியாய்த் தோட்டத்தினுள்

இறங்கினார்கள். விரைந்து சூழும் மசங்கல் மாலைப்பொழுதி னிடையே அதிற் கடுகி நடந்தார்கள்; கடைசியிற் சுவரிலுள்ள நுழைவாயிலண்டை வந்து சேர்ந்தார்கள். குமுதவல்லியினிட மிருந்த சாவியால் அதனைத் திறந்து அங்கு நின்றும் வெளிப் பட்டார்கள்; இப்போது திகழ்தலே அடுத்துள்ள தெருக்களி னூடே வழிகாட்டிச் செல்வாளானாள்.

பதின் மூன்றும் அதிகாரம்

சமயச் சடங்கு

குமுதவல்லிக்கு உரிய நாட்டின் நிலைமையை எண்ணிப் பார்க்குங்கால், அவள் இயற்கையறிவுஞ் சிறந்த கல்வியுணர்ச்சி யும் மிகுந்த தெளிவும் உடையவளாயிருந்தாள். அவளது உள் ளஞ் சைவசமய உண்மைகளால் ஆழ நிறைக்கப்பட்டிருந்தது. மேற்கணவாய் மலைப் பக்கங்களிலே அச்சமயத்தின் மிகத் தூய வான உண்மைகள் புல்லிய நம்பிக்கைகள் பலவற்றொடு கலந் திருந்தமையாற், குமுதவல்லியின் உள்ளமும் அந் நம்பிக்கை களிற் பிணிப்புண்டிருந்தது. இப்போது தான் மயக்குற்று நடக் கும் நம்பிக்கையைப்பற்றி அவளது இயற்கை நல்லறிவு ஆழ்ந்து நினைத்துப் பார்க்கும்படி தூண்டப்படுமானால், அஃதோர் அறி யா நம்பிக்கையே யல்லாமற் பிறிதில்லை யென்னும் ஒருமுடி புக்கு அவள் வரக்கூடும். ஆனால், இதற்குமுன் அவள் அதனை எண்ணிப்பார்க்கும்படி தூண்டப்படவில்லை; இப்போதோ அவள் அதனை மனஅமைதியோடிருந்து ஆய்ந்து பார்க்க ஒழிவில்லை. இன்னுந் தெளிந்த அறிவுள்ள நாடுகளில் மனவுரம் மிகுந்தோர் பலர் இத்தகைய வீண் நம்பிக்கைகளுக்கு இணங்கியொழுகு மாறு போலவே, இவளும் இதற்கு ஒருப்பட்டு நடப்பாளாயினள். முந்தின நாளில் மீனும்பாளைப்பற்றி நேர்ந்த துயரமான நிகழ்ச் சிகள் குமுதவல்லியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தன. தான் உண்மையற் குமுதவல்லிக்குச் செய்த அல்லது செய்ய நினைத்த

தீங்குகளுக்கு மருந்தாகத் தான் இறக்குந்தறுவாயிற் சொல்ல வேண்டுவன வெல்லாஞ் சொல்லி யொழிந்த அந்நல்வினையில்லா மங்கையினிடத்து அவள் அளவுகடந்து இரக்கப்பட்டாள். ஆகவே, அம்மங்கையின் உயிர் அமைதி பெறும்பொருட்டுத் தான் இப்போது செய்தற்கு மேற்கொண்டதனைச் செய்யும் வகையில், இதனைப் பயில்பவர் முன்னரே அறிந்த அளவுக்குமேற், குமுதவல்லி பொழுது நீட்டித்தலின்றி இணங்கினள்; அதாவது: கொள்ளைக்காரன் மனைவிக்கு உயிர் இருக்கையிலேயே அவனுக்குச் சொன்ன மன்னிப்பு மொழியைத் திரும்பவும் அவனது பிணத்தண்டையிலிருந்து சொல்லுவதேயாம். இந்த வீண் நம்பிக்கை ஒரு சிறந்த கருத்துப்பற்றியே எழுந்ததென்பதில் ஐயம் இன்று. சில வலிய உணர்வுகளின் வசப்பட்ட நிலையில் மன்னிப்பு மொழிகள் சொல்லப்படலாம்; தன் பகைவனாயினுந் தனக்குத் தீங்கிழைத்தோனாயினுந் தன் கண்ணெதிரே அழிந்துபடுகையில், ஒரு நொடிப்பொழுது இரக்க நெஞ்சத்தால் உந்தப்பட்டும் மன்னிப்பு மொழிகள் சொல்லப்படலாம்; என்றாலும், பிணத்தின் பக்கத்தேயிருந்து வணக்க ஒடுக்கத்தோடுஞ் சீர்தூக்கிச்சொல்லப்படும் மன்னிப்பு மொழியிலே உண்மையின் மிக்கதும் உறுதியிற் சிறந்ததும் ஆனது ஏதோயிருக்கின்றது.

குமுதவல்லி தான் செய்து முடிக்க உடன்பட்டதுங், குருக்கள் மாராற் சமயக்கொள்கையிற் சேர்த்து வைக்கப்பட்டதுமான சடங்கின் நோக்கமுந் தோற்றமும் அவையே என்பதில் ஐயமின்று. ஆயினும், நாம் முன்னரே கூறியபடி, இதனைப்பற்றி எண்ணிப்பார்க்கக் குமுதவல்லிக்கு நேரமேயில்லை. தன்னை அகப்படுத்தச் செய்த சூழ்ச்சியா யிருக்கலாமோ என்று மட்டும் முதலில் அவள் நினைந்தாள். ஆனல், திகழ்கலையின் சொற்களையும் உறுதிமொழிகளையுங் கேட்டு அந்நினைவு தீர்ந்தவுடன், இறந்துபோன வுயிர் அமைதி பெறற்பொருட்டுத் தான் செய்தற்குக் கடமைப்பட்டதனைச் செய்வது தூயதொரு கடனென்றே எண்ணினள்.

இப்போது கிட்டத்தட்ட ஆள் வழக்கம் அடங்கிய தெருக்களினூடு வழிகாட்டிக்கொண்டே திகழ்கலை போயினள். அந்த

இளவேனிற்காலத் திடையில் வழக்கமாய் இருப்பதைக் காட்டிலும் மிகுந்த புழுக்கம் வாய்ந்ததான ஒரு பகற்பொழுதின் ஈற்றில் அம் மாலைக்காலமானது மங்கி இருண்டு தோன்றியது. அங்ஙனம் அவர்கள் போய்க்கொண் டிருக்கையில் வானத்திலிருந்து பளீரெனத் தோன்றிய ஒரு மின்னலின் ஒளி, அவர்கள் தம்முகத்தை மறைத்திருந்த முக்காடுமட்டும் இல்லாதிருந்ததாயின், அவர்களின் கண்களைக் குருடுபடுத்தி யிருக்கும்.

அந்த மின்னொளியானது சிறிதுநேரம் அவ்விடத்தை முற்றும் ஒளிவண்ணமாக்கி, அத்தெருவின் இருமருங்கும் உள்ள கட்டிடங்களை நொடிப்பொழுதேனும் நன்கு புலப்படக் காட்டியது, அதேநேரத்தில் எதிர்ப்பக்கத்தே விரைந்து போய்க்கொண்டிருந்த ஒருவனுடைய முகங் குமுதவல்லியின் பார்வைக்குத் தென்பட்டது. உடனே அவள் திகில்கொண்ட ஓர் ஐயத்தினாற் பற்றப்பட்டுச் சடுதியிலே நின்றாள்; ஏனெனில், அவள் அங்ஙனங் கண்டது நீலலோசனன் முகத்தையேயாம்!—அச்சமூட்டும் நல்லானை யன்றிப் பிறன் அல்லன் என இன்னும் அவள் பிழைபட நம்பின அவ்வழகிய பௌத்த இளைஞனது முகத்தையேயாம்! சடுதியில் மறைந்த அம்மின்னொளிக்குப் பின், அங்குத் தோன்றிய இருள் முன்னிலுங் கருமையாய்த் தோன்றியது. ஆகவே, குமுதவல்லியுஞ் சுந்தராம்பாளுந் தன்னைப் பின்றொடர்ந்து வந்திலனென்பதனைத் திகழ்கலை உடனே காணக்கூடவில்லை.

அம்மின்னொளியானது தன் தலைவியைக் குருடு படுத்தியதோ! அன்றி ஏதேனும் பழுது செய்ததோ! வென்னும் நடுக்கம் வாய்ந்தவளாய் "அன்புள்ள பெருமாட்டி, யாதுநேர்ந்தது"? என்று சுந்தராம்பாள் கேட்டனள்.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, சுந்தராம்பாள்!" என்று கலக்கம் பாதியுந் திகைப்புப்பாதியும் உடையளாய்க் குமுதவல்லி விடைகூறினள்.

"ஆ! மெய்யாகவே மின்னலானது திகில்தரத் தக்கதாய்த்தான் இருந்தது!" என்று சுந்தராம்பாள் நடுக்கத்தொடு கூறினள்; ஏனென்றாற், குமுதவல்லியை அங்ஙனங் கலங்கப் பண்

ணின அதேபொருளை அவள் காணும்படி நேரவில்லை. இப்போது குமுதவல்லி தன்பாங்கியுடன் நின்றுவிட்ட இடத்திற்குத் திகழ்கலை திரும்பிவந்து, "பெருமாட்டி, நீங்கள் ஏன் என் பின்னே வரவில்லை?" என்று வினவித், "தங்களை வெருளச் செய்ததற்கு மேல் அம்மின்னலால் வேறு எதுந் தீங்கு நேராமற் கௌதமசாக்கியர் காக்கட்டும்!" என்று கூறினாள். அவ்விளைய பெருமாட்டி இப்போது தன்நிலைக்கு வந்தவளாகி, "அம்மின்னொளியானது ஒவ்வொரு பொருளையுந் தெளிவாய்ப் புலனாக்கியது; ஆனாற், கட்பார்வையின் ஒளியோ மக்கள்நெஞ்சில் அத்தகைய பயனைத் தரமாட்டாது. திகழ்கலை, எனக்குள் ஐயுறவு நிகழ்கின்றது—" என்று கூறுகையில்,

அவ்வறிவோள், "பெருமாட்டி, தாங்கள் இதுவரையில் துணிந்துவந்ததற்கு மேல் இனிவரவேண்டாமென்றும், நீங்கள் திரும்பிப்போகலாமென்றும் யான் சொல்லுவேன்; ஆனால், அப்படிச் செய்வேனாயின், தங்களிடம் இப்போது பேசும் இவளைப்பற்றித் தாங்கள் கொண்ட ஐயம் அங்ஙனமே தங்கிவிடும்; அஃது அவ்வாறாகப்படாது! தங்களை வஞ்சித்தொழுக வல்லவள் அல்லேன் எனப் புத்தசாரணர் அறிய ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்! இதோ, பெருமாட்டி, இந்தக் குத்துவாளை எடுத்துக் கொள்ளுங்கள்; தங்களைத் தீயோர்க்குக் காட்டிக் கொடுக்கிறேன் என்று நீங்கள் கண்ட அந்த நேரமே, என் நெஞ்சில் இதனை அழுந்தப் பாய்ச்சுங்கள்!" என்றுரைத்தாள்,

"ஆம், நான் இக்கருவியை வைத்துக்கொள்கின்றேன்" என்று சொல்லிக், குமுதவல்லி அதனைத் தன் அரையைச் சூழ்ந்த பட்டிகையிற் செவ்வையாய் வைத்துக் கொண்டாள். "இப்போது யான் கேட்பதற்கு விடைசொல் திகழ்கலை! நீ இப்போது என்னை அழைத்துக்கொண்டுபோக இருக்கும் இடத்தில், நம்மையும் இறந்துபோன அவ்வம்மையின் பாங்கிமாரையுந் தவிர வேறெவரேனும் வந்திருப்பரோ? வென்று நான் கேட்கிறேன்."

"ஆம், பெருமாட்டி, மற்றொருவரும் அங்கிருப்பர்." என்று திகழ்கலை விடைகூறினாள்: "ஆயினும், புத்தசாரணர்

அறிய அவர் தங்களுக்குச் சிறிதுந் தீங்கு இயற்றத் தக்கவர் அல்லர் என்று ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்! உங்களை நோக்கி ஒருமாற்றங்கூட அவர் பேசமாட்டார்! தன் விரல்களில் ஒன்றையேனும் அவர் உங்கள் மேல் வைப்பாரல்லர்! இப்போது தங்களுக்கு இசைவுதானோ? இன்னும் யான் யாது சொல்லக்கூடும்?''

"நல்லது, வழிகாட்டிச் செல்" என்று குமுதவல்லி கூறினள்.

தன் இளையதலைவிக்கும் அவ்வறிவோனுக்கும் இடையிற் சுருக்கமாய் விரைந்து நிகழ்ந்த இப்பேச்சைச் சுந்தராம்பாள் மறுபடியும் எழுந்த கவலையோடும் ஐயுறவோடும் உற்றுக் கேட்டாள். இந்தத் தோழிப்பெண் தன் நாகநாட்டரசி திரும்பிவிடமாட்டாளா என்று தனக்குள் விரும்பினள்: ஆயினும், அவள் முன் செல்லுதற்குத் தீர்மானங் கொண்டிருப்பதைக் கண்டு, தான் ஒரெழுத்தாவது தடுத்துப்பேசுதற்குத் துணிந்திலள்: குமுதவல்லி திடீரென நின்ற காரணந்தெரியாமல், வெருளத்தக்க மின்னலொளியைக் கண்டு அச்சுறுத்தப் பட்டவளாய் அவள் மெலிவுற்று நின்றுளெனவே சுந்தராம்பாள் தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

இப்போது குமுதவல்லி அச்சமும் ஐயுறவும் முற்றிலும் இல்லாமல் வழி நடக்கவில்லை. அவளுக்குத் திகழ்கலையைப் பற்றிச் சிறிதுதான் தெரியும். மிகவுங் கொடுமையான ஒருகுற்றத்தைச் செய்யத்துணிந்த ஒருவர் தமது கருத்தை ஒளிக்கும் பொருட்டு நிரம்பிய அடக்க ஒடுக்கத்துடன் சூளுரை பகரப் பின்வாங்க மாட்டார் என்று அவள் எண்ணுமலிருக்க முடியவில்லை. என்றாலுந், திகழ்கலையின் குரலிலுந் தன்மையிலும் ஏதோ உண்மை யிருந்தமையாற், குமுதவல்லி முற்றிலும் ஐயப்பாட்டுக்கே இடங் கொடுத்துவிடத் துணியவில்லை. இறந்துபோன மீனம்பாளின் உயிருக்கு அமைதியைத் தருவதென்று தான் எண்ணிய ஒரு துணிவான செய்கையில் உறுதியாய் நிற்றல் வேண்டுமென்னுங் கடமையினால் அவள் தூண்டப்பட்டாள்; உள்ளபடியே எதுஞ் சூழ்ச்சி நினைக்கப்பட் டிராவிட்டால்—எதும் வலை விரிக்கப்பட்டிராவிட்டால்—அக்கடமையை

நிறைவேற்றாமல் தான் திரும்பிவந்ததைப் பற்றித் தன்னையே தான் கொடுமையாய் இகழ்ந்து கொள்ளவேண்டியிருக்கும். மேலும், அவள் அப்பெண்பிள்ளையின் குத்துவாளைத் தான் வாங்கி வைத்துக்கொண்டாள்; தண்டனைக் குள்ளாகாமல் அப்பெண் பிள்ளை தனக்கு ஏதுந் தீங்கு செய்ய முயலக் கூடாதென்று அவள் தீர்மானித்தாள். சிறிதுநேரத்திற்கு முன்னே தான் நல்லானையே கண்டதாகத் துணிபுகொண்டவளாய், இறந்துபோன தன்மனைவி கிடந்த இடத்திற்கு அவன் வரவேண்டுவது இயற்கையேயென்று குமுதவல்லி எண்ணினாள்; இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே, "முடிவாக அக்கள்வர் தலைவன் அங்கு வந்திருப்பது எனக்கு ஏதுந்தீங்கு செய்யவேண்டுமென்னும் நோக்கம் இல்லாமலும் இருக்கலாம்!" என்று அவள் தனக்குட் சொல்லிக்கொண்டாள்.

திகழ்கலையொடு சுருக்கமாகவும் விரைவாகவுந் தான் பேசிய பொழுது கொள்ளைத் தலைவனான நல்லான் பெயரை அவள் மொழிந்திலள்; ஏனென்றால், முதலாவது தன் தோழிப்பெண் சுந்தராம்பாளை அச்சுறுத்துதற்கு அவள் விரும்பவில்லை; இரண்டாவது நடுத்தெருவில் அவன் பெயர் சொல்லப்படுமாயின் அதனை ஒட்டுக் கேட்டவர் நீலகிரி நகரத்துள்ளாரை யெல்லாஞ் சடுதியில் எழுப்புவித்து, அவனைப் பிடிப்பவர்க்குப் பரிசில் கிடைக்குமாதலால் அவனைத் தேடிப் பிடிக்கும்படி செய்துவிடுவரென்றெண்ணியுந், தான் மீனும்பாளுக்குக் கூறிய உறுதிமொழிகளை நினைந்தும் அதனைச் சொல்லாது விட்டனள்.

சிறிதுநேரத்தி லெல்லாந் திகழ்கலை ஒரு மதிற் கதவண்டை வந்து நின்று அதிலுள்ள புழைவாயிற்கதவைத் திறந்து, பின்னே குமுதவல்லியுஞ் சுந்தராம்பாளும் வர உள் நுழைந்தாள். உள்வாயிற் படிமேற் காப்பிரிப்பெண் கையில் விளக்கேந்தி நின்றாள்; இந்தப்பெண் தாழ்மையோடுங் குமுதவல்லியை வணங்கி, ஒருசொற்கூடப் பேசாமல் மேடைப்படிமேல் அழைத்துப் போனாள். தளத்தின்மேற் போய்ச்சேர்ந்தார்கள். குமுதவல்லி தான்வந்திருக்கும் அவ்வீடு பழைய வகையாயும் இடமகன்றதாயும் இருக்கக்கண்டாள். ஏனென்றால், இந்தத்

தளத்திலிருந்து பலகிளைகளாய்ப் பிரியும் நீண்ட வழியுள்ள வாயில்கள் பல இருந்தன. ஆயினுஞ், சுற்றிலுமுள்ள அவற்றைப் பார்க்கவும் ஆராயவும் அவளுக்கு நீண்டநேரம் இல்லை; இதற்குள் அக்காப்பிரிமாது உயர்ந்த ஒருசோடு மடக்குக்கதவுகளில் ஒன்றைத் திறந்தாள். அவள் அவ்வாயிலின் உள்ளே புகும் முன்னமே, வெளியே அத் தளத்தின்மேல் விளக்கை வைத்து விட்டாள். கரிய ஒளிமென் பட்டுத்திரை ஒன்று அப்பால் இழுத்து விடப்பட்டது; குமுதவல்லியுந் திகழ்கலையுஞ் சுந்தராம்பாளும் உள்நுழைந்த அறையில் விளக்கு வெளிச்சம் மங்கலாய் மினுக்கு மினுக்கென்று வீசியது.

அவ்வறை இடம் அகன்றதாய்த்தான் இருந்தது; அங்குள்ள தளவாடங்களைப் பார்த்தால் அவை செவ்வையாகவே அமைக்கப்பட்டிருந்தன. ஆயினும், அரைவாசி இருளாய் இருந்தது; ஏனெனில், நடுவே யிருந்த மேசைமேல் இரண்டு மெழுகு திரிகள் மட்டுமே எரிந்துகொண் டிருந்தன; சுவர்களின்மேற் கறுப்புத்துணி தொங்கவிடப்பட்டிருந்தது. அவ்வறையில் அங்ஙனம் நிறைந்து நின்ற சிறுகிய சவஇருள் அச்சத்தையும் வணக்க வொடுக்கத்தையுந் தோற்றுவிப்பதா யிருந்தது; ஆனால், அஃது அப்போது உதவுகிற நோக்கத்திற்கே இசைந்ததா யிருந்தது. அவ்வறையின் கடைக்கோடியில் ஒருகட்டி லிருந்தது; அது நிலமட்டத்திற்குமேல் இரண்டு படி உயர்த்தப்பட்டிருந்த ஒரு திண்ணைமேல் இடப்பட்டிருந்தது. கரிய ஒளிமென் பட்டாற் சமைத்த ஒருபெரும் படங்கு அக்கட்டிலின்மேற் கட்டப்பட்டிருந்தது; அதேபட்டாற் செய்த தொங்கல்கள் அக்கட்டிலின் தலைமாட்டைச்சூழ நாற்றப்பட்டிருந்தன. அக்கட்டிலின்மேல் மீனாம்பாளின் உடம்பானது ஒரு வெள்ளைத் துப்பட்டியினாற் சுற்றி நீட்டப்பட்டிருந்தது; அவளது முகம் முக்காடிட்டு மறைக்கப்பட்டிருந்தது. ஆனால், ஓர் அரசியையுந் தமது செழுமையான வளர்ச்சியினாற் பொறாமை அடையச்செய்யும் அவளது கரிய கொழுங் கூந்தலின் நீண்ட பன் மயிர்ச் சுருள்களானவை இம் முக்காட்டின் மடிப்புகளின் கீழ்ச் சிதறிக் கிடந்தன.

அவ்வறையிற் பரவி யிருந்த அரைவாசி மங்கலிலும், அக் கட்டிற்கால்மாட்டில் நின்ற ஒருவனைக் குமுதவல்லியுஞ் சுந்தராம்பாளும் உடனே தெரிந்து கொண்டார்கள். அவனுடைய இயற்கையிலே மினுமினுப்பான கரிய மயிரின் மேலும், நேர்த்தியாய் வரைந்தாற் போன்ற மீசையின்மேலும், அழகிய முகத்தின்மேலும், அவன் அணிந்திருந்த சட்டையின் பூத்தையல்கள் மேலும், அவனது கத்திக் கைப்பிடியில் அழுத்திய மணிகளின் மேலும் அங்குள்ள அச்சிறிய வெளிச்சம் பட்டு மினிர்ந்தது. அவன் கைகள் மார்பின்குறுக்கே மடிக்கப்பட்டிருந்தன. அவன் துயரமான பார்வையோடு அக்கட்டிலின்மேற் கிடந்த உருவத்தை உற்று பார்த்துக்கொண் டிருந்தான். அவன் இளைய நீலலோசனனே யன்றி வேறல்லன்.

அவனை அவ்விடத்திற் பார்ப்பதைக் குமுதவல்லி எதிர் பாராமல் இருக்கவில்லை; அவனைச் சிறிது பார்த்த அந்த நொடியே அவள் சுந்தராம்பாள் பக்கமாய்த் திருப்பிப், "பேசாதே! அச்சமுற்றுக் கூவாதே! திட்பமாய்இரு! இறந்துபோன தன் மனைவியின் படுக்கையண்டை யிருந்துகொண்டே அவன் நமக்கு எதொரு தீங்குஞ் செய்யத் துணிவான்அல்லன்!" எனக் குசுகுசுவென்று விரைந்து கூறினாள்.

குமுதவல்லி தன் தோழிப்பெண்ணை நல்ல நேரத்தில் முன்னறிவித்தது நன்றாயிற்று; ஏனெனில், அஞ்சத்தக்க நல்லானென்றே நீலலோசனனைத் தானும் பிழைபட எண்ணியிருந்த சுந்தராம்பாள் அவனைப் பார்த்தவுடனே வீரிடும் நிலைமையள் ஆனாள். அத்தோழிப்பெண் தனக்குள்ள மனவலிமையையெல்லாந் தனக்குத் துணையாக ஒருங்கே வருவித்துக் கொண்டு தன் அன்புள்ள தலைவியின் கிட்ட மிக நெருங்கிநின்றாள். அவ்வறையின் கதவுக்கு மிகவும் எட்டியிருந்த பக்கமாய் அக்கட்டிலண்டை மீனும்பாளின் தோழிகளில் ஒருத்தியான மலையநாட்டுப் பணிப்பெண் மண்டிக்காலிட் டிருந்தாள்; ஏனென்றால், மேடைநீண் டிருந்த அந்தக் கடைசியிற் சுவருக்கு மூன்றடி விலகி அக்கட்டில் நின்றது.

அக்காப்பிரிப்பெண் சிறிது பின்னே வரக் குமுதவல்லியையுஞ் சுந்தராம்பாளையுந் திகழ்கலை இப்போது அக்கட்டிலண்டை மெல்ல அழைத்துச் சென்றாள். இறந்தவர்க்குக் காட்டவேண்டும் வணக்கத்தை எண்ணிக் குமுதவல்லியுஞ் சுந்தராம்பாளுந் தமது முக்காட்டைப் பின்புறந் தள்ளினார்கள். தனக்கு முன்னே நீட்டப்பட்டுக் கிடந்த உருவத்தினின்றும் நீலலோசனன் தன் விழிகளை உயரஎடுத்து, அறைக்குள் நுழைந்தவர் எவரென்று பார்க்க இப்போதுதான் முதன் முதல் நோக்கினான். அழகிய குமுதவல்லியை அவன் பார்த்ததுங் கலந்துதோன்றிய வியப்பினாலுங் களிப்பினாலுஞ் சடுதியில் திடுக்கிட்டான்; ஆனால், திகழ்கலையோ முன்னறிவிக்குங் குறிப்போடு உடனே தன் கையை உயரத் தூக்கி—மெதுவாயிருந்தாலுங் காதுக்கு நன்றாய்க் கேட்கும்படி அத்தனை தெளிவாயுள்ள குரலில், "ஒரு சொற்கூட! ஓர் எழுத்துக்கூடப் பேசவேண்டாம்! இறந்தவர்க்கு எதிரில் நீங்கள் இருக்கிறீர்களென்பதை நினையுங்கள்!" என்று பகர்ந்தாள்.

நீலலோசனன் இங்ஙனந் திடீரென்று நினைவுறுத்தப்பட்டவனாய் மறுபடியுந் தன் கண்களைக் கீழ்நோக்கிக் கொண்டான்: என்றாலுங், குமுதவல்லி தன் கண்கள் இவன் கண்களுக்கு எதிர்நோக்குதலைக் கருத்தாய் விலக்கிக்கொண்டனளென்றுந், திகழ்கலை தீர்மானமாகவும் அழுத்தமாகவுஞ் சுருக்கமாகவும் அச்சொற்களைச் சொல்லியபோது, அவளது முகத்தின்மேல் வெளிறின நிறம் ஒன்று பரவியதென்றுங் கருதிப்பார்க்க அவன் தவறவில்லை.

குமுதவல்லியுஞ் சுந்தராம்பாளும் அக் கட்டிலண்டை சென்று, தமக்குக் கிட்ட இருந்த பக்கத்தில் நின்றார்கள்; நீலலோசனனோ கால்மாட்டண்டையிலேயே இன்னும் நின்றுகொண்டிருந்தான்; மலையநாட்டுப் பணிப்பெண் எதிர்ப்பக்கத்தில் முழந்தாளிட்டிருந்தாள்.

திகழ்கலை வணக்கஒடுக்கம் மிக்க மெல்லிய குரலில், "இறந்துபோன இப்பெண்ணின் முகத்தைப் பாருங்கள்!" என்று சொல்லிக்கொண்டே மீனம்பாள் முகத்தின் மேலிருந்த முக்கா

ண்ட மெல்லெனத் தூக்கினாள். "பாருங்கள் இஃது எவ்வளவு அமைதியாயிருக்கின்றது! பெருமாட்டி, தன் முழு அமைதியை உறுதிப்படுத்தும் பொருட்டுத் தாங்கள் இப்போது இங்கே வந் திருப்பதற்குக் காரணமான அவ்வுயிர் நலமெய்தி யிருப்பதனை அறிவிக்கும் நற்குறியாக இவ்வமைதிக் குறிப்பை யாம் நினைப் பாமாக!"

இங்ஙனம் விளம்பிய பின்னர்த் தான் முதலிற் றூக்கியபடி யே மெதுவாக அம்முகக்காட்டினைத் திகழ்கலை கீழே இறக்கிவிட் டாள்; மீனம்பாளின் முகமானது மறுபடியும் இவர்களது பார் வையினின்றும் மறைபட்டது. ஒரு சிறிதுநேரம் எல்லாரும் வணக்க வொடுக்கத்தொடு வாய்பேசா திருந்தனர்; அதன்பிறகு குமுதவல்லியின் குரலானது வெள்ளிமணியின் ஒலிபோன்று மெல்லிதாய்த், தெளிவாயிருந்தாலும் நடுக்கமுள்ளதாய்ப் பேசத் துவங்கியது.

"மீனம்பாள்! நீங்கள் எவ்வகையான தீங்கு எனக்குச் செய் திருந்தாலும், அன்றிச் செய்யக் கருதியிருந்தாலும்—அத்தீங் கின் அளவும் அதன் தன்மையும் முன்னும் இன்னும் யான் அறி யாதிருந்தாலும், அவற்றையெல்லாம் யான் மன்னித்து விட்ட தன் உறுதிமொழியை நீங்கள் உயிரோடிருந்தபோதே யான் எடுத்துக்கூறினேன். ஆனால், இப்போதும்,—இவ்விடத்தும், உயிர் அற்ற உங்கள் உடம்பு கிடக்கும் இக்கட்டிலண்டையிலும், இன்னும் புனிதமாகவும் வணக்கவொடுக்கத்தோடும் அம்மன் னிப்பு உறுதிமொழியைத் திருப்பிச் சொல்லுகின்றேன். ஓ மீனம்பாள்! அழகுபடுத்துவதற் கென்றே பிறந்தாலென்ன நீங் கள் தோன்றிய இந்நிலவுலகத்தினின்றும், வீழ்ந்துபோன வான் மீன்போலச், சிறிதுகாலம் நீங்கள் மறைந்து சென்றாலும், இறை வன் திருவருளால் உங்கள் உயிர் இன்னும் உயர்ந்த இனியதோர் உலகத்திற்கு மேலெடுக்கப்பட்டு, அங்கே என்றும் விளங்கும் முதல்வனது அருளிருக்கையினின்றும் போதரும் அவ்வரு ளொளியின் நல்ல தூய விளக்கத்தின்கண்ணே நீங்கள் திகழ்ந் திருக்கும்படி அவ்வையன் அருள் வழங்குவானாக!" என்று அவ்விளைய நங்கை மொழிந்தாள்.

இதனைச் சொல்லியதுங் குமுதவல்லி நின்றுபோனாள்; அவள் இன்னுஞ்சிறிது பேசியிருப்பாள்; ஆனால் இப்போது தன்னை மேற்கொண்டு எழுந்த உருக்கத்தினாற் பேசக்கூடாதவளானாள். இப்போது அழுதவள் அவள்மட்டும் அல்லள்; ஏனெனில், அரைவாசி அடக்கப்பட்ட தேம்பலொலிகள் அவள் செவியிற் கேட்டன. சுந்தராம்பாளும், மலைநாட்டுப் பணிப்பெண்ணும், அந்தக் காப்பிரிப்பெண்ணும் அழுதனர்; அவ்விடத்திற்றோன்றிய வணக்க ஒடுக்கமும் இரக்கமும் வாய்ந்த இந்நிகழ்ச்சியினால் நீலலோசனன் உள்ளங் கலங்கினான்; திகழ்கலையின் கண்களும் நீரற்று இருக்கவில்லை. கடைசியாக, இன்னும் இந்நிலையிலிருக்கின்ற குமுதவல்லி பக்கமாய்த் திகழ்கலை திரும்பிப், "போதும் பெருமாட்டி! புத்தசமயத்திற் பற்றுடையவளான யானுங்கூட இந்தச் சடங்கானது தன் பயனைத் தராமற் போகாதென்று இப்போது நம்பத் தலைப்படுகின்றேன். மேலுலகத்துள்ள ஒருதெய்வத்தின் வேண்டுகோள் மொழியை இந்நிலவுலகத்தில் வெளிவிட்டுச் சொல்லும் ஒருயிரின் குரலொலி ஒன்று உண்டாயின் அஃது உங்களுடையதேயாகும்!" என்று மெல்லச்சொன்னாள்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே திகழ்கலை குமுதவல்லியின் கையைப்பிடித்து அவளை அப்பாற் கொண்டுபோகலானாள். அந்நேரத்தில் நீலலோசனன் முன்னேறி வந்து நாகநாட்டரசியை நோக்கிப் பேசுங் குறிப்புடைய னாதலைக் கண்டு திகழ்கலை துடுக்காகக் கைக்குறிசெய்து அவன் இருந்த இடத்திலேயே வாய்பேசா திருக்கும்படி குறிப்பித்தாள். அவன் அவள் சொல்லுக்குக் கீழ்ப்படியாதிருக்கத் துணிய வில்லை: ஏனென்றால், அத்துணை வணக்க வொடுக்கத்தையும் அச்சத்தையும் விளைவிக்கும் இயல்பு வாய்ந்த அந்நிகழ்ச்சியின் இடையே, அதனையெல்லாம் நடத்தும் உரிமை யுடையவளாய்க் காணப்பட்ட முன்அறிமுகம் இல்லாத அப்பெண் காரணமில்லாமலே அச்சமூட்டும் ஒரு தலைமையினைச் செலுத்துவா ளானாள்.

கொள்ளைக்கார நல்லானென்றே தான் கருதிவிட்ட நீலலோசனன் மேற் குமுதவல்லி ஒரு முறையேனுந் தன் பார்

வையைச் செலுத்தவேயில்லை. அப்பெருமாட்டி இங்ஙனந் தன்னிடத்து முற்றுங் கனிசக் குறைச்சலாய் நடந்ததைப் பற்றி நீலலோசனன் மிகுந்த வருத்தமும் அதைப்போலவே மிகுந்த வியப்புங் கொள்ளப் பெற்றான். இத்தகைய நடக்கையின் காரணம் இன்னதென்று புலப்படாமையொடு, மலைநாட்டு வணிகரின் வீட்டின்கண் தோழமை கொண்டிருந்த தன்னை அவள் சடுதியிற் பிரிந்து போன மருமத்தையும் இது மிகுதிப்படுத்தியது. குமுதவல்லியையுஞ் சுந்தராம்பாளையுந் திகழ்கலை அவ்வறைக் கதவண்டை அழைத்துப்போனாள்; அவர்கள் ஒருமுறையேனும் பின்னே திரும்பிப்பார்க்கவில்லை: மென்பட்டுத் திரை அப்பால் இழுத்துவிடப் பட்டது. கதவு திறக்கப்பட்டது, அவர்கள் தளத்தின்மேல் வந்து நின்றார்கள்.

"இப்போது பெருமாட்டி, நீங்கள் தங்கியிருக்கும் விடுதியின் தோட்டவாயிலுக்கு மறுபடியும் உங்களை அழைத்துச்செல்வேன். அவ்விடத்திற்கு நீங்கள் சென்றபின் அல்லாமல், சிறிது நேரமேனுந் திகழ்கலையின்மேல் நீங்கள் நம்பிக்கையற்றதைப் பற்றி நுங்களுக்கு உண்டான வருத்தத்தை நீங்கள் அவளுக்குத் தெரிவிக்கவேண்டாம்." என்று திகழ்கலை மொழிந்தனள்.

என்றாலுங் குமுதவல்லி தனது வருத்தத்தை உடனே அவளுக்கு எடுத்துரைத்திருப்பாள்; ஆனால், அவ்வறிவினளோ அந்தக் காப்பிரிப்பெண் தளத்தின்மேல் வைத்துவிட்டுப்போன விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு, அவளை மெத்தைப்படியின்கீழ் மிகவுஞ் சுருக்கெனவழிநடத்திக்கொண்டு சென்றாள். திகழ்கலை, குமுதவல்லி, சுந்தராம்பாள் என்னும் மூவர் முகங்களின்மேலுந் திரும்பவும் முக்காடு இழுத்து விடப்பட்டன. தலைவாயிலின் உட்புறத்தே விளக்கு வைத்துவிடப்பட்டது; பின்னுஞ் சிறிதுநேரத்தில் அவர்கள் தெருவிற் சென்றபோது அவர்களுக்குப்பிறகே வாயிற்கதவு மூடிக்கொண்டது. வாய்பேசாமலும் பாதுகாப்போடும் அவர்கள் வழி தொடர்ந்து சென்றார்கள். மனோகரர் விடுதியின் தோட்டவாயிலண்டை வந்ததுங் குமுதவல்லி திகழ்கலையை நோக்கி, "யான் சிறிதுநேரம் வரையில் உன்னைப்பற்றி நினைக்க வேண்டியதாயிருந்த தீய

ஐயுறவின்பொருட்டு என் அகத்துண்டான மிக்க துயரத்தைத் தெரிவிப்பதற்கு இதுதான் இயைந்தநேரமாயிற்று. உனது குத்து வாளைத் திரும்பவும் நீயே எடுத்துக்கொள்." என்று புகன்றாள்.

திகழ்கலை தனது குத்துவாளைக் குமுதவல்லியின் கையி லிருந்து வாங்குகையிற், "பெருமாட்டி, இனியொருகால் திரும் பவும் நாம் எதிர்ப்படுகுவமாயின், இவ்வறிவோளிடத்துத் தாங் கள் நம்பிக்கை உடையவர்களாயிருப்பீர்கள். இப்போது விடை கொடுங்கள்!" என்று கூறினாள்.

"ஒருமொழி, திகழ்கலை—ஒருமொழி!" என்று குமுதவல்லி விரைந்துகூவிப் பின்னுஞ், "சில செய்திகளைப்பற்றி நீ நிரம் பவுந் தெரிந்தவளாகக் காணப்படுகின்றாய்: உனக்கு அவற்றை நன்றாய் அறிவிக்கக் கூடியவர்களுடன் நீ இருக்கின்றனை. எனக்குச்சொல், நான் உன்னைக் கெஞ்சுகின்றேன்—இறந்து போன மீனம்பாள் முன்னொருகால் எனக்குச்செய்ய நினைத்த தீது யாது?" என்று வினவினாள்.

"பெருமாட்டி, எனக்குத் தெரியாது," என்று திகழ்கலை விரைந்து விடைகூறிக், கடிதிற் றிரும்பிச் சென்று ஒரு நொடி யிற் கட்புலனுக்கு எட்டாமற், சூழ்ந்திருந்த இருளில் மறைந்து போனாள்.

"அன்பிற்கினிய பெருமாட்டி, நாம் செவ்வனே வந்து சேர்ந்ததற்காக நம்பெருமானை வழுத்துவாமாக!" என்று சுந்த ராம்பாள் களிப்புமிக்ககுரலிற் கூறினாள்.

"ஆம்—நம் இறைவனை வாழ்த்துவாமாக!" என்று நாக நாட்டரசி இசைந்து கூறினாள்.

பின்னர் அவர்கள் மறைவுவாயிலின்வழியே உள்நுழைந்து, தோட்டத்தைக் கடந்து, தத்தம் அறைகட்குச் சென்றார்கள். அங்கே ஞானம்பாள் அவர்களை வரவேற்கும்பொருட்டு மிகுந்த களிப்பாற் குதித்தோடி வந்தாள்; ஏனெனில், அவர்களது வரு கையானது, நம்பிக்கையுள்ள அப்பெண் கொண்டிருந்த அள வற்ற கவலையையுந் திகிலையும் ஐயுறவையுந் தீர்த்தது.

மறுநாட்காலையில் உணவருந்திய வுடனே குமுதவல்லி தோட்டத்திலே உலவுவதற்காகக் கீழ் இறங்கினாள்—இந்த வேளை

யில் அவள் பாங்கிமார் அவள் பின்னே வரவில்லை; ஏனென்றால் சிறிதுநேரம் அவர்கள் தம் இருக்கையிற் செய்யவேண்டிய அலுவல்மேல் நின்றார்கள். ஆகவே, தனியிருந்த குமுதவல்லியின் உள்ளத்திற் பின்வருமாறு எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்தன. இன்றைக்குத்தான் மனோகரர் திரும்பி வரவேண்டியநாள். நாகநாட்டின்கணுள்ள தனது மாளிகையினின்றுந் தான் வரவழைக்கப்பட்ட முதன்மையான காரணம் இன்னதென்று தனக்குத் தெரிவிக்கப்படுதற்கு அவள் எதிர்பார்த்திருந்த நாள் இன்றுதான். இன்னும், முன்னாள் மாலையில்நேர்ந்த நிகழ்ச்சிகளையும் அவள் நினைந்தாள். அத்தனை இனிமையோடும் உருக்கத்தோடுந் தான் எவனுடைய உயிரின்பொருட்டுக் கடவுளைத் தொழுதனளோ அவனை நினைந்து ஒருபெருமூச் செறிந்தாள்.

இரண்டரை நாழிகை நேரத்திற்குமேற் குமுதவல்லி அத்தோட்டத்திலே உலவிக்கொண்டிருந்தாள்; அப்போது தற்செயலாய் அவள் இதற்கு முன் தான் புகுந்திராத ஓர் ஒடுங்கிய வழியினூடே செல்வாளானாள். அதன் இருமருங்கும் பழந்தருமரங்கள் அடர்ந்து, அம்மரங்கள்மேற் படர்கொடிகள் சன்னல் பின்னலாய் வளர்ந்துகிடந்தமையாற், குமுதவல்லி இப்போது இறங்கியிருக்குங்கட்டிடத்திற்கு எதிர் வரிசையாய் அமைந்த கட்டிடத்தை நோக்கிச் செல்லுங் கொடிப்பந்தர்ப் பாதையாய் அஃது அமைந்திருந்தது. குமுதவல்லி இவ்வெண்ணங்களின் வயப்பட்டவளாய்க் கீழ் நோக்கிய கட்பார்வையுடன் இவ்வழியே சென்றாள். சடுதியிலே ஒரு சாளரத் தட்டிக்கதவு திறக்கப்பட்ட ஓசையும், அதே நேரத்தில் மகிழ்ச்சியும் வியப்புங் கலந்த ஒரு குரலொலியும் அவள் செவிக்கு எட்டின. உடனே அவள் மேல் நிமிர்ந்து நோக்கினாள்; அங்கே முதலடுக்கிலுள்ள ஒரு பலகணியண்டையில் இளைய நீலலோசனன் நின்றனன்.

கொள்ளைக்கார நல்லானென்றே தான் பிழைபடக்கருதிய அவ்வாடவனை மனோகரரது மாளிகையின் கண்ணே—தனக்கும் புகலிடமாய் அமைந்த அவ்வீட்டின்கண்ணே, அங்ஙனம் பார்த்தலுங் குமுதவல்லி தன்னகத்தே நடுக்கத்தால் எழுந்த கூக்

குரலொலியை வருத்தத்தொடுதான் அடக்கக்கூடியதாயிருந்தது. பெருந்திகிலும் வியப்புமே அவள் வாயைத் திறவாதபடி திடீரெனப் பூட்டிவிட்டன! உடனே விரைந்து முக்காட்டை இழுத்திட்டுக்கொண்டு திரும்பி அவ்விடத்தைவிட்டுக் கடுகிச் சென்றாள். தன் காதிற்குச் சில சொற்கள் வந்துகிட்டின—அவளது பேரச்சத்திற்குக் காரணமாயிருந்த ஆடவரின் வாயிலிருந்து மும்முரமாய்க் கத்திச்சொல்லப்பட்ட சொற்களே அவையாம். ஆயினும், அச்சொற்களின் பொருள் அல்லது கருத்து அவளுக்குப் பிடிபடவில்லை; அவளது மூளை அத்துணை குழம்பிப்போயிற்று, அவளுணர்வுகள் அத்துணை கலங்கிப்போயின. அவ்வீட்டுக்கார முதியோளை அழைத்துத் தன்னைத்தவிர அதே வீட்டின்கண் இன்னும் வேறு எவர் தங்கியிருக்கின்றாரென்பதனைக் கேட்டறியும் மனவுறுதியோடு அவள் விரைந்து தன் அறைக்குத் திரும்பினாள்; ஆனால், தன் உணர்வு தன் நிலைக்கு வந்தவுடனே குமுதவல்லி தான் மீனாம்பாளுக்குச் சொல்லிய உறுதிமொழியைப் பாதுகாக்கவும், விலக்கமுடியா நிகழ்ச்சிகளால் வெளிவிட நேர்ந்தாலல்லாமல் தான் கொள்ளைக்கார நல்லானென்றே பிழைபட எண்ணிய அவ்வாண்மகனைக் காட்டிக்கொடாதிருக்கவுந் தீர்மானித்தாள்.

அவள் மெத்தைப் படிக்கட்டின்மேல் எறிச் சென்ற அளவிலே குளியலறை வாயிலிற் சுந்தராம்பாளை எதிர்ப்படச், சுந்தராம்பாள் சொல்லுவாள்: "பெருமாட்டி, தங்களைக் காணும்பொருட்டு இவ்வீட்டுக்கார முதியோள் காத்துக்கொண்டிருக்கின்றாள்; அவள் தலைவரும் பெரிய வணிகருமான மனோகரர் இப்போதுதான் திரும்பிவந்திருக்கிறார்—"

"ஆ, அவர் திரும்பிவந்துவிட்டனரா?" என்று கூறுகையிற் குமுதவல்லி சொல்லுதற்கரிய ஆறுதல் எய்தப் பெற்றவளாய்த் தான்கொண்ட களிப்புத் தன் கண்களிலே ஒளிரச் "சிவனேபோற்றி!" என்று தன்னுள்மெல்லெனச் சொல்லிக்கொண்டாள்; ஏனெனில், தனக்குமிகத்தெரிந்தவரும் மாட்சிமை நிறைந்தவருமான மனோகரர் தனக்கு நண்பருந் தன்னைப்பாதுகாப்பவருமாய் இருப்பரென அவள் இப்போது உறுதியாய் நம்பினாள்.

தனக்கு அச்சத்தையுங் கலக்கத்தையும் விளைவித்த அக்கடைசியான நிகழ்ச்சியைப்பற்றி அவள் தன் பாங்கிமார்க்கு ஓர் எழுத்துக்கூடச் சொல்லவில்லை; ஏனென்றால், அவள் இயற்கையிலே பெருந்தன்மையான உள்ளமுடையவளா யிருத்தலின், தன்னிடத்தே நிறைந்த பற்றுதலும் நன்றியும் வைத்திருக்கும் அவ் விளம்பெண்கள் அஞ்சுதற்குரிய செய்திகளைத் தன்னால் இயன்றமட்டும் அவள் எப்போதும் விலக்கிவிடவே நினைந்தாள். செல்வத்திற் சிறந்த அவ்வணிகர் முன்னிலையில் தகுந்தபடி செல்லல்வேண்டி விரைவில் அவளுடைகள் சிறிது மாற்றி உடுக்கப்பட்டன. அவள் மந்திர மோதிரத்தை விரலில் அணிந்து கொண்டவளாய்த், தன்னை அவ்வணிகரின் முன்னிலையில் அழைத்துக்கொண்டு போதற்கென்று அவ்வீட்டுக்கார முதியோள் வந்து காத்துக்கொண்டிருக்கும் இருக்கையறைக்குச் சென்றாள்.

இடம்அகன்ற அக்கட்டிடத்தின் நடுவில் அல்லது முதன்மையான இடத்தில் அமைந்த அறைக்குச் செல்லாநின்ற பாதையினூடே குமுதவல்லி அம்முதியோளைப் பின்றொடர்ந்தேகினாள்: அவ்வறைக்கதவை அம்முதியோள் பாரக்கத் திறந்துவிட்டாள்; குமுதவல்லியும் உள்நுழைந்தாள். அழகிய பொருள்களால் ஒப்பனை செய்யப்பட்டிருந்த அவ்வறையின் கடைக்கோடியிற் சார்மணைக்கட்டிலின்மேல் அமர்ந்திருந்த மாட்சிமிக்க முதியோன் ஒருவனை முதன் முதற் கண்டாள்; கொள்ளைக்காரநல்லானென்றே தான் பிழைபடக் கருதிய அவ்வாடவன் முன்னிலையிலும் அங்ஙனமே தான் வந்திருப்பதைக் குமுதவல்லி அதன்பின் அடுத்துக் கண்டாள்.

பதினான்காம் அதிகாரம்

மனோகரர்

மலையநாட்டிற் பெரிய வணிகரான மனோகரர் முன்னிலையிலே தம்முளிங்ஙனம் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டபோது, நீலலோசனனுக்குங் குமுதவல்லிக்கும் உண்டான உள்ளநிகழ்ச்சிகள் வேறுவேறியல்பினவாய் இருந்தன. தான் முதன் முதற் கண்ட நேரந்தொட்டுத் தன் நெஞ்சைவிட்டுத் தவறாமல் அமர்ந்த அவ்வழகிய இளமங்கையின் வடிவைக் காண்டலும் அப்பௌத்த இளைஞன் மிகவுங் கிளர்ச்சியான களிப்புக் கொள்ளப் பெற்றான். தன்னிடத்து அவள் மிகவும் புதுமையாக நடந்துகொண்ட தனைப்பற்றி இவன் அடைந்த வியப்புங் கலக்கமும், ஒரு நொடிப் பொழுது இவன் இப்போதடைந்த பெருமகிழ்ச்சியினால் விழுங்கப்பட்டிருந்தன. இனி, மற்றவகையிற் குமுதவல்லியோ தனக்கெதிரே கொள்ளைக்கார நல்லானையே தான் பார்ப்பதாகக் கொண்ட மனத்துணிவின் வயப்பட்டவளாய் இருந்தனள். அவன் பெயரை வெளிவிட்டுச் சொல்லாமலிருந்ததும், அல்லது தன் உள்ளத்திற் பட்டதை வெளியே திறப்பாக விடாமல் இயன்றமட்டும் விலக்க முயன்றதும் அவள் மீனம்பாளுக்குக் கொடுத்த உறுதிமொழியின்பால் வைத்த நன்கு மதிப்பினாலேயாம். இங்ஙனமாக நீலலோசனன் ஒரு பக்கத்தில் அவளை வியப்புங் களிப்புங் காதலுங் கலந்த பார்வையொடு நோக்கிக்கொண்டிருக்க, அவளோ மற்றைப் பக்கத்திற் கீழ் நோக்கிய பார்வையினளாயும், நாணமுடையளாயினும் விழுமிய ஒழுக்கம் பொருந்தினவளாயும் மனோகரர் தனக்குச் சொல்வதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாம் முன் சொல்லியபடியே இம்மலையநாட்டு வணிகரானவர் பெரிதும் நன்கு மதிக்கப்படுந் தோற்றமுடையராயிருந்தனர். அவரது அகவை அறுபத்தெட்டு அல்லது எழுபதுக்குக் குறையாததாய் இருந்தது; தன்னுடைய மார்பின்மேற் றொங்கும் நீண்ட வெள்ளிய தாடிமயிர் உடையவராய் இருந்தார். வட்ட

வடிவான கண்ணாடியினால் மாட்டுக்கொம்புச் சட்டத்திற் கோத்துச் செய்யப்பட்ட மூக்குக்கண்ணாடியானது அவரது வளைந்த மூக்கின் நடுவே தொங்கிற்று ; வெண்மையான மெல்லிய துணியைப் பாகையாகத் தலையிற் கட்டியிருந்தார்; முழங்கால் அளவுந் தொங்கும் நீண்ட சட்டையும் பூண்டிருந்தார். உறுப்புகளின் உதவிகொண்டு மக்களின் மனப்பாங்கை மிகவும் மேற்பார்வையாய்ப் பார்த்துணர்வார்க்கும், இவரது முகத்தின்கண் அமைந்த ஏதோ ஒரு குறிப்பானது அலுவலிற் பழகிய நுண்ணறிவோடு இவரது ஈரநெஞ்சத்தின் இயல்பையும் புலப்படக் காட்டியது : முதலிற் சொன்ன இவரது குணத்திற் குரியதான தன்னய விருப்பமானது, பிறர் நலங் கருதும் இவரது பெருந்தன்மைக்கு முன் எந்த நேரத்திலுங் கீழ்அடங்கிப் போவதேயாதலை இவர் தம் பார்வைகளிலிருந்து தெரிந்துகொள்வது எளிதாயிருந்தது.

அந்த அறையிற் றளவாடங்கள் நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. தட்டிக்கதவுகளுள்ள அதன் சாளரங்களில் துணிமறைப்புகள் தொங்கவிட்டு ஒப்பனை செய்திருந்தது; வண்ணம் பூசிய அதன் மச்சுகளைச் சலவைக்கல்லாற் செய்த தூண்கள் தாங்கிநின்றன ; சுவர்களிலே ஓவியங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன; சார்மணைக்கட்டில்கள் ஒளிமென்பட்டினால் தைத்து ஓரங்களிற் பொற்சரிகையினாலும் இடையிற் பொன்னுருக்களாலும் புனையப்பட்டிருந்தன. சிறிய மேசையின் மேலும், நிலத்தின்மேலும், பலதிறப்பட்ட உணுப்பொருள்கள் நிறைத்த பலுவான வெள்ளிக்கலங்கள் இருந்தன. பெரும்பனிக்கட்டிகள் இட்டுக் குளிரச்செய்த இனிப்பான பழங்களை ஒருவகைச் சாந்தினால் வனையப்பட்ட ஒரு பெருங்கலத்திலே நிரப்பி அதனை ஒரு தவிசின்மேல் வைத்திருந்தார்கள் ; அம்மாளிகையைச் சூழ இருந்த வெளியிடம், நறுமணங் கமழ்ந்ததொடு, செயற்கைக் குழாய் ஊற்றுகளி லிருந்து குமிழிக்கும் பளிங்கொத்த தண்ணீரினாற் கூடுங் குளிர்ச்சியும் ஓர் அளவான இனியநிலை யுடையதாகவுஞ் செய்யப்பட்டிருந்தது.

நீலலோசனன் நாம் முதன் முதற் காட்டியபடியே உடையணிந்திருந்தனன் : ஆனால், குமுதவல்லியோ தான் குதிரை

மேல்இவர்ந்து வந்தக்கால் அணிந்திருந்த செழுமையான ஆடை யைவிட இன்னும் மிகுதியான அழகு வாய்ந்ததை உடுத்திருந் தனள். நேர்த்தியான பொற்பூ மிடைந்த கச்சினை அவள் முழங் கை வரையில் அணிந்திருந்தமையாற், பால்போலும் வெண்மை நிறமுடையதாய் அழகாக அமைந்த அவளது முன்கையானது முழங்கைவரையிலும் அல்லது அதற்குச் சிறிது மேலும் நன்கு கட்புலனாயிற்று. அவளது ஆடையின் ஓரமெல்லாம் பட்டுப்பின் னல் உடையதாய்ப் பலதிறப்பட்ட நிறங்கள் வாய்ந்ததாய்க் கச் சொடுகூட முழுதும் பூத்தொழில் உள்ளதாய் வயங்கிற்று. பொற்பட்டுக்கொட்டை யுடைய நொய்ய ஆடை அவளது தலைக் கணியாய் விளங்கிற்று. அவள் சொல்லுதற்கரிய அழகுடன் தோன்றினாள்; அவள் அங்கே எதிர்ப்பட்ட இளைய நீலலோ சனனும் ஆண்டன்மைக்கேற்றபடி அங்ஙனமே வனப்புடன் திகழ்ந்தனன்.

நீலலோசனன் முதலில் அவ்வறைக்குட் புகுந்தமையால், மாட்சிமை வாய்ந்த அவ்வணிகர் அவ் விளம் பௌத்தனுடைய விழைவு தரும் முகத்தையும் அழகிய வடிவத்தையும் போது மான அளவு ஏற்கெனவே பார்த்துக்கொண்டார். ஆதலால், அம் முதியோனது பார்வைமுழுதும் இப்போது குமுதவல்லிமேற் பதிந்திருந்தன; ஒருவகை அன்பான உன்னிப்போடும் வியப் போடும் இறும்பூதோடும் அவர் அவளை முற்றும் நோக்கினார். இவ் வாறாக அவரது பார்வை அவள்மேல் நின்றமையால், நீலலோ சனன் அவ்வழகிய பெண்மணியை முன் அறிந்த அறிமுகத் தோடுங், களிப்பும் மகிழ்ச்சியுங் கலந்த தோற்றத்தோடும் அங் ஙனமே அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததனை அவர் காணாராயினர்.

அவள் முதலில் அவ்வறைக்குள் வந்தபோது அவளை வர வேற்றற்பொருட்டுச் சுருக்கமாகச் சொல்லிய சில சொற்களுக் குப்பின் சிறிதுநேரம்வரையில் மனோகரர் ஏதொரு சொல்லுங் குமுதவல்லியை நோக்கிக் கூறாமல் இருந்தார். அவர் அவளது முகத்தை நோக்கிக்கொண்டிருந்தது, அவளுடைய அழகு அத் தனை கவர்ச்சிமிக்கதாய் இருந்ததனால் மட்டுமன்று; அஃது அவ

ளாது இயல்பினைத் தெரிந்துகொள்ளுதற் பொருட்டுமே யாம். ஏனென்றால், தன் மேற்பரப்பின்மேன் மிளிரும் எதனையுங் கண்டுணர வல்லார்க்கு உள்ளத்தின் கண்ணாடிபோன்று என்றும் விளங்குவதாகிய முகத்தினையே ஒரு கருவியாக்கொண்டு உயிரின் ஆழத்தையும் உள்ளத்தின் ஆழத்தையுந் துருவிக் காண்பதில் தம்மை மிகவுந் திறமையுடையராகச்செய்தற்கேற்ற அளவில் அம்மலையவணிகர் நீண்டகாலம் உயிர் வாழ்ந்து வந்தனர், உலகினியற்கையை வேண்டியவளவுக்குக் கண்டுகொண்டவராயிருந்தனர்.

குமுதவல்லி முதலிற் புகுந்தபோது, மனோகரர் எதிரே நீலலோசனன் வணக்கமான நிலையில் நின்றுகொண்டிருக்கக் கண்டாள்: அவர்தம் முதுமைக்கும் அவர்தந் தோற்றத்திற்கும் அம்மாளிகையில் விருந்து புறந்தருந் தலைவராயிருக்கும் அவர்தம் நிலைமைக்குந் தக அதே வணக்கமான நிலையுடன் அவளும் அங்ஙனமே இப்போது நின்றுகொண்டிருந்தாள். இவ்விருவரது நடக்கையும் அவருக்கு உவப்பினைத் தந்தது: கடைசியாக அவர் வாயைத் திறந்து, "என் இளைய நேசர்களே—நாம் இப்போதுதான் முதன்முறையாக ஒன்றுகூடினோமாயினும் யான் உங்களிருவரையும் அங்ஙனமே கருதுகின்றேன்—நரை முதியோர்க்குரிய மதிப்பினை நீங்கள் அறியாமலிருக்கவில்லை. என் முன்னிலையில் நீங்கள் நின்றுகொண்டிருக்கின்றீர்களே; மக்களுக்குரிய நிலைமைகளின்படி நம்முடைய நிலைமைகளைப்பார்த்தால் அம்முறையில் யான் உங்களிருவரையும்விட மிகத்தாழ்ந்த நிலையில் உள்ளேன். மாட்சிமை வாய்ந்த அரசி தங்களிருக்கையில் அருள்கூர்ந்து அமருங்கள்." என்று குமுதவல்லிக் குரைத்துப், பின்னும் நீலலோசனன் பக்கமாய்த்திரும்பி "அரச, தாங்களும் இருக்கையில் அமரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." என்று அவர் கூறினர்.

ஓர் அரசிக்குக் கீழ்ப்படாத நிலையினைக் குறிக்கும் மொழிகளாற் குமுதவல்லி முன்னிலைப்படுத்துக் கூறப்படுதலைக் கேட்டதும் அவ் விளம் பௌத்தன் இறும்பூதுற்றுத் திடுக்கிட்டான்; இனி, மற்றவகையிற் குமுதவல்லியோ தானும் அங்ஙனமே

திடுக்கிடாமல் இருக்கக்கூடவில்லை—ஏனென்றால், அரசியன் முறையில் எத்தகையோர்க்குரிய கோலத்தில் அக்கள்வர் தலைவன் தன்னைமறைத்து அம்மலைய வணிகரின் முன்னே வந்து சேர்ந்தானென்று அவள் வியப்புற்றாள்.

"என் இளைய நண்பர்காள்," என்று மனோகரர் கூறுகையில், நீலலோசனன் தமது இடதுகைப்புறத்தும், குமுதவல்லி தமது வலதுகைப்புறத்தும் உள்ள இருக்கைகளில் அமர்தலைக் கண்டு அன்போடும் முறுவலித்து, "உங்கள் ஒவ்வொருவர்க்கும் ஏற்ற நிலைமைக்குத்தக யான் உங்களை முன்னிலைப்படுத்திப் பேசியபோது உங்கள் முகங்களின்மேல் வியப்புக்குறி தோன்றியதை யான் கண்டுகொண்டேன். ஆனாலும், இதற்குமுன் என்றும் நீங்கள் ஒருவரையொருவர் கண்டு பழகியதில்லாமையால், இப்போது உங்களை ஒருவரோடு ஒருவரைப் பழக்கப்படுத்திவைக்கின்றேன். அதனோடுகூடக், கட்டாயமாய் இல்லாவிட்டாலுங் காரியமுறைக்காகவாவது ஒரு வினையைச் செய்துமுடிக்கக்கடவேன். எனக்கு நம்பகமுள்ள ஏவலாளான சந்திரன் வாயிலாக யான் விடுத்த திருமுகமும் இலச்சினையும் பெற்றுக்கொண்ட நாகநாட்டரசி குமுதவல்லி உண்மையிற் றுங்களேயன்றி வேறு பிறர் அல்லர் என்பதனை யான் உறுதிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு அவ்வடையாளத்தை எனக்குக் காட்டும்படி, பெருமாட்டி, முதலிற் றங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்." என்றார்.

முன்னே பலகாலும் நம்மாற் குறிப்பிடப்பட்ட அம் மந்திர மோதிரத்தைக் குமுதவல்லி தன் விரலினின்றுங் கழற்றியெடுத்து, அதனை மாட்சிமிக்க மனோகரரிடங் கொடுத்தாள்.

"இதோ என்னுடையது!" என்று நீலலோசனன் கூறிக்கொண்டே கத்தி மாட்டுந் தனது அரைப்பட்டிகையை அவிழ்த்தான்; தன்னை மெய்ப்பிக்குந் தனது அடையாளத்தை எடுத்துக்காட்டும் பரபரப்பில் மணிகள் அழுத்தின தனது கத்தியையுங் கீழே மெதுவான கம்பளிமேல் விழும்படி விட்டுவிட்டான்; பிறகு தனது குப்பாயத்தின் மார்பண்டையுள்ள ஒரு பையிலிருந்து அதனையெடுத்தான்; பாட்டையிலே தான் வந்தபோது

தனது பணப்பையி லுள்ளவை தற்செயலாய்க் கீழ்விழுந்திதி லிருந்து, அவன் அதனிடத்துப் பெரிதுங் கருத்துள்ளவனு யிருந்தான்.

இவ்வாறு அவன் மனோகரரிடங் கொடுத்ததும் ஒருமோதிரமே தான்—குமுதவல்லி இப்போது கொடுத்ததனையே முழுதும் ஒத்திருந்தது இம்மோதிரம்—ஒரு சுன்னஞ் செதுக்கப்பட்ட ஒரேயொரு செம்மணி குயிற்றிப் புதுமையான வேலைப்பாடு வாய்ந்ததாயிருந்தது இம்மோதிரம். இதனையும் மனோகரர் எடுத்துத் தொழிலாளிக் குரிய உன்னிப்போடும் அதனைச் சிறிதுநேரம் ஆராய்ந்து பார்த்தார். தனது மோதிரத்திற்கு முற்றும் இணையான அக்கணையாழியைக் காண்டலுங் குமுதவல்லிக் குண்டான குழப்பத்தையும் வியப்பையும் இதனைப் பயில்பவரே எண்ணிப் பார்த்துக்கொள்ளலாம்! இதன் கருத்து யாதாய் இருக்கக் கூடும்? அவ் விளம் பெளத்தனைப்பற்றித் தான் ஏதோ முழுதும் பிழைபாடான எண்ணங்கொண்டு வருந்துகின்றனளா? தான் கொண்ட ஐயங்களால் அவனுக்குப் பிழை செய்தனளா? சூழ நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சான்றாய் நின்று புதுமையாய்க்கூடி அவ் விளைவினைத் தோற்றுவித்தனவா? ஏது நினைப்பதென்று அவளுக்குப் புலனாகவில்லை.—உண்மையிலே அவள் நினைவுகளெல்லாங் கடிதிற் கலக்கமடைவனவாயின.

"நல்லது, உங்களிருவரையும் இங்கே வருவித்தற்பொருட்டுத் தனித்தனியே விடுத்த முடங்கலுடன் விடுத்த மோதிரங்களே இவை; இந்தப்பெருமாட்டி" என்று மனோகரர் குமுதவல்லியைச் சுட்டினவராய் அவ் விளம் பெளத்தனை நோக்கி, "நாகநாட்டரசி யாவர்" என்று கூறிப், பின்னர் அவ்விளைஞனைச் சுட்டினவராய்க் குமுதவல்லியை நோக்கி, "இந்தப் பெருமான் மேற்கரைநாட்டு மன்னற்கு எடுப்புப் புதல்வனான நீலலோசனன் ஆவர்." என மொழிந்தார்.

"அன்பும் ஈரமும் வாய்ந்த மனோகரரே, யான் அரசனான நீலலோசனனை இதுதான் முதன்முறையாக எதிர்ப்பட்டேன் அல்லேன்; யான் அவருக்குச் செய்த சில பிழைகளுக்காக என் நெஞ்சார்ந்த மன்னிப்புமொழிகளை, என் மிகவும் உண்மையான

பிழைபொறுக்கு முறைகளைக் கூறுதற்கு ஒரு நொடிப்பொழுதுந் தாழேன்.'' என்று உருக்கத்தால் நடுங்கிய குரலோடுங் குமுதவல்லி கூறினாள்.

மனோகரர் அவ்விளைஞர் இருவரையும் வியப்புடன் நோக்கி, ''நீங்கள் இருவீரும் இதற்குமுன் எதிர்ப்பட்டீர்களா? இவ்வறையில் ஒருவரையொருவர் நீங்கள் காணும்நேரம் வரையிற், பெயரளவாய்க்கூட நீங்கள் ஒருவரையொருவர் தெரிந்திருக்க மாட்டீர்கள் என்று எண்ணினேன்.'' என்று கூவிச்சொன்னார்.

''என்றாலும், நாங்கள் முன்னமே எதிர்ப்பட்டிருக்கின்றோம்.'' என்று கூறுகையில் நாகநாட்டரசி நாணத்தால் தன் முகஞ் சிவப்பேறப்பெற்றவளாய் ''ஆம், மாட்சிமைதங்கிய நீலலோசன மன்னற்கு யான் தீது செய்தவளானேன்; அதுவும் மிகப்பொல்லாத ஐயறவினாலேதான். என்னுடைய கதையை விரைவிற் சொல்லிவிடுகின்றேன். அருமையிற்சிறந்த மனோகரரே, யான் இடையிற் றங்கிய சாவடியின்கண் என்னுடைய மோதிரத்தை—இப்போது தங்களிடம் யான் கொடுத்த இவ்விலைஉயர்ந்த மந்திரமோதிரத்தைக் களவுகொடுத்துவிட்டேன்: அந்தநாளில் இவ் விளம்பெருமானைத் தலைப்பட்டு இவரொடு தோழமை கொண்டேன். வழிக்கரையிலுள்ள ஐயக்காரர் சிலர்க்குக் காசு ஈந்து உதவுகையில், இவர் தற்செயலாய்த் தமது பணப்பையிலிருந்தவற்றைக் கீழே வீழ்த்திவிட்டார்; வீழ்ந்தவற்றில் ஒரு மோதிரம் இருந்தது; அஃது என்னுடையதுதான் என்று நம்பிவிட்டேன். ஆனால், அந்த மறை பொருளின் வரலாறு இப்போது வேறுவகையாய்ப் புலப்படலாயிற்று: அந்த நேரத்திலோ யான் ஒரே எண்ணந்தான் கொள்ளக்கூடியதாய் இருந்தது—ஆகவே, கூடியமட்டுங் காலந் தாழாமல் மாட்சிமை தங்கிய இவ்வரசிளைஞரை யான் பிரிந்துசெல்லவேண்டுவது இயல்பாயிற்று. பிறகு ஒருவர்க்கு நேர்ந்த கழிவிரக்கத்தால் என்னுடைய மோதிரத்தைத் திரும்பப் பெறலானேன்—என்றாலும், அந்நிகழ்ச்சியிலுங்கூட யான் மாட்சிமை தங்கிய நீலலோசன மன்னரைப்பற்றிப் பொல்லாங்காகவே பின்னும் நினைக்கலானேன்.'' என்று தொடர்ந்துரைத்தாள்.

"ஓ! புத்தன் வாழ்க!" என்று அவ் விளம்பௌத்தன் ஓலமிட்டவனாய், "என் அறிவைக் கலக்கி என்னை மிகத் துன்புறுத்தி வந்த அந்த மறைபொருளானது கடைசியில் நன்கு புலனாயிற்று! இனி மன்னிப்புக் கேட்டலைப் பற்றியோவென்றால், அழகிய அரசீ, தங்கள் ஆம்பற்செவ்வாயினின்று பிறக்கும் ஒரு சொல்லே, மாட்சிமை மிக்க தாங்கள் என்னைப் பிழைபட நினைந்ததனால் உண்டான எனது மனத்துயரத்தை எனதுளத்திலிருந்து சுவடறத் துடைத்தற்குப் போதுமானதாகும்!" என்று கூறினான்.

குமுதவல்லி தனது முகத்தை அழகாகச் சாய்த்து இச்சொற்களை ஏற்றுக்கொண்டாள்; அப்போது நாணத்தால் உண்டான சிவப்பு அவள் சென்னைங்களில் மறுபடியும் பரவிற்று; இவ் விளம்பௌத்தனுங் கொள்ளைக்கார நல்லானும் ஒருவரே என்று இவள் பிறது ஒரு சிறிதும் நினையாவிட்டாலும், நீலலோசனனைப் பற்றிய மற்றொருசெய்தி இவளைத் திகைப்பித்தது; அஃது. அவன் முன்னாள் மாலைக்காலத்திற், குமுதவல்லி தனது மன்னிப்பை மீனும்பானுக்கு உறுதிப்படுத்திக் கூறின கட்டிலண்டையிற் காணப்பட்டதேயாம். அவ்விடத்தில் தாம் எதிர்ப்பட்டதைச் சுட்டி இப்போது அவன் சிறிது எதுங் குறிப்பிடாதது பற்றியும் அவள் திகைப்புற்றாள்: ஏதோ ஒரு காரணம் பற்றி அதனை மனோகரர் முன்னிலையில் அவன் தெரிவியாமல் மறைத்துவைக்கும்படி கற்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று நினைந்தவளாய் அவள் அதனைத் தனக்குள் இணக்கிக் கொண்டாள்.

"அங்ஙனம் நீங்கள் எதிர்ப்பட்டீர்களா?" என்று அம்முதியோன் அவ்விருவர் இடையிலும் இருந்தபடியே, அவ்வழகிய இளைஞனையும் எழில் மிக்க அந்நங்கையையும் இடைவிடாத ஆவலுடன் நோக்கிப் பின்னும், 'நீங்கள் அவ்வாறு எதிர்ப்பட்டதைப்பற்றி யான் வருத்தப்படவில்லை. அரசீ தாங்கள் கூறிய அப்பொருந்தா நிகழ்ச்சி நேராவிடின், இவ் விளம்பெருமானைப் பற்றித் தவறாமல் தாங்கள் நல்லெண்ணங் கொள்ளுதலைத் தடைசெய்யத்தக்கது எதுவும் நேர்ந்திராது: நீலலோசன, தாங்களும்,

அரசி குமுதவல்லியொடு கொண்ட வழிநடை நட்புச் சடுதியிற் குலைந்து போனபோது நிரம்பவும் வருத்தப்பட்டீர்களென்பதனைத் தங்கள் பார்வையினாலேயே நன்கு தெளியப்பெற்றேன்.'' என்று உரைத்தார்.

நீலலோசனனது முகம் வெட்கத்தால் அனன்றது; என்றாலும் அதில் மகிழ்ச்சியுங் கலந்து தோன்றியது: ஆனாற், குமுதவல்லியினிடத்துத் தோன்றிய நாணமோ இன்னும் பெரிதாயிற்று—அங்ஙனமே அவள் முகத்திற் கனன்ற நாணச் சிவப்பினிடையே அருவருப்பிற்கு அடையாளமான ஒரு பார்வையுங் கலந்து தோன்றியது. அவள் நினைப்பாளானாள்—அங்ஙனம் நினைப்பது இயல்புதான்—அம்முதியோன் பேசியதில், கொச்சைத்தனம் என்று கொள்ளத்தக்க, ஒரு பொருந்தாச் சிறு தன்மை இருந்தது. பெருந்தன்மை மிக்க பார்வையும் அத்தனை முதுமையும் உடைய அவர், தனது கன்னிமை நாணத்திற்கு மதிப்புக் குறைச்சலான சொற்களை எண்ணாமற் சொல்லிய குற்றத்திற்கு ஆளானதைக் குறித்து அவள் வியப்பும் வருத்தமுங் கொள்ளலானாள்.

ஆனால், அப்பெரியார் புன்சிரிப்புற்றுப் பிழைபடாத அன்போடு, அவள் கொண்ட அருவருப்பைத் தடையின்றி நீக்கத் தக்க வகையாய்க் கூறுவார்: 'அரசீ, தங்கள் கன்னிமை நாணத்திற்கு நான் பிழை செய்யமாட்டுவேன் என்று ஒருபோதும் நினையாதீர்கள். நாகநாட்டரசி தமது பேரழகிற்குப் பெற்ற புகழினுந் தமது நல்லொழுக்கத்திற்குப் பெற்ற புகழிற் சிறிதுங் குறைந்தவர் அல்லரென்பதும்—ஓர் அரசிக்குரிய மேன்மையால் தாங்கப்படுதலினுங் கன்னிமைப் பெருமையால் தாங்கப்படுதலிற் சிறிதுங் குறைந்தவர் அல்லரென்பதும் நான் அறிவேன். சுருங்கியபொழுதில் வழி நடந்து செல்லுதற்குத் தோழமையாய்க்கொண்ட அயலவனான ஓர் இளைஞனிடத்தில் தாங்கள் மையல் கொள்ளத்தக்கவர்களென்று, இனிய அரசீ, அத்தனை பரும்படியான ஒரு நினைவை யான் கொள்ளத்துணிவேனென நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை: என் சொற்களுக்கு வேறு பொருளுண்டு, இப்போது உண்மையைச் சொல்லிவிடுகின்

றேன்—உங்களிருவர் கைகளும் நேசவுரிமையிற் பிணைக்கப்படு வனவாக! ஏனெனில், உங்கள் நரம்புக் குழாய்களில் ஒரே குடும் பத்திற்குரிய செந்நீர் புரண்டோடுகின்றது—நீங்கள் இருவீரும் மைத்துனக்கிழமை உடையீர்கள்!''

நீலலோசனன் குமுதவல்லி என்னும் அவ்விருவர் வாய் களினின்றும் உடனே வியப்பொலிகள் தோன்றின; சிறிது நேரம் மிகப்பெரிய திகைப்பின் வயப்பட்டவர்களாய் இருந்த மையால், அவர்கள் தமது இருக்கையினின்றும் எழுந்து நின் றனராயினும், தாங் கைதழுவ வேண்டுமென்று கற்பிக்கப்பட்ட படி செய்ய நினைவற்றவராய் இருந்தனர்.

''என் இளையநேசர்களே, நீங்கள் இருவீரும் நாகநாட்டை ஒருகால் அரசாண்ட கோச்செங்கண்மன்னற்குப் பேரப் பிள்ளைகள் ஆவீர்கள் என்பது உண்மையேயாம்.'' என்று மனோகரர் வணக்கமொடுக்கத் தோடுங்கூறினார்.

பௌத்த சமயத்தவனை தான், நாகநாட்டில் அரசுபுரிந்த சைவசமய அரசன் கால்வழியில் வந்தவனுதல் எவ்வாறு கூடு மென்றெண்ணி நீலலோசனன் பெரிதுந் திகைப்புற்றனனாயி னும், வியப்புங் களிப்பும் ஒருங்கே கிளரப்பெற்றவனாய், ''மைத் துனி, என் கையை ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும்!'' என்று உரத்துச்சொன்னான்.

குமுதவல்லியுந் தான் கேட்டவைகளைப்பற்றித் திகைப் புற்றனளாயினும், போற்றத்தக்க தம் நண்பனை அம்முதி யோன் வாயினின்று பிறக்கும் ஒவ்வொன்றும் உண்மையாகத் தான் இருக்கவேண்டுமென்று உணர்ந்தவளாய்த் தனது வெண் மையான அழகிய கையை நீலலோசனன் கையில் வைத்தாள்.

உடனே, மனோகரர் தமது இருக்கையினின்றும் எழுந்து, அவ்விளைஞர் இருவரின் சென்னிமேற் றம் கைகளை நீட்டிக், ''கடவுள் உங்களிருவர்க்கும் அருள் வழங்குவாராக! மற்றொரு வர் பொருட்டாக யான் உங்களுக்கு விரைவிற் கொடுப்பதாய் இருக்கும் புதுமையான பொருட்டிரளுக்கு, நீங்கள் தகுதி யுடையவர்களாம்படி நாம் வழிபடும் முதற்பெருங் கடவுள் அருள்புரிவாராக! ஓ,நீலலோசன, சைவ சமயத்தின் அருளொ

ளியானது நமதுள்ளத்தில் ஊடுருவிச் சென்று விளங்குவதாக!" என்று வாழ்த்துரை கூறினர்.

இச்சொற்களைச் சொல்லிய வகையிலும் ஓசையிலும் வெளித்தோற்றமும் வணக்க வொடுக்கமும் வாய்ந்தது ஏதோ இருந்தமையால், அப்பௌத்த இளைஞனும் அச் சைவநங்கையும் அவர் காலடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள்; அவருடைய கைகளை எடுத்து முத்தம் வைத்தார்கள். ஆனால், அவ்விருவரும் ஒன்றுமே பேசவில்லை: அவர்கள் தம்மிடத்துண்டான மிகுந்த மனவுருக்கத்தாற் பேசக்கூடாதவராய் இருந்தனர். ஆகவே, சமயம் மாறுதலைப்பற்றி அம்முதியோன் சொல்லிய சொற்கள் எவ்வகையான எண்ணத்தை நீலலோசனனிடத்தில் எழுப்பினவென்பதை அங்ஙனங் கோரிய அம்முதியோனே அஃது எங்ஙனமிருக்கலாமென்று திட்டமாய்த் துணிந்தறியக் கூடவில்லை.

"என் அன்பிற்கினிய இளையநேசர்களே, எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! உங்கள் இருக்கைகளில் இருங்கள்—யான் சொல்லப்போகிற விளக்கங்களை உற்றுக்கேளுங்கள்." என்று மனோகரர் கூறினர்.

அங்ஙனமே குமுதவல்லியும் நீலலோசனனும் எழுந்து, வணங்கத்தக்க அவ்வணிகரின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் முறையே உட்கார்ந்தனர், இவ்விருவரும் அவர்முகத்தை மிகுந்த ஐயுறவோடும் உற்றுப்பார்த்தனர்; ஏனென்றால், முதன்மையான செய்திகளைத் தாம் இப்போது அறியப்போகுந் தறுவாயில் இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

மனோகரர் அவ்வரசி பக்கமாய்த் திரும்பி, "மாட்சிமை நிறைந்த தங்களை நோக்கி மட்டும் யான் கூறுவதாயிருந்தால், தங்கள் பாட்டனாரான கோச்செங்கண் மன்னரைப் பற்றித் தாங்கள் முன்னமே அறிந்துவைத்திருக்கும் பல சிறுவரலாறுகளை யான் கூறாது விட்டுச் செல்லலாம். ஆனாற், பெருமான் நீலலோசன, தாங்கள் அவ்வரலாறுகளைச் சிறிதும் உணர்தற்கு இடமில்லாதிருத்தலினால், யான் அவற்றின் நுணுக்கங்களை எடுத்துச் சொல்லவேண்டுவது அகத்தியமாய் இருக்கின்றது. கோச்செங்கண் மன்னர் நாகநாட்டைத் தனியரசு புரிந்தவ

றென்று தாங்கள் அறிதல்வேண்டும்; அவர் தமது நுண்ணறிவு முறையாலுந், தாம் பிறழாது நடாத்திய செங்கோன்மையாலுந், தாமாகவே ஆங்காங்கு நாட்டிய அறச்சாலைகளாலுந், தங் குடிமக்களாற் பெரிதும் அன்பு பாராட்டிப் போற்றப்பட்டு வந்தார். நாகப்பூரிலுள்ள தமது அரண்மனையில் அவர் வழக்கமாய்த் தங்கியிருந்தனர்—அழகிற்சிறந்த குமுதவல்லி, தாங்கள் அவ்வரண்மனையிலிருந்து தான் சிறிது காலத்திற்குமுன் பயணம் புறப்பட்டு நீலகிரி நகரத்திற்கு வந்து சேர்ந்தீர்கள். நீங்கள் இருவீரும் பிறப்பதற்குமுன்—அதாவது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இருக்கலாம்—வணங்கத்தக்க முனிவர் ஒருவர் ஒருநாள் அவ்வரண்மனை வாயிலில் வந்து நின்று, தாம் கோச்செங்கண் மன்னனொடு பேச விரும்புவதாகத் தெரிவித்தனர். தன்னைக் காண வருபவர்கள் எல்லார்க்கும் எப்போதும் எளியராயிருக்கும் அம்மன்னர் தூயரான அத்துறவியை எவ்வளவு விருப்பத்தொடு வரவேற்பாரென்பதை நாம் சொல்லல்வேண்டா; மேலும், உங்கள் பாட்டனார் சைவசமய உண்மையில் மிகவும் மனம் அழுந்தினின்றார்; தமது ஆணை பரவிய இடங்களிலெல்லாம் அவர் அதனைத் தம்மாற் கூடிய மட்டும் வளர்த்துவந்தார். அம் முனிவர் அவர் முன்னிலையிற் சென்று, தாமிருவருந் தனித்திருக்கும்படி கேட்டுக்கொண்டார். அம் மன்னரும் அதற்கிசைந்து தம் பரிவாரங்களை அப்புறப்படுத்திவிட்டார்; அதன்பின் அத்தூயமுனிவர் அவ்வரசர் செவியிற் படும்படி மிகவும் புதுமையான செய்திகளைக் கூறத்துவங்கினார். பின்வருகிறபடி அவ்வரசனை நோக்கிச் சில பல கூறுவாராயினார்: 'என் அரசே, புதுமை மிக்க ஒரு மறைவான செய்திக்கு வைப்பிடமாய் உள்ளவர் இந்நேரத்தில் இவ்வுலகில் இரண்டு பெயரே இருக்கின்றனர். சில கிழமைகளுக்கு முன் அதனை யறிந்தவர் மூன்று பெயர் இருந்தனர்; ஆனால், ஒருவர் இறந்துபோயினர்—இப்போது அம்மறைவினைத் தம் நெஞ்சத்தே பூட்டிவைத்திருப்பவர் இருவரே யிருக்கின்றனர். தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கத்தின் தூய கட்டுப்பாட்டின்படி, இப்போது அம்மறைபொருள் மூன்றும் ஒருவர்க்கு அறிவிக்கப்படவேண்டுவதாய் இருக்கின்

றது; ஏனெனில், அம்மறைபொருள் முற்றுமே தெரியாமல் அழிந்துபோதற்கு இடம் இல்லாதபடி இயன்றமட்டும் அதனைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டாகவே அதனைத் தெரிந்தவர்கள் எப்போதுமே மூன்றுபெயர் இருக்க வேண்டுமென்பது அகத்தியமாகக் கருதப்பட்டது. யான் இப்போது குறிப்பிட்டுச் சொன்ன தொன்றுதொட்டவழக்கும், அம்மறைபொருளின் இயற்கையும், போற்றத்தக்க அம்மறைவினைப் புதிய ஒருவர்க்கு அறிவிக்கவேண்டுவது அகத்தியமாம் பொழுது அதற்கு மிகவுந் தக்கவர் ஒருவரையே தெரிந்தெடுத்தல் வேண்டுமெனக் கற்பிக்கின்றன. அங்ஙனந் தக்கவரா யுள்ளவர் இவ்வளவு அகவையுடையவரா யிருக்கவேண்டு மென்னும் வரையறை யில்லை: ஆனால், சமயக் கொள்கையைப் பற்றியோவென்றால் அப்படியில்லை—ஏனென்றால், சைவ சமயத்தைத் தழுவினோரல்லாமற் பிறர் இப்பெரிய புதைபொருளை அறியும் மகிழ்ச்சி பெறலாகாது. மாட்சிமை தங்கிய தங்கட்கு இப்போதுதான் யான் தெரிவித்த வண்ணம், இம்மறைவினை அறிந்தவரில் ஒருவர் இதனினுஞ் சிறந்த மறுமை யுலகத்திற்குச் சில நாளுக்கு முன் ஏகிவிட்டமையால், அவரிருந்த இடத்திற்கு நிரம்பவுந்தகுதியான மற்றொருவரைத் தெரிந்தெடுக்குங் கடமை என்னைப் பொறுப்பதாயிற்று. அறிவாலும் அரசுமுறையாலும் மன்னர் எல்லாரினுஞ் சிறந்தவரும், அன்பொழுக்கத்தாற் சைவ சமயத்தார் எல்லாரினும் மேம்பட்டவருமான கோச்செங்கட் சோழரைத் தவிர வேறு சிறந்தவரை யான் எங்ஙனந் தெரிந்தெடுக்க வல்லேன்?' என்று இவ்வாறு மேற்கணவாய் மலைநடுவிலிருந்து வந்த அத்தூயமுனிவர் உங்கள் பாட்டனார்க்குச் சொல்லினார்.'' எனப்புகன்றனர்.

போற்றத்தக்க மனோசரர் துவங்கிய கதையை மிகவும் மனங்கவிந்து கேட்டுக்கொண்டுவந்த அரசி குமுதவல்லியும் அரசிளைஞன் நீலலோசனனும் பின்னும் அதன் றொடர்ச்சியாய் அவர் சொல்லப் போவதனைக் கேட்க எவ்வளவு ஆவல் கொண்டார் என்பதை அவர்களின் பார்வைகளே புலப்படுத்தின.

வணங்கத் தக்க அவ்வணிகர் பின்னும் அதனைத் தொடர்ந்துரைப்பாரானார்: "மிகவும் போற்றத்தக்கதென்றுஞ் சிறந்ததென்றுஞ் சொல்லப்பட்ட மறைபொருளை வைத்திருப்பவர்களில் ஒருவராகத் தம்மைத் தெரிந்தெடுத்ததனால் தமக்கு நயம் புரிந்த அத்தூய முனிவருக்கு நுங்கள் பாட்டனாரான அக்கோச்செங்கண் மன்னர் தமது நன்றியறிதலைத் தெரிவித்தார்; பின் வருமாறு அம்முனிவர் அம்மாட்சிமை நிறைந்த மன்னர்க்கு உரைப்பாரானார்: 'எம்பெருமானே, இது காலகாலமாக உண்மையோடுங் கொடுக்கப்பட்டு வருகிற ஒரு புதைபொருளாகும்; மிகவுந் தாழ்ந்த நிலைமையி லுள்ள துறவிகளிடத்தும், மிகவும் உயர்ந்த நிலைமையிலுள்ள அரசர்களிடத்தும் இம்மறைபொருள் வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இதனைத் தெரிந்துகொள்வதானது, உலகத்தில் நிரம்பவும் வியக்கப்படுகின்ற பயன்களைத் தாம் நுகரத்தக்கவர்கள் என்று எண்ணுவோர்க்கு ஒரு திறவுகோலாயிருக்கும். தனதறிவுக்குள் அகப்படும்படி இங்ஙனங் கொண்டுவரப்பட்ட வியப்பான பொருள்களை மிகுகளிப்போடும் பேரின்ப வியப்போடும் உற்றுக் கேட்டுக்கொண்டு வந்த கோச்செங்கண் மன்னர்க்கு அம்முனிவர் அம்மறைபொருளை அதன்பின் விளக்கி வெளியிட்டார். அந்த மறைபொருள் யாதாயிருந்தது—அல்லது யாதாயிருக்கின்றது—என்பதை, என் அன்புள்ள இளைய நண்பர்களே, இப்போது யான் சொல்லுங் காரணங்களால், உங்களுக்கு இவ்வமயத்திற் சொல்லக்கூடாதவனாயிருக்கின்றேன். ஆனாலும், அழகிற்சிறந்த குமுதவல்லி தங்களுக்கு மட்டும் அது சுருக்கில் தெரிவிக்கப்படலாம்; நீலலோசனரே, தங்களுக்கு யான் அதே வகையான நம்பிக்கையை எப்போது காட்டப்பெறுவேனோவென்றால் அது தங்களைத்தான் பொறுத்திருக்கின்றது."

மறுபடியும் மனோகரர் சிறிதுநேரம் பேசாதிருந்தார்; அப்பெரிய மறைபொருளைத் தானும் அங்ஙனமே தெரிந்துகொள்ளத் தகுதியுடையவனாய்க் கருதப்படுவதெல்லாந், தான் பௌத்த சமயக் கொள்கையை அறவே விட்டொழிப்பதனையே பொறுத்திருக்கவேண்டுமென்பது, தான் இது வரையிற் கேட்டுவந்த

வற்றால் இனிது விளங்குகின்றதென நீலலோசனன் தனக்குள் நினைப்பானானான். இதைப்பற்றி அவன் மனநிலை எவ்வாறிருந்த தென்பது பின்வருவனவற்றாற் புலனாகும்.

மனோகரர் பின்னுந் தொடர்ந்துரைப்பாரானார்: “யான் இப்போது குறிப்பிட்ட மறைபொருளைச் சிறிதும் வழுவாமல் முற்றுந் தெரிந்துகொள்ளும் பொருட்டுக் கோச்செங்கண் மன்னர் அத்துறவியோடுங்கூடப் பயணம் புறப்படவேண்டுவது இன்றியமையாததாயிற்று. அப்பயணஞ் சென்று திரும்புதற்குச் சிலநாட்கள்மேற் செல்லாது; ஆகவே, தாம் நாகநாட்டின் தலைநகரை விட்டு வெளியே சென்றிருப்பது தம்மைச் சூழ்ந்திருக்கும் நன்றியறிவுள்ள ஏவற்காரர் சிலர்க்கன்றிப் பிறர்க்குத் தெரியாதிருக்கும் வண்ணம் அவ்வரசர் பெருந்தகை அதனை மறைவாகவே முடிக்கக்கூடியவரானார். என்றாலும், அவர் அத்தூய துறவியைத் தவிரப் பிறரெவரையும் உடன்கூட்டிச்செல்லவில்லை; அம்முனிவர் எடுத்துச்சொன்ன உறுதிமொழியின் திறத்தில் அவர் ஏமாற்றம் அடையவில்லை. அவ் வியத்தகு மறைபொருட்களஞ்சியமாயும், அதனையறிந்த அறிவால் தாம் அடையக் கிடந்த நிலையான பயன்களிற் சிலவற்றைப் பெற்றவராயும் அவர் நாகப்பூருக்குத் திரும்பிவந்தார். இரண்டு ஆண்டுகள் கழிந்தபிறகு அப்புனிதமுனிவர் நம்பிக்கை வாய்ந்த ஒரு தூதுவனைக் கோச்செங்கண் மன்னர்பால் விடுத்துத் தாம் இறக்குந்தறுவாயில் இருப்பதனைத் தெரிவித்தார். அவ்வரசர் பெருந்தகையும் அந்நல்லார் தமதுயிரை இறைவன்றிருவடிக்குச் செலுத்துந்தறுவாயில் இருந்த இடத்திற்கு ஒரு நொடிப்பொழுதுந் தாழாமற் சென்றார்; அவ்வரசரும் பிரிந்துபோகும் அம்முனிவரின் வாழ்த்துரைகளைப் பெற்றுக்கொண்டு பின்னர் அவரை அடக்கஞ் செய்யவேண்டுஞ் சடங்குகளை முடித்தார். அதன் பிறகு, அம்மறைபொருளை வைத்திருக்கத்தக்க மற்றொருவரைத் தேடிப்பிடிக்க வேண்டுவது அம்மன்னர் பெருந்தகையின் மேலதாயிற்று; தாம் செவ்வையாய் அறிந்த சைவ சமய அன்பர்களையெல்லாந் தமதுள்ளத்தில் அளவிட்டுப்பார்த்த பின்னர், அவர் முடிவாக என்னையே தெரிந்தெடுக்கலானார்.

ஆம், என்னிளைய நேசர்களே, தங்கள் சிறந்த பாட்டனாரின் நெருங்கிய நட்பைப் பெற்று இன்புறுஞ் செல்வத்தினையும் பெருமையினையும் எய்தினேன். எனதுண்மைச் சிநேகத் திற்கு அடையாளமாக யான் அப்போது காட்டிய ஒப்பனைகளை இப்போ தெடுத்துச்சொல்வது எனக்குத் தகாது; ஆகையால், இறந்துபோன அம்முனிவருடைய நிலைமையை யான் அடையலானேன் என்று சொல்வது போதும். இங்ஙனமாக அவ் வுயர்ந்த மறைபொருளைத் தெரிதற்கு அருள்பெற்ற மூவரில் யானும் ஒருவனானேன்.''

பின்னுஞ் சிறிது நேரம் பேசாமலிருந்த பிறகு மனோகரர் மறுபடியும் பின்வருமாறு பேசப்புகுந்தார்:

''கோச்செங்கண் மன்னர்க்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள்; அவர்களிருவரும் மணஞ் செய்யப்பட்டவர்களே. அவர்க்கு விருப்பமிருந்தால் தம்புதல்வர்களில் ஒருவர்க்காயினுந் தம்மருமக்களில் ஒருவர்க்காயினும் அம்மறைபொருளை அவர் தெரிவித்திருக்கலாம்; ஏனெனில், யான் முன்னமே தெரிவித்தபடி ஆண்டைப்பற்றிய வரையறை யில்லை—ஆண்பெண் என்னும் பால் வரையறையும் இல்லை யென்பதனை நீங்கள் முன்னமே தெரிந்திருக்கிறீர்கள். அவர்தம் புதல்வர்கள் கடமையில் வழுவாமற் கீழ்ப்படித லுள்ளவர்களாய் இருந்தாலும், அப்புதல்வர்களின் இளையமனைவிமார் நற்குணமுடையராயும் மனத் தூய்மையராயும் இருந்தாலும் அவர்களெல்லாரும் உலகப்பற்று மிக்கவராயுந், தமது உயர்ந்த நிலையின் ஆரவாரத்திலும் வெளிப் பகட்டிலும் அரசியலிலும் நினைவு அழுந்தினவராயும் இருந்தமையால், அவர் தமது மனமார அவர்களுள் எவரையுந் தெரிந்தெடுத்து அப்பேரின்பநுகர்ச்சிக்கு உரியராம்படி செய்ய இயலாதவரானார். அதுவல்லாமலும், அத்தகையதொரு மறைபொருளைத் தன் மனையாளுக்குத் தெரியாமற் கணவன் தானே வைத்திருப்பது ஒவ்வாததொன்றாம்; இனிக், கணவனை விலக்கி அவன் மனைவிக்கு ஒரு மறைபொருளைப் புலப்படுத்துவதும் நன்முறைக்கும் நல்லறிவுக்கும் பின்னும் இசையாததொன்றாம். ஆகவே, எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கையிற் கோச்செங்

கண் மன்னர் என்னையே தெரிந்தெடுக்கலானார். ஆனால், இப்போது யான் இக்கதையின் மற்றொருபகுதியைப்பற்றிப் பேசப் போகின்றேன். சோசெங்கண் மன்னர்க்கு மணஞ்செய்யப் பட்ட மனைவியின் புதல்வர் இருவர் இருந்தனரென்று யான் முன்னமே சொல்லியிருக்கின்றேன். நீலலோசன, அம்மன்னரின் இளையபுதல்வர்க்கும் அவர்தம் அழகிய மனைவியார்க்குந் தாங்கள் இருபத்தோராண்டுகளுக்கு முன் பிள்ளையாய்ப் பிறந்தீர்கள்!''

''என் பெற்றோர்கள்?'' என்று நீலலோசனன் வியந்து வினவித், திரும்பவும் வருத்தம் மிக்க ஐயுறவினால் மனங்கலங்கி, நடுங்கிய மெல்லியகுரலோடு, ''அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்களா? ஓ! இல்லை! இல்லை! இந்த நம்பிக்கை வைக்க யான் துணியலாகாது—அப்படியிருந்தால் இத்தனைகாலம் யான் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமற் கைவிடப்பட்டிருந்திரேன்!'' என்று சொல்லினான்.

''என் அரிய இளைய நேசரே, தாங்கள் மிகவுந் திறமாய்க் கருதுகிறபடியே தான்.'' என்று மனோகரர் உருக்கத்தொடு கூறினார்; குமுதவல்லியின் இரக்கமான பார்வையுந் தன் மைத்துனனின் பெற்றோர்கள் உயிரோடில்லை யென்று அவளும் அவனுக்குத் தெரிவிப்பனபோற் குறிகாட்டின.

'' அச்சோ, என் அரிய தாய்தந்தையரே!'' என்று நீலலோசனன் முணுமுணுத்துரைக்கையிற், கண்ணீர் அவன்கன்னங்களில் வடிந்தது. ''வணங்கத்தக்க மனோகரரே, அவர்கள் எங்ஙனம் இறந்தார்களென்பதை எனக்குச் சொல்லுங்கள், சொல்லுங்கள்.''

''தங்கள் இரங்கத்தக்க அன்னையார் தாங்கள் பிறந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருகாய்ச்சலாற் கொண்டுபோகப்பட்டார்.'' என்று அம்மலையவணிகர் மறுமொழிதந்தார். ''தங்கள் தந்தையாரின் முடிவைப்பற்றி யான் இப்போது பேசப்போகின்றேன். என் இளையநண்பரே, உங்கள் ஆற்றாமையை அடக்கிக்கொண்டு, இந்தமுடிவு துயரமான தொன்றென்பதைக்கேட்க முன்ன

தாய் இருங்கள். மன்னரின் மூத்த மகளுக்குத் திருமணமாகிச் சில ஆண்டுகள்வரையிற் பிள்ளை பிறந்திலது.''

" இரங்கத்தக்க என் தந்தையார்! '' என்று குமுதவல்லி முணுமுணுத்தாள்.

"இப்போது எனது கதையில் துயரமான பகுதியை எடுத்துச்சொல்லப் போகின்றேன், '' என்றுரைத்து மனோகரர் பின்னுங் கூறுவார்: "நீலலோசனரே, நீங்கள் முற்றுந் தெரிந்துகொள்ளும்பொருட்டு, முதலில் யான் சொல்லியபடி, இக்குடும்ப நிகழ்ச்சிகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் நெடுகச் சொல்லவேண்டுவது எனக்கு அகத்தியமாய் இருக்கின்றது. நீங்கள் பிறந்து சில திங்கள்தாம் சென்றன—உங்களைச் சூழ நடந்தவற்றை உணராத சிறுமகவாய் இருந்தீர்கள்—அப்போது அரிடமன்னன் நாகநாட்டின்மேற் படையெடுத்து வந்தான். ஆண்டில் முதிர்ந்த கோச்செங்கண் மன்னருந் தம்முடைய படைகளையெல்லாம் ஒருங்கு திரட்டினார்; அவரே தம் படைகளுக்குத் தலைவராய்நின்று, தம்மருமகனும் இளைய புதல்வருந் தம்மொடுகூட வரப் பகை யரசனுடன் போர்புரியச் சென்றார். ஐயோ! அஞ்சாத பேராண்மை யிருந்தாலும், அது பெருந்தொகையான படைமறவர்க்குமுன் யாது செய்யும்! கோச்செங்கண்ணர் படையானது தோல்வியடைந்து நாகநாட்டின் தலைநகரான நாகப்பூரினுள் அலங்கோலமாய்ப் பின்னிடைந்து ஓடிற்று. அந்நகரத்திலிருந்த குடிமக்களோ தம்மரசனிடத்தில் மிகுந்த அன்புடையாராய் இருந்தமையால், முற்றுகை செய்யும் பகைவரை எதிர்த்து நிற்றற்கு வேண்டும் ஏற்பாடுகளை மிக்க ஊக்கத்தோடுஞ் செய்தார்கள். அரிடமன்னன் படைத்தலைவனே கோட்டைமதிற்புறத்தே வந்து சேர்ந்து அந்நகரத்தாரை அழைத்துக் கோட்டையைத் தமக்கு ஒப்படைத்து விடும்படி சொன்னான். நகரத்தாரோ அதனைக் கடுமையாக மறுத்துக்கூறினார்கள். முற்றுகை செய்தவர்களை மூன்று திங்கள்வரையில் அந்நகரத்தார் எதிர்த்து நின்றார்கள்; ஆனால், அது முற்றிலுஞ் சூழப்பட்டுச், சுற்றியுள்ள நாடுகளுடன் போக்கு வரவுக்கு இடமில்லாதபடி வழியடைக்கப் பட்டமையால், அது பஞ்சத்தின் கொடு

மைகளாற் பற்றப்படுமென்னும் அச்சம் உண்டாயிற்று. பகைவர்படையின் தலைவன் ஓர் அறிவிப்பு விட்டு, அவ்வறிவிப்பிற் கண்ட மூன்றுநாட்களுள் நாகப்பூர்க்கோட்டையை ஒப்படையாவிட்டால், இங்ஙனம் பிடிவாதமாய் எதிர்த்து நின்றதற்குக் காரணம் அரசனும் அவன்புதல்வர் இருவருமே என்று கருதப்படுவார்களெனவும், அதனால் அதனைப் பிடித்தபிறகு அம்மூவரையுங் கோட்டைக் கொத்தளங்களின்மேல் இரக்கமின்றிக் கழுவேற்றுவேன் எனவுந் தெரிவித்தான். சண்டையைப்பற்றிப் பேசித் தெளியும்பொருட்டு ஓர் அவை கூட்டப்பட்டது; தமது தலைநகர் எதிரியின் கைப்படுவது திண்ணமென் றுணர்ந்த அம்முதிய அரசர் தாம் கோட்டையைப் பகையரசனுக்கு ஒப்படைத்துவிடுங் கருத்துடையராதலை அவ்வவையில் தெரிவித்தார். ஆனால், அவர் மருமகனும் புதல்வரும் அரசியற்றலைவர்களும் எதிர்த்தே நிற்கும்படி அவைவேண்டிக் கொண்டார்கள்; ஏனென்றால், சாளுவமன்னன்படை நாகநாட்டரசர்க்கு உதவியாய் வருவதாக ஓர் உறுதிமொழி இருந்தது. குடிமக்களோ அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு, தங்கள் முதியஅரசர்க்கு அங்ஙனஞ் சொல்லப்பட்ட கருத்துரையைக் கிளர்ச்சி மிக்க சொற்களால் தாங்கிப் பேசினார்கள். அவருங் குடிமக்கள் கருத்துக்கு இணங்கவேண்டுவதாயிற்று; ஏனென்றால், பகைப்படைத் தலைவன் மிரட்டுதலுக்குத் தான் உடன்பட்டால் தன்னுயிர்க்குந் தன்மக்களுயிர்க்குமே தாம் கவலைப்படுவதாக நினைக்கக்கூடும் என்று அவர் அஞ்சினார். ஆகவே, நாகப்பூர் பின்னும் நீண்ட நாள் பாதுகாக்கப்படுவதாயிற்று; கோட்டைக்குள்ளிருந்தபடை சடுதியிற்பாய்ந்து தாக்கினமையால், அரிடமன்னன் படையில் ஒருபகுதி முற்றிலும் முறியடிக்கப்பட்டது; அப்படைத்தலைவனோ அதனாற் பெருஞ் சீற்றம் அடைந்தான்; ஆதலாற், பீரங்கி வெடிவைத்து அடித்துக்கொண்டே போய்த் தன்படைஞரெல்லாருந் தாக்கல் வேண்டுமென்று கட்டளையிட்டான். கோட்டையைக் காத்த படைமக்கள் உயிருக்குத் துணிந்து சண்டை செய்தார்கள்; என்றாலும், அளவுக்கு மிஞ்சின தொகையாயுள்ள பகைவர்படைகளின் முன்னே எத்தகைய ஆண்மையும் போது

மானது அன்று. சுருங்கச்சொல்லுங்கால், நாகப்பூர் பிடிபட்டு விட்டது; அரசகுடும்பத்தாரைச் சிறைப்படுத்தும்பொருட்டுப் பகைவர் அரண்மனையிற் சென்று மொய்த்துக்கொண்டார்கள். அரசகுடும்பத்தார் தப்பிப்போதற்கான திட்டங்கள் சூழ்ந்து செய்யப்பட்டன! ஆயினும், உங்கள் தந்தையாரும், நீலலோசனரே, நீங்களுமே—அப்போது அவர்கையில் நீங்கள் ஒருசிறுமகவாய் இருந்தீர்கள்—நாகப்பூர்க் கோட்டையைத் தாண்டித் தப்பிப்போகலானீர்கள். முதிய அரசரும், அவர்தம் மூத்தமகளும், அம்மகளின்கணவரும் பலமுகமாய்த்தப்பியோடுகையிற் கண்டு பிடிக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்டார்கள். நல்வினையற்ற குடிமக்களோ தெருக்கள் நெடுக நின்று கொண்டு, வெற்றிச்செருக்கோடுங் குதிரைமேற்சென்ற பகைவர் படைத்தலைவனைத் தாழ்மையோடும் வணங்கி, அவ்வரச குடும்பத்தாரை விட்டுவிடும்படி இரந்து கேட்டார்கள். முதலில் அப்படைத்தலைவன் மனம் இரங்கவில்லை: ஆனாற், கடைசியாகச் சிறிதளவு மனம் இரங்கினான். கோச்செங்கண்மன்னர் உடனே நாகப்பூரைவிட்டுப் போய்விடுதல் வேண்டுமென்றும், அவர் இந்த உலகவாழ்வை முற்றுந்துறந்து செல்வதாகப் புனிதமும் வணக்கவொடுக்கமும் மிகுந்த சூள் உரைக்க வேண்டுமென்றும், மறுபடியும் அவர் நாகநாட்டுமக்களிடை வருதலும், நாகநாட்டு அலுவல்களில் தலையிடுதலும் ஆகாவென்றும்,—சுருங்கச்சொல்லுமிடத்து, இனி அவர் உயிர்துறந்தவர்போ லாகவேண்டுமே யல்லாமல், நேராகவேனும் பிறர்வாயிலாகவேனும் வேறெவ்வழியாலும் எப்போதும் அவர் தம் குடும்பத்தவரோடு மறுபடியுஞ் சிறிதுந் தொடர்பு வைத்தல் கூடாதென்றுங் கூறி, அப்பொருத்தனைக்கு இசைவதாயிருந்தால் அவரை உயிரோடு விட்டுவிடுவதாகப் புகன்றான். ஆண்மைமிக்க அம்முதிய அரசர் மானக்கேடான அப்பொருத்தனைகளை எரிச்சலுடன் இகழ்ந்து, அதனால் தாம் கழுவேறவுந் துணிந்திருப்பார்; ஆனால், தம் மூத்தமகள் மருமகன் உயிருங் கூட அதனால் இடைஞ்சலுக்கு உள்ளாவதை எண்ணினார். ஆகவே, அப்பொருத்தனைக்கு இசைந்து வெளிப் புறப்பட்டார். அந்தப் பகைப்படைத்தலைவன் அவர்தம் இளையமகனை—நீல

லோசனரே உங்கள் தந்தையைப், பிடித்துத்தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகத்தெரிவித்தான் ; ஆனால், நாட்கழிந்ததேயல்லாமல், உங்கள் தந்தையாரைப்பற்றி ஏதுஞ் செய்தி வரவில்லை. நாகப்பூரைப் பிடித்துக்கொண்டு, நாகநாட்டார்க்குள்ள பற்றுதலைத் தொலைத்துவிடலாமென்று அப்பகைவர் எண்ணினார்கள்; ஆனால், அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. எங்கேபார்த்தாலுங் கலகந் தலைக்காட்டுவதாயிற்று. கடைசியாக அந்த நாட்டிலுள்ளவர்களைத் தணிவுசெய்யும் பொருட்டு அப்பகைவர் தம் அரசாட்சியில் ஓர் ஒழுங்கு செய்வாராயினர். நாகநாட்டில் உள்ள மேலோரை யெல்லாம் அழைத்து ஓர் அவை கூட்டப்பட்டது ; இனிமேல் அந்நாடு தனக்குரிய ஓர் அரசனாலேயே ஆளப்படுதல் வேண்டுமென்றும், முதன்மையான இரண்டு மூன்று நகரங்கள் மட்டும் அவர்கள் உறுதிமொழிப்படி அரிடமன்னற்குரியவர்கள் செய்யும் வாணிகத்தைக் காக்கும்பொருட்டு அம்மன்னவன் படைமறவராற் காவல்செய்யப்படுதல் வேண்டுமென்றும் அதில் தீர்மானஞ்செய்தார்கள். இதற்கேற்ப ஓர் உடம்படிக்கையுஞ் செய்யப்பட்டது; கோச்செங்கண் மன்னரின் மருமகனார்—எழில் மிக்க குமுதவல்லி தங்கள்தந்தையார்—தம்மனைவியாரோடும் இதுவரையில் நாகப்பூரிலேயே ஒருவாறு மேன்மையாகவே சிறைபிடித்து வைக்கப்பட்டிருந்தவர் அரசாட்சிக்கு உரியவராக்கப்பட்டார். அந்நிகழ்ச்சிக்கு இரண்டாண்டுகள் பிற்பட்டு—அதாவது பதினேழு ஆண்டுகளுக்குமுன்னே, குமுதவல்லி, நீங்கள் பிறந்தீர்கள் ; இன்னும், நீலலோசனர் தெரிந்துகொள்ளும் பொருட்டுத், தங்கள் பெற்றோர் இருவரும் ஏறக்குறைய ஒரேவகையான நோயால் இரண்டு ஆண்டுகளின்முன் இறந்துபோயினரென்றும், அப்போது நாகநாட்டுக்குடிமக்களும் அரிடமன்னன் அரசியற்றலைவருந் தங்களையே அந்நாகநாட்டுக்குத் தனிஅரசியாக ஏற்று அமைக்கலானார்களென்றுங் கூட்டிச் சொல்லுகின்றேன்.''

''இனி,என் தந்தையாரின் முடிவுஎப்படியாயிற்று?''என்று நீலலோசனன் தன்னைத் தோற்றுவித்த தந்தையின் முடிவை யறிய, நிறைந்த பிள்ளைமைப் பரபரப்புடன் வினவினன்.

"அவர் நாகப்பூரினின்றும் மறைந்து சென்ற நீண்டகாலத்திற்குப்பின், அவரும் அவர்தம் மகவும் மேற்கணவாய் மலைகளினிடையே செத்துக்கிடக்கக் காணப்பட்டார்களென்று எப்படியோ ஒருபேச்சு ஊரெங்கும் பரவலாயிற்று; ஆகவே, அவர்கள் அப்படித்தான் அழிந்துபோனார்களென்ற நம்பிக்கை எங்கும் உண்டாயிற்று. ஆனால், உண்மை அங்ஙனமன்று என்பதை, இப்போது நீங்கள் விரைவிற் றெரிந்துகொள்வீர்கள். ஆயினும், முதன்முதல் யான் முதியோரான கோச்செங்கண் மன்னரைப்பற்றிப் பேசல்வேண்டும். அப் பகைப்படைத் தலைவனிடந் தாம் செய்துகொண்ட பொருத்தனையின்முறைப்படி அவர் நாகப்பூரைவிட்டுப் புறப்பட்டதும், மேற்கணவாய்மலைத்தொடரின்கண் உள்ள காடுகளில் உள்ளுருவிச்சென்றார்; அப் புனிதமாதவன் தமக்குத் தெரிவித்திருந்த அம்மறைபொருளை இப்போதவர் தமக்குப் பயன்படுத்திக்கொள்வாரானார்; அம்மறைபொருளைத் தாம் தெரியலானது பற்றி அவர் திருவருளுக்கு வாழ்த்துரைமொழிந்தார். ஏனென்றால், இப்பெரிய மண்ணுலகின் குழப்பங்கள் சேராததும், போரிடும் இரைச்சல் நுழையாததும், சூறுவளியானது வானுலகத்தில் தோன்றாததுபோலத் தன்னய விருப்பங்கள் மூட்டாததும் ஆன ஓர் இடத்திற் பாதுகாப்புடன் இனிதாக ஒதுங்கியிருத்தற்கு ஏற்ற வழியை அவருக்கு அது தந்தது." என்று மனோகரர் மறுமொழிபுகன்றார்.

இங்கே மனோகரர் சிறிதுநேரம் சும்மா இருந்தார்: குமுதவல்லி தன்உள்ளத்திற் பலவேறு வகைப்பட்டுத் தோன்றிய புதுமையான உணர்வுகளோடு எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்: நீலலோசனனது முகமோ தன் தந்தையின் முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பதைத்து ஆவலுற்ற குறிப்பைப் புலப்படக்காட்டியது.

பதினைந்தாம் அதிகாரம்

செய்திவிளக்கத்தின்முடிவு

ஆம், நாகநாட்டரசியின் எண்ணங்களும் உணர்வுகளும் புதுமையாகவே இருந்தன: ஏனெனில், மனோகரர் கடைசியாகச் சொல்லிய சொற்களானவை, தான் முன்னே கேள்வியுற்ற சிலவற்றொடு சேர்க்கையுடையவாதலை அவளது உள்ளத்தில் தடுக்கக் கூடாதபடி எழுப்பிவிட்டன. தம் சொற்களைச் செவிமடுப்பவர்களுக்குப் பொழுதுபோக்காக இருத்தற்பொருட்டும், அவர்களுள்ளத்தைக் கவருதற் பொருட்டுங் கதை சொல்லுவார் வழக்கமாய்ப் பிணைத்துச் சொல்லுங் கதைகளைப்போல், நுணுக்கமாய்ச் சூழ்ச்சிசெய்த புதியகட்டுக்கதைகளைப்போல் அல்லாமல், திகழ்கலை தனக்கும் மீனாம்பாளுக்கும் எடுத்துரைத்த கதை திட்டமாய் நடந்ததனை அடிப்படையாக்கொண்டு உண்மையாய் இருக்கலாமோ? என்று எண்ணினாள். திரும்பவும் மனோகரர் பேசப்புகுந்தமையாற், குமுதவல்லி இங்ஙனம் நெடுநேரம் எண்ணமிட்டுக்கொண்டிருக்கக் கூடவில்லை.

"ஆம், அம்மா மறைப்பொருளை அவர் தெரியப்பெற்றதற்காகத் திருவருளை வாழ்த்துதல்வேண்டும்; அம்மாட்சிமை மிக்க முதிய அரசர் மேற்கணவாய்மலைகளின் இடையே அமைதியுங் காவலும் வாய்ந்த ஒருபுகலிடம் அடையப்பெற்றார். அங்கே அவரை நான் அவ்வப்போது போய்ப் பார்த்து வந்தேன். இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து அவர் தமது நாகநாட்டரசாட்சி தம்மவர்க்கே திருப்பிக் கொடுக்கப்பட்ட தென்பதனைத் தெரிந்த பின், மனம் ஆறுதல் எய்தித், தாம் உலகைத் துறந்துவந்ததில் முற்றுங் கருத்தொருப்பட்டு, நாகநாட்டலுவல்களில் இனித் தாம் தலையிடுவதில்லையென்று அப்பகைப்படைத் தலைவனுக்குத் தாங்கூறிய உறுதிமொழியை முன்னிலும் மிகுதியாக மதிப்பதற்குத் தீர்மானித்தார். என்னைப்போல் நம்பிக்கையுள்ள ஒருநண்பன் வழியாகச் செய்திவிடுத்தாலுங்கூட ஒருகால் அரிடமன்னன் ஆட்களுக்கு அயிர்ப்பு உண்டாகுமானால் அரசுரிமை திரும்பப்பெற்ற தம்மவர்க்கு இடைஞ்சல் விளையுமாதலால், தம்

மருமகன்—குமுதவல்லி தங்கள்தந்தையார்—தமது முடிவைப் பற்றி முழுதுந் தெரியாதிருக்கவேண்டு மென்று அவர் விரும்பினார். தம் மருமகன் நாகநாட்டரசுக்கு உயர்த்தப்பட்டதுபற்றி அம் முதியமன்னன் மகிழ்ச்சி அடைந்தனராயினும், தம் ஒரே மகளையும் அவர் கையேந்திச்சென்ற சிறுமகவையும் பற்றி அளவிறந்த கவலை யடையலானார். யான் அம்மேற்கணவாய் மலைநாடுகள் எங்கணும் இயன்றமட்டும் உசாவிப்பார்த்தேன், சிறிதும் பயன் படவில்லை. பின்னர்ச் சிறிதுகாலங்கழித்துக், காணமற்போன இளவரசரும் அவர்தம் மகவும் மலைகளினிடையே மாண்டுபோனார்க ளென்னுஞ் செய்தி வந்து எட்டுவதாயிற்று; அப்போது அதனை நம்பிப், போற்றத்தக்க என் நண்பரான அம்முதிய கோச்செங்கண்மன்னர்க்கு அதனை அறிவித்தேன். ஆண்டுகள் பல சென்றன—அம்முதிய அரசர் தாம் கண்டறிந்த அமைதியான அம்மறைவிடத்தை விட்டுவரச் சிறிதும் விருப்பம் இன்மையினால் அதன்கண்ணே தாம் இருந்துவரலானார். இற்றைக்குப் பதினெண் டிங்களுக்குமுன் கோச்செங்கண் மன்னர் கடுமையான ஒரு நோயாற் பற்றப்பட்டார்; அதனால் அவருக்கு மருந்துகொடுத்து உதவவேண்டுவது அகத்திய மென்று கண்டேன். அப்பொழுது நீலகிரிநகரத்திற் பல வியப்பான மருந்துகள் கொடுத்துவந்த ஒருதுருக்கப்பெண்பிள்ளை இருந்தனள்: அவளை அம்முதியமன்னர் இருக்குந் தனியிடத்திற்கு என்னோடு அழைத்துச்செல்லத் தீர்மானித்தேன். ஆண்பாலாருள் ஒருவரைவிடப் பெண்பாலார் ஒருவரை இவ்வுதவிக்கு அமர்த்திக்கொள்வது எளிதெனக் கண்டேன்; ஏனென்றால், யான் கட்டாயமாகப் பின்பற்றவேண்டிய சில முன்னறிக்கைகளுக்கு இணங்கும்படி ஒரு பெண்பாலைத் தூண்டுவது மிக எளிது. யான்சொல்லுகிற இந்தப்பெண்பாலோடு யான் வழி நடந்துசென்றபோது, தான் திரிந்து கண்ட பலநகரங்களைக் குறித்தும் அவள் அடுத்தடுத்துப் பேசிக்கொண்டுவந்தாள்; அவ்விடங்களைப்பற்றிப் பலவேறு சிறு கதைகளுஞ் சொல்லிக்கொண்டுவந்தாள். இங்ஙனம் பேசிக்கொண்டுவருகையில் அப்போது மேற்கரையை ஆண்ட சாக்கியதர்மன் என்னும் அர

சனைக் குறிப்பிட்டுப் பேசலானாள்; அவ்வரசரின் அன்பும் உருக்கமும் மிக்க தகைமைக்கு ஓர் ஒப்பனையாக, அவர் தமது பாதுகாப்பிற் குழவிப்பருவத்தே விடப்பட்ட ஓரிளைஞனைத் தமக்கு மகனாக உரிமைப்படுத்திக் கொண்டதனை எடுத்து மொழிந்தாள். அவ்வறிவோள் மேலுஞ் சொல்லிய சில செய்திகளால் யான் ஓர் ஐயுறவுகொள்ளுதற்கு இடம் பெற்றேன்; ஆனாலும், அதனைக் கோச்செங்கண் மன்னர்க்குக் கூறிற்றிலேன்; ஏனெனில், ஒருகால் அதனை நம்பி அவர் பின்னை ஏமாற்றம் அடைந்தால் என்செய்வதென்று அஞ்சினேன். அப்பெண்மகள் நோய்தீர்த்துச் செய்த உதவிக்கு நன்றி செலுத்தல் வேண்டும். அரசர் நோயினின்றுந் தேறி எழுந்தார். அதன்பின் எனக்குச் சிறிது ஒழிவுநேரங் கிடைத்தவுடன், அம்மேற்கரைமன்னர்க்கு ஒருதிருமுகம் எழுதி அதனை ஒருவேவுகாரன் கையிற் கொடுத்துப் போக்கித் தாம் உரிமைப்படுத்திக்கொண்ட மகனைப்பற்றி அவர் அறிந்தவையெல்லாம் எனக்குத் தெரிவிக்கும்படி மன்றாடிக் கேட்டேன்—அதனோடு, எம்மிருவர்க்குள்ளும் நடக்கும் இச்செய்தி பிறர் அறியாவாறு தம்முள்ளே மறைத்து வைக்கவேண்டுமென்றுங் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். யான் வேண்டிக்கேட்ட அவ்வரலாறுகளை எனக்குத் தெரியப்படுத்துவதில் அவ்வரசர் சிறிதுங் காலந் தாழ்க்கவில்லை; யான் முன்னமே கொண்டிருந்த ஐயுறவை அவை முற்றும் உறுதிப்படுத்தின. ஒருநாள் சாக்கியதர்மர் வேட்டம் ஆட வெளிச்சென்றார்—இது நாகப்பூர்க்கோட்டை பிடிபட்ட சில கிழமைகளுக்குப் பின் நிகழ்ந்தது—அப்போது அவர், வறுமையால் வாடிப்போனாலும் அழகிய தோற்றம் வாய்ந்த ஓர் இளைஞன் தன்கையில் ஓர் இளங்குழவியை வைத்துக்கொண்டு ஓர் யாற்றங்கரையில் அமர்ந்திருக்கக் கண்டார். நீங்கள்தாம் அக்குழந்தை, நீலலோசனரே! அவ்வறிய ஆடவனே உங்கள் தந்தை!'' என்று மனோகரர் தொடர்பாகச் சொல்லிவந்தார்.

"இவையெல்லாம் எனக்குப் புதியனவேயாகும்!'' என்று நீலலோசனன் வியந்துரைக்கையில், அவன்கன்னங்களிற் கண்ணீர் பெருகிவடிந்தது. "ஐயோ! என் எளியதந்தையே!''

மிருந்த மனவருக்கத்தோடும் இரக்கத்தோடுங் கூடிய குர லுடனும் பார்வையுடனும் மனோகரர் பின்னுந் தொடர்ந்துரைப் பாராஞர்: "அந்த மேற்கரைமன்னர் தங்கள் தந்தையாரின் துன்பமுடிவைத் தங்கட்கு இதுகாறுந் தெரியாமல் மறைத்து வைத்தது மிகவும் அன்பான எண்ணத்தினலேதான். ஆயி னும், இப்போது நீங்கள் ஒவ்வொன்றுந் தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாயிற்று.நீங்கள் நீலகிரி நகருக்கு வந்ததும், இவ்வரலாறுகளை யெல்லாம் என்வாயினின்றுந் தெரி யப்பெறுவீர்களென்பது சாக்கியதர்மருக்குத் தெரியும். ஆகவே, அக்கதையை முற்றுஞ் சொல்லிவிடுகின்றேன். யான் கூறிய படியே, சாக்கியதருமர் அந்த அழகிய தோற்றம்வாய்ந்த இளை ஞன் தன் இளங்குழவியின் முகத்தைத் துயரத்தோடும் பார்த் துக்கொண்டு ஓர்யாற்றங்கரைமேல் அமர்ந்திருக்கக்கண்டார்: நிறைந்த இரக்கத்தோடும் வினவினர். அப்போது, ஐயோ!—நீலலோசனரே, ஒரு துயரமான அறிக்கையைக் கேட்டற்கு முனைப்பாய் இருங்கள்—அவ்விரங்கத்தக்க உயிர் அறிவிழந் திருத்தலை அவ்வரசர் கண்டுகொண்டார்."

இப்போது நீலலோசனன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியோடிற்று; குமுதவல்லியும் அங்ஙனமே அழுதாள். வணங்கத்தக்க மனோகரரும் பெரிதும் மனம் உருகினர். திரும்ப வும் அவர் கதையைத் துவங்குதற்கு முன் சிலநேரஞ் சென்றன.

முடிவாக அவர் தொடர்ந்துரைப்பார், "இரங்கத்தக்க அவ்விளைஞனையுங் குழந்தையையும் மேற்கரையிலுள்ள தமது அரண்மனைக்குக் கொண்டுபோகும்படி அவ்வரசர் கட்டளையிட் டார்; புதியராய்வந்த அவ்விருவரையும் அங்கே எல்லா அன் போடும் நடத்தினர்கள். என்றாலும், நீலலோசனரே, தங்கள் தந்தையின் வாயிலிருந்து அவர் ஏதும் வெளிப்படுத்தக்கூட வில்லை: அவ்விளைஞர் தமதறிவை இழந்து வரவர உயிர் துறக் கும் நிலையை அடையலாஞர். பின்னுஞ் சிலநாட்கழித்துத் தாங் கள் பெற்றோர்அற்ற பிள்ளையாயினீர்கள்!, உங்களிருவரையும் இன்னரென்று அறிவிக்கத்தக்க அடையாளம் ஏதும் உங்கள் தந்தையின் உடுப்புகளிற் காணப்படவில்லை; நாகப்பூரில் நடந்த

வை எல்லாம் நிலைவரமின்றிச் சிறுபேச்சாய் மேற்கரைநகரில் தெரிந்தமையாற் சாக்கியதர்மாது அரண்மனையில் இறந்தவர் நாகநாட்டின் இளவரசர்தாமோ என்னும் ஐயுறவுக்கும் இடம் உண்டாகாதிருந்தது. அங்ஙனமிருந்தாலும், அப்போது நீங்களும் உங்கள் தந்தையும் அணிந்திருந்த ஆடைகளை அவர் காப்பாற்றிவைத்திருந்தார்; அவ்வாடைகளோ இறந்துபோனவர் தாழ்ந்தநிலையில் உள்ளவரே என்று குறிப்பிட்டன. அவ்வரசர் தங்களை வளர்த்துவந்தார்—எவ்வளவு நன்றாகவும் எவ்வளவு மென்மையாகவும் என்பதனைத் தாங்களே மிகவும் நன்றாய் அறிவீர்கள்!''

"அவர் எனக்கு ஒருதந்தைபோ லிருந்துவருகிறார்!'' என்று நீலலோசனன் நன்றியறிவோடும் வியந்துரைத்தான்; "என்பெற்றோர்கள் எனது குழவிப்பருவத்திலேயே இறந்து போயினார்களென்று அவர் எப்போதும் யானறியச் சொல்லி வந்தார்; அதைப்பற்றி நான் கேட்டபோதெல்லாம் அவர் ஏன் அதனை நழுவவிட்டு வந்தார் என்பதை இப்போதுநான் மிகவுஞ் செவ்வையாக அறியப்பெறுகின்றேன். ஆம் மிக்க அன்பினாலும் ஆழ்ந்து ஆராய்ந்த எண்ணங்களாலுமே அவர் அங்ஙனஞ் செய்யலானார்!''

"அவ்வரலாறுகளை யெல்லாம், பொதித்துவைத்த அவ்வாடைகளோடும் அம்மேற்கரையரசர் எனக்கு விடுத்துவைத்தார்: இவைகளெல்லாவற்றையும் யான் கோச்செங்கண் மன்னர்க்குத் தெரியப்படுத்தினேன். போற்றத்தக்க என்முதிய நண்பர் அவ்வாடைகளைப் பார்த்ததும் உடனே அவற்றைத் தெரிந்துகொண்டார்: பல ஆண்டுகளுக்கு முன்னே அரிடமன்னன் படைமறவர் எதிர்த்துச் சண்டைசெய்தபோது நாகப்பூரிலிருந்து அவ்விளவரசன் தங்களைக் கையிலெடுத்துக்கொண்டு தப்பி ஓடுங்காற் பூண்டிருந்த இழிந்த ஆடைகளே அவை. இங்ஙனமாக, நீலலோசனரே தங்கள் பிறப்பைப்பற்றி இனி எதும் ஐயம் இல்லையாய் ஒழிந்தது; நீங்கள் பௌத்தராகவும் பௌத்த சமயத்திற்கு உரியராகவும் வளர்க்கப்பட்டுவந்தீர்கள். என்றாலும், உண்மையில் தாங்கள் நாகநாட்டின் இளஅரசரேதாம்;

தாங்கள் பிறந்த காலத்தில் தங்கள் நெற்றியின்மேல் திருநீறு அணியப்பட்டிருந்ததும் உண்மையேதான். போற்றத்தக்க உங்கள் பாட்டனார் தங்களைத் தம் கைகளாற் றழுவிக்கொள்ள ஆவலித்தார்; ஆனாலுந், தாம் உயிரோடிருக்கும்போது தங்கள் பிறப்பைப்பற்றிய மறைபொருள் தங்களுக்கு வெளிப்படுத்தப்படுமாயின், நேராமல் தடுப்பதற்குத் தாம் எண்ணிய நிகழ்ச்சிகள் விளையவுங் கூடுமென அவர் அஞ்சினார். அரிடமன்னனைச்சேர்ந்தவர்களோ நீண்டநாட்கு முன்னே அவர் இறந்து போனாரென்றே நம்பினார்கள்; அவர் உயிரோடிருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரிந்தால், அவருடையசெல்வாக்கு நாகப்பூர் அரண்மனையில் இன்னும் ஏதேனுந் தொல்லையை உண்டுபண்ணக் கூடுமென்று அவர்கள் எண்ணலாம்; அதனால், தன்பேர்த்தியின்—அழகிய குமுதவல்லி தங்களின்—ஆளுகைக்கு இடைஞ்சல் உண்டாகலாம். அதுவல்லாமலும், நாகநாட்டிற்குரிய இளவரசர் ஒருவர் இளைஞராய் உயிரோடிருக்கிறார் என்பதுவெளிப்படுமாயின், கோச்செங்கண்மன்னர் அந்நாட்டின் அலுவல்களில் தலையிடுவதாக அரிடமன்னனைச் சேர்ந்தவராற் கருதப்படும்; கோச்செங்கண் அரசரோ தாம் உலகை முற்றுந் துறந்துவிடுவதாகவும், நாகநாட்டின் அலுவல்களைப்பற்றித் தாம் இனிமேல் நினைப்பதில்லை யெனவுந், தம் குடும்பத்தவர் எவர்க்கும் எதுவும் அறிவிப்பதில்லையெனவும் உண்மையாகச் சொல்லுறுதி கொடுத்திருக்கிறார். இவ்வாறு எல்லாவற்றையுஞ் சூழ்ந்து பார்க்குங்கால், ஒவ்வொருகாரணத்தையுஞ் செவ்வையாய் அளந்து காணுங்காற், கோச்செங்கண் மன்னர் இறந்தபிறகுதான், நீலலோசனரே தங்கள் பிறப்பைப்பற்றிய மறைபொருளைத் தங்கட்கு வெளிப்படுத்தல் வேண்டுமென்பது தீர்மானிக்கப்பட்டது. அரசர் பெருந்தகை எனக்குச் சில கட்டளை தந்தார்; அவர்கள் சொற்படியே அவற்றை வழுவாமல் நடத்துவதாக யான் சொல்லுறுதி தந்தேன். ஒருதிங்களுக்கு முன், போற்றத்தக்க என நண்பர் விளிந்துபோனார். இத்தனை ஆண்டுகளாக அவர் உறைந்துவந்த அந்த அமைதியான துச்சிலிலேயே யான் என் கைகளால் அவரை அடக்கஞ் செய்தேன். இக்கதையைச் சொல்லி

வரும்போது பலகாலும் யான் குறிப்பிட்ட அம் மா மறைப் பொருளுக்கு யான் ஒருவனுமே இந்நேரத்தில் உயிரோடிருக்கும் வைப்பிடமாய் இருக்கின்றேன்: ஏனென்றால், கோச்செங் கண் மன்னர் கடுநோயாற் பற்றப்பட்டிருந்தபோது அவர்க்கு நோய் தீர்த்தற்பொருட்டுத் திறமைமிக்க அவ்வறிவோளை அவ் இன்ப உறையுளுக்கு யான் அழைத்துச் செல்லவேண்டுவது கட்டாயமாயிருந்தும், அந்த இடம் உள்ள நிலப்பகுதியை அவள் முற்றும் அறியாதவளாயிருக்கின்றாள்; அவ்விடத்திற்குச் செல்லும் வழியும் அவள் அறியாள்; அதனால் அம்மறைபொருளை அறியாதவளாகவே அவளைக் கருதலாம். சிலதிங்களுக்கு முன்னே இம்மறைபொருள் மூவர்க்கு உரிமையாய் இருந்தது. இந் நீலகிரிநகரத்திருந்த ஒரு தூயகுரு, அதனைத்தெரிந்தவர், காலம் வந்து இறந்துபோனார்; அவரையடுத்து இறந்துபோனவர் தங்கள்பாட்டனார் கோச்செங்கண் மன்னரேதாம்; இங்ஙனமாக அம்மறைபொருள் இப்போது என் ஒருவனிடத்தேதான் இருக்கின்றது. இம்மறைபொருளை வைத்திருந்தவரான அம்மூவரில் இருவர் இறந்துபட்டபின்னும் அவரிடத்திற்கு வேறிருவர் இன்னுந் தெரிந்தெடுக்கப்படாமை என்னென்று, என் அன்புள்ள இளையநேசர்களே, நீங்கள் எண்ணிப்பார்க்கக் கூடுமே? குமுதவல்லி, இம்மறைபொருளைத் தெரிவிக்கப்பட வேண்டியவர்களில் தாங்கள் ஒருவராய் இருக்கவேண்டுமென்பது தங்கள் பாட்டனாரின் விருப்பம். ஏனென்றால், இவ்வுலகத்திற்றோன்றும் மாறுதல்களினிடையே தங்களுக்கு ஏதேனும் ஒரு பொல்லாங்கு நேருமாயின், வணங்கத்தக்க உங்கள்பாட்டனார் அத்தனை நீண்டகாலமாய்த் தங்கிவந்த அதே இன்பஉறையுளில் தாங்கள் போய் ஒதுங்கியிருக்கலா மன்றோ? நீலலோசன, தங்களைப் பற்றியோ வென்றால், சைவசமயத்தைத் தழுவுதலாகிய அவ் வழி ஒன்றுமே தாங்கள் அப்பெரும்பேற்றைப் பெறுதற்குத் தக்கவராகச் செய்யுமாதலால், தாங்கள் அம்மறைபொருளைத் தெரியும் பொருட்டு அதற்கு ஏற்றபடியாக நடந்து கொள்வீர்களென்று அவர் நம்பிக்கை வைத்திருந்தார். தங்களுக்கு அனுக்கமாயும் நலந் தருவனவாயு முள்ள செய்திகளாயிருப்பதோடு,

எழுத்தில் எழுதித் தெரிவிக்கக்கூடா அத்துணைச் சிறந்த மறை பொருளாயும் இருந்தமையாற்றான், இவைகளையெல்லாந் தாங்கள் என்வாயினின்றே கேட்டுத் தெரியும்படி தாங்கள் இருவருமே இந்நீலகிரிநகருக்கு வருகவென வேண்டி என்னுடைய ஆள் சந்திரனிடத்தில் திருமுகங்கள் கொடுத்தனுப்பினேன்." என்று மனோகரர் தொடர்ந்துரைத்தார்.

"மாட்சிமை மிக்க மனோகரரே, அம்மோதிரங்களையுங் கூட அனுப்பியதேன்?" என்று குமுதவல்லி வினவினாள்.

"ஒன்றை யொன்றொத்த மோதிரங்களைத் தங்களிருவர்க்குந் தனித்தனியே யான் அனுப்பியதன் நோக்கம் இரண்டுண்டு. முதலாவது, என் ஏவலாள் சந்திரன் இவ்வழிப்பயணத்தினின்று திரும்பி வீட்டுக்குவரும்போது, தற்செயலாய் அவனுக்கு ஏதேனும் இடர்நேர்ந்தால் இம்மோதிரங்களைக் கொண்டுவந்து காண்பிப்பவர்களே என்னுடையகடிதங்களைப் பெற்றவர்களா யிருக்க வேண்டுமென்னும் உண்மை எனதுள்ளத்திற்கு இசைவாகக் காணப்படும்; அதனாற், கரவடமான மக்கள் செய்யுஞ் சூழ்ச்சிகளில் அகப்பட்டு ஏமாறுதற்கும் இடம் உண்டாகாது. அம்மோதிரங்களை உங்களுக்கு யான் அனுப்பியதற்குள்ள எனது இரண்டாவது காரணத்தை யான் சிறிது விரித்துச் சொல்லவேண்டுவதாயிருக்கின்றது. யான் முன்னமே கூறியபடி, கோச்செங்கண் மன்னர் இறந்தபின், அவ்வுயர்ந்த மறைபொருளை வைத்திருப்பவன் யான் ஒருவனே யாயினேன்: ஆனாலும், அதனை முழுதும் நான் ஒருவனேவைத்திருப்பது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை; ஏனெனில், எனக்கோ வாழ்நாள் முதிர்ந்துவிட்டது; என்னையும் எந்தநேரத்திலேனுங் காலன் வந்து கைப்பற்றிக்கொண்டு போகக்கூடும். ஆனதனாற்றான், சிறிதுங் காலந்தாழாமல், அம்மறைபொருளைப்பற்றிய எல்லாக்குறிப்புகளையும் முற்றும் விரித்து ஏட்டில் வரைந்துவைத்தேன். மற்றொரு முறியில், யான் உயிரோடிருந்து என்வாயாற் சொல்லவேண்டுமென்று என்ஐயன் கொண்ட திருவுளப்பாங்கின்படியே அதனைப்பற்றிய நீண்டவரலாற்றினைப் பொறித்துவைத்தேன். இம்முறிகளைச் செவ்வையாய் உறையிலிட்டு முத்திரைவைத்து,

யான் இறந்தபிறகு என் குறிப்புகளைக் கொண்டுநடத்துவோரிடத்து, ஒரு குறிப்பான தன்மைவாய்ந்து ஒன்றையொன்றொத்த இரண்டுமோதிரங்களைக் கொண்டுவந்துகாட்டும் இருவர்மட்டுமே இக்கட்டைத் திறந்து பார்க்கவேண்டுமென்று அதன்மேற் கற்பித்தெழுதித் தனியேயுள்ள என் ஏடுகளினிடையே அதனை வைத்துவிட்டேன். நீங்கள் வருவதற்குமுன்னமே என்னை இங்கிருந்தும் அழைத்துக்கொள்வது இறைவனுக்குத் திருவுளமானால், நான் சொல்லிக்கொண்டு வந்த உண்மைகளையே யன்றிச் சாலப்பெரிய அம்மறைபொருளையும் உங்களுக்குத் தெரியவைக்கும்படி செய்யவேண்டிய ஒவ்வோர் ஏற்பாட்டினையும் அங்ஙனம் முன்னதாகவே மிகவுங்கருத்தாய்ச் செய்துவைத்தேன். என்றாலும், நீலலோசனரே, அப்போதும் அம்மறைபொருள் உங்களுக்குத் தெரிவிக்கப்படமாட்டாது; நான் முன்னமே குறிப்பித்திருக்கிற வகைப்படி நீங்கள் அத் தூய மறைபொருளைப் பெறுதற்கேற்ற தகுதியைத் தங்களிடம் வருவித்துக் கொண்டாலன்றி, அத் தனித்த முறிச்சீட்டுக் குமுதவல்லி கண்களுக்கு மட்டுமே தெரியும்படி வரைசெய்துவைக்கப்பட்டது.” என்று மனோகரர் விடைபகர்ந்தார்.

பின்னர்ச் சிறிதுநேரம் மனோகரர் பேசாதிருந்தார். நீலலோசனனோ சிலநேரம் ஆழ நினைந்து பார்த்துப் பணிவான குரலிற் பேசுவானானான்: “போற்றத்தக்க என்நண்பரே, தமது குழவிப்பருவந்தொட்டே பயிற்றப்பட்டு வந்தமையால் தமக்கு நன்றாய்த்தெரிந்ததான ஒருசமயத்தைக் கைவிட்டுத் தெரியாத மற்றொன்றைக் கைப்பற்றுவது எவர்க்கும் எளிதானசெய்கை அன்று. ஆனதனால், எனக்குத் தெரியாததான இச்சமயக் கொள்கைகளை எனக்கு எடுத்து அறிவுறுத்துக. யான் குழந்தையா யிருந்தபோது எனது நெற்றியின்மேல் இடப்பட்ட அடையாளத்திற்கு உரியதான அக்கொள்கை என் மனச்சான்றுக்குப் பொருத்தமாகக் காணப்படுமானால், என் பாட்டனார் விருப்பப்படியும், தகவு மிக்க மனோகரரே தங்கள் விருப்பப்படியும் யான் அதனைத் தழுவிக்கொள்வேனென்று உறுதியாய் நம்புங்கள்.”

"அரசி, நாங்கள் இருவேமுஞ் சிறிதுநேரம் ஒருங்கு தனித்திருக்கும்படி விடைதாருங்கள். தங்கள்மைத்துனர் சொல்வது செவ்விதாய் இருக்கின்றது; அவர் முற்றிலுந் திரும்பிவிடுவாரென்பதில் யான் சிறிதும் ஐயமுறவில்லை. மாட்சிமைதங்கிய தாங்கள் இங்கே திரும்பிவரும்படி சிறிதுநேரத்திற் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்." என்று அம் மலையவணிகர் கூறினார்.

குமுதவல்லி அங்ஙனமே அவ்வறையை விட்டுச்சென்று, தானிருக்கும் அறைவரிசைக்குள் தனித்திருக்கலானாள். தான் கேட்டவைகளைப்பற்றி யெல்லாம் ஏதுந் தடையின்றித் தனியேயிருந்து நினைத்துப்பார்ப்பதற்கு அவள் விரும்பினாள்; ஆகவே, கீழுள்ள தோட்டத்திற்கு இறங்கிப்போய் அங்கே அயர்வு தீர்ந்திருக்கும்படி அவள் தன்தோழிமார்க்குக் கற்பித்தாள். அங்ஙனமே அவர்கள் அவளைவிட்டுப் போனபிறகு அவள் சாய்மணைக் கட்டில் ஒன்றன்மேல் அமர்ந்து எண்ணமிடுவாளானாள். முடிவாகப்பார்க்குங்கால், அவ்வறிவோள் சொல்லிய கதை உண்மைக்குத் தெளிவாய்த் திட்டமாய் ஒத்திருந்தது; ஏனென்றால், இப்போதுதான் மனோகரர் வாயினின்று பிறந்த வரலாற்றின் ஒருபகுதியோடு அது மிகவும் வியக்கத்தக்கவாறாய்ப் பொருந்தியிருந்தது. ஆம், திகழ்கலை என்பவள் கோச்செங்கண்மன்னர் முகத்தைப் பார்த்தவளேயாவள்! நாகநாட்டரசியலினின்று நீங்கிய அம்மன்னர் அத்தனை ஆண்டுகளாகத் தாம் புகலிடமாய்க் கொண்டிருந்த அவ் வின்ப நிலத்தினுள்ளே அவள் சென்றாண்டு! தான் திகழ்கலையைத் தற்செயலாய் எதிர்ப்பட்டதும், இன்னும் மனோகரர்வாயினின்று முழுதுந் தனக்குத் தெரிவிக்கப்படவேண்டுவதாய் உள்ள புதிய மறையின் உட்பொருளைத் தான் அங்ஙனமே முன்னறியலானதும் புதுமையல்லவோவென்று குமுதவல்லி தனக்குள் நினைப்பாளானாள். பின்பு குமுதவல்லியின் நினைவுகள் வேறொருமுகமாய்த் திரும்பவே, அவ்விளைஞன் நீலலோசனன், கள்வர்தலைவனை நல்லானின் வேறான ஒருவனுவன் என்பதை நினைத்துச் சொல்லுக் கடங்காக் களிப்படைந்தாள்; அவனைப்பற்றி அத்தனை பொல்லாங்கான முடிபுக்குத் தான் சடுதியில் வரலானதை நினைந்து

அவள் துயரமுற்றாள். ஆனாலும், நேற்று மாலையில் மீனம்பாள் படுக்கையின் அண்டையில் அவனைத் தான் காணலானது என்னையென்று அவள் மறுபடியும் வியப்புற்றாள்.

இவ்வாறு குமுதவல்லி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அவ்வறைக்கதவை எந்து எவரோ தட்டலானார்: அவ்வரசி அவ்வாளை உள்ளே வரும்படி கட்டளையிட்டாள்; இளையனான சந்திரன் அவளெதிரே சென்று நின்றான்.

பதினாறும் அதிகாரம்

குமுதவல்லியும் நீலலோசனனும்

கதவைத்தட்டி முன்அறிவித்து வந்தமையாற் குமுதவல்லியிருக்கும் அறைக்குச் சந்திரன் இங்ஙனங் காணவந்ததில் மதிப்புக்குறைச்சலேனுந் தகாததேனும் ஏதும் இல்லை: ஏனெனிற், பௌத்தர்கள்பால் உள்ளதுபோற் பெண்மக்கள் தனித்திருக்க வேண்டுமென்னுங் கடுமையான வழக்கம் மேற்கணவாய் மலைநாடுகளில் உள்ள சைவசமயத்தவர்கள்பால் இல்லை. என்றாலுஞ், சந்திரன் அங்கேவந்தது வழக்கத்திற்கு மாறானதுபோற் குமுதவல்லியினுள்ளத்திற் படுவதாயிற்று. என்னையெனின், மாட்சிமை தங்கிய மனோகரர் தனக்குச் செய்தி அனுப்பியிருந்தால் அவ்வீட்டுமுதியோள் வாயிலாகவாவது அல்லது வேறோர் ஏவற்காரிவாயிலாகவாவது அனுப்பியிருக்க வேண்டுமென்பது அவளுக்குடனே தோன்றலாயிற்று. மனோகரரொடு தான் பேசிக்கொண்டிருந்தபோது தான் சந்திரனைப்பற்றிக் கொண்ட ஐயுறவை உறுதிப்படுத்தத் தக்கது ஏதும் நேரவில்லை; அவனது நம்பிக்கைத்தன்மையைப்பற்றி மனோகரர் அவனைப் புகழ்ந்தே பேசியிருக்கின்றார். வேண்டியமைத்த மனோகரரின் திருமுகங்களையும், மோதிரங்களையும் ஒவ்வொருவரிடமும் அவன் சேர்ப்பித்தகாரணத்தால், தன்னைநோக்கியும் பெருமான் நீலலோசனனை நோக்கியும் அவர் அவனிடம் நம்பி ஒப்புவித்தசெய்தி

களை அவன் நேர்மையுடன் கொண்டுவந்து செலுத்தினனென்பதும் நன்குவிளங்கிற்று.

இவ்வெண்ணங்கள் குமுதவல்லியின் உள்ளத்தில் விரைவிற் றோன்றி மறைந்ததும், அரசியாயிருக்குந் தனது உயர்ந்த நிலைமைக்கும், ஏவலனுயிருக்கும் அவனது தாழ்ந்த நிலைமைக்கும் ஏற்றபடியாகச் சந்திரனிடம் இனிய நோக்கத்தொடு பேசவேண்டுமென அவள் முன்னையிலும் பார்க்கத் தீர்மானஞ்செய்தாள். ஆனதனுல், அந்த ஒழுங்கின் அளவுக்கு, அவள் அவன் மிகவுந்தாழ்மையோடும் பணிவோடுந் தொலைவிலிருந்தே செய்த வழிபாட்டை ஏற்றுக்கொண்டாள்; தான் பேசுதற்கு அவளுடைய கட்டளையை எதிர்பார்த்தவனுய்ப் பணிவோடும் அவன் சிறிதுதொலைவில் நிற்கையிற், "சந்திரா, நீ சொல்லவேண்டியதைச்சொல். நீ இங்கே வந்த காரணம் யாது?" என்று அவள் வினவினுள்.

"அருள்நிறைந்த அரசி," என்று அவ்வேவலன் விடைபகர்வானுய் மறுபடியுந் தாழப்பணிந்து, "முதலாவது, பெருமாட்டியாரிடம் அடியேனது வணக்கத்தைத் தெரிவிப்பதற்கு ஏற்ற ஒருநேரத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்; இரண்டாவது, அடியேன் கேட்க விரும்புஞ் சில கேள்விகளுக்குப் பெருமாட்டியார் அருள்கூர்ந்து விடையளிப்பீர்களாயின் மனமகிழ்ந்தவன் ஆவேன்." என்றான்.

அவன் என்னகேள்வி கேட்கக்கூடுமென்று வியப்புற்றவளாய், "நல்லதுசொல் சந்திரா." என்றுகூறினுள் குமுதவல்லி.

"நாகப்பூரிலிருந்தபோது பெருமாட்டியார் அவர்களிடம் அடியேன் செய்தி கொண்டுவந்து சேர்ப்பித்த வகையைப்பற்றி என் உயர்குணத்தலைவரிடத்தில் அரசியார் உயர்த்தி நயப்பாய்ப் பேசியிருப்பீர்களென்று அடியேன் எண்ணிக்கொள்ளலாமா? யான் எடுத்துவந்த திருமுகத்திற் குறித்த நாளையும், யான் நாகப்பூரிலுள்ள தங்கள் அரண்மனையில் வந்து சேர்ந்தநாளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் வழியில் இடையே யான் தங்கியிருக்கக்கூடுமா என்பதைத் தாங்கள் தீர்மானம் பண்ணிக்கொண்டிருக்க

லாம். தாங்கள் மலையநாட்டிற்குள்வரும்போது எவர்க்குந் தெரியாதபடி வரும்படிக்கும், எவரும் உறுத்துப் பாராத ஒருபாதையைத் தொடர்ந்து வரும்படிக்கும் யான் தங்களை வேண்டிக்கொண்டதெல்லாம் என்தலைவர் கற்பித்தவண்ணம் யான் செய்தனவேயாகும் என்பதை அரசியார் மாட்சிமைமிக்க என்தலைவரின்வாயினின்றே வேண்டிய அளவுக்குக் கேட்டுத் தெளிந்திருப்பீர்கள்.'' என்று அவ்வேவற்காரன் கூறினன்.

''உன் தலைவரொடு சிறிதுநேரத்திற்குமுன் யான் பேசிக்கொண்டிருந்தபோது இவைகளைக்குறித்து நாங்கள் உண்மையாகவே ஏதும் பேசவில்லை, சந்திரா ; ஆனாலும், மாட்சி மிக்க மனோகரர் எனக்குத் தெரிவித்தவைகளிலிருந்து, யான் நீலகிரி நகரத்திற்கு வரும் பயணம் மிகவும் மறைவாக இருக்கவேண்டுமென்பதே முதலிலிருந்து அவரது விருப்பமாகுமென்பதை யான் ஐயமறத் தெரிந்துகொண்டேன். அதுவேயுமன்றி, யான் அரசியல்நிலைக்கு உரியவள் என்பது புலப்படாமற் செவ்வையாய் மறைக்கப்பட வேண்டுமென்பதும் அவரெழுதிய திருமுகத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்ததை யான் நினைவுகூர்கின்றேன்.'' என்று நாகநாட்டரசி மறுமொழி புகன்றாள்.

''அப்படியானல், எல்லாவகையிலும், என்னிடம் நம்பி ஒப்புவிக்கப்பட்ட சிறந்தசெய்தியைத் தங்களிடங்கொண்டுவந்து யான் சேர்ப்பித்தவகையில் அரசியாரவர்கள் மனநிறைவடைந்திருக்கிறீர்கள்?'' என்று சந்திரன் மொழிந்தான்.

''உனக்கு இகழ்ச்சி உண்டாகும்படி பேசுதற்கு ஏதொரு காரணமும் இல்லை என்பதைச் சந்திரா, உன்சொற்களிலிருந்தே நீ முன்னமே தெரிந்திருக்கலாமே. எனினும், என்னிடமிருந்து இவ்வுறுதிமொழிகளைக் கேட்கும்பொருட்டு நீ ஏன் இவ்வளவு கவலையுள்ளவனுய்த் தோன்றுகின்றாய்?'' என்று அவ்வரசி வினயினள். ஓர் இமைகொட்டும் நேரங் குமுதவல்லி அவ்வேவலன் முகத்தை ஆராய்ந்துநோக்கினள்: ஏனென்றால், அவனைப்பற்றி அவள்கொண்ட ஐயம் மறுபடியும் அவளதுள்ளத்தில் வலிவுபெற்றுத் தோன்றியது.

"அதன் விளக்கத்தை உடனே சொல்லிவிடுகின்றேன்." என்று முழுதுங் காவற்ற வெள்ளையுள்ளம் உடையவன்போல் அவ்விளைஞன் விடைகூறுவானானன்: "முதலாவது, ஒவ்வொருவரும் அரசியாரின் நல்லெண்ணத்தைப்பெறுதற்கு விரும்புவர்; இரண்டாவது, யான்பிறந்தது முதல் என்னைவளர்த்து, யான் தாய்தந்தையரை இழந்திருந்த காலத்திலும் என்னைப் பாது காத்துவரும் அருள்நிறைந்த என் தலைவர் மனோகாருக்கு என்னு லியன்ற எல்லாவகையிலும் இசைவாக நடந்துகொள்ளவேண்டு மென்பதே எனது பெருநோக்கம்; மூன்றாவது, பெருமாட்டி, தாங்கள் இவ்விடத்தே வந்து சேர்ந்தநேரத்தில் தாங்கள்சொல் லிய சில சொற்களிலிருந்து, வரும் வழியில் தாங்கள் இடர் உற்றீர்களோவென்று அச்சமும் அடைந்தேன்."

"ஆ! இப்போது நினைவு கூர்கின்றேன்! யான் என் குதிரையிலிருந்து கீழ் இறங்குகையிற், சில சிறு நிகழ்ச்சிகளைப்பற்றி யான் தற்செயலாய்ப் பேசினது உண்மைதான்; ஆனால், அவை கடந்துபோய் விட்டமையால், இனி அவற்றைக் குறித்துப் பேசுவதிற் பயன் சிறிதுமில்லை." என்று குமுதவல்லி மொழிந்தாள்.

திரும்பவும் அவ் ஏவற்காரன் சொல்லுவான், "ஆம் பெருமாட்டி, தங்கள் திருவாயினின்று அப்போது தோன்றிய சொற்கள் அதுமுதல் என் நினைவைவிட்டு அகலாதிருந்தன; ஏனென்றால், யான் முன்னமே சொல்லியபடி அவை சில இடர்களைக் குறிப்பிட்டன வென்று அஞ்சினேன்; நாகப்பூரிலுள்ள தங்கள் அரண்மனையில் தங்கள் வரவுபார்த்து யான் காத்திருக்கப் பெற்ற போது, அரசியார்க்கு யான் தெரிவித்துக்கொண்ட குறிப்புகள் ஒவ்வொன்றிலுங் கருத்தின்மையினாலாவது மறதியினாலாவது எதனையேனுஞ் சொல்லாமல் விட்டிருந்தேனாயின் அஃது என் மனத்தை நிரம்பவும் புண்படுத்துவதாகும்."

இங்ஙனஞ் சந்திரன் பேசியபோதெல்லாங், குமுதவல்லி சாய்மணைக்கட்டிலில் அழகிதாய் அரைவாசி சாய்ந்திருந்தபடியே கீழ்நோக்கியபார்வையோடு இருப்பதுபோற் காணப்பட்டாள்; ஆனாலுங், குற்றம் ஏதும் அறியாமையால் உண்மை

யான நெஞ்சத்தோடும் அவன் பேசினுனே, அல்லது குமுத வல்லி வழியில் அடைந்த இடர்களுக்கு இவன் உடந்தையா யிருந்ததைப்பற்றி அவள் ஐயுற்றிருந்தால் அவ் ஐயத்தின் அள வை ஆழ்ந்தறியும் பொருட்டுக் கரவாயுஞ் சூதாயும் நடந்துகொண் டானே என்பதை அவ்விளைய ஏவற்காரன் முகத்தினின்று கூடுமானுற் கண்டறியும் வண்ணம் உண்மையில் அவள் கருத் தாய் நோக்கிக்கொண்டிருந்தாள். என்றாலும், அவனது பார்வை யில் அவள் கொண்ட ஐயத்தை உறுதிப்படுத்தத்தக்கது ஏது மில்லை—எவரோ ஒருவரைப்பற்றி விழிப்பாயிருக்கும்படி இவ னுக்குக் கற்பித்து மீனும்பாள் மிகமெல்லச் சொல்லியபெயர் மெய்யாக இவனுடைய பெயரே யாகுமென்னும் நம்பிக்கை யைத் திண்ணமாக்குவதற்கு இவனது முகத்தில் ஏதொன்றுங் காணப்படவில்லை. மற்று, அவனுடைய சொல்லிலுங் குறிப் பிலும் உண்மையை உருக்கத்தொடு பேசுந்தன்மையே காணப் பட்டது. இன்னும், ஏவற்காரனயிருப்பவன் ஒருவன் தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்ததைப்பற்றியும், நம் பிக்கைக்குரிய ஒரு செய்தியைக் கொண்டுபோகும்படி அமர்த் தப்பட்டக்கால் தன்னை அங்ஙனம் அமர்த்திய அன்புள்ள தன் தலைவரும், அச்செய்தியைத் தான் நம்பிக்கையொடு கொண்டு போய்ச்சேர்க்க அதனை ஏற்கும் அரசியாரும் முழுதும் மனம் உவக்கும்படி தான் நடந்துகொண்டதைப்பற்றியும் அவன் தான் உறுதியாகத் தெரிந்துகொள்ள விழைவது இயல்பே யன்றோ?

"வழியில் எத்தகைய இடர்கள் எனக்கு நேர்ந்தனவாயி னும், முடிவாக அவை என்னுடைய அலுவல்களைப் பழுதாக் கத்தக்க தொன்றையும் உண்டாக்கவில்லை. ஆதலால், அவற்றால் மனத்திற்கு இசையாத அனைத்தையும் நான் மறந்துவிடுதற்கு மிகவும் விருப்பம் உள்ளவளாய் இருக்கின்றேன். சந்திரா, உன் னைச்சுட்டி யான் சொல்லக்கூடிய குற்றம் ஒன்றும் இல்லை. மேலும், உன் தலைவர் உனது நடக்கையைப்பற்றி மகிழ்ந்திருப் பதை நீ அறிந்தால், அஃது உனக்கு இன்பந் தருவதாயிருத்த லின், சிறிது நேரத்திற்குமுன்னே உன் பெயரைச் சொல்லுகை யில் தமக்கு நம்பிக்கையுள்ள ஏவற்காரன் என்று உன்னைக்

குறிப்பிட்டு உன் தலைவர் கூறியதை யான் உனக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்." என்று குமுதவல்லி விளம்பினாள்.

"அருள்மிக்க அரசி, தாங்கள் கூறிய இவ்வுறுதி மொழிக்காக எனது வணக்கத்தைச் செலுத்துகின்றேன். எனது வாழ்நாளில் யான் நிறைவேற்றக் கருதியிருப்பது ஒரே ஒரு நோக்கந்தான்—அஃதென்னென்றால், யான் தாழ்ந்த ஓர் ஆளாய் இருப்பினும், எனது கடமையைச் செவ்வனே செய்து, என்போல் மக்களாய்ப் பிறந்தவர்களின் நல்லெண்ணத்தை யான் பெற்றுக்கொள்ளுதலேயாம். பெருமாட்டி, மாட்சிமை தங்கிய மனோகரருக்காக எனது உயிரையுங்கொடுக்கக் காத்திருக்கின்றேன். இனித், தங்கள்பொருட்டும் எப்போதாயினும் யான் ஏதேனுஞ் செய்யும்படி ஏவப்பட்டால், அருள்மிகுந்த அரசி, தங்கள் அலுவல்களிலும்யான் உண்மையோடும்உள்ளக்கிளர்ச்சியோடும் அழுந்தி முயல்வேனென்பதை எடுத்துரைப்பதற்கு இதனையே ஏற்ற நேரமாகக்கொண்டு தடுக்கமுடியாத மனவெழுச்சியோடுங் கூறும் எனது மனத்துணிவிற்காக அடியேனை மன்னித்தல்வேண்டும்!" என்று சந்திரன் கிளர்ச்சியோடுங் கூறினான்.

அவ்விளைய ஏவலனுடைய சொல்லிலும் பார்வையிலுஞ் செய்கையிலும் வெளித்தோன்றிய உண்மையினால், மக்களியற்கையைப்பற்றி எப்போதும் மிகு நல்லெண்ணமே கொள்ளும் அருளியல்புவாய்ந்த குமுதவல்லி தான்கொண்ட ஐயமெல்லாம் அகன்று போயினவென நினைந்தாள்; உடனே அவள் தனது விரலிலுள்ள விலையுயர்ந்த மோதிரம் ஒன்றைக் கழற்றிச், "சந்திரா, நாகப்பூரிலிருந்தஎன்னிடம் நீசெய்திகொண்டுவந்தகாலையில் நீ அதனை நம்பிக்கைக்குப் பழுதுவராமற் செலுத்திய தன்மையை யான் உவந்து கொண்டதற்கோர் அடையாளமாக இதனை நீ ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்." என்று சொல்லிக்கொண்டே அதனை நீட்டினாள்.

சந்திரன் உடனே தாழப்பணிந்து, "அருள்நிறைந்தஅரசி, தாங்கள் ஈதற்கு நீட்டின இப்பரிசிலை யான் ஏற்றுக்கொள்ளா

ததுபற்றி அடியேனை மன்னித்தல்வேண்டும். நாகப்பூரில் அரசியார் அடியேனுக்குச் சிறந்த ஒரு பரிசில் அளித்தீர்கள்; தாங்கள் அடியேனை உவந்து ஈந்த அவ்வுடையாளத்திற்காக யான் உள்ளங்குளிர்ந்தேன். இப்போது பின்னும் ஒரு பரிசிலை யான் ஏற்றுக்கொள்வேனுயின், உண்மையில் ஒரு நன்கொடை பெறும் நோக்கத்தைமறைத்து வணக்கஞ் செலுத்தும்பொருட்டுத் தங்கள் முன்னே வந்தேன்போல் அரசியார் கருதவுங்கூடும். தங்கள் எண்ணத்தில் யான் நன்கு மதிக்கப்பட்டிருக்கின்றேனு என்பதையுந், தாங்களும் மாட்சிமிகநிறைந்த என் தலைவரும் ஆண்மைமிக்க பெருமான் நீலலோசனரும் யான் நாகப்பூருக்கும் மேற்கரைக்குஞ் செய்தி கொண்டு வந்து சேர்ப்பித்தவகையில் மனம்உவந்தனரா என்பதையும் உறுதியாகத்தெரிவதொன்றே எனது நோக்கமாகும்.'' என்று மறுமொழி பகர்ந்தான்.

இவ்வாறுசொல்லியதுஞ், சந்திரன் நாகநாட்டரசியினிடத்தில் மிகுந்த வணக்கம் உடையான்போற் பணிந்து, விரைவில் அவ்வறையை விட்டு வந்தான்.

அவன் தனக்குப்பின்னே கதவு சாத்திக்கொண்டுபோனதுங், குமுதவல்லி அம்மோதிரத்தைத் திரும்பவுந் தன் விரலில் இட்டுக்கொண்டவளாய்த் தன்னுள் எண்ணுவாள்: ''உண்மையில் யான் இவ்விளைஞனுக்குப் பிழைசெய்தவளானேன். இவன் இழிந்த இரண்டகமான செய்கையைச்செய்யமாட்டாதவனுய், மிக உயர்ந்தசிறந்த எண்ணங்கள் உடையவனுய்த்தோன்றுகின்றுன். இவனுடைய எண்ணத்திற்கு மாறுகுமென்று நினைத்து இப்பரிசிலை இவன் வாங்கிக்கொள்ளும்படி இப்போது இவனை நானும் நெருக்கவில்லை. வேறுநேரம் பார்த்து இவனுக்குத்தக்க நன்கொடை அளிக்கவேண்டும். இறந்துபோகுந் தறுவாயில் மீனும்பாள் வாயில் நிலைதடுமாறிப் பிறந்த பெயர் வேறொருவனுடையதாகவே இருக்கவேண்டும்! மற்று அப்பெயர் யாதாயிருக்கலாம்? எவரைப்பற்றி நான் விழிப்பாய் இருக்கவேண்டும்? ஆ! அத்துணைச்சிறுகாரணத்தைக்கொண்டு யான் சந்திரனைப்பற்றித் தீதாய் நினைந்தது முற்றும் பிசகு! நீலலோசனனைப்பற்றி நினைந்ததில் எவ்வளவுபுதுமையாக நான்ஏமாற்றம்

அடைந்தேன்! ஆண்மையிற்சிறந்த என் மைத்துனனைப்பற்றி நான் பிழைபட நினைந்தது எவ்வளவு கொடுமையானது! இனி வெளித்தோற்றத்தைக்கண்டாவது, நிரம்பாமன ஐயுறவுகொண்டாவது என்ஞான்றும் இத்தகைய முடிபுக்குத் திடுகூறாய் வரற்பாலேன் அல்லேன்." இப்போது சுந்தராம்பாளும் ஞானம்பாளும் இவளிருந்த அறைக்குத் திரும்பிவந்தார்கள்; குமுதவல்லியும் அவர்களைநோக்கி, "வாருங்கள் தோழிகாள், என்பக்கத்தில் இருங்கள்; யான் நுங்கட்குத் தெரிவிக்கவேண்டிய சில அறிவிப்புகள் இருக்கின்றன." என்றாள்.

அழகும் நம்பிக்கையும் வாய்ந்த அப் பெண்களிருவரும் இளம் பெருமாட்டியின் அண்டையில் உடனே அடியிணைகளின்மேல் உட்கார்ந்தார்கள். அவ்வரசியார் தமக்கு எதனைத் தெரிவிக்கத் தாழ்ந்தருள்வரோ என்று அவர்கள் ஆவலோடும் எதிர்நோக்கியிருந்தார்கள்.

"முதன்முதல், மங்கைமீர், என்னுடைய தவறுதலால் உங்கள் உள்ளத்தில் உண்டான ஓர் எண்ணத்தை அங்கு நின்றும் அகற்றுவதற்கு ஒரு நொடிப்பொழுதுகூட யான் தாழ்க்கலாகாது. பெருமான் நீலலோசனரைக்குறித்துத் துவக்கத்தில் மிகவும் பாராட்டிப்பேசிய நீங்கள், அவரைப்பற்றி யான் கொடுமையாகவுந் துயரப்படும்படியாகவும் பிழைபட எண்ணி நடந்தேன் என்பதை இப்போது தெரிந்து நிரம்பவுங்களிப்படைவீர்கள்; அவர் கொள்ளைக்கூட்டத் தலைவனான நல்லான் அல்லர்; அவர் இப்போது இளவரசுப்பட்டத்தில் இருப்பவராயும், இன்னும் உயர்ந்த ஒரு நிலையைப் பெறுதற்கு ஏற்ற மெய்யான உரிமையுடையவராயும் உள்ள மிக மாட்சிமைப்பட்ட ஓர் இளம் பெருமானேயாவர்!" என்று குமுதவல்லி கூறினாள்.

இச்சொற்களைக்கேட்ட அளவில் சுந்தராம்பாள் ஞானம்பாள் வாயினின்று களிப்புரைகள் வியப்புடன் எழுந்தன. முதலிற்சொன்ன பெண்ணின் மெல்லிய கரிய மடமான்விழிகளிலும், அங்ஙனமே அழகிய மற்றைப் பெண்ணின் பழுப்புநிறக் கண்களிலும் அம்மகிழ்ச்சிக்குறிப்பு ஒளியுடன் கிளர்ந்தது; சிறிதுகாலத்திற்குமுன் எண்ணியதற்கு வேறாகத் தான் இப்

போது நீலலோசனனைப்பற்றி எண்ணக் கூடியவளானதை நினைந்து குமுதவல்லி தன் பட்டுப்போன்ற கன்னங்களில் ஒரு பொலிவு கொள்ளப்பெற்றாள்; இந்தப்பொலிவு மனக்குறையினால் தோன்றியதன்று.

"இன்னும் நான் சொல்லவேண்டுவது மிகுதியாயிருக்கின்றது, மாதரீர்; எனினும், இப்பொழுதிற்கு யான் வெளியிட்டுரைக்கப்போவது ஒரு மறைபொருளாகும்; ஏனென்றால், மாட்சிமைமிக்க மனோகரர் இதனையடுத்து என்ன ஏற்பாடுகள் செய்ய எண்ணியிருக்கிறாரென்பது எனக்கு இன்னுந்தெரியாது. சுருங்கச்சொல்லுங்கால், உங்களுக்குப் பெரிய வியப்பினைத்தரும்ஒரு செய்தியைச் சொல்லப்போகின்றேன்." என்று தொடர்ந்துரைத்த குமுதவல்லி சிறிது நின்று, பிறகு அழுத்தமாகவும் அடங்கியமகிழ்ச்சியோடும், "நீலலோசனர் எனக்கு மிகநெருங்கிய உறவினர்—அவர் என் உரிமை மைத்துனர்!" என்று கூறினாள்.

அவ் விளந் தோழிப்பெண்கட்கு இச்செய்தி ஒருவியப்பினைத் தருவதாயிருந்தது. அத்தகைய உறவினரைத்தான்பெற்றதற்காகத் தன்னைப் பெருமைபாராட்டிக் கொள்ளத்தக்க நிலையிலுள்ள தம் தலைவியின்மேல் அவ்விருவரும் ஒருங்கே வாழ்த்துரை சொரிந்தனர்.

"ஆம், மகளிர்காள், இது மெய்ம்மைதான். சிறிதுநேரத்திற்கு முன்னேதான் இஃதெல்லாம் அம் மலேய வணிகரின் வாயினின்று கேட்டுணர்ந்தேன். அவர் அன்பான நெஞ்சமும் அருட்குணமும் வாய்ந்த சிறந்த முதியவர். இதற்குமுன் இதனைப்பற்றி யான் ஒன்றும்அறியேனாயினுந், தாம் எனதுகுடும்ப நன்மைகளைக் கோரிய வலிய நண்பர் என்பதை மெய்ப்படுத்தியிருக்கின்றார். என்மைத்துனர் நீலலோசனரைப் பற்றியோவென்றால், எமக்குள் அவ்வுறவு எங்ஙனம் உண்டாயிற்று என்பதைத், தோழிகாள், நீங்கள் எண்ணிப்பார்க்கத் தவறமாட்டீர்கள்; ஏனெனில், இரங்கத்தக்க என் மாமனார்—என் தாயோடு உடன்பிறந்ததம்பியார்—தம்கையிற்குழந்தையுடன் நாகப்பூரை விட்டு அகன்றுபோன கதையை நீங்கள் அடுத்தடுத்துக் கேட்

டிக்கின்றீர்கள். அந்த மகவுபெரிய பிள்ளையாய் வளர்ந்தது-மேற்கரைநாட்டின் அரசரான சாக்கியதர்மர் தமக்குமருமகனாக எடுத்துக்கொண்ட அவ்விளைஞரே இன்றைக்கு என் மைத்துனனா யிருக்கக்கண்டேன்." என்று அவள் தொடர்ந்துரைத்தாள்.

அங்ஙனங் கேட்ட வியப்பான செய்திகள் எல்லாவற்றையும் பற்றித் தாம் அடைந்த மகிழ்ச்சியினையும் இறும்பூதினையுந் தெரிவிக்கச்சுந்தராம்பாளும்ஞானம்பாளும் போதுமானசொற்கள் காணாராயினர். இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கும்போது அவ்வீட்டு முதியோள் உள்ளேவந்தமையால் அது தடைப்பட்டது; வந்தவள், "பெருமாட்டியாரவர்கள் மறுபடியும் என்மாட்சிமைப்பட்ட தலைவரிடம் வந்தருளுதற்குத் திருவுளம் பற்றல் வேண்டும். முன்னே தாங்கள் கண்டு பேசிய அந்தஅறையிலேயே அவர் தங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்." என்று சொன்னாள்.

மனோகரர் வரவேற்கும் அறைக்குக் குமுதவல்லி மறுபடியுஞ் சென்றுகொண்டிருக்கையில், அவளது உயர்ந்த நிலைமையானது அவ்வீட்டிலுள்ள ஏவற்காரர் எவர்க்கும்பெரும்பாலுந் தெரியமாட்டாதென்பதனைச் சொல்லிவிடுகின்றோம். அதனை நிரம்பவும் மறைபொருளாய் வைத்திருக்கவேண்டுமெனச் சந்திரன் கற்பிக்கப்பட்டான்; தன் தலைவரின் கட்டளைகளுள் ஒன்றான இதனை அவன் மீறி நடப்பதற்கும் ஏதுவில்லை. நாகநாட்டரசி நீலகிரிநகரத்தில் வந்து தமது வீட்டில் தங்கியிருக்கின்றாள் என்பது எந்த வகையாலும் வெளியே தெரியாதபடி மறைவிடமாய் வைக்கப்படவேண்டுமென அம்மலையவணிகர் எண்ணங்கொண்டிருந்தார்; ஏனெனில் அவர் அவளை அங்கு வரவழைக்கும்படி தூண்டின முதன்மையான அலுவல்கள் மிகவும் மறைவாகவே வைக்கற்பாலனவாயிருந்தன; மேலும், அவளை அவர் மேற்கணவாய் மலைக்காடுகளின் இடையே அழைத்துச்சென்று, அவள் ஏற்கெனவே ஒருவாறு உய்த்துணர்ந்திருக்கின்ற மிகப்பெரிய மறைபொருளை அவளுக்கு முற்றிலும் அறிவித்தற்கு அவர் கருதியிருந்தமையால், நாக

நாட்டரசி அவரது மாளிகையிற் றங்கியிருக்கின்றாள் என்பது வெளிப்புலப்படுமாயின், அஃது எதன்பொருட்டு என்று அறியப்புகுவதே வெளியார்க்கு இயற்கையாதலால், அவர்களுடைய இயக்கங்கள் உற்று ஆராயப்படாமல் மறைக்க வேண்டுவது இன்றியமையாததாகவேயிருந்தது. ஆனாலும், அப்போதைக்கு வேறொருபெயரை வைத்துக் குமுதவல்லியின் பெயர் வெளியே தெரியவொட்டாதபடி மறைக்குமளவுக்கு ஏன் அம்முன் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பது ஒரு புதுமையாகத் தோன்றலாம்; என்றாலும், அம்மேற்கணவாய் மலைநாடுகளில் உள்ள பெண்பாலாரில் உயர்ந்த நிலையில் இருப்பவர்க்குக் குமுதவல்லி என்னும் பெயரிட்டுவழங்கல் சைவர் பௌத்தர் என்னும் இருதிறத்தினரிலும் வழக்கமல்லாததன்று. ஆதலால், அவ்வளவு உன்னிப்பான ஏற்பாடுவேண்டப்படுவதில்லை. எனவே, குமுதவல்லிப்பெயரியபெருமாட்டியே நாகநாட்டரசியாவள்போலும் என்று ஐயமுறுவார் எவருமில்லை.

குமுதவல்லி மறுபடியும் மனோகரர் இருந்த அறைக்கு வந்து சேர்ந்தாள்; அவ்வணிகர்மட்டும்அங்கே தனித்திருக்கவும் நீலலோசனன் அவருடன் இல்லாதிருக்கவுங் கண்டாள். முன் முறையில் அவர் அவளிடத்தில் நடந்துகொண்ட வண்ணமே நன்கு மதிப்பும் நட்புங்கலந்த ஒருதன்மையோடு அவ்வரசியை அவர் வரவேற்றார். அவர்தம் முதுமையும்அவடன் பாட்டனாரோடு அவர் தாம் கொண்ட நெருக்க உறவும் அவளைப் பெற்றோர்க்குரிய அன்புடன் பாராட்டத்தூண்டினாலும் அவர் அவளது அரசியல் நிலையை மறந்துபோகவில்லை.

"எனக்கு இனியநட்பான இளையஅரசி, தங்களுக்குயான் நல்லசெய்தி தெரிவிக்கப்போகின்றேன். தங்கள் மைத்துனர் யான் எடுத்து விளக்கிய அவ்வுண்மைகளை உண்மையென் றுணர்ந்து ஏற்றுக்கொண்டார்; அவர் சைவசமயத்தைத்தழுவிக் கொள்வார்!" என்றுரைத்தார்.

இதனைக்கேட்டதுங் குமுதவல்லியின் நெஞ்சம் இன்பத்தால் ஊடுருவப்பெற்றது. அவள் அவனிடத்துக்கொண்டிருக்

கின்ற அன்புமிக்க நேசத்திற்குத் தன்னை அவன் தகுதியுடையனாக்கிக் கொள்ளுகின்றானென உணர்ந்தாள்.

‘ஆம், நாளை மாலையில் இவ்விடத்தே வணக்கவொடுக்கம் மிக்க ஒரு சடங்கு நடைபெறும். அப்போது தங்கள்மைத்துனனார் தூயகுருவினால் திருநீராட்டப்பட்டுத் தாம் பிறந்த சைவ சமயத்தைத் தழுவிக்கொள்வார். அவர் தம்பெற்றோர்களால் அவர்க்கு இடப்பட்டதுந், தாங்கள் தெரிந்தவாறே தங்கள்குடும்பத்தில் எத்தனையோ எத்தனையோ தலைமுறையாகப் பேணப்பட்டுவந்ததும், தங்கள் பாட்டனாரும் அவர்க்குப் பாட்டனாரும் பூண்டிருந்ததும் ஆன **கோச்செங்கண்ணன்** என்னும் பெயரையும் அப்பொழுதுஅவர்சூடிக்கொள்வார்!” என்றுமனோகரர் தொடர்ந்துரைத்தார்.

“மாட்சிமை மிக்க மனோகரரே, என் மைத்துனர் சைவ சமயத்தில் திரும்பவும்வந்துசேர்வதை யான் காணும்அந்நேரம் எனக்கு ஒரு நன்னேரமாய் இருக்கும். நாகநாட்டரசாட்சியை அவருக்குநான் மனமகிழ்ச்சியோடு ஒப்புவித்துவிடுகின்றேன்.” என்று கூறுகையிற் குமுதவல்லி நெட்டுயிர்ப்பெறிந்து, “ஆனாலும், அரிடமன்னன் ஆளுகைக்கு உள்ளடங்கி அரியணைமேல் முடிகவித்துவீற்றிருக்கும் ஓர் ஆவிவடிவைப்போல் யானிருக்குமாறு அந்நாட்டினரசியல் ஒரு நிழலின்தோற்றத்தை அடைந்திருக்கின்றதே!” என்று கூறினாள்.

“பெருமாட்டி, ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டின் முடிவுப்படி அல்லாமல்—உங்களுக்குள் முன்னமேயுள்ள உறவின் பொருத்தமானது இன்னும்நெருக்கமான மற்றைக்கட்டுகளால் உறுதிப்படுத்தப்பட்டால்அல்லாமல்இங்ஙனம் நடத்தலாகாது. அழகியகுமுதவல்லி, இங்ஙனம் உள்ளதை உள்ளபடியாகயான் திறந்துபேசுதல்பற்றி, இம்முதியோனைத்தாங்கள் மன்னித்தல் வேண்டும். என்றாலும், நீண்டகாலமாய்க்காணாதுபோன தம் பேரன் உயிரோடிருத்தலைப் போற்றத்தக்க தங்கள் மாமனார் தெரிந்துகொண்டபிறகு, யான் கடைசியாக அவரைச்சென்று கண்டசிலவேளைகளிலெல்லாம் அவர்எனக்கு அடிக்கடி சொல்லிய விருப்பத்தினையே யான் தங்கட்குத்தெரியச்சொல்லலாயி

னேன். எழில்மிக்க குமுதவல்லி, தங்கள் மைத்துனனார் சைவ சமயத்தைத் தழுவிக்கொண்டு அவ்வாற்றால் அம்மாமறைப் பொருளைத்தெரிந்துகொள்ளுதற்குமட்டுமன்று, தங்களை வேள்வித்தீமுன் மணந்துகொள்ளும் இன்பத்தைப் பெறுதற்குந் தம்மைத் தகுதியுடையராக்கிக்கொள்ளல் வேண்டுமென்பது மெய்யாகவே இறந்துபோங்காலத்தும் அம்முதிய கோச்செங்கண்மன்னர்க்கு விருப்பமாயிருந்தது. எனினும், உங்கள் உள்ளன்பு வேறொரு முகமாய் முன்னமே செலுத்தப்பட்டிருக்குமானால்—அல்லது இல்லறக்கடலைக் கடக்குந் திருமணக்கப்பலில் ஏறுவது தங்கட்கு வெறுப்பாக இருக்குமானால் தங்கள் அரசியலை அங்ஙனம் ஒப்புவிக்கவேண்டுவதில்லை. உரிமைப்படி அஃது உங்களுக்கே உரியது—மூத்த கிளைவழியில் வந்த உங்களுக்கே அஃது உரியதாகும்—நீங்களே அதனை வைத்திருக்கற்பாலீர்கள்!" என்று மனோகரர் மறுமொழி புகன்றார்.

மாட்சிமிக்க மனோகரர் நீள இவற்றைச் சொல்லுகையில் நாணங்கலந்த மனக்குழப்பத்தினால் குமுதவல்லி வாய்பேசக் கூடாமல் அடைபட்டிருந்தாள்—இவள் முகத்தின்கண் உள்ள நிறமோ புடைபெயர்ச்சி நன்கு புலனாகாதபடி வருவதும் போவதுமாய் இருந்தது; வாய்பேசாமல் இவள் இச்சொற்களை உற்றுக்கேட்கையில் இவளது மார்பமோ மெல்லெனச் சிறிதே ஏறியிறங்கிக்கொண்டிருந்தது. முன்னமே இவள் நீலலோசனனிடத்துக்கொண்ட ஓர் உணர்ச்சியை, இம்முதியோன் கூறிய சொற்கள் இவளது ஆழ்ந்த நினைவின்கண் எழுப்பிவிட்டன. சிறு குழந்தையைப்போற் கள்ளம் அறியாதவளாயிருந்தும் இவள் இப்போதுதான் காதல்என்பதன் முதல் எழுத்துக்களைப் பயிலத்தொடங்கினாள். அவளது நெஞ்சத்தினுள் அமைதியாய் மெல்லத்தோன்றிய ஒரு பதைப்பானது, மனோகரர் கூறிய சொற்கள் இன்பத்தைப்பிறப்பிக்கும் ஒரு நரம்பின் அசைவினை விளைவித்ததென்று அவளுக்கு அறிவிப்பதாயிற்று.

"என் அன்பிற்குகந்த, மாட்சியின்மிக்க மனோகரரே," என்று அவள் கடைசியாகத் தன் மெல்லிய இனியகுரலிற், கீழ்க்கவிந்த விழிகளோடுங் கூறுவள் என் உள்ளன்பானது

இதற்குமுன் எங்குஞ் செலுத்தப்பட்டிலது—என்னையெனின், இதற்குமுன் யான் என்றும் நினையாத ஒருசெய்தியைப்பற்றித் தாங்கள் குறிப்பிட்டீர்களே ; புதிதாகக் கண்டுகொள்ளப்பட்ட என் மைத்துனரோடு யான் சிறிதும் பழகியிராவிடினும், அவர் தம் அஞ்சா ஆண்மையினையும் வள்ளற்றன்மையினையும் உயர்ந்த அறிவினையும் நிலை நிறுத்தும் அடையாளங்களை யான் முன்னமே அறிந்திருக்கின்றேன்."

"ஆம், குமுதவல்லி, நீங்கள் முதன்முதல் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டபோது நிகழ்ந்தவற்றையும், ஒரு வேங்கைப் புலியினிடம் அகப்பட்டு மீண்டதையும் நீலலோசனர் தமது இளமைக்கு ஏற்ற நாணத்தோடும், எனக்குவிரித்துக்கூறினார்" என்று மனோகரர் அதற்கியைந்துரைத்தார்.

"அக்கொடிய விலங்கினாற் புண்படுத்தப்பட்ட மலைநாட்டார் இருவர்க்கு அவர் தாம் அன்பொடு செய்த உதவிகளையும் தமது பணப்பையிலிருந்து மிகுதியாய் எடுத்துக்கொடுத்த பரிசிலையுங் குறித்து அங்ஙனமே தங்கட்குத் தெரிவித்தனரா ?" என்று வினவிப், பின்னும், "ஆ ! அவரது ஆண்மைக்குத்தக்கவாறே அவரது உள்ளன்பும் அதனையடுத்துத் தோன்றியது ; அவரது அறிவின் றன்மையைப்பற்றியோ வென்றால், அஃது எவ்வளவு நன்றாய்ப் பண்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதனை அறியாமல் ஒருநாழிகை நேரங்கூட அவருடன் இருக்க முடியாது" என்று பேசினாள் குமுதவல்லி.

அங்ஙனம் பேசியவுடன் குமுதவல்லி நாணத்தால் முகம் மிகச் சிவக்கத் தன் தலையை வெட்கத்தோடுங் கீழே குனிந்து கொண்டாள்; ஏனென்றால், தன் மைத்துனன் செய்கையையும் இயற்கையையும் பற்றித் தான் உண்மையொடு கரவடமின்றி வியந்துரைத்த சொற்கள், தனது கன்னிமை நாணத்திற்குத் தகாத அத்துணைக்கிளர்ச்சிவாய்ந்த புகழுரைகளைத்தான்பகரும் படி செய்துவிட்டனவோ என்னும் நினைவு அவளுள்ளத்திற் சடுதியிற் றோன்றலாயிற்று. ஆனால், மனநிறைவுக்கு அடையாளமான ஒரு புன்சிரிப்புத்தோன்றப்பெற்றவராய் மனோகரர் அமைதியாகக் கூறுவார்: "என் அன்பிற்குரிய இளையநேசனே.

இப்போது தங்கள் மைத்துனரே தமது வழக்கைத் தங்களிடம் எடுத்துப்பேசும்படி யான் விட்டுவிடுவதில் தீங்கொன்றும் இல்லையென்று நினைக்கின்றேன்."

"இல்லை—இதற்குள் அல்ல! இதற்குள் அல்ல!" என்று, அத்தகைய செய்தியில் மிகவும் விரைவதுபோற் காணப்படும் ஒரு நிகழ்ச்சியிற் பின் வாங்குவாளாய்க் குமுதவல்லி முணுமுணுத்து, "அவர் தம் உயர்ந்த தன்மைகளுக்கு அறிகுறியானவற்றை யான் அறிந்துகொண்டேனாயினும், அவர் என்னைப்பற்றி ஒன்றுமே தெரியாதவராய் இருக்கின்றார்!" என்று கூறினாள்.

மனோகரர், தாம் தம் புதல்வியொடு பேசுவதுபோல் அவ்வளவு அன்பான அக்கரையைப் புலப்படுத்தும் வகையுடன் இன்னும் அமைதியான குரலிலேயே "இளவரசி, தங்கள் இளைய உறவினர் தங்களிடத்துள்ள பல நல்லியல்புகளையும் பாராட்டக்கூடிய அளவு தங்களைப் போதுமானபடி முன்னமே கண்டறிந்திருக்கின்றார்: அவர் தங்களைக் காதலிக்கின்றார்!" என்று மொழிந்தார்.

தனக்குப் பாட்டனாய் இருக்கத்தக்க முதியோன் ஒருவன் வாயினின்று வந்தமையானும், கூட இராத மற்றொருவனுக்குச் சார்பாகப் பேசப்பட்டமையானும் இவ்வறிவிப்பில் மனவருத்தத்தைத்தரத்தக்கதேனுங், குமுதவல்லியின் தூய உள்ளத்தை அல்லது அவளதுமெல்லிய உணர்வை அதிரச்செய்வதேனும் ஏதும் இல்லை. மேலும், மேற்கணவாய் மலைக்காடுகளின் இடையேயுள்ள தமது இன்ப உறையுளின்கண் வணங்கத்தக்க தன்பாட்டனாரான கோச்செங்கண்மன்னர் இறந்துபோந்தறுவாயில்நிலை தடுமாறும் அவரது வாயிற்பிறந்தஅவர்தங் கடைசியான விருப்பத்தையே, இப்போதுநீலகிரிநகரின்கண் அவ்வறையிலே அம்மலைய வணிகனாகிய தக்கோன் மறுபடியுந் தெரிவிக்கலானான் என்று அவளுக்குஅது காணப்பட்டது. ஆகவே, தனக்கேஉரிய தன் உறவினனால் தான் காதலிக்கப்பட்டாளென்னும் அவ்வறிவிப்புக் குமுதவல்லியின் அமைந்தநெஞ்சத்தில் மெல்லிய இனிமையுடன்சென்று ஆழ்ந்தது; நாணமானது தன்கன்னங்களிற் செந்நிறம் ஊட்ட அவள் மனோகரரை நோக்கி முணுமுணுப்

பொடுகூறுவாள்: "எல்லாவற்றிலுந் தங்கள் சொற்படியேநடக்கக் கடவேன்—ஏனெனில், என் பாட்டனார் தங்கள் வாயிலாகப் பேசுவதுபோல் எனக்குத் தோன்றுகின்றது!"

"தங்கள் உறவினர் திரும்பவுஞ் சைவசமயத்திற்குவந்தபின் அல்லாமல், அவர் ஒரு சைவக்கன்னிப்பெண்ணின் செவிகளில் தங் காதலைச்சொல்லற்பாலார் அல்லர். குமுதவல்லி, இப்போது அம்மாமறைப்பொருளைப்பற்றி ஒரு சொற் சொல்லிவிடுகின்றேன். நாளை மாலையில் தங்கள்மைத்துனர் நீலலோசனன்என்னும் பௌத்தப் பெயரை மாற்றிச் சைவப்பெயராகிய இளங்கோச்செங்கண்ணன் என்பதனைப் புனைந்துகொள்வர். யான் முன்னமே அவ்வளவுமிகுதியாகச்சொல்லியிருப்பதும், அதனையறிந்துகொள்ளுதற்கு நீங்கள் இருவீரும் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென நுங்கள் பாட்டனாரால் உருக்கத்தோடு எதிர்பார்க்கப்பட்டதுமான அம் மாமறைப்பொருள் அதன் பிறகு அவர்க்குத் தெரிவிக்கப்படலாம். ஆதலால், இருவீர்க்கும ஒருங்கே அவ்வுண்மை முழுதும் எடுத்து விரித்து உரைக்கப்படும்; அதனையடுத்துச் சிறிதுங் காலந்தாழாது தாங்களும் தங்கள் மைத்துனரும் அம்மேற் கணவாய் மலைகளுக்கு என்னொடு கூடப் பயணம் புறப்படுவீர்கள். தாங்கள் இன்றைக்குக் கண்டுகொண்ட தங்கள் உறவினரொடு கலந்துபேசும்படி தங்களை இப்போது சிறிதுநேரம் விட்டுவிட்டுப் போகின்றேன்." என்று அம்முதியோன் விளம்பினான்.

இவளுக்குத் தெரிந்திருக்கக்கூடுமென்று அம்முதியோனால் இதுவரையில் நினைக்கப்படாவிடினும், மேற்கணவாய் மலைகளின் இடையேயுள்ள இச்சிலவுலகத்து இன்பஉறையுளைப் பற்றி இவள்தான் மிகுதியாகமுன்னமே தெரிந்திருக்கும் வகைகளை விரித்துக்கூறி மனோகரரிடந் திகழ்கலையைக் குறித்துக் குமுதவல்லி பேசஇருந்தாள். ஆனால், அவரோதமது இருக்கையினின்றுஞ் சடுதியிலெழுந்து, பெற்றோர்க்குரிய உருக்கத்தோடும் அவள்கையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, அவ்வறையினின்றும் வேறோர் உள் அறைக்குச் செல்லும் வாயில் வழியே விரைந்துசென்றார். எனினும், அவர் அவ்வாயிற்கதவை

மூடவில்லை. நீலலோசனன் உடனே அவ்வாயிலிற் றோன்றி னான். அவன் குமுதவல்லியின் எதிரேசென்று, "மைத்துனி, உங்களைப்போன்ற அத்துணை அழகிய ஓர் உறவினர் இருப்பதை யான் தெரியப்பெற்ற இந்நாள் ஒரு நன்னாளேயாகும்!" என மொழிந்தான்.

குமுதவல்லி நாணத்தால்முகஞ்சிவந்தாள்; ஏனென்றால், தன் மைத்துனன் தன்னை முன்னமே காதலித்திருக்கின்றான் என்னும் அறிவிப்பைப் போற்றத்தக்க மனோகரர் வாயினின்றுங் கேட்டதனால் உண்டான நினைவு இன்னும் அவள் உள்ளத்திற் கலையாமல் இருந்தது. ஆனாலுங், கன்னிமைக்குரிய இறுமாப்பு அவளுக்கு உடனே உதவியாய் வந்து நின்றது; அவளுந் தக்கவாறு சிறிது மறுமொழி தந்தாள்.

"நாம் பேசவேண்டுவது மிகுதியாய் உள்ளது—குமுதவல்லி, நீங்களும், நானும்" என்று நீலலோசனன் சொல்லிக்கொண்டே அவளுந்தானுமாய் ஒரு சார்மணைக்கட்டிலின்மேல் அமர்ந்தார்கள்; "யான் காண்பதற்கு மிக விரும்பும் அந்த நாக நாட்டைப்பற்றி, யான் பிறந்த அவ்வூரைப்பற்றிச் சொல்ல வேண்டுவனவெல்லாம் நீங்கள் எனக்குச் சொல்லல்வேண்டும்; ஏனெனிற், புத்தநாடுகளின் வட்டத்திற்குள், அவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் சிறிதுந் தெரிவதில்லை. ஓ! குமுதவல்லி, நேற்று மாலையிற் புதுமையான அவ்விடத்தில் நீங்கள் வந்திருந்ததன் கருத்து யாதென முதலில் யான் கேட்கின்றேன். அங்கே உங்களை யான் பார்த்தபோதுயான்அடைந்த வியப்பினைக்கருதிப்பாருங்கள்!"

"அங்ஙனமே தங்களைப்பார்த்தபோதுயானடைந்த வியப்பினையுங் கருதிப்பாருங்கள்!" என்று குமுதவல்லி விடை பகர்ந்து, நாம் ஒருவரோடொருவர் எல்லாவற்றையும் விளக்கிச் சொல்லிக்கொள்ளவேண்டும்—நானே முதலில் துவங்குகின்றேன். தற்செயலாய் யான் அந்த நங்கையை வழியிற் காணலானேன்."

"கொள்ளைத்தலைவன் மனைவி மீனாம்பாள்," என்று நீலலோசனன் இடையேகூறுவான்;" அவளேதான்என்றுநேற்று

நான் சொல்லக் கேட்டேன்; குமுதவல்லி, உங்கள் பார்வையினுல், நீங்களும் அதனை அறியாதிருக்கவில்லை எனத் தெரிகின்றேன்."

"ஆம், கொள்ளைத்தலைவன் மனைவி மீனும்பாளேதான்." என்று அவ்வரசி விடை கூறுவாள்; "ஒரு பாம்பு தன் நச்சுப் பற்களை அவள் சதையில் ஊன்றிக் கடித்தபோது யானுங்கூட இருந்தேன்; அவள் என் கைகளிலேதான் உயிர் துறந்தாள். ஓர் அறிவோள், மணப்பொருள்களும் மருந்துகளும் விற்றுத் திரிவோள்—ஒருத்தியும் அப்போது கூட இருந்தாள்."

"இறந்தோள்கிடந்த வீட்டிற்கு நேற்றுமாலையில் என்னை அழைத்துச் சென்றவளும் அவளே-தான்." என்று நீலலோசனன் கிளந்தான்.

"தாங்கள்கண்டபடியே, என்னை அவ்விடத்திற்கு அழைத்துச் சென்றவளும் அவளேதான். இம்மாளிகைக்குள் வந்து என்னைக்கண்டு தன் பின்னே வரும்படி மன்றுடிக்கேட்டாள். யானும் இசைந்தேன். மற்றைய தங்கட்குத்தெரியும்." என்று நாகநாட்டரசி கூறினுள்.

"என்னுடைய செய்தியும் இதனைப் போன்றதேயாம்—ஆனுல், ஒன்று: நேற்றுப் பிற்பகல் யான் இந்நகரத்தைப் பார்வையிட்டுக்கொண்டிருக்கையில் அவள் முதன்முதல் என்னைத் தெருவின்கண் எதிர்ப்பட்டாள்; ஏதோ ஒரு சாக்குச்சொல்லி என்னைத் தன் பின்னே வரும்படி வேண்டினுள். என்னை ஒரு குறிப்பானவழியே அழைத்துச்சென்று ஒரு வீட்டைச்சுட்டிக் காட்டி மாலை ஐந்து நாழிகைக்குமேல் ஏழரை நாழிகைக்குள் யான் அங்கே வரும்படி கடவுளறிய ஆணையிட்டுக் கூறினுள். இஃது ஏதோ ஒரு சூழ்ச்சியாயிருக்கிறதென அஞ்சி இதனை மறுத்திருப்பேன்; ஆனுல், அவள் கூறிய சில உறுதிமொழிகள் என்னை இணங்கச்செய்தன." என்று நீலலோசனன் கூறினுன்.

"அவ்விடத்திற்குச் செல்லும்பொருட்டுத் தாங்கள் அத்தெருவழியே செல்கையிற் றங்களைக் கண்டேன். அஞ்சத்தக்க வாருய்ப் பளீரென வீசிய அம்மின்னல் ஒளி தங்கள் நினைவிலிருக்கின்றதா? அஃது உங்கள் முகத்தை எனக்கு விளங்கக்

காட்டியது. ஆனால், அவ்வறிவோள் உங்களுக்குச் சொல்லிய அவ் உறுதிமொழிகள்?" என்று குமுதவல்லி வினவினாள்.

"அவைகளை நீங்கள் அறியும்படி செய்தற்குக், குமுதவல்லி, யான் நிலகிரிக்கு வரும் வழியினிடையே உங்களிடம் வந்து சேருமுன் எனக்கு நேர்ந்த இடரான நிகழ்ச்சிகளை விரித்துச் சொல்லல் வேண்டும்." என்று நீலலோசனன் மறுமொழி புகன்றான்.

அதன்பின் அவன் தான் கொள்ளைக்காரரொடு சண்டை செய்ததனையுந், தெளிநீர்வேலியின்கண் தான் மீனாம்பாளைக் கண்டதனையும், கோபுரத்தினுள் அவள் இரண்டகமாய்ச்செய்த நடவடிக்கைகளையும் எடுத்து விரித்துரைத்தான்; ஆனாலும், மீனாம்பாளின் கிளரொளி வனப்பானது ஒருசிறிதுநேரமேனுந் தனக்குக் கவர்ச்சியை விளைவித்ததென்று ஒருப்பட்டுக் கூறாமற் கருத்தாய் விட்டுவிட்டான்.

"யான் உங்கள் பக்கத்தில் வழிப்பயணம் வரும்போது, குமுதவல்லி," என்று நீலலோசனன்தொடர்ந்துரைப்பானாய்: கொள்ளைத்தலைவனை நல்லானது பெயர் பேச்சின் இடையே வந்தது. தங்கட்கு அச்சத்தை ஊட்டுமென்றஞ்சி அதனைப்பற்றிய குறிப்புகளைப் பேசாது விட்டேன்: யானும், ஆண்மை மிக்க என் ஆட்களிருவரும் உங்கட்கு வழித்துணையாய்ச் செல்லல் வேண்டுமென்றும், ஏதேனும் இடர் நேருமாயின் யாங்கள் சாகும்வரையில் உங்களைப் பாதுகாத்தல் வேண்டுமென்றுந் தீர்மானஞ் செய்தேன்: ஆனாலும், உங்கட்குப்பெருந்திகிலைமிகுதியாய்த் தர வல்ல ஒரு சொல்லைக்கூறுவது பயனற்றதெனவும் நினைந்துணர்ந்தேன். அதுகிடக்க, யான் இடையே விட்டுவிட்ட நிகழ்ச்சியை முடித்துச் சொல்லிவிடுகின்றேன். நேற்றுப் பிற்பகல் திகழ்கலைஎன்னும் அவ்அறிவோள் என்னைத்தெருவின்கட் கண்டுபிடித்து, மாலைப்பொழுதிற் றனிமையாயும் மறைவாயும் என்னை வரும்படி வேண்டின வீட்டண்டைமுதன் முதல் அழைத்துச்சென்றபோது எனக்குச் சில உறுதிமொழிகள் புகன்றாளென உங்கட்குச் சொல்லியிருக்கின்றேன். அவ்வுறுதிமொழிகள் பின்வருமாறு சொல்லப்பட்டன: 'தெளிநீர்

வேலியில் நீங்கள் எவளைக் கண்டீர்களோ, கோபுரத்தின்கண் எவள்செய்த சூதுகளை நீங்கள் தப்பி வந்தீர்களோ அவள் இப்போது உயிரோடில்லை. ஒருபாம்பின் நஞ்சு அவள்நரம்புகளில் எங்கும் ஓடி அவளை உயிர்துறக்கச்செய்தது. யான் தங்களுக்கு இப்போது சுட்டிக்காட்டும் அதோ இருக்கிற வீட்டினுள்ளே உயிரற்ற அவ்வுடம்பு கிடக்கின்றது. தான் உயிரோடிருந்த போது அவள் தங்களுக்குத்தீங்கிழைக்கப்பார்த்தமையால், அவளது பிணத்தண்டையில் இருந்து அவள்குற்றங்களைத்தாங்கள் மன்னித்துக்கூறினாலல்லாமல் அவளது ஆவி அமைதிபெறாது. இது மலைநாட்டார் தமக்குள் உள்ள ஓர் அறிவற்ற நம்பிக்கையாகத்தான் என் உள்ளத்திற் காணப்படுகின்றது; என்றாலும், அஃது உண்மையான கோட்பாடாயுமிருக்கலாம். யாரதன் மெய்ம்மையைச் சொல்லக்கூடும்? தாங்கள் எந்த வகையாலும் அருள் மிகுந்தவர்களாயிருத்தலால், மீனம்பாள் மறுமையிற் பெறும் நன்மைக்கு அதுபயன்படுவதாயினும் இல்லையாயினும் வருத்தமற்ற இச்சிறிய உதவிச்செய்கை புரிதலைத் தாங்கள் மறுக்கமாட்டீர்களென்று நம்புகின்றேன். பெருமான் நீலலோசன, யான் தங்கட்கு எதுந் தீங்கு செய்யேனென்று ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்! ஏனென்றால் தாங்கள் இன்னார் என்பது எனக்குத்தெரியும்! தாங்கள், மேற்கரைநாட்டுமன்னரால் மருமகனாக உரிமை செய்துகொள்ளப்பட்டவர்கள் அல்லரோ!' என்று அங்ஙனந்திகழ்கலை என்னை நோக்கிக் கூறினள்; அதனால் நானுஞ் சென்றேன். குமுதவல்லி" என்று அவன் பின்னுஞ்சொல்லுவான், "போற்றத்தக்க நம் நண்பர் மனோகரர் தாஞ் சொல்லிக்கொண்டுவந்த வரலாற்றிற் குறிப்பிட்ட அறிவோள் இந்தத்திகழ்கலையே யாவள் என்பதில் ஐயமில்லை: ஆனாலும், அவளை யான் அறிவேன் என்னும் அறிவிப்பை அப்போது இடையிற்கூறித் தடை செய்ய விருப்பமின்றியிருந்தேன்; என்னையென்றால், அவர் அதனைப்பற்றி என்னைக் கேட்டிருப்பார், யானும்நேற்றுமாலையில் நிகழ்ந்தவற்றையெல்லாம் விரித்துரைக்கவேண்டியவனா யிருந்திருப்பேன்; யானோ அவைகளைப் புனிதமாகவும், அப்போதங்கே வந்திராதமற்றவர்களெல்லாரையும்பற்றிய அவை மறைவாகவைக்கப்படவேண்டியனவாகவும் எண்ணினேன்."

"தங்களுக்குநேர்ந்த இடர்களைத் தாங்கள் சொல்லிக்கொண்டு வந்தவாற்றிலிருந்து, தாங்கள் முறையிட்டுச்சொல்லவேண்டியனவும், நல்வினையற்ற நீறும்பாளை மன்னித்தற்குவாயிலாவனவும் ஆனபிழைகள் தங்கட்குச் செய்யப்பட்டனவென்பது நன்கு புலனாகின்றது. ஆனால், எனக்கு எதிரிடையாய் அவள் யாது தீங்குசெய்துகொண்டிருந்தாள் அல்லதுசெய்யச்சூழ்ந்து கொண்டிருந்தாள் என்பதுதான் என்னால் உன்னிப்பார்க்கக் கூடவில்லை." என்று நாகநாட்டரசி குமுதவல்லி கூறினாள்.

இந்தநேரத்தில் மனோகரர் அவ்வறைக்குத்திரும்பிவந்தார். வந்தது, அவர்களுடைய கூட்டத்தைச் சிறப்பித்துக்கொண்டாடுதற்கும், அவர்களைப்பெருமைப்படுத்துதற்கும் அவர் திட்டம்பண்ணிவைத்த ஓர் உண்டாட்டுக்கு அவர்கள் வந்தருளும்படி தம் இளையநண்பரான அவ் இருவரையும் வேண்டிக்கொள்ளுதற்பொருட்டேயாம்; ஆகவே, இனிப்பேசவேண்டிய ஒருசெய்திக்கு அவர்கள் பேசத்திரும்புந்தறுவாயில், விரும்பத்தக்க அம்மைத்துனர் இருவரின் பேச்சுத் திடீரென நின்றுபோயிற்று.

அம்மலையவணிகர் மனைவியை இழந்தவர்: சிறிது காலத்திற்குமுன்றான் அவர்தம் மனைவியார் இறந்து போனார்: ஆனாலும், அவர்கள் மணஞ்செய்துநீண்டகாலம் இன்புற்றுஒருங்கு வாழ்ந்ததன்பயனாக அவரது குடும்பந் திருவருளுதவியால்மிகப் பல்கியிருந்தது. அவர்தம் புதல்வரும் புதல்வியரு மெல்லாம் வளர்ந்து பெரியராயிருந்தார்கள்: அவர்கட்குத் தக்கவாறு மணஞ் செய்யப்பட்டிருந்தது. மிகுதியான செல்வமுங்கொடுக்கப்பட்டிருந்தது. உண்மையிலே மனோகரர் தங்குடும்பம் நீண்டகாலமாகச் செல்வ வளத்தாற் புகழ்பெற்றிருந்தது; தமக்குள் திருமுகப் போக்குவரவால் தம் வாணிக முயற்சிகளை மிகுந்த ஊதியம் பெறுதற்கேற்றபடி நடத்திக்கொள்ளும் வகையாக இம்முதியோரன்றன் புதல்வர்கள் கிழக்கே முதன்மையானபல நகரங்களிலுந் தம் இருப்பிடங்களை நிலைப்படுத்தியிருந்தார்கள்.

மனோகரருங், குமுதவல்லியும், நீலலோசனனும் அவ்வுண்டாட்டுக்கு வந்து அமர்ந்தார்கள்; அங்கே வேறெவரும் வரவில்லை; ஏனெனின், முன்னமேசொல்லப்பட்ட ஏதுக்களால், தம் உயர்ந்த விருந்தினரைத் தம்பால் இயன்றவளவு மறைவிடமாகவே வைத்திருப்பதற்குத் தக்கோரான அவ்வணிகர் ஆவலுற்றிருந்தார்.

நாகநாட்டரசி குமுதவல்லி இரண்டாம்பாகம் முற்றும்.

யடிகள் நூல்நி
MARAIMALAI